# பகுதி III

## பகுதி III

## ஆண்டுப்பகுதியில் அரசாங்கத்தினாலும் நாணயச்சபையினாலும் இலங்கை மத்திய வங்கி மற்றும் வங்கித்தொழில் நிறுவனங்களின் நடைமுறைகள் மற்றும் தொழிற்பாடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நிருவாக வழிமுறைகள்

## தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள், சுற்றிக்கைகள், பணிப்புரைகள் மற்றும் அறிவித்தல்கள்


| | | தொடர்பு எண் | பக்கம் |
|---|---|---|---|
| | **வங்கி மேற்பார்வைத் திணைக்களம்** | | |
| 1 | 2019இன் 01ஆம் இலக்கச் சுற்றறிக்கை: இலங்கையிலுள்ள உரிமம் பெற்ற வங்கிகளில் வெளிநாட்டு அலுவலர்கள் தொழில்புரிவதற்கான வழிகாட்டல்கள் | | 1 |
| 2 | 2019இன் 02ஆம் இலக்கச் சுற்றறிக்கை: உரிமம் பெற்ற வங்கிகள் ஆண்டு மற்றும் காலாண்டு நிதியியல் கூற்றுக்களையும் ஏனைய வெளிப்படுத்துகைகளையும் வெளியிடுதல் | | 4 |
| 3 | 2019இன் 03ஆம் இலக்கச் சுற்றறிக்கை: ஏற்பு ஆவண நியதிகளின் மீதான இறக்குமதிகளுக்கெதிரான அளவுத் தேவைப்பாடுகள் | | 7 |
| 4 | 2019இன் 04ஆம் இலக்கச் சுற்றறிக்கை: உரிமம் பெற்ற வங்கிகளின் வட்டி உழைக்கின்ற சேமிப்பு மற்றும் தவணை வைப்புக்களுக்காக வட்டியல்லாதனவற்றை அடிப்படையாகக் கொண்ட ஊக்குவிப்புத் திட்டங்கள் | | 7 |
| 5 | வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை 2019இன் 01ஆம் இலக்கம்: உந்து ஊர்திகள் மற்றும் இன்றியமையாதனவல்லாத நுகர்வுப்பொருட்களின் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள் | | 7 |
| 6 | 2019இன் 05ஆம் இலக்கச் சுற்றறிக்கை: சலுகை ரீதியான நியதிகளில் அனுமதிப்பத்திரங்களின் கீழ் உந்து ஊர்திகளின் இறக்குமதிக்காகத் திறக்கப்படுகின்ற நாணயக் கடிதம் மீதான கட்டுப்பாடுகளை நீக்குதல் | | 8 |
| 7 | வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை 2019இன் 02ஆம் இலக்கம்: உந்து ஊர்திகளின் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள் | | 8 |
| 8 | 2019இன் 06ஆம் இலக்கச் சுற்றறிக்கை: இலங்கை கணக்கீட்டு நியமம் - இ.க.அ. நியமம் 9: உரிமம் பெற்ற வங்கிகளிலுள்ள நிதியியல் சாதனங்கள் மீதான 2018இன் 04ஆம் இலக்கச் சுற்றறிக்கைக்கான துணைநிரப்பு | | 8 |
| 9 | வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை 2019இன் 03ஆம் இலக்கம்: பாசல் III இன் கீழ் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் மூலதனம் மற்றும் திரவத்தன்மை நியமங்கள் மீதான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு | | 9 |
| 10 | நாணய விதிச் சட்டக் கட்டளை 2019இன் 01ஆம் இலக்கம்: உரிமம் பெற்ற வங்கிகளின் இலங்கை ரூபா வைப்புக்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள் | | 11 |
| 11 | சுற்றறிக்கைக் கடிதம்: 2019 யூன் 30ஆம் நாள் முடிவடைகின்ற காலாண்டிற்காக உரிமம்பெற்ற வங்கிகளின் இலங்கை ரூபா வைப்புக்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்களுக்கு ஏற்புடைய தொடர்பான வீதங்கள் | | 13 |
| 12 | சுற்றறிக்கை 2019இன் 07ஆம் இலக்கம்: சுற்றுலாக் கைத்தொழில்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் | | 13 |
| 13 | விளக்கக் குறிப்பு 2019இன் 01 இலக்கம்: சுற்றுலாக் கைத்தொழிலுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் தொடர்பில் 2019ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க சுற்றறிக்கைக்கான விளக்கங்கள் | | 14 |
| 14 | வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை 2019இன் 04ஆம் இலக்கம்: உந்து ஊர்திகள் தொடர்பாக வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் | | 14 |
| 15 | விளக்கக் குறிப்பு 2019இன் 02 இலக்கம்: சுற்றுலா தொழில்துறைக்கு வழங்கப்பட்ட சலுகைகள் தொடர்பில் 2019ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க சுற்றறிக்கைக்கான விளக்கங்கள் | | 15 |
| 16 | சுற்றறிக்கைக் கடிதம்: 2019 யூலை 1ஆம் நாள் தொடங்குகின்ற காலாண்டிற்காக உரிமம்பெற்ற வங்கிகளின் இலங்கை ரூபா வைப்புக்கள் மீது விதிக்கத்தக்க குறைந்தபட்ச வட்டி வீதங்களுக்குமான விதிக்கத்தக்க தொடர்பான வீதங்கள் | | 16 |
| 17 | வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை 2019இன் 05ஆம் இலக்கம்: உந்து ஊர்திகள் தொடர்பில் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான பணிப்புரைகளுக்கான திருத்தங்கள் | | 16 |
| 18 | விளக்கக் குறிப்பு 2019இன் 03ஆம் இலக்கம்: பாசல் III இன் கீழ் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான மூலதனத் தேவைப்பாடுகள் மீதான 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைக்கான விளக்கங்கள் | | 16 |
| 19 | விளக்கக் குறிப்பு 2019இன் 04ஆம் இலக்கம்: பாசல் III இன் கீழ் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான முடுக்கி விகிதம் மீதான 2018ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளுக்கான விளக்கக் குறிப்பு | | 17 |
| 20 | விளக்கக் குறிப்பு 2019இன் 05 இலக்கம்: சுற்றுலாக் கைத்தொழிலுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் தொடர்பில் 2019ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க சுற்றறிக்கைக்கான விளக்கங்கள் | | 18 |

| | | | |
|---|---|---|---|
| 21 | வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை 2019இன் 06ஆம் இலக்கம்: இலங்கையில் உரிமம் பெற்ற வங்கிகளின் திறைசேரித் தொழிற்பாடுகளுக்கான சந்தை நடத்தைகளும் நடவடிக்கை முறைகளும் | | 18 |
| 22 | நாணய விதிச் சட்டக் கட்டளை 2019இன் 02ஆம் இலக்கம்: அண்மைய கொள்கைத் தீர்மானங்களை ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட சந்தைக் கடன் வழங்கல் வீதங்களுக்குக் கடத்துகின்ற வினைத்திறனை அதிகரித்தல் | | 30 |
| 23 | நாணய விதிச் சட்டக் கட்டளை 2019இன் 03ஆம் இலக்கம்: உரிமம் பெற்ற வங்கிகளின் இலங்கை ரூபா வைப்புக்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள் | | 32 |
| 24 | சுற்றறிக்கை 2019இன் 08ஆம் இலக்கம்: உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் கணக்குகளைக் கணக்காய்வு செய்வதற்கான தகைமை வாய்ந்த கணக்காய்வாளர்களின் பட்டியல் | | 32 |
| 25 | வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை 2019இன் 07ஆம் இலக்கம்: உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு மீதான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பிற்கான திருத்தங்கள் | | 33 |
| 26 | வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை 2019இன் 08ஆம் இலக்கம்: இலங்கையிலுள்ள உரிமம்பெற்ற வங்கிகளின் பணிப்பாளர்களது பொருத்தம் மற்றும் தகுதியை மதிப்பிடல் | | 34 |
| 27 | வங்கித்தொழில் சட்டத் தீர்மானம் 2019இன் 01ஆம் இலக்கம்: உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலரினதும் நிறைவேற்றுப் பணிகளை ஆற்றுகின்ற அலுவலர்களினதும் பொருத்தம் மற்றும் தகுதியை மதிப்பிடுதல் | | 35 |
| 28 | வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை 2019இன் 09ஆம் இலக்கம்: இலங்கையிலுள்ள உரிமம்பெற்ற வங்கிகளுக்கான கம்பனி ஆளுகை மீதான 2007ஆம் ஆண்டின் 11ஆம் மற்றும் 12ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளுக்கான திருத்தம் | | 38 |
| 29 | வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை 2019இன் 10ஆம் இலக்கம்: உள்நாட்டு முறையியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளைக் கையாள்வதற்கான கட்டமைப்பு | | 38 |
| 30 | வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை 2019இன் 11ஆம் இலக்கம்: பாசல் III இன்கீழ் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளுக்கான மூலதன தேவைப்பாடுகள் மீதான பணிப்புரைகளுக்கான திருத்தங்கள் | | 39 |
| 31 | வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை 2019இன் 12ஆம் இலக்கம்: உள்நாட்டு முறையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகள் | | 40 |


**நாணயம்**


| | | | |
|---|---|---|---|
| 32 | சுற்றறிக்கை எண்: 2019-01: உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் வைப்புச் செய்யப்பட்ட நாணயத்தாள்களுக்கான பணிக்கட்டணத்தை அதிகரித்தல் | 12/02/004/0007/001 | 41 |


**உள்நாட்டுத் தொழிற்பாடுகள்**


| | | | |
|---|---|---|---|
| 33 | தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல. 35/03/016/007/002: சந்தை தொழிற்பாடுகள் மீதான திரட்டிய தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் | | 41 |
| 34 | இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை அதிவிசேடமானது: 2110/34 ஆம் இலக்கம் - வியாழக்கிழமை, 2019 பெப்புருவரி 14 | 2110/34 | 42 |
| 35 | தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல. 35/01/005/0007/14: ஒதுக்குத் தேவைப்பாடுகள் | | 43 |
| 36 | சுற்றறிக்கை இல. 35/01/005/0010/23: உந்து ஊர்திகள் மற்றும் இன்றியமையாதன அல்லாதனவற்றின் இறக்குமதிகளுக்கான நாணயக் கடிதத்திற்கெதிரான அளவுத் தேவைப்பாடுகள் | | 45 |
| 37 | சுற்றறிக்கை இல. 35/03/016/007/003: திறந்த சந்தைத் தொழிற்பாடுகளுக்கான திருத்தப்பட்ட நேர அட்டவணை | | 45 |
| 38 | சுற்றறிக்கை இல. 35/03/016/007/004: திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழான உடனடி ஏலங்கள் | | 45 |
| 39 | சுற்றறிக்கை இல. 35/03/021/0013/002: திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் தனியான முதன்மை வணிகர்களுக்கான திரவத்தன்மை ஆதரவு வசதிகள் தொடர்பான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் | | 46 |
| 40 | சுற்றறிக்கை இல. 35/03/021/0013/003: இலங்கை மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் | | 48 |


**வெளிநாட்டுச் செலாவணி**


| | | | |
|---|---|---|---|
| 41 | இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை அதிவிசேடமானது: 2112/17 ஆம் இலக்கம் - புதன்கிழமை, 2019 பெப்புருவரி 27 | 2112/17 | 48 |
| 42 | இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை அதிவிசேடமானது: 2112/25 ஆம் இலக்கம் - வியாழக்கிழமை, 2019 பெப்புருவரி 28 | 2112/25 | 49 |

| | | | |
|---|---|---|---|
| 43 | 2017ஆம் ஆண்டில் 12ஆம் இலக்க வெளிநாட்டு செலாவணி சட்டத்தின் கீழான பணிப்புரை 2019இன் 01ஆம் இலக்கம்: முற்கொடுப்பனவு (காசாக முற்பணம்) நியதிகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட இறக்குமதிகளுக்கான கொடுப்பனவுகளின் மீது அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுவிக்கப்பட்ட பணிப்புரைகள் | | 49 |
| 44 | இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை அதிவிசேடமானது: 2145/49ஆம் இலக்கம் - வியாழக்கிழமை, 2019 ஒத்தோபர் 17 | 2145/49 | 49 |

நிதிசார் உளவறிதல் பிரிவு

| | | | |
|---|---|---|---|
| 45 | இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை அதிவிசேடமானது: 2123/14ஆம் இலக்கம் - திங்கட்கிழமை, 2019 மே 13 | 2123/14 | 50 |
| 46 | சுற்றறிக்கை இல. 01/19: 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதியியல் நிறுவனங்கள் (வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவன) விதிகளின் கீழ் அரசசார்பற்ற அமைப்புக்கள், இலாபம் ஈட்டாத அமைப்புக்கள் அல்லது அறக்கொடை நிறுவனங்கள் தொடர்பான உரிய விழிப்புக்கவனத்தினை அதிகரித்தளவில் மேற்கொள்ளுதல் | | 62 |
| 47 | வழிகாட்டல் இல. 01/2019: சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் மீதான குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்களுக்கான வழிகாட்டல்கள் | 037/08/001/0032/019 | 62 |
| 48 | வழிகாட்டல் இல. 02/2019: பயன்பெறும் சொத்துரிமையினை அடையாளம் காணுதல் தொடர்பில் குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்களுக்கான வழிகாட்டல்கள் | 037/08/001/0036/019 | 74 |
| 49 | வழிகாட்டல் இல. 03/2019: அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆட்களை அடையாளப்படுத்தல் மீதான வழிகாட்டல்கள் | 037/07/006/0013/018 | 81 |
| 50 | சுற்றறிக்கை இல. 02/19: இடைநிறுத்தப்பட்ட கணக்குகளிலிருந்து பிடித்துவைத்தல் வரிகளைக் கழித்தல் | 37/02/008/0016/016 | 91 |

பொதுப்படுகடன்

| | | | |
|---|---|---|---|
| 51 | சுற்றறிக்கை இல. எஸ்எஸ்எஸ்எஸ்/01/2019: லங்காசெகுயரின் மத்திய வைப்பக முறைமையில் பதிவுசெய்துள்ள வாடிக்கையாளர்களுக்கான அதேநேர குறுஞ்செய்தி/ மின்னஞ்சல் அறிவித்தல் | 08/25/004/0003/001 | 92 |
| 52 | திறைசேரி முறிகளின் ஆரம்ப வழங்கல் மீதான பணிப்புரைகள் | 08/21/005/012/005 | 93 |
| 53 | சுற்றறிக்கை இல. எஸ்எஸ்எஸ்எஸ்/02/2019: அரச பிணையங்களின் இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவுப் பெறுமதி, விலை மற்றும் வட்டி வீதத்தின் உள்ளடக்கம் | 08/25/001/0005/001 | 93 |

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்

| | | | |
|---|---|---|---|
| 54 | கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமைகள் சுற்றறிக்கை இல. 01/2019: இலத்திரனியல் கொடுப்பனவு சாதனங்கள்/ பொறிமுறைகள் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல்வாங்கல்களுக்கான அதேநேர அறிவித்தல்களை வழங்குதல் | | 95 |
| 55 | கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமைகள் சுற்றறிக்கை இல. 02/2019: உள்நாட்டு நாணய கொடுப்பனவுகளுக்காக தேசிய விரைவு பதிலிறுத்தல் குறியீட்டு நியமமொன்றினை நிறுவுதல் | | 96 |
| 56 | கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமைகள் சுற்றறிக்கை இல. 03/2019: 2019 ஏப்பிறல் 12ஆம் நாளன்று லங்காசெட்டில் முறைமையின் அலுவலக நேரத்தினைக் கட்டுப்படுத்தல் | 34/07/029/0001/002 | 97 |
| 57 | கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமைகள் சுற்றறிக்கை இல. 04/2019: லங்கா செட்டில் முறைமை 2019 ஏப்பிறல் 24, 25, மற்றும் 26ஆம் நாட்களில் அதன் அனர்த்த மீட்பு அமைவிடத்திலிருந்து நேரடித் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் | 34/07/029/0001/002 | 98 |
| 58 | கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமைகள் சுற்றறிக்கை இல. 05/2019: லங்காசெட்டில் முறைமையின் நாளாந்த தொழிற்பாட்டு அட்டவணைக்கான திருத்தம் | 34/07/029/0001/002 | 99 |
| 59 | கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமைகள் சுற்றறிக்கை இல. 06/2019: லங்காசெட்டில் முறைமையின் நாளாந்த தொழிற்பாட்டு அட்டவணைத் திருத்தம் | 34/07/029/0001/002 | 101 |
| 60 | கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமைகள் சுற்றறிக்கை இல. 07/2019: லங்கா செட்டில் முறைமை 2019 ஒத்தோபர் 9, 10 மற்றும் 11ஆம் நாட்களில் அதன் அனர்த்த மீட்பு அமைவிடத்திலிருந்து நேரடித் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் | 34/01/024/0106/06 | 103 |
| 61 | கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமைகள் சுற்றறிக்கை இல. 08/2019: வாடிக்கையாளர் இ-பணக் கணக்குகளுக்கு ஏற்புடைய இ-பணக் கணக்குகளின் எண்ணிக்கை, தனிப்பட்ட பெறுமதி சேமிக்கப்பட்ட வரையறைகள், நாளாந்த வரையறைகள் மற்றும் கொடுக்கல்வாங்கல் வரையறைகள் | | 103 |
| 62 | சுற்றறிக்கை 2019ஆம் ஆண்டின் 02ஆம் இலக்கம்: உள்நாட்டு கொடுப்பனவுகளுக்காக தேசிய விரைவு பதிலிறுத்தல் குறியீட்டு நியமமொன்றினை நிறுவுதல் - பின்னிணைப்பு I | 34/01/025/0038/001 | 104 |

## பிரதேச அபிவிருத்தி


| | | | |
|---|---|---|---|
| 63 | சிறுஉடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சுழலும் நிதிய வேளாண் வியாபாரம், சுழலும் நிதிய வருமான உருவாக்கம், சுழலும் நிதிய இளைஞர் கடன் திட்டங்களுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் | ஆர்டிடி/எஸ்ஏபிபி/ ஆர்எவ்/2019/01 | 105 |
| 64 | சிறுஉடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை வேளாண் வியாபாரம் மற்றும் அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர் பங்குடமை இளைஞர் கடன் திட்டங்களுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் | ஆர்டிடி/எஸ்ஏபிபி/ 4பி/2019/01 | 121 |
| 65 | தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்: சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் வட்டி உதவுதொகை திட்டம் | ஆர்டிடி/எஸ்ரிஏஆர்ஆர்- ஜஎஸ்/2019/01 | 137 |


## வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை


| | | | |
|---|---|---|---|
| 66 | நுண்பாகநிதிச் சட்டப் பணிப்புரைகள் 2019இன் 01ஆம் இலக்கம்: வைப்புக்கள் | | 148 |
| 67 | நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2019இன் 01ஆம் இலக்கம்: வைப்புக்கள் மற்றும் படுகடன் சாதனங்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள் | | 148 |
| 68 | நுண்பாகநிதிச் சட்டப் பணிப்புரைகள் 2019இன் 02ஆம் இலக்கம்: நுண்பாக நிதிக் கடன்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதம் | | 151 |
| 69 | சுற்றறிக்கை 2019இன் 01ஆம் இலக்கம்: சுற்றுலா தொழில்துறைக்கு வழங்கப்பட்ட சலுகைகள் | | 151 |
| 70 | இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை அதிவிசேடமானது: 2125/58ஆம் இலக்கம் - வெள்ளிக்கிழமை, 2019 மே 31 | 2125/58 | 154 |
| 71 | நிதிக் குத்தகைக்குவிடும் சட்டப் பணிப்புரைகள் 2019இன் 01ஆம் இலக்கம்: உந்து ஊர்திகள் தொடர்பாக வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான பணிப்புரைகளுக்கான திருத்தம் | | 156 |
| 72 | நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2019இன் 02ஆம் இலக்கம்: உந்து ஊர்திகள் தொடர்பாக வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான பணிப்புரைகளுக்கான திருத்தம் | | 156 |
| 73 | விளக்கக் குறிப்பு 2019இன் 01 இலக்கம்: சுற்றுலா தொழில்துறைக்கு வழங்கப்பட்ட சலுகைகள் தொடர்பில் 2019ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க சுற்றறிக்கைக்கான விளக்கங்கள் | | 157 |
| 74 | விளக்கக் குறிப்பு 2019இன் 02 இலக்கம்: சுற்றுலா தொழில்துறைக்கு வழங்கப்பட்ட சலுகைகள் தொடர்பான 2019ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க சுற்றறிக்கைக்கான விளக்கங்கள் | | 161 |
| 75 | நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2019இன் 03ஆம் இலக்கம்: வைப்புக்கள் மற்றும் படுகடன் சாதனங்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்களுக்கான திருத்தங்கள் | | 161 |
| 76 | நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2019இன் 04ஆம் இலக்கம்: அசையாச் சொத்துக்களின் மதிப்பீட்டிற்கான திருத்தம் | | 162 |
| 77 | நிதிக் குத்தகைக்குவிடும் சட்டப் பணிப்புரைகள் 2019இன் 02ஆம் இலக்கம்: அசையாச் சொத்துக்களின் மதிப்பீட்டிற்கான திருத்தம் | | 163 |
| 78 | பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் மற்றும் உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டப் பணிப்புரைகள் 2019இன் 01ஆம் இலக்கம்: பத்திரங்களற்ற திறைசேரி முறிகள் மற்றும் பத்திரங்களற்ற திறைசேரி உண்டியல்களில் வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்களின் மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள் | | 164 |

**சுற்றறிக்கை 2019இன் 01ஆம் இலக்கம்** 2019 சனவரி 04

**இலங்கையிலுள்ள உரிமம் பெற்ற வங்கிகளில் வெளிநாட்டு அலுவலர்கள் தொழில்புரிவதற்கான வழிகாட்டல்கள்**

உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளும் (இதனகத்துப் பின்னர் உரிமம் பெற்ற வங்கிகள் எனக் குறிப்பீடு செய்யப்படும்) உரிமம் பெற்ற வங்கிகளினது தேவைகளின் அடிப்படையில் பொருத்தமும் தகைமையும் வாய்ந்த வெளிநாட்டு அலுவலர்களுக்கு தொழில் வழங்குவது தொடர்பில் பின்வரும் வழிகாட்டல்களைப் பின்பற்றுதல் வேண்டும்.

1. பொதுவான தேவைப்பாடுகள்

1.1 உரிமம் பெற்ற வங்கிகளில் முதன்மை நிறைவேற்று அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ள வெளிநாட்டு அலுவலர்கள் அல்லது நிறைவேற்றுத் தொழிற்பாடுகளை ஆற்றுகின்ற அத்தகைய அலுவலர்கள் இவ்வழிகாட்டல்களுக்குப் புறம்பாக, திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 44ஏ அல்லது 76எச் பிரிவுகளின் நியதிகளில் பொருத்தம் மற்றும் தகுதிக்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

1.2 உரிமம் பெற்ற வங்கிகள் உள்நாட்டு அலுவலர்களுக்கு முன்னுரிமை வழங்குதல் வேண்டும் என்பதுடன், உள்நாட்டு அலுவலர்களைக் கவர்வதற்கும் தொழில் வழங்குவதற்கும் நியாயமான அனைத்து முயற்சிகளையும் எடுத்த பின்னரே வெளிநாட்டு அலுவலர்களுக்குத் தொழில் வழங்குவது பற்றி பரிசீலித்தல் வேண்டும். உள்நாட்டு அலுவலர்கள் என்பதன் கருத்து இவ்வழிகாட்டல்களின் நோக்கத்திற்காக இலங்கைப் பிரசைகள் எனக் கருதப்படுதல் வேண்டும்.

1.3 உரிமம் பெற்ற வங்கிகள், உள்நாட்டு அலுவலர்களை அடையாளம் காண்பதற்கும் அத்தகைய அலுவலர்கள் நியாயமான காலப்பகுதியொன்றிற்குள் வெளிநாட்டு அலுவலர்களினால் வகிக்கப்படும் பதவிகளை/ பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளும் விதத்தில் தொடர்ச்சியான திட்டமிடல்களை உருவாக்கிக் கொள்ளுதல் வேண்டும்.

1.4 இருப்பினும் கூட, மேலேயுள்ள வழிகாட்டல்கள் 1.2 மற்றும் 1.3 இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டுள்ள வழிகாட்டல் 4.1இல் குறித்துரைக்கப்பட்டவாறான அனுமதிக்கப்பட்ட வரையறைக்குள் இருக்கும் வங்கிகளைப் பொறுத்தவரை ஏற்புடைத்தாகமாட்டா.

1.5 இலங்கை மத்திய வங்கி வெளிநாட்டு அலுவலர்கள் தொழில்புரிவதற்காக வழங்கிய ஒப்புதலை அவசியமானது எனக் கருதும் எந்தவொரு நேரத்திலும் புறக்கீடு செய்யலாம் என்பதுடன் தொடர்பான உரிமம் பெற்ற வங்கிக்கு அத்தகைய தீர்மானத்தினை அறிவித்து உயர்ந்தபட்சம் நான்கு மாத அறிவித்தலை வழங்கலாம்.

2. வெளிநாட்டு அலுவலர்கள்

2.1 இப்பணிப்புரையின் நோக்கத்திற்காக வெளிநாட்டு அலுவலர்கள் என்பது:

(i) உரிமம் பெற்ற வங்கியின் கொடுப்பனவுப் பட்டியலிலுள்ள நிரந்தர அல்லது ஒப்பந்த ஊழியர்கள் அல்லது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட வங்கிகளின் தாய் வங்கியின் கொடுப்பனவுப் பட்டியலிலுள்ளவர்கள் எனப் பொருள்படும், எனினும் இது முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கும் நிறைவேற்றுத் தொழிற்பாடுகளை ஆற்றுகின்ற அதேபோன்ற அலுவலர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படமாட்டாது; அத்துடன்

(ii) பணிப்பாளர் சபைக்கு அல்லது வங்கிக்கான ஆலோசனையாளர்கள்/ மதியுரையாளர்கள்

3. உள்நாட்டில் கூட்டிணைக்கப்பட்டுள்ள வங்கிகளுக்கான தகைமைப் பிரமாணங்கள்

3.1 உரிமம் பெற்ற வங்கிகளின் குறித்துரைக்கப்பட்ட தேவைகள்/ செயற்றிட்டங்களைப் பரிசீலனையில் கொண்டு ஒவ்வொரு விடயமாக ஆராயப்பட்டு வெளிநாட்டு அலுவலர்களுக்கான ஒப்புதல் வழங்கப்படும்.

3.2 பின்வரும் துறைகளில் தொழில்புரிவதற்கு வெளிநாட்டு அலுவலர்களுக்க ஒப்புதல்கள் வழங்கப்படும்.

(i) பாசல் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை நடைமுறைப்படுத்தல்

(ii) பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம்

(iii) இடர்நேர்வு மாதிரிப்படுத்தல்

(iv) தரவுகளைக் களஞ்சியப்படுத்தல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவம்

(v) பெறுதிச் சாதனங்களைக் கட்டமைத்தல்

(vi) கம்பனி ஆளுகை

(vii) இலங்கை மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படுகின்றவாறு முதிர்ச்சி இடைவெளி எங்கு காணப்படுகின்றதோ அத்துறைகள் எதிலும்

3.3 ஒப்புதலின் செல்லுபடியாகும் காலம் ஒவ்வொரு விடயங்களினதும் அடிப்படையில் உயர்ந்தபட்சம் 3 ஆண்டுகள் வரையில் இருக்கும்.

3.4 உரிமம் பெற்ற வங்கிகள் குறித்துரைக்கப்பட்ட வியாபாரங்களின் மீது அல்லது வெளிநாட்டு அலுவலர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற ஆற்றல் மீதான எறிவுகளை இணைப்பு I இன் பகுதி Iஇல் உள்ளவாறான மற்றைய விபரங்களுடன் சேர்த்துச் சமர்ப்பித்தல் வேண்டும்.

3.5 மேலே 3.3இல் ஒப்புதலளிக்கப்பட்ட காலத்தினை நீடித்தல்

(i) வெளிநாட்டு அலுவலர்களின் பதவிக் காலத்தினை நீடிப்பது பின்வருவனவற்றின் அடிப்படையில் ஒவ்வொரு விடயமாகப் பரிசீலனையில் கொள்ளப்படும்.

(அ) செயற்றிட்டத்தினை நீடிப்பதற்கான அவசியம்;

(ஆ) வெளிநாட்டு அலுவல்களின் வருடாந்தச் செயலாற்றத்தினை மீளாய்வு செய்தல்; அத்துடன்

(இ) உரிமம் பெற்ற வங்கியினால் பின்பற்றப்படுகின்ற தொடர்ச்சியான திட்டமிடல்.

(ii) உயர்ந்தபட்ச நீடிப்புக் காலம் 1 ஆண்டாக இருத்தல் வேண்டும்.

4. இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட வங்கிகளுக்கான தகைமைப் பிரமாணம்

4.1 அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு அலுவலர்களின் உயர்ந்தபட்ச எண்ணிக்கை உரிமம் பெற்ற வங்கியினால் தொழிலுக்கமர்த்தப்பட்ட நிரந்தரமான உள்நாட்டு அலுவலர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பின்வருமாறு இருத்தல் வேண்டும்.

| நிரந்தரமான உள்நாட்டு அலுவலர்கள் | வெளிநாட்டு அலுவலர்களின் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை |
|---|---|
| 75 இற்கும் குறைவானது | 3 |
| 75 இலிருந்து 400 வரை | 5 |
| 400 இற்கும் கூடுதலானது | 10 |

4.2 உரிமம் பெற்ற வங்கிகள், இணைப்பு I இன் பகுதி I இல் இணைக்கப்பட்டுள்ளவாறு வெளிநாட்டு அலுவலர்களின் விபரங்களை இலங்கை மத்திய வங்கிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

4.3 அனுமதிக்கப்படுகின்ற செல்லுபடியாகும் காலம் முதன்மை நிறைவேற்று அலுவலர்களைப் பொறுத்தவரை 4 ஆண்டுகளாகவும் ஏனைய வெளிநாட்டு அலுவலர்களைப் பொறுத்தவரை 3 ஆண்டுகளாகவும் இருக்கும்.

4.4 மேலே 4.3இன் கீழ் அனுமதிக்கப்பட்ட காலத்தின் நீடிப்பு

(i) கால நீடிப்பிற்கு பிரதேச அலுவலகத்தின் விதந்துரைப்புக்களின் அடிப்படையில் ஒப்புதல் வழங்கப்படும்

(ii) உயர்ந்தபட்ச நீடிப்புக் காலம் முதன்மை நிறைவேற்று அலுவலர்களைப் பொறுத்தவரை 2 ஆண்டுகளாகவும் மற்றைய வெளிநாட்டு அலுவலர்களைப் பொறுத்தவரை 1 ஆண்டாகவும் இருக்கும்.

4.5 (i) விதிவிலக்கான சூழ்நிலைகளின் கீழ், மேலே 4.1இல் அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு அலுவலர்களின் உயர்ந்தபட்ச எண்ணிக்கையை விஞ்சும் விதத்தில் நியமிக்கப்படுகின்ற வெளிநாட்டு அலுவலர்களுக்கான ஒப்புதல்கள் ஒவ்வொரு விடயங்களின் அடிப்படையில் ஆராயப்பட்டு 1 ஆண்டு காலப்பகுதிக்கு நீடிப்பதற்குப் பரிசீலனையில் கொள்ளப்படும். எனினும், அத்தகைய கோரிக்கையினைப் பரிசீலனையில் கொள்கையில், உரிமம் பெற்ற வங்கியின் நிறைவேற்றுத் தொழிற்பாடுகளை ஆற்றுகின்ற அலுவலர்களில் குறைந்தபட்சம் 80 சதவீதத்தினர் உள்நாட்டு நிரந்தர அலுவலர்களாக இருத்தல் வேண்டும்.

(ii) இந்நோக்கத்திற்காக, உரிமம் பெற்ற வங்கிகள், நியமிக்கப்பட்ட வெளிநாட்டு அலுவலர்களின் குறித்துரைக்கப்பட்ட தேர்ச்சி மற்றும் அவருக்கு/ அவளுக்கு ஒப்படைக்கப்பட்ட குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்கள்/ செயற்றிட்டங்கள் என்பனவற்றை இணைப்பு I இன் பகுதி I இல் உள்ளவாறான விபரங்களுடன் சேர்த்து சமர்ப்பித்தல் வேண்டும்.

(iii) அவ்வாறு நியமிக்கப்பட்ட வெளிநாட்டு அலுவலர்களின் கால நீடிப்பு பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு விடயங்களின் அடிப்படையில் பரிசீலனையில் கொள்ளப்படும்.

(அ) செயற்றிட்டத்தினை நீடிப்பதற்கான அவசியம்

(ஆ) வெளிநாட்டு அலுவலர்களின் வருடாந்தச் செயலாற்றம் தொடர்பான மீளாய்வு

(இ) உரிமம் பெற்ற வங்கியினால் பின்பற்றப்பட்ட தொடர்ச்சியான திட்டமிடல்

(iv) அத்தகைய நியமனங்களின் உயர்ந்தபட்ச நீடிப்புக் காலம் 2 ஆண்டுகளாக இருத்தல் வேண்டும்.

4.6 இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட வங்கிகளினது புதிய கிளைகளுக்கான வெளிநாட்டு அலுவலர்களின் தொழில்நிலை வழிகாட்டல் 4.1இல் குறித்துரைக்கப்பட்ட அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையை விஞ்சுவதற்கான ஒப்புதல் வங்கியின் குறித்துரைக்கப்பட்ட தேவையினைப் பரிசீலனையில் கொண்டு ஒவ்வொரு விடயங்களையும் அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படும்.

5. விசா விதந்துரைப்பிற்கான கடிதங்களை வழங்குதல்

5.1 வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரினால் விசா விதந்துரைப்பிற்காக வழங்கப்படும் கடிதங்கள் பின்வருவனவற்றிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்கும்.

(i) உரிமம் பெற்ற வங்கியின் கொடுப்பனவுப் பட்டியலிலுள்ள அல்லது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டுள்ள வங்கிகளின் தாய் வங்கி மற்றும் கீழேயுள்ள இவ்வழிகாட்டல்களின் நியதிகளில் அனுமதிக்கப்பட்டவை/ ஒப்புதலளிக்கப்பட்டவற்றின் கொடுப்பனவுப் பட்டியலிலுள்ள வெளிநாட்டு அலுவலர்களுக்கு:

(அ) முதன்மை நிறைவேற்று அலுவலர் அல்லது நிறைவேற்றுத் தொழிற்பாடுகளை ஆற்றுகின்ற அலுவலர்கள்; அத்துடன்

(ஆ) வேறு எவரேனும் அலுவலர்கள்.

(ii) வங்கித்தொழில் சட்டத்தில் வவைிலக்கணம் செய்யப்பட்ட நெருங்கிய உறவினர்கள் (வாழ்க்கைத் துணைவர் மற்றும் தங்கியுள்ள சிறுவர்கள்) மற்றும் வெளிநாட்டு அலுவலர்களில் தங்கியுள்ள பெற்றோர்;

(iii) உரிமம் பெற்ற வங்கியொன்றின் வெளிநாட்டுப் பணிப்பாளரொருவர்; அத்துடன்

(iv) பணிப்பாளர் சபைக்கான அல்லது இவ்வழிகாட்டல்களின் நியதிகளில் வங்கி அனுமதித்த ஆலோசனையாளர்கள்/ மதியுரையாளர்கள்.

5.2 வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரினால் விசாவிற்காக விதந்துரைக்கப்பட்ட அனைத்து விண்ணப்பதாரிகளும் அவர்கள் இலங்கையில் தங்கி இருக்கும் காலப்பகுதியில் தாமாகவே பொறுப்புடன் நடந்து கொள்ளுதல் வேண்டும்.

5.3 உள்நாட்டில் கூட்டிணைக்கப்பட்ட வங்கிகளின் பணிப்பாளர் சபையினர் அல்லது முதன்மை நிறைவேற்று அலுவலர் மற்றும் இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட வங்கிகளின் இலங்கையின் தொழிற்பாடுகளுக்குப் பொறுப்பாகவுள்ள தலைமை அலுவலகத்திலுள்ள பிரதேச அலுவலகத்திலுள்ள நிறைவேற்று அலுவலர்கள் இலங்கையில் தங்கியுள்ள வெளிநாட்டு அலுவலர்களின் தவறான நடத்தை மற்றும் ஏனைய கரிசனைக்குரிய விடயங்கள் தொடர்பில் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு அறிவிப்பதற்குப் பொறுப்புடையவர்களாவர்.

5.4 உரிமம் பெற்ற வங்கிகள் இணைப்பு I இன் பகுதி II இல் தரப்பட்டுள்ளவாறு விசா விதந்துரைப்புக் கோரிக்கையினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

6. இரத்துச் செய்தல்

6.1 வங்கிகளிலுள்ள வெளிநாட்டு அலுவலர்களின் வேலை வாய்ப்பிற்கான வழிகாட்டல்கள் தொடர்பில் 2007ஆம் ஆண்டு திசெம்பர் 31ஆம் திகதியிடப்பட்ட சுற்றறிக்கை எண் 02/01/00/0002/001 இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது.

ஏ. ஏ. எம். தாசிம்
**பணிப்பாளர் /வங்கி மேற்பார்வைத் திணைக்களம்**

**இணைப்பு I**

| **பகுதி I : வெளிநாட்டு அலுவலர்களை நியமிப்பதற்கான விண்ணப்பப் படிவம்** | | |
|---|---|---|
| 1. | வங்கியின் பெயர் | |
| 2. | வெளிநாட்டு அலுவலரின் பெயர் | |
| 3. | தாய் வங்கியில் வெளிநாட்டு அலுவலரின் தற்போதைய பதவி | |
| 4. | இலங்கையில் நிரப்பப்படவுள்ள பதவி | |
| 5. | வெளிநாட்டு அலுவலருடைய பொறுப்புக்கள்/ அவருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள செயற்றிட்டங்கள் | |
| 6. | பதவி/ ஒப்பந்தம்/ செயற்றிட்டத்தின் காலப்பகுதி | |
| 7. | வியாபாரங்களின் மீது/ வெளிநாட்டு அலுவலரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற ஆற்றல் மீதான எறிவுகள் (முக்கிய செயற்பாட்டுக் குறிகாட்டிகளும் ஒவ்வொரு முக்கிய செயற்பாட்டுக் குறிகாட்டிக்குமாற இலக்கிடப்பட்ட திகதிகள்) | |
| 8. | நியமனத்துடன் தொடர்பான ஏனைய ஏதாவது தகவல் (உ-ம்: வழிமுறையுரிமை பற்றிய திட்டம்) | |

சமர்ப்பிக்க வேண்டிய இணைப்புக்கள்:

1. வெளிநாட்டு அலுவலரின் சுயவிருப்பக் கோவை
2. விபரங்களின் துல்லியம் பற்றி அத்தாட்சிப்படுத்தல்*

| **பகுதி II: விசா விதந்துரைப்புக் கோரல் விண்ணப்பம்**<br>**(விசா விதந்துரைப்பு வேண்டப்படும் ஒவ்வொரு நபருக்குமாக பூர்த்தி செய்யப்பட வேண்டும்)** | | |
|---|---|---|
| 1. | முழுப் பெயர் | |
| 2. | வெளிநாட்டு அலுவலருடனான உறவு | |
| 3. | பிறந்த திகதி | |
| 4. | பிரசாவுரிமை | |
| 5. | பால் | |
| 6. | திருமண நிலை | |
| 7. | விசாவின் வகை | |

| | | |
|---|---|---|
| 8. | விசாவிற்கு விண்ணப்பிப்பதற்கான காரணங்கள் | |
| 9. | கடவுச்சீட்டு விபரங்கள் (கடவுச்சீட்டு இலக்கம், வழங்கப்பட்ட திகதி, காலாவதியாகும் திகதி) | |
| 10. | வேறு ஏதாவது பொருத்தமான தகவல் | |

சமர்ப்பிக்க வேண்டிய இணைப்புக்கள்:

1. அத்தாட்சிப்படுத்தப்பட்ட கடவுச்சீட்டின் பிரதி
2. விபரங்களின் துல்லியம் பற்றி அத்தாட்சிப்படுத்தல்*

**உறுதி ஆவணம்:**

மேற்குறிப்பிட்ட தகவல் எனது அறிவுக்கெட்டிய வகையில் உண்மையானதும் பூரணமானதுமென உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: ஒப்பம்:

* *வெளிநாட்டு அலுவலர்கள் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட விபரங்களின் துல்லியத்தினை முதன்மை நிறைவேற்று அலுவலர் அத்தாட்சிப்படுத்த வேண்டும். முதன்மை நிறைவேற்று அலுவலர், அவரது துணை, தங்கியிருக்கும் பிள்ளைகள் மற்றும் தங்கியிருக்கும் பெற்றோர்கள் பற்றிய விபரங்கள் வங்கியானது உள்நாட்டில் கூட்டிணைக்கப்பட்டிருக்கும் பட்சத்தில் கம்பனிச் செயலாளராலும் வங்கி இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டிருக்குமாயின் இலங்கையில் தொழிற்பாடுகளுக்கு பொறுப்பாகவுள்ள பிரதான அலுவலர்/ பிராந்திய பிரதான அலுவலகத்தின் நிறைவேற்று அலுவலரால் அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டும். அத்தகைய அத்தாட்சி முகப்புக் கடிதத்தில் உள்ளடக்கப்பட வேண்டும்.*

**சுற்றறிக்கை 2019இன் 02ஆம் இலக்கம்** 2019 சனவரி 18

## உரிமம் பெற்ற வங்கிகள் ஆண்டு மற்றும் காலாண்டு நிதியியல் கூற்றுக்களையும் ஏனைய வெளிப்படுத்துகைகளையும் வெளியிடுதல்

1. வங்கித்தொழில் சட்டத்தின் கீழான தேவைப்பாடுகள்

1.1 திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 38 மற்றும் 76 (எச்) என்பனவற்றின் நியதிகளுக்கிணங்க, இலங்கைக்குள் கூட்டிணைக்கப்பட்டுள்ள அல்லது நிறுவப்பட்டுள்ள அனைத்து உரிமம் பெற்ற வங்கிகளும் இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டுள்ள அனைத்து உரிமம் பெற்ற வங்கிகளும்:

(i) அவற்றின் கணக்காய்வுச் செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களை அவற்றின் நிதியியல் ஆண்டு முடிவடைந்ததன் பின்னர் ஐந்து மாதங்களுக்குள் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கவும்;

(ii) கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களை அக்காலப்பகுதியில் குறைந்தது ஒரு தடவையாவது இலங்கையில் சுற்றோட்டத்திலுள்ள சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில தினச் செய்தித்தாள்களில் வெளியிடவும்;

(iii) அடுத்த நிதியியல் ஆண்டிற்கான நிதியியல் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு காட்சிப்படுத்தப்படும் வரை வங்கிகள் இந்நிதியியல் கூற்றுக்களை அவற்றின் ஒவ்வொரு வியாபாரத் தலங்களிலும் துலாம்பரமாக தெரியக்கூடிய இடத்தில் காட்சிப்படுத்தவும்;

வேண்டும்.

2. அதிகாரமளித்தல்

2.1 வங்கித்தொழில் சட்டத்தின் 38(3) மற்றும் 76(எச்) ஆகிய பிரிவுகளின் நியதிகளில், நாணயச் சபையானது, ஏதேனும் வெளிப்படுத்துகைத் தேவைப்பாடுகளை மேற்கொள்ள வேண்டியிருப்பது உட்பட, நிதியியல் கூற்றுக்களின் படிவத்தினை குறித்துரைக்கும். அத்தகைய படிவம் குறித்துரைக்கப்படுமிடத்து, ஒவ்வொரு உரிமம் பெற்ற வங்கியினதும் நிதியியல் கூற்றுக்களும் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய படிவங்களிலேயே தயாரிக்கப்படுதல் வேண்டும்.

3. பிரயோகத்தின் செயற்பரப்பு

3.1 உரிமம் பெற்ற வங்கிகள் முறையே ஆண்டு மற்றும் காலாண்டு நிதியியல் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கும் சமர்ப்பிப்பதற்கும் வெளியிடுவதற்குமாக இச்சுற்றறிக்கையின் இணைப்பு I மற்றும் இணைப்பு II இல் தரப்பட்டுள்ள குறித்துரைக்கப்பட்ட படிவங்களைப் பயன்படுத்துதல் வேண்டும்.

3.2 இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டுள்ள உரிமம் பெற்ற வங்கிகள் தனியாக மற்றும் ஒன்றுதிரட்டப்பட்டவை ஆகிய இரண்டு அடிப்படைகளின் கீழும் நிதியியல் கூற்றுக்களை வெளியிடுதல் வேண்டும்.

3.3 வங்கித்தொழில் சட்டத்தின் 28ஆம் பிரிவின் நியதிகளில், மேலேயுள்ள 3.1 இல் குறிப்பிடப்பட்ட படிவங்களை உரிமம் பெற்ற வங்கிகளின் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளின் நிதியியல் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கும் பயன்படுத்த முடியும்.

4. இணங்குவிப்புக்கள்

4.1 உரிமம் பெற்ற வங்கிகள், அதாவது கரைகடந்த வங்கித்தொழில் பிரிவு மற்றும் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளைப் பொறுத்தவரை உரிமம் பெற்ற வங்கியினால் வெளிநாட்டில் நிறுவப்பட்ட ஏதேனும் கிளைகள் என்பன உட்பட முழு வங்கியினதும் தொடர்பான தகவல்களை வெளியிடல் வேண்டும்.

4.2 உரிமம் பெற்ற வங்கிகள் கீழே அட்டவணை 1இல் தரப்பட்டுள்ளவாறு ஆண்டு, காலாண்டு நிதியியல் தகவல்களையும் ஆண்டறிக்கை மற்றும் பத்திரிகை வெளியீடுகளை வெப்தளத்தில் வெளியிடல் வேண்டும்.

**அட்டவணை 1: ஆண்டு மற்றும் காலாண்டு வெளியீடு குறைந்தபட்ச வெளிப்படுத்துகைகள்**

| கூற்று/ தகவல்களின் வகை | கால இடைவெளி மற்றும் வெளியிடுகின்ற அமைவிடம் | |
|---|---|---|
| | காலாண்டு | ஆண்டு |
| வருமானக் கூற்று | பத்திரிகை, வெப்தளம் | ஆண்டறிக்கை, பத்திரிகை, வெப்தளம் |
| அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக் கூற்று | பத்திரிகை, வெப்தளம் | ஆண்டறிக்கை, பத்திரிகை, வெப்தளம் |
| நிதியியல் நிலைமைக் கூற்று | பத்திரிகை, வெப்தளம் | ஆண்டறிக்கை, பத்திரிகை, வெப்தளம் |
| பங்குரிமையில் ஏற்பட்ட மாற்றங்களின் கூற்று | பத்திரிகை, வெப்தளம் | ஆண்டறிக்கை, பத்திரிகை, வெப்தளம் |
| காசுப்பாய்ச்சல் கூற்று | பத்திரிகை, வெப்தளம் | ஆண்டறிக்கை, பத்திரிகை, வெப்தளம் |
| அளவிடுகின்ற அடிப்படையில் நிதியியல் சாதனங்களின் பகுப்பாய்வு | வெப்தளம் | ஆண்டறிக்கை, வெப்தளம் |
| கடன்கள் மற்றும் முற்பணங்களின் பகுப்பாய்வு | பத்திரிகை | ஆண்டறிக்கை, வெப்தளம் |
| வைப்புக்களின் பகுப்பாய்வு | பத்திரிகை | ஆண்டறிக்கை, வெப்தளம் |
| தெரிவுசெய்யப்பட்ட செயலாற்றக் குறிகாட்டிகள் | பத்திரிகை, வெப்தளம் | ஆண்டறிக்கை, பத்திரிகை, வெப்தளம் |

4.3 உரிமம் பெற்ற வங்கிகள் தொடர்பான காலாண்டின் இறுதியிலுள்ளவாறு நிதியியல் நிலைமைக் கூற்றினை அறிக்கையிடல் வேண்டும் என்பதுடன் முன்னைய நிதியியல் ஆண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களினை அடிப்படையாகக் கொண்டு இதன் ஒப்பீட்டு எண் தொகைகளையும் வெளியிடுதல் வேண்டும்.

4.4 வருமானக் கூற்று தொடர்பான அறிக்கையிடுகின்ற காலம் நிதியியல் ஆண்டின் தொடர்பான காலாண்டு முடிவிலுள்ளவாறான ஒன்றுசேர்ந்த நிலைமையாக இருத்தல் வேண்டும். வருமானக் கூற்றிற்கான ஒப்பீட்டு எண் தொகைகள் முன்னைய நிதியியல் ஆண்டிலுள்ள இதே அறிக்கையிடும் காலப்பகுதி தொடர்பானதாக இருத்தல் வேண்டும்.

4.5 உரிமம் பெற்ற வங்கிகள் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களை பத்திரிகைகளிலும் வெப்தளத்திலும் வெளியிடும் போது அத்தகைய கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு தொடர்பான அபிப்பிராயங்கள் ஏதுமிருப்பின், அவற்றையும் உள்ளடக்குதல் வேண்டும்.

4.6 உரிமம் பெற்ற வங்கிகள் தெரிவுசெய்யப்பட்ட முதன்மைச் செயலாற்றக் குறிகாட்டிகளையும் தொடர்பான விகிதங்களையும் அறிக்கையிடுகின்ற நாளன்று உள்ளவாறு அறிக்கையிடுகின்ற வேளையில் ஒப்பீட்டு ரீதியான முதன்மைச் செயலாற்றக் குறிகாட்டிகளும் விகிதங்களும் முன்னைய நிதியியல் ஆண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

4.7 இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட உரிமம் பெற்ற வங்கிகள் அத்தகைய வங்கியின் உலகளாவிய தொழிற்பாடுகள் தொடர்பில் கிடைக்கத்தக்க பிந்திய முதன்மைச் செயலாற்றக் குறிகாட்டியினைக் காலாண்டு அடிப்படையில் வெளியிடல் வேண்டுமென்பதுடன் விகிதங்கள் தாய் வங்கியின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும். அத்தகைய தகவல்கள் உள்நாட்டு நாணயத்தில் அல்லது ஐ.அ.டொலரில் குழுமத்தின் தகவல்களை அறிக்கையிடுவதற்கான நிரலில் அறிக்கையிடப்படுதல் வேண்டும்.

4.8 முதன்மைச் செயலாற்றக் குறிகாட்டிகள் தொடர்பான வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள், தீர்மானங்கள், சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டல்களில் வழங்கப்பட்ட வரைவிலக்கணங்களுக்கேற்ப கணிக்கப்படுதல் வேண்டும்.

4.9 படிவத்தில் ஒரு விடயம் தொடர்பில் நிலுவை 'இல்லை' என அறிக்கையிடப்பட வேண்டுமாயின், அத்தகைய விடயத்தினை வெட்டிவிடுவதற்குப் பதிலாக 'இல்லை' என அறிக்கையிடப்படுதல் வேண்டும்.

5. முகாமைத்துவத்தின் பொறுப்பாண்மைகள்

5.1 உரிமம் பெற்ற வங்கிகளின் பணிப்பாளர் சபையும் முகாமைத்துவமும் அவர்களது நம்பமான பொறுப்பினையாற்றும் பொழுது வங்கியின் உண்மையான நிதியியல் நிலைமைகளை வழங்குதல் வேண்டும்.

5.2 உரிமம் பெற்ற வங்கிகள் முன்மதியுடைய விகிதங்களுக்கு இணங்கியொழுகாமை ஏதேனும் காணப்படுமாயின் அதற்குப் போதுமான பிரசித்தம் வழங்கப்பட வேண்டும் என்பதுடன் அத்தகைய விகிதங்களைப் பூர்த்தி செய்வதற்கு உரிமம் பெற்ற வங்கிகள் தேவையான வழிமுறைகளை எடுத்தலும் வேண்டும்.

5.3 உரிமம் பெற்ற வங்கிகள் தவறான கூற்றுக்களை/ தகவல்களை வெளியிடுவதனையும் தீர்மானங்களை எடுக்கின்ற செயன்முறைகளுக்குத் தேவைப்படும் போதுமான தகவல்களை வெளிப்படுத்தாமல் இருப்பதனையும் தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

5.4 உரிமம் பெற்ற வங்கிகள் குறைந்தபட்சம் இங்கே உள்ளடக்கப்பட்டுள்ள வெளிப்படுத்துகைத் தேவைப்பாடுகளைப் பின்பற்றுதல் வேண்டும் என்பதுடன் பொதுமக்களின் நன்மை கருதி மேலதிக வெளிப்படுத்துகைகளை செய்வதற்கும் ஊக்குவிக்கப்படுகின்றன.

6. நிதியியல் கூற்றுக்களை வெளியிடுவதற்கான கால அவகாசம்

6.1 உரிமம் பெற்ற வங்கிகள் ஒவ்வொரு காலாண்டும் முடிவடைந்து இரண்டு மாதங்களுக்குள் குறைந்தபட்சம் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில நாளாந்தச் செய்தித்தாளொன்றில் காலாண்டு வெளியீட்டினைப் பிரசுரித்தல் வேண்டும்.

6.2 கணக்காய்வு செய்யப்பட்ட ஆண்டு நிதியியல் கூற்றுக்களை நிதியியல் ஆண்டு முடிவடைந்ததிலிருந்து ஐந்து மாதங்களுக்குள் வெளியிடுதல் வேண்டும்.

6.3 வங்கியொன்று அதன் ஆண்டு கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களை நிதியியல் ஆண்டு முடிவடைந்ததிலிருந்து மூன்று மாதங்களுக்குள் வெளியிடுமாயின் மேலே 6.1 இலுள்ள நியமங்களுக்கேற்ப நான்காவது காலாண்டிற்கான நிதியியல் கூற்றுக்களை வெளியிடும் தேவையெழாது.

7. நடைமுறைக்குவரும் நாள்/ காலம்

7.1 காலாண்டு அறிக்கையிடலுக்கான படிவங்கள் 2019.01.01 இற்குப் பின்னர் தொடங்குகின்ற காலாண்டுப் பகுதிக்கு ஏற்றுடைத்ததாக இருத்தல் வேண்டும்.

7.2 ஆண்டு அறிக்கையிடலுக்கான படிவங்கள் 2018.01.01 அன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற நிதியியல் ஆண்டிற்கு ஏற்புடைத்ததாக இருத்தல் வேண்டும்.

8. இரத்துச் செய்தல்கள்

8.1 பின்வரும் சுற்றறிக்கைகள் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

(i) ஆண்டுக் கணக்காய்வு செய்யப்பட்ட வங்கிக் கணக்குகளைத் தயாரிப்பது மீதான 1998.06.02ஆம் திகதியிடப்பட்ட இல: பீஎஸ்/38/90 கொண்ட சுற்றறிக்கை

(ii) பத்திரிகையில் வங்கிக் கணக்குகளை பிரசுரிப்பதன் மூலம் பொதுமக்களுக்கான வெளிப்படுத்துகைகள் மீதான 2001.09.10ஆம் திகதியிடப்பட்ட இல: பீஎஸ்/62/97 கொண்ட சுற்றறிக்கை

(iii) வங்கிகளின் நிதியியல் கூற்றுக்களைப் பத்திரிகைகளில் பிரசுரிப்பதன் மூலமாக பொதுமக்களுக்கான வெளிப்படுத்துகைகள் மீதான 2006.09.30ஆம் திகதியிடப்பட்ட இல: 02/04/003/0401/001 கொண்ட சுற்றறிக்கை

(iv) வங்கிகளின் காலாண்டு நிதியியல் கூற்றுக்களைப் பத்திரிகைகளில் பிரசுரிப்பது மீதான 2006.01.26ஆம் திகதியிடப்பட்ட இல: 02/04/003/0401/001 கொண்ட சுற்றறிக்கை

(v) கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களை வங்கிகள் சமர்ப்பிப்து மீதான 2006.02.01ஆம் திகதியிடப்பட்ட சுற்றறிக்கை

(vi) வங்கிகளில் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களைப் பத்திரிகையில் பிரசுரிப்பது மீதான, 2006.02.21ஆம் திகதியிடப்பட்ட இல: 02/04/003/0401/001 கொண்ட சுற்றறிக்கை

(vii) வங்கிகளினால் போதுமானதற்ற விதத்தில்/ பிழையாக வெளியிடப்படும் வெளிப்படுத்துகைகள்/ பத்தரிகைக் கூற்றுக்கள் மீதான 2006.04.24ஆம் திகதியிடப்பட்ட இல: 02/04/003/0401/001 கொண்ட சுற்றறிக்கை

(viii) வங்கிகளின் காலாண்டு நிதியியல் கூற்றுக்களைப் பத்திரிகைகளில் வெளியிடுவதன் மூலம் பொதுமக்களுக்கான வெளிப்படுத்துகைகள் மீதான 2013.02.11ஆம் திகதியிடப்பட்ட இல: 02/17/900/0001/04 கொண்ட சுற்றறிக்கை

(ix) வங்கிகளின் கணக்காய்வு செய்யப்பட்ட ஆண்டறிக்கையினைத் தயாரித்தல், சமர்ப்பித்தல் மற்றும் வெளியிடல் மீதான 2013.02.11ஆம் திகதியிடப்பட்ட இல: 02/17/900/0001/04 கொண்ட சுற்றறிக்கை

(x) நிதியியல் கூற்றுக்களையும் ஏனைய வெளிப்படுத்துகைகளையும் வெப்தளத்தில் வெளியிடுவது மீதான 2013.09.17ஆம் திகதியிடப்பட்ட இல: 02/17/800/0002/002 கொண்ட சுற்றறிக்கை; அத்துடன்

(xi) மேலதிகக் காலாண்டு வெளிப்படுத்துகையினை பத்திரிகைகளிலும் வெப்தளத்திலும் வெளியிடுவது மீதான 2013.10.11ஆம் திகதியிடப்பட்ட இல: 02/17/900/0001/004 சுற்றறிக்கை

ஏ. ஏ. எம். தாசிம்

**பணிப்பாளர்/ வங்கி மேற்பார்வைத் திணைக்களம்**

இந்தச் சுற்றறிக்கையின் இணைப்பு I மற்றும் இணைப்பு II களை https://www.cbsl.gov.lk/en/laws/directions-circulars-guidelines-for-banks என்ற வெப்தளத்தில் காணலாம்.

**சுற்றறிக்கை 2019இன் 03ஆம் இலக்கம்** 2019 மாச்சு 12

## ஏற்பு ஆவண நியதிகளின் மீதான இறக்குமதிகளுக்கெதிரான அளவுத் தேவைப்பாடுகள்

ஏற்பு ஆவண நியதிகளின் கீழ் இறக்குமதிகளுக்கெதிரான அளவுத் தேவைப்பாடுகள் மீதான 2018 ஒத்தோபர் 11ஆம் திகதியிடப்பட்ட 2018ஆம் ஆண்டின் 2ஆம் இலக்கச் சுற்றறிக்கை 2019 மாச்சு 13ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் புறக்கீடு செய்யப்படுகின்றமை பற்றி அனைத்து உரிமம் பெற்ற வங்கிகளுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

ஜே.பி. கமலத்
**பதில் பணிப்பாளர்/வங்கி மேற்பார்வைத் திணைக்களம்**

**சுற்றறிக்கை 2019இன் 04ஆம் இலக்கம்** 2019 மாச்சு 13

## உரிமம் பெற்ற வங்கிகளின் வட்டி உழைக்கின்ற சேமிப்பு மற்றும் தவணை வைப்புக்களுக்காக வட்டியல்லாதனவற்றை அடிப்படையாகக் கொண்ட ஊக்குவிப்புத் திட்டங்கள்

1. குறிக்கோள்

1.1 வட்டி உழைக்கின்ற சேமிப்புக்களையும் தவணை வைப்புக்களையும் திரட்டுவதற்காக வட்டியல்லாதனவற்றை அடிப்படையாகக் கொண்ட ஊக்குவிப்புத் திட்டங்களை வழங்குவது உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடம் வேண்டத்தகாத போட்டித்தன்மையினை உருவாக்குகின்ற வேளையில் இலங்கை மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற வட்டி வீதக் கொள்கைகளைக் குறைத்து மதிப்பிட்டுவிடும் எனவும் மத்திய வங்கி கருதுகிறது. இதன்படி, உரிமம் பெற்ற வங்கிகள் வைப்பாளர்களின் நலவுரித்துக்களைப் பாதுகாக்கும் பொருட்டு சந்தையினால் தீர்மானிக்கப்பட்ட வட்டி வீதங்களையும் நியாயமான போட்டித்தன்மையினையும் ஊக்குவிக்கும் பொருட்டு உடனடியாக நடைமுறைக்குவரும் விதத்தில் பின்வருவனவற்றைப் பின்பற்றுமாறு அறிவிக்கப்பட்டன.

2. ஊக்குவிப்புத் திட்டங்களை அனுமதிக்கக்கூடாது

2.1 உரிமம் பெற்ற வங்கிகள்

நிதியியல் சாதனங்கள்/ பணிகள் பிறழ்வான தன்மைகளைக் கொண்டனவாக இருக்குமிடத்து, உதாரணமாக ஒப்பீட்டு ரீதியில் சேமிப்பு வைப்புக்கள் மீதான வட்டி வீதங்களைக் குறைப்பது, தவணை வைப்புக்கள் மீதான பண்புகளைச் சேமிப்பு மீது கூட்டிணைத்துக் கொள்வது போன்ற பிரதிகூலங்களை வாடிக்கையாளர்களுக்கு ஏற்படுத்துகின்ற

(i) லொத்தர் திட்டங்கள்/ பரிசுச் சீட்டுக்கள்

(ii) அன்பளிப்புத் திட்டங்கள்

என்பனவற்றை மேற்கொள்ளக்கூடாது.

3. அனுமதிக்கப்பட்ட அன்பளிப்புத் திட்டங்கள்

3.1 பின்வருவனவற்றிற்குட்பட்டு உரிமம் பெற்ற வங்கிகள் அன்பளிப்புத் திட்டங்களை (பண்டிகைக்கால/ ஊக்கவிப்பு) மேற்கொள்ளலாம்:

(i) தொடர்பான சாதனங்கள், பணிகள் அல்லது சாதனங்கள்/ பணிகளை வைத்திருக்கும் அனைத்து வாடிக்கையாளர்களும் வழங்கப்படுகின்ற அன்பளிப்புக்களைப் பெறக்கூடிய வசதி,

(ii) சாதனங்களின் தன்மையின் அடிப்படையில் ஏற்புடைத்தான சந்தை வட்டி வீதங்களை வழங்குதல்,

(iii) அன்பளிப்புப் பொருட்களின் செலவினை வாடிக்கையாளர் மீது விதிக்காதிருத்தல்,

(iv) வழங்கப்பட்ட அன்பளிப்புக்கள் தொடர்பில் வாடிக்கையாளர்கள் மீது மேலதிக நியதிகளையும் நிபந்தனைகளையும் விதிக்காதிருத்தல்.

ஜே.பி. கமலத்
**பதில் பணிப்பாளர்/ வங்கி மேற்பார்வைத் திணைக்களம்**

**வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை 2019இன் 01ஆம் இலக்கம்** 2019 ஏப்பிறல் 17

## உந்து ஊர்திகள் மற்றும் இன்றியமையாதனவல்லாத நுகர்வுப்பொருட்களின் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள்

தேசிய சேமிப்பு வங்கிக்கு, உந்து ஊர்திகள் மற்றும் இன்றியமையாதனவல்லாத நுகர்வுப்பொருட்களின் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள் மீதான 2018 ஒத்தோபர் 12ஆம் திகதியிடப்பட்ட 2018ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரையானது, இப்பணிப்புரையின் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் புறக்கீடு செய்யப்படுகின்றமை பற்றி இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

எச் ஏ கருணாரத்ன
**பிரதான நிறைவேற்று அலுவலர் / இலங்கை மத்திய வங்கியின்**
**பதில் மூத்த துணை ஆளுநர்**

**சுற்றறிக்கை 2019இன் 05ஆம் இலக்கம்** 2019 ஏப்பிறல் 18

**சலுகை ரீதியான நியதிகளில் அனுமதிப்பத்திரங்களின் கீழ் உந்து ஊர்திகளின் இறக்குமதிக்காகத் திறக்கப்படுகின்ற நாணயக் கடிதம் மீதான கட்டுப்பாடுகளை நீக்குதல்**

1. சலுகை ரீதியான நியதிகளிலான அனுமதிப்பத்திரங்களின் கீழ் உந்து ஊர்திகளின் இறக்குமதிக்காகத் திறக்கப்படுகின்ற நாணயக் கடிதம் மீதான கட்டுப்பாடுகள் பின்வருமாறு நீக்கப்படுவது பற்றி உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கும் அறிவிக்கப்படுகிறது.

(அ) சுற்றறிக்கை இலக்கம் 22/99 கொண்ட கொடுப்பனவிற்கெதிரான சுற்றறிக்கையின் நியதிகளில் உந்து ஊர்திகளின் இறக்குமதிக்காக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களைப் பின்வரும் திகதியிலிருந்து அல்லது அதன் பின்னர் திறக்கலாம்:

(i) 2018.12.31 அன்று அல்லது அதற்குமுன் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களுக்கு 2019.05.01ஆம் திகதி;

(ii) எந்தவொரு திகதியிலும் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களுக்கு 2019.06.01ஆம் திகதி.

(ஆ) இல.01/108 கொண்ட வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கைச் சுற்றறிக்கையின் நியதிகளில் உந்து ஊர்திகளின் இறக்குமதிக்காக/ கொள்வனவிற்காக வழங்கப்பட்டு பின்னர் திருத்தப்பட்ட அனுமதிப்பத்திரங்களும் இலங்கை தூதுவராலயங்கள்/ வெளிநாட்டுப் பதவிகளுக்கு நியமிக்கப்பட்ட அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களும் பின்வரும் திகதியிலிருந்தோ அல்லது பின்னரோ திறக்கப்படலாம்:

(i) 2018.09.03 அன்றோ அல்லது அதற்கு முன்போ வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களுக்கு 2019.06.01;

(ii) 2018.11.30 அன்றோ அல்லது அதற்கு முன்போ வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களுக்கு 2019.07.01;

(iii) 2019.02.18 அன்றோ அல்லது அதற்கு முன்போ வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களுக்கு 2019.08.01;

(iv) 2019.06.30 அன்றோ அல்லது அதற்கு முன்போ வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களுக்கு 2019.09.01;

(v) எந்தவொரு திகதியிலும் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களுக்கு 2019.10.01.

2. உந்து ஊர்திகளின் இறக்குமதியினைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள் மீது 2018.09.28 ஆம் திகதியிடப்பட்ட 2018ஆம் ஆண்டின் 06ம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரையின் 02ஆம் இலக்க பணிப்புரையானது 2019ஆம் ஆண்டின் ஏப்பிறல் 18ஆம் திகதியிடப்பட்ட 2019ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரையின் மூலம் புறக்கீடு செய்யப்படுகிறது.

ஜே.பி. கமலத்

**பதில் பணிப்பாளர்/ வங்கி மேற்பார்வைத் திணைக்களம்**

**வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2019இன் 02ஆம் இலக்கம்** 2019 ஏப்பிறல் 18

**உந்து ஊர்திகளின் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள்**

1. உந்து ஊர்திகளின் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள் தொடர்பில் 2018.09.28ஆம் திகதியிடப்பட்ட 2018ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளின் 02ஆம் இலக்க பணிப்புரையினை இப்பணிப்புரையின் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் புறக்கீடு செய்வது பற்றி உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2. சலுகை ரீதியான நியதிகளில் அனுமதிப்பத்திரங்களின் கீழ் உந்து ஊர்திகளின் இறக்குமதிக்காக நாணயக் கடிதங்களைத் திறப்பதன் மீதான கட்டுப்பாடுகளை அகற்றுவது தொடர்பான 2019இன் 05ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் கீழ் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளை உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளும் பின்பற்றுதல் வேண்டும்.

எச் ஏ கருணாரத்ன

**பிரதான நிறைவேற்று அலுவலர்/ இலங்கை மத்திய வங்கியின்**
**பதில் மூத்த துணை ஆளுநர்**

**சுற்றறிக்கை 2019இன் 06ஆம் இலக்கம்** 2019 ஏப்பிறல் 26

**இலங்கை கணக்கீட்டு நியமம் - இ.க.அ. நியமம் 9: உரிமம் பெற்ற வங்கிகளிலுள்ள நிதியியல் சாதனங்கள் மீதான 2018இன் 04ஆம் இலக்கச் சுற்றறிக்கைக்கான துணைநிரப்பு**

1. இலங்கை மத்திய வங்கி 2018 திசெம்பர் 31ஆம் நாளன்று, இ.க.அ. நியமம் 9 இன் தேவைப்பாடுகளுக்குள் பின்பற்றப்படுவதற்காக இ.க.அ. நியமம் 9 தொடர்பில் வங்கித்தொழில் துறையில் இவை தொடர்ச்சியாகவும் முன்மதியுடனும் பிரயோகிக்கப்படுவதனை ஊக்குவிப்பதற்காக உரிமம் பெற்ற வங்கிகளுக்கு வழிகாட்டல்களை விடுத்தது.

2. நாணயச் சபை, உரிமம் பெற்ற வங்கிகளின் பிரதிநிதிகளுடனான சந்திப்பினையும் உயர்ந்த சந்தை வட்டி வீதங்கள் தொடர்பான செயலாற்றக் குழுவின் அறிக்கையினையும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளையும் பரிசீலனையில் கொண்டு உரிமம் பெற்ற வங்கிகள் இ.க.அ. நியமம் 9 இனைப் பின்பற்றுவது தொடர்பில் இடைக்கால வழிமுறையொன்றாக நிலைமாறும் காலப்பகுதியில் உரிமம் பெற்ற வங்கிகள் நாணயச் சபையின் ஒப்புதலுடன் பின்வருவனவற்றைப் பின்பற்றலாம்.

(i) இலங்கை கணக்கீட்டு நியமம் - இ.க.அ. நியமம் 9: 2018.12.31 அன்று இலங்கை மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட நிதியியல் சாதனங்களைப் பின்பற்றுவது தொடர்பில் உரிமம் பெற்ற வங்கிகளுக்கான வழிகாட்டலுக்கான இணைப்பு 1இன் பிரிவு 1.2இல் குறிப்பிடப்பட்டவாறான தேவைப்பாடுகள் தொடர்பில் உரிமம் பெற்ற வங்கிகள் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியொன்றிற்கு வழங்கப்படுகின்ற ரூ.25 மில்லியன் கொண்ட மொத்தக் கடன் வரையில், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளைப் பொறுத்தவரையில் 2019.01.01 இலிருந்து 2020.06.30 இற்கிடையிலான தற்காலிக காலப்பகுதிக்காகப் பணிப்பாளர் சபையினால் குறித்துரைக்கப்பட்ட உள்ளக ரீதியாக ஒப்புதலளிக்கப்பட்ட நடவடிக்கை முறைகளுக்குட்பட்டு, கொடுகடன் இடர்நேர்வில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பின் மீதான 30 நாள் மறுக்கத்தக்க ஊகத்தினை 60 நாட்களுக்கு மறுத்துரைக்கலாம்.

(ii) மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையின் இணைப்பு I இன் பிரிவு 1.2(ஆ) மற்றும் 1.3(ஆ) தொடர்பில், உரிமம் பெற்ற வங்கிகள் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு வழங்கப்பட்டு 2019.01.01 இலிருந்து 2020.06.30 இடைப்பட்ட காலப்பகுதியில் மீளக்கட்டமைக்கப்பட்டு வருகின்ற கொடுகடன் வசதிகளுக்கு விலக்களிக்கலாம்.

(iii) மேலும், மேலே குறிப்பிடப்பட்ட வழிகாட்டல்களின் நியதிகளில், கொடுகடன் வசதியொன்று கொடுகடன் தரம் மோசமடைந்தமையின் காரணமாக ஆரம்ப மீள்கொடுப்பனவுக் காலம் திருத்தியமைக்கப்பட்டிருக்குமிடத்து மாத்திரம், மீளவமைக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படல் வேண்டுமென வலியுறுத்தப்பட்டிருக்கின்ற வேளையில் தொடர்பான கொடுகடன் வசதி இலங்கை மத்திய வங்கியின் பணிப்புரைகளின் நியதிகளில் (தற்காலிக மேலதிகப் பற்றுக்கள் உட்பட) செயற்படுகின்றதொன்றாக இருத்தல் வேண்டும். அடிப்படை வியாபார விடயமொன்று காணப்பட்டு கொடுகடன் இடர்நேர்வில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கள் காணப்படவில்லையாயின் பழுதுறல் விதிப்புக்கள் எதுவும் உறப்படாமல் வசதிகளை நீடிப்பது சாத்தியமாகும். வங்கிப் பணிப்பாளர்களினால் ஒப்புதலளிக்கப்பட்ட வங்கியின் உள்ளகக் கொள்கைகள் ஆரம்ப மீள்கொடுப்பனவு நியதிகள் மாற்றம் செய்யப்படுகின்ற பொழுது அல்லது நீடிக்கப்படும் பொழுது கொடுகடன் இடர்நேர்வுகளை மதிப்பிடுகையில் பரிசீலனையில் கொள்ளப்பட வேண்டிய காரணிகளைத் தயாரித்திருத்தல் வேண்டும்.

(iv) 2020.06.30 வரையான இடைப்பட்டக் காலப்பகுதியில் உரிமம் பெற்ற வங்கிகள் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான அவர்களின் முற்பணங்களின் சொத்துப்பட்டியல் பகுப்பாய்வுகளையும் பின்னூட்டல் பரீட்சிப்புக்களை மேற்கொள்ளலாம் என்பதுடன் இப்பிரிவிற்கான அல்லது அதன் ஏதேனும் துணைப் பிரிவிற்கான எதிர்பார்க்கப்படும் இழப்பு ஏற்பாடுகளைக் கணிப்பதற்கான மாதிரிகளை அபிவிருத்தி செய்வதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

(v) மேலும், தற்காலிக மேலதிகப் பற்றுக்களுக்குப் பதிலாக, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு குறுங்கால சுழலும் நிதியிடலுக்கு வசதியளிப்பதற்காக உபாயச் சாதனங்களைக் கண்டறிய வேண்டுமென்பதுடன் அத்தகைய சாதனங்களை நியாயமானதொரு வீதத்தில் விலையிடுதலும் வேண்டும்.

**பணிப்பாளர்/ வங்கி மேற்பார்வைத் திணைக்களம்**

**வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2019இன் 03ஆம் இலக்கம்** 2019 ஏப்பிறல் 26

## பாசல் III இன் கீழ் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் மூலதனம் மற்றும் திரவத்தன்மை நியமங்கள் மீதான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு

மூலதனத் தேவைப்பாடுகள் மீதான 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள், திரவத்தன்மை பாதுகாப்பு விகிதம் மீதான 2018ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் மற்றும் பாசல் III மூலதனம் மற்றும் திரவத்தன்மை நியமங்களின்படி விடுக்கப்பட்ட நிகர உறுதித்தன்மை வாய்ந்த நிதியிடல் விகிதம் மீதான 2018ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் என்பன பின்வருமாறு திருத்தப்படுகின்றன.

1. திருத்தங்கள்

1.1 **மூலதனத் தேவைப்பாடுகள்**

மூலதனத் தேவைப்பாடுகள் மீதான 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளின் அட்டவணை Iஇன் பின்னிணைப்பு IVஇன் பகுதி III(A) இன் 20.3.1.8.1.0 *(டி)(ஐ)* இன் வெப்பினை அடிப்படையாகக் கொண்ட கூற்றுக் குறியீட்டில் வழங்கப்பட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி வெளிப்படுத்துகைக்காக தகைமைப் பெறும் பிரமாணங்கள் இத்தால் இணைப்பு I இன் பகுதி I இல் உள்ளவாறு திருத்தப்படுகின்றன.

1.2 **திரவத்தன்மைப் பாதுகாப்பு விகிதம்**

திரவத்தன்மைப் பாதுகாப்பு விகிதம் மீதான 2018ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளின் பின்னிணைப்பு II இன் 19.3.1.1.2.0 கொண்ட வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட கூற்றுக்குறியீடு இத்தால் இணைப்பு Iஇன் பகுதி II இல் உள்ளவாறு திருத்தப்படுகிறது.

1.3 **நிகர நிலையான நிதியிடல் விகிதம்**

நிகர நிலையான நிதியிடல் விகிதம் மீதான 2018ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரையின் அட்டவணை I இன் பின்னிணைப்பு IIஇன் 32.2.2.1.0.0 இன் வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட கூற்றுக் குறியீடு இத்தால் இணைப்பு I இன் பகுதி III இல் உள்ளவாறு திருத்தப்படுகிறது.

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி

**நாணயச் சபையின் தலைவரும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**இணைப்பு I**

| பகுதி I: முதலீட்டுத் தேவைப்பாடு | |
|---|---|
| வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட கூற்றுக் குறியீடு | விடயம் |
| 20.3.1.8.1.0 | (ஈ) (i) **சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியின் வெளிப்படுத்துகை**<br>I. கடன் வழங்கும் வங்கியின் ஒரு சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் ஆகக்கூடிய கொடுகடன் வெளிப்பாடு ரூ.250 மில்லியனை விஞ்சக்கூடாது<br>II. கடன் வசதி வழங்கப்படும் நேரத்தில் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியின் வருடாந்த புரள்வு ரூ.750 மில்லியனை விஞ்சக்கூடாது.<br>III. சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் வருடாந்த புரள்வினைச் சரிபார்ப்பதற்குச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திற்குள்ளேயான ஒரு பொறிமுறையினை வங்கி பின்பற்றலாம். சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திற்குள்ளேயான பொறிமுறை வங்கியின் கொடுகடன் கொள்கையினுள் உள்ளடக்கப்பட வேண்டும். |

| பகுதி II: திரவத்தன்மை பாதுகாப்பு விகிதம் | |
|---|---|
| வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட கூற்றுக் குறியீடு | விடயம் |
| 19.3.1.1.2.0 | **சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள்**<br>சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளினால் வங்கியொன்றில் வைத்திருக்கப்படும் வைப்புக்கள் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியொன்றினால் வங்கியில் வைத்திருக்கப்படும் மொத்த வைப்புத் தொகை ரூ.250 மில்லியனை விஞ்சக்கூடாது.<br>ஒரு சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியொன்றாக வகைப்படுத்தப்படுவதற்கான தகுதிப் பிரமாணங்கள் பின்வருமாறு:<br>(i) வைப்பொன்றினைப் பெற்றுக்கொள்ளும்/ கடன் வசதியினை வழங்கும் நேரத்தில் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியின் வருடாந்தப் புரள்வு ரூ.750 மில்லியனை விஞ்சக்கூடாது.<br>(ii) சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியின் வருடாந்தப் புரள்வினைச் சரிபார்ப்பதற்கு சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திற்குள்ளேயான உள்ளகப் பொறிமுறையொன்று வங்கியினால் பின்பற்றப்படலாம். |

| பகுதி III: நிகர நிலையான நிதியிடல் விகிதம் | |
|---|---|
| வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட கூற்றுக் குறியீடு | விடயம் |
| 32.2.2.1.0.0 | **ஒரு வருடத்திற்குக் குறைவான எஞ்சிய முதிர்ச்சி கொண்ட சில்லறை வாடிக்கையாளர் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளினால் வழங்கப்பட்ட முதிர்வடையாத வைப்புக்கள் மற்றும் கால வைப்புக்கள்**<br>ஒரு வருடத்திற்குக் குறைவான எஞ்சிய முதிர்ச்சி கொண்ட சில்லறை வாடிக்கையாளர் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளினால் வழங்கப்பட்ட முதிர்வடையாத வைப்புக்கள் மற்றும் கால வைப்புக்கள் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளைப் பொருத்த வரையில் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியொன்றினால் வங்கியில் வைத்திருக்கப்படும் வைப்புக்களின் மொத்தத் தொகை ரூ.250 மில்லியனை விஞ்சக்கூடாது.<br>ஒரு சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியொன்றாக வகைப்படுத்துவதற்கான தகுதிப் பிரமாணங்கள் பின்வருமாறு:<br>(i) வைப்பொன்றினைப் பெற்றுக்கொள்ளும்/ கடன் வசதியினை வழங்கும் நேரத்தில் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியின் வருடாந்தப் புரள்வு ரூ.750 மில்லியனை விஞ்சக்கூடாது.<br>(ii) சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியின் வருடாந்தப் புரள்வினைச் சரிபார்ப்பதற்கு சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திற்குள்ளேயான உள்ளகப் பொறிமுறையொன்று வங்கியினால் பின்பற்றப்படலாம். |

**நாணய விதிச் சட்டக் கட்டளை 2019இன் 01ஆம் இலக்கம்** 2019 ஏப்பிறல் 26

## உரிமம் பெற்ற வங்கிகளின் இலங்கை ரூபா வைப்புக்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள்

பொருளாதாரத்தில் தற்பொழுது நிலவுகின்ற வைப்புக்கள் மற்றும் கடன்வழங்கல் சாதனங்கள் மீதான உயர்ந்த உண்மையான வட்டி வீதங்களையும் மற்றும் நிதியியல் முறைமையூடாக வலுவானதும் விரைவானதுமான நாணயக் கொள்கைப் பரிமாற்றத்திற்கான தேவையினையும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளை (இதனகத்துப் பின்னர் உரிமம் பெற்ற வங்கிகள் எனக் குறிப்பிடப்படும்) கடன்வழங்கல் வீதத்தின் மீதான வட்டியைக் குறைக்கச் செய்து அதன் மூலம் உண்மைப் பொருளாதாரத்திற்குக் கொடுகடன் பாய்ச்சலை அதிகரிப்பதனையும் பரிசீலனையில் கொண்டு நாணயச் சபை உரிமம் பெற்ற வங்கிகளின் வைப்புச் சாதனங்கள் தொடர்பில் செலுத்தப்பட வேண்டிய உயர்ந்தபட்ச வட்டி வீதங்களின் மீது கட்டளையொன்றினை விடுத்தது.

1. நாணய விதிச் சட்டத்தின் கீழான அதிகாரவளிப்பு

1.1 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 104(1)(அ)இன் நியதிகளில், நாணயச் சபையானது, வைப்புக்களின் பல்வேறு வகுப்புக்களின் மீது உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளும் செலுத்தத்தக்க வட்டியின் உயர்ந்தபட்ச வீதங்களை காலத்திற்குக் காலம் நிர்ணயித்து வருகின்றது.

2. இலங்கை ரூபா வைப்புக்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள்

2.1 இக்கட்டளையில் வழங்கப்பட்டிருப்பவை நீங்கலாக, இலங்கை ரூபா வைப்புக்களின் மீது உரிமம் பெற்ற வங்கிகளினால் முன்வைக்கப்படக்கூடிய அல்லது செலுத்தப்படக்கூடிய உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள்;

(i) கீழேயுள்ள அட்டவணை 01இன் படி பெறப்பட்ட வட்டி வீதங்களை விஞ்சக்கூடாது; அத்துடன்

(ii) துணைநில் வைப்பு வசதி வீதத்தினை அல்லது 364 நாள் திறைசேரி உண்டியல் வீதத்தின் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதத்தினை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

**அட்டவணை 01: உரிமம் பெற்ற வங்கிகளின் இலங்கை ரூபா வைப்புக்களுக்கு முதிர்ச்சியில் செலுத்தப்படத்தக்க உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள்**

| வைப்பின் காலம் | ஆண்டிற்கு உயர்ந்தபட்ச வட்டி வீதம் |
|---|---|
| மூன்று மாதங்களுக்குக் குறைவான அல்லது முதிர்ச்சி குறித்துரைக்கப்படாத சேமிப்பு மற்றும் ஏனைய வைப்புக்களுக்கு | துணைநில் வைப்பு வசதி வீதம் 0.50% |
| **கால வைப்புக்கள்** | |
| 03 மாதங்களும் 06 மாதங்களுக்கு குறைவானவையும் | திறைசேரி உண்டியல் வீதம் - 0.50% |
| 06 மாதங்களும் 01 ஆண்டிற்கு குறைவானவையும் | திறைசேரி உண்டியல் வீதம் |
| 01 ஆண்டிற்கும் 02 ஆண்டுகளுக்குக் குறைவானவையும் | திறைசேரி உண்டியல் வீதம் + 1.00% |
| 02 ஆண்டிற்கும் 03 ஆண்டுகளுக்குக் குறைவானவையும் | திறைசேரி உண்டியல் வீதம் + 1.50% |
| 03 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளுக்குக் குறைவானவையும் | திறைசேரி உண்டியல் வீதம் + 2.00% |
| 5 ஆண்டுகள் அல்லது அதற்குமேல் | திறைசேரி உண்டியல் வீதம் + 2.50% |

2.2 மேலும், வைப்புக் காலப்பகுதியில் கால வைப்புக்களின் மீது கொடுப்பனவு செய்யப்பட்ட ஏதேனும் காலாந்தர வட்டி வீதங்கள் கணிக்கப்பட்டு அவ்வாறு பெறப்படும் வருடாந்த பயனுறு வட்டி வீதம் மேலே குறித்துரைக்கப்பட்ட உயர்ந்தபட்ச வட்டி வீதத்தினை விஞ்சக்கூடாது.

2.3 மேலே கட்டளை 2.1இன் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், 18 வயதிற்குக் குறைவான சிறுவர்களினதும் சேமிப்பு வைப்புக்களின் மீது 01 ஆண்டு அல்லது அதற்கும் கூடுதலான காலப்பகுதிக்குரிய மூத்த பிரசைகளினது சேமிப்பு வைப்புக்கள் மீதும் உரிமம் பெற்ற வங்கிகளினால் செலுத்தத்தக்க உயர்ந்தபட்ச வீதம் அட்டவணை 01இல் தரப்பட்டுள்ள வீதங்களிலும் பார்க்க 50 அடிப்படைப் புள்ளிகள் (0.5 சதவீதம்) கூடுதலாகச் செலுத்தப்படுதல் வேண்டும். மூத்த பிரசைகளின் கூட்டு கணக்குகளைப் பொறுத்தவரையில், கட்டளை 2 இலுள்ள அதிகரிக்கப்பட்ட வீதத்தினை பிரயோகிப்பதற்கு அனைத்து கணக்கு உடமையாளர்களும் மூத்த பிரசைகளாக இருத்தல் வேண்டும்.

3. ஏற்புடைத்தான துணைநில் வைப்பு வசதி வீதமும் விளைவு வீதமும்

3.1 தொடர்பான வீதங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும்:

(i) காலாண்டிற்கான துணைநில் வைப்பு வசதி வீதம் உடனடியாக முற்போந்த காலாண்டு இறுதியில் காணப்பட்ட துணைநில் வைப்பு வசதி வீதமாக இருத்தல் வேண்டும்.

(ii) காலாண்டிற்கான 364 நாட்கள் திறைசேரி உண்டியலின் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதமானது உடனடியாக முற்போந்த காலாண்டில் காணப்பட்ட 364 நாட்கள் திறைசேரி உண்டியலுக்காக இறுதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட 04 முதலாந்தர ஏலங்களின் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதத்தின் எளிய சராசரியினை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

3.2 கட்டளை 2.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள 364 திறைசேரி உண்டியலின் துணைநில் வைப்பு வசதி வீதமும் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதமும் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரினால் ஒவ்வொரு ஆண்டிலும் மாச்சு, யூன், செத்தெம்பர் மற்றும் திசெம்பர் மாத இறுதியில் அறிவிக்கப்படும். இவை அடுத்துவரும் காலாண்டிற்கு ஏற்புடைத்தனவாக இருத்தல் வேண்டும்.

4. உரிய காலத்திற்கு முன்னரான எடுப்பனவுகளுக்கு ஏற்புடைத்தான வட்டி வீதம்

4.1 எந்தவொரு கால வைப்பும் அதன் ஒப்பந்தம் செய்யப்பட்ட மூலத் திகதிக்கு முன்னதாக எடுப்பனவு செய்யப்படும் விடயத்தினைப் பொறுத்தவரையில், எடுப்பனவு செய்யப்படும் திகதி வரையில் வைப்புக்கள் மீது செலுத்தத்தக்க வட்டி எடுப்பனவு செய்யப்படும் காலப்பகுதியில் நிலவுகின்ற முழுமையான காலப்பகுதிக்கு பிரயோகிப்பதற்காக உரிமம் பெற்ற வங்கியினால் வெளியிடப்பட்ட வட்டி வீதத்திலும் பார்க்கக் குறைவான வீதமொன்றில் கணிக்கப்படல் வேண்டும். அல்லது ஒப்பந்தம் செய்யப்பட்ட வீதத்திலும் பார்க்க 100 அடிப்படைப் புள்ளிகள் குறைவாக இருத்தல் வேண்டும். உரிமம் பெற்ற வங்கி உரிய காலத்திற்கு முன்னரான எடுப்பனவின் போது, வைப்பு வைத்திருக்கப்பட்ட காலப்பகுதிக்காக அவ்வாறு கணிக்கப்பட்ட வட்டித் தொகைக்கு மேலாக ஏதேனும் வட்டித் தொகையினை மிகையாகச் செலுத்தியிருப்பின் அதனை அறவிட்டுக் கொள்ளுதல் வேண்டும். எனினும், வங்கிகள் வட்டியினைக் கணிப்பதற்கு வேறுபட்ட சூத்திரங்களைப் பயன்படுத்த முடியும் என்பதுடன் வைப்புக்களின் உரிய காலத்திற்கு முன்னரான எடுப்பனவின் மீது செலுத்தப்பட்ட ஏதேனும் நன்மைகள், இப்பணிப்புரையில் தரப்பட்டுள்ள சூத்திரத்தின் பிரயோகத்திலிருந்து செலுத்தப்பட்டிருக்கக்கூடிய வட்டித் தொகையினை விஞ்சக்கூடாது. எது எவ்வாறெனினும் கணிப்பதற்கான அடிப்படை வைப்பினைச் செய்யும் நேரத்தில் வைப்புச் செய்பவருக்குத் தெரியப்பட்டிருத்தல் வேண்டும்.

5. விதி விலக்கல்கள்

5.1 கட்டளை 2.1இல் உள்ள உயர்ந்தபட்ச வீதங்களைப் பின்வருவனவற்றிற்குப் பிரயோகிக்கக்கூடாது;

(i) இலங்கை அரசாங்கத்தினால் மூத்த பிரசைகளுக்கு வழங்கப்பட்ட நிலையான வைப்புக்கள் மீதான சிறப்பு வட்டித் திட்டம்,

(ii) உரிமம் பெற்ற வங்கிகளினால் வழங்கப்பட்டு உரிமம் பெற்ற பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட படுகடன் பிணையங்கள்; அத்துடன்

(iii) நாணயச் சபையினால் காலத்திற்குக் காலம் இக்கட்டளையிலிருந்தும் குறிப்பாக நீக்கப்படுகின்ற உரிமம் பெற்ற வங்கிகளினால் வழங்கப்பட்ட பட்டியலிடப்படாத படுகடன் பிணையங்கள்.

6. ஒழுங்குமுறைப்படுத்தல் அறிக்கையிடல்

6.1 வாராந்த வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட ‘BSD-WF-13-IR-வட்டி வீதங்கள் (“வங்கி மாத்திரம்” மொத்தம்)’ இன் ஏற்கனவேயுள்ள தேவைப்பாடுகளுக்கிணங்க ஒவ்வொரு உரிமம் பெற்ற வங்கியும் வட்டி வீதங்களின் விபரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

7. விளக்கங்கள்

7.1 இக்கட்டளையில்:

(i) கால வைப்புக்கள் என்பதன் பொருள் 03 மாதங்கள் அல்லது கூடுதலான குறித்துரைக்கப்பட்ட காலத்தின் பின்னர் மீளச் செலுத்தப்படும் என்ற உடன்படிக்கையுடன் வங்கிகளினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற அல்லது புதுப்பிக்கப்படுகின்ற, சேமிப்பு வைப்புக்கள் தவிர்ந்த வேறு ஏதேனும் வைப்புக்கள் என்பதாகும்.

(ii) சேமிப்பு வைப்புக்கள் என்பதன் பொருள் நிதிகள் வரவு வைக்கப்படக்கூடிய அல்லது குறித்துரைக்கப்பட்ட திகதிகள் தவிர்ந்த நாட்களில் நிதியினை எடுப்பனவு செய்யக்கூடிய வட்டி உழைக்கின்ற கணக்குகள் எனப் பொருள்படும்.

(iii) மூத்த பிரசைகள் என்பதன் பொருள் வைப்புக்களை ஏற்றுக்கொள்கின்ற அல்லது புதுப்பிக்கின்ற நேரத்தில் அறுபது (60) வயதினைக் கடந்த நபர்களைக் குறிக்கும்.

8. நடைமுறைப்படுத்தல்

8.1 இக்கட்டளையானது 2019 ஏப்பிறல் 29ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதலாதல் வேண்டுமென்பதுடன் அனைத்தும் புதிய வைப்புக்களுக்கும் ஏற்கனவேயுள்ள சேமிப்பு வைப்புக்களுக்கும் கால வைப்புக்களின் புதுப்பித்தல்களுக்கும் ஏற்புடைத்தானதாகும்

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி

**நாணயச் சபையின் தலைவரும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**வங்கி மேற்பார்வைத் திணைக்களம்**

2019 ஏப்பிறல் 26

சேரல்: அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கும்

கனம் ஐயா/ அம்மணி

**2019 யூன் 30ஆம் நாள் முடிவடைகின்ற காலாண்டிற்காக உரிமம்பெற்ற வங்கிகளின் இலங்கை ரூபா வைப்புக்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்களுக்கு ஏற்புடைய தொடர்பான வீதங்கள்**

'உரிமம் பெற்ற வங்கிகளின் இலங்கை ரூபா வைப்புக்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள்' மீதான 2019ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நாணய விதிச் சட்டக் கட்டளை தொடர்பாக, 2019 முதற் காலாண்டின் இறுதியிலுள்ளவாறான துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் 2019இன் முதற் காலாண்டுப் பகுதியில் 364 நாள் திறைசேரி உண்டியலுக்காக நடத்தப்பட்ட கடந்த 04 முதலாந்தர ஏலங்கள் தொடர்பான நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதத்தின் எளிய சராசரியும் கீழேயுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 01: 2019 யூன் 30ஆம் நாளன்று முடிவடைந்த காலாண்டிற்கான ஏற்புடைத்தான தொடர்பான வீதங்கள்**

| வீதம் | % |
|---|---|
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 8.00 |
| 364 நாள் திறைசேரி உண்டியலுக்கான சராசரி நிறையேற்றப்பட்ட விளைவு வீதம் | 10.54 |

உங்கள் உண்மையுள்ள
ஏ. ஏ. எம். தாசிம்
**பணிப்பாளர்/ வங்கி மேற்பார்வைத் திணைக்களம்**

**சுற்றறிக்கை 2019இன் 07ஆம் இலக்கம்** 2019 மே 08

**சுற்றுலாக் கைத்தொழில்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள்**

நாட்டில் தற்பொழுது நிலவுகின்ற சூழ்நிலைகளின் காரணமாக சுற்றுலாக் கைத்தொழிலின் மீது ஏற்பட்ட மோசமான தாக்கத்தினைக் கருத்திற் கொண்டு இதனகத்துப் பின்னர் உரிமம் பெற்ற வங்கிகள் எனக் குறிப்பீடு செய்யப்படும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளும் பின்வரும் சலுகைகளை சுற்றுலாத் தொழில்துறையிலுள்ள தனிப்பட்டவர்களும் நிறுவனங்களும் பயன்படுத்திக் கொள்ள விரும்புமிடத்து பின்வரும் சலுகைகளை அவர்களுக்கு வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

(i) சுற்றுலாப் பணிகளை வழங்குவதற்காக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையுடன் அல்லது வேறு ஏதேனும் அதிகாரசபையுடன் அல்லது சுற்றுலாப் பணிகளை வழங்குகின்ற முகவருடன் பதிவுசெய்துள்ள தனிப்பட்டவர்களுக்கும் நிறுவனங்களுக்கும் ஒவ்வொரு விடயங்களினதும் ஒழுங்கில் சட்ட இசைவுத் தாமதத்தினை வழங்கலாம்.

(ii) 2019 ஏப்பிறல் 18ஆம் திகதியிலுள்ளவாறு வெளிநின்ற கொடுகடன் வசதிகள் தொடர்பில் செயற்படுகின்ற கடன்களுக்காக (மூலதனம் மற்றும் வட்டி இரண்டும்) 2020 மாச்சு 31 வரை சட்ட இசைவுத் தாமதத்தினை வழங்கலாம்.

(iii) உரிமம் பெற்ற வங்கியின் பணிப்பாளர் சபை அல்லது பணிப்பாளர் சபையினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு ஏதேனும் அதிகாரசபை சட்ட இசைவுத் தாமதத்திற்கு ஒப்புதலளிக்கலாம்.

(iv) உரிமம் பெற்ற வங்கிகள் மூலதனத்தினையும் சட்ட இசைவுத் தாமத காலப்பகுதியில் வரவேண்டிய வட்டியையும் 2020 யூலையிலிருந்து அறவிட்டுக் கொள்ளப்பட வேண்டிய காலக் கடன்களுக்கு மாற்றல் செய்தல் வேண்டும். இவ்வசதிக்காக சலுகை வட்டி வீதமொன்றினை விதிக்கலாம்.

(v) மேற்குறிப்பிட்ட கடன் தொடர்பான மீள்கொடுப்பனவுக் காலம் மற்றும் வட்டி வீதம் என்பன தொடர்பில் உரிமம் பெற்ற வங்கியும் கடன்பாட்டாளரும் மீள்கொடுப்பனவுக் காலம் தொடர்பில் உடன்பாட்டிற்கு வருதல் வேண்டும்.

(vi) உரிமம் பெற்ற வங்கிகள் சட்ட இசைவுத் தாமத காலப்பகுதியில் வகைப்படுத்தல்கள் மற்றும் ஏற்பாட்டு நோக்கங்களுக்காக அதேவகையின் கீழ் செயற்படாக் கடன்களைப் பேணுதல் வேண்டும்.

(vii) உரிமம் பெற்ற வங்கிகள், சட்ட இசைவுத் தாமத காலப்பகுதியில் செயற்படாக் கடன்களின் மீது விதிக்கப்படக்கூடிய தண்ட வட்டி வீதத்தினை தள்ளுபடி செய்யலாம்.

(viii) உரிமம் பெற்ற வங்கிகள் அவசியமானவிடத்து, நிலுவையிலுள்ள மூலதனம் மற்றும் வட்டி என்பனவற்றுக்காக வழங்கப்பட்ட சட்ட இசைவுத் தாமதத்தினைக் கணக்கிலெடுத்ததன் பின்னர் இலங்கை தொழில்முயற்சிகள் கடன் திட்டம் (ஜயசிசுறு) இலங்கை மத்திய வங்கியின் சௌபாக்கியா கடன் திட்டம் என்பனவற்றிலுள்ள நிதிகளைத் தொழிற்பாடு மூலதன வசதிகளை வழங்குவதற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

(ix) உரிமம் பெற்ற வங்கிகள் அத்தகைய சலுகைகளை வழங்குவதற்குச் சான்றாகத் தேவையான ஆவணங்களைப் பேணுதல் வேண்டும்.

(x) உரிமம் பெற்ற வங்கிகள், இணைப்பு 1இல் உள்ள படிவத்தில் காணப்படுகின்றவாறு கடன்பாட்டாளர்களினால் பயன்படுத்தப்பட்ட சட்ட இசைவுத் தாமதத்தினை அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் திகதியளவில் மாதாந்த அடிப்படையில் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

ஏ. ஏ. எம். தாசிம்
**பணிப்பாளர்/வங்கி மேற்பார்வைத் திணைக்களம்**

இந்தச் சுற்றறிக்கையின் இணைப்பு I இனை https://www.cbsl.gov.lk./en/laws/derections-circulars guidelines-for-banks என்ற வெப்தளத்தில் பார்வையிடலாம்.

**விளக்கக் குறிப்பு 2019இன் 01 இலக்கம்** 2019 மே 16

## சுற்றுலாக் கைத்தொழிலுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் தொடர்பில் 2019ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க சுற்றறிக்கைக்கான விளக்கங்கள்

சுற்றுலாக் கைத்தொழிலுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் தொடர்பில் 2019 மே 08ஆம் திகதியிடப்பட்ட 07ஆம் இலக்க சுற்றறிக்கை தொடர்பில் பின்வரும் விளக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.

1. **தனிப்பட்டவர்கள்**

தனிப்பட்டவர்கள் என்பது சுற்றுலாத் துறைக்கு பணிகளை வழங்குகின்ற ஆட்களையும் சுற்றுலாத் துறைக்கு பணிகளை வழங்குகின்ற நிறுவனங்களின் நிரந்தர ஊழியர்களையும் உள்ளடக்குகிறது.

2. **பதிவுசெய்தல்**

(i) சுற்றுலாத் துறைக்குப் பணிளை வழங்குகின்ற ஆட்களும் நிறுவனங்களும் 2019.04.18ஆம் நாளன்று பின்வரும் ஏதேனுமொரு நிறுவனத்தில் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(அ) இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

(ஆ) இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் கீழுள்ள முகவராண்மைகள்

i) இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம்

ii) இலங்கை சுற்றுலா மரபுரிமைப் பணியகம்

iii) இலங்கை சுற்றுலா மற்றும் சுற்றுலாவிடுதி முகாமைத்துவப் பணியகம்

(இ) இலங்கை சுற்றுலா விடுதிகள் சங்கம்

(ii) மேலே 2(i)இல் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு நிறுவனத்துடனும் 2019.04.18ஆம் நாளன்று பதிவுகளை மேற்கொண்டிராத ஆட்களும் நிறுவனங்களும் 2019.04.18 அன்று தமது வியாபாரங்கள்/ பணிகளை பிரதேசபை, நகரசபை அல்லது மாநகரசபை போன்ற உள்ளூராட்சி மன்றங்களிலாவது பதிவுகளைச் செய்திருத்தல் வேண்டுமென்பதுடன் சட்ட இசைவுத் தாமதத்தினைப் பயன்படுத்திக் கொள்ளும் பொருட்டு அத்தகைய ஆட்களும் நிறுவனங்களும் மேலே 2(i)இல் குறிப்பிடப்பட்ட தொடர்பான நிறுவனத்தில் அல்லது நிறுவனங்களில் பதிவுசெய்து கொள்ளுமாறு தற்பொழுது கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

3. **சட்ட இசைவுத் தாமதத்தினை வழங்குதல்**

(i) சட்ட இசைவுத் தாமதத்தினைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பும் தனிப்பட்டவர்கள் அல்லது நிறுவனங்கள் அத்தகைய சட்ட இசைவுத் தாமதத்தினைப் பெற்றுக்கொள்ள விரும்புவது பற்றி தொடர்பான உரிமம் பெற்ற வங்கிக்கு கோரிக்கையொன்றினை விடுத்தல் வேண்டும்.

(ii) உரிமம் பெற்ற வங்கிகள் தகைமையை மதிப்பிடும் பொருட்டு மேலேயுள்ள பந்தி 2இல் குறித்துரைக்கப்பட்டுள்ள தேவைப்பாடுகள் உட்பட அத்தகைய கோரிக்கைகளை தனிப்பட்ட முறையில் மதிப்பிடல் வேண்டும்.

(iii) சட்ட இசைவுத் தாமதத்தினை 2019.04.18ஆம் திகதியிலுள்ளவாறான அத்தகைய தனிப்பட்டவர்களுக்கு அல்லது நிறுவனங்களுக்கு ஏதேனும் செயற்படுகின்ற கொடுகடன் வசதிகளுக்காக (மூலதனம் மற்றும் வட்டி இரண்டும்) வழங்கப்படுதல் வேண்டும்.

(iv) உரிமம் பெற்ற வங்கிகள், சுற்றுலா தொழில்துறைக்கு சலுகைகளை வழங்குதல் தொடர்பில் 2019ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க சுற்றறிக்கையில் விபரிக்கப்பட்டவாறான அறிக்கையிடல் படிவத்திலுள்ளவாறு சட்ட இசைவுத் தாமதத்தினைப் பயன்படுத்துவதற்கு கோரிக்கை விடுத்துள்ள அனைத்து தனிப்பட்டவர்கள் அல்லது தொழில்முயற்சிகள் அல்லது நிறுவனங்களை அறிக்கையிடுதல் வேண்டும்.

4. **இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9இன் கீழ் கணக்கீடுகளை மேற்கொள்ளுதல்**

(i) உரிமம் பெற்ற வங்கிகள் வட்டி வருமானத்தினை அங்கீகரித்தல் மற்றும் நிதியியல் சொத்துக்களுக்கான கணக்கீடு என்பன தொடர்பில் இலங்கை பட்டயக் கணக்காளரினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும் (இணைப்பு 1).

இந்தச் சுற்றறிக்கையின் இணைப்பு I இனை https://www.cbsl.gov.lk/en/laws/directions-circulars-guidelines-for-banks பார்வையிடலாம்.

**வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2019இன் 04ஆம் இலக்கம்** 2019 மே 31

## உந்து ஊர்திகள் தொடர்பாக வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம்

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 46(1) மற்றும் 76ஜே(1) என்பனவற்றின் கீழ் விடுவிக்கப்பட்டது.

உந்து ஊர்திகளைக் கொள்வனவு செய்யும் அல்லது பயன்படுத்தும் நோக்கங்களுக்காக இதனகத்துப் பின்னர் உரிமம்பெற்ற வங்கிகளென அழைக்கப்படும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினாலும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினாலும் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகள் தொடர்பில் பெறுமதிக்கான கடன் விகிதத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக இலங்கை மத்திய வங்கி பின்வரும் பணிப்புரைகளை விடுத்திருக்கிறது.

1. உந்து ஊர்திகள் தொடர்பில் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான 2018ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளின் பணிப்புரை 2.1 இனைப் பின்வரும் விடயங்கள் பதிலீடு செய்யும்.

(i) உந்து ஊர்திகளின் கொள்வனவு அல்லது பயன்பாட்டு நோக்கங்களுக்காக உரிமம் பெற்ற வங்கியினாலும் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகள் மறுஅறிவித்தல் வரை அத்தகைய ஊர்திகளின் சந்தைப் பெறுமதி பின்வரும் சதவீதங்களை விஞ்சக்கூடாது.

(அ) முதல் பதிவின் பின்னர் ஓராண்டிற்கும் குறைவான காலப்பகுதியில் இலங்கையில் பயன்படுத்தப்பட்டிருக்கின்ற பதிவு செய்யப்படாத ஊர்திகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட ஊர்திகளைப் பொறுத்த வரையில்;

அட்டவணை 1 - பெறுமதிக்கான கடன் விகிதம்

| ஊர்தி வகை | உந்து ஊர்திகள் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஊர்தி வகுப்பு | மின்னியல் ஊர்திகள் | ஏனையவை |
|---|---|---|---|
| வர்த்தக ஊர்திகள் | சி1, சி, சிஇ, டி1, டி, டிஈ, ஜி1, ஜி, ஜே | 90% | 90% |
| உந்து கார்கள், கடுவழிப்பயன் ஊர்திகள் (எஸ்யுவி) மற்றும் வான்கள் | பீ (இலகு பார வண்டிகள் மற்றும் ஒற்றைக் கூடார ஊர்திகள் தவிர) | 90% | 50% |
| முச்சில்லு வண்டிகள் | பீ1 | 90% | 25% |
| இலகு பாரவண்டிகள் | பீ | 90% | 90% |
| வேறு ஏதேனும் ஊர்திகள் | ஏ1, ஏ மற்றும் பீ இன் கீழ் வகைப்படுத்தப்பட்ட ஒற்றைக் கூடார ஊர்திகள் | 90% | 70% |
| கலப்பு உந்து கார்கள், வான்கள் மற்றும் கடுவழிப்பயன் ஊர்திகள் (எஸ்யுவி) | பீ (இலகு பார வண்டிகள் மற்றும் ஒற்றைக் கூடார ஊர்திகள் தவிர) | 50% | |

(ஆ) முதல் பதிவின் பின்னர் ஓராண்டிற்கும் கூடுதலான காலப்பகுதியில் இலங்கையில் பயன்படுத்தப்பட்ட பதிவு செய்யப்பட்ட ஊர்திகள் தொடர்பில் 70 சதவீதம்.

2. சலுகை ரீதியான நியதிகள் மீதான அனுமதிப்பத்திரத்தின் கீழான உந்து ஊர்திகளின் இறக்குமதிக்காக அல்லது கொள்வனவிற்காக வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் உந்து ஊர்திகளின் சந்தைப் பெறுமதிக்குப் பதிலாக பாரம்பரிய முறைசார்ந்த விலைப்பட்டியல் பெறுமதியின் அடிப்படையில் கணிக்கப்படுதல் வேண்டும்.

3. உந்து ஊர்திகளின் இறக்குமதியினைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள் மீதான 2018.09.28ஆம் திகதியிடப்பட்ட 2018இன் 06ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள், இப்பணிப்புரைகள் நடைமுறைக்கு வருகின்ற திகதியிலிருந்து புறக்கீடு செய்யப்படும்

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**விளக்கக் குறிப்பு 2019இன் 02 இலக்கம்** 2019 யூன் 20

**சுற்றுலா தொழில்துறைக்கு வழங்கப்பட்ட சலுகைகள் தொடர்பில் 2019ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க சுற்றறிக்கைக்கான விளக்கங்கள்**

சுற்றுலாத் தொழில் துறைக்கு வழங்கப்பட்ட சலுகைகள் தொடர்பில் 2019 மே 08ஆம் திகதியிடப்பட்ட 2019ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க சுற்றறிக்கை தொடர்பில் பின்வரும் விளக்கங்கள் விடுக்கப்படுகின்றன.

1. **பதிவுகள்**

(i) சுற்றுலாத் துறைக்குப் பணிகளை வழங்குகின்ற ஆட்களும் நிறுவனங்களும் 2019ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க விளக்கக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் நிறுவனத்துடன் பதிவுசெய்யப்படாமல் இருப்பார்களாயின், சட்ட இசைவுத் தாமதத்தினைப் பயன்படுத்திக் கொள்ளும் பொருட்டு, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையுடன் பதிவுசெய்து கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்படுகி செயற்படுகின்ற கொடுகடன் வசதிகளுக்காக (மூலதனம் மற்றும் வட்டி இரண்டும்) 2019.04.18ஆம் திகதியிலிருந்து உள்ளவாறான தகைமையுடைய தனிப்பட்டவர்களுக்கு அல்லது நிறுவனங்களுக்கு (இதனகத்துப் பின்னர் தகைமையுடைய கடன்பாட்டாளர் எனக் குறிப்பிடப்படும்) வழங்கப்படுதல் வேண்டும். எனினும், அத்தகைய தகைமையுடைய கடன்பாட்டாளர்கள் சட்ட இசைவுத் தாமதத்தினை மூலதனத்திற்கு அல்லது வட்டிக்கு மாத்திரம் பயன்படுத்த விரும்புமிடத்து, உரிமம் பெற்ற வங்கிகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றவாறு அத்தகைய சட்ட இசைவுத் தாமதத்தினை வழங்கலாம்.

(ii) உரிமம் பெற்ற வங்கிகள், விடயத்தினைப் பொறுத்து மூலதனத்தினை அல்லது வட்டியினை அல்லது இரண்டினையும் சட்ட இசைவுத் தாமத காலப்பகுதியில் வரவேண்டிய தொகையினை புதிய கொடுகடன் வசதிக்கு மாற்றலாம் அல்லது மூலக் கொடுகடன் வசதியின் முதிர்ச்சியை தகைமையுடைய கடன்பாட்டாளர்களின் சம்மதத்துடன் நீடிக்கலாம்.

(iii) தகைமை பெற்ற கடன்பாட்டாளரொருவர் சுற்றுலாத் தொழில்துறைக்கு வழங்கப்பட்ட சலுகைகள் மீதான 2019 மே 8ஆம் திகதியிடப்பட்ட 2019ஆம் ஆண்டின் 07ஆம் இலக்கச் சுற்றறிக்கையில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குக் குறைவான காலப்பகுதியொன்றிற்கு சட்ட இசைவுத் தாமதத்தினைப் பயன்படுத்த விரும்பினால் உரிமம் பெற்ற வங்கிகள் குறைவான காலப்பகுதிக்கு சட்ட இசைவுத் தாமதத்தினை வழங்கலாம். எனினும், மூலதனம், வட்டி அல்லது இரண்டினையும் மீளச் செலுத்த வேண்டிய சட்ட இசைவுத் தாமத காலப்பகுதி ஏற்புடைத்தான சட்ட இசைவுத் தாமத காலப்பகுதி முடிவடைந்த திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குப் பின்னர் ஆரம்பித்தல் வேண்டும்.

(iv) மூலதனம், வட்டி அல்லது இரண்டும் சட்ட இசைவுத் தாமத காலப்பகுதியில் செலுத்தப்பட வேண்டியதாகவிருந்து அவை புதிய வசதியொன்றிற்கு மாற்றப்படுகின்ற சந்தர்ப்பத்தில் சட்ட இசைவுத் தாமத காலப்பகுதியின் இறுதியில் 364 நாள் திறைசேரி உண்டியலுக்கான ஆகப் பிந்திய ஏல வீதத்தினை விஞ்சாத சலுகை வட்டி வீதமொன்றுடன் ஆண்டிற்கு 1.00 வட்டி வீதத்தினையும் சேர்த்து இரண்டாண்டினையும் விஞ்சாத வீதத்தில் மீள்கொடுப்பனவு காலப்பகுதிக்காக சலுகை வீதத்திலான வட்டி வீதமொன்றினை உரிமம் பெற்ற வங்கிகள் விதிக்கலாம். மீள்கொடுப்பனவுக் காலம் இரண்டாண்டுகளை விஞ்சுமாயின் உரிமம் பெற்ற வங்கியும் கடன்பாட்டாளரும் வட்டி வீதம் தொடர்பில் இணக்கப்பாட்டிற்கு வருதல் வேண்டும்.

(v) தொழிற்படு மூலதன வசதிகளின் ஏற்பாட்டினைப் பொறுத்தவரையில், உரிமம் பெற்ற வங்கிகள், நிதியமைச்சின் அபிவிருத்தி நிதித் திணைக்களத்தினால் விடுக்கப்பட்ட வழிகாட்டல்களுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

(vi) உரிமம் பெற்ற வங்கிகள் இணைப்பு Iஇல் உள்ள திருத்தப்பட்ட படிவத்திலுள்ளவாறு ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் முடிவடைந்த வாரத்திற்காக ஒன்றுசேர்ந்த அடிப்படையில் தகைமைபெற்ற கடன்பாட்டாளர்களுக்கு வழங்கிய சலுகைகளின் விபரங்களை அடுத்துவரும் வாரத்தில் புதன்கிழமையன்று அறிக்கையிடுதல் வேண்டும்.

இவ்விளக்கக் குறிப்பின் இணைப்பு I இனை https://www.cbsl.gov.lk/en/laws/directions-circulars-guidelines-for-banks என்ற வெப்தளத்தில் பார்வையிடலாம்.

2019 யூன் 28

**சேரல்: அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கும்**

கனம் ஐயா/ அம்மணி

**2019 யூலை 01ஆம் நாள் தொடங்குகின்ற காலாண்டிற்காக உரிமம்பெற்ற வங்கிகளின் இலங்கை ரூபா வைப்புக்கள் மீது விதிக்கத்தக்க குறைந்தபட்ச வட்டி வீதங்களுக்குமான விதிக்கத்தக்க தொடர்பான வீதங்கள்**

'உரிமம் பெற்ற வங்கிகளின் இலங்கை ரூபா வைப்புக்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள்' தொடர்பான 2019ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நாணய விதிச் சட்டக் கட்டளை தொடர்பாக, 2019இன் இரண்டாம் காலாண்டுப் பகுதியிலுள்ளவாறு நியம வைப்பு வீதங்கள் மற்றும் 2019இன் இரண்டாம் காலாண்டுப் பகுதியில் நடத்தப்பட்ட 364 நாள் திறைசேரி உண்டியல்களுக்கான இறுதி 04 ஏற்றுக்கொள்ளப்பட்ட முதலாந்தர ஏலங்கள் தொடர்பான நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்களின் எளிய சராசரி கீழேயுள்ள அட்டவணை 1இல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 01: 2019 யூலை 01ஆம் நாளன்று தொடங்குகின்ற காலாண்டிற்கான ஏற்புடைத்தான தொடர்பான வீதங்கள்**

| வீதம் | % |
|---|---|
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 7.50 |
| 364 நாள் திறைசேரி உண்டியலுக்கான சராசரி நிறையேற்றப்பட்ட விளைவு வீதம் | 8.83 |

உங்கள் உண்மையுள்ள

ஜே.பி. கமலத்

**பதில் பணிப்பாளர்/ வங்கி மேற்பார்வைத் திணைக்களம்**

**வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2019இன் 05ஆம் இலக்கம்** 2019 யூன் 28

**உந்து ஊர்திகள் தொடர்பில் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான பணிப்புரைகளுக்கான திருத்தங்கள்**

உந்து ஊர்திகள் தொடர்பில் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான 2019ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் பின்வருமாறு திருத்தப்படுகின்றன:

1. பின்வரும் பணிப்புரையானது உந்து ஊர்திகள் தொடர்பில் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான 2019ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பணிப்புரை 1(i)(ஆ) இனை உடனடுத்து உள்ளீடு செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் இது பணிப்புரை 1(i)(இ) எனப் பயனுறுதலும் வேண்டும்.

   1(i)(இ) "இலங்கை தொழில்முயற்சிகள்" நிகழ்ச்சித்திட்டத்தின் 'மினி ரக்சி' சலுகைக் கடன் திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பதிவுசெய்யப்படாத மின்வலு அல்லா உந்து ஊர்திகள் (வகுப்பு பீ) தொடர்பில் 80 சதவீதம்

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி

**நாணயச் சபையின் தலைவரும்**

**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**விளக்கக் குறிப்பு 2019இன் 03ஆம் இலக்கம்** 2019 யூலை 18

**பாசல் III இன் கீழ் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான மூலதனத் தேவைப்பாடுகள் மீதான 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைக்கான விளக்கங்கள்**

இலங்கையிலுள்ள வங்கித்தொழில் துறை, இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் குறித்துரைக்கப்பட்டவாறு 2018.01.01 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ தொடங்குகின்ற நிதியியல் அறிக்கையிடல் காலப்பகுதிக்காக இலங்கை கணக்கீட்டு நியமம் - இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9: நிதியியல் சாதனங்கள் இனைப் பின்பற்றியது. தற்பொழுது மூலதனப் போதுமை விகிதத்தினைக் கணிக்கும் பொழுது மேற்குறிப்பிட்ட பணிப்புரையின் கீழ் மூலதன அளவுகள் இலங்கை கணக்கீட்டு நியமங்களினை அடிப்படையாகக் கொண்ட எண் தொகைகளின் அடிப்படையில் கணிக்கப்பட்டதுடன் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் இலங்கை மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் ஒழுங்குமுறைப்படுத்தல் அறிக்கையினூடாகத் தயாரிக்கப்பட்ட ஐந்தொகையினை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்பட்டது.

மூலதனப் போதுமை விகிதத்தினைக் கணிக்கும் பொழுது மூலதனம் மற்றும் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களையும் அளவிடுவதற்கு நிலையான அணுகுமுறையொன்றினை நடைமுறைப்படுத்தும் பொருட்டு பின்வரும் வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

**1. வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட கூற்றுக் குறியீடு 20.2.3.1.1.3 இன் கீழ், அடுக்கு 2 மூலதனத்தில் உள்ளடக்கப்படுவதற்கான பழுதுறும் தகைமைகள் - பொதுவான ஏற்பாடுகள்**

இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமமத்தின் கீழ் நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறையின் கீழ் கொடுகடன் இடர்நேர்வு மீதான இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களில் உயர்ந்தபட்ச வரையறையான 1.25 சதவீதத்திற்குட்பட்டு கட்டம் 1 இலுள்ள சொத்துக்களுக்கான பழுதுறும் தன்மையில் 100 சதவீதமும் கட்டம் 2 இலுள்ள சொத்துக்களுக்கான பழுதுறும் தன்மையில் 50 சதவீதமும் அடுக்கு 2 மூலதனத்தில் உள்ளடக்கப்படுவதற்கு தகைமையுடையதாயிருத்தல் வேண்டும். இதற்கமைய, உரிமம் பெற்ற வங்கிகள் தகைமை பெறும் பழுதுறுவன பற்றி வெப்பினை - அடிப்படையாகக் கொண்ட கூற்று குறியீடு 20.2.3.1.1.3இன் கீழ் அறிக்கையிடுதல் வேண்டும்.

**2. செயற்படாச் சொத்துக்களுக்காக இடர்நேர்வு நிறையேற்றல்களைப் பிரயோகித்தல்**

**2.1 வதிவிட ஈட்டுக் கடன்களுக்கு தகைமை பெறுவது தவிர செயற்படாச் சொத்துக்களுக்கான பழுதுறும் தன்மை**

இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமத்தின், கீழ் தேறிய வெளிப்படுத்துகையினையும் நிறையேற்றப்பட்ட இடர்நேர்வுகளையும் பெற்றுக் கொள்வதற்கு கட்டம் 3 இலுள்ள சொத்துக்களுக்கான பழுதுறும் தன்மை தொடர்பான கொடுகடன் வெளிப்படுத்துகையிலிருந்து பின்வருமாறு கழிக்கப்படுதல் வேண்டும்.

(i) வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட கூற்றுக் குறியீடு 20.3.1.11.1.0 - உரிமம் பெற்ற வங்கிகள் வதிவிட ஈட்டுக் கடன்களுக்கு தகைமை பெற்றவை தவிர்ந்த பிணையிடப்படாத செயற்படாச் சொத்துக்களை அறிக்கையிடுதல் வேண்டும். இலங்கை நிதியியல் அறிக்கையிடுதல் நியமத்தின் கீழ் கட்டம் 3 பழுதுறும் தன்மை தொடர்பான நிதியியல் சொத்துக்களின் ஏட்டுப் பெறுமதியில் அல்லது சொத்துக்களின் தொகுதியில் 20 சதவீதமாக இருக்கும்.

(ii) வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட கூற்றுக்குறியீடு 20.3.1.11.2.0 - உரிமம் பெற்ற வங்கிகள் வதிவிட ஈட்டுக் கடன்களுக்கு தகைமை பெற்றவை தவிர, பிணையிடப்படாத செயற்படாச் சொத்துக்களை அறிக்கையிடுதல் வேண்டும். இலங்கை நிதியியல் அறிக்கையிடுதல் நியமத்தின் கீழ் கட்டம் 3இன் பழுதுறும் தன்மை தொடர்பான நிதியியல் சொத்துக்களின் ஏட்டுப் பெறுமதியில் அல்லது சொத்துக்களின் பெறுமதியில் 20 சதவீதத்திற்குக் குறைவானதாக இருக்கும்.

**2.2 வதிவிடச் சொத்தினால் பிணையிடப்பட்ட செயற்படாச் சொத்துக்களுக்கான பழுதுறும் தன்மை**

இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமத்தின் கீழ் கட்டம் 3 இலுள்ள சொத்துக்களுக்கான பழுதுறும் தன்மை தேறிய வெளிப்படுத்துகையினையும் நிறைவேற்றப்பட்ட இடர்நேர்வினையும் பெற்றுக்கொள்வதற்காகப் பின்வருமாறு தொடர்பான கொடுகடன் வெளிப்படுத்துகையிலிருந்து கழிக்கப்படுதல் வேண்டும்.

(i) வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட கூற்றுக் குறியீடு 20.3.1.12.1.0 - உரிமம் பெற்ற வங்கிகள் வதிவிடச் சொத்துக்களினால் பிணையிடப்பட்ட செயற்படாச் சொத்துக்களை அறிக்கையிடல் வேண்டுமென்பதுடன் இலங்கை நிதியியல் அறிக்கையிடுதல் நியமத்தின் கீழ் கட்டம் 3இன் பழுதுறும்தன்மை தொடர்பான நிதியியல் சொத்துக்களின் அல்லது குழுமச் சொத்துக்களின் ஏட்டுப் பெறுமதியில் 20 சதவீதத்திற்கு சமமாக அல்லது கூடுதலாக இருத்தல் வேண்டும்.

(ii) வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட கூற்றுக் குறியீடு 20.3.1.12.2.0 - உரிமம் பெற்ற வங்கிகள் வதிவிடச் சொத்துக்களினால் பிணையிடப்பட்ட செயலாற்றமில்லாச் சொத்துக்களை அறிக்கையிடல் வேண்டுமென்பதுடன், இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமத்தின் கீழ் கட்டம் 3இன் பழுதுறும்தன்மை தொடர்பான நிதியியல் சொத்துக்களின் அல்லது குழுமச் சொத்துக்களின் ஏட்டுப் பெறுமதியில் 20 சதவீதத்திற்குக் குறைவானதாக இருத்தல் வேண்டும்.

**3. மத்திய அரசாங்கத்தின் மீதான வெளிநாட்டுக் கோரல்கள்**

(i) வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட குறியீடு 20.3.1.1.1.2 - உரிமம் பெற்ற வங்கிகள், இலங்கை அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட பிணையங்கள் மீதான கோரல்களிலிருந்து தொடர்பான இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமத்தின் அடிப்படையில் பழுதுறும்தன்மை கட்டணம், ஏதுமிருப்பின், பாசல் III இன் கீழ் மூலதன விதிப்பினை கணிப்பிடும் போது இடர்நேர்வு நிறையினைக் கழித்துக் கொள்ளுதல் வேண்டும்.

ஏ. ஏ. எம். தாசிம்
**பணிப்பாளர்/ வங்கி மேற்பார்வைத் திணைக்களம்**

**விளக்கக் குறிப்பு 2019இன் 04ஆம் இலக்கம்** 2019 யூலை 18

**பாசல் III இன் கீழ் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான முடுக்கி விகிதம் மீதான 2018ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளுக்கான விளக்கக் குறிப்பு**

இலங்கை கணக்கீட்டு நியமம் - இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9: நிதியியல் சாதனங்களினைப் பின்பற்றுவதன் தாக்கத்தினைப் பரிசீலனையில் கொண்டு பாசல் III இன் கீழ் மூலதனத் தேவைப்பாடுகளின் மீது விடுக்கப்பட்ட 2016இன் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளின் நியதிகளில் மூலதன மற்றும் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களைக் கணிப்பதில் நிலையான தன்மையினை உறுதிப்படுத்தும் பொருட்டு வங்கி மேற்பார்வைத் திணைக்களம் 2019ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க விளக்கக் குறிப்பினை விடுத்தது.

இதன்படி, நிலையான தன்மையினை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் உரிமம் பெற்ற வங்கிகள் பாசல் III இன் கீழ் முடுக்கி விகிதக் கணிப்பில் வெளிப்படுத்துகை அளவுமுறையினைக் கணிப்பதற்காக உரிமம் பெற்ற வங்கிகள் இதனகத்துப் பின்னர் இலங்கை கணக்கீட்டு நியம அடிப்படையிலான நிதியியல் கூற்று நிலைமைகளைப் பயன்படுத்திய வேளையில் ஐந்தொகைக்கு வெளியேயான வெளிப்படுத்துகை அதே மாதிரியிலேயே தொடர்ந்தும் காணப்பட்டது.

ஏ. ஏ. எம். தாசிம்
**பணிப்பாளர்/ வங்கி மேற்பார்வைத் திணைக்களம்**

**விளக்கக் குறிப்பு 2019இன் 05 இலக்கம்** 2019 ஒகத்து 27

(2019ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க சுற்றறிக்கைக்கான 3ஆவது விளக்கக் குறிப்பு)

**சுற்றுலாக் கைத்தொழிலுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் தொடர்பில் 2019ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க சுற்றறிக்கைக்கான விளக்கங்கள்**

சுற்றுலாக் கைத்தொழிலுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் தொடர்பில் 2019 மே 08ஆம் திகதியிடப்பட்ட 2019ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க சுற்றறிக்கை தொடர்பில் பின்வரும் விளக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.

1. **பதிவுசெய்வதற்கான தேவைப்பாடுகள்**

சுற்றுலாத் துறைக்கு வழங்கப்பட்ட சலுகைகளை சங்கீதக் குழுக்களின் பின்வரும் ஆட்களும் நிறுவனங்களும் பயன்படுத்தும் விதத்தில் அத்தகைய ஆட்களும் குழுக்களும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவுசெய்திருக்க வேண்டும் என்ற தேவைப்பாட்டிலிருந்தும் விலக்களிக்கப்படுகின்றன என்பது பற்றி வர்த்தக வங்கிகளுக்கு இத்தால் அறிவிக்கப்படுகிறது:

**வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை 2019இன் 06ஆம் இலக்கம்** 2019 ஒகத்து 29

**இலங்கையில் உரிமம் பெற்ற வங்கிகளின் திறைசேரித் தொழிற்பாடுகளுக்கான சந்தை நடத்தைகளும் நடவடிக்கை முறைகளும்**

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 46(1) மற்றும் 76(ஜே)(1) ஆகிய பிரிவுகளினால் ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்துகின்ற விதத்தில் நாணயச் சபை, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினதும் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினதும் இதனகத்துப் பின்னர் உரிமம் பெற்ற வங்கி எனக் குறிப்பிடப்படும் வங்கிகளினது திறைசேரித் தொழிற்பாடுகளுக்கான சந்தை நடத்தை மற்றும் நடவடிக்கைகள் மீது பின்வரும் பணிப்புரைகளை இத்தால் விடுக்கிறது. இப்பணிப்புரைகளின் நோக்கம் திறைசேரித் தொழிற்பாடுகளுக்கான சந்தை நடத்தைகளையும் நடவடிக்கை முறைகளையும் மேலும் மேம்படுத்துவதும் உரிமம் பெற்ற வங்கிகளின் ஆற்றல் வாய்ந்த தன்மையினை அதிகரிப்பதற்காக அவற்றின் சந்தை இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைகளை வலுப்படுத்துவதும் அதன் மூலம் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை வலுப்படுத்துவதுமேயாகும்.

1. செயற்பரப்பும் பிரயோகத்தன்மையும்

**1.1** இப்பணிப்புரைகள் பின்வருவனவற்றிற்கு பிரயோகிக்கப்படுதல் வேண்டும்:

(i) வெளிநாட்டுச் செலாவணி, படுகடன் பிணையங்கள், மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்கள் உட்பட பணச்சந்தைச் சாதனங்கள், நிலையான வருமானப் பிணையங்கள், பங்குரிமை மூலதனச் சாதனங்கள், பெறுதிச் சாதனங்கள் மற்றும் நிதியியல் சந்தை சாதனங்கள் என்பனவற்றை உள்ளடக்கிய ஆனால் அவற்றிற்கு மட்டும் மட்டுப்படுத்தப்படாத ரூபா மற்றும் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களின் சந்தை வணிகர் தொழிற்பாடுகளில் ஈடுபட்டுள்ள அனைத்து உரிமம் பெற்ற வங்கிகள்.

(ii) அதிகாரமளிக்கப்பட்ட பின்வரும் ஆட்கள்:

(அ) மேலே 1.1(i)இன் கீழுள்ள வியாபாரக் கொடுக்கல்வாங்கல் வியாபாரங்களில் ஈடுபட்டுள்ளவர்கள். இது உரிமம் பெற்ற வங்கிகளின் திறைசேரித் தொழிற்பாடுகளின் முன்னரங்க அலுவலகம் நடு அலுவலகம் மற்றும் பின்னரங்க அலுவலகத் தொழிற்பாடுகளில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள்; அத்துடன்

(ஆ) மேலே 1.1(i)இல் குறிப்பிடப்பட்டுள்ள வியாபாரங்கள் தொடர்பான நிறைவேற்று தொழிற்பாடுகளை ஆற்றுபவர்கள். நிறைவேற்றுத் தொழிற்பாடுகளை ஆற்றுகின்ற அலுவலர்கள் காலத்திற்குக் காலம் வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் தீர்மானிக்கப்படுகின்றனர்.

**1.2** இப்பணிப்புரைகளை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு தொடர்பான 2011ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க பணிப்புரையுடன் சேர்த்து வாசித்தல் வேண்டும்.

2. கொள்கைக் கட்டமைப்பு

2.1 உரிமம் பெற்ற வங்கிகள், மேலே 1.1இல் குறிப்பிடப்பட்ட வணிகப்படுத்தல் நடவடிக்கை முறைகள், நிதியியல் சந்தைகள் மற்றும் சாதனங்களின் வணிகம் உட்பட முழு திறைசேரி தொழிற்பாடுகளையும் உள்ளடக்கிய உள்ளகக் கொள்கைகளையும் நடவடிக்கை முறைகளையும் நிறுவுதல் வேண்டும்.

2.2 உரிமம் பெற்ற வங்கிகள், சபை ஒப்புதல் வழங்கிய திறைசேரித் தொழிற்பாடுகளுக்கான நன்னடத்தைக் கோவையினை உருவாக்குதல் வேண்டும்.

2.3 உரிமம் பெற்ற வங்கிகள், சபை ஒப்புதலளித்த முன்மதியுடைய சந்தை இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கைகளையும் அதனுடன் தொடர்பான நடவடிக்கை முறைகளையும் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அவை நடைமுறைப்படுத்தப்படுவதனை மேற்பார்வை செய்தலும் வேண்டும்.

2.4 உரிமம் பெற்ற வங்கிகள் சந்தை இடர்நேர்வுகளை அடையாளம் காண்பதற்கு, அளவிடுவதற்கு, கண்காணிப்பதற்கு மற்றும் கட்டுப்படுத்துவதற்கான பணிப்பாளர் சபையின் ஒப்புதலுடன் கட்டுப்பாடுகளும் வரையறைகளும் நிறுவப்பட்டுள்ளன என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

2.5 உரிமம் பெற்ற வங்கிகள் கொடுக்கல்வாங்கல்கள் பணம் தூயதக்கல் மோசடி அல்லது வேறு ஏதேனும் குற்ற நடவடிக்கைகளுக்கு வசதியளிப்பதற்குப் பயன்படுத்தப்படவில்லை என்பதனை உறுதிப்படுத்துவதற்காக வர்த்தக நடவடிக்கைகளில் வாடிக்கையாளர்களை நெருக்கமாகக் கண்காணித்தல் மற்றும் உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்து கொள்ளுங்கள் கோட்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காகப் பொருத்தமான வழிமுறைகள் நடைமுறையிலுள்ளன என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

2.6 உரிமம் பெற்ற வங்கிகள், திறைசேரி மற்றும் பெறுதிக் கொடுக்கல்வாங்கல்களை இணைத்தரப்பினருடன், குறிப்பாக உயர் இடர்நேர்வினைக் கொண்ட அல்லது உயர்ந்த முடுக்கியைக் கொண்ட இணைத்தரப்பினருடன் மேற்கொள்ளும் போது குறிப்பாக மதிப்பீடு மற்றும் ஒப்புதல்கள் தொடர்பில் கொள்கைகளையும் நடவடிக்கை முறைகளையும் நிறுவிக் கொள்ளுதல் வேண்டும்.

2.7 கொள்கைகளும் நடவடிக்கை முறைகளும் குறைந்தபட்சம் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்:

(i) ஒழுக்கவியல் சார்ந்த சந்தை நடத்தை,

(ii) இரகசியமான தகவல்களைக் கையாளுதல்,

(iii) உரிமம் பெற்ற வங்கிகள் வணிகம் செய்கின்ற ஏதேனும் சாதனங்களையும் உற்பத்திகளையும் வணிகர்கள் அவர்களது சொந்தக் கணக்கில் வர்த்தகப்படுவதற்கு அவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளார்களா என்பது தொடர்பில் தெளிவான வழிகாட்டல்கள்,

(iv) இணைத்தரப்பினரினதும் பொதுவாக சந்தையினதும் மிகச் சிறந்த ஈடுபாடுகளை உறுதிப்படுத்துவதற்காக பகிரங்கமற்ற விலை உணர்வுபூர்வத் தகவல்களைப் பயன்படுத்துவது மீதான தெளிவான வழிகாட்டல்கள்,

(v) அன்பளிப்புக்கள், பொழுதுபோக்கு அம்சங்களின் அடிமட்டப் பெறுமதி அவை வழங்கப்படுகின்ற கால இடைவெளி மற்றும் அத்தகைய பொழுதுபோக்கு அம்சங்கள், அன்பளிப்புக்கள் அல்லது சலுகைகள் போன்றவற்றை வெளிப்படுத்தும் தேவைப்பாடுகள் உட்பட பொழுதுபோக்கு அம்சங்கள், அன்பளிப்புக்கள், சலுகைகளை ஏற்றுக்கொள்வது தொடர்பான நடைமுறைகள்,

(vi) வணிக சம்பாஷணைகளுக்காக செல்லிடத் தொலைபேசிகள், உரையாடும் பிரயோகக் கருவிகள் மற்றும் காணொளி மூலமான மாநாடு என்பனவற்றை சூழ்ச்சிகரமான முறையில் பதிவுசெய்வதற்கும் இரகசியங்களை விட்டுக்கொடுப்பதற்கும் பயன்படுத்த முடியுமாகையால் அவற்றின் பயன்பாட்டினை மட்டுப்படுத்தல். எனினும், பதிவுசெய்தல் வசதி, வணிகத் தளமூடாக அல்லது கண்காணிப்பு தளமூடாக குழுமங்களிடையே உரையாடும் வசதி மற்றும் பதிவுசெய்தல் வசதியுடான காணொளி மூலமான மாநாடு என்பன அனுமதிக்கப்படலாம்.

(vii) பன்னாட்டு சிறந்த நடைமுறைகளுக்கு நிகரான விதத்தில் பொருத்தமான தரவு மற்றும் அழைப்புக்களைப் பதிவுசெய்யும் தேவைப்பாட்டு வசதிகள்.

(viii) அழைப்புப் பதிவுகளை நிறுத்தி வைப்பதற்கான நடைமுறைகள் அழைப்புப் பதிவுகளைக் கேட்கும் நடைமுறை மற்றும் பழைய அழைப்புப் பதிவுகளை அழித்துவிடல். அழித்துவிடும் கொள்கை காத்திரமான தொடர்பூட்டல் அலைவரிசைகளையும் அழித்துவிடுவதற்கான ஒப்புதல் அதிகாரத்தினையம் உள்ளடக்கியிருத்தல் வேண்டும். இதன் வழமையான குறிப்பிட்ட பதிவுகள் அழிக்கப்படுவதனை, தேவையானவிடத்து இடைநிறுத்தலாம். உதாரணமாக குறிப்பிட்ட கொடுக்கல்வாங்கல்களுக்கெதிரான வழக்குகள்.

(ix) பதிவுசெய்யப்பட்ட வணிகப்படுத்தல் சம்பாஷணைகளைப் பதிவுசெய்வதில் இரகசியத்தன்மைகளைப் பேணுதல்.

(x) செலாவணி வீதத்தினை மதிப்பிடுவதற்கான நடைமுறை. பெரும்பாலும் நாள் முடிவிலுள்ள நடு சந்தை வீதங்களைப் பயன்படுத்துதல் வேண்டும். இவ்வீதங்கள் அதிகாரமளிக்கப்பட்ட வணிக ஆட்களினை விட அலுவலர்களினால் பெறப்படல் வேண்டும் அல்லது குறைந்தபட்சம் சுயாதீனமாகவாவது சரிபார்க்கப்படுதல் வேண்டும்.

(xi) புதிய திறைசேரி உற்பத்திகளை, பணிகளை மற்றும் நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தல்.

2.8 கொள்கைகள் பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்படல் வேண்டும் என்பதுடன் கிரமமான அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுதலும் வேண்டும். வெளிநாட்டு வங்கிகளைப் பொறுத்தவரை பணிப்பாளர் சபை என்பது தலைமை அலுவலகம்/ பிராந்திய கண்காணிப்பு அலுவலகம் எனப் பொருள்படும்.

2.9 கொள்கைகள், அனைத்து தொடர்பான திணைக்களங்கள் மற்றும் பிரிவுகளின் அலுவலர் உறுப்பினர்களிடையே சுற்றோட்டப்படுத்தப்படல் வேண்டும்.

3. ஒழுக்கவியல் மற்றும் நடத்தை நியமங்கள்

**3.1 சந்தை நடத்தை**

3.1.1 அதிகாரமளிக்கப்பட்ட ஆட்கள்:

(i) அவர்களது தொடர்பான உரிமம் பெற்ற வங்கிகளினால் உருவாக்கப்பட்ட நன்னடத்தைக் கோவையினால் பிணிக்கப்பட்டவர்களாகவும் அதன் காரணமாக நேர்மையும் உயர்தர தொழில்சார் நிபுணத்துவத்தினைக் கடைப்பிடிப்பவர்களாகவும் இருத்தல்,

(ii) இப்பணிப்புரைகள் மற்றும் பன்னாட்டு சிறந்த நடைமுறைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் அவர்களது தொடர்பான உரிமம் பெற்ற வங்கிகளினால் விடுக்கப்பட்ட நன்னடத்தைக் கோவையில் கையொப்பமிடுவதன் மூலம் அவர்கள் தாமாகவே நேர்மையுடனும் உயர்தரத் தொழில்சார் நிபுணத்துவத்தினைக் கடைப்பிடிப்பவர்களாகவும் இருத்தல்,

(iii) அவர்களது நடத்தையில் உயர்தர தனியாள் சிறப்பினையும் தொழில்சார் நிபுணத்துவ நேர்மையினையும் எடுத்துக்காட்டுதல்,

(iv) வங்கியின் சிறந்த நலன் கருதி தேர்ச்சி, மிகுந்த கவனம், நெருங்கிய கவனிப்பு என்பனவற்றுடன் கூடிய சிறந்த நம்பகத்தன்மையுடன் நடந்து கொள்ளுதல்,

(v) பகிரங்கப்படுத்தப்படாத, சந்தை உணர்வுமிக்க தகவல்களைக் கையாளும் பொழுது மிகுந்த கவனத்துடன் நடந்து கொள்ளுதல்,

(vi) பணிப்பாளர் சபை உறுப்பினர், மூத்த முகாமைத்துவத்தினைச் சேர்ந்தவர் அல்லது பங்குடமையாளர் எவரேனும் ஆட்கள் அவர்களுக்குக் கிடைக்கத்தக்கதாகவிருந்த பகிரங்கமற்ற சந்தை உணர்வுமிக்க தகவல்களின் அடிப்படையில் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதற்காக நியாயமற்ற செல்வாக்கினைப் பயன்படுத்த முயற்சிப்பின் அது பற்றி வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு உடனடியாக அறிவித்தல்

வேண்டும்.

3.1.2 அதிகாரமளிக்கப்பட்ட ஆட்கள்:

(i) விலைகள், விளைவு, வட்டி வீதம், நிரம்பல் அல்லது கேள்வி உட்பட ஆனால் அவற்றிற்கு மட்டும் வரையறுக்கப்படாத விடயங்கள் உள்ளிட்ட சந்தையில் நிலவுகின்ற நிலைமைகள் தொடர்பில் சந்தையின் மற்றொரு பங்கேற்பாளருக்கு அல்லது ஒழுங்குமுறைப்படுத்துநருக்குப் பிழையான அல்லது தவறான எண்ணம் ஏற்படுத்தக்கூடிய விதத்திலான வேண்டுமென்றே சிருஷ்டிக்கப்பட்ட அல்லது ஏமாற்றுகின்ற அல்லது ஏதேனும் அதையொத்த நடவடிக்கைகளில் ஈடுபடுதல் கூடாது,

(ii) அதே உரிமம் பெற்ற வங்கியிலுள்ள அல்லது மற்றைய உரிமம் பெற்ற வங்கிகளிலுள்ள அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களுடன் சேர்ந்து சந்தை விலைகள் மற்றைய சந்தை நிலைமைகளை செயற்கை முறையில் மாற்றம் செய்தல் அல்லது சந்தை விலைகள் மற்றும் நிலைமைகளில் செயற்கை முறையில் மாற்றங்களைச் செய்யும் நோக்குடன் பாரிய கொடுக்கல்வாங்கல்களில் இரகசியமாக ஈடுபடுதல் கூடாது,

(iii) வாடிக்கையாளர், கம்பனி, வங்கி அல்லது வாடிக்கையாளராக வரக்கூடிய சாத்தியங்களைக் கொண்டுள்ளவரின் (இதனகத்துப் பின்னர் இணைத்தரப்பினர் எனக் குறிப்பீடு செய்யப்படுவர்) ஈடுபாடுகளுக்கு முரண்பாடுகளைத் தோற்றுவிக்கக்கூடிய ஏதேனும் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுதல். குறிப்பாக, அதிகாரமளிக்கப்பட்ட ஆட்கள் இணைத்தரப்பினரின் கட்டளைகளைக் கையாளும் பொழுது அக்கட்டளைகள் பொருத்தமான விதத்திலும் இணைத்தரப்பினரின் நலவுரித்துக்களில் போதுமான கவனத்தினைச் செலுத்தும் விதத்திலும் மேற்கொள்ளுதல் வேண்டும்.

(iv) வேண்டுமென்றே வதந்திகளைப் பரப்புதல் அல்லது பிழையான அல்லது தவறாக வழிநடத்தக்கூடிய தகவல்களைப் பரப்புதல் அல்லது விலை கண்டறிதல் பொறிமுறையினைப் பொய்யாகச் சிருஷ்டித்தல் கூடாது. மேலும், நிரூபிக்கப்படாத சந்தைத் தகவல்களைக் கையாளும் பொழுது மிகுந்த கவனத்துடன் மேற்கொள்ளுதல் வேண்டும்.

(v) தகவல்கள் அல்லது நடவடிக்கைகாக நிர்ப்பந்தங்கள், தூண்டுதல்கள், அச்சுறுத்தல்கள் அல்லது வாக்குறுதிகள் என்பனவற்றின் மூலம் மற்றொரு உரிமம் பெற்ற வங்கி அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களின் மீது அழுத்தங்களைப் பிரயோகித்தல் கூடாது.

3.1.3 உரிமம் பெற்ற வங்கிகளும் அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களும் வாடிக்கையாளரின் சொத்துக்களை வங்கிகளின் சொந்த சொத்துக்களிலிருந்து வேறாக வைத்திருத்தல் வேண்டுமென்பதுடன் போதுமானளவிற்குப் பாதுகாக்கப்பட்டு பொருத்தமான விதத்தில் கணக்கிடப்படுதலும் வேண்டும்.

3.1.4 உரிமம் பெற்ற வங்கிகள் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட ஆட்கள் சந்தை அபிவிருத்திகள் தொடர்பில், பணிப்பாளர் சபையின் சம்மதமின்றி ஊடகங்களுக்குத் தகவல்களை வழங்கக்கூடாது என்பதுடன் அறிக்கைகளுடன் தமது அடையாளத்தினை வெளிப்படுத்தலும் வேண்டும்.

3.1.5 உரிமம் பெற்ற வங்கிகள் அத்துடன்/ அல்லது அதிகாரம் பெற்ற ஆட்கள் வர்த்தக நிலைமைகளை மறைக்கின்ற நோக்கங்களுக்காக அல்லது சந்தையின் நேர்மைத்தன்மையினைக் குறைத்துவிடுகின்ற “மையங்கள்” அல்லது “நிலைமை” போன்ற இலாபம் அல்லது இழப்புக்களை மாற்றல் செய்கின்ற கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடக்கூடாது.

3.1.6 இப்பணிப்புரைகளுக்கு அல்லது உள்ளக கொள்கைத் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகாத அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களை, அவர்கள் தொடர்பான செயலாற்ற மதிப்பீட்டுச் செயன்முறையின் போதும் கொடுப்பனவுகள் மற்றும் நன்மைகளை வழங்கும் பொழுதும் உரிமம் பெற்ற வங்கிகள் தண்டித்தல் வேண்டும்.

3.1.7 உரிமம் பெற்ற வங்கிகள் அதிகாரம் பெற்ற ஆட்களுக்கான அனைத்து ஊதியக் கொடுப்பனவுகளும் ஆவணப்படுத்தப்பட்ட கொள்கை மற்றும் சந்தை வீதங்களையும் அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன என்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஊதியக் கொடுப்பனவு மட்டங்கள் மேலதிக இடர்நேர்வுகளை அல்லது துணிச்சலான நடவடிக்கைகளை எடுப்பதற்கான ஊக்குவிப்புக்கள் வழங்குவதனைத் தவிர்க்கும் விதத்தில் வடிவமைக்கப்படுதல் வேண்டும்.

3.1.8 உரிமம் பெற்ற வங்கிகள், அதிகாரம் பெற்ற ஆட்களுக்கு ஏற்கனவே செலுத்தப்பட்ட அவர்களின் செயலாற்றத்துடன் இணைக்கப்பட்ட ஊதியங்களின் கொடுப்பனவினை மீளப்பெற்றுக் கொள்ளும் ஏற்பாடுகளை நிறுவுதல் வேண்டும்.

**3.2 இரகசியத்தன்மையினைப் பேணுதல்**

3.2.1 அதிகாரமளிக்கப்பட்ட ஆட்கள்:

(i) இணைத்தரப்பினருடனான வணிகத் தகவல்கள் உட்பட அனைத்து விடயங்களிலும் இரகசியத்தன்மையினைப் பேணுதல் மற்றும் பேணிக் காப்பதற்கு உதவுதல் வேண்டும்.

(ii) இரகசியத்தன்மையினை சரியான முறையில் பேணுவதன் மூலமாக சந்தையின் நேர்மைத்தன்மையினைப் பேணிக் காப்பதில் சமமான பொறுப்பாண்மையினைப் பகிர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

3.2.2 அதிகாரமளிக்கப்பட்ட ஆட்கள்:

(i) இணைத்தரப்பினரின் பகிரங்கமற்ற சந்தை உணர்வுபூர்வமான தகவல்களை அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களின் நன்மைக்காக அல்லது அவர்களது பிரதிநிதிகளின் அல்லது தெரியாத ஆட்களின் நன்மைக்காக அல்லது அத்தகைய பகிரங்கப்படுத்தப்படாத தகவல்களின் அடிப்படையில் இன்னொரு தரப்பினர் செயற்படுவதனைத் தூண்டுவதற்குப் பயன்படுத்தக்கூடாது.

(ii) வங்கியின் அல்லது இணைத்தரப்பினரின் அலுவல்களை செல்லிடத் தொலைபேசி ஊடாக அல்லது சமூக வலைத்தளம் உள்ளிட்ட பகிரங்க இடங்களில் கலந்துரையாடக்கூடாது.

(iii) இரகசியத் தகவல்களை உள்ளடக்கியுள்ள ஏதேனும் ஆவணங்களை, இலத்திரனியல் சாதனங்களை அல்லது கணனிகளை பொது இடங்களில் விட்டுச் செல்லலாகாது.

(iv) வெளிப்படுத்துவதற்கு முறையற்றதாகக் காணப்படும் தகவல்களைப் பெறுவதற்காகத் தூண்டுதல், அச்சுறுத்தல் அல்லது வாக்குறுதி வழங்குவதன் மூலம் ஒருவரை அழுத்தத்திற்குள்ளாக்குதல் கூடாது. அதிகாரமளிக்கப்பட்ட ஆட்கள் இணைத்தரப்பினரிடமிருந்து அல்லது வங்கியிலுள்ள மற்றையவர்களிடமிருந்து இரகசியத் தகவல்களை வெளியிடுமாறு வரும் ஏதேனும் கோரிக்கையினை இதே விதத்தில் நிராகரித்துவிடல் வேண்டுமென்பதுடன் அத்தகைய சம்பவம் ஏதும் இடம்பெறுமிடத்து அது பற்றி அவர்களின் முகாமைத்துவத்திற்கு அறிவித்தலும் வேண்டும்.

3.2.3 உரிமம் பெற்ற வங்கியும் அத்துடன்/ அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களும் வங்கித்தொழில் சட்டத்தின் கீழான ஏற்பாடுகளுக்கிணங்கிய விடயங்கள் நீங்கலாக கொடுக்கல்வாங்கலுடன் தொடர்பான தகவல்களை வெளிப்படுத்தக்கூடாது.

3.2.4 உரிமம் பெற்ற வங்கிகள், பகிரங்கப்படுத்தப்படாத சந்தை உணர்வுபூர்வத் தகவல்களை அடையாளம் காணவும் கையாளவும் அவர்களின் அலுவலர்களுக்கு பயிற்சியளித்தல் வேண்டும்.

**3.3 தனிப்பட்ட (சொந்தக்) கணக்குகளைக் கையாளுதல்**

3.3.1 தனிப்பட்ட கணக்குகளுக்கான வணிகம் அனுமதிக்கப்படுகின்றவிடத்து உரிமம் பெற்ற வங்கிகள் உண்மையான மற்றும் சாத்தியமான அக்கறைகளின் முரண்பாடு, தகவலறிந்த உள்ளக வியாபாரம், ஏதேனும் வடிவத்தில் முன்கூட்டியே தகவல்களைப் பெற்றுக் கொள்ளுதல் என்பனவற்றைத் தடுப்பதற்குப் போதுமான பாதுகாப்பினையும் கட்டுப்பாடுகளையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

3.3.2 அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களின் தனிப்பட்ட நிதியியல் கரிசனைகளினால் குழப்பத்திற்குள்ளாகாமல் எல்லா நேரங்களிலும் வங்கியினதும் அதன் இணைத்தரப்பினரினதும் நலன்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன என்பதனை உரிமம் பெற்ற வங்கிகள் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

3.3.3 உள்ளக வழிகாட்டல்கள், வணிகர்கள் இணங்குவிப்புத் திணைக்களத்தினூடாகப் பணிப்பாளர் சபைக்கு அத்தகைய வணிகப்படுத்தல்களைக் காலாந்தர அடிப்படையில் வெளிப்படுத்த வேண்டுமெனத் தேவைப்படுத்துகின்றன.

**3.4 பொழுதுபோக்குகள், அன்பளிப்புக்கள் மற்றும் சலுகைகள்**

3.4.1 அதிகாரமளிக்கப்பட்ட ஆட்கள்:

(i) இணைத்தரப்பினரால் அல்லது வேறு எவரேனும் தரப்பினரால் வழமைக்கு மாறான முறையில் ஏதேனும் சலுகைகள் அவர்களுக்கு வழங்கப்படுமாயின் அது பற்றி தொடர்பான அதிகாரிக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

3.4.2 அதிகாரமளிக்கப்பட்ட ஆட்கள் பின்வருவனவற்றை:

(i) வியாபாரக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் இணைத்தரப்பினரிடமிருந்து அன்பளிப்புக்களையோ அல்லது ஏதேனும் வகையிலான சலுகைகளையோ பணமாகவோ அல்லது வேறேதேனும் நியதிகளிலோ வலிந்து பெற்றுக்கொள்ளல் கூடாது,

(ii) தமது குடும்பம், உறவினர் அல்லது எவரேனும் தெரிந்த தரப்பினருக்காக இணைத்தரப்பினரிடமிருந்து ஏதேனும் சலுகைகளை, அச்சலுகைகள் நியாயமானதும் நேர்மையானதுமான வழக்கமான நியமங்களுக்கு முரணானதாக இருப்பின் அவற்றைப் பெற்றுக்கொள்ளுதல் கூடாது,

(iii) உள்ளகக் கொள்கையில் குறித்துரைக்கப்பட்டவாறு தொடர்பான அதிகாரியிடமிருந்தான உரிய அனுமதி இல்லாமல் வணிக இணைத்தரப்பினரால் அவர்களுக்கு வழங்கப்படுகின்ற கணிசமான பெறுமதியினைக் கொண்ட ஏதேனும் அன்பளிப்புக்களை ஏற்றுக்கொள்ளக்கூடாது. எனினும், அன்பளிப்புக்கள் பொதுவான அங்கீகாரமொன்றாக அல்லது பொதுவான அன்பளிப்பாக இருக்குமாயின் அத்தகைய அங்கீகாரத்தினை அல்லது அன்பளிப்புக்களை ஏற்றுக்கொள்ளலாம்.

(iv) வணிகரிடையே பங்கிடப்படும் ஏதேனும் வணிகம் தொடர்பில் வங்கியின் சார்பில் வணிகரொருவருக்கு வழங்கப்பட்ட ஏதேனும் தரகு, ஆனால் இது வங்கியின் வருமானமாக அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

**3.5 பந்தயங்கள் மற்றும் சூதாட்டம்**

3.5.1 அதிகாரமளிக்கப்பட்ட ஆட்கள், குறிப்பாக சந்தை நகர்வுகள் பற்றி மற்றைய சந்தைப் பங்கேற்பாளர்களுடன் பந்தயங்களையோ அல்லது சூதாட்டங்களையோ மேற்கொள்ளவோ அல்லது ஒழுங்கு செய்யவோ கூடாது

**4. பொதுவான வணிக தத்துவங்கள்**

**4.1 வணிக சம்பாஷணைகளைப் பதிவுசெய்தல்**

4.1.1 உரிமம் பெற்ற வங்கிகள், புலன் விசாரணைகளுக்கு வசதியளிப்பதற்காகவும் பிணக்குகளைத் தீர்ப்பதற்காகவும் பன்னாட்டுச் சிறந்த நடைமுறைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் வணிக அறைகளில் தரவு மற்றும் அழைப்புக்களைப் பதிவுசெய்வதற்காக பொருத்தமான முறைமையினை நடைமுறைப்படுத்தியிருத்தல் வேண்டும்.

4.1.2 உரிமம் பெற்ற வங்கியின் அழைப்புக்களைப் பதிவுசெய்யும் முறைமையானது தொடர்ச்சியான இலக்க ஒழுங்கில், அல்லது, தொலைபேசி இலக்கம், திகதி, சம்பாஷணை இடம்பெற்ற நேரம் என்பனவற்றின் ஒழுங்கில் சேமித்து வைத்திருக்கக்கூடிய இயலளவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4.1.3 உரிமம் பெற்ற வங்கிகள், அழைப்புக்கள் பதிவு செய்யப்பட்டு திறைசேரி தொழிற்பாடுகளிலிருந்து சுயாதீனமாக களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளமையினையும் பயன்பாட்டிலுள்ள அல்லது களஞ்சியத்திலுள்ள பதிவேடுகளை அணுகுவது கடுமையான முறையில் கட்டுப்படுத்தப்பட்டிருப்பதனையும் அதன் காரணமாக அவற்றில் மோசடியான முறையில் மாற்றங்களைச் செய்வதோ முடியாது என்பதனையும் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

4.1.4 பதிவுசெய்யும் முறைமை ஒழுங்காக இருக்கின்றது என்பதனை உறுதிப்படுத்துவதற்காக, காலாந்தர அடிப்படையில் சுயாதீனமான தரப்பொன்றினால் அழைப்பு பதிவுசெய்தல் முறைமை பரீட்சிக்கப்படுவதனை உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

4.1.5 உரிமம் பெற்ற வங்கிகள் வணிக சம்பாஷணைகளின் அழைப்புப் பதிவுகளை குறைந்தபட்சம் ஆறு ஆண்டுகளுக்கு அல்லது அவசியமானது எனக் கருதப்படுகின்ற நீண்ட காலப்பகுதிக்குப் பேணி வருதல் வேண்டும்.

**4.2 பதிவேடுகளைப் பேணுதல்**

4.2.1 உரிமம் பெற்ற வங்கிகள் இரத்துச் செய்யப்பட்ட வணிகங்கள் உட்பட ஒவ்வொரு வணிக சம்பாஷணைகளுக்குமான வணிக சீட்டு, இலத்திரனியல் அல்லது வேறு ஏதேனும் விதத்தில் திகதி மற்றும் நேர முத்திரையுடன் உறுதிப்படுத்துவதற்கான பொறிமுறையொன்றினை நிறுவுதல் வேண்டும்.

4.2.2 உரிமம் பெற்ற வங்கிகள், இணைத்தரப்பினருடனான கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பிலான ஆவணச்சான்றுகளை இலத்திரனியல் ரீதியாக அல்லது வேறு ஏதேனும் விதத்தில் குறைந்தபட்சம் ஆறு ஆண்டுகளுக்கு அல்லது தேவையானது எனக் கருதும் நீண்ட காலப்பகுதிக்குப் பேணி வருதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஆவணங்களைத் தேவை எனக் கருதும் வேளையில் ஒழுங்குமுறைப்படுத்துநருக்கு அனுப்பி வைத்தலும் வேண்டும்.

**4.3 வழமையான வேலை நேரத்திற்குப் பின்னரும் பணிமனைக்கு வெளியேயுமான வணிகங்கள்**

4.3.1 உரிமம் பெற்ற வங்கிகள், வழமையான வேலை நேரத்திற்கும் அப்பாற்பட்ட அத்துடன்/ அல்லது பணிமனைக்கு வெளியேயான வணிகங்களை ஊக்கம் குன்றச் செய்ய வேண்டும் என்பதுடன் விதிவிலக்கானதொரு முறையில் வழமையான வேலை நேரத்திற்கும் அத்துடன்/ அல்லது பணிமனைக்கு வெளியேயான வணிகங்களை, உள்ளகக் கொள்கையில் குறித்துரைக்கப்பட்டவாறு, தொடர்பான அதிகாரியின் முன்னொப்புதலுடன் மாத்திரம் அனுமதிக்கலாம். இந்நோக்கத்திற்காக வங்கி வேலை நாட்களில் ஐ.அ.டொலர்/ இ. ரூப வர்த்தகத்திற்கான வழமையான வேலை நேரம் மு.ப. 8.00 மணியிலிருந்து பி.ப. 5.00 மணி வரையாகவும் உள்நாட்டு பணச் சந்தை வர்த்தகங்களுக்கான வழமையான வேலை நேரம் மு.ப. 7.30 மணியிலிருந்து பி.ப. 5.00 மணி வரையாகவும் இருக்கும்.

4.3.2 உரிமம் பெற்ற வங்கிகள் தொடர்பில் கொடுக்கல்வாங்கலின் வகை, வணிகத்தினை நடத்துவதற்காக அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களின் பெயர்கள், கொடுக்கல்வாங்கலின் வரையறைகள் மற்றும் ஏனைய விடயங்கள் உட்பட அத்தகைய வணிகங்களின் நேர நீடிப்புத் தொடர்பாகத் தெளிவான வழிகாட்டல்களை நிறுவுதல் வேண்டும்.

4.3.3 வழமையான வேலை நேரத்திற்கும் பணிமனைக்கு வெளியேயுமான அனைத்து வணிக கொடுக்கல்வாங்கல்களையும் சரியான முறையில் பதிவுசெய்து உறுதிப்படுத்துவதனை இயலச்செய்யும் கட்டுப்பாட்டு முறைமையினை சாத்தியமானளவிற்கு விரைவாக உரிமம் பெற்ற வங்கிகள் உருவாக்கிக்க கொள்ளுதல் வேண்டும்.

**4.4 விலை அல்லது வட்டி வீத விலைக் கோரல்கள்**

4.4.1 அதிகாரமளிக்கப்பட்ட ஆட்கள்:

(i) அவர்கள் கோருகின்ற விலைகள் அல்லது வீதங்கள் ஒன்றில் உறுதியானவையா அல்லது வெறுமனே குறியீடா என்பதனை தெளிவாக்கிக் கொள்ளுதல் வேண்டும்.

4.4.2 அதிகாரமளிக்கப்பட்ட ஆட்கள்:

(i) ஏற்றுக்கொள்கின்ற எந்தவொரு நோக்கமுமில்லாமல் சந்தைப் பங்கேற்பாளர்களைத் தவறாக வழிநடத்துவதற்காக மாத்திரம் வடிவமைக்கப்பட்ட, முக்கியமற்ற அற்பமான விலைக்கோரல்களை மேற்கொள்ளக்கூடாது.

(ii) வர்த்தக நடைமுறைகளுடன் தொடர்பான ஒழுக்கவியல் நியமங்களை விட்டுக்கொடுப்பதனால் கிடைக்கும் நன்மைகளை (அல்லது இழப்புக்களைத் தவிர்க்க) பெறுவதற்கான நடைமுறைகளில் ஈடுபடவோ கூடாது.

4.4.3 உரிமம் பெற்ற வங்கிகள் சந்தைக்கு வெளியேயான வட்டி வீத வணிகங்களை அனுமதிக்கக்கூடாது என்பதுடன் மற்றைய உரிமம் பெற்ற வங்கிகளின் அதிகாரமளிக்கப்பட்ட ஆட்கள் திரைசேரிச் சந்தையின் வட்டியினை அல்லது கீர்த்தியினை ஆபத்திற்குள்ளாக்குகின்ற விதத்தில் விலை/ வட்டி வீதக் குறியீடுகளில் ஈடுபடுவதனைக் கண்டறியுமிடத்து அதனை வங்கி மேற்பார்வைத் திணைக்களத்திற்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

**4.5 தவறான வர்த்தகங்கள்**

4.5.1 உரிமம் பெற்ற வங்கிகள் நிறைவேற்றிய வர்த்தக இணக்கப்பாடுகளை மாற்றவோ அல்லது இரத்துச் செய்யவோ கூடாது என்பதுடன் சந்தையின் நேர்மைத் தன்மையினையும் பேணிக்காத்தல் வேண்டும். இதற்கமைய, வழமையான சூழ்நிலைகளின் கீழ், வர்த்தகப்படுத்தப்பட்ட விலைகள்/ வட்டி வீதங்கள் சந்தையில் நிலவுகின்ற விலைகள்/ வட்டி வீதங்களைப் பிரதிபலிக்காமல் இருக்குமிடத்து அல்லது உண்மையான தவறுகளாக இருக்குமிடத்து மாத்திரம் இரத்துச் செய்யப்பட முடியும். அவ்வாறான இரத்துக்கள் உயர் அதிகாரிகளினால் மீளாய்வு செய்யப்பட்டு உடனடியாக ஒப்புதலளிக்கப்படல் வேண்டும். மேலும், வர்த்தகத்தினை இரத்துச் செய்வது தொடர்பில், அத்தகைய இரத்தினை வர்த்தகத்திலுள்ள அனைத்துத் தரப்பினரும் உடன்பட்டால் மாத்திரமே இரத்துச் செய்யமுடியும்.

4.5.2 உரிமம் பெற்ற வங்கிகள் அத்தகைய இரத்துச் செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கல்களை சரிபார்ப்பதற்காக முழு விபரங்களுடன் பதிவேடுகளைப் பேணிவருதல் வேண்டும்.

**4.6 வெளிநாட்டுச் செலாவணி வர்த்தக நடவடிக்கைகள்**

4.6.1 உரிமம் பெற்ற வங்கிகள் முடிவுப் பயன்படுத்துநர் வெளிநாட்டுச் செலாவணி வர்த்தகப்படுத்தல் நடவடிக்கைகளை அடிப்படைக் கொடுக்கல்வாங்கல்களின் அடிப்படையில் மாத்திரமே மேற்கொள்ளுதல் வேண்டும். இந்நோக்கத்திற்காக, அடிப்படைக் கொடுக்கல்வாங்கல்கள் என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் நியதிகளில் நடைமுறைக் கணக்கு கொடுக்கல்வாங்கல்கள் அல்லது அனுமதிக்கப்பட்ட மூலதனக் கணக்கு கொடுக்கல்வாங்கல்களாகப் பின்வரும் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது எனப் பொருள்படும்.

(i) ஏற்றுமதியாளர்கள், வெளிநாட்டு நாணய கணக்கு வைத்திருப்போர் மற்றும் உள்முக வெளிநாட்டு நாணய பணவனுப்பல்களை அனுப்புகின்ற ஆட்கள் போன்ற வர்த்தக வங்கியல்லாதனவற்றிடமிருந்தான வெளிநாட்டு நாணயக் கொள்வனவுகள்,

(ii) இறக்குமதியாளர்கள் மற்றும் ஒப்புதலளிக்கப்பட்ட நோக்கங்களுக்காக வெளிநாட்டுச் செலாவணியில் வெளிமுகப் பணவனுப்பல்களை மேற்கொள்ளச் சட்டத்தின் மூலம் அனுமதிக்கப்பட்ட ஆட்கள் போன்ற வர்த்தக வங்கியல்லா வாடிக்கையாளர்களுக்கான வெளிநாட்டு நாணய விற்பனைகள்.

4.6.2 உரிமம் பெற்ற வங்கிகள் தொடர்பான தேறிய ஆரம்ப நிலைமை வரையறைகளுக்குட்பட்டு வெளிநாட்டு நாணயங்களைக் கொள்வனவு செய்யலாம் அத்துடன்/ அல்லது விற்பனை செய்யலாம்.

4.6.3 வர்த்தக வங்கிகள் ஒவ்வொரு நாள் இறுதியிலும் தேறிய ஆரம்ப நிலைமையினைப் பின்பற்றுதல் வேண்டும், என்பதுடன் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் பணிப்பாளரினால் காலத்திற்குக் காலம் குறித்துரைக்கப்படுகின்ற ஒரு நாளுக்குள்ளேயான தேறிய திறந்த நிலைமைக்குள்ளும் இருத்தல் வேண்டும்.

4.6.4 உரிமம் பெற்ற வங்கிகள் அவற்றின் வெளிநாட்டு நாணய நிலைமைகளை கிரமமான அடிப்படையில் சுயாதீனமாக மதிப்பிடக்கூடியதொரு முறைமையினை நடைமுறையில் கொண்டிருத்தல் வேண்டும். இது தொடர்பில் பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும்:

(i) ஏற்றுமதியாளர்கள், வெளிநாட்டு நாணய கணக்கு வைத்திருப்போர் மற்றும் உள்முக வெளிநாட்டு நாணய பணவனுப்பல்களை அனுப்புகின்ற ஆட்கள் போன்ற வர்த்தக வங்கியல்லாதனவற்றிடமிருந்தான வெளிநாட்டு நாணய கொள்வனவுகள்

(ii) இறக்குமதியாளர்கள் மற்றும் ஒப்புதலளிக்கப்பட்ட நோக்கங்களுக்காக வெளிநாட்டுச் செலாவணியில் வெளிமுகப் பணவனுப்பல்களை மேற்கொள்ள சட்டத்தின் மூலம் அனுமதிக்கப்பட்ட ஆட்கள் போன்ற வர்த்தக வங்கியல்லா வாடிக்கையாளர்களுக்கான வெளிநாட்டு நாணய விற்பனைகள்

4.6.2 உரிமம் பெற்ற வங்கிகள் தொடர்பான தேறிய ஆரம்ப நிலைமை வரையறைகளுக்குட்பட்டு வெளிநாட்டு நாணயங்களைக் கொள்வனவு செய்யலாம் அத்துடன்/ அல்லது விற்பனை செய்யலாம்.

4.6.3 வர்த்தக வங்கிகள் ஒவ்வொரு நாள் இறுதியிலும் தேறிய ஆரம்ப நிலுவையினைப் பின்பற்றுதல் வேண்டும், என்பதுடன் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் பணிப்பாளரினால் காலத்திற்குக் காலம் குறித்துரைக்கப்படுகின்ற ஒரு நாளுக்குள்ளேயான தேறிய திறந்த நிலைமைக்குள்ளும் இருத்தல் வேண்டும்.

4.6.4 உரிமம் பெற்ற வங்கிகள் அவற்றின் வெளிநாட்டு நாணய நிலைமைகளைக் கிரமமான அடிப்படையில் சுயாதீனமாக மதிப்பிடக்கூடிய முறைமையினை நடைமுறையில் கொண்டிருத்தல் வேண்டும். இது தொடர்பில் பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

(i) வாடிக்கையாளர்களிடமிருந்தும் ஏனைய வர்த்தக நடவடிக்கைகளிலிருந்தும் தோன்றுகின்ற தேறிய திறந்த நிலைமை தற்போது இடம்பெற்று வரும் அடிப்படையில் கணிக்கப்படுதல் வேண்டும். தேறிய திறந்த நிலைமையினைக் கணிக்கும் போது பின்வருவனவற்றைக் கவனித்தல் வேண்டும்.

(அ) அனைத்துத் தீர்ப்பனவு செய்யப்படாத உடன் கொடுக்கல் வாங்கல்களும் உள்ளடக்கப்படுதல் வேண்டும்,

(ஆ) அனைத்து வெளிநின்ற முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல்களும் உள்ளடக்கப்படுதல் வேண்டும்,

(இ) நாணயத் தேர்வுகள், முற்பேரங்கள் போன்ற ஏனைய வெளிநாட்டுச் செலாவணி ஒப்பந்தங்களிலுள்ள தேறிய வெளிநாட்டுச் செலாவணி நிலைமையும் உள்ளடக்கப்படுதல் வேண்டும்,

(ஈ) ஒவ்வொரு நாணயத்திற்கெதிராக எடுத்துக்காட்டப்படும் வெளிப்படுத்துகை மொத்த வெளிப்படுத்துகைக்கு வருவதற்கான அறிகுறிகளை கவனத்திற் கொள்ளாமையினைக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

(ii) அவர்களது வெளிநாட்டுச் செலாவணி நிலைமை மீதான இலாபம் மட்டும் நட்டம் தொடர்பான மீள்மதிப்பீட்டினை கிரமமான அடிப்படையில் அல்லது குறைந்தபட்சம் மாதாந்த அடிப்படையில் கணக்கிடல்,

(iii) தீர்ப்பனவிற்கு வெளிநிற்கும் காலப்பகுதிக்காக நிலவுகின்ற நாளின் இறுதியின் நடுச் சந்தை வீதத்தில் அல்லது ஏதேனும் ஏனைய உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையில் முன்னோக்கிய கொடுக்கல்வாங்கல்களை மீள்மிதிப்பிடல்,

(iv) "சந்தைப்படியான விலைகளின்" அடிப்படையில் நடு அலுவலகம்/ பின்னரங்க அலுவலகமூடாக மற்றைய பொருத்தமான வெளிநாட்டுச் செலாவணி தொடர்பான ஒப்பந்தங்களை மீள்மதிப்பிடல்

(v) அவர்களது இணைத்தரப்பினரால் வழங்கப்பட்ட மதிப்பீடுகளில் தங்கியிருக்காதுவிடல்.

4.6.5 உரிமம் பெற்ற வங்கிகள் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்யும் போது பின்வரும் செயன்முறைகளைப் பின்பற்றுதல் வேண்டும்:

(i) உலகளாவிய வங்கிகளுக்கிடையிலான நிதியியல் தொலைத்தொடர்பூட்டல் முறைமை (சுவிப்ற்) அல்லது இலங்கை மத்திய வங்கியினால் ஒப்புதலளிக்கப்பட்ட ஏதேனும் முறைமையினைப் பயன்படுத்தல்,

(ii) அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையில் காணப்படும் ஏதேனும் தடைகளைத் தவிர்க்கின்ற வேளையில் தொழிற்பாட்டுத் தவறுகளை மிகக் குறைந்தளவிற்குக் குறைப்பதனை உறுதிப்படுத்தல்,

(iii) நொஸ்ரோ கணக்கினூடாக மாத்திரம் அத்தகைய அனைத்துக் கொடுக்கல்வாங்கல்களையும் மேற்கொள்ளுதல்.

4.6.6 உரிமம் பெற்ற வங்கிகளும் அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களும் வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களை பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களப் பணிப்பாளரினால் குறித்துரைக்கப்பட்ட காலவரையறையொன்றிற்குள் இலங்கை மத்திய வங்கியின் அதேநேரக் கணனி முறைமையில் இற்றைப்படுத்தல் வேண்டும்.

4.6.7 உரிமம் பெற்ற வங்கிகள், வங்கிகளுக்கிடையிலான சந்தையில் ஒரு பிரிவினைக் கொண்டிருக்கிற முடிவுப் பயன்படுத்துநர் கொடுக்கல்வாங்கல் உள்ளிட்ட அனைத்து வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கலூடாக உருவாக்கப்பட்ட இலாபத்தினைக் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களில் தனியாக வெளிப்படுத்தல் வேண்டும்.

**4.7 நிதியியல் பெறுதிக் கொடுக்கல்வாங்கல்கள்**

4.7.1 நிதியியல் பெறுதிக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில், உரிமம் பெற்ற வங்கிகளுக்கான நிதியியல் பெறுதிக் கொடுக்கல்வாங்கல்கள் மீதான 2018ஆம் ஆண்டில் 4ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பணிப்புரைகளின் கீழ் விடுக்கப்பட்ட பணிப்புரைகளை உரிமம் பெற்ற வங்கிகள் பின்பற்றுதல் வேண்டும்.

5. இடர்நேர்வு முகாமைத்துவத் தத்துவங்கள்

**5.1 பணிப்பாளர் சபை, மூத்த முகாமைத்துவம் மற்றும் தொடர்புபட்ட அனைத்து அனைத்து அலுவலர்களினதும் பொறுப்புக்கள்**

5.1.1 சபை/ மூத்த முகாமைத்துவம் பின்வருவனவற்றினூடாகச் சந்தை இடர்நேர்வு முகாமைத்துவத்தினை பலப்படுத்துவதற்கான வழிமுறைகளை எடுத்தல் வேண்டும்:

(i) நடவடிக்கை முறைக் கைநூலினை உருவாக்கும் போது உள்ளகக் கட்டுப்பாட்டு நடவடிக்கை முறை தொடர்பான ஆவணப்படுத்தல்களை உறுதிப்படுத்தல்,

(ii) சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவக் குழுவொன்றினை நிறுவுதல் அத்துடன் சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவக் குழுவிற்காகவும் அத்துடன்/ அல்லது சந்தை இடர்நேர்வு முகாமைத்துத்துடன் தொடர்புபட்டுள்ள மூத்த முகாமைத்துவக் குழுவிற்குமாகப் பொருத்தமான இடர்நேர்வு வழமுறைகள் நிறுவப்படுவதனை உறுதிப்படுத்தல்,

(iii) பல்வேறு அதிர்வுகளின் சாத்தியமான தாக்கங்களை மதிப்பிடுவதற்கும் இலாபத்தன்மை, திரவத்தன்மை மற்றும் மூலதனப் போதுமை என்பனவற்றின் நியதிகளில் அழுத்த சூழ்நிலைகளை எதிர்த்துநிற்கக்கூடிய வங்கியின் இயலாற்றலை மதிப்பிடுவதற்குமாக காலாந்தர அழுத்தப் பரீட்சிப்புப் பெறுபேறுகளை மீளாய்வு செய்தல்,

(iv) விடயத்தினைப் பொறுத்துச் சபைக்கு அல்லது மூத்த முகாமைத்துவத்திற்கு திறைசேரி தொடர்பான அறிக்கைகளை அளிக்கும் விதத்தில் அனைத்து விதிவிலக்கான கொடுக்கல்வாங்கல்களைக் கண்டறிவதற்கான வசதிகளுடன் வினைத்திறன்மிக்க முகாமைத்துவத் தகவல் முறைமையொன்றினை வடிவமைத்தல்,

(v) சபையும் மூத்த முகாமைத்துவமும் தொடர்புபட்டுள்ள இடர்நேர்வுகளை முழுமையாக விளங்கிக் கொண்டுள்ளன என்பதனை உறுதிப்படுத்தல்

(vi) இது தொடர்பில் பணிப்பாளர் சபை அதன் கடமைகளை ஆற்றுவதற்கு உதவிபுரியும் வகையில், தேவையானவிடத்து, தனியான சுயாதீனமான தொழில்சார் நிபுணத்துவ ஆலோசனைகளை எதிர்பார்ப்பதற்கும் பெற்றுக்கொள்வதற்குமான நடைமுறைகளை வடிவமைத்தல்,

(vii) அனைத்துப் புதிய சாதனங்கள், பணிகள் மற்றும் நடவடிக்கைகளின் அறிமுகப்படுத்தலுக்கு ஒப்புதலளித்தல்.

5.1.2 சபை மற்றும் மூத்த முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள் தொடர்பில் உரிமம் பெற்ற வங்கிகள், இலங்கையிலுள்ள உரிமம் பெற்ற வங்கிகளுக்கான கம்பனி ஆளுகை தொடர்பான 2007ஆம் ஆண்டின் 11ஆம் மற்றும் 12ஆம் இலக்கப் பணிப்புரைகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

**5.2 இடர்நேர்வினைக் கண்காணித்தல் மற்றும் கட்டுப்படுத்தல்**

5.2.1 உரிமம் பெற்ற வங்கிகள் பின்வருவனவற்றை மேற்கொள்ளுதல் வேண்டும்:

(i) முன்னரங்க அலுவலகம், நடு அலுவலகம் மற்றும் பின்னரங்க அலுவலகத்தினால் ஆற்றப்பட வேண்டிய நடவடிகைக முறைகளையும் உள்ளக் கட்டுப்பாடுகளையும் ஆவணப்படுத்தல்,

(ii) தற்போது இடம்பெற்று வருகின்ற அடிப்படையில் சந்தை இடர்நேர்வுகளைக் கண்காணிப்பதற்காக முறையொன்றினை நிறுவுதல்,

(iii) அத்தகைய இடர்நேர்வுகளை அவை இடம்பெற்று வரும் அடிப்படையில் சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவக் குழுவிற்கு அறிக்கையிடல்,

(iv) பின்வருவனவற்றின் மூலமாக வர்த்தகப்படுத்தல், இடர்நேர்வு முகாமைத்துவம், அளவிடல், கண்காணிப்பு, தீர்ப்பனவு மற்றும் கணக்கீட்டுத் தொழிற்பாடுகள் என்பன தொடர்பான கடமைகளையும் பொறுப்புக்களையும் காத்திரமான முறையில் வெவ்வேறாக்குவதனை உறுதிப்படுத்தல்:

(அ) திறைசேரி தொழிற்பாடுகள் தொடர்பான முன், நடு மற்றும் பின்னரங்க அலுவலகங்களின் பௌதீக ரீதியாகவும் தொழிற்பாட்டு ரீதியாகவும் வெவ்வேறாக்குதல்,

(ஆ) பொறுப்புக்களைத் தெளிவாகப் புரிந்து கொள்ளும் தன்மையினை உருவாக்குதல் மற்றும் தொழிற்படுகின்ற அலுவலர்களுக்குக் கடப்பாடுகளை அறிவித்தல்,

(இ) வணிக அறைகளையும் அடையாளம் காணப்பட்ட தொழிற்பாட்டுப் பகுதிகள் ஒவ்வொன்றையும் அதிகாரமளிக்கப்பட்ட ஆளணியினர் மாத்திரம் அணுகத்தக்க விதத்தில் மட்டுப்படுத்துதல்; அத்துடன்

(ஈ) நடு/ பின்னரங்க தொழிற்பாடுகளின் மீது முன்னரங்க அலுவலகம் நியாயமற்ற விதத்தில் செல்வாக்குப் பிரயோகிப்பதனைத் தடுத்தல்.

(v) ஏற்றுக்கொள்ளத்தக்க சாதனங்களின் பட்டியல், ஒப்புதலளிக்கப்பட்ட தரகர்கள், அதிகாரமளிக்கப்பட்ட இணைத்தரப்பினர்கள் மற்றும் அவர்களது வரையறைகளுக்கு ஒப்புதலளித்தல்,

(vi) வணிகர்களுக்கு அவர்களின் அனுபவம் மற்றும் நிபுணத்துவத்தின் அடிப்படையில் அதிகாரங்களை வழங்குவதற்கான நடவடிக்கை முறைகளை உருவாக்குதல்,

(vii) உரிய வரையறைகளை விஞ்சுகின்ற விதத்தில் இடம்பெற்ற கொடுக்கல்வாங்கல்களுக்கு, அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் இடம்பெற்றதனை உடனடுத்து பணிப்பாளர் சபையின்/ மூத்த முகாமைத்துவத்தின் ஒப்புதலைப் பெற்றுக்கொள்வதனை உறுதிப்படுத்துதல்,

(viii) குறிப்பிட்ட நாளில் அனைத்து வணிக நடவடிக்கைகளையும் பதிவுசெய்கின்ற பதிவேடொன்று பேணப்படுவதனையும் வணிகர்கள்/ முன்னரங்க அலுவலக நிலைமையினைப் பொதுப் பேரேட்டுடன் கிரமமான முறையில் சுயாதீனமாக மீளிணக்கப்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்தல்,

(ix) இணைத்தரப்பினருக்குத் தீர்ப்பனவு அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு முன்னதாக பின்னரங்க அலுவலகம் அனைத்து வணிகப்படுத்தல் கொடுக்கல்வாங்கல்களையும் உறுதிப்படுத்துவதனை நிச்சயப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்,

(x) அதேநேர அடிப்படையில், வெளிநாட்டுச் செலாவணி மற்றும் ஏனைய வணிகக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் சுயாதீன வணிகப்படுத்தல் மற்றும் வர்த்தகப்படுத்தல் பேச்சுவார்த்தைகளைச் சுயாதீனமாக நிலைப்படுத்தல் மற்றும் அனைத்து விதிவிலக்கல்கள், வரையறைகளின் மீறல்கள் என்பனவற்றைச் சபைக்கு/ மூத்த முகாமைத்துவத்திற்கு உரிய நேரத்தில் அறிக்கையிடுவதற்கான பொறிமுறையொன்று நடைமுறைப்படுத்தப்படுவதனைக் கண்காணித்தல்.

(xi) அனைத்துக் கொடுக்கல்வாங்கல்களும் நடைமுறைச் சந்தை வீதங்களில் மேற்கொள்ளப்பட்டன என்பதனையும் சந்தைக்கு வெளியே அல்லது வரலாற்று ரீதியான மாறிச் செல்லும் வீதக் கொடுக்கல்வாங்கல்கள் அனுமதிக்கப்படவில்லை என்பதனையும் உறுதிப்படுத்தல்,

(xii) சுயாதீனமான இடர்நேர்வு கண்காணிப்புப் பிரிவினால் அடையாளம் காணப்பட்டவாறு எதிரீடு செய்கின்ற பெருமளவு எண்ணிக்கையான கொடுக்கல்வாங்கல்கள், நீண்ட காலம் வெளிநின்ற தொங்கலிலுள்ள நிலுவைகள் போன்ற கொடுக்கல்வாங்கலில் காணப்படும் ஒழுங்கீனங்கள் சபை/ மூத்த முகாமைத்துவத்திற்குச் சரியான முறையில் அறிவிக்கப்படுகின்றன என்பதனை உறுதிப்படுத்தல்,

(xiii) முன்னரங்க அலுவலகத்தின் சுயாதீனமான பிரிவினூடாக, வெளிநாட்டுச் செலாவணி மற்றும் ஏனைய வர்த்தகப்படுத்தல் நிலைமைகளை சந்தைப்படியான விலைகளை ஒழுங்குபடுத்துவதுடன் மீள்மதிப்பீட்டு வீதத்தினையும் விளைவு வளையியையும் சுயாதீனமாக சரிபார்த்தல்,

(xiv) தடங்கலற்ற விடுப்புக் கொள்கையொன்றினைக் கடுமையான முறையில் நடைமுறைக்கிடல் வேண்டுமென்பதுடன் விடுப்பிலுள்ள வர்த்தகர்கள் ஏதேனும் வணிகங்களில் அல்லது இக்காலப்பகுதியில் தூரத்திலிருந்து தொழிற்படும் சாதனத்தினூடாக அணுகும் வசதிகளைக் கொண்டிருப்பதனையும் தடை செய்தல்,

(xv) பொருத்தமான தொடர்ந்தும் மேற்கொள்ளக்கூடிய திட்டமொன்றினை நிறுவுதல்.

**5.3 வரையறைகளின் கட்டமைப்பு**

5.3.1 உரிமம் பெற்ற வங்கிகள், நிறுவனம், வணிகர் மற்றும் வேறுபட்ட சிரேஷ்ட மட்டங்களில் சந்தை இடர்நேர்வு வெளிப்படுத்துகைகளைக் காத்திரமான முறையில் முகாமைப்படுத்துவதற்கான கொடுக்கல்வாங்கல் மட்டம் என்பன உட்பட சந்தை இடர்நேர்வுடன் தொடர்பான வரையறைகளின் அனைத்தையுமுள்ளடக்கிய கட்டமைப்பொன்றினை நிறுவுதல் வேண்டும்.

5.3.2 இவ்வரையறைகள்:

(i) சரியான விதத்தில் ஆவணப்படுத்தப்பட்டு பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்படல் வேண்டும்.

(ii) நியாயமான விதத்திலும், நிதியிடல், வியாபார அளவு, இடர்நேர்வினைத் தாங்கும் கொள்கை, சந்தைச் செயலாற்றம் மற்றும் வணிகரின் அனுபவம் மற்றும் அந்தஸ்து என்பனவற்றினைப் பரிசீலனையில் கொண்டதன் பின்னரான தேவையின் அடிப்படையிலும் இருத்தல் வேண்டும்,

(iii) ஒட்டுமொத்த இடர்நேர்வினைத் தாங்கும் மட்டம், வெளிநாட்டு நாணயத்தில் தொடர்பான மிகையான தளம்பல்கள், இணைத்தரப்பினரின் இடர்நேர்வுத் தரமிடல் அல்லது சந்தை நிலைமைகள் என்பனவற்றைப் பரிசீலனையில் கொண்டு பொருத்தமான விதத்தில் குறைந்தபட்சம் வருடாந்தம் அல்லது கூடியளவிற்கு அடிக்கடி மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும்.

5.3.3 வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகளுக்காக விசேடமாக விதந்துரைக்கப்பட்ட தொடர்பான வரையறைகளின் கட்டமைப்பு பின்வருவனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்:

(i) ஒரு நாளுக்குள்ளேயான மற்றும் ஓரிரவு இரண்டினதும் அனைத்து நாணயங்களினதும் கூட்டுத்தொகையின் மீதான ஆரம்ப நிலைமை வரையறைகள்,

(ii) ஒரு நாளுக்குள்ளேயான மற்றும் ஓரிரவு இரண்டினதும் தொடர்பிலும் பொருண்மிய வெளிப்படுத்துகைகளைக் கொண்டுள்ள வங்கிகளின் தனிப்பட்ட நாணயங்களுக்கான திறந்த சந்தை வரையறைகள்,

(iii) வெளிநாட்டுச் செலாவணி வணிகத்தில் ஈடுபட்டுள்ள தனிப்பட்டவர்களைப் பொறுத்தவரையில் அவர்களது அனுபவம் மற்றும் நிபுணத்துவம் என்பனவற்றின் அடிப்படையில் வரையறைகள்,

(iv) தீர்ப்பனவு மற்றும் கொடுகடன் என்பனவற்றை உள்ளடக்கிய அனைத்து இணைத்தரப்பினர்களுக்குமான வரையறைகள்,

(v) இழப்புக்களை அத்துடன்/ அல்லது வரையறைகளை உத்வேகப்படுத்துகின்ற முகாமைத்துவ நடவடிக்கைகளை நிறுத்துதல்,

(vi) நாட்டின் வரையறைகள்,

(vii) முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணிப் பொருத்தப்பாடின்மையின் வரையறைகள்,

(viii) அனைத்து முக்கிய நாணயங்களுக்கெதிராக, வேறுபட்ட நேர அமைப்பின் கீழ் முதிர்ச்சிப் பொருத்தப்பாடின்மை இடைவெளியின் வரையறை

5.3.4 உரிமம் பெற்ற வங்கிகள் ஏனைய சந்தை இடர்நேர்வுடன் தொடர்பான சாதனங்களுக்காக அனைத்தையுமுள்ளடக்கிய வரையறைக் கட்டமைப்பொன்றினை நிறுவுதல் வேண்டும்.

**5.4 இடர்நேர்வுகளை அளவிடல் மற்றும் அறிக்கையிடல்**

5.4.1 உரிமம் பெற்ற வங்கிகள், சந்தை இடர்நேர்வினை அளவிடல் மற்றும் அறிக்கையிடல் தொடர்பில் பின்வருவனவற்றைப் பின்பற்றுவதனை உறுதிப்படுத்தல் வேண்டும்:

(i) தேவையானவிடத்து, சபை/ மூத்த முகாமைத்துவம்/ குழு அல்லது தாய்க் கம்பனிகளுக்கு கிரமமாக அறிக்கையிடல்,

(ii) சந்தை இடர்நேர்வினை அறிக்கையிடுவதில் மூத்த முகாமைத்துவம் தீவிரமாக ஈடுபடுவதனையும் பொறுப்பு வகிப்பதனையும் உறுதிப்படுத்தல்,

(iii) சந்தை இடர்நேர்வு அறிக்கையிடல் முறைமையை வங்கியின் மைய முறைமைகளுடன் இணைத்தல் மற்றும் அதன் பின்னர் மையத் தரவுகளுடன் மீளிணக்கப்படுத்துவதனை உறுதிப்படுத்தல்,

(iv) அறிக்கைகள் தெளிவானவையாகவும் பொருள் மயக்கமற்றனவாகவும் முக்கிய தகவல்களை வெளிக்காட்டுவனவாகவும் குறிப்பாக, மீறல்களையும் விலக்கல்களையும் தவிர்ப்பனவாக இருப்பதனையும் உறுதிப்படுத்தல்.

5.4.2 உரிமம் பெற்ற வங்கிகள் இடர்நேர்வு அளவிடல்களும் அறிக்கையிடல் முறைமைகளும் பின்வருவனவற்றை மேற்கொள்ளும் இயலாற்றலைக் கொண்டிருப்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.

(i) மத்திய அலுவலகத்தினால் முன்மதிப்பிடப்படக்கூடிய பெறுதிக் கொடுக்கல்வாங்கல்கள் உட்பட, அனைத்துச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் ஐந்தொகைக்கு வெளியேயான நிலைமைகளிலிருந்து தோன்றுகின்ற அனைத்து சந்தை இடர்நேர்வுகளையும் மொத்த மற்றும் தேறிய அடிப்படை இரண்டின் அடிப்படையிலும் முதிர்ச்சியின்படி சுயாதீனமாக மதிப்பிட்டுக் கணிப்பதற்கும்,

(ii) இடர்நேர்வுகளை அளவிடுவதற்காக பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நிதியியல் மாதிரிகளையும் முறைகளையும் பிரயோகிப்பதற்கும் கிரமமான அழுத்தப் பரீட்சிப்புக்களையும் தோற்றப் பகுப்பாய்வுகளையும் நடத்துவதற்கும்,

(iii) வரையறைகள் விஞ்சப்படவில்லை என்பதனை உறுதிப்படுத்துவதற்காக அதேநேர அடிப்படையில் வெளிநாட்டுச் செலாவணி இணைத்தரப்பின் கொடுகடன் இடர்நேர்வினையும் தீர்ப்பனவு இடர்நேர்வினையும் கண்காணிப்பதற்கும்,

(iv) வரையறைகள் விஞ்சப்படவில்லை என்பதனை உறுதிப்படுத்துவதற்காக அதேநேர அடிப்படையில் வெளிநாட்டுச் செலாவணி இணைத்தரப்பின் கொடுகடன் இடர்நேர்வினையும் தீர்ப்பனவு இடர்நேர்வினையும் கண்காணிப்பதற்கும்,

(v) அளவிடல் முறைமைகளுக்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட எடுகோள்கள், வழிமுறை அலகுகள் மற்றும் வரையறை ஆவணங்கள் ஏதேனும் பொருண்மிய மாற்றங்களுடன் சபையினால்/ மூத்த முகாமைத்துவத்தினால் ஆவணப்படுத்தப்பட்டு, ஆதரவளிக்கப்பட்டு, ஒப்புதலளிக்கப்படுவதற்கும்,

(vi) திறைசேரி தொழிற்பாடுகளிலிருந்து தோன்றுகின்ற சந்தை இடர்நேர்வு அதேபோன்று தொழிற்பாட்டு இடர்நேர்வுகள் என்பனவற்றை உள்ளடக்கிய விதத்தில் துல்லியமான, நம்பகமான, தகவல்கள் நிரம்பிய, உரிய நேரத்திலான முகாமைத்துவ தகவல் முறைமைகளைப் பேணுதல்.

**5.5 அழுத்தப் பரீட்சிப்பு**

5.5.1 கிரமமான அழுத்தப் பரீட்சிப்புக்களை நடத்துவதன் மூலம் உரிமம் பெற்ற வங்கிகள் திறைசேரி தொழிற்பாடுகளிலிருந்து தோன்றக்கூடிய இழப்புக்களினால் அவர்களுக்கு ஏற்படக்கூடிய பாதிக்கப்படும் தன்மையினை அளவிடல் வேண்டும். வங்கிகள் இலாபத்தன்மை, திரவத்தன்மை மற்றும் மூலதனப் போதுமை ஆகிய நியதிகளில் சந்தையை எதிர்த்துநிற்கக்கூடிய அல்லது வங்கிக்கே உரித்தான அழுத்தப் பரீட்சிப்பு நிலைமைகளை எதிர்கொள்வதற்கான அவற்றின் இயலாற்றலை மதிப்பிடல் வேண்டும்.

5.5.2 அழுத்தப் பரீட்சிப்புக்கள், வங்கி உள்ளாகக்கூடிய சந்தை வணிகர் தொழிற்பாடுகளை உள்ளடக்கியிருத்தல் வேண்டுமென்பதுடன் செலாவணி வீதம், வட்டி வீதம் மற்றும் பங்குரிமை/ தங்க விலை அசைவுகளில் ஏற்படக்கூடிய கணிசமான ஏதேனும் தாக்கங்களையும் கணக்கிலெடுத்தல் வேண்டும்.

5.5.3 அழுத்தப் பரீட்சிப்புக்கள், வங்கிச் சொத்துப்பட்டியல் மற்றும் தொடர்புபட்ட இடர்நேர்வுகள் ஆகியவற்றின் தன்மைக்கு ஈடான விதத்தில் அமைதல் வேண்டும்.

**5.6 பணம் தூயதாக்கல், மோசடி மற்றும் ஏனைய குற்ற நடவடிக்கைகள்**

5.6.1 உரிமம் பெற்ற வங்கிகள் பணம் தூயதாக்கல் மற்றும் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்களைக் கண்டுபிடிக்கின்ற மற்றும் கண்காணிக்கின்ற முறைமைகள் நடைமுறைக்கிடப்பட்டுள்ளமையினையும் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்களை அடையாளம் கண்டு அத்தகைய சம்பவங்களை இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு அறிக்கையிடுவதற்குப் பொறுப்பாகவுள்ள தொடர்பான அதிகாரிகளுக்கு அறிக்கையளிக்கின்ற விதத்தில் அனைத்து அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களுக்கும் பயிற்சியளிக்கப்பட்டுள்ளமையினையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

**5.7 புதிய சாதனங்களை, பணிகளை மற்றும் நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தல்**

5.7.1 உரிமம் பெற்ற வங்கிகள் புதிய சாதனங்கள், பணிகள் மற்றும் நடவடிக்கைகள் அனைத்துச் சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவக் குழுவினால் விதந்துரைக்கப்பட்டு சபையினால் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளமை பற்றி உறுதிப்படுத்தல் வேண்டும்.

5.7.2 உரிமம் பெற்ற வங்கிகள் வர்த்தகப்படுத்தல் செய்முறைகளை அடையாளம் கண்டு, இயல்பாகவே சேர்ந்து காணப்படும் இடர்நேர்வுகளையும் வருவாய்களையும் மதிப்பிட்டு அனைத்துப் புதிய சாதனங்கள்/ பணிகள்/ நடவடிக்கைகள் தொடர்பான சட்டச் சிக்கல்களை மீளாய்வு செய்தல் வேண்டும்.

5.7.3 உரிமம் பெற்ற வங்கிகள் புதிய சாதனங்கள்/ பணிகள்/ நடவடிக்கைகள் என்பனவற்றிற்கான சபையின் ஒப்புதலைப் பெறுவதற்கான அனைத்து மீளாய்வுக் குறிப்புக்களும் உற்பத்தி அபிவிருத்திச் செயன்முறையுடன் தொடர்புபட்டுள்ள அலுவலர்களினால் சரியான முறையில் கையொப்பமிடப்பட்டுள்ளன என்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.

5.7.4 உரிமம் பெற்ற வங்கிகள் புதிய சாதனங்கள்/ பணிகள்/ நடவடிக்கைகள் வங்கியின் தகவல் தொடர்பூட்டல் முறைமை, மைய நடவடிக்கைகள் இடர்நேர்வுத் தோற்றப்பாடு மற்றும் நிபுணத்துவம் என்பனவற்றுடன் இணக்கமான தன்மையினைக் கொண்டுள்ளன என்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.

**5.8 வாடிக்கையாளர்களுடனான கொடுக்கல்வாங்கல்கள்**

5.8.1 உரிமம் பெற்ற வங்கிகளும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களும் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ள முன்னர் இணைத்தரப்பினர்கள், குறிப்பாக, நிறுவன ரீதியற்ற சில்லறை வாடிக்கையாளர்கள் அவர்களுக்கு வழங்கப்பட்ட சாதனங்களுடன், குறிப்பாக, பெறுதிகளுடன் இணைந்து காணப்படும் தன்மை மற்றும் சாத்தியமான இடர்நேர்வுகளை முழுமையாகப் விளங்கிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.

**5.9 இலத்திரனியல் வர்த்தகப்படுத்தல் நடவடிக்கைகள்**

5.9.1 இப்பணிப்புரைகளின் மற்றைய அனைத்து ஏற்பாடுகளும் இலத்திரனியல் வர்த்தகப்படுத்தல் தளத்தினூடாக மேற்கொள்ளப்படும் கொடுக்கல்வாங்கல்களுக்கும் வியாபாரங்களுக்கும் சமமான விதத்தில் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

**5.10 உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடு**

5.10.1 திறைசேரி வியாபாரம் தொடர்பான அவற்றின் நேர்மை, துல்லியமான தன்மை மற்றும் விரித்துரைக்கப்பட்ட செயன்முறைகளுடன் கூடிய இணங்குவிப்பு என்பனவற்றை உறுதிப்படுத்தும் பொருட்டு அதனுடன் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவச் செயன்முறைகள் மீது காலாந்தர மீளாய்வுகளை மேற்கொள்வதனை உறுதிப்படுத்துதல்.

5.10.2 மீளாய்வுகள் கொடுக்கல்வாங்கல்களைப் பதிவு செய்ததுடன் தொடர்பான துல்லியமான மற்றும் முழுமையான தன்மை, கடமைகளைக் காத்திரமான விதத்தில் வெவ்வேறாக்குதல், விதி விலக்கல்களைத் துல்லியமான விதத்தில் அறிக்கையிடல், செயலாற்றத்துடன் இணைக்கப்பட்ட ஊதியக் கொடுப்பனவுகள், நாளாந்த பின்னூட்டல் நடவடிக்கை முறைகள் மற்றும் அனைத்துத் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பனவற்றை உள்ளடக்கிய திறைசேரி தொழிற்பாடுகள் தொடர்பான காத்திரமான கட்டுப்பாடுகள் இடம்பெறுவதனையும் நடவடிக்கை முறைகள் நிறுவப்பட்டுள்ளமையினையும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

5.10.3 உள்ளகக் கணக்காய்வுகள் இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையின் கீழ் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். உயர் இடர்நேர்வுகளைக் கொண்ட அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கி கணக்காய்வாளர்களினால் கிரமமான அடிப்படையில் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும். உள்ளகக் கணக்காய்வானது, தொழிற்பாட்டு நடவடிக்கை முறைகள் இடர்நேர்வுகளைக் குறைப்பதற்கும் போதுமானது என்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.

5.10.4 சந்தை இடர்நேர்வு முகாமைத்துவ நடவடிக்கைகள் தொடர்பான முகாமைத்துவ தகவல் அறிக்கைகளின் போதுமான மற்றும் துல்லியமான தன்மையினை உறுதிப்படுத்தல் வேண்டும்.

5.10.5 வெளிநாட்டு வங்கிகளைப் பொறுத்தவரையில் உள்ளகக் கணக்காய்வு மற்றும் ஏனைய இடர்நேர்வுக் கட்டுப்பாட்டுப் பிரிவு போதுமான அலுவலர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் அல்லது தலைமை அலுவலக உள்ளகக் கணக்காய்வுக் குழுவினால் உதவியளிக்கப்படுதல் வேண்டும்.

5.10.6 திறைசேரி வியாபாரத்தினை மீளாய்வு செய்வதற்கான போதுமான நிபுணத்துவத்தனையும் அதிகாரத்தினையும் உள்ளகக் கணக்காய்வு கொண்டிருத்தல் வேண்டும்.

5.10.7 உரிமம் பெற்ற வங்கிகள், நிறுவப்பட்ட நடவடிக்கை முறைகளின் மீறல்கள் தொடர்பில் கண்டறியப்பட்ட ஏதேனும் விடயங்களுக்கு உரிய முறையில் பதிலிறுத்தல் வேண்டும் என்பதுடன் உள்ளக அல்லது வெளிவாரி கணக்காய்வாளர்களினால் விதந்துரைப்புக்கள் காத்திரமான முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன என்பதனையும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

6. தொழில்சார் நிபுணத்துவம் மற்றும் அறிவின் மட்டம்

**6.1 தொழில்சார் நிபுணத்துவம் மற்றும் அறிவின் மட்டம்**

6.1.1 அதிகாரமளிக்கப்பட்ட ஆட்கள்:

(i) சந்தையின் ஒட்டுமொத்த தொழில்சார் நிபுணத்துவத் தரங்களை வலுப்படுத்தும் பொருட்டு சந்தை நடைமுறைகள் மற்றும் நடத்தைகளின் விழிப்புணர்வினையும் புரிந்துணர்வினையும் தொடர்ச்சியாக உயர்ந்த மட்டத்தில் பேணுதல்,

(ii) கொடுக்கல்வாங்கல்களைக் கையாளும் பொழுது அல்லது பேரம்பேசும் பொழுது தெளிவான பொருள் மயக்கமற்ற மொழியினைப் பயன்படுத்தல்,

(iii) உள்நாட்டு மற்றும் பன்னாட்டு சந்தைகள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் அபிவிருத்திகள் ஒழுங்குமுறைப்படுத்தல் அபிவிருத்திகள் மற்றும் முறையியல் ரீதியாக இற்றைப்படுத்தல் பற்றிய விழிப்புணர்வினையும் புரிந்துணர்வினையும் உயர்ந்த மட்டத்தில் பேணுதல் மற்றும் நன்கு கட்டமைக்கப்பட்ட பயிற்சி மற்றும் அபிவிருத்தியூடாக அவர்களது தொழில்சார் நிபுணத்துவ அறிவாற்றலின் தரத்தினை உயர்த்துதல்.

6.1.2 அதிகாரமளிக்கப்பட்ட ஆட்கள்:

(i) மோசடி, ஏமாற்றுகை, நேர்மையீனம் அல்லது வேறு ஏதேனும் தவறான நடத்தையுடன் தொடர்புபட்ட ஏதேனும் நடத்தைக்காக இலங்கையில் அல்லது வெளிநாட்டிலுள்ள ஏதேனும் ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகாரசபையினால் அல்லது மேற்பார்வை செய்யும் அதிகாரசபையினால் தொழில்சார் நிபுணத்துவக் கழகத்தினால், விசாரணை ஆணைக்குழுவினால் நியாயச் சபையினால் அல்லது சட்டத்தினால் நிறுவப்பட்ட ஏதேனும் சபையினால் குற்றவாளியாகக் காணப்பட்டவராக இருத்தல் கூடாது.

6.1.3 உரிமம் பெற்ற வங்கிகள், அதிகாரமளிக்கப்பட்ட ஆட்கள் தொழில்சார் நிபுணத்துவ ரீதியாக நடந்து கொள்வதற்கான அவர்களின் பொறுப்பினை அறிந்தவர்களாகவும் சந்தை நியமங்களிலும் மாநாடுகளிலும் பரீட்சயமுடையவராகவும் இருப்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.

6.1.4 வேலை தொடர்பான விபரணங்கள் கிடைக்கத்தக்கதாக இருப்பதனையும் ஒவ்வொரு வணிகராலும் அவரது மேல் அலுவலர்களினாலும் அவை சரியான முறையில் கையொப்பமிடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதனையும் உரிமம் பெற்ற வங்கிகள் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

**6.2 தேவையான தகைமைகள்**

6.2.1 மேலே பணிப்புரை 1.1(ii)(அ) இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஆட்கள் பின்வரும் தொழில்சார் நிபுணத்துவ தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்:

(i) நிதியியல் சந்தைச் சங்கத்தினால் (அசோசியேசன் கம்பிஸ்ற் இன்ரநஷனாலே) வழங்கப்பட்ட வணிகம் செய்வதற்கான சான்றிதழ் அல்லது தொழிற்பாட்டுச் சான்றிதழ், அல்லது

(ii) இலங்கை மத்திய வங்கியின் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையத்தினால் வழங்கப்பட்ட திறைசேரி மற்றும் வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகள் தொடர்பான ஒரு சான்றிதழ், அல்லது

(iii) இலங்கை வங்கியாளர் சங்கத்தினால் வழங்கப்பட்ட திறைசேரி மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவத்தில் டிப்ளோமா, அல்லது

(iv) பட்டய நிதியியல் ஆய்வுகள் நிறுவகத்தில் அங்கத்துவ உறுப்புரிமை

(v) நாணயச் சபையினால் ஏற்றுக்கொள்ளத்தக்க வேறேதேனும் தொடர்பான தொழில்சார் தகைமை, நாணயச் சபை ஒவ்வொரு விடயங்களாக ஆராந்து ஒப்புதலை வழங்கும்.

6.2.2 மேலே 1.1(i) இன் கீழ் கொடுக்கல்வாங்கல் வியாபாரத்தில் தற்போது ஈடுபட்டுள்ள மேலே 1.1(ii)(அ) இன் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அதிகாரமளிக்கப்பட்ட ஆட்கள், இப்பணிப்புரையின் திகதியிலிருந்து ஓராண்டிற்குள் தொடர்பான தகைமைகளைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

6.2.3 மேலேயுள்ள 1.1(i) இன் கீழ் கொடுக்கல்வாங்கல் வியாபாரத்தில் ஈடுபடுவதற்காக மேலே 1.1(ii)(அ) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஆட்கள் அத்தகைய அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஆட்கள் அத்தகைய நியமனம் பெறும் நேரத்தில் மேலே 6.2.1இல் குறித்துரைக்கப்பட்டவாறான தொடர்பான தகைமைகளைப் பெற்றிருக்காதுவிடின் புதிய நியமனங்களுக்கு உரிமம் பெற்ற வங்கிகளின் பணிப்பாளர் சபை ஒப்புதலளித்தல் வேண்டும்.

6.2.4 மேலும், மேலே 6.2.3 இல் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஆட்கள் மேலே 6.2.1 இல் குறித்துரைக்கப்பட்டவாறான தொடர்பான தகைமையினை அத்தகைய நியமனத் திகதியிலிருந்து ஓராண்டிற்குள் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

7. உரிமம் பெற்ற வங்கிகளினாலும் அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களினாலும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பிரகடனங்கள்

7.1 மேலேயுள்ள பணிப்புரை 1.1(ii)(அ) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரமளிக்கப்பட்ட ஆட்கள் இணைப்பு I இல் காட்டப்பட்டுள்ள படிவத்திலுள்ளவாறு, தொடர்பான உரிமம் பெற்ற வங்கியின் முதன்மை நிறைவேற்று அலுவலரூடாக வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளருக்கு பிரகடனமொன்றினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

7.2 மேலே 1.1(ii)(அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களின் விபரங்களை, இப்பணிப்புரைகளின் திகதியன்று உள்ளவாறு, இணைப்பு II இல் இணைக்கப்பட்டுள்ள படிவத்திற்கிணங்க உரிமம் பெற்ற வங்கிகள் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். தனிப்பட்ட முறையில் அல்லது விபரங்களில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்படுமிடத்து அவற்றை அத்தகைய மாற்றங்கள் நிகழ்ந்ததிலிருந்து இரண்டு வார காலப்பகுதிக்குள் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

8. இப்பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகாமை மீதான தடைகள்

8.1 ஏதேனும் உரிமம் பெற்ற வங்கி அத்துடன்/ அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆள் இப்பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகத் தவறும் சந்தர்ப்பத்தில், நாணயச் சபை விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர் அவசியமானவை எனக் கருதுகின்ற பின்வரும் நடவடிக்கைகளிலொன்றினை அல்லது கூடுதலானவற்றை எடுக்கலாம்:

(i) இப்பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகாமல் இருந்துவரும் எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட ஆளினைத் தொடர்பான உரிமம் பெற்ற வங்கியின் திறைசேரித் தொழிற்பாடுகள் தொடர்பான எந்தவொரு தொழிற்பாட்டினை ஆற்றுவதிலிருந்தும் இடைநிறுத்துமாறு அல்லது நீக்கிவிடுமாறு உரிமம் பெற்ற வங்கியைப் பணிக்கலாம்.

(ii) நிறைவேற்றுத் தொழிற்பாடுகளை ஆற்றுகின்ற அலுவலர்கள் நிறைவேற்றுத் தொழிற்பாடுகளை ஆற்றுகின்ற அலுவலர் என்ற அந்தஸ்த்தினை தொடர்வதற்குப் பொருத்தமும் தகுதியுமற்றவர் என மதிப்பிடுதல்,

(iii) இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட வணிகர், முதனிலை வணிகர் அல்லது ஏதேனும் வேறு வணிக உரிமைகளுக்கான உரிமத்தினை/ ஒப்புதலை இடைநிறுத்துதல்,

(iv) இணங்கியொழுகாத உரிமம் பெற்ற வங்கியின் தேறிய ஆரம்ப நிலைமையின் வரையறையினை அத்துடன்/ அல்லது வேறு ஏதேனும் வரையறைகளைக் குறைத்தல்,

(v) இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட வணிகர், முதனிலை வணிகர் அல்லது ஏதேனும் வேறு வணிக உரிமைகளுக்கான உரிமத்தினை/ ஒப்புதலை இரத்துச் செய்தல்,

(vi) இப்பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகாது இருக்கும் எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட ஆளினைக் கண்டிக்கலாம்; அத்துடன்

(vii) நாணயச் சபையினால் பொருத்தமானது எனக் கருதப்படுகின்ற ஏதேனும் மற்றைய ஒழுங்குமுறைப்படுத்தல் தீர்மானங்களை மேற்கொள்ளலாம்.

9. பணிப்புரைகளை இரத்துச் செய்தல்

9.1 பின்வரும் பணிப்புரைகள்/ சுற்றறிக்கைகள் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன:

(i) 2009ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் வெளிநாடடுச் செலாவணி வியாபாரத்துடன் தொடர்பான இடர்நேர்வு முகாமைத்துவப் பணிப்புரை.

(ii) 2012ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க இலங்கையிலுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுச் செலாவணி வர்த்தக நடவடிக்கை மீதான பணிப்புரை.

(iii) வெளிநாட்டுச் செலாவணி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஆட்களினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பிரகடனம் தொடர்பான 02/17/600/0014/003 இலக்கச் சுற்றறிக்கை.

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

இப்பணிப்புரையின் இணைப்பு I மற்றும் இணைப்பு II னை https://www.cbsl.gov.lk/en/laws/directions-circulars-guidelines-for-banks என்ற வெப்தளத்தில் பார்லெயிடலாம்.

**நாணய விதிச் சட்டக் கட்டளை 2019இன் 02ஆம் இலக்கம்** 2019 செத்தெம்பர் 24

## அண்மைய கொள்கைத் தீர்மானங்களை ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட சந்தைக் கடன் வழங்கல் வீதங்களுக்குக் கடத்துகின்ற வினைத்திறனை அதிகரித்தல்

திருத்தப்பட்டவாறான 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 104(1)(ஆ)இன் கீழ் விடுக்கப்படுகிறது.

உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் என்பனவற்றின் நிதியச் செலவுகளைக் குறைப்பதற்கும் அதன் மூலம் வங்கித்தொழில் துறையிலுள்ள கடன்வழங்கல் சாதனங்களின் வட்டி வீதங்களைக் குறைப்பதற்குமாக இலங்கை மத்திய வங்கி அண்மைக் காலமாக கொள்கை வட்டி வீதங்களையும் நியதி ஒதுக்கு விகிதத்தினையும் குறைத்தமை மற்றும் இலங்கை ரூபா வைப்புக்கள் மீது உயர்ந்தபட்ச வட்டி வீதங்களை விதித்தமை போன்ற பல கொள்கை வழிமுறைகளைப் பின்பற்றி வருகிறது. எனினும், கொள்கை மற்றும் வைப்புக்களின் குறைப்புக்களை பரந்தளவிலும் சமமான விதத்திலும் கடன்வழங்கல் சாதனங்களின் வட்டி வீதங்களுக்கு கடத்துவதில் நியாயமற்ற நீண்ட கால தாமதங்கள் அவதானிக்கப்பட்டமையின் காரணமாக நாணயச் சபை உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினால் வழங்கப்படுகின்ற இலங்கை ரூபாவில் குறித்துரைக்கப்படுகின்ற கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான ஏற்புடைத்தான வட்டி வீதங்கள் மீது கட்டளையொன்றினை இத்தால் விடுத்திருக்கின்ற வேளையில் அவர்களது நிதியிடல் அமைப்புக்களில் காணப்படும் வேறுபாடுகளையும் கவனத்தில் கொண்டிருக்கிறது.

1. நாணய விதிச் சட்டத்தின் கீழ் அதிகாரமளித்தல்

1.1 நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 104(1)(ஆ)இன் நியதிகளில், நாணயச் சபை உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் வேறுபட்ட கடன் வகைகள் அல்லது கொடுகடன் தொழிற்பாடுகளுக்காக விதிக்கத்தக்க வட்டியின் உயர்ந்தபட்ச வீதங்களை காலத்திற்குக் காலம் நிர்ணயித்து வருகிறது.

2. இலங்கை ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான வட்டி வீதங்கள்

2.1 ஒவ்வொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியும் கட்டளை 2.3இன் கீழ் குறிப்பிடப்பட்ட கொடுகடன் வசதிகள் மற்றும் கட்டளை 5இன் கீழ் விலக்களிக்கப்பட்ட கொடுகடன் வசதிகள் நீங்கலாக, இலங்கை ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கு ஏற்புடைத்தான ஆண்டு பெயரளவு வட்டி வீதங்களை 2019.04.30 அன்று உள்ளவாறான தொடர்பான கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கு ஏற்புடைத்தான வட்டி வீதங்களுடன் ஒப்பிடுகையில், 2019.10.15ஆம் நாளன்று குறைந்தபட்சம் 200 அடிப்படைப் புள்ளிகளால் குறைத்தல் வேண்டும்.

2.2 எனினும், இக்கட்டளையின் திகதியிலுள்ளவாறான அல்லது அதன் பின்னர் எந்தவொரு நேரத்திலுமுள்ள இலங்கை ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் கடன்கள் அல்லது முற்பணங்களுக்கு ஏற்புடைத்தான பெயரளவு ஆண்டு வட்டி வீதம் 12.5 சதவீதமாக அல்லது குறைவாக இருக்குமாயின் அது மேலே கட்டளை 2.1இல் தேவைப்படுத்தப்பட்ட குறைப்பினை நடைமுறைப்படுத்த வேண்டுமென்ற கட்டாயத்தினை ஏற்படுத்தாது. மேலும், இக்கட்டளையின் திகதியிலிருந்து அல்லது அதன் பின்னரான எந்தவொரு நேரத்திலும் ஏற்புடைத்தான ஆண்டு பெயரளவு வட்டி வீதம் 12.5 சதவீதமாக அல்லது குறைவாக இருக்கும் சந்தர்ப்பத்தில், வங்கி அத்தகைய கடன்கள் மற்றும் முற்பணங்களின் வட்டி வீதங்களை இக்கட்டளைத் திகதியில் பேணப்பட்ட மட்டத்திலிருந்து அதிகரிக்கக்கூடாது.

2.3 ஒவ்வொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியும் பின்வரும் சாதனப்படியான கடன்வழங்கல் வீதங்களை 2019.11.01ஆம் திகதியன்று இங்கே காட்டப்பட்டுள்ள உயர்ந்தபட்ச மட்டங்களான:

(i) கொடுகடன் அட்டை முற்பணங்கள் மீதான வட்டி வீதங்களை ஆண்டிற்கு 28 சதவீதத்திற்கும்

(ii) முன்கூட்டியே ஒழுங்கு செய்யப்பட்ட தற்காலிக மேலதிகப் பற்றுக்கள் மீதான வட்டி வீதங்களை ஆண்டிற்கு 24 சதவீதத்திற்கும்

குறைத்தல் வேண்டும்.

2.4 ஒவ்வொரு உரிமம் பெற்ற வங்கியும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியும் ஏற்கனவே வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகள் உட்பட, அனைத்துக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீது விதிக்கின்ற தண்ட வட்டி வீதங்களை ஒப்புதலளிக்கப்பட்ட வரையறையினை விஞ்சிய தொகைக்கு அல்லது செலுத்தப்பட வேண்டிய காலப்பகுதியில் நிலுவையிலுள்ள தொகையின் மீது 2019.10.15ஆம் திகதியன்று நடைமுறைக்கு வரும் விதத்தில் ஆண்டிற்கு 400 அடிப்படைப் புள்ளிகளை விஞ்சாததொரு மட்டத்திற்குக் குறைத்தல் வேண்டும்.

3. உயர்ந்தபட்ச சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மை கடன்வழங்கல் வீதம்

3.1 (i) ஒவ்வொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியும் அதன் வாராந்த சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன்வழங்கல் வீதத்தினை, இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட வாராந்த பொருளாதார குறிகாட்டிகளின் வெளியீட்டில் 2019.04.26ஆம் நாளில் உள்ளவாறான சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன்வழங்கல் வீதத்துடன் ஒப்பிடுகையில், 2019.12.27 அன்று குறைந்தபட்சம் 250 அடிப்படைப் புள்ளிகளினால் குறைத்தல் வேண்டும்.

(ii) இடைக்காலத்தில், ஒவ்வொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியும் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட வாராந்த பொருளாதாரக் குறிகாட்டிகளின் வெளியீட்டில் 2019.04.26ஆம் திகதியிலுள்ளவாறான அதன் சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன்வழங்கல் வீதத்துடன் ஒப்பிடுகையில், 2019.12.27 அன்று அதன் வாராந்த சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன்வழங்கல் வீதத்தினை குறைந்தபட்சம் 150 அடிப்படைப் புள்ளிகளினால் குறைத்தல் வேண்டும்.

3.2 2019.04.26இல் உள்ளவாறு இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட வாராந்த பொருளாதாரக் குறிகாட்டிகள், உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றின் சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன்வழங்கல் வீதத்தினைக் கொண்டிருக்காதவிடத்து அத்தகைய உரிமம் பெற்ற வர்த்தக வங்கி சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன்வழங்கல் வீதத்தினை ஆண்டிற்கு 9.5 சதவீதத்தனை விஞ்சாத வீதத்தில் பேணுதல் வேண்டும்.

3.3 இக்கட்டளைத் திகதியிலிருந்து அல்லது அதன் பின்னர் எந்தவொரு நேரத்திலும் சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன்வழங்கல் வீதம் ஆண்டிற்கு 9.5 சதவீதத்தினை அடையுமிடத்து அல்லது அதற்குக் கீழே வீழ்ச்சியடையுமிடத்து அத்தகைய உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு மேலேயுள்ள கட்டளை 3.1இனைப் பிரயோகிக்கக்கூடாது. எனினும், அத்தகைய உரிமம் பெற்ற வர்த்தக வங்கி அதன் வாராந்த சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன்வழங்கல் வீதத்தினை 9.5 சதவீதத்திற்கு மேல் அதிகரிக்கக்கூடாது.

3.4 மேலேயுள்ள கட்டளை 3.1 உடன் இணங்கியொழுகும் விதத்தில் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியும் அதன் சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன்வழங்கல் வீதத்தினைக் குறைக்கப்பட்ட மட்டத்திலிருந்து அதிகரிக்கக்கூடாது.

4. கண்காணிப்பு

4.1 அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளும் இலங்கை மத்திய வங்கிக்கு சமா்ப்பித்த வட்டி வீதத் தரவுகளின் துல்லியத்தன்மையினை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டுமென்பதுடன் இக்கட்டளை பிரயோகிக்கின்ற ஒவ்வொரு கடன்கள் மற்றும் முற்பணங்கள் தொடர்பான வட்டி வீதங்களில் செய்யப்பட்ட குறைப்பு தொடர்பில் இலத்திரனியல் ரீதியாக அல்லது கைகளினால் தயாரிக்கப்பட்ட உள்ளக ஆவணப்படுத்தப்பட்ட பதிவேடுகளைப் பேணுதலும் வேண்டும்.

5. விதி விலக்கல்கள்

5.1 பின்வரும் வகைக் கடன்களும் முற்பணங்களும் மேலேயுள்ள கட்டளை 2இன் தேவைப்பாடுகளிலிருந்து விதிவிலக்களிக்கப்படுகின்றன.

(i) ஒப்பந்தம் செய்யப்பட்ட நிர்ணயிக்கப்பட்ட வீத காலம் முடிவடையும் வரை, நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்கான வட்டி வீதத்தில் செய்யப்பட்ட ஒப்பந்தத்தின் மீது 2019.10.15 இற்கு முன்னர் வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள். சந்தேகங்களைத் தவிர்ப்பதற்காக, இவை குத்தகைகள் மற்றும் ஏற்புடைத்தானவிடத்து தங்கத்தினால் பிணையிடப்பட்ட வசதிகள் என்பனவற்றை உள்ளடக்கும். எனினும், இக்கட்டளைகளின் ஏற்பாடுகள் 2019.10.15 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ நடைமுறைக்கிடப்பட்ட ஆண்டு பெயரளவு வட்டி வீதத்திற்கான எந்தவொரு திருத்தத்திற்கும் ஏற்புடைத்தானவையாக இருத்தல் வேண்டும்.

(ii) உரிமம் பெற்ற வர்த்தக வங்கி மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளில் பேணப்படும் இலங்கை ரூபா வைப்புக்களினால் பிணையுறுதி வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள் எது எப்படியிருப்பினும் வைப்பு வீதங்கள் தொடர்பான எல்லை, இக்கட்டளையின் திகதியிலுள்ளவாறான அத்தகைய வைப்புக்களுக்கு வங்கியினால் பிரயோகிக்கப்படுகின்ற எல்லைக்கு மேல் அதிகரிக்கப்படக்கூடாது என்ற நிபந்தனைக்குட்பட்டதாகும்.

(iii) இலங்கை அரசாங்கத்தின் அல்லது இலங்கை மத்திய வங்கியின் உதவியுடனான அல்லது பொதுவான மீளமைத்தல் ஒழுங்குகளின் கீழான சலுகை நியதிகளிலான மீள்நிதியிடல் திட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள். ஏற்புடைத்தான வட்டி வீதங்கள் அல்லது இத்தீர்மானத்தின் அடிப்படை அத்தகைய திட்டத்தில் அல்லது ஏற்பாடுகளில் குறித்துரைக்கப்பட்டதொன்றாக இருக்கும்.

6. நடைமுறைப்படுத்தல 6.1 இக்கட்டளைகள், இக்கட்டளையின் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதலாதல் வேண்டும்.

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**நாணய விதிச் சட்டக் கட்டளை 2019இன் 03ஆம் இலக்கம்** 2019 செத்தெம்பர் 24

**உரிமம் பெற்ற வங்கிகளின் இலங்கை ரூபா வைப்புக்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள்**

உரிமம் பெற்ற வங்கிகளின் இலங்கை ரூபா வைப்புக்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள் தொடர்பான2019ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நாணய விதிச் சட்டக் கட்டளை இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது.

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**சுற்றறிக்கை 2019இன் 08ஆம் இலக்கம்** 2019 நவெம்பர் 18

**உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் கணக்குகளைக் கணக்காய்வு செய்வதற்கான தகைமை வாய்ந்த கணக்காய்வாளர்களின் பட்டியல்**

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 38ஏ மற்றும் 76எச் பிரிவுகளின் நியதிகளில் இலங்கை மத்திய வங்கி, இலங்கையிலுள்ள உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினதும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினதும் (இதனகத்துப் பின்னர் உரிமம்பெற்ற வங்கிகள் எனக் குறிப்பீடு செய்யப்படும்). கணக்காய்வுகளை மேற்கொள்வதற்கான தகைமை வாய்ந்த கணக்காய்வளர்களின் பட்டியலை மீளாய்வு செய்திருக்கிறது.

1. மதிப்பீட்டுப் பொறிமுறை 1.1 இது தொடர்பில், நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட இற்றைப்படுத்தப்பட்ட வழிகாட்டல்களுக்கிணங்க, இலங்கையிலுள்ள உரிமம்பெற்ற வங்கிகளினது கணக்குகளைக் கணக்காய்வு செய்வதற்கான தகைமை வாய்ந்த கணக்காய்வாளர்களை நாணயச் சபையின் ஒப்புதலுடன் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் தெரிவுசெய்திருக்கிறார்.

1.2 இற்றைப்படுத்தப்பட்ட வழிகாட்டல்களின் கீழ் பரிசீலிக்கப்பட்ட மதிப்பீட்டுப் பிரமாணங்கள் கணக்காய்வுப் பங்காளர்களின் பல்வேறு எண்ணிக்கையிலான தகைமைகள், அலுவலர்களின் எண்ணிக்கை மற்றும் தன்மைகள், கணக்காய்வு நிறுவனத்தின் அனுபவம் மற்றும் நிபுணத்துவம், வங்கித்தொழில் ஒழுங்குவிதிகள் மற்றும் நிதியியல் சாதனங்கள் மீதான நிபுணத்துவம் உட்பட தொழில் உத்தித் தகுதிகள், தடயவியல் கணக்காய்வுகளை மேற்கொள்ளக்கூடிய இயலாற்றல் மற்றும் இயலளவுத்தன்மை மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் கணக்காய்வு பற்றிய அனுபவம் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.

2. தகைமைபெற்ற கணக்காய்வாளர்களின் பட்டியல் 2.1 இதற்கமைய 2021.01.01 தொடங்குகின்ற நிதியியல் ஆண்டிலிருந்து இலங்கையிலுள்ள உரிமம் பெற்ற வங்கிகளின் கணக்குகளைக் கணக்காய்வு செய்வதற்காகப் பின்வரும் தகைமையுடைய கணக்காய்வாளர்களை இலங்கை மத்திய வங்கி தெரிவுசெய்திருக்கிறது:

(i) பீடிஓ பாட்னேர்ஸ்
"சாட்டட் கவுஸ்", இல.65/2 சேர் சிற்றம்பலம் ஏ காடினர் மாவத்தை, கொழும்பு 02

(ii) ஏர்னஸ்ட் அன்ட் யங், இலங்கை
இல. 201, டி சேரம் பிளேஸ், கொழும்பு 10

(iii) கேபிஎம்ஜி இலங்கை
இல.32ஏ, சேர் முகமத் மாகான் மாார்கார் மாவத்தை, கொழும்பு 03

(iv) பிறைஸ்வாட்டர்ஸ் கவுஸ் கூப்பர்ஸ்
இல.100, பிறேபுறூக் பிளேஸ், கொழும்பு 02

(v) எஸ்ஜேஎம்எஸ் அசோசியேட்ஸ்

இல.11, காசில் லேன், கொழும்பு 4

| | | |
|---|---|---|
| 3. முன்னைய சுற்றறிக்கைகளை இரத்துச் செய்தல் | 3.1 | உரிமம்பெற்ற வங்கிகளுக்கு விடுக்கப்பட்ட தகைமையுடைய கணக்காய்வாளர்களின் பட்டியல் தொடர்பில் விடுக்கப்பட்ட 1998ஆம் ஆண்டின் ஏப்பிறல் 30ஆம் திகதியிடப்பட்ட சுற்றறிக்கைகள் 2021.01.01 இலிருந்து தொடங்குகின்ற நிதியியல் ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வருவது நிறுத்தப்படும். |

ஏ.ஏ.எம். தாசிம்
**பணிப்பாளர்/ வங்கி மேற்பார்வைத் திணைக்களம்**

**வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2019இன் 07ஆம் இலக்கம்** 2019 திசெம்பர் 19

## உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு மீதான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பிற்கான திருத்தங்கள்

1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 46(1) மற்றும் 76(ஜே)(1) ஆகிய பிரிவுகளின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி நாணயச் சபை உரிமம்பெற்ற வங்கிகள் என இதனகத்துப் பின்னர் குறிப்பிடப்படும். உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு மீதான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு மீதான 2014ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளுக்குப் பின்வரும் திருத்தங்களை விடுத்தது.

இதன்படி, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு மீதான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு மீதான 2014ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் பின்வரும் பணிப்புரைகளைப் பின்வரும் விதத்தில் பதிலீடு செய்யப்படுகின்றன.

5. மதிப்பீட்டாளர்களுக்கான தகைமைப் பிரமாணங்கள்

5.1 ஒவ்வொரு உரிமம்பெற்ற வங்கியும் பின்வருவனவற்றை உறுதிப்படுத்தல் வேண்டும்.

அ. மதிப்பீட்டாளர்களுக்கான தகைமைப் பிரமாணங்கள் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றன.

அ. இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவனத்தின் உறுப்பினராக இருத்தல் வேண்டும். அவர்

i. ஒரு ஆட்சியியல் உறுப்பினராக; அல்லது

ii. தொழில் நிபுணத்துவத்தின் உறுப்பினராகவும் அத்தகைய உறுப்பினர் தரத்தில் 5 ஆண்டு அனுபவத்துடன்கூடிய ஒருவராகவும்

தொழில்சார் நிபுணத்துவ சங்க உறுப்பினர் தரத்திலிருந்த அனுபவ ஆண்டுகளின் எண்ணிக்கையினை தீர்மானிக்கும் நோக்கத்திற்காக 2019ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவன (திருத்தச்) சட்டத்தின் 24ஆம் பிரிவின் கீழ் கூறப்பட்டுள்ள இடைக்கால ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

ஆ. ஐக்கிய இராச்சியத்தின் பட்டய அளவீட்டாளர் றோயல் நிறுவனத்தின் உறுப்பினராக இருத்தல் வேண்டும். அவர்

i. ஐக்கிய இராச்சியத்தின் பட்டய அளவீட்டாளர் றோயல் நிறுவனத்தின் ஒரு ஆட்சியியல் உறுப்பினராகவும் இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவனத்தின் உறுப்பினராகவும்; அல்லது

ii. ஐக்கிய இராச்சியத்தின் பட்டய அளவீட்டாளர் றோயல் நிறுவகத்தின் இறுதிப்பரீட்சையில் சித்தியடைந்து அதே நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள 05 ஆண்டுகள் அனுபவத்துடன் பொதுத் தொடர் பிரிவில் பணியாற்றும் அத்தகைய தரத்திலுள்ள உறுப்பினராகவும் இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவகத்தின் உறுப்பினராகவும் இருத்தல் வேண்டும்.

ஆ. மேலே பணிப்புரை 5.1(அ) இல் குறிப்பிடப்பட்ட தகைமைகளின்படி உரிமம்பெற்ற வங்கிகளின் மதிப்பீட்டாளர் குழுவிற்கு தெரிவுசெய்யப்பட்ட மதிப்பீட்டாளர்கள் தொடர்பாக தொழில்சார் நிபுணத்துவ சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட/ விதந்துரைக்கப்பட்ட தொழில்சார் அபிவிருத்திகளை தொடர்ச்சியாகப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

இ. அசையாச் சொத்துக்களின் மதிப்பீட்டினை மேற்கொள்கின்ற உள்ளக மதிப்பீட்டாளர்கள் மேலே பணிப்புரை 5.1(அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைப் பிரமாணங்களைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

6. உள்ளக மற்றும் வெளிவாரி மதிப்பீட்டு அறிக்கைகளுக்கான குறைந்த அடிப்படை

6.1 அனைத்துச் செயற்படுகின்ற கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கெதிராக பிணையமாகப் பெறப்பட்ட/ பெறப்படவுள்ள அசையாச் சொத்துக்கள் தொடர்பில் வங்கிகள் அவற்றின் கொள்கைக்கேற்ப உள்ளக மற்றும் வெளிவாரி மதிப்பீடுகளுக்கான குறைந்த அடிப்படையொன்றினை நிறுவிக் கொள்ளுதல் வேண்டும்.

6.2 செயற்படாக் கடன்களைப் பொறுத்தவரையில், மூலதன வெளிநின்ற தொகை ரூ.10,000,000 இற்கும் அல்லது வங்கியின் மூலதனத் தளத்தில் 0.1 சதவீதத்திற்கும் குறைவாக இருக்குமிடத்து இதில் எது குறைவானதோ அதற்கு உள்ளக மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

6.3 வெளிநின்ற மூலதனத் தொகை ரூ.5,000,000 இற்கும் மேலாக அல்லது வங்கியின் மூலதனத் தளத்தில் 0.1 சதவீதமாக இருக்குமிடத்து, இதில் எது குறைவானதாக இருக்கின்றதோ அதற்கு மீட்புரிமைத் தடையினைக் கொண்ட சொத்துக்களுக்காக மதிப்பீட்டினை பெறும் விடயத்தில் உரிமம்பெற்ற வங்கிகள் வெளிவாரி மதிப்பீட்டு அறிக்கையினைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

7. மதிப்பீடுகளின் கால இடைவெளி

7.1 எடுத்துக்காட்டப்பட்ட பணிப்புரையின் 2.2(ஊ)இல் குறிப்பிடப்பட்ட மதிப்பீடுகளின் கால இடைவெளி பின்வருமாறு இருத்தல் வேண்டும்:

அ. செயற்படாதனவாக விளங்கும் கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கெதிராக பிணையுறுதியாக பெறப்பட்ட அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு எந்தவொரு ஒழுங்குமுறைப்படுத்தல் நோக்கத்திற்குமாக பின்வருமாறான கால இடைவெளியினை கொண்டிருத்தல் வேண்டும்.

i. கடன்பாட்டாளரினால் வதியும் நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டு வருகின்ற வதிவிட சொத்திற்கெதிராக வழங்கப்பட்ட கொடுகடன் வசதியைப் பொறுத்தவரை; அறிக்கை ஐந்தாண்டுக்குக் கூடுதலான பழமையானதாக இருக்கக்கூடாது.

ii. மற்றைய அனைத்து கொடுகடன் வசதிகள்: அறிக்கையானது நான்கு ஆண்டுகளுக்கும் கூடுதலான பழமையானதாக இருத்தல்கூடாது.

ஆ. அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு தொடர்பில் பணிப்புரை 3.1 (ஆ) மற்றும் (இ) இல் குறிப்பிடப்பட்டவாறு அசையாச் சொத்துக்களின் மீள்மதிப்பீடானது பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட உள்ளகக் கொள்கைகளுக்கு இசைந்த விதத்தில் அல்லது அத்தகைய அசையாச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதியில் ஏற்படுகின்ற ஏதேனும் குறிப்பிடத்தக்க தளம்பல் பற்றாக்குறைக்கு ஏற்ப மேற்கொள்ளப்படல் வேண்டும். எனினும், அத்தகைய இலாபங்கள் ஒவ்வொரு மூன்றாண்டுகளுக்குகொருமுறை மட்டுமே அடுக்கு 2 மூலதனத்தில் உள்ளடக்கப்படலாம்.

இ. செயற்படுகின்ற கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கெதிராக பிணையுறுதியாக பெறப்பட்ட அசையாச் சொத்துக்களின் மதிப்பீடுகள் கடன் வழங்கப்படுகின்ற ஆரம்ப கட்டத்தின் போதும் அதனைத் தொடர்ந்து கொடுகடன் வசதி அதிகரிக்கப்படுகின்ற ஏதேனும் நேரத்திலும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2019இன் 08ஆம் இலக்கம்** 2019 திசெம்பர் 19

**இலங்கையிலுள்ள உரிமம்பெற்ற வங்கிகளின் பணிப்பாளர்களது பொருத்தம் மற்றும் தகுதியை மதிப்பிடல்**

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 46(1) மற்றும் 76ஜே(1) ஆகிய பிரிவுகளின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி நாணயச் சபை உரிமம்பெற்ற வங்கிகள் என இதனகத்துப் பின்னர் குறிப்பிடப்படும் உரிமம்பெற்ற வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் பணிப்பாளர்களது பொருத்தம் மற்றும் தகுதியை மதிப்பிடுவதன் மீதும் வங்கித்தொழில் சட்டத்தின் 76எச் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 42ஆம் பிரிவின் நியதிகளில் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரின் ஒப்புதலைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்திற்காக இலங்கையிலுள்ள உரிமம்பெற்ற வங்கியொன்றில் பணிப்பாளராக நியமிக்கப்படுவதற்கு, தெரிவுசெய்யப்படுவதற்கு அல்லது நியமனம் செய்யப்படுவதற்கு முன்மொழியப்பட்டுள்ள ஆட்களினால் சமர்ப்பிக்கப்படவுள்ள தகவல்கள் தொடர்பிலும் இத்தால் இப்பணிப்புரைகளை விடுக்கிறது.

1. அதிகாரமளித்தல்

1.1 வங்கித்தொழில் முறைமையின் ஆற்றல்வாய்ந்த தன்மையினை உறுதிப்படுத்தும் பொருட்டு, வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவுகள் 46(1) மற்றும் 76ஜே(1) என்பனவற்றின் நியதிகளில், நாணயச் சபைக்கு, அனைத்து வங்கிகளுக்கும் அல்லது ஏதேனும் வங்கிக்கு அத்தகைய வங்கிகளின் வியாபாரம் நடத்தப்பட வேண்டிய முறைமை பற்றிய பணிப்புரைகளை விடுப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது.

1.2 வங்கித்தொழில் சட்டத்தின் 42(1) மற்றும் 76எச் ஆகிய பிரிவுகளின் நியதிகளில், ஆளொருவர் பணிப்பாளரொருவராக பதவி வகிப்பதற்கு பொருத்தமும் தகுதியும் வாய்ந்த ஆளாக இருந்தாலொழிய, அவர் உரிமம்பெற்ற வங்கியொன்றில் பணிப்பாளராக நியமிக்கப்படவோ தெரிவுசெய்யப்படவோ அல்லது நியமனம் செய்யப்படவோ தெரிவுசெய்யப்படவோ அல்லது பணிப்பாளராகத் தொடரவோ கூடாது என்பதுடன் அவர் அவ்வாறான ஆளாக இருப்பின் இச்சட்டத்தின் அல்லது எழுதப்பட்ட ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகள் அவரைத் தடைசெய்யாது.

2. சமர்ப்பிக்கப்பட வேண்டிய தகவல்கள் மற்றும் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி

2.1 உரிமம்பெற்ற வங்கியொன்றில் பணிப்பாளராக நியமிக்கப்படுவதற்கு அல்லது நியமனம் செய்யப்படுவதற்கு முன்மொழியப்பட்டுள்ள ஆளொருவர், அத்தகைய ஆள் உரிமம் பெற்ற வங்கியில் குறித்துரைக்கப்பட்ட பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு முன்னதாக அட்டவணை I இல் தரப்பட்டுள்ளவாறான மூல சத்தியப்பிரமாணத்தினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

2.2 சத்தியப்பிரமாணமானது அதனை பூரணப்படுத்துவதற்குத் தரப்பட்டுள்ள இணைக்கப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கேற்ப பூரணப்படுத்தப்படல் வேண்டும்.

2.3 முன்மொழியப்பட்டுள்ள ஆளின் பொருத்தம் மற்றும் தகுதியினை மதிப்பிடும் பொருட்டு, உரிமம்பெற்ற வங்கியின் பணிப்பாளரது சத்தியப்பிரமாணத்தினைக் கம்பனிச் செயலாளர் உறுதிப்படுத்தி அனுப்புதல் வேண்டும்.

2.4 சத்தியப்பிரமாணமானது இரகசியமான உறையில் இடப்பட்டு நியமனம் செய்ய எதிர்பார்க்கப்படும் திகதிக்கு 15 வேலைநாட்களுக்கு முன்னதாக வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

2.5 உரிமம்பெற்ற வங்கியொன்றின் பணிப்பாளர் ஓய்வுபெறுகையில்/ இராஜினாமாச் செய்கையில்/ தொழில்நிலை முடிவுறுத்தப்படுகையில் அது பற்றி அத்தகைய ஓய்வுபெறுதல்/ இராஜினாமாச் செய்தல்/ முடிவுறுத்தல் இடம்பெற்ற மூன்று வேலைநாட்களுக்குள் காரணங்களுடன் உரிமம்பெற்ற வங்கிகள், வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

3. பொருத்தம் மற்றும் தகுதியை மதிப்பிடல்

3.1 வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர், வங்கித்தொழில் சட்டத்திலும் அதன் கீழ் விடுக்கப்பட்ட பணிப்புரைகளிலும் எடுத்துக்காட்டப்பட்ட பிரமாணங்களின் அடிப்படையில் முன்மொழியப்பட்ட ஆளின் பொருத்தத்தினையும் தகுதியினையும் மதிப்பிடல் வேண்டும்.

3.2 வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் சத்தியப்பிரமாணம் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களை மதிப்பீடு செய்து உத்தேச நியமனத்திற்கு ஒப்புதலை வழங்கலாம் அல்லது நிராகரிக்கலாம்.

3.3 பணிப்பாளர்கள் பொருத்தம் மற்றும் தகுதியை மதிப்பிடுவது தொடர்பில் தாக்கமொன்றினைக் கொண்டிருக்கக்கூடிய, சத்தியப்பிரமாணத்தில் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் தொடர்பில் பின்னர் நிகழக்கூடிய அனைத்துச் சம்பவங்களையும் சாத்தியமானளவிற்கு விரைவாக உரிமம்பெற்ற வங்கிகளுக்கு அறிவிப்பதற்கு பொறுப்பேற்றுக் கொள்ளல் வேண்டும்.

3.4 மேலேயுள்ள பணிப்புரை 3.3இன் கீழ் உரிமம்பெற்ற வங்கியின் கம்பனிச் செயலாளர் பணிப்பாளர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் இடம்பெறும் அனைத்துச் சம்பவங்களையும் அத்தகைய சம்பவங்கள் அறிய வந்த 15 வேலைநாட்களுக்குள் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு அறியத்தருதல் வேண்டும்.

4. மீள்மதிப்பீடுகள்

4.1 தொடர்ந்து பதவி வகிக்கின்ற பணிப்பாளர்கள் உரிமம்பெற்ற வங்கியின் ஆண்டு பொதுக்கூட்டத்திற்கு அல்லது ஒவ்வொரு ஆண்டும் மாச்சு 31 அளவில் இதில் எது முன்னர் நிகழ்கிறதோ அதற்கு 15 வேலைநாட்கள் முன்னதாக சத்தியப்பிரமாணத்தினை ஆண்டுதோறும் சமர்ப்பித்தல் வேண்டும்.

4.2 வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறு மேலேயுள்ள எவரேனும் பணிப்பாளர் தொடர்பில் மேற்பார்வை தொடர்பான கரிசனைகள் காணப்படுமிடத்து பணிப்பாளர்களின் பொருத்தம் மற்றும் தகுதியை எந்தவொரு நேரத்திலும் மேற்கொள்ளலாம்.

5. நடைமுறைப்படுத்தும் திகதி

5.1 இப்பணிப்புரையானது 2020 சனவரி 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வருதலாதல் வேண்டும்.

6. சுற்றறிக்கைகளை இரத்துச் செய்தல்

6.1 வங்கி மேற்பார்வையாளரினால் விடுக்கப்பட்ட பின்வரும் சுற்றறிக்கைகள் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

(i) வங்கிகளின் பணிப்பாளர் நியமனம் தொடர்பில் 2005 மாச்சு 31ஆம் திகதியிடப்பட்ட இல.02/04/002/0012/002 கொண்ட சுற்றறிக்கை (திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 42ஆம் பிரிவு)

(ii) வங்கிகளின் பணிப்பாளர்களது நியமனம் தொடர்பில் 2005 ஏப்பிறல் 12ஆம் திகதியிடப்பட்ட இல. 02/04/0012/002 கொண்ட சுற்றறிக்கை

(iii) பணிப்பாளர் நியமனம் தொடர்பில் 2010 ஓகத்து 27ஆம் திகதியிடப்படட இல.இல.02/17/600/0017/001 கொண்ட சுற்றறிக்கை

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**இப்பணிப்புரையின் இணைப்பு I இனை** https://www.cbsl.gov.lk/en/laws/directions-circulars-guidelines-for-banks **என்ற வெப்தளத்தில் பார்வையிடலாம்.**

**வங்கித்தொழில் சட்டத் தீர்மானம் 2019இன் 01ஆம் இலக்கம்** 2019 திசெம்பர் 19

## உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலரினதும் நிறைவேற்றுப் பணிகளை ஆற்றுகின்ற அலுவலர்களினதும் பொருத்தம் மற்றும் தகுதியை மதிப்பிடுதல்

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 76எச் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதான 44ஏ பிரிவினால் ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களின் நியதிகளில் முதன்மை நிறைவேற்று அலுவலர்களினதும் நிறைவேற்றுப் பணிகளை ஆற்றுகின்ற அலுவலர்களினதும் பொருத்தம் மற்றும் தகுதியை மதிப்பிடுவது தொடர்பில் நாணயச் சபை இத்தால் வங்கித்தொழில் சட்டத் தீர்மானங்களை விடுக்கிறது.

1. அதிகாரமளித்தல்

1.1 திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 76எச் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதான 44ஏ பிரிவின் நியதிகளில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினதும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினதும் (இதனகத்துப் பின்னர் உரிமம் பெற்ற வங்கிகள் எனக் குறிப்பிடப்படும்) முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கும் நிறைவேற்றுப் பணிகளை ஆற்றுகின்ற ஏனைய அலுவலர்களும் நாணயச் சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறான பொருத்தமும் திகதியும் கொண்ட ஆட்களாக இருத்தல் வேண்டுமென்பதுடன் வங்கித்தொழில் சட்டத்தின் 42(2) பிரிவு, அத்தகைய அலுவலர்கள் பொருத்தமும் தகுதியுடைய ஆட்களா என்பதனைத் தீர்மானிப்பதற்குப் பிரயோகிக்கப்படுதலும் வேண்டும்.

2. நிறைவேற்றுப் பணிகளை ஆற்றும் அலுவலர்கள்

2.1 உரிமம்பெற்ற வங்கியொன்றில் பின்வரும் பதவிகளில்/ நிலைகளிலுள்ள அலுவலர்கள் நிறைவேற்றுப் பணிகளை ஆற்றுகின்ற அலுவலர்கள் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(i) மேலதிக பொது முகாமையாளர்

(ii) மூத்த துணைப் பொது முகாமையாளர்

(iii) துணைப் பொது முகாமையாளர்

(iv) மூத்த துணைத் தலைவர்

(v) உதவிப் பொது முகாமையாளர்

(vi) முதன்மைத் தொழிற்பாட்டு அலுவலர்

(vii) முதன்மை இடர்நேர்வு அலுவலர்

(viii) முதன்மைக் கணக்காய்வாளர்

(ix) முதன்மை நிதியியல் அலுவலர்

(x) முதன்மை உள்ளகக் கணக்காய்வாளர்

(xi) முதன்மை தகவல் அலுவலர்

(xii) முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர்

(xiii) இணங்குவிப்பு அலுவர்

(xiv) திறைசேரி தலைவர்

(xv) சட்டத் துறைத் தலைவர்

(xvi) தகவல் தொழில்நுட்பவியல் தலைவர்

(xvii) சபைச் செயலாளர்

(xviii) இலங்கையில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கான கம்பனி ஆளுகைக்கான 2017ஆம் ஆண்டின் வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை 11இன் பிரிவு 3(1)(i)(ஊ) இன் வரைவிலக்கணத்தின் கீழ்வரும் வேறு எவரேனும் அலுவலர்கள்

(xix) மேலே குறிப்பிடப்பட்ட பதவி நிலை/ பதவிகளுக்குப் புறம்பாக, உரிமம்பெற்ற வங்கிகளின் நிறுவன ரீதியான கட்டமைப்பில் முதன்மை நிறைவேற்று அலுவலரின் மட்டத்திற்கு உடனடுத்து இரண்டு அடுக்குகள் கீழேயுள்ள அலுவலர்கள், பொருத்தம் மற்றும் தகுதியை மதிப்பிடும் நோக்கத்திற்காக நிறைவேற்றுப் பணிகளை ஆற்றுகின்ற முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் எனத் தீர்மானிக்கப்படுகின்றவர்கள்.

3. சமர்ப்பிக்கப்பட வேண்டிய தகவல்கள் மற்றும் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி

3.1 உரிமம்பெற்ற வங்கியொன்றில் முதன்மை நிறைவேற்று அலுவலராக அல்லது நிறைவேற்றுப் பணிகளை ஆற்றுகின்ற அலுவலராக நியமிக்கப்படுவதற்கு அல்லது நியமனம் செய்யப்படுவதற்கு முன்மொழியப்பட்டுள்ள ஆளொருவர், அத்தகைய ஆள் உரிமம் பெற்ற வங்கியில் குறித்துரைக்கப்பட்ட பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு முன்னதாக அட்டவணை I இல் தரப்பட்டுள்ளவாறான மூல சத்தியப்பிரமாணத்தினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

3.2 சத்தியப்பிரமாணமானது அதனைப் பூரணப்படுத்துவதற்குத் தரப்பட்டுள்ள இணைக்கப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கேற்ப பூரணப்படுத்தப்படல் வேண்டும்.

3.3 முறையே தலைவரும் முதன்மை நிறைவேற்று அலுவலரும் முதன்மை நிறைவேற்று அலுவலரினதும் நிறைவேற்றுப் பணிகளை ஆற்றுகின்ற அலுவலர்களினதும் சத்தியப்பிரமாணங்களை உறுதிப்படுத்தி அனுப்பி வைத்தல் வேண்டும்.

3.4 சத்தியக்கடதாசியானது இரகசியமான உறையில் இடப்பட்டு நியமனம் செய்ய எதிர்பார்க்கப்படும் திகதிக்கு 15 வேலைநாட்களுக்கு முன்னதாக வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

3.5 உரிமம்பெற்ற வங்கியொன்றின் முதன்மை நிறைவேற்று அலுவலர் அல்லது நிறைவேற்றுப் பணிகளை ஆற்றுகின்ற அலுவலர்கள் ஓய்வுபெறுகையில்/ இராஜினாமாச் செய்கையில்/ தொழில்நிலை முடிவுறுத்தப்படுகையில் அது பற்றி அத்தகைய ஓய்வுபெறுதல்/ இராஜினாமாச் செய்தல்/ முடிவுறுத்தல் இடம்பெற்ற மூன்று நாட்களுக்குள் காரணங்களுடன் உரிமம்பெற்ற வங்கிகள் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு அது பற்றி அறிவித்தல் வேண்டும்.

4. பொருத்தம் மற்றும் தகுதியை மதிப்பிடல்

4.1 வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர், வங்கித்தொழில் சட்டத்திலும் அதன் கீழ் விடுக்கப்பட்ட பணிப்புரைகளினதும் எடுத்துக்காட்டப்பட்ட பிரமாணங்களினதும் அடிப்படையில் முன்மொழியப்பட்ட ஆளின் பொருத்தத்தினையும் தகுதியினையும் மதிப்பிடுவார்.

4.2 வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 42(2)இன் ஏற்பாடுகளுக்குப் புறம்பாக, உரிமம்பெற்ற வங்கிகளுக்கான கம்பனி ஆளுகை தொடர்பில் 2007இன் 11ஆம் இலக்க மற்றும் 12ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளில் குறிப்பிடப்பட்ட பிரமாணங்களும் முதன்மை நிறைவேற்று அலுவலர் மற்றும் நிறைவேற்றுப் பணிகளை ஆற்றுகின்ற அலுவலர்களின் பொருத்தம் மற்றும் தகுதியை மதிப்பிடுவதற்கு பிரயோகிக்கப்படலாம்.

4.3 வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் சத்தியப்பிரமாணம் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களை மதிப்பீடு செய்து உத்தேச நியமனத்திற்கு ஒப்புதலை வழங்கலாம் அல்லது நிராகரிக்கலாம்.

4.4 முதன்மை நிறைவேற்று அலுவலர்/ நிறைவேற்றுப் பணிகளை ஆற்றுகின்ற அலுவலர்கள், பொருத்தம் மற்றும் தகுதிகளை மதிப்பிடுவது தொடர்பில் தாக்கமொன்றினைக் கொண்டிருக்கக்கூடிய, சத்தியப்பிரமாணத்தில் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் தொடர்பில் பின்னர் நிகழக்கூடிய அனைத்துச் சம்பவங்களையும் சாத்தியமானளவிற்கு விரைவாக உரிமம்பெற்ற வங்கிகளுக்கு அறிவிப்பதற்கு பொறுப்பேற்றுக் கொள்ளல் வேண்டும்.

4.5 மேலேயுள்ள பணிப்புரை 4.4இன் கீழ் உரிமம்பெற்ற வங்கியின் கம்பனிச் செயலாளர் முதன்மை நிறைவேற்று அலுவலர்/ முதன்மைப் பணிகளை ஆற்றுகின்ற அலுவலர்கள் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் இடம்பெறும் அனைத்துச் சம்பவங்களையும் அத்தகைய சம்பவங்கள் அறிய வந்த 15 வேலைநாட்களுக்குள் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு அறியத்தருதல் வேண்டும்.

4.6 முதன்மை நிறைவேற்று அலுவலரொருவராக/ நிறைவேற்றுப் பணிகளை ஆற்றுகின்ற அலுவலரொருவராக வங்கியொன்றில் முதல் நியமனத்தினைப் பெறுகின்ற நேரத்தில் அவ்வலுவலர் நியமனத்தின் திகதியிலிருந்து 5 ஆண்டுகள் முற்போந்த காலப்பகுதியில் (முன்னைய தொழில்தருநர் இலங்கையிலுள்ள உரிமம்பெற்ற வங்கியொன்றாக இல்லாதவிடத்து) முன்னைய தொழில்தருநர்/ தொழில்தருநர்களிடமிருந்து, குறிப்பிட்ட நிறுவனத்தில் அவர்/ அவளிடம் ஒப்படைத்த கடமைகளின் செயலாற்றம் தொடர்பாகவும் செயலாற்ற மட்டங்கள் தொடர்பாகவும் கடிதமொன்றினை வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

4.7 இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட வங்கிகளின் கிளைகளுக்கு நியமிக்கப்படுகின்ற வெளிநாட்டு முதன்மை நிறைவேற்று அலுவலர்/ அல்லது நிறைவேற்றுப் பணிகளை ஆற்றுகின்ற வெளிநாட்டவரைப் பொறுத்தவரையில் அத்தகைய அலுவலர்களின் பொருத்தமான தன்மை தொடர்பில் காணப்படும் ஏதேனும் மேற்பார்வைக் கரிசனைகள் தொடர்பில் உள்நாட்டு ஒழுங்குமுறைப்படுத்துநரிடமிருந்து பெறப்பட்ட கடிதத்தினை வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு நேரடியாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

4.8 தொடர்பான உரிமம்பெற்ற வங்கியின் பணிப்பாளர் சபையினால் (வெளிநாட்டு வங்கிகளைப் பொறுத்தவரையில், பணிப்பாளர் சபை என்பது இலங்கையர்களின் தொழிற்பாடுகளை மேற்பார்வை செய்கின்ற அலுவலகத்தின் தலைவர் எனப் பொருள்கோடப்படுதல் வேண்டும்) ஒப்புதலளிக்கப்பட்ட முதன்மை நிறைவேற்றுப் பணிப்பாளருக்கான பதில் கடமைக்கான ஏற்பாடுகள் ஒரு மாத காலத்தினை விஞ்சும் போது தொடர்பான வங்கி, அத்தகைய ஏற்பாடுகள் தொடங்குவதற்கு எதிர்பார்க்கப்படும் திகதிக்கு 15 வேலைநாட்கள் முன்னதாக, உத்தேச ஆளின் சரியாகப் பூரணப்படுத்தப்பட்ட சத்தியப்பிரமாணத்துடன் சேர்த்து வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

4.9 உரிமம்பெற்ற வங்கியொன்று, நிறைவேற்றுப் பணிகளை ஆற்றுகின்ற அலுவலர் தவிர, முதன்மை நிறைவேற்று அலுவலரின் சார்பில் செயற்படுவதற்கு எந்தவொரு அலுவலரையும் நியமிக்கக்கூடாது.

5. மீள்மதிப்பீடுகள்

5.1 முதன்மை நிறைவேற்று அலுவலர் தொடர்பான உரிமம்பெற்ற வங்கியின் ஆண்டு பொதுக்கூட்டத்திற்கு அல்லது ஒவ்வொரு ஆண்டும் மாச்சு 31 அளவில் இதில் எது முன்னர் நிகழ்கிறதோ அதற்கு 15 வேலைநாட்கள் முன்னதாக சத்தியப்பிரமாணத்தினை ஆண்டுதோறும் சமர்ப்பித்தல் வேண்டும்.

5.2 நிறைவேற்றுப் பணிகளை ஆற்றுகின்ற அலுவலர்கள் பதவி உயர்வுகளின் போது, ஒப்பந்தங்களைப் புதுப்பிக்கின்ற நேரத்தில் மற்றும் விசேட அறிவும் அத்துடன்/ அல்லது தேர்ச்சியும் தேவைப்படுகின்ற பதவியொன்றிற்கு அவர் செல்லும் போது அவர்கள் மீள்மதிப்பீடு செய்யப்படுவர். உரிமம்பெற்ற வங்கி சத்தியப்பிரமாணத்தையும் அத்துடன் சேர்த்து அத்தகைய தெரிவிற்கான காரணங்களையும் அதற்கான அடிப்படையினையும் சேர்த்து அத்தகைய மாற்றம் இடம்பெற்ற 15 வேலைநாட்களுக்குள் சமர்ப்பித்தல் வேண்டும்.

5.3 முதன்மை நிறைவேற்று அலுவலர் மற்றும் நிறைவேற்றுப் பணிகளை ஆற்றுகின்ற அலுவலர்கள் தொடர்பில் அத்தகைய எவரேனும் அலுவலர் தொடர்பில் மேற்பார்வைக் கரிசனைகள் தோன்றுமிடத்து வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படக்கூடிய எந்தவொரு நேரத்திலும் அவர்களின் பொருத்தம் மற்றும் தகுதி பற்றி ஆராயப்படலாம்

6. சபைக்கு/ வங்கிக்கு ஆலோசகர்களாக/ மதியுரையாளர்களாகப் பணியாற்றுகின்ற அலுவலர்கள்

6.1 உரிமம்பெற்ற வங்கிகளின் பணிப்பாளர் சபை, சபைக்கான/ வங்கிக்கான ஆலோசகர்கள்/ மதியுரையாளர்கள் பொருத்தமும் தகுதியுமுடைய ஆட்கள் என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டுமென்பதுடன் சபைக்கு/ வங்கிக்கு ஆலோசகர்கள்/ மதியுரையாளர்களின் பணியினைப் பெற்றுக்கொள்வதற்காக பொருத்தமான கொள்கைகளையும் நடவடிக்கைமுறைகளையும் உருவாக்கிக் கொள்ளுதலும் வேண்டும்.

6.2 உரிமம்பெற்ற வங்கிகள் வங்கித்தொழில் சட்டத்தின் 42(2)ஆம் பிரிவின்படியும் கம்பனி ஆளுகை தொடர்பில் 2007ஆம் ஆண்டின் 11ஆம் மற்றும் 12ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரையின் படியும் காட்டப்பட்டுள்ள பிரமாணங்களை அடிப்படையாகக் கொண்டு ஆலோசகர்கள்/ மதியுரையாளர்களின் பொருத்தம் மற்றும் தகுதி பற்றிய மதிப்பீடுகளை மேற்கொள்ளல் வேண்டும்.

6.3 உரிமம்பெற்ற வங்கி, சபை/ வங்கிக்கான ஆலோசகர்/ மதியுரையாளரிடமிருந்து இங்கே இணைக்கப்பட்டுள்ள சத்தியப்பிரமாணத்தினை அடிப்படையாகக் கொண்டு சரியான முறையில் பூர்த்தி செய்யப்பட்ட சத்தியப்பிரமாணத்தினைப் பெற்றுக்கொண்டு வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் கேட்கும் பொழுது அதனைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

6.4 சபைக்கு/ வங்கிக்கான ஆலோசகர்கள்/ மதியுரையாளராகவுள்ளவர்கள் குறித்துரைக்கப்பட்ட பணியில் ஈடுபட்டவர்கள் ஆலோசனை வழங்குகின்ற/ நிறுவனமொன்றில் பங்குடமையாளராக அல்லது ஊழியராக இருக்குமிடத்து அவர் உரிமம்பெற்ற வங்கியில் நிறைவேற்றுத் தொழிற்பாடுகளை மேற்கொள்ள அனுமதிக்கக்கூடாது.

6.5 ஆலோசகர்/ மதியுரையாளராக தொழில்புரிகின்ற தனிப்பட்டவர்களைப் பொறுத்தவரையில், அவ்வாறு ஈடுபட்டிருக்கும் காலம் ஏதேனும் 3 ஆண்டுக் காலப்பகுதியில் மொத்தமாக 12 மாதங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

7. விளக்கம்

7.1 இலங்கையிலுள்ள உரிமம்பெற்ற வங்கிகளுக்கான கம்பனி ஆளுகை தொடர்பில் 2007ஆம் ஆண்டின் 11ஆம் மற்றும் 12ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரையிலுள்ள முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் என்பது இத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிறைவேற்றுப் பணிகளை ஆற்றுகின்ற அலுவலர்கள் எனப் பொருள்படுதல் வேண்டும்.

8. நடைமுறைக்குவரும் திகதி

8.1 இத்தீர்மானமானது 2020 சனவரி 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வருதலாதல் வேண்டும்.

9. தீர்மானங்களையும் சுற்றறிக்கைகளையும் இரத்துச்செய்தல்

9.1 பின்வரும் வங்கித்தொழில் சட்டத் தீர்மானங்களும் சுற்றறிக்கைகளும் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

(i) உரிமம்பெற்ற வங்கிகளில் நிறைவேற்றுப் பணிகளை ஆற்றுகின்ற அலுவலர்களின் பொருத்தம் மற்றும் தகுதியை மதிப்பிடுவது தொடர்பாக 2010 நவெம்பர் 24ஆம் திகதியிடப்பட்ட 2010ஆம் ஆண்டின் 03 மற்றும் 04ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத் தீர்மானம்.

(ii) உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்வு வாய்ந்த வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களின் பொருத்தம் மற்றும் தகுதியை மதிப்பிடுவது தொடர்பான 2011 ஓகத்து 08ஆம் திகதியிடப்பட்ட இல. 02/17/600/0017/001 கொண்ட சுற்றறிக்கை.

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி

**நாணயச் சபையின் தலைவரும்**

**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**இத்தீர்மானத்தின் இணைப்பு I இனை https://www.cbsl.gov.lk/en/laws/directions-circulars-guidelines-for-banks என்ற வெப்தளத்தில் பார்வையிடலாம்.**

**வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2019இன் 09ஆம் இலக்கம்** 2019 திசெம்பர் 19

## இலங்கையிலுள்ள உரிமம்பெற்ற வங்கிகளுக்கான கம்பனி ஆளுகை மீதான 2007ஆம் ஆண்டின் 11ஆம் மற்றும் 12ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளுக்கான திருத்தம்

இலங்கையிலுள்ள உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான கம்பனி ஆளுகை மீதான 2007 திசெம்பர் 26ஆம் திகதியிடப்பட்ட 2007ஆம் ஆண்டின் 11ஆம் மற்றும் 12ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் பின்வரும் புதிய பணிப்புரையொன்றினை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது. உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளும் இதனகத்துப் பின்னர் உரிமம் பெற்ற வங்கிகள் எனக் குறிப்பிடப்படுகின்றன.

3(3)iii இலங்கையில் தொழிற்படுகின்ற உரிமம்பெற்ற வங்கியொன்றின் பணிப்பாளரொருவர் அல்லது முதன்மை நிறைவேற்று அலுவலரொருவர், இலங்கையிலுள்ள உரிமம்பெற்ற வங்கியொன்றில் அவரின்/ அவளின் பதவிக்காலம் முடிவடைந்த திகதியிலிருந்து 6 மாத காலப்பகுதி காலாவதியாவதற்கு முன்னதாக இலங்கையில் தொழிற்படுகின்ற மற்றொரு உரிமம்பெற்ற வங்கியில் பணிப்பாளராகவோ அல்லது முதன்மை நிறைவேற்று அலுவலராகவோ நியமிக்கப்படக்கூடாது. மீளமைத்தல் நடவடிக்கைகள் அவசியமாகக் காணப்படும் உரிமம்பெற்ற வங்கிகளின் சபையினை மீளவுருவாக்கும் பொழுது ஓய்வுபெறுகின்ற வங்கியாளர்களின் நிபுணத்துவம் தேவைப்படுமிடத்து அத்தகைய விதிவிலக்கான சந்தர்ப்பத்தில் காணப்படக்கூடிய ஏதேனும் வேறுபாடுகள் நாணயச் சபையின் முன்னொப்புதலுக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும். இது தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகள் பணிப்பாளர்களை அல்லது முதன்மை நிறைவேற்று அலுவலர்களை நியமிக்கும் பொழுது பொறுதிக் காலத் தேவைப்பாடுகள் பின்பற்றப்படுவதனை உறுதிப்படுத்தல் வேண்டும். இப்பணிப்புரைகளை மீறுகின்ற விதத்தில் நியமனம் செய்யும் அதிகாரியினால் உரிமம்பெற்ற வங்கிக்கு பணிப்பாளரொருவர் நியமிக்கப்படுவாராயின், உரிமம் பெற்ற வங்கியானது அவ்வாறு நியமிக்கப்பட்டவர் ஏதேனும் அதிகாரத்தினைப் பயன்படுத்துவதிலிருந்தும் அல்லது ஏதேனும் சிறப்புரிமைகளை அல்லது நன்மைகளை அனுபவிப்பதிலிருந்தும் தடுப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி

**நாணயச் சபையின் தலைவரும்**

**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை 2019இன் 10ஆம் இலக்கம்** 2019 திசெம்பர் 20

## உள்நாட்டு முறையியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளைக் கையாள்வதற்கான கட்டமைப்பு

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவுகள் 19(7)(அ) மற்றும் 76ஜி(7) பிரிவுகளினால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் நியதிகளில், நாணயச் சபையானது வங்கித்தொழில் மேற்பார்வை மீதான பாசல் குழுவினால் விடுக்கப்பட்ட வழிகாட்டல் தொடர்பில் உள்நாட்டு முறையியல் ரீதியில் முக்கியத்துவம் வங்கிகள் மீதான மேலதிக மூலதனத் தேவைப்பாடொன்றாக உள்நாட்டு முறையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளைக் கையாள்வதற்கான மற்றும் உயர்ந்த இழப்பினை ஈர்த்துக் கொள்ளும் தேவைப்பாடுகளுக்கான கட்டமைப்பொன்றினை நிர்ணயித்திருக்கிறது.

இக்கட்டமைப்பானது அளவு, உள்ளக தொடர்புத்தன்மை பதிலீடுகளிலில்லாததன்மை மற்றும் சிக்கலானதன்மை போன்றவற்றின் காரணமாக எவ்வங்கியின் முறிவு நிதியியல் முறைமையில் பாரிய தாக்கத்தினைக் கொண்டுள்ளதோ அவ்வங்கியை அடையாளங்காணவும் முயற்சிப்பதுடன் அத்தகைய வங்கிகள் உயர் இழப்பினை ஈர்த்துக் கொள்ளும் முறையினைப் பேணுமாறும் கேட்டுக்கொள்கிறது.

1. அதிகாரமளிப்பு

1.1 நாணய விதிச் சட்டத்தின் 102ஆவது பிரிவின் நியதிகளில், நாணயச் சபையானது, காலத்திற்குக் காலம் கட்டளையொன்றின் மூலம் வர்த்தக வங்கிகள் அவற்றின் சொத்துக்களது மொத்தளவில் அல்லது அத்தகைய சொத்துக்களில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் வகையில் தங்கியிருக்க வேண்டிய குறைந்தபட்ச மூலதன விகிதத்தினைக் கட்டளையொன்றின் மூலம் காலத்திற்குக் காலம் விபரிக்கிறது.

1.2 வங்கித்தொழில் முறைமையின் ஆற்றல்வாய்ந்த தன்மையினை உறுதிப்படுத்தும் பொருட்டு, வங்கித்தொழில் சட்டத்தின் 46(1) மற்றும் 76ஜே(1) ஆகிய பிரிவுகளின் நியதிகளில், நாணயச் சபையானது, அத்தகைய வங்கியின் அல்லது வங்கிகளின் வியாபாரத்தின் எந்தவொரு செயற்பாடும் எவ்வாறு நடத்தப்பட வேண்டுமென்பது பற்றி பணிப்புரைகளை விடுப்பதற்கான அதிகாரங்களைக் கொண்டிருக்கிறது.

2. பிரயோகத்தின் செயற்பரப்பு

2.1 இப்பணிப்புரைகள் பின்வரும் ஒவ்வொரு உரிமம்பெற்ற வங்கிக்கும் ஏற்புடைத்தானதாக இருத்தல் வேண்டும்.

(i) தனியான அல்லது இணைக்கப்பட்ட அடிப்படையில் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டிருப்பவை; அத்துடன்

(ii) தனியானதொரு அடிப்படையில் இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட அல்லது நிறுவப்பட்ட வங்கியொன்றின் கிளைகள்

3. உள்நாட்டு முறையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகள் மீதான மேலதிக மூலதனக் கட்டணம்

3.1 உள்நாட்டு முறையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகள் எல்லா நேரங்களிலும் கீழே 3.2 இல் விபரிக்கப்பட்டுள்ளவாறு குறைந்தபட்ச மேலதிக கட்டணமொன்றினைப் பேணுதல் வேண்டும்.

3.2 உள்நாட்டு முறையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகள் மீதான குறைந்தபட்ச மேலதிக மூலதனக் கட்டணம் கீழே அட்டவணை 1இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 01 - உள்நாட்டு முறையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகள் மீதான குறைந்தபட்ச மேலதிக மூலதன விதிப்பு**

| கூடை | உயர் இழப்புக்களை ஈர்த்துக்கொள்ளும் தேவைப்பாடு (இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களின் சதவீதமாக பொதுவான பங்குரிமை மூலதன அடுக்கு 1) |
|---|---|
| 3 | 2.0 |
| 2 | 1.5 |
| 1 | 1.0 |

3.3 பாசல் III இன் கீழ் மேலதிக மூலதனத் தேவைப்பாடுகள் பற்றி 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரையில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு பொதுவான பங்குரிமை மூலதன அடுக்கு 1 உடன் உள்நாட்டு முறையியல் ரீதியான முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகள் மீதான மேலதிக மூலதன விதிப்புக்களின் மூலம் பூர்த்திசெய்யப்படுதல் வேண்டும்.

4. கட்டமைப்பு

4.1 உள்நாட்டு முறையியல் ரீதியில முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளைக் கையாள்வதற்கான கட்டமைப்பு.

5. வெளிப்படுத்துகைத் தேவைப்பாடுகள்

5.1 ஒவ்வொரு நிதியியல் ஆண்டும் முடிவடைந்ததும் ரூ.400 பில்லியனை விஞ்சிய முடுக்கி விகித வெளிப்படுத்துகைகளைக் கொண்ட உரிமம்பெற்ற வங்கிகள் அட்டவணை 1 இலுள்ள வெளிப்படுத்துகைத் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**இப்பணிப்புரையின் இணைப்பு I இனை https://www.cbsl.gov.lk/en/laws/directions-circulars-guidelines-for-banks என்ற வெப்தளத்தில் பார்வையிடலாம்.**

**வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை 2019இன் 11ஆம் இலக்கம்** 2019 திசெம்பர் 20

**பாசல் III இன்கீழ் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளுக்கான மூலதன தேவைப்பாடுகள் மீதான பணிப்புரைகளுக்கான திருத்தங்கள்**

பாசல் III இன் கீழ், இதனகத்துப்பின்னர் உரிமம்பெற்ற வங்கிகள் எனக் குறிப்பீடு செய்யப்படும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளுக்கான மூலதனத் தேவைப்பாடுகள் தொடர்பாக 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்கத்தினைக் கொண்ட வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளுக்கு பின்வரும் பணிப்புரைகளைப் பதிலீடுசெய்வதன் மூலம் திருத்தப்படுகின்றன.

3. குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகள்

3.1 ஒவ்வொரு உரிமம்பெற்ற வங்கியும், எல்லா நேரங்களிலும் கீழே அட்டவணை 1இல் விதந்துரைக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச மூலதன விகிதங்களைப் பேணவேண்டும் என்பதுடன் உரிமம்பெற்ற வங்கிகளுக்கான பாசல் III இன் கீழான மூலதனத் தேவைப்பாடுகள் தொடர்பான 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளுடன் இணைக்கப்பட்ட அட்டவணை 01 இற்கு இணங்கியொழுகுவதனையும் உறுதிப்படுத்திக் கொள்ளுதலும் வேண்டும்

**அட்டவணை 01 - உரிமம்பெற்ற வங்கிகளுக்கான மூலதனத் தேவைப்பாடுகள்**

| மூலதனக் கூறுகள் | பேணப்படவேண்டிய மூலதன் போதுமை விகிதம் |
|---|---|
| மூலதனப் பாதுகாப்பு தாங்கிருப்பு உட்பட பொதுவான பங்குரிமை மூலதனம் அடுக்கு 1 | 7.0% |
| மூலதனப் பாதுகாப்பு தாங்கிருப்பு உட்பட மொத்த அடுக்கு 1 | 8.5% |
| மூலதனப் பாதுகாப்பு தாங்கிருப்பு உட்பட மொத்த மூலதன விகிதம் | 12.5% |

3.2 உள்நாட்டு முறையியல் ரீதியல் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகள் எனத் தீர்மானிக்கப்பட்ட உரிமம்பெற்ற வங்கிகள், காலத்திற்குக் காலம் நாணயச் சபையினால் குறித்துரைக்கப்பட்டவாறு பொதுவான பங்குரிமை மூலதன அடுக்கு 1 படிவத்தில் கூடுதலான உயர் இழப்பு ஈர்ப்புத்தன்மைத் தேவைப்பாடுகளை பேணுதல் வேண்டும்.

**அட்டவணை 02 - உள்நாட்டு முறையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளுக்கான மூலதனத் தேவைப்பாடுகள்**

| மூலதனக் கூறுகள் | பேணப்படவேண்டிய மூலதன் போதுமை விகிதம் |
|---|---|
| மூலதனப் பாதுகாப்பு தாங்கிருப்பு உட்பட பொதுவான பங்குரிமை மூலதனம் அடுக்கு 1 | 7.0% + உயர் இழப்பு ஈர்ப்புத்தன்மை |
| மூலதனப் பாதுகாப்பு தாங்கிருப்பு உட்பட மொத்த அடுக்கு 1 | 8.5% + உயர் இழப்பு ஈர்ப்புத்தன்மை |
| மூலதனப் பாதுகாப்பு தாங்கிருப்பு உட்பட மொத்த மூலதன விகிதம் | 12.5% + உயர் இழப்பு ஈர்ப்புத்தன்மை |

3.3 உரிமம்பெற்ற வங்கிகளுக்கான பாசல் IIIஇன் கீழான மூலதனத் தேவைப்பாடுகள் மீதான 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் அட்டவணை 01இல் குறிப்பீடு செய்யப்பட்ட உள்நாட்டு முறையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகள் தொடர்பான பிரிவுகள் மேலேயுள்ள பணிப்புரை 3.2 உடன் இசைந்துசெல்லும் விதத்தில் திருத்தப்பட்டன.

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை 2019இன் 12ஆம் இலக்கம்** 2019 திசெம்பர் 20

## உள்நாட்டு முறையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகள்

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவுகள் 19(7)(அ) மற்றும் 76ஜி(7) என்பனவற்றினால் வழங்கப்பட்ட அதிகாரத்தின் நியதிகளில் நாணயச் சபையானது பின்வரும் உரிமம்பெற்ற வங்கிகளை முறையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளாகவும் உயர்ந்த இழப்பு ஈர்ப்புத்தன்மைத் தேவைப்பாடுகள் உடனடியாக ஏற்புடைத்தானவையாக இருக்கவேண்டும் எனவும் தீர்மானித்தது.

**அட்டவணை 01 - உள்நாட்டு முறையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளாகத் தீர்மானிக்கப்பட்ட உரிமம்பெற்ற வங்கிகள்**

| வாளி | உரிமம்பெற்ற வங்கிகள் | உயர் இழப்பு ஈர்ப்புத்தன்மைத் தேவைப்பாடுகள் (இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களின் சதவீதமாக பொதுவான பங்குரிமை மூலதன அடுக்கு 1) |
|---|---|---|
| 3 | - | 2.0 |
| 2 | இலங்கை வங்கி<br>இலங்கை வர்த்தக வங்கி பிஎல்சி | 1.5 |
| 1 | மக்கள் வங்கி<br>ஹட்டன் நஷனல் வங்கி பிஎல்சி | 1.0 |

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**தொடர்பு எண்: 12/02/004/0007/001** 2019 யூன் 25

**சுற்றறிக்கை எண்: 2019-01**

சேரல்: அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினதும் தலைமை நிர்வாக அதிகாரிகள்

கனம் ஐயா/ அம்மணி

**உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் வைப்புச் செய்யப்பட்ட நாணயத்தாள்களுக்கான பணிக்கட்டணத்தை அதிகரித்தல்**

"பாவனைக்குகந்த நாணயத்தாள்களின் செய்முறைக்கான பணிக்கட்டணம்" சம்பந்தமாக 2009.02.26ஆம் திகதி வெளியிடப்பட்ட சுற்றறிக்கை தொடர்பானது.

உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் வைப்புச்செய்யப்படும் பாவனைக்குகந்த நாணயத்தாள்களுக்கான தற்போதைய பணிக்கட்டணத்தை 2019 யூலை 01 முதல் அதிகரிக்க நாணயச்சபை ஒப்புதலளித்துள்ளது.

1. ரூ.500 மற்றும் அதற்கு மேற்பட்ட குறித்துரைக்கப்பட்ட பெறுமதியைக்கொண்ட 1,000 தாள்கள் கொண்ட கட்டு ஒவ்வொன்றிற்கும் ரூ.200 இலிருந்து ரூ.500
2. ரூ.500இற்குக் குறைந்த குறித்துரைக்கப்பட்ட பெறுமதியைக்கொண்ட 1,000 தாள்கள் கொண்ட கட்டு ஒவ்வொன்றிற்கும் ரூ.100 இலிருந்து ரூ.300.

இந்தப் பணிக்கட்டணமானது பாவனைக்குகந்த நாணயத்தாள்களாக வைப்புச் செய்யப்பட்ட நாணயத்தாள்களுக்கு மட்டுமே பொருந்துவதுடன் பாவனைக்குகந்த நாணயத்தாள்கள், பாவனைக்குதவாத நாணயத்தாள்கள், உருச்சிதைக்கப்பட்டவை மற்றும் சேதமாக்கப்பட்டவை என்ற வகைகளின் கீழ் நாணயத்தாள்களைப் பிரிக்கும்போது உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் நாணயத் திணைக்களத்தின் தரம் பிரிக்கும் நியமங்களைக் கடுமையாகப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

தங்கள் உண்மையுள்ள

**கண்காணிப்பாளர்/ நாணயத் திணைக்களம்**

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல. 35/03/016/007/002** 2019 பெப்புருவரி 14

சேரல்: அனைத்து பங்கேற்கும் நிறுவனங்கள்

**சந்தை தொழிற்பாடுகள் மீதான திரட்டிய தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்**

மேற்குறித்த விடயம் தொடர்பில் 2016 ஒத்தோபர் 26 ஆம் திகதியிடப்பட்ட 35/03/016/007/001 ஆம் இலக்க எமது சுற்றறிக்கையுடன் தொடர்புடையது. சொல்லப்பட்ட தொடர்புபட்ட அறிவுறுத்தல்களின் 17 (ஆ) மற்றும் 17 (ஈ) பிரிவுகள் 2019 பெப்புருவரி 14 அன்று நடைமுறைக்குவரும் வகையில் பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றது.

**17.0 சேதங்களினதும் செலுத்தத் தவறிய வட்டியினதும் மீளறவிடுதல்**

**17 (ஆ) முதிர்வுத் திகதியன்று பங்கேற்கும் நிறுவனமொன்று செலுத்தத் தவறுதல்**

முதிர்வுத் திகதியன்று (மீள்விற்பனைத் திகதி) லங்காசெகுயரின் தொழில்முடிவுக்கு முன்னர் மீள்விற்பனை பெறுமதியினைக் கொடுப்பனவு செய்வதற்கு அதன் தீர்ப்பனவுக் கணக்கில் போதிய நிதியங்களைப் பேணுவதற்குப் பங்கேற்கும் நிறுவனமொன்று தவறுகின்ற சந்தர்ப்பத்தில் பங்கேற்கும் நிறுவனமானது செலுத்தத் தவறுதல் வட்டிக்கொடுப்பனவுக்கு மேலதிகமாக தொடர்புடைய கொடுக்கல்வாங்கல்களின் வட்டிக்கூறினை நாளொன்றுக்கு பத்தில் ஒரு சதவீதத்திற்கு (0.1மு) சமமான வீதத்தில் மத்திய வங்கிக்கு சேதக்கொடுப்பனவுக்குப் பொறுப்புடையதாக இருத்தல்வேண்டும்.

**17 (இ) ஒரு கலண்டர் ஆண்டில் ஒன்றுக்கு மேற்பட்ட விலைக்குறிப்பீட்டினை/ வணிகமொன்றினை நிறைவேற்றத் தவறுதல் அல்லது செலுத்தத் தவறுதல்.**

கலண்டர் ஆண்டொன்றில் ஒரு தடவைக்கு மேல் விலைக்குறிப்பீடொன்றினை வணிகமொன்றினை/ நிறைவேற்றுவதற்கு பங்கேற்கும் நிதி நிறுவனம் தவறுகின்ற சந்தர்ப்பத்தில், இலங்கை மத்திய வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படும் காலப்பகுதியொன்றுக்காக அத்தகைய கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுவதிலிருந்து பங்கேற்கின்ற நிறுவனத்தினை இடைநிறுத்தலாம். கலண்டர் ஆண்டொன்றில் பங்கேற்கின்ற நிறுவனம் மூன்று தடவைகளுக்கு மேல் செலுத்த தவறுகின்ற நிகழ்வில் அத்தகைய செலுத்தத் தவறுகின்ற வட்டிவீதமானது நாளொன்றுக்கு ஒரு சதவீதத்தின் பத்தில் இரண்டு சதவீதமாக (0.2மு) ஆக அதிகரிக்கப்படல் வேண்டும் அல்லது இலங்கை மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படும் காலப்பகுதியொன்றுக்காக கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுவதிலிருந்து பங்கேற்கின்ற நிதி நிறுவனத்தை இலங்கை மத்திய வங்கி இடைநிறுத்தலாம்.

**பணிப்பாளர்/ உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம்**

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை**

**அதிவிசேடமானது**

2110/34 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 14 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி I : தொகுதி (I) - பொது

**இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்**

1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க, நாணய விதிச் சட்டத்தின் (அத்தியாயம் 422) 10(இ)ஆம் பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

முனைவர். இந்திரஜித் குமாரசுவாமி
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்.**

கொழும்பு
2019, பெப்புருவரி 14.

## பணத் தரகுத் தொழில் ஒழுங்குவிதிகள்

### 2018ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க, பணத்தரகுத் தொழில் ஒழுங்குவிதிகளுக்கான திருத்தம்

1. எடுத்துக்காட்டல். 1.1 இவ்வொழுங்குவிதிகள் 2019ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, பணத்தரகுத் தொழில் ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. முதன்மை ஒழுங்குவிதிக்கான திருத்தம். 2.1 2018 மாச்சு 05ஆம் திகதியிடப்பட்ட 2061/7ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2018ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பணத்தரகுத் தொழில் ஒழுங்குவிதிகள் பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றது.

**1.** 12(ஆ) மற்றும் 12(ஊ)ஆம் ஒழுங்குவிதிகளை நீக்கி அதற்குப்பதிலாக பின்வரும் புதிய ஒழுங்குவிதிகளை பதிலீடு செய்தல்.

*12(ஆ)* ஒவ்வொரு அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுத் தொழில் கம்பனியும் மேலே 12(அ)இல் குறிப்பிடப்பட்டவாறு தொடர்பான அலுவலர்களிடமிருந்தும் முக்கிய பங்குடமையாளர்களிடமிருந்தும் அட்டவணை *I, II* மற்றும் *III*இல் உள்ளவாறான சத்தியக்கடதாசிகளையும் பிரகடனங்களையும் பெற்று பொருத்தம் மற்றும் தகுதியை மதிப்பிடுவதற்கு வசதியளிக்கும் விதத்தில் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களப் பணிப்பாளருக்கு ஒவ்வொரு ஆண்டும் மாச்சு 31ஆம் திகதிக்கு முன்னர் ஆண்டுதோறும் சமர்ப்பித்தல் வேண்டும். பராயமடையாதோர் (18 வயதைவிடக் குறைந்த) ஒருவராக கருதப்படுகின்ற முக்கிய பங்குடமையாளரொருவர் பொருத்தம் மற்றும் தகுதி மதிப்பீட்டினைப் பெற்றுக்கொள்ளத் தேவையில்லை.

*12(ஊ)* உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களப் பணிப்பாளர் 13ஆம் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட விடயங்கள் பற்றி கவனத்திற் கொண்டு அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுத் தொழில் கம்பனியின் முதன்மை நிறைவேற்று அலுவலர், பணிப்பாளர், முக்கிய முகாமைத்துவ ஆள் அல்லது முக்கிய பங்குடமையாளர் ஆகிய ஆட்கள் தொடர்பிலான உத்தேச நியமனங்களுக்கு (அல்லது அவர்களைப் பதவியில் தொடர்ந்து நீடித்தல் தொடர்பில்) ஒப்புதலளிக்கலாம் அல்லது நிராகரிக்கலாம் என்பதுடன், தேவையான ஆவணங்கள் பெறப்பட்டு அறுபது நாட்களினுள் அத்தகைய ஒப்புதல்கள் அல்லது நிராகரிப்புப் பற்றியும் அதற்கான காரணங்கள் பற்றியும் அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுக் கம்பனிக்கு அறிவிக்கப்படும்.

**2.** 13(உ) மற்றும் 13(ஊ)ஆம் ஒழுங்குவிதிகளை நீக்கி அதற்குப்பதிலாக பின்வரும் புதிய ஒழுங்குவிதிகளைப் பதிலீடு செய்தல்.

13 ஆளொருவர் பின்வருமாறிருப்பின் அத்தகைய ஆள் அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுக் கம்பனியொன்றின் பணிப்பாளராகவோ, முதன்மை நிறைவேற்று அலுவலராகவோ, முதன்மை முகாமைத்துவ ஆளாகவோ அல்லது முக்கிய பங்குடமையாளராகவோ தேர்ந்தெடுப்பதற்கு அத்துடன்/அல்லது நியமிக்கப்படுவதற்கு, அல்லது அத்தகைய பதவியை வகிப்பதற்குத் தகுதியற்றவராதல் வேண்டும்:

*13(உ)* அத்தகைய ஆள் இலங்கையில் அல்லது வெளிநாட்டிலுள்ள ஏதேனும் ஒழுங்குபடுத்தும் அதிகார சபையினால், மேற்பார்வை செய்யும் அதிகார சபையினால் உயர் தொழில்சார் கழகத்தினால், விசாரணை ஆணைக்குழுவினால், நியாய சபையினால் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு நிறுவனத்தினால் மோசடி, ஏமாற்றுகை, நேர்மையீனம் அல்லது வேறு ஒத்த குற்றவியல் செயல் தொடர்பில் குற்றச்சாட்டு அறிவித்தலொன்று பகரப்பட்டதன் விளைவாக ஏதேனும் புலனாய்விற்கு அல்லது விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டிருக்குமிடத்து.

*13(ஊ)* அத்தகைய ஆள் மோசடி, ஏமாற்றுகை, நேர்மையீனம் அல்லது ஏதேனும் வேறு முறையற்ற நடத்தையினை புரிந்துள்ளார் அல்லது புரிதலுடன் தொடர்புபட்டுள்ளார் என்பதற்கு இலங்கையில் அல்லது வெளிநாட்டிலுள்ள ஏதேனும் ஒழுங்குபடுத்தும், மேற்பார்வை செய்யும் அதிகார சபையினால், உயர் தொழில்சார் கழகத்தினால், விசாரணை ஆணைக்குழுவினால், நியாய சபையினால் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு நிறுவனத்தினால் ஏதேனும் கண்டறியப்பட்டவை இருக்குமிடத்து.

3. ஒழுங்குவிதி 14ஐ, ஒழுங்குவிதி 14(அ)ஆக மீளப்பெயரிட்டு பின்வரும் புதிய ஒழுங்குவிதியினை 14(ஆ)ஆக உள்ளடக்குதல்.

*14ஆ* அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுத் தொழில் கம்பனியின் பணிப்பாளர்கள் அல்லது முதன்மை அலுவலர்கள் உரிமம்பெற்ற வர்த்தக வங்கியுடன் அத்துடன்/ அல்லது முதனிலை வணிகருடன் பங்குரிமை பங்கேற்பினை கொண்டிருக்க அல்லது கட்டுப்பாட்டினைக் கொண்டிருத்தலாகாது.

4. 16ஆம் ஒழுங்குவிதியின் கீழ் 16(எ)ஆம் ஒழுங்குவிதியினை உட்சேர்த்தல்

16. ஒழுங்குவிதியில் (15)இல் குறிப்பிடப்பட்ட உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை பின்வருவனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்:

*16(எ)* ஒலிப்பதிவுக் கருவி மற்றும் வெளிவாரித் தரப்பினர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளும் வேறு சேவைகளுக்கான பராமரித்தல் உடன்படிக்கை.

5. 18(ஊ)ஆம் ஒழுங்குவிதியினை நீக்கி அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய ஒழுங்குவிதியினை பதிலீடு செய்தல்.

*18(ஊ)* அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுத் தொழில் கம்பனி செயலாற்ற அறிக்கையினை மாதாந்த அடிப்படையில் இதற்கான "அட்டவணை IV"இல் இணைக்கப்பட்டுள்ள குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் அடுத்துவரும் மாதத்தின் இரு வாரங்களுக்குப் பிந்தாமல் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் பணிப்பாளருக்கு, மத்திய வங்கியினால் அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுத் தொழில் கம்பனிகளுக்கு வழங்கப்பட்டுள்ள இணையத்தள இடைமுகமான பின்நெட் முறைமை ஊடாக அனுப்புதல் வேண்டும். அனைத்து மாதாந்த நிதியியல் கூற்றுகள் (காசுப்பாய்ச்சல் கூற்று அனைத்தையும் உள்ளடக்குகின்ற வருமானக் கூற்று மற்றும் நிதி நிலைமைக் கூற்று) மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுகள் தொடர்புடைய காலப்பகுதியில் தொடர்ந்துவருகின்ற முறையே ஒரு மாதம் மற்றும் ஆறு மாதங்களுக்கு முன்னர் உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களப் பணிப்பாளருக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

6. 20(அ) ஒழுங்குவிதியினை நீக்கி அதற்குப் பதிலாக பின்வரும் புதிய ஒழுங்குவிதியினைப் பதிலீடு செய்தல்.

ஏடுகளைப் பரீட்சித்தல் மற்றும் தகவல்களை வழங்குதல்.

*20(அ)* எந்தவொரு அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுத் தொழில் கம்பனியினதும் கணக்கேடுகளையும் ஏனைய பதிவேடுகள்/ நடவடிக்கைகளையும் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் பணிப்பாளர், எந்தவொரு நேரத்திலும் பரீட்சிக்கலாம் அல்லது அவரின் திணைக்களத்திலுள்ள எவரேனும் அலுவலர்களுக்கு அவற்றைப் பரீட்சிக்க அனுமதியளிக்கலாம். அத்தகைய பரீட்சிப்புக்களுக்கு வசதியளிக்கும் பொருட்டு எல்லா நேரங்களிலும் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் பணிப்பாளரினால் அல்லது உள்நாட்டு தொழிற்பாடுகள் பணிப்பாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய அலுவலரினால் கேட்டுக் கொள்ளப்படக்கூடியவாறான எவையேனும் தகவல்களை அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுத் தொழில் கம்பனியொன்று வழங்குதல் வேண்டும். உள்நாட்டு தொழிற்பாடுகள் பணிப்பாளரினால் கோரப்படும் பணமாற்றுத் தொழில் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய எவையேனும் தகவல்களை அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுத் தொழில் கம்பனியொன்று குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் ஏதேனும் தாமதமின்றி வழங்குதல் வேண்டும். அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகர்கள் மூலமான இணங்குவிப்பினை உறுதிசெய்யும் நோக்குடன் இவ்வொழுங்குவிதிகளுடன் சேர்த்து உள்நாட்டுத் தொழிற்பாடுகள் பணிப்பாளர் காலத்திற்குக் காலம் பணிப்புரைகளை, சுற்றறிக்கைகளை, வழிகாட்டல்களை மற்றும் நடத்தைக் கோவைகளை வழங்கலாம்.

3. நடைமுறைக்கு வரும் திகதி.

3.1 இத்திருத்தமானது, 2019 பெப்புருவரி 14ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இல: 35/01/005/0007/14** 2019 பெப்புருவரி 22

**அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்**

**ஒதுக்குத் தேவைப்பாடுகள்**

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக நாணயவிதிச் சட்டத்தின் (இலங்கை சட்டவாக்க அமுலாக்கங்களின் 422ஆம் அத்தியாயம்) 10(இ), 93, 94, 96 மற்றும் 97ஆம் பிரிவுகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் ஆக்கப்பட்டு 2019 பெப்புருவரி 22ஆம் திகதிய 2111/50ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதி "ஈ" மூலம் திருத்தப்பட்டவாறான அறிவித்தலின் மீது தங்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

2. குறிப்பிட்ட அறிவித்தலுக்கிணங்க உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் அவற்றின் இலங்கை ரூபாவில் மாற்றப்பட்ட வைப்புப் பொறுப்புக்களுக்கெதிராக, அத்தகைய வைப்புப் பொறுப்புக்களின் மொத்தத்தின் ஐந்து சதவீதத்திற்கு (5.00 சதவீதம்) சமமான தொகையினை ஒதுக்குகளாகப் பேண வேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

3. 2018 நவெம்பர் 14ஆம் திகதியிடப்பட்ட 35/01/005/007/13ஆம் இலக்க தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் அட்டவணை அ இணைக்கப்பட்டுள்ள "அட்டவணை அ" மூலம் பதிலீடு செய்யப்படுகின்றது.

4. மேற்குறிப்பிட்ட திருத்தம் 2019 மாச்சு 01ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும். 2013 ஏப்பிறல் 22ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 35/01/005/007/06 மற்றும் 35/01/005/007/07 கொண்ட எமது தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் உள்ளடக்கப்பட்ட ஏனைய அனைத்து அறிவுறுத்தல்களும் தொடர்ந்தும் ஏற்புடையதானவாக இருக்கும்.

**பணிப்பாளர்/ உள்நாட்டுத் தொழிற்பாடுகள்**

**அட்டவணை அ**

அறிக்கைப் படிவம்

**நாளாந்த சராசரி வைப்புப் பொறுப்புக்கள் அறிக்கை**

**வங்கியின் பெயர் ..............................................................................................................................................**

(..............................................) தொடக்கம் (............................................) **வரையான காலத்திற்கானது.**

திகதி திகதி

சேரல் : பணிப்பாளர்
உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
கொழும்பு 01.

கீழே அறிக்கையிடப்பட்ட வைப்புப் பொறுப்புக்களின் சராசரித் தொகைகள் மேலே குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியின் ஒவ்வொரு வேலை நாள் முடிவிலும் வங்கியின் ஏடுகள் மூலம் காட்டப்பட்ட வைப்பு மீதிகளை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

| (i)<br>கேள்வி வைப்புக்கள் | (ii)<br>தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்கள் | (iii)<br>நாணயக் கடிதங்களுக்கெதிரான எல்லைகள்/ ஏற்றுகொள்ளலுக்கெதிரான ஆவணங்கள் | (iv)<br>அனைத்து ஏனைய வைப்புப் பொறுப்புக்கள்[1] |
|---|---|---|---|
| | | | |

1 வைப்புச் சான்றிதழ் தொடர்பில் பிரகடனம் செய்யப்பட்ட தொகை செலுத்திய பெறுமதியாக இருக்க வேண்டும்.

**வேண்டப்படும் ஒதுக்குகள்**

..................................................... ஆரம்பிக்கின்ற காலப்பகுதிக்கானது

| விடயம் | இலங்கை ரூபாவில் |
|---|---|
| 1. விடயத்திற்கு ஏற்றவாறு<br>அ.<br>(i) 'மோட்டார் வாகனங்கள் இறக்குமதிக்கான நாணயக் கடிதங்களுக்கெதிரான எல்லைத் தேவைப்பாடுகள்' மீதான 2018 செத்தெம்பர் 19ஆம் திகதியிடப்பட்ட 35/01/005/0010/20 ஆம் இலக்க சுற்றறிக்கையின் அல்லது<br>(ii) 'மோட்டார் வாகனங்கள் மற்றும் அத்தியாவசியமற்ற நுகர்வுப் பொருட்கள் இறக்குமதிக்கான நாணயக் கடிதங்களுக்கெதிரான எல்லைத் தேவைப்பாடுகள்' மீதான 2018 செத்தெம்பர் 29ஆம் திகதியிடப்பட்ட 35/01/005/0010/21 சுற்றறிக்கையின் கீழ் குறித்துரைக்கப்பட்ட நாணயக் கடிதங்களுக்கு<br>அத்துடன்<br>ஆ. 2018 ஒத்தோபர் 11ஆம் திகதியிடப்பட்ட 2018இன் 2ஆம் இலக்க சுற்றறிக்கையில் குறித்துரைக்கப்பட்ட ஏற்றுகொள்ளலுக்கெதிரான ஆவணங்கள் நியதிகள் மீதான இறக்குமதிகளுக்கு<br>எதிரான சராசரி நாளாந்த மொத்த எல்லை வைப்புக்களின் 100 சதவீதம். | |
| 2. மேலே (1) நீங்கலாக சராசரி நாளாந்த மொத்த ரூபா வைப்புப் பொறுப்புக்களின் 5 சதவீதம். | |
| 3. மேலே 1 மற்றும் 2இல் உள்ளடக்கப்படும் சராசரி வைப்புப் பொறுப்புக்களின் மேலதிகமாக வைத்திருக்கப்படும் இலங்கை நாணயத் தாள்கள் மற்றும் குத்திகளின் 2 சதவீதம், ஆயினும் 4 சதவீதத்தினை விஞ்சாதிருத்தல். | |
| 4. ஒதுக்குப் பேணுதல் காலத்தின் (1+2-3) மீது பேணப்படுவதற்கு வேண்டப்படும் மொத்த ஒதுக்குகள். | |

மேற்குறித்த கூற்று சரியானதென்றும் இவ்வங்கியிலுள்ள ஏடுகளுக்கமைவானதென்றும் மேலே காட்டப்பட்ட தொகைகள் இந்நோக்கத்திற்காக இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விதந்துரைக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கமைவானவை என்றும் நாம்/நான் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்/ சான்றுப்படுத்துகின்றோம்.

திகதி :.............................. .............................................

உத்தியோகபூர்வ கையொப்பம்

குறிப்பு -

(அ) உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் தவிர ஏதேனும் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட வைப்புக்கள் மற்றும் இருப்புக்கள், குறித்துரைக்கப்பட்ட விகிதங்களில் வேண்டப்பட்ட ஒதுக்குகளின் பேணுகையாக கணக்கிற்கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆ) அனைத்து தொகைகளும் கிட்டிய ரூபாவில் காட்டப்பட வேண்டும்.

**சுற்றறிக்கை எண்: 35/01/005/0010/23** 2019 மாச்சு 07

உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம்

**சேரல்: அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்**

**உந்து ஊர்திகள் மற்றும் இன்றியமையாதன அல்லாதனவற்றின் இறக்குமதிகளுக்கான நாணயக் கடிதத்திற்கெதிரான அளவுத் தேவைப்பாடுகள்**

2018 செத்தெம்பர் 29 மற்றும் 2018 நவெம்பர் 26ஆம் திகதியிடப்பட்ட இல. 35/01/005/0010/21 மற்றும் 35/01/005/0010/22 கொண்ட சுற்றறிக்கைகள் 2019 மாச்சு 07ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் புறக்கீடு செய்யப்படுகின்றன என்பது பற்றி அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

**பணிப்பாளர்/ உள்நாட்டுத் தொழிற்பாடுகள்**

**சுற்றறிக்கை எண்: 35/03/016/007/003** 2019 செத்தெம்பர் 05

**சேரல்: அனைத்துப் பங்கேற்கின்ற நிறுவனங்களினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்கள்**

**திறந்த சந்தைத் தொழிற்பாடுகளுக்கான திருத்தப்பட்ட நேர அட்டவணை**

திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழான ஏலங்களுக்கான திருத்தப்பட்ட நேர அட்டவணை பின்வருமாறு:

| ஏல வகை | ஏல நேரம் | முதல் பிரிவின் தீர்ப்பனவு |
|---|---|---|
| உரிமம்பெற்ற வர்த்த வங்கிகள் மற்றும் ஊழியர் சேம நிதியம் என்பனவற்றிற்கான ஓரிரவு/ குறுங்கால மீள்கொள்வனவு மற்றும் ஓரிரவு/ குறுங்கால நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள் | 10:00 மணி - 10:30 மணி | அதே நாளன்று 13:15 மணி |
| தனியான முதனிலை வணிகர்களுக்கான திரவத்தன்மை ஆதரவு வசதி | 11:00 மணி - 11:30 மணி | அதே நாளன்று 13:15 மணி |

திருத்தப்பட்ட நேர அட்டவணை 2019 செத்தெம்பர் 6ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும். திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழான மற்றைய ஏலங்களுக்கான ஏல மணித்தியாலங்கள் மாற்றமின்றியிருக்கும்.

அனைத்துப் பங்கேற்கின்ற நிறுவனங்களும் மேற்குறிப்பிட்ட நேர அட்டவணைக்கு இணங்கியொழுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

**பணிப்பாளர்/ உள்நாட்டுத் தொழிற்பாடுகள்**

**சுற்றறிக்கை எண்: 35/03/016/007/004** 2019 செத்தெம்பர் 05

**சேரல்: அனைத்துப் பங்கேற்கின்ற நிறுவனங்களினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்கள்**

**திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழான உடனடி ஏலங்கள்**

2019 செத்தெம்பர் 6ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில், திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ், இலங்கை மத்திய வங்கியினால் நடத்தப்படும் உடனடிக் கொள்வனவுகளுக்காக (விற்பனைகள்/ கொள்வனவுகள்) திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் ஆகிய இரண்டும் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன.

இதற்கமைய, 2016 ஒத்தோபர் 26ஆம் திகதியிடப்பட்ட சந்தைத் தொழிற்பாடுகள் பற்றிய திரட்டப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் மீதான சுற்றறிக்கை இல. 35/03/016/007001 இன் பிரிவு 83.0 2019 செத்தெம்பர் 06ஆம் திகதியிலிருந்து பின்வருமாறு திருத்தப்படுகிறது.

**83.0**

**(அ திறைசேரி உண்டியல்களின் கீழான ஏல அறிவித்தல்**

இலங்கை மத்திய வங்கி ஏல நாளன்று அல்லது ஏல நாளுக்கு ஒரு வேலை நாள் முன்னதாக வியாபார நாளன்று 09.30 மணியளவில் உடனடி ஏலத்தினை நடத்துவதற்கான தீர்மானத்தினை அறிவிக்கும். அறிவித்தலானது முன்வைக்கப்படும் ஏலத்தின் வகை (உடனடி விற்பனை அல்லது கொள்வனவு) முன்வைக்கப்படும் தொகை (பிணையங்களின் முகப்புப் பெறுமதி) முதிர்ச்சித் திகதி, முதிர்ச்சிக்காகவுள்ள நாள், ஏலத் திகதி மற்றும் தீர்ப்பனவுத் திகதி என்பனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும். உடனடிக் கொடுக்கல்வாங்கல்களுக்கான தீர்ப்பனவுத் திகதி அடுத்துவரும் வியாபார நாளாக இருக்கும்.

**(ஆ) திறைசேரி முறிகளின் கீழான ஏல அறிவித்தல்**

இலங்கை மத்திய வங்கி ஏல நாளுக்குக் குறைந்தபட்சம் மூன்று வேலை நாட்களுக்கு முன்னதாக உடனடி ஏலத்தினை நடத்துவதற்கான தீர்மானத்தினை அறிவிக்கும். அறிவித்தலானது முன்வைக்கப்படும் ஏலத்தின் வகை (உடனடி விற்பனை அல்லது கொள்வனவு) முன்வைக்கப்படும் தொகை (பிணையங்களின் முகப்புப் பெறுமதி) முதிர்ச்சித் திகதி, முதிர்ச்சிக்காகவுள்ள நாள், ஏலத் திகதி மற்றும் தீர்ப்பனவுத் திகதி என்பனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும். உடனடிக் கொடுக்கல்வாங்கல்களுக்கான தீர்ப்பனவுத் திகதி அடுத்துவரும் வியாபார நாளாக இருக்கும்.

**பணிப்பாளர்/ உள்நாட்டுத் தொழிற்பாடுகள்**

**சுற்றறிக்கை எண்: 35/03/021/0013/002** 2019 செத்தெம்பர் 05

**சேரல்: அனைத்து தனியான முதனிலை வணிகர்களினது முதன்மை நிறைவேற்று அலுவலர்கள்**

**திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் தனியான முதன்மை வணிகர்களுக்கான திரவத்தன்மை ஆதரவு வசதிகள் தொடர்பான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்**

இது, திரட்டப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் தொடர்பான 2016 ஒத்தோபர் 26ஆம் திகதியிடப்பட்ட சுற்றறிக்கை எண் 35/03/016/007/001 மற்றும் இலங்கை மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் தொடர்பான 2018 ஓகத்து 23ஆம் திகதியிடப்பட்ட சுற்றறிக்கை எண் 35/03/021/0013/001 தொடர்பானதாகும்.

உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் தவிர, முதனிலை வணிகர்களாக நியமிக்கப்பட்ட கம்பனிகளான தனியான முதனிலை வணிகர்களுக்காக இலங்கை மத்திய வங்கியினால் நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்கள் வாயிலாக திரவத்தன்மை ஆதரவுத் வசதியொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. திரவத்தன்மை ஆதரவு வசதியானது உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்காக அல்லது இலங்கை மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்பட்டவாறான திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் இலங்கை மத்திய வங்கி ஓரிரவு நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களை நடத்தும் பொழுது தனியான முதனிலை வணிகர்களுக்குத் திரவத்தன்மை ஆதரவுத்திட்டம் கிடைக்கச் செய்யப்படும்.

தனியான முதனிலை வணிகர்கள், 2019 செத்தெம்பர் 06ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் நாளாந்த திரவத்தன்மைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஓரிரவு அடிப்படையின் மீது திரவத்தன்மை ஆதரவு வசதியின் கீழ் நிதியினைக் கடன் பெறுவதற்கு தகைமையுடையவராவர் என்பதுடன் இச்சுற்றறிக்கையின் மூலம் சுற்றறிக்கை இல. 35/03/021/0013/001 நீக்கப்படுகிறது. திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ், நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களுக்கு ஏற்புடைத்தான சந்தைத் தொழிற்பாடுகளின் மீதான குறிப்பிட்ட திரட்டப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் 8, 9, 13, 14, 15, 16, 17, 18, 20, 22, 24, 25, 26, 27, 28, 46, 47, 57, 58, 59, 60, 61, 62 மற்றும் 63 ஆகிய கிளைவாசகங்களில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளதுடன் **திருத்தப்பட்ட அறிவுறுத்தல்கள் தனியான முதனிலை வணிகர்களுக்கு மாத்திரமே ஏற்புடைத்தானதாக இருத்தல் வேண்டும்.**

1. திரவத்தன்மை ஆதரவு வசதியின் கீழ் நிதியினைக் கடன்பட எண்ணுகின்ற தனியான முதனிலை வணிகர்கள், தொடர்பான ஏலத்தினைத் தெரிவு செய்வதன் மூலம் அதேநேர இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையூடாக அவர்களது விலைக்குறிப்பீடு/ விலைக்குறிப்பீடுகளை இலத்திரனியலூடாகச் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய தனியான முதனிலை வணிகர்கள் தங்களது விலைக்குறிப்பீடுகளை, பிணையத்தின் விபரங்களுடன் அதாவது பன்னாட்டுப் பிணையங்களின் அடையாள இலக்கத்துடன் சேர்த்துச் சமர்ப்பித்தல் வேண்டும்.

2. ஏலங்கள் 11.00 மணித்தியாலத்திலிருந்து 11.30 மணிவரை நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு தனியான முதனிலை வணிகரும் உயர்ந்தபட்சம் 3 விலைக்குறிப்பீடுகளுக்கும் தொடர்பான ஏலங்களில் முன்வைக்கப்பட்ட தொகையின் மொத்தப் பெறுமதிக்கும் மட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றனர்.

3. திரவத்தன்மை ஆதரவு வசதியின் கீழ் ஏலங்களின் கீழ்மட்ட வட்டி வீதமானது, அதே நாளன்று உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்காக நடத்தப்படும் நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களின் ஏற்றுக்கொள்ளப்பட்ட உயர்ந்தபட்ச விலைக்குறிப்பீட்டு வீதத்தின் அடிப்படையில் இலங்கை மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். ஏற்புடைத்தான கீழ்மட்ட வீதமானது மத்திய ஒருங்கிணைக்கப்பட்ட சந்தைக் கண்காணிப்பு மற்றும் கணனிவழி அதேநேர இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமை என்பனவற்றினூடாகத் திரவத்தன்மை ஆதரவு வசதிக்கான ஏலம் தொடங்குவதற்கு முன்னதாக அறிவிக்கப்படும். கீழ்மட்ட வட்டி வீதத்திற்குக் குறைவான ஏதேனும் விலைக்குறிப்பீடு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

4. தொழில்நுட்பத் தவறுகள் காரணமாக மாத்திரம் அதேநேர கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையில் பங்கேற்கும் தனியான முதனிலை வணிகர்கள் அணுகமுடியாத சந்தர்ப்பத்தில், அத்தகைய தனியான முதனிலை வணிகர்கள் தொலைபேசியூடாக தொடர்பான ஏலங்கள் மூடப்படுவதற்கு முன்னதாக உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் பிரிவிற்கு அவ்விடயங்களை அறிவிக்குமாறு ஆலோசனை வழங்கப்படுகிறது. இரண்டு அதிகாரம்பெற்ற அலுவலர்களினால் சரியான விதத்தில் கையொப்பமிடப்பட்ட வணிகர்கள்/ விலைக்குறிப்பீடுகளை உறுதிப்படுத்துகின்ற கடிதமொன்றினை அத்தகைய தொழில்நுட்பத் தவறுகளின் தன்மையினை எடுத்துக்காட்டும் விதத்தில், பொருத்தமானவாறு தொடர்பான ஏலங்கள் மூடப்படுவதற்கு முன்னதாக தொலைநகல் மூலமாக அல்லது மின்னஞ்சல் மூலமாகச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய வணிகம்/ விலைக்குறிப்பீடு ஒவ்வொன்றும், கொடுக்கல்வாங்கல்களை உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் கையால் பதிவுசெய்வதனை இயலுமைப்படுத்தும் விதத்தில் தொடர்பான தகவல்கள் அனைத்தையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும். இலங்கை மத்திய வங்கி அத்தகைய தொடர்பூட்டலை மேற்கொள்ளும் தனியான முதனிலை வணிகர்களினால் வழங்கப்படும் தகவல்களின் அடிப்படையில் அவர்களின் சார்பில் வணிகம்/ விலைக்குறிப்பீட்டினைக் கையினால் பதிவுசெய்யும் கோரிக்கையொன்றாகப் பரிசீலனை செய்யும். உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தினால் கையினால் பதிவு செய்யப்படுவதற்காகச் சமர்ப்பிக்கப்படுகின்ற தகவல்கள் பிழையாக அல்லது பூரணமாக நிறைவு செய்யப்படாதவிடத்து அத்தகைய கோரிக்கைகள் மத்திய வங்கியினால் நிராகரிக்கப்படுவதற்கு காரணமாகலாம். ஏலம் தொடர்பான குறித்துரைக்கப்பட்ட வெட்டுநேரத்தின் பின்னர் (தொலைநகல் அல்லது மின்னஞ்சல்) பெறப்படும் விலைக்குறிப்பீடுகள் எந்தவொரு சூழ்நிலையிலும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. கோரிக்கையின் மூல ஆவணத்தினை அதேநாளன்று வியாபாரம் மூடப்படுவதற்கு முன்னதாக உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களப் பணிப்பாளருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

5. ஏலம் மூடப்பட்டதும், எந்தவொரு சூழ்நிலையிலும் தனியான முதனிலை வணிகர்களினால் முன்வைக்கப்பட்ட விலைக்குறிப்பீடுகளில் எந்தவொரு திருத்தத்தினையும் மேற்கொள்ள முடியாது.

6. அனைத்துக் கொடுக்கல்வாங்கல்களுக்குமான வணிக/ விலைக்குறிப்பீட்டின் குறைந்தபட்சப் பெறுமதி ரூபா ஒரு மில்லியனாக (ரூ.1,000,000.00) இருக்குமென்பதுடன் வணிகம் ஒரு மில்லியன் ரூபாவின் பெருக்கத்தில் இருத்தல் வேண்டும்.

7. ஏலங்களில் விலைக்குறிப்பீடுகளை மேற்கொள்ளும் போது, ஒவ்வொரு ஏலங்களுக்காகவும் ஒதுக்கப்பட வேண்டிய இலங்கை மத்திய வங்கிக்கான பிணை/ பிணையங்களின் முகப்புப் பெறுமதி, தொடர்பான பிணை/ பிணையங்களின் மத்திய வங்கியின் அலுவல்சார் வாங்கும் விலை/ விலைகளை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும். அத்தகைய அலுவல்சார் விலைகள் லங்கா செகுயர் முறைமையில் பதிவுசெய்யப்படுவதுடன் கணனிவழி அதேநேர இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையிலிருந்தும் கூட சீர்ப்படுத்தல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

8. தனியான முதனிலை வணிகர்கள் குறிப்பிட்டதொரு விலைக்குறிப்பீட்டிற்காக பன்னாட்டு பிணை அடையாள இலக்கங்களில் (ப.பி.அ. இலக்கப் பெருக்கங்கள்) ஏதேனுமொரு பன்னாட்டு பிணை இலக்கத்தினை ஒதுக்க முடியும். அத்தகைய ஒவ்வொரு பன்னாட்டு பிணை அடையாள இலக்கமும் இறுத் தீர்ப்பனவின் போது தனியான விலைக்குறிப்பீடாகக் கருதப்படல் வேண்டும்.

9. ஒதுக்குகள் வெற்றிபெற்ற விலைக்குறிப்பீட்டாளர்களினால், குறிப்பீடு செய்யப்பட்ட விலைக்குறிப்பீட்டு வட்டி வீதங்களின் குறைந்து செல்லும் ஒழுங்கினை அடிப்படையாகக் கொண்டு ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படும்.

10. வெட்டு வீதத்தில் ஒன்றிற்கும் மேற்பட்ட வெற்றிகரமான விலைக்குறிப்பீடுகள் காணப்படும் சந்தர்ப்பத்தில் ஒதுக்கீடுகள் விகிதசம அடிப்படையில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

11. தனியான முதனிலை வணிகரொருவரின் வணிகம்/ விலைக்குறிப்பீட்டினை இலங்கை மத்திய வங்கி ஏற்றுக்கொள்வதற்கான அல்லது நிராகரிப்பதற்கான உரிமையினைக் கொண்டுள்ளது.

12. இலங்கை மத்திய வங்கி ஏலத்தின் பெறுபேறுகளை 12.00 மணிக்கு கணனிவழி அதேநேர இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமை மற்றும் மத்திய ஒருங்கிணைக்கப்பட்ட சந்தைக் கண்காணிப்பு என்பனவற்றினூடாக, மொத்தமாகப் பெறப்பட்ட விலைக்குறிப்பீடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை, நிறையேற்றப்பட்ட சராசரி வீதம், வெற்றிபெற்ற விலைக்குறிப்பீடுகளின் உயர்ந்தபட்ச மற்றும் குறைந்தபட்ச வீதங்கள் ஆகிய விபரங்களுடன் சேர்த்து அறிவிக்கும். ஒவ்வொரு விலைக்குறிப்பீட்டாளருக்கும் அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையினூடாக பெறுபேறுகள் பற்றி (நிராகரித்தல், ஏற்றுக்கொள்ளல் அல்லது விலைக்குறிப்பீடுகளின் பகுதியளவு ஏற்றுக்கொள்ளல்) அறிவிக்கப்படும்.

13. பெறுபேறுகள் வெளியிடப்பட்டதன் பின்னர் ஒரு மணித்தியாலத்திற்குள் அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையினூடாக வெற்றிபெற்ற ஒவ்வொரு தனியான முதனிலை வணிகருக்கும் இலத்திரனியலூடாக ஏலம் தொடர்பான உறுதிப்படுத்தல் வழங்கப்படும்.

14. திரவத்தன்மை ஆதரவு வசதிக்காக பிணையங்களின் பதிலீட்டினைச் சமர்ப்பித்தல் அனுமதிக்கப்படமாட்டாது.

15. கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவு அதேநாளன்று 13:15 மணிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ செயன்முறைப்படுத்தப்படல் வேண்டும். இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம், லங்கா செகுயரிலுள்ள இலங்கை மத்திய வங்கியின் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் நேர்மாற்றுக் கொள்வனவுக் கணக்கிற்கு கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் பெறுகைகளுக்கெதிராக, பிணையங்களின் கொள்வனவு விலைகளுக்காக (ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை) தொடர்பான தனியான முதனிலை வணிகர்களின் தீர்ப்பனவுக் கணக்கிற்கு வரவு வைப்பதன் மூலம் கொடுக்கல்வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்தல் வேண்டும்.

16. முதிர்ச்சித் திகதியன்று (தொடர்பான தனியான முதனிலை வணிகரின் மீள்கொள்வனவுத் திகதி) இலங்கை மத்திய வங்கி, கொள்வனவு செய்த பிணையங்களை தனியான முதனிலை வணிகர்களினால் செய்யப்பட்ட பிணை/ பிணையங்களின் மீள்கொள்வனவு பெறுமதிக்காக இலங்கை மத்திய வங்கியின் தீர்ப்பனவுக் கணக்கிற்குப் பெறப்பட்ட நிதியங்களுக்கெதிராக லங்கா செகுயரிலுள்ள தொடர்பான தனியான முதனிலை வணிகரின் சொந்தப் பிணையங்கள் கணக்கிற்கு 11.00 மணிக்குப் பிந்தாமல் மாற்றல் செய்தல் வேண்டும்.

17. மீள்கொள்வனவுப் பெறுமதி, பிணையங்களின் மீள்கொள்வனவுப் பெறுமதியினையும் (ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை) தொடர்பான விலைக்குறிப்பீட்டிற்கான வட்டிக் கூறினையும் உள்ளடக்கியிருக்கும். தொடர்பான விலைக்குறிப்பீட்டின் வட்டிக் கூறு ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை மற்றும் தனியான முதனிலை வணிகருக்கான உடன்படிக்கையின் காலப்பகுதிக்கான விலைக்குறிப்பீட்டின் (காலம்) தொடர்பான விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட வட்டி வீதம் என்பனவற்றின் அடிப்படையில் கணிக்கப்படுதல் வேண்டும்.

18. அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையினை அணுகுவதற்கு தொழில்நுட்பத் தவறு காரணமாக இருக்கும் சந்தர்ப்பத்தில் மாத்திரம் தனியான முதனிலை வணிகர்கள் கிளைவாசகம் 13இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள உறுதிப்படுத்தலைப் பார்க்கவோ அல்லது அச்செடுக்கவோ இயலாத போது கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் தனியான முதனிலை வணிகர்களுக்கு கோரிக்கையின் அடிப்படையில் தொலைநகல்/ மின்னஞ்சல் மூலமாக உறுதிப்படுத்தலின் பிரதியொன்றினை அனுப்பி வைக்கும்.

19. இச்சுற்றறிக்கையில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளின் நியதிகளில், தனியான முதனிலை வணிகர்களுக்கும் இலங்கை மத்திய வங்கிக்குமிடையிலான மேற்கொள்ளப்பட்ட அனைத்து நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலக் கொடுக்கல்வாங்கல்களும் அத்தகைய தனியான முதனிலை வணிகர்களுக்கும் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபைக்குமிடையில் மேற்கொள்ளப்பட்ட முதன்மை மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகளுக்குட்பட்டதாக இருக்கும். இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் பயன்படுத்தப்பட்ட சொற்பதங்கள் முதன்மை மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கையிலுள்ள அதே கருத்துக்களையே கொண்டிருக்கும்.

20. அரசாங்கம் அட்டவணையிடப்படாத வங்கி விடுமுறையொன்றினை பிரகடனப்படுத்துமிடத்து, ஏதேனும் கொடுக்கல்வாங்கல் தொடர்பான முதிர்ச்சித் திகதி அத்தகைய விடுமுறை நாளன்று வருமிடத்து, அத்தகைய நாளன்று ஏற்படும் அத்தகைய கொடுக்கல்வாங்கல்களுக்கு அத்தகைய தரப்பினர் கடப்பாடுகளைக் கொண்டிருப்பின் உடனடுத்துவரும் வியாபார நாளன்று அதனைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

21. அனைத்துக் கொடுக்கல்வாங்கல்களும் வழங்கல் எதிர் கொடுப்பனவு அடிப்படையில் இடம்பெறும்.

22. வியாபாரத்தினை மூடிவிடுதல் என்பது லங்கா செட்டில் முறைமை விதிகளின் பதிப்பு 2.1 அல்லது அதன் பிந்திய பதிப்பின் தொகுதி 4 இலுள்ள நாளாந்த தொழிற்பாட்டு அட்டவணையிலுள்ள வியாபாரத்தினை மூடிவிடுவதற்காக குறித்துரைக்கப்பட்ட நேரம் எனக் கருதப்படல் வேண்டும். பொதுவாக லங்கா செகுயரின் வியாபாரம் மூடப்படும் நேரம் 16:30 மணியாகும். எனினும் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் எதிர்பாராத நிகழ்வுகளைக் கையாள்வதற்காக காலத்திற்குக் காலம் அதன் ஏக தற்றுணிபின் அடிப்படையில் பின்பற்றப்படக்கூடிய தொழிற்பாட்டு அட்டவணைக்கு அவ்வப்பொழுது சீராக்கங்களைச் செய்வதுடன் அதனைத் தேவையானவிடத்து பங்கேற்பாளர்களுக்கும் அறிவிக்கும்.

23. தனியான முதனிலை வணிகர்கள் ஏதேனும் தீர்ப்பனவு அறிவுறுத்தல்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுவதில்லை.

24. சேதங்களை அறவிடுதல்

(அ) தீர்ப்பனவுத் திகதியன்று வணிகத்தினை/ விலைக்குறிப்பீட்டினைத் தனியான முதனிலை வணிகர்கள் கௌரவிக்கத் தவறுதல்

தனியான முதனிலை வணிகரின் வணிகம்/ விலைக்குறிப்பீட்டினை இலங்கை மத்திய வங்கி ஏற்றுக்கொள்வது சட்டத்தினால் பிணிக்கப்பட்டிருப்பதுடன் தீர்ப்பனவுத் திகதியன்று லங்கா செகுயரின் வியாபாரம் முடிவடைவதற்கு முன்னர் தீர்ப்பனவுக் கணக்கில்

போதுமான நிதியம் இல்லாமை அல்லது அவர்களது சொந்தக் கணக்கில் வைக்கப்பட்டிருக்கும் பிணைகள் போதுமானளவு கிடைக்காமல் இருப்பதன் காரணமாக தனியான முதனிலை வணிகர்கள் வணிகத்தினை/விலைக்குறிப்பீட்டினை கௌரவிக்கத் தவறுவார்களாயின், அத்தகைய தனியான முதனிலை வணிகர்கள், தொடர்பான கொடுக்கல்வாங்கல்களின் வட்டிக்குச் சமமான தொகையொன்றினை இலங்கை மத்திய வங்கிக்குச் செலுத்துவதற்குப் பொறுப்புடையவர்களாக இருப்பர். அத்தகைய சேதங்கள் இலங்கை மத்திய வங்கியிலுள்ள தனியான முதனிலை வணிகர்களின் தீர்ப்பனவுக் கணக்கிலிருந்து அடுத்த வியாபார நாளன்று கழிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) முதிர்ச்சித் திகதியன்று தனியான முதனிலை வணிகர்கள் செலுத்தத் தவறுதல்

முதிர்ச்சித் திகதியன்று (மீள்கொடுப்பனவுத் திகதி) லங்கா செகுயரின் வியாபாரம் முடிவடைவதற்கு முன்னதாக மீள்கொள்வனவு பெறுமதியினைச் செலுத்துவதற்குத் தனியான முதனிலை வணிகர்கள் தீர்ப்பனவுக் கணக்கில் போதுமான நிதியினைப் பேணுவதற்குத் தவறும் சந்தர்ப்பத்தில், தனியான முதனிலை வணிகர் தொடர்பான கொடுக்கல்வாங்கல்களின் வட்டிக் கூறிற்குச் சமமான தொகையொன்றினையும் நாளொன்றிற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகையில் (பிணையங்களின் கொள்வனவுப் பெறுமதி) செலுத்தத்தவறிய வட்டித் தொகையில் ஒரு சதவீதத்தில் பத்திலொரு பங்கிற்கு (0.1%) சமமான வீதத்தில் கணிக்கப்பட்ட வட்டியையும் சேர்த்துச் செலுத்தல் வேண்டும். அத்தகைய சேதங்கள் மத்திய வங்கியுடன் பேணப்படும் தனியான முதனிலை வணிகரின் தீர்ப்பனவுக் கணக்கிலிருந்து அடுத்துவரும் வியாபார நாளன்று பற்று வைக்கப்படுதல் வேண்டும்.

(இ) கலண்டர் ஆண்டொன்றில் ஒரு தடவைக்கும் கூடுதலாக வணிகம்/ விலைக்குறிப்பீட்டினை கௌரவிக்கத் தவறுதல் அல்லது செலுத்தத் தவறுதல்

தனியான முதனிலை வணிகர் கலண்டர் ஆண்டொன்றில் ஒரு தடவைக்கும் கூடுதலாக வணிகம்/ விலைக்குறிப்பீட்டினைக் கௌரவிக்கத் தவறும் சந்தர்ப்பத்தில் அத்தகைய செலுத்தத் தவறும் வட்டி ஒரு சதவீதத்தின் பத்திலொரு பங்கினால் (0.1 சதவீதம்) அதிகரிக்கப்படுதல் வேண்டும் அல்லது இலங்கை மத்திய வங்கி, அதனால் தீர்மானிக்கக்கூடியவாறானதொரு காலப்பகுதிக்கு தனியான முதனிலை வணிகர்கள் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுவதிலிருந்தும் இடைநிறுத்தி வைக்கலாம். அத்தகைய சேதங்கள் தனியான முதனிலை வணிகர்கள் இலங்கை மத்திய வங்கியுடன் பேணும் தீர்ப்பனவுக் கணக்கிலிருந்து அடுத்துவரும் வேலை நாளன்று பற்று வைக்கப்படுதல் வேண்டும்.

(ஈ) தனியான முதனிலை வணிகர் 24(ஆ), (இ) இல் குறித்துரைக்கப்பட்ட சேதங்களைச் செலுத்துவதற்குத் தவறும் சந்தர்ப்பத்தில், இலங்கை மத்திய வங்கி அத்தகைய கொடுக்கல்வாங்கல்களை உடனடிக் கொள்வனவொன்றிற்கு மாற்றுதல் **வேண்டும்.**

25. முதன்மை மீள்கொள்வனவு அத்துடன்/ அல்லது நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைக்குமிடையில் ஏதேனும் ஒவ்வாமை அல்லது முரண்பாடு காணப்படும் சந்தர்ப்பத்தில் இச்சுற்றறிக்கையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

26. தனியான முதனிலை வணிகர்களுக்கான முன்னறிவித்தலுடன் திரவ ஆதரவு வசதியின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களைத் திருத்துவதற்கு, மாற்றியமைப்பதற்கு அல்லது வேறு ஏதேனும் நியதிகள் அத்துடன்/ அல்லது நிபந்தனைகளை அல்லது அதிலுள்ள ஏதேனும் பகுதியினை மாற்றுவதற்கான உரிமையினை மத்திய வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது.

**பணிப்பாளர்/ உள்நாட்டுத் தொழிற்பாடுகள்**

**சுற்றறிக்கை எண்: 35/03/021/0013/003** 2019 செத்தெம்பர் 05

**சேரல்: அனைத்து தனியான முதனிலை வணிகர்களினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்கள்**

## இலங்கை மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள்

இலங்கை மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் நடத்தப்படுகின்ற திறைசேரி உண்டியல்/ திறைசேரி முறிகளுக்கான உடனடி விற்பனை/ கொள்வனவு ஏலங்களில் பங்குபற்றுவதற்கு 2019 செத்தெம்பர் 6ஆம் திகதியிலிருந்து தனியான முதனிலை வணிகர்கள் தகைமையுடையவர்களாக இருப்பர்.

தனியான முதனிலை வணிகர்களுக்கான துணை வசதிகளை அணுகும் தன்மையில் மாற்றமெதுவுமில்லை.

**பணிப்பாளர்/ உள்நாட்டுத் தொழிற்பாடுகள்**

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை**

**அதிவிசேடமானது**

2112/17 ஆம் இலக்கம் - 2019ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 27ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி **I** : தொகுதி **(I)** - பொது

அரசாங்க அறிவித்தல்கள்

## 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7ஆம் பிரிவின் ஊடாக குறித்துரைக்கப்படும், 29ஆம் பிரிவின் கீழ் அமைந்தவாறான கட்டளை.

2019இல் பதிவற்ற முதலீட்டாளர்களுக்கான சர்வதேச அரச பத்திரங்கள் வழங்குதல் மற்றும் அது தொடர்பான ஏதாவது கொடுப்பனவுகள் வழங்குதல் சம்பந்தமாக இலங்கை அரசாங்கத்திற்கு இத்தால் அனுமதி வழங்கப்படுகின்றது.

மங்கள சமரவீர,

**நிதி அமைச்சர்.**

நிதியமைச்சு,

கொழும்பு 01,

2019, பெப்புருவரி 26.

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை**

**அதி விசேடமானது**

2112/25 ஆம் இலக்கம் - 2019ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 28ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி I : தொகுதி (I) - பொது
அரசாங்க அறிவித்தல்கள்

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்**

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 29ஆம் பிரிவின் கீழான கட்டளை.

தொடர்புடைய நிரல் அமைச்சுக்களினதும் தொடர்புடைய ஏனைய எந்தவொரு அதிகாரிகளினதும் அங்கீகாரத்திற்கு உட்பட்டு இலங்கை அரசாங்கத்திற்கும், இலங்கை அரசாங்கத்திற்கு சொந்தமான தொழில் முயற்சிகளுக்கும் (அரசுக்கு சொந்தமான 50மூ சதவீதத்திற்கும் கூடுதலான மூலதனப் பங்குகளைக் கொண்ட) பெற்றுக்கொள்ளப்படும் கடன் தொகையை, கடன் வழங்குநரின் உட்திரும்பல் முதலீட்டு கணக்கினூடாகப் பெற்றுக்கொள்ளாது, பெயர்குறிப்பிடப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் இலங்கைக்கு வெளியிலிருந்து கடனை பெற்றுக்கொள்வதற்கு இத்தால் அனுமதி அளிக்கப்படுகின்றது. அவ்வாறு கடனைப் பெற்றுக்கொள்வது பற்றிய விபரத்தை, இலங்கைக்கு கடனை வழங்கியதிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் நிதி அமைச்சின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களம், பொது தொழில்முயற்சித் திணைக்களம் மற்றும் வரவு செலவுத்திட்டத் திணைக்களம் (ஏற்புடைய விதத்தில்) ஆகியவற்றினால் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

மங்கள சமரவீர,
**நிதி அமைச்சர்.**

நிதியமைச்சு,

கொழும்பு 01,

2019, பெப்புருவரி 27.

**வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**
**இலங்கை மத்திய வங்கி**
**2017ஆம் ஆண்டில் 12ஆம் இலக்க வெளிநாட்டு செலாவணி சட்டத்தின் கீழான பணிப்புரை இலக்கம் 01**

**முற்கொடுப்பனவு (காசாக முற்பணம்) நியதிகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட இறக்குமதிகளுக்கான கொடுப்பனவுகளின் மீது அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுவிக்கப்பட்ட பணிப்புரைகள்**

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் (சட்டம்) பிரிவு 16 உடன் சேர்த்து வாசிக்கப்படும் பிரிவு 3இன் நியதிகளின் கீழ் முற்பணக்கொடுப்பனவு (காசாக முற்பணம்) நியதிகளின் கீழ் அத்தியாவசியமற்ற நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகளுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக வெளிநாட்டுச் செலாவணியை வழங்குதலை மட்டுப்படுத்தல் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுவிக்கப்பட்ட 2018 ஒத்தோபர் 10 திகதியிடப்பட்ட 2018ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பணிப்புரைகள் இப் பணிப்புரையின் திகதியிலிருந்து மீளப்பெறப்படுகிறது.

**பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**

2019 மார்ச்சு 26

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை**

**அதிவிசேடமானது**

2145/49 ஆம் இலக்கம் - 2019ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 17ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி I : தொகுதி (I) - பொது
அரசாங்க அறிவித்தல்கள்
**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டு செலாவணிச் சட்டம்**

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29 ஆம் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குவிதிகள்

2017ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 17ஆந் திகதியிடப்பட்ட 2045/56 ஆம் இலக்க வர்த்தமானி (அதிவிசேடம்) அறிவித்தலின் கீழ் வெளியிடப்பட்ட 2017ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களினால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியிலான மூலதனக் கொடுக்கல் வாங்கல்களின் வகைகள்) ஒழுங்குவிதிகளின் அட்டவணை IV இன் தலைப்பு ஊ இல் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் ஏற்றுமதியாளர்களினால் ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குத் திருப்பியனுப்புதலுடன் தொடர்புடைய தேவைப்பாடுகள் நீக்கப்படுவதுடன் பின்வருவனவற்றின் மூலம் பிரதியீடு செய்யப்படுகின்றது.

1. பொருட்களின் ஒவ்வொரு ஏற்றுமதியாளரும் ஏற்றுமதி செய்யப்பட்ட நாளிலிருந்து 180 நாட்களுக்குள் பொருட்களின் ஏற்றுமதிக்காக பெறப்பட்ட கொடுப்பனவுகளை இலங்கைக்குத் திருப்பியனுப்புதல் வேண்டும்.
2. பொருட்களின் ஒவ்வொரு ஏற்றுமதியாளரும் ஒவ்வொரு ஏற்றுமதிக்கும் கொடுப்பனவுகள் பெறப்பட்டது என்பது தொடர்பான

ஆவணச்சான்றுகளை அதிகாரமளிக்கப்பட்ட வணிகருக்கோ அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வணிகருக்கோ சமர்ப்பித்தல் வேண்டும்.

3. இத்தேவைப்பாடுகள் தொடர்பில் பொருட்களின் ஏற்றுமதியாளர்களினது இணங்குவிப்பினைக் கண்காணிப்பதற்குப் பொருத்தமான பொறிமுறைகளை அறிமுகப்படுத்துவதற்கும் இத்தலைப்பின் கீழ் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுடன் ஏதேனும் இணங்காமைக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குமான உரிமையினை இலங்கை மத்திய வங்கி கொண்டுள்ளது.

மங்கள சமரவீர,
**நிதி அமைச்சர்.**

கொழும்பு

2019, ஒற்றோபர் 17

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை**

**அதிவிசேடமானது**

2123/14ஆம் இலக்கம் - 2019ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

**பகுதி I : தொகுதி (I) - பொது**

**இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்**

**2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டம்**

2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் 2ஆம் பிரிவின் கீழ் நிதிசார் உளவறிதற் கூறினால் ஆக்கப்பட்ட விதிகள்.

நிதிசார் உளவறிதற் கூறு

கொழும்பு,
2019, மே 13.

**விதிகள்**

1. இவ்விதிகள் 2019ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, காப்புறுதியாளர்கள் (வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக்கவன) விதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (இதனகத்துப் பின்னர் “காப்புறுதியாளர்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2000ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் கீழ் நீண்டகாலக் காப்புறுதித் தொழிலைக் கொண்டு நடாத்துகின்றதும் -

(அ) ஒப்புறுதியீட்டில் மற்றும் காப்புறுதியின் அமர்த்துகையில்; அத்துடன்

(ஆ) முகவர்களினாலும் தரகர்களினாலுமான காப்புறுதி இடைமத்தியஸ்தத்தில்,

ஈடுபட்டுள்ளதுமான ஒவ்வொரு நிறுவனத்துக்கும் இவ்விதிகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

3. ஒவ்வொரு காப்புறுதியாளரும், அதன் வாடிக்கையாளர்களினால் ஏற்படுத்தப்படும் பணம் தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாதி நிதியளிப்பு இடர்களை அடையாளங்காணும், மதிப்பிடும் மற்றும் முகாமை செய்யும் நோக்கத்துக்காக, (இதனகத்துப்பின்னர் “வாஉவி” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) தொடர்ச்சியான வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக்கவனத்தை இடர் அடிப்படையிலான அணுகுமுறையின் அடிப்படையில் செயற்படுத்துவதன் மூலம் இவ்விதிகளிற் குறித்துரைக்கப்பட்ட வழிமுறைகளை எடுத்தல் வேண்டும்.

**பாகம் I**

**பணம் தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாதி நிதியளிப்பு இடர்முகாமை**

4. இடர் முகாமைப் பணிகளின் செறிவும் பரந்தளவும் இடர் அடிப்படையிலான அணுகுமுறைக்கு இணங்கியொழுகவிருத்தல் வேண்டுமென்பதுடன், காப்புறுதியாளரின் செயற்பாடுகளினதும் பணம் தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாதி நிதியளிப்பு இடர் வெளிப்பாட்டினதும் தன்மை, அளவு மற்றும் சிக்கலானதன்மை என்பவற்றுக்கு விகிதாசாரப்படியாகவிருத்தலும் வேண்டும்.

5. ஒவ்வொரு காப்புறுதியாளரும், அதன் வாடிக்கையாளர்கள், நாடுகள் அல்லது புவியியற்சார் இடப்பரப்புக்கள், அளிபொருட்கள், சேவைகள், கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் சேர்ப்பிப்பு வழிகள் தொடர்பாக அதன் பணம் தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாதி நிதியளிப்பு இடர்களை அடையாளங்காண்பதற்கும், மதிப்பிடுவதற்கும், முகாமை செய்வதற்கும் தோதான நடபடிகளை எடுத்தல் வேண்டும்.

6. ஒவ்வொரு காப்புறுதியாளரும், பணம் தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாதி நிதியளிப்பு இடர்களை மதிப்பிடுவதில் பின்வரும் செய்முறைகளைச்செயற்படுத்துதல் வேண்டும்:-

(அ) அவற்றின் இடர் மதிப்பீடுகளையும் முடிவெடுப்புக்களையும் ஆவணப்படுத்துதல்;

(ஆ) ஒட்டுமொத்த இடரின் மட்டத்தையும் பிரயோகிக்கப்படவேண்டிய தோதான தணிப்பு மட்டத்தையும் வகையையும் தீர்மானிக்குமுன்னர் இயைபான எல்லா இடர்க்காரணிகளையும் கவனத்துட்கொள்ளுதல்;

(இ) காலாகாலப் பரிசீலனையினூடாக மதிப்பீட்டை நாளதுவரையாக வைத்திருத்தல்; அத்துடன்

(ஈ) இலங்கைக் காப்புறுதி ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவுக்கு இடர் மதிப்பீட்டுத் தகவல்களை வழங்குவதற்குத் தோதான அமைப்புமுறைகளைக் கொண்டிருத்தல்.

7. ஒவ்வொரு காப்புறுதியாளரும், பின்வருவனவுட்பட முறையான இடர்க்கட்டுப்பாட்டு மற்றும் தணிப்பு வழிமுறைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) அடையாளங்காணப்பட்டுள்ள பணம் தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாதி நிதியளிப்பு இடர்களை முகாமை செய்வதற்கும் தணிப்பதற்கும் உள்ளகக் கொள்கைகளையும், கட்டுப்பாடுகளையும், நடவடிக்கை முறைகளையும் கொண்டிருத்தல வேண்டும்;

(ஆ) அக்கொள்கைகள், கட்டுப்பாடுகள் மற்றும் நடவடிக்கை முறைகள் நடைமுறைப்படுத்தப்படுவதனைக் கண்காணித்தலும் அவசியமாயின் அவற்றை மேம்படுத்துதலும் வேண்டும்; அத்துடன்

(இ) இடர் அடிப்படையிலான அணுகுமுறையை அடிப்படையாகக் கொண்டு இடர்களை முகாமை செய்வதற்கும் தணிப்பதற்கும் தோதான வழிமுறைகளை எடுத்தல் வேண்டும்.

8. ஒவ்வொரு காப்புறுதியாளரும், பின்வருவனவற்றைக் கவனத்துட்கொண்டு அதன் வாடிக்கையாளர்கள்மீதான இடர் வெளிப்பாடாக்குதலைச் செயற்படுத்துதல் வேண்டும்:-

(அ) வாடிக்கையாளர் வகுதிக்கிணங்க இடர் மட்டம் (உதாரணம், வதிவுள்ள அல்லது வதிவற்ற, இடைக்கிடை அல்லது இருந்திட்டொன்றான, சட்ட ஆட்கள், அரசியல் ரீதியில் முகங்கொடுக்கவேண்டிய ஆட்கள் மற்றும் வெவ்வேறு வகையினவான தான்புரிதொழில்களில் ஈடுபட்டுள்ள வாடிக்கையாளர்கள் போன்ற வெவ்வேறு வகையினரான வாடிக்கையாளர்கள்);

(ஆ) தொழிலினது புவியியற்சார் அமைவிடம் அல்லது வாடிக்கையாளரின் மூலநாடு;

(இ) வாடிக்கையாளரின் அளிபொருட்கள், சேவைகள், கொடுக்கல்வாங்கல்கள் அல்லது சேர்ப்பிப்பு வழிகள் (உதாரணம், பண அடிப்படையிலான, நேருக்குநேரான அல்லது நேருக்குநேரல்லாத, எல்லைகடந்த); அத்துடன்

(ஈ) வாடிக்கையாளர் தொடர்பான வேறெவையேனும் தகவல்கள்.

9. ஒவ்வொரு வாடிக்கையாளரினாலும் நடைமுறைப்படுத்தப்பட்ட இடர்க் கட்டுப்பாட்டு மற்றும் தணிப்பு வழிமுறைகள், இடர் வெளிப்பாடாக்குதல் மீது அடையாளங்காணப்பட்டவாறு குறிப்பிட்டவொரு வாடிக்கையாளரின் இடர் மட்டத்துடன் ஒத்ததாகவிருத்தல் வேண்டும்.

10. ஒரு வாடிக்கையாளரைத் தொடக்கத்தில் ஏற்றுக்கொள்வதன்மேல், ஒவ்வொரு காப்புறுதியாளரும், வாடிக்கையாளரின் பணம் தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாதி நிதியளிப்பு இடரின் மட்டத்தினை அடிப்படையாகக்கொண்டு அவரின் இடர் வெளிப்பாட்டைக் கிரமமாகப் பரிசீலனை செய்தலும் நாளதுவரையாக்குதலும் வேண்டும்.

11. ஒரு காப்புறுதியாளரின் பணம் தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாதி நிதியளிப்பு இடர் முகாமை, காப்புறுதியாளர் தொடர்பான ஒட்டுமொத்த இடர் முகாமையுடன் இணைக்கப்படுதலும் ஒன்றிணைக்கப்படுதலும் வேண்டும்.

12. ஒவ்வொரு காப்புறுதியாளரும், அதன் பணிப்பாளர் சபைக்கு,அதன் இடர் மதிப்பீடு,காப்புறுதியாளரின் பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதி நிதியளிப்பு இடர் வெளிப்பாடு மற்றும் இடர்க்கட்டுப்பாட்டு அத்துடன் தணிப்பு வழிமுறைகளின் பயனுடைமை என்பன பற்றி உரிய நேரத்திலான அறிக்கையொன்றை வழங்குதல் வேண்டும். அறிக்கையிடுதலின் அடிக்கடியானதன்மை, சம்பந்தப்பட்ட இடர்களின் மட்டத்துடனும் அதன் தொழிற்பாட்டுச் சூழலுடனும் ஒத்ததாக இருத்தல் வேண்டும்.

13. விதி 12இல் குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கை பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும்:-

(அ) பணம் தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாதி நிதியளிப்பு இடர்களை முறியடிப்பதற்குக் காப்புறுதியாளரினால் நிறைவேற்றப்பட்ட கண்காணிப்புச் செயற்பாடுகளின் பெறுபேறுகள் (உதாரணம், பணம் தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாதி நிதியளிப்புக்குக் காப்புறுதியாளர் முகங்கொடுக்கவேண்டிய மட்டம், முக்கிய செயற்பாடுகள் அல்லது வாடிக்கையாளர் கூறுகளை அடிப்படையாகக் கொண்டு பணம் தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாதி நிதியளிப்பு இடருக்கான முகங்கொடுத்தல்களின் நிலைகுலைவு, சட்டத்தின் நியதிகளின்படி சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கைகளினதும் வரம்பு அறிக்கைகளினதும் பாங்குகள், ஐக்கிய நாடுகள் சபைப் பாதுகாப்புப் பேரவைத் தீர்மானங்களின் கீழான நீதிமுறைத் தீர்ப்புக்களும் முடக்குதல் வழக்குகளும்);

(ஆ) ஒன்றில் உள்ளகரீதியில் அல்லது வெளியகரீதியில், அண்மைக்காலத்தய குறிப்பிடத்தக்க இடர்களின் விபரங்களும், தொழிற்பாட்டுமுறையும் காப்புறுதியாளரின்மீது அதன் தாக்கமும் அல்லது இயல்திறத் தாக்கமும்; அத்துடன்

(இ) பணம் தூய்தாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் பற்றிய எழுத்திலான சட்டங்களிலுள்ள அண்மைக்காலத்தய அபிவிருத்திகளும் காப்புறுதியாளருக்கான அதன் உட்கிடைகளும்.

**உள்ளகக் கட்டுப்பாடுகள், கொள்கைகள், இணங்கியொழுகுகை, கணக்காய்வு மற்றும் பயிற்சி**

14. (1) ஒவ்வொரு காப்புறுதியாளரும், பணம் தூய்தாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் பற்றி அப்போதைக்கு வலுவிலுள்ள எழுத்திலான சட்டங்களுக்கமைவாக, அதன் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட உள்ளகக் கொள்கையொன்றை வகுத்தமைத்தல் வண்டும்.

(2) விபரமான நடவடிக்கை முறைகளும் கட்டுப்பாடுகளும், அத்தகைய கொள்கைக்கிணங்கியொழுக, ஒவ்வொரு காப்புறுதியாளரினாலும் அபிவிருத்தி செய்யப்படுதல் வேண்டும்.

15. அத்தகைய கொள்கைகளும் நடவடிக்கை முறைகளும் கட்டுப்பாடுகளும், இடர் மதிப்பீட்டு நடவடிக்கை முறைகள், வாஉவி வழிமுறைகள், பதிவேடு வைத்திருக்கும் முறை, வரம்பு அறிக்கையிடும் நடவடிக்கை முறைகள், வழமைக்குமாறான மற்றும் சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்களைக் கண்டுபிடித்தலும் உள்ளகரீதியில் அறிக்கையிடும் நடவடிக்கை முறையும் சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்களை நிதிசார் உளவறிதற் கூறுக்கு அறிக்கையிடுவதற்கான கடப்பாடு என்பவற்றை உள்ளடக்குதல் வேண்டும்.

16. ஒவ்வொரு காப்புறுதியாளரும், கொள்கைகளையும் நடவடிக்கை முறைகளையும் கட்டுப்பாடுகளையும் வகுத்தமைப்பதில், விசேடமாக வாஉவி வழிமுறைகளின் அடிப்படை நெறிகளுடன் அநாமதேய அல்லது ஒவ்வாமைச் சிறப்புக்கூறுகளைக் கொண்ட புதிய அல்லது அபிவிருத்தியடைந்து வருகின்ற தொழில்நுட்பவியல்களின் பயன்பாட்டிலிருந்து எழக்கூடிய, பணம் தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாதி நிதியளிப்பு இடர்களைக் கவனத்துட்கொள்ளுதல் வேண்டும்.

17. ஒவ்வொரு காப்புறுதியாளரும்-

(அ) இணங்கியொழுகுகை அலுவலராகச் சிரேட்ட முகாமைத்துவ மட்ட அலுவலரொருவரை நியமித்தல் வேணடும்; சட்டத்தினதும இவ்விதிகளினதும் தேவைப்பாடுகள் காப்புறுதியாளரினால் இணங்கியொழுகப்படுகின்றமையை உறுதிப்படுத்துவதற்கு அவர் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்;

(ஆ) இணங்கியொழுகுகை அலுவலர் அல்லது அவருக்கு உதவிபுரிவதற்கு அல்லது அவர் சார்பில் செயலாற்றுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனுமாள், அவர்களின் பணிகளை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படக்கூடிய எல்லா வாடிக்கையாளர் பதிவேடுகளுக்கும் மற்றும் ஏனைய இயைபான தகவல்களுக்கும் உடனடியான அணுக்கம் கொண்டிருப்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்;

(இ) நிரந்தர, ஒப்பந்த முறையிலான அல்லது வெளிவாரியினராயினுஞ்சரி, எல்லா ஊழியர்களையும் நியமிக்கின்ற அல்லது வேலைக்கமர்த்துகின்ற நேரத்தில் நிறைவேற்றப்படவேண்டிய அனைத்துமடங்கிய ஊழியர் பற்றிய உரிய விழிப்புக்கவன மற்றும் முன்னாய்வு நடவடிக்கை முறையை அபிவிருத்தி செய்து நடைமுறைப்படுத்துதல் வேண்டும்;

(ஈ) பணம் தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாதி நிதியளிப்பு இடர் முகாமை தொடர்பாகச் சட்டத்தையும் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியையும் உள்ளகக் கொள்கைகளையும் நடவடிக்கை முறைகளையும் பயனுள்ளவகையில் நடைமுறைப்படுத்துவதற்கென, பணிப்பாளர் சபையுட்பட இயைபான ஊழியர்களுக்குப் பொருத்தமான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை அடிக்கடி திட்டமிட்டு நடைமுறைப்படுத்துதல் வேண்டும்; அத்துடன்

(உ) அதற்குப்போதியமுறையில் வளமளிக்கப்படுவதனையும் காப்புறுதியாளரின் உள்ளகக் கொள்கைகள், நடவடிகளை முறைகள் மற்றும் கட்டுப்பாடுகள் என்பவற்றின் பயனுறுத்தத்தையும், ட்டத்துடனும் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியுடனும் அதன் இணங்கியொழுகுகையையும் கிரமமாக மதிப்பிடுவதற்கு இயன்றதாகவுள்ளமையையும உறுதிப்படுத்துவதற்குத் சுயாதீனமான கணக்காய்வுப் பணியொன்றைப் பேணுதல் வேண்டும்.

**வெளிநாட்டுக் கிளைகளும் துணைநிலைக் கம்பெனிகளும்**

18. காப்புறுதியாளர்களைக் கொண்டுள்ள நிதிசார் தொகுதிகள், பணம் தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாதி நிதியளிப்புச் செயற்பாடுகளை முறியடிக்கும் நோக்குடன் நிதிசார் தொகுதியின் எல்லாக் கிளைகளுக்கும், பெரும்பான்மையைக் கொண்டிருக்கும் துணைநிலைக் கம்பெனிகளுக்கும் ஏற்புடையற்பாலவையாகவும் தோதானவையாகவுமிருக்கவேண்டிய தொகுதியளவில் பரந்த நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் வேண்டுமென்பதுடன், 17ஆம் விதியிற் குறிப்பீடு செய்யப்பட்ட வழிமுறைகளுடன் சேர்த்து மேலதிகமாகப் பின்வருவனவற்றை உள்ளடக்குதலும் வேண்டும்:-

(அ) வாஉவி, பணம் தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாதி நிதியளிப்பு இடர் முகாமை என்பவற்றைச் செயற்படுத்தும் நோக்கங்களுக்காகத் தேவைப்பட்ட தகவல்களைப் பகிர்வதற்கான வழிமுறைகளையும் நடவடிக்கை முறைகளையும் தொடக்குதல்;

(ஆ) பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமாகின்றபோது, நிதிசார் தொகுதியின் எல்லாக் கிளைகளிலிருந்தும் துணைநிலைக் கம்பெனிகளிலிருந்தும், தொகுதிமட்ட இணங்கியொழுகையுடன், வாடிக்கையாளர்கள், காப்புறுதிப்பத்திரங்களும் கொடுக்கல்வாங்கல்களும் மற்றும் கணக்காய்வுகள் பற்றிய தகவல்களை வழங்குதல்; அத்துடன்

(இ) நிதிசார் தொகுதியின் கிளைகளுக்கும் துணைநிலைக்கம்பெனிகளுக்குமிடையே பரிமாறப்பட்ட தகவல்களின் அந்தரங்கத்தன்மை மற்றும் பயன்பாடு பற்றிப் போதிய பாதுகாப்புகளைப் பேணுதல்.

19. ஒவ்வொரு காப்புறுதியாளரும், அதன் வெளிநாட்டுக் கிளைகளும் பெரும்பான்மையைக் கொண்டிருக்கும் துணைநிலைக் கம்பெனிகளும், இயைபான வெளிநாட்டின் இயைபான எழுத்திலான சட்டங்கள் உள்நாட்டுச் சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டவற்றைப் பார்க்கக் கடுமை குறைந்த தேவைப்பாடுகளுக்கு ஏற்பாடுசெய்யுமிடத்து, உள்நாட்டுச் சட்டத்தின் தேவைப்பாடுகளுடன் ஒத்திருக்கின்ற பணம் தூய்தாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் வழிமுறைகளை ஏற்புடையனவாக்குவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

20. உள்நாட்டுச்சட்டத் தேவைப்பாடுகளுக்கு ஒத்ததாகவுள்ள பணம் தூய்தாக்கலுக்கெதிரான அல்லது பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் வழிமுறைகளை முறையாக நடைமுறைப்படுத்துவதனை அவ்வெளிநாடு அனுமதிக்காதவிடத்து, ஒவ்வொரு காப்புறுதியாளரும், பணம் தூ ய்தாக்கல் மற்றும் பயங்கரவாதி நிதியளிப்பு இடர்களை முகாமை செய்வதற்குத் தோதான மேலதிக வழிமுறைகளை ஏற்புடையனவாக்குதல் வேண்டும்.

**புதிய தொழிநுட்பவியல்களைப் பயன்படுத்துதல்**

21. ஒவ்வொரு காப்புறுதியாளரும், புதிய சேர்ப்பிப்பு அமைப்பு முறைகளும், புதிய மற்றும் முன்னரிருந்த அளிபொருட்களுக்காகப் புதிய அல்லது அபிவிருத்தியடைந்து வருகின்ற தொழிநுட்பவியல்களின் பயன்பாடும் உட்பட, புதிய அளிபொருட்களினதும் புதிய தொழிற்செயல்முறைகளினதும் அபிவிருத்தி தொடர்பாக எழக்கூடிய பணம் தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாதி நிதியளிப்பு இடர்களை அடையாளங்கண்டு மதிப்பிடுதல் வேண்டும்.

22. ஒவ்வொரு காப்புறுதியாளரும் -

(அ) புதிய அளிபொருட்கள், செயல்முறைகள் மற்றும் தொழிநுட்பவியல்களை ஆரம்பிக்கு முன்னர் அல்லது பயன்படுத்து முன்னர் இடர் மதிப்பீடுகளை பொறுப்பேற்றல் வேண்டும்; அத்துடன்

(ஆ) புதிய அளிபொருட்களினதும் புதிய தொழிற் செயல்முறைகளினதும் அபிவிருத்தி தொடர்பாக எழக்கூடிய இடர்களை முகாமை செய்வதற்கும் தணிப்பதற்கும் தோதான வழிமுறைகளை எடுத்தல் வேண்டும்.

பாகம் II

## வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக்கவனம் (வாஉவி)

**பொதுவாக வாஉவி**

23. (1) சட்டத்தின் 2ஆம் பிரிவின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி, காப்புறுதியாளர் எதுவும், ஏதேனும் அநாமதேயக் காப்புறுதிப்பத்திரத்தை, ஒரு பொய்யான பெயரிலான, அல்லது ஒரு கற்பிதமான ஆளின் பெயரிலான ஏதேனும் காப்புறுதிப்பத்திரத்தை அல்லது (இதனகத்துப்பின்னர் "இலக்கமிடப்பட்ட காப்புறுதிப்பத்திரம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஓர் இலக்கத்தினால் மட்டும் அடையாளங்காணப்படுகின்ற ஏதேனும் காப்புறுதிப்பத்திரத்தைத் திறத்தலோ, தொழிற்படுத்துதலோ அல்லது பேணுதலோ ஆகாது.

(2) இலக்கமிடப்பட்ட காப்புறுதிப்பத்திரம் என்பது, சொத்தாண்மையானது காப்புறுதியாளர் அறியாமல் கைமாற்றப்படத்தக்கதான ஒரு காப்புறுதிப்பத்திரத்தையும் காப்புறுதிப்பத்திரம் வைத்திருப்பவரின் பெயர் விட்டுவிடப்பட்டதாகத் தொழிற்படுத்தப்பட்டுப் பேணப்பட்ட ஒரு காப்புறுதிப்பத்திரத்தையும் உள்ளடக்குகின்றது.

24. (1) காப்புறுதியாளரொருவர் ஒரு முகவரினூடாக வாடிக்கையாளரொருவருடன் தொழில் தொடர்பொன்றைத் தொடங்குமிடத்து, அத்தகைய காப்புறுதியாளர், வாஉவி தொடர்பாக இவ்விதிகளின் ஏற்பாடுகளுக்கிணங்கியொழுகும்படி அம்முகவரைத் தேவைப்படுத்துதல் வேண்டும்.

(2) அத்தகைய காப்புறுதியாளர் வாஉவிழிப்புக்கவனததைச் செயற்படுத்துவதில் முகவர்களினால் பொறுப்பேற்கப்படவேண்டிய செய்முறைகளையும் முகவர்களுடனான அதன் உடன்படிக்கையில் இணங்கியொழுகாமை ஏற்படும் பட்சத்தில் காப்புறுதியாளரினால் எடுக்கப்பட்ட தோதான வலுவுறுத்தப்படற்பாலதான நடவடிக்கையையும் எடுத்துக்கூறுதல் வேண்டும்.

25. ஒவ்வொரு காப்புறுதியாளரும், வாடிக்கையாளர்கள்ம மீது, பின்வரும் சந்தர்ப்பங்களின்போது, இவ்விதிகளில் குறித்துரைக்கப்பட்ட வாஉவி வழிமுறைகளைச் செயற்படுத்துதல் வேண்டும்:-

(அ) தொழில் தொடர்புகளைத் தொடங்கும்போது;

(ஆ) தொகையைப் பொருட்படுத்தாது, அத்தகைய வாடிக்கையாளர், பணம் தூய்தாக்கல் அல்லது பயங்கரவாதி நிதியளிப்புச் செயற்பாடுகளில் சம்பந்தப்பட்டுள்ளாரெனக் காப்புறுதியாளருக்கு ஏதேனும் சந்தேகம் இருக்கும்போது; அல்லது

(இ) முன்னர் பெறப்பட்ட தகவல்களின் உண்மைத்தன்மை பற்றி அல்லது போதுமாந்தன்மை பற்றிக் காப்புறுதியாளருக்கு ஏதேனும் ஐயம் உள்ளபோது.

26. ஒவ்வொரு காப்புறுதியாளரும்-

(அ) தொழில் தொடர்புகளைத் தொடங்குமுன்னர் அதன் வாடிக்கையாளர்களை அடையாளங்காணுதல் வேண்டும்;

(ஆ) இதற்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதலும், ஏற்புடையற்பாலவாறு அத்தகைய தகவல்களைச் சரிபார்த்தலும், குறைந்தபட்சத்தில், வாடிக்கையாளர்களை அடையாளங்காணும் மற்றும் தொடக்க இடர் வெளிப்பாடாக்குதலைச் செய்யும் நோக்கத்துக்காக அவற்றைப் பதிதலும் வேண்டும்;

(இ) குறைந்தபட்சத்தில், வாஉவிழிப்புக்கவனத்தைச் செயற்படுத்தும் நோக்கத்துக்காகப் பின்வரும் தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்:-

(i) கொடுக்கல்வாங்கலின் நோக்கம்;

(ii) நிதிகளின் மூலங்கள்;

(iii) எதிர்பார்க்கப்பட்ட மாதாந்த மொத்த வரவு;

(iv) கொடுக்கல்வாங்கல்களைச் செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட முறை (உதாரணம், பணம், காசோலை முதலியன);

(v) எதிர்பார்க்கப்பட்ட மறுதரப்புக்களின் வகை (ஏற்புடையதாயின்);

(ஈ) வாடிக்கையாளரின் சார்பில் செயலாற்றுபவராகக் கொள்ளப்படுகின்ற எவரேனுமாள் அவ்வாறு அதிகாரமளிக்கப் பட்டுள்ளாராவென்பதைச் சரிபார்த்தலும், அத்தகைய ஆளின் ஆளடையாளத்தை அடையாளங்காணுதலும் சரிபார்த்தலும் வேண்டும்;

(உ) காப்புறுதியாளரின் திருப்திக்கு, நம்பகமான மூலமொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட இயைபான தகவல்களை அல்லது தரவுகளைப் பயன்படுத்தி, பயன்பெறும் சொந்தக்காரரை அடையாளங்காணுதலும், பயன்பெறும் சொந்தக்காரரின் ஆளடையாளத்தைச் சரிபார்ப்பதற்கு நியாயமான வழிமுறைகளை எடுத்தலும் வேண்டும்;

(ஊ) பயன்பெறுநரை அடையாளங்காணுதலும் வாஉவிழிப்புக்கவனத்தைச் செயற்படுத்தும் நோக்கத்துக்காகப் பின்வரும் தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதலும் வேண்டும்:-

(i) குறிப்பாகப் பெயர் குறிப்பிடப்பட்ட இயற்கை அல்லது சட்ட ஆட்களாக அல்லது சட்ட ஒழுங்கேற்பாடுகளாக அடையாளங்காணப்படுகின்ற ஒரு பயன்பெறுநருக்காக: அவ்வாளின் பெயரைப் பெற்றுக்கொள்ளுதல்;

(ii) பண்பியல்புகளினால் அல்லது வகுப்பினால் அல்லது வேறு வழிவகைகளினால் பெயர் குறிக்கப்படுகின்ற ஒரு பயன்பெறுநருக்காக: பணஞ்செலுத்தும் நேரத்தில் காப்புறுதியாளர் பயன்பெறுநரின் ஆளடையாளத்தை நிலைநாட்டுவதற்கு இயன்றதாகவிருக்குமென அதனைத் திருப்திப்படுத்துவதற்குப் பயன்பெறுநர் சம்பந்தமாகப் போதிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல் (உதாரணம், ஓர் இறுதிவிருப்பாவணத்தின்கீழ் அல்லது மரணசாதனத்தின்கீழ்); அத்துடன்

(iii) உட்பந்திகள் (i) மற்றும் (ii) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட ஒரு பயன்பெறுநரின் விடயத்தில், பயன்பெறுநரின் ஆளடையாளம் பணஞ்செலுத்தும் நேரத்தில் சரிபார்க்கப்படுதல் வேண்டும்.

27. அதிகரித்த வாஉவி வழிமுறைகள் ஏற்புடையற்பாலனவாக இருக்கவேண்டுமா என்பதைத் தீர்மானிப்பதில் காப்புறுதியாளர் ஒவ்வொன்றும், பயன்பெறுநர் தகவல்களை இயைபான இடர்க் காரணியொன்றாக உள்ளடக்குதல் வேண்டும். ஒரு சட்ட ஆளாகவுள்ள அல்லது சட்ட ஒழுங்கேற்பாடாகவுள்ள பயன்பெறுநரொருவர் கூடுதலான இடரொன்றை முன்வைக்கின்றாரெனக் காப்புறுதியாளர் தீர்மானித்தால், அது, அதிகரித்த வாஉவி வழிமுறைகளை எடுத்தல் வேண்டும்; பணஞ்செலுத்தும் நேரத்தில், பயன்பெறுநரின் பயன்பெறும் சொந்தக்காரரை அடையாளங்கண்டு அவரின் ஆளடையாளத்தைச் சரிபார்ப்பதற்கான நியாயமான அமைப்பு முறைகளை இவை உள்ளடக்குதல் வேண்டும்.

**சரிபார்த்தலின் காலத்துக்குகந்தமை**

28. ஒவ்வொரு காப்புறுதியாளரும்,தொழில் தொடர்பொன்றைத் தொடங்குவதற்கு முன்னர் அல்லது அதன்போது, வாடிக்கையாளரினதும் பயன்பெறும் சொந்தக்காரரினதும் ஆளடையாளத்தைச் சரிபார்த்தல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், காப்புறுதியாளரின் இடர் வெளிப்பாட்டின்படி வாடிக்கையாளரின் இடர் மட்டம் குறைவாகவிருக்குமிடத்தும் தொழில் தொடர்பைத் தொடங்கும் கட்டத்தில் சரிபார்த்தல் இயன்றதாகவிராதவிடத்தும், காப்புறுதியாளர், 29ஆம் விதிக்கமைவாக, தொழில் தொடர்பைத் தொடங்கியதனையடுத்துப் பின்னர் இயைபான ஆவணங்களைக் கொடுத்துதவுவதற்கு அதன் வாடிக்கையாளருக்கும் பயன்பெறும் சொந்தக்காரருக்கும் அனுமதியளிக்கலாமென்பதுடன், (இதனகத்துப்பின்னர் “தாமதித்த சரிபார்த்தல்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) சரிபார்த்தலையும் அடுத்துப்பின்னர் பூர்த்திசெய்யலாம்.

29. தாமதித்த சரிபார்த்தல் அனுமதிக்கப்படும் ஏதேனும் விடயத்தில், பின்வரும் நிபந்தனைகள் திருப்திசெய்யப்படுதல் வேண்டும்:-

(அ) நியாயமானமுறையில் செயல்முறைக்குகந்தவாறு விரைவாக ஆனால் தொழில் தொடர்பு தொடங்கப்பட்ட தேதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குப் பிந்தாமல் சரிபார்த்தல் பூர்த்திசெய்யப்படுதல் வேண்டும்;

(ஆ) காப்புறுதியாளரின் வழமையான தொழிற் செயற்பாட்டை இடையீடு செய்யாதவகையில் தாமதமானது அத்தியாவசியமாகவிருத்தல் வேண்டும்; அத்துடன்

(இ) பணம் தூய்தாக்கல் அல்லது பயங்கரவாதி நிதியளிப்பு இடர் பற்றிய சந்தேகமெதுவும் சம்பந்தப்பட்டிருத்தலாகாது.

30. தாமதித்த சரிபார்த்தல் இடரைத் தணிப்பதற்கு, ஒவ்வொரு காப்புறுதியாளரும், சரிபார்த்தலுக்கு முன்னர் தொழில் தொடர்பை எந்நிபந்தனைகளின்கீழ் வாடிக்கையாளர் பயன்படுத்தக்கூடுமோ அந்நிபந்தனைகள் தொடர்பான இடர்முகாமை நடவடிக்கை முறைகளைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

31. காப்புறுதியாளரொன்று இயைபான வாஉவி வழிமுறைகளுக்கு இணங்கியொழுகுவதற்கு இயலாததாகவுள்ளவிடத்து, அத்தகைய காப்புறுதியாளர்,-

(அ) ஒரு புதிய வாடிக்கையாளர் தொடர்பாகத் தொழில் தொடர்பைத் தொடங்குதலாகாது அல்லது கொடுக்கல்வாங்கலைப்புரிதலாகாது; அல்லது

(ஆ) ஏலவேயுள்ள வாடிக்கையாளரொருவர் தொடர்பாக, அத்தகைய வாடிக்கையாளருடனான தொழில் தொடர்பை முடிவுறுத்துதல் வேண்டும்; அத்துடன் அவ்வாடிக்கையாளர் தொடர்பாகச் சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல் அறிக்கையொன்றைக்கோப்பிடுவதனைக் கவனத்துட்கொள்ளுதலும் வேண்டும்.

**அதிகரித்த வாஉவி**

32. வாடிக்கையாளரொருவருக்கான மதிப்பிடப்பட்ட பணம் தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாதி நிதியளிப்பு இடரானது உயர் இடராக மதிப்பிடப்பட்டுள்ளவிடத்து, காப்புறுதியாளர் ஒவ்வொன்றும், 26ஆம் விதியிற் குறித்துரைக்கப்பட்ட பொதுவான வாஉவி வழிமுறைகளுடன்சேர்த்து மேலதிகமாக, பின்வரும் அதிகரித்த வாஉவி வழிமுறைகளையும் செயற்படுத்துதல் வேண்டும்:-

(அ) வாடிக்கையாளர் மற்றும் பயன்பெறும் சொந்தக்காரர் பற்றி மேலதிகத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல் (உதாரணம், பகிரங்கத் தரவுத்தளங்களிலிருந்து சொத்துக்களின் அளவும் ஏனைய தகவல்களும்);

(ஆ) வாடிக்கையாளருடனான அத்தகைய தொழில் தொடர்பைத் தொடங்குவதற்குமுன்னர், அல்லது ஏலவேயுள்ள வாடிக்கையாளரொருவரின் விடயத்தில் தொடர்ந்து நடாத்துவதற்காக, சிரேட்ட முகாமைத்துவம் ஏதேனுமிருப்பின் அதனிடமிருந்து அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுதல்;

(இ) தொழில் தொடர்பின் உட்கருதப்பட்ட தன்மை பற்றி மேலதிகத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல்;

(ஈ) வாடிக்கையாளரினதும் பயன்பெறும் சொந்தக்காரரினதும் அடையாளங்காணல் தரவுகளைக் கிரமமாக நாளது வரையாக்குதல்; அத்துடன்

(உ) எதிர்கால அல்லது புரியப்பட்ட கொடுக்கல்வாங்கல்களுக்கான காரணங்கள் பற்றி விசாரணை செய்தலும் அவற்றைப பதிதலும்.

33. ஒரு வாடிக்கையாளரினதும் பயன்பெறும் சொந்தக்காரரினதும் ஆளடையாளத்தைச் சரிபார்ப்பதற்கு முன்னர், எச்சூழ்நிலையின் கீழும் காப்புறுதியாளரெதுவும், பணம் தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாதி நிதியளிப்புத் தொடர்பில் உயர் இடரைக்கொண்ட ஒரு வாடிக்கையாளருடன் தொழில் தொடர்பொன்றைத் தொடங்குதலாகாது அல்லது ஏதேனும் கொடுக்கல்வாங்கலைச் செயற்படுத்துதலாகாது.

**தொடர்ச்சியான உரிய விழிப்புக்கவனம்**

34. ஒவ்வொரு காப்புறுதியாளரும், வாடிக்கையாளருடனான தொழில் தொடர்பைத் தொடர்வதன்மீது சட்டத்தின் 5ஆம் பிரிவின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி பின்வருவன மூலம் தொடர்ச்சியான உரிய விழிப்புக்கவனத்தையும் தொடர்ச்சியான நுனித்தாராய்வையும் செயற்படுத்துதல் வேண்டும்:-

(அ) அவசியமானவிடத்து நிதிகளின் மூலமுட்பட, வாடிக்கையாளர், அவரின் தொழிலும் இடர் வெளிப்பாடும் என்பன தொடர்பில் செயற்படுத்தப்பட்டுவருகின்ற கொடுக்கல்வாங்கல்கள் காப்புறுதியாளரின் அறிவுடன் ஒத்ததாகவுள்ளதனை உறுதிப்படுத்துவதற்கு அந்தத் தொடர்பின்போது பூராகவும் பொறுப்பேற்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்களை நுனித்தாராய்தல்;

(ஆ) வாஉவி செய்முறையின்கீழ் சேகரிக்கப்பட்ட ஆவணங்கள், தரவுகள் அல்லது தகவல்கள், குறிப்பாக 48ஆம் விதியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட உயர் இடர் நாடுகளிலிருந்தான வாடிக்கையாளர்களுக்காக ஏலவேயுள்ள பதிவேடுகளின் பரிசீலனைகளைப் பொறுப்பேற்பதன் மூலம் நாளதுவரையானவையும் இயைபானவையுமாக வைத்திருக்கப்படுவதனை உறுதிப்படுத்துதல்; அத்துடன்

(இ)

(i) வழமைக்குமாறாகக் காணப்படுகின்ற :

(ii) கொடுக்கல்வாங்கல்களின் அளவுடன் ஒப்பிடும்போது எதிர்பார்க்கப்பட்ட செயற்பாட்டு வகை மற்றும் தொழில் மாதிரியுடன் ஒவ்வாததாகவுள்ள;

(iii) ஏதேனும் வெளிப்படையான பொருளாதார நோக்கத்தைக் கொண்டிராததாகவுள்ள; அல்லது

(iv) விசேடமாக ஒரு சிக்கலான மற்றும் பாரிய கொடுக்கல்வாங்கல் தொடர்பாக அல்லது உயர் இடர் வாடிக்கையாளர்களைச் சம்பந்தப்படுத்துகின்ற ஒரு கொடுக்கல்வாங்கல் தொடர்பாக, அத்தகைய கொடுக்கல்வாங்கலின் சட்டத்தன்மை பற்றிய சந்தேகத்தை எழுப்புகின்றதாகவுள்ள,

ஏதேனும் கொடுக்கல்வாங்கலின் அல்லது தொழில் தொடர்பின் பொருளாதாரப் பின்னணியையும் நோக்கத்தையும் கவனத்துட்கொள்ளுதல்.

35. தொடர்ச்சியான வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவனத்தின் அல்லது அதிகரித்த தொடர்ச்சியான வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவனத்தின் அடிக்கடியானதன்மை, இடர் வெளிப்பாட்டின் மற்றும் கொடுக்கல்வாங்கல்களினது தன்மையின் அடிப்படையில், வாடிக்கையாளரினால் ஏற்படுத்தப்படக்கூடிய பணம் தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாதி நிதியளிப்பு இடர்களின் மட்டத்தை ஒத்திருத்தல் வேண்டும்.

36. ஒவ்வொரு காப்புறுதியாளரும், அதிகரித்த தொடர்ச்சியான உரிய விழிப்புக்கவனத்தைச் செயற்படுத்தும்போது, பிரயோகிக்கப்பட்ட கட்டுப்பாடுகளின் எண்ணிக்கையையும் காலத்துக்குகந்தமையையும் அதிகரித்தல் வேண்டுமென்பதுடன், மேலதிகப் பரிசோதனை தேவைப்படும் கொடுக்கல்வாங்கல்களின் சாயல்களைத் தெரிவுசெய்தலும் வேண்டும்.

**ஏலவேயுள்ள வாடிக்கையாளர்கள்**

37. ஒவ்வொரு காப்புறுதியாளரும், ஏலவேயுள்ள வாடிக்கையாளரொருவரின் பொருண்மை மற்றும் இடர் பற்றிய மதிப்பீட்டைக் கருத்திற்கொண்டு ஏலவேயுள்ள அதன் வாடிக்கையாளர்களின் மீது வாஉவி வழிமுறைகளைச் செயற்படுத்துதல் வேண்டும். பொருண்மை மற்றும் இடரை மதிப்பிடுவதில், ஒவ்வொரு காப்புறுதியாளரும் பின்வருவனவற்றைக் கவனத்துட்கொள்ளலாம்:-

(அ) கொடுக்கல்வாங்கலின் குறிப்பிடத்தகுநிலையுட்பட, கொடுக்கல்வாங்கலின் தன்மையும் அதனைச் சுற்றியுள்ள சூழ்நிலைகளும்;

(ஆ) காப்புறுதிப்பத்திரம் அல்லது தொழில் தொடர்பு தொழிற்படுத்தப்படும் முறையில் ஏதேனும் முக்கிய மாற்றம்; அல்லது

(இ) வாடிக்கையாளர் பற்றி வைத்திருக்கப்பட்ட தகவல்களின் போதாத்தன்மை அல்லது வாடிக்கையாளர் பற்றிய தகவல்களிலான மாற்றம்.

38. காப்புறுதியாளரொன்று, பின்வரும் சூழ்நிலைகளில், முன்னர் செயற்படுத்தப்பட்ட வாஉவி மீது மேலதிகச் சரிபார்த்தலைச் செயற்படுத்தாதுவிடலாம்:

(அ) காப்புறுதிப்பத்திரத்தின் நியதிநிபந்தனைகளுக்கான முக்கிய மாற்றங்கள் எவையுமின்றி அக்காப்புறுதிப் பத்திரங்களைப்புதுப்பித்தலும் மீளநிலைநாட்டுதலும் (காப்புறுதிப்பத்திரத்தின்கீழான நன்மைகளுட்பட); அல்லது

(ஆ) மருத்துவமனை மற்றும் அறுவை மருத்துவக் காப்புறுதி, இக்கட்டான சுகவீனக் காப்புறுதி என்பனவுட்பட, ஒப்படைப்புப் பெறுமதிகளின் கொடுப்பனவுக்கான ஏற்பாடு செய்யாத நீண்டகாலக் காப்புறுதிக் காப்பீடுகளின் பிரயோகங்கள்.

39. ஏலவேயுள்ள வாடிக்கையாளரொருவர் வாஉவி தொடர்பாகத் திருப்தியற்ற தகவல்களை வழங்கினால், அத்தகைய வாடிக்கையாளருடனான தொடர்பு, உயர் இடரை ஏற்படுத்துகின்ற தொடர்பொன்றாகக் கொள்ளப்படுதல் வேண்டுமென்பதுடன், அதிகரித்த வாஉவி வழிமுறைகளுக்கு அமைந்ததாகவிருத்தலும் வேண்டும்.

40. வாடிக்கையாளர் ஒருவர் தொடர்பாகப் பணம் தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாதி நிதியளிப்பு இடர் பற்றிய சந்தேகத்தைக் காப்புறுதியாளரொன்று உய்த்தறியுமிடத்தும், வாஉவி வழிமுறைகள் பற்றிய செய்முறையைச் செயற்படுத்துதல் வாடிக்கையாளருக்குக் குறிப்பறிவிக்குமென அது நியாயமான முறையில் நம்புகின்றவிடத்தும், அது வாஉவி வழிமுறைகளைச் செயற்படுத்துவதனை முடிவுறுத்துதல் வேண்டுமென்பதுடன், கொடுக்கல்வாங்கலை மேற்கொண்டு நடாத்தி உடனடியாகச் சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல் அறிக்கையொன்றைக் கோப்பிடுதலும் வேண்டும்.

**சட்ட ஆட்கள் மற்றும் சட்ட ஒழுங்கேற்பாடுகளுக்கான வாஉவி**

41. ஒவ்வொரு காப்புறுதியாளரும், ஒரு சட்ட ஆளாக அல்லது சட்ட ஒழுங்கேற்பாடாக இருக்கும் வாடிக்கையாளரொருவரின விடயத்தில்,-

(அ) வாடிக்கையாளரின் தொழில், அதன் சொத்தாண்மை மற்றும் கட்டுப்பாட்டுக் கட்டமைப்பு என்பனவற்றின் தன்மையைப புரிந்துகொள்ளுதல் வேண்டும்;

(ஆ) இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் நியதிகளின்படி வாடிக்கையாளரை அடையாளங்கண்டு சரிபார்த்தல் வேண்டும்.

42. சட்ட ஆளொருவரில் கட்டுப்படுத்துகின்ற சொத்தாண்மை அக்கறையை இறுதியாகக் கொண்டுள்ள இயற்கை ஆள் எவரேனுமிருப்பின் அவரை அடையாளங்காண்பதற்கென, காப்புறுதியாளரொன்று, குறைந்தபட்சத்தில், பின்வருவனவற்றைச் சரிபார்ப்பதற்கு நியாயமான வழிமுறைகளைப் பெற்றுக்கொள்ளுதலும் எடுத்தலும் வேண்டும்:-

(அ) பத்து சதவீதத்துக்கு மேற்பட்ட ஒப்புரவு அக்கறையைக் கொண்டுள்ள எல்லாப் பணிப்பாளர்களிலும் மற்றும் பங்குதார்களிலுமான ஏதேனும் மாற்றத்தை அறிவிக்கும்படி சட்ட ஆளின் மீது விதிக்கப்பட்ட தேவைப்பாட்டுடன் அத்தகைய பணிப்பாளர்களினதும் பங்குதாரர்களினதும் ஆளடையாளம்;

(ஆ) கட்டுப்படுத்துகின்ற சொத்தாண்மை அக்கறையுடனான ஆள் பயன்பெறும் சொந்தக்காரரா என்பது பற்றி ஐயமொன்றிருப்பின் அல்லது சொத்தாண்மை அக்கறை மூலம் இயற்கை ஆளெவரும் கட்டுப்பாட்டைச் செலுத்தாதவிடத்து, சுயாதீனமான மூலங்களினூடாகச் சட்ட ஆளின் மீது கட்டுப்பாட்டைச் செலுத்துகின்ற இயற்கை ஆள் எவரேனுமிருப்பின் அவரது ஆளடையாளம்;

(இ) ஒன்றில் சபைத் தீர்மானத்தின் மூலம் அல்லது வேறுவகையாகச் சட்ட ஆளைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக எவரேனுமாளுக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரவளிப்பு;

(ஈ) முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் இயற்கை ஆளெவரும் அடையாளங்காணப்படாதவிடத்து சிரேட்ட முகாமைத்துவப் பதவிகளை வகிக்கும் இயைபான இயற்கை ஆட்களின் ஆளடையாளம்; அத்துடன்

(உ) சட்ட ஆளொருவரின் கட்டுப்படுத்துகின்ற அக்கறை வேறொரு சட்ட ஆளுக்கு உரித்தாக்கப்படும்போது, அச்சட்ட ஆளைக கட்டுப்படுத்துகின்ற இயற்கை ஆளின் ஆளடையாளம்.

43. ஒரு சட்ட ஒழுங்கேற்பாட்டின் பயன்பெறும் சொந்தக்காரர்களை அடையாளங் காண்பதற்கென, காப்புறுதியாளர், பின்வருவனவற்றைச் சரிபார்ப்பதற்கு நியாயமான வழிமுறைகளைப் பெற்றுக்கொள்ளுதலும் எடுத்தலும் வேண்டும்:-

(அ) நம்பிக்கைப் பொறுப்புக்களுக்காக, நம்பிக்கைப் பொறுப்பின் ஆக்குநர், நம்பிக்கைப் பொறுப்பாளர்கள், பயன்பெறுநர் அல்லது பயன்பெறுநர்களின் வகுப்பு மற்றும் நம்பிக்கைப் பொறுப்பின் மீது இறுதியான பயனுறும் கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கின்ற வேறெவரேனும் இயற்கை ஆள் என்போரின் ஆளடையாளங்கள் (படிமுறைக் கட்டுப்பாடு மூலம் அல்லது சொத்தாண்மை மூலம் கட்டுப்படுத்துகின்றவர்கள் உட்பட); அல்லது

(ஆ) வேறுவகையினவான சட்ட ஒழுங்கேற்பாடுகளுக்காக, சமமான அல்லது ஒத்த பதவிகளிலுள்ள ஆட்களின் ஆளடையாளங்கள்.

44. காப்புறுதியாளர், பணஞ்செலுத்தப்படும் நேரத்தில் அல்லது உரிமைக் கோரிக்கையொன்றைச் செய்வதற்கான அவர்களின் உரிமையைப் பிரயோகிக்கும் நேரத்தில் பண்பியல்புகளினால் அல்லது பயன்பெறுநர்களின் வகுப்பினால் பெயர் குறிக்கப்படுகின்ற நம்பிக்கைப் பொறுப்புக்களின் பயன்பெறுநர்கள் பற்றிப் போதிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

**அரசசார்பற்ற ஒழுங்கமைப்புகள், இலாபம் ஈட்டா ஒழுங்கமைப்புகள் அல்லது தரும நிறுவனங்கள்**

45. காப்புறுதியாளர் ஒவ்வொன்றும், (இதனகத்துப் பின்னர் “அசாஒ” எனக் குறிப்பீடு செய்யப்படும்) அரசசார்பற்ற ஒழங்கமைப்பொன்றுடன் அல்லது (இதனகத்துப்பின்னர் “இஈஒ” எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலாபம் ஈட்டா ஒழுங்கமைப்பொன்றுடன் மற்றும் தரும நிறுவனங்களுடன் தொழில் தொடர்பொன்றைத் தொடங்கும்போது, அவற்றின் காப்புறுதிப்பத்திரங்கள் சட்டமுறையான நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுவதனையும் கொடுக்கல்வாங்கல்கள் வெளிப்படுத்தப்பட்ட குறிக்கோள்களுடனும் நோக்கங்களுடனும் ஒத்திருப்பதனையும் உறுதிப்படுத்துவதற்கு அதிகரித்த வாஉவி வழிமுறைகளைச் செயற்படுத்துதல் வேண்டும்.

46. (1) ஒவ்வொரு காப்புறுதியாளரும், அதன் அமைப்பாவணங்களிற் கொடுக்கப்பட்ட தலைப்பின்படி இயைபான அசாஒ, இஈஒ அல்லது தரும நிறுவனத்தின் பெயரில் கொடுக்கல்வாங்கல்களைச் செயற்படுத்துதல் வேண்டும்.

(2) காப்புறுதிப்பத்திரங்களைத் தொழிற்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட தனியாட்களும் அவர்களின் ஆளும் குழுக்களினது உறுப்பினர்களும் அதிகரித்த வாஉவி வழிமுறைகளுக்கு அமைந்தோராகவிருத்தலும் வேண்டும்.

(3) ஒவ்வொரு காப்புறுதியாளரும், (2)ஆம் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஆட்கள், அதே பெயரின்கீழாயினுஞ்சரி, அல்லது வித்தியாசமானவொரு பெயரினகழாயினுஞ்சரி, தடைவிதிக்கப்பட்டவோர் உருவகம் அல்லது ஆள் எனப் பெயர் குறிக்கப்பட்ட ஏதேனும் உருவகத்துடன் அல்லது ஆளுடன் இணைந்திராதிருப்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

47. (1) ஒவ்வொரு காப்புறுதியாளரும், அசாஒ, இஈஒ அல்லது தரும நிறுவனம் என்பவற்றின் ஏலவேயுள்ள எல்லாத் தொடர்புகளையும், அவ்வொழுங்கமைப்புகள், அவற்றின் அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பமிடுநர்கள், அவற்றின் ஆளும் குழுக்களின் உறுப்பினர்கள் மற்றும் பயன்பெறும் சொந்தக்காரர்கள், ஒன்றில் அதேபெயரின்கீழ் அல்லது வித்தியாசமானவொரு பெயரின்கீழ், தடைவிதிக்கப்பட்ட உருவகம் மற்றும் ஆள் எனப் பெயர் குறிக்கப்பட்ட ஏதேனும் உருவகத்துடன் அல்லது ஆளுடன் இணைந்திராதிருப்பதனை உறுதிப்படுத்துவதற்கு, பரிசீலனை செய்தலும் கண்காணித்தலும் வேண்டும்.

(2) பெயர்கள் ஒத்திருக்கின்றமை பற்றி ஏதேனும் சந்தேகமுள்ள விடயத்தில்,காப்புறுதியாளர், சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல் அறிக்கையொன்றைக் கோப்பிடுதல் வேண்டும் அல்லது வேறு சட்ட நடவடிக்கையை எடுத்தல் வேண்டும் அல்லது இரண்டையும் செய்தல் வேண்டும்.

**உயர் இடர் நாடுகளிலிருந்தான வாடிக்கையாளர்கள்**

48. (1) ஒவ்வொரு காப்புறுதியாளரும், உயர் இடர் நாடுகளிலிருந்தான வாடிக்கையாளர்களுக்குத் தொழில் தொடர்புகளுக்கும் கொடுக்கல்வாங்கல்களுக்கும் அதிகரித்த வாஉவி வழிமுறைகளை ஏற்புடையனவாக்குதல் வேண்டும்.

(2) நிதிசார் உளவறிதற் கூறானது, வெளிநாட்டலுவல்கள் என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளரின் கலந்தாலோசனையுடன், (1)ஆம் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட உயர் இடர் நாடுகளின் நிரலை-

(அ) நிதிசார் நடவடிக்கைச் செயலணி நிரற்படுத்தலின் அடிப்படையின் மீது; அல்லது

(ஆ) சுயாதீனமான முறையில், பணம் தூய்தாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதற் கொள்கைகளில் செயல்நுணுக்கக் குறைவுபாடுகள் உள்ளமையையும் அந்நாடுகளிலுள்ள அந்தக் குறைபாடுகளுக்கு முகங்கொடுப்பதில் போதிய முன்னேற்றம் அடையாமையையும் கணக்குக்கெடுத்து,

அதன் அலுவலகமுறையான இணையத்தளத்தின் மீது வெளியிடுதல் வேண்டும்.

49. அதிகரித்த வாஉவி வழிமுறைகளுடன் சேர்த்து மேலதிகமாக, ஒவ்வொரு காப்புறுதியாளரும், 48ஆம் விதியின் (2)ஆம் பந்தியில குறிப்பீடு செய்யப்பட்ட உயர் இடர் நாடுகளின் நிரலில் குறித்துரைக்கப்பட்ட நாடுகளுக்காக, நிரற்படுத்தப்பட்ட உயர் இடர் நாடுகளின் இடர்த்தன்மைக்கு நேரொத்ததாக, பின்வருமாறு தோதான எதிர்வழி முறைகளை ஏற்புடையனவாக்குதல் வேண்டும்:-

(அ) அடையாளங்காணப்பட்ட நாடுகளுடன் அல்லது சம்பந்தப்பட்ட கொடுக்கல்வாங்கல்களை வரையறுத்தல்; அத்துடன்

(ஆ) நிதிசார் உளவறிதற் கூறினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான வேறேதேனும் வழிமுறையைச் செயற்படுத்துதல்.

**அரசியல்ரீதியில் முகங்கொடுக்கவேண்டிய ஆட்கள்**

50. (1) காப்புறுதியாளர் ஒவ்வொருவரும், வாடிக்கையாளர் அல்லது பயன்பெறும் சொந்தக்காரர் அரசியல் ரீதியில முகங்கொடுக்கவேண்டிய ஆளொருவராகவுள்ளாரா என்பதைத் தீர்மானிப்பதற்குத் தோதான உள்ளகக் கொள்கைகளையும், நடவடிக்கை முறைகளையும், கட்டுப்பாடுகளையும் நடைமுறைப்படுத்துதல் வேண்டும்.

(2) காப்புறுதியாளர் ஒவ்வொருவரும், அரசியல் ரீதியில் முகங்கொடுக்கவேண்டிய ஆளொருவர் அல்லது அரசியல்ரீதியில் முகங்கொடுக்கவேண்டிய ஆளொருவரின் கிட்டிய குடும்பவுறுப்பினரொருவர் மற்றும் நெருங்கிய இணையாளியொருவர் ஒரு வாடிக்கையாளராக அல்லது பயன்பெறும் சொந்தக்காரராக இருக்குமிடத்து,-

(அ) தொழில் தொடர்பைத் தொடங்குவதற்கு அல்லது தொடர்வதற்குக் காப்புறுதியாளரின் சிரேட்ட முகாமைத்துவம் ஏதேனுமிருப்பின் அதனிடமிருந்து அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்;

(ஆ) நிதிகளின் மூலங்களையும் செல்வத்தின் மூலங்களையும் தோதான வழிவகைகள் மூலம் அடையாளங்காணுதல் வேண்டும்; அத்துடன்

(இ) காப்புறுதியாளருடனான அவர்களின் தொழில் தொடர்புகளின் அதிகரித்த வாஉவிழிப்புக்கவனத்தையும் தொடர்ச்சியான கண்காணிப்பையும் செயற்படுத்துதல் வேண்டும்.

**மூன்றாந்திறத்தவர்களின்மீது நம்பியிருத்தல்**

51. வாடிக்கையாளரை அடையாளங்காணுதல், பயன்பெறும் சொந்தக்காரரை அடையாளங்காணுதல் மற்றும் தொழிலின் தன்மையைப் புரிந்துகொள்ளுதல் அல்லது தொழிலைத் தொடக்குதல் உட்பட வாஉவி வழிமுறைகளைச் செயற்படுத்துவதற்கு, காப்புறுதியாளரினாலேயே அவ்வாறு செய்தல் செயல்முறைக்குகந்ததல்லாதபோது, காப்புறுதியாளரொன்று, மூன்றாந்திறத்தவரான நிதி நிறுவனமொன்றின்மீது அல்லது நிதிசாராத் தொழிலின்மீது நம்பியிருக்கலாம்.

52. ஏதேனும் காப்புறுதியாளர், வாஉவி வழிமுறைகளைச் செயற்படுத்துவதற்கு மூன்றாந்திறத்தவரான நிதி நிறுவனமொன்றின் மீது அல்லது நிதிசாராத் தொழிலின் மீது நம்பியுள்ளவிடத்து, வாஉவி வழிமுறைகளுக்கான இறுதிப் பொறுப்பு மூன்றாந் திறத்தவரின் மீது நம்பியுள்ள காப்புறுதியாளரைச் சார்ந்ததாதல் வேண்டுமென்பதுடன், அது -

(அ) வாஉவி தொடர்பாக அவசியமான தகவல்களை உடனடியாகப் பெற்றுக்கொள்ளுதலும் வேண்டும்;

(ஆ) வாஉவி தேவைப்பாடுகள் தொடர்பான அடையாளங்காணல் தரவுகளினதும் ஏனைய இயைபான ஆவணப்படுத்துகையினதும் பிரதிகள், தாமதமின்றி வேண்டுகோளின்மேல் மூன்றாந்திறத்தவரிடமிருந்து கிடைக்கக்கூடியனவாக்கப்படுமெனத் தன்னைத் திருப்திப்படுத்திக்கொள்வதற்கான நடபடிகளை எடுத்தலும் வேண்டும்;

(இ) மூன்றாந்திறத்தவர் ஒழுங்குபடுத்தப்படுகின்றது, மேற்பார்வை செய்யப்படுகின்றது அல்லது கண்காணிக்கப்படுகின்றது எனவும், சட்டத்துக்கு இணங்கியொழுக வாஉவிழிப்புக்கவனத்தைக் கடைப்பிடிப்பதற்கான வழிமுறைகளையும் பதிவேடு வைத்திருத்தல் தேவைப்பாடுகளையும் கொண்டுள்ளது எனவும் தன்னைத் திருப்திப்படுத்திக்கொள்ளுதலும் வேண்டும்.

53. மூன்றாந்திறத்தவரின்மீது நம்பியுள்ள ஒவ்வொரு காப்புறுதியாளரும்,-

(அ) பணம் தூய்தாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதற்கொள்கைகளில் செயல்நுணுக்கக் குறைவுபாடுகளைக் கொண்டுள்ளனவாக நிதிசார் நடவடிக்கைச் செயலணியினால் அடையாளங்காணப்பட்டுள்ள நாடுகளிலிருந்தானவை உட்பட, சர்வதேச நிதிசார் முறைமைக்குப் பணம் தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாதி நிதியளிப்பு இடர்களைத் தணிப்பதனை இயலச்செய்கின்ற உள்ளகக் கொள்கைகளையும் நடவடிக்கை முறைகளையும் கொண்டிருத்தல் வேண்டும்;

(ஆ) நம்பப்படவேண்டிய ஒரு மூன்றாந்திறத்தவரின் நாட்டைத் தீர்மானிக்கும்போது, நாட்டிடர் மட்டத்தில் கிடைக்கக்கூடிய தகவல்களைக் கருத்திற்கொள்ளுதல் வேண்டும்.

## பாகம் III

## பதிவேடு வைத்திருத்தல

54. காப்புறுதியாளர் ஒவ்வொன்றும், எவையேனும் காப்புறுதிப்பத்திரங்கள், தொழிற் கடிதத்தொடர்புகள் மற்றும் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான ஆவணங்கள், குறிப்பாக, வாஉவி செய்முறையின்போது பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களும் ஆவணங்களும், வாடிக்கையாளர்களினதும் பயன்பெறும் சொந்தக்காரர்களினதும் ஆளடையாளத்தைச் சரிபார்ப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட ஆவணங்கள் மற்றும் பொறுப்பேற்கப்பட்ட ஏதேனும் பகுப்பாய்வின் பெறுபேறுகள் என்பனவுட்பட, காப்புறுதியாளரினால் தொடங்கப்பட்ட தொழில் தொடர்புகள் பற்றிய எல்லாப் பதிவேடுகளையும் பேணுதல் வேண்டும்.

55. பதிவேடுகள் நாளதுவரையானவையாகப் பேணப்படுதலும் காப்புறுதியாளரின் அத்தாட்சிப்படுத்துகையுடன் மூலப்பிரதிகளாக அல்லது பிரதிகளாக வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

56. ஒவ்வொரு காப்புறுதியாளரும் பதிவேடுகளை சட்டத்தில் குறிப்பிட்டவாறு குறைந்தது 6 வருட காலத்திற்கு வைத்திருக்க வேண்டும். ஏதேனும் பதிவேடு தொடர்ச்சியான புலனாய்வொன்றுக்கு அல்லது வழக்காடலுக்கு அமைந்ததாகவுள்ளவிடத்து அல்லது ஒரு சட்ட நீதிமன்றத்தில் அல்லது வேறு தோதான அதிகாரியின் முன்னர் காண்பிக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுமிடத்து, அத்தகைய பதிவேடு, அத்தகைய பதிவேடுகள் இனிமேல் தேவைப்படமாட்டாதென இயைபான அதிகாரியினால் காப்புறுதியாளர் அறிவிக்கப்படும் அத்தகைய காலம்வரை,காப்புறுதியாளரினால் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

57. ஒவ்வொரு காப்புறுதியாளரும், இயைபான பதிவேடுகளை ஒரு சட்ட நீதிமன்றத்தில் சான்றாக ஏல்தகவுடையதாகவிருக்குமொரு படிவத்தில் பேணுதல் வேண்டுமென்பதுடன் மேற்பார்வைசார் அதிகாரிகளினாலும் சட்ட வலுவுறுத்தல் அதிகாரிகளினாலும் குறித்துரைக்கப்பட்ட உரியநேரத்திலான முறையில் அத்தகைய பதிவேடுகளை அத்தகைய அதிகாரிகளுக்குக் கிடைக்கக்கூடியனவாக்குதலும் வேண்டும்.

## பாகம் IV

## வாடிக்கையாளர் முன்னாய்வு

58. ஒவ்வொரு காப்புறுதியாளரும், எவரேனும் வாடிக்கையாளரின், எதிர்கால வாடிக்கையாளரின் அல்லது பயன்பெறுநரின் பெயர் பயங்கரவாதத்துடனும் பயங்கரவாதி நிதியளிப்புடனும் பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களின் உற்பத்தியைப் பெருக்குதலுடனும் அதற்கு நிதியளித்தலுடனும் தொடர்பான இலக்கிடப்பட்ட நிதிசார் தடை விதிப்புக்கள் மீதான ஏதேனும் பெயர் குறிக்கப்பட்ட நிரல் தொடர்பில் 1968ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க, ஐக்கிய நாடுகள் சபைச் சட்டத்தின் நியதிகளின்படி

ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் நிரலில் காணப்படுகின்றதாவென்பதை அல்லது அத்தகைய வாடிக்கையாளர், எதிர்கால வாடிக்கையாளர் அல்லது பயன்பெறுநர் அத்தகைய பெயர் குறிக்கப்பட்ட ஆட்களின் அல்லது உருவகங்களின் சார்பில் அல்லது அவர்களின் அல்லது அவற்றின் பணிப்பின்கீழ் அல்லது அத்தகைய பெயர் குறிக்கப்பட்ட ஆட்களின் அல்லது உருவகங்களின் நன்மைக்காகச் செயலாற்றுகின்றாராவென்பதைச் சரிபார்த்தல் வேண்டும்.

59. இவ்விதிகளில் -

“சட்டம்” என்பது, 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டம் என்று பொருளாகும்;

“பயன்பெறுநர்” என்பது, காப்புறுதிப்பத்திரத்தினால் காப்பீடு செய்யப்படுகின்ற காப்புறுதி செய்யப்பட்ட நிகழ்வொன்று இடம்பெற்றால் அல்லது இடம்பெறும்போது எந்த இயற்கை அல்லது சட்ட ஆளுக்கு, அல்லது ஒரு சட்ட ஒழுங்கேற்பாட்டுக்கு, அல்லது வகுதியினரான ஆட்களுக்குக் காப்புறுதிப்பத்திர வரும்படிகள் செலுத்தப்படுமோ அந்த இயற்கை அல்லது சட்ட ஆள், அல்லது ஒரு சட்ட ஒழுங்கேற்பாடு அல்லது வகுதியினரான ஆட்கள் என்று பொருளாகும்;

“பயனபெறும் சொந்தக்காரர்” என்பது, ஒரு வாடிக்கையாளரை இறுதியாகத் தமதாக வைத்திருக்கின்ற அல்லது கட்டுப்படுத்துகின்ற ஓர் இயற்கை ஆள் அல்லது எந்த இயற்கை ஆளின் சார்பில் கொடுக்கல்வாங்கலொன்று செயற்படுத்தப்படுகின்றதோ அந்த ஆள் என்று பொருளாகுமென்பதுடன், சட்ட ஆளொருவர் மீது அல்லது ஒரு சட்ட ஒழுங்கேற்பாட்டின் மீது இறுதிப் பயனுறும் கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கின்ற ஆளையும் உள்ளடக்கும்;

“பணிப்பாளர் சபை” என்பது, ஒரு காப்புறுதியாளரின் ஆளும் குழு அல்லது பணிப்பாளரின் தொகுதி என்று பொருளாகும் என்பதுடன் இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட ஒரு காப்புறுதியாளர் தொடர்பாக அத்தகைய நிறுவனத்தின் சிரேட்ட முகாமைத்துவ அதிகாரி என்று பொருளாகும்;

“வாடிக்கையாளர்” என்பது, ஒரு கொடுக்கல்வாங்கல் அல்லது ஒரு காப்புறுதிப்பத்திரம் தொடர்பாகப் பின்வருவோரை உள்ளடக்கும்:-

(அ) எந்த ஆளின் பெயரில் ஒரு கொடுக்கல்வாங்கல் அல்லது ஒரு காப்புறுதிப்பத்திரம் ஒழுங்கேற்பாடு செய்யப்படுகின்றதோ, திறக்கப்படுகின்றதோ அல்லது பொறுப்பேற்கப்படுகின்றதோ அந்த ஆள்;

(ஆ) ஒரு கொடுக்கல்வாங்கலுக்கான அல்லது ஒரு காப்புறுதிப்பத்திரத்துக்கான கையொப்பமிடுநர்;

(இ) எந்த ஆளுக்குக் கொடுக்கல்வாங்கலொன்று அல்லது காப்புறுதிப்பத்திரமொன்று குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அல்லது கைமாற்றப்பட்டுள்ளதோ அந்த எவரேனும் ஆள்; அல்லது

(ஈ) ஒரு கொடுக்கல்வாங்கலைச் செய்முறைப்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்படுகின்ற எவரேனும் ஆள்;

“நெருங்கிய இணையாளி” என்பது, -

(அ) சட்ட உருவகங்களின் மற்றும் சட்ட ஒழுங்கேற்பாடுகளின் கூட்டுப் பயன்பெறும் சொத்தாண்மையை, அல்லது வேறேதேனும் நெருங்கிய தொழில் தொடர்பைக் கொண்டுள்ள ஓர் இயற்கை ஆளையும்; அத்துடன்

(ஆ) எந்தச் சட்ட ஆளின் அல்லது சட்ட ஒழுங்கேற்பாட்டின் பயன்பெறும் சொந்தக்காரர் ஓர் இயற்கை ஆளாகவுள்ளாரோ மற்றும் அத்தகைய ஆளின் அல்லது அவரது கிட்டிய குடும்பவுறுப்பினர்களின் நன்மைக்காக நிலைப்படுத்தப்பட்டுள்ளவராக அறியப்பட்டுள்ளாரோ அந்தச் சட்ட ஆளையும் அல்லது சட்ட ஒழுங்கேற்பாட்டையும், உள்ளடக்கும்;

“ஏலவேயுள்ள வாடிக்கையாளர்” என்பது, இவ்விதிகள் வலுவுக்கு வருவதன்மீது அல்லது வருமுன்னர் ஒரு தொழில் தொடர்பை தொடங்கியுள்ள வாடிக்கையாளர் ஒருவர் என்று பொருளாகும்;

“நிதிசார் நடவடிக்கைச் செயலணி” என்பது, பணம் தூய்தாக்கல், பயங்கரவாதி நிதியளிப்பு மற்றும் பேரழிவை ஏற்படுத்துகின்ற ஆயுதங்களின் உற்பத்திப் பெருக்கத்திற்கெதிராக உலகளாவிய நிதிசார் முறைமையைப் பாதுகாப்பதற்கான கொள்கைகளை அபிவிருத்தி செய்து மேம்படுத்துகின்ற சுயாதீனமான அரசாங்கங்களிடையேயானவொரு குழு என்று பொருளாகும்;

“நிதிசார்தொகுதி” என்பது, பணம் தூய்தாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதற் கொள்கைகளினதும் நடவடிக்கை முறைகளினதும்கீழ் தொகுதி மேற்பார்வையை ஏற்புடையதாக்குவதற்காக, அதற்கு அமைந்தனவாகவுள்ள கிளைகளுடனும் துணைநிலைக் கம்பெனிகளுடன் சேர்த்து, எஞ்சிய தொகுதியின் மீது கட்டுப்பாட்டையும் ஒருங்கிணைப்புப் பணியையும் பிரயோகிக்கின்றதும் ஒரு தாய்க் கம்பெனியை அல்லது வேறு வகையினதான ஒரு சட்ட ஆளைக் கொண்டுள்ளதுமான கம்பெனிகளின் ஒரு தொகுதி என்று பொருளாகும்;

“கிட்டிய குடும்பவுறுப்பினர்” என்பது, வாழ்க்கைத்துணை, பிள்ளைகள் மற்றும் அவர்களின் வாழ்க்கைத்துணைகள் அல்லது துணைகள், பெற்றோர், உடன்பிறந்தோர் மற்றும் அவர்களின் வாழ்க்கைத்துணைகள் அத்துடன் பேரப்பிள்ளைகள் மற்றும அவர்களின் வாழ்க்கைத்துணைகளை உள்ளடக்கும்;

“சட்ட ஆள்” என்பது, ஒரு காப்புறுதியாளருடன் நிரந்தர வாடிக்கையாளர் தொடர்பைத் தாபிப்பதற்கு இயன்றதாகவுள்ள அல்லது வேறுவகையில் ஆதனத்தைச் சொந்தமாக வைத்திருக்கின்ற ஓர் இயற்கை ஆள் தவிர்ந்த வேறு ஏதேனும் உருவகம் என்று பொருளாகும் என்பதுடன், ஒரு கம்பெனி, கூட்டிணைக்கப்பட்ட குழு, ஒரு நிதித்தாபனம், ஒரு பங்காண்மை அல்லது ஒரு கழகம் என்பவற்றையும் உள்ளடக்கும்;

“சட்ட ஒழுங்கேற்பாடு” என்பது, ஒரு வெளிப்படையான நம்பிக்கைப் பொறுப்பை உள்ளடக்கும்;

“பெரும்பான்மைக்குச் சொந்தமான துணைநிலைக்கம்பெனி” என்பது, பங்குகளின் ஐம்பது சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்டவை தாய்க் கம்பெனியினால் சொந்தமாக வைத்திருக்கப்படுகின்ற அந்தத் தொகுதியினவான கம்பெனிகளின் துணைநிலைக்கம்பெனி என்று பொருளாகும்;

“பணம் தூய்தாக்கல்” என்பது, 2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க, பணம் தூய்தாக்கலைத் தடுத்தல் சட்டத்தின் 3ஆம் பிரிவின் நியதிகளின்படி பணம் தூய்தாக்கல் என்ற தவறு என்று பொருளாகும்;

“ஆள்” என்பது ஓர் இயற்கை அல்லது சட்ட ஆள் என்று பொருளாகுமென்பதுடன், கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஆட்கள் குழுவையும் இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட ஒரு கிளையையும் உள்ளடக்கும்;

“அரசியல்ரீதியில் முகங்கொடுக்கவேண்டிய ஆள்” என்பது, ஒன்றில் உள்நாட்டுரீதியில் அல்லது ஒரு வெளிநாட்டினால், அல்லது ஒரு சர்வதேச ஒழுங்கமைப்பில் பிரபல்யமான பொதுப்பணிகள் பொறுப்பிக்கப்பட்ட தனியாள் ஒருவர் என்று பொருளாகும் என்பதுடன், ஓர் அரசின் அல்லது அரசாங்கத்தின் தலைவரையும், ஓர் அரசியல்வாதியையும், ஒரு சிரேட்ட அரசாங்க அலுவலரையும், நீதிமுறை அலுவலரையும் அல்லது இராணுவ அலுவலரையும்,அரசுக்குச் சொந்தமான கூட்டுத்தாபனம், அரசாங்க அல்லது தன்னாட்சிக் குழு என்பவற்றின் சிரேட்ட நிறைவேற்று அலுவலரையும் உள்ளடக்கும் ஆனால் நடுத்தரப் பதவி வரிசையிலுள்ள அல்லது கனிட்ட பதவி வரிசையிலுள்ள தனியாட்களை உள்ளடக்காது;

“இடர் அடிப்படையிலான அணுகுமுறை” என்பது, பணம் தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாதி நிதியளிப்பு இடர்களை முகாமைசெய்வதற்கும் தணிப்பதற்கும் வாஉவி வழிமுறைகளை ஏற்புடையனவாக்கல் தொடர்பாக, குறைந்த இடர் மட்டத்துடனான வாடிக்கையாளர்களின் விடயத்தில் எளிமையாக்கப்பட்ட வாஉவி வழிமுறைகளைப் பயன்படுத்துதலும் உயர்வான இடர் மட்டங்களுடனான வாடிக்கையாளர்களின் விடயத்தில் அதிகரித்த வாஉவி வழிமுறைகளைப் பயன்படுத்துதலும் என்று பொருளாகும்;

“சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல் அறிக்கை” என்பது, சட்டத்தின் 7ஆம் பிரிவின்படி சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல் அல்லது எத்தனிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல் பற்றிய அறிக்கை என்று பொருளாகும்;

“பயங்கரவாதி நிதியளிப்பு” என்பது, 2005ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயத்தின்கீழ் பயங்கரவாதத்துக்கு நிதியளித்தலுடன் சம்பந்தப்பட்ட தவறொன்றாகவமைகின்றவொரு செயல் என்று பொருளாகும்;

“வரம்பு அறிக்கை” என்பது, சட்டத்தின் 6ஆம் பிரிவின்கீழானவோர் அறிக்கை என்று பொருளாகும்.

**அட்டவணை**

[விதிகள் 26 மற்றும் 41]

(1) **தனிப்பட்ட வாடிக்கையாளர்கள்:-**

(அ) பின்வரும் தகவல்கள் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்:-

(அ1) எல்லா வாடிக்கையாளர்களினதும் விடயத்தில் -

(i) அடையாளங்காணும் ஆவணத்தில் காணப்படுகின்றவாறு முழுப்பெயர்;

(ii) அலுவலகமுறையான ஆளுக்குரிய அடையாளங்காணல் அல்லது வாடிக்கையாளரின் நிழற்படத்தைக் கொண்டுள்ள வேறேதேனும் அடையாளங்காணல் ஆவணம் (உ.ம், தேசிய அடையாள அட்டை, செல்லுபடியான கடவுச்சீட்டு, அல்லது செல்லுபடியான சாரதி உரிமம்);

(iii) அடையாளங்காணல் ஆவணத்தில் காணப்படுகின்றவாறான நிரந்தர முகவரி. வதிவிட முகவரி நிரந்தர முகவரியிலிருந்து வித்தியாசப்படின், வதிவிட முகவரி மூன்று மாதங்களுக்குமேல் பழைமையல்லாத பயன்பாட்டு விலைப்பட்டியல் ஒன்றினால் அல்லது வதிவுக்கான வேறு ஏதேனும் நம்பகமான எண்பிப்பினால் ஆதாரப்படுத்தப்படல் வேண்டும். உ-ம்: பயன்பாட்டு விலைப்பட்டியல்கள், மின்சார விலைப்பட்டியல் என, தண்ணீர் விலைப்பட்டியல் என மற்றும் நிலையான தொலைபேசி இணைப்புத் தொழிற்படுத்துநரின் விலைப்பட்டியல் எனக் குறித்துரைக்கப்படுதல் வேண்டும். அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்காகத் தவிர அஞ்சல்பெட்டி இலக்கம் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படுதலாகாது. ‘மே/பா’ யின் கீழ் என்ற விடயத்தில், ஆதனச் சொந்தக்காரரின் சமமதமும் முகவரியைச் சரிபார்க்கும் வேறு இயைபான ஆவணங்களும் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும் எனத் தேவைப்படுத்தப்படுகின்றது.

(iv) தொலைபேசி இலக்கம், தொலைநகல் இலக்கம் அத்துடன் மின்னஞ்சல் முகவரி (கிடைக்கக்கூடியனவாயின்);

(v) பிறந்த தேதி;

(vi) நாட்டினம்;

(vii) தான்புரிதொழில், தொழில், வகிக்கப்பட்ட பதவி அத்துடன் தொழில்தருநரின் பெயர் மற்றும் உட்படுத்தப்பட்ட புவியற்சார் இடப்பரப்புக்கள் (கிடைக்கக்கூடியனவாயின்);

(viii) காப்புறுதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்படுவதன் நோக்கம்;

(ix) எதிர்பார்க்கப்படும் மொத்தவரவு/ தொழிலின் அளவு;

(x) கொடுக்கல்வாங்கல்களைச் செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் முறை;

(xi) ஏற்புடையற்பாலவாறு, திருப்திகரமான குறிப்பீடு; அத்துடன்

(அ2) வதிவற்ற வாடிக்கையாளர்களின் விடயத்தில் -

(i) இலங்கையில் காப்புறுதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான காரணம்;

(ii) அறிவுறுத்தல்களை விடுப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் அல்லது ஆட்களின் பெயர், முகவரி மற்றும் கடவுச்சீட்டின் பிரதி;

(ஆ) பின்வரும் ஆவணங்கள் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும் (ஒவ்வொரு பிரதியும் மூலப்பிரதியுடன் சரிபார்க்கப்படுதல் வேண்டும்)

(i) அடையாளங்காணல் ஆவணத்தின் பிரதி;

(ii) முகவரி சரிபார்த்தல் ஆவணங்களின் பிரதி;

(iii) நாட்டவரல்லாத வாடிக்கையாளர்களுக்கான காப்புறுதிப்பத்திரங்களின் விடயத்தில் செல்லுபடியான விசாவின்/ அனுமதிப்பத்திரத்தின் பிரதி.

**(2) உரிமையாண்மை/ பங்குடைமை:-**

(அ) பின்வரும் தகவல்கள் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்:-

(i) தொழிற்பதிவு ஆவணத்தில் காணப்படுகின்றவாறாகப் பங்காளர்களின் அல்லது உரிமையாளர்களின் முழுப்பெயர்கள்;

(ii) தொழிலின்தன்மை;

(iii) பதிவுசெய்யப்பட்ட தொழிலிடத்தின் அல்லது பிரதான தொழிலிடத்தின் முகவரி;

(iv) தனிப்பட்ட கணக்குகளின் விடயத்திற்போன்று உரிமையாளரின்/ பங்காளர்களின் அடையாளங்காணல் விபரங்கள்;

(v) தொடர்புகொள்ளும் தொலைபேசி, தொலைநகல் இலக்கங்கள்;

(vi) வருமான வரிக்கோப்பு இலக்கம்;

(vii) சொத்தாண்மைக் கட்டுப்பாடுகளின் அளவு;

(viii) சம்பந்தப்பட்ட வேறு தொழில் அக்கறைகள்;

(ஆ) பின்வரும் ஆவணங்கள் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும் (ஒவ்வொரு பிரதியும் மூலப்பிரதியுடன் சரிபார்க்கப்படுதல் வேண்டும்)

(i) தொழிற் பதிவு ஆவணத்தின் பிரதி;

(ii) உரிமையாளர்கள் பற்றிய தகவல்கள்/ பங்காண்மை உறுதி;

(iii) அடையாளங்காணல் மற்றும் முகவரியைச் சரிபார்க்கும் ஆவணங்களினது பிரதி;

**(3) கூட்டுத்தாபனங்கள்/ பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பெனி:-**

(அ) பின்வரும் தகவல்கள் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்:-

(i) நிறுவனத்தின் பதிவுசெய்யப்பட்ட பெயரும் தொழிற் பதிவு இலக்கமும்;

(ii) தொழிலின்தன்மையும் நோக்கமும்;

(iii) பிரதான தொழிலிடத்தின் பதிவுசெய்யப்பட்ட முகவரி;

(iv) அஞ்சல் முகவரி, ஏதுமிருப்பின்;

(v) தொலைபேசி/ தொலைநகல்/ மின்னஞ்சல்;

(vi) வருமான வரிக்கோப்பு இலக்கம்;

(vii) வங்கிக் குறிப்பீடுகள் (ஏற்புடையனவாயின்);

(viii) தனிப்பட்ட வாடிக்கையாளர்களின் விடயத்திற் போன்று எல்லாப் பணிப்பாளர்களையும் அடையாளங்காணல்;

(ix) பத்து சதவீதத்துக்கு மேற்பட்ட ஒப்புரவு அக்கறையுடன் பாரிய பங்குதாரர்களின் நிரல்;

(x) துணைநிலைக் கம்பெனிகளினதும் இணையாளிகளினதும் நிரல்;

(xi) கையொப்பமிடுநர்களின் பெயர்கள் பற்றிய விபரங்கள்;

**குறிப்பு:** 1987ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் உரிமமளிக்கப்பட்ட இலங்கைப் பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின்மீது அல்லது பயன்பெறும் சொத்தாண்மையின் போதிய வெளிப்படையாந்தன்மையை உறுதிப்படுத்துகின்ற வெளிவிடுகைத் தேவைப்பாடுகளுக்கு அமைந்த வேறேதேனும் பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின்மீது நிரற்படுத்தப்பட்ட கம்பெனிகளின் விடயத்தில், காப்புறுதியாளர், பணிப்பாளர்களையும் பாரிய பங்குதாரர்களையும் அடையாளங்காண்பதற்கு நம்பத்தக்க மூலங்களிலிருந்து கிடைக்கக்கூடிய தகவல்களைப் பயன்படுத்தலாம்;

(ஆ) பின்வரும் ஆவணங்கள் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும் (ஒவ்வொரு பிரதியும் மூலப்பிரதியுடன் சரிபார்க்கப்படுதல் வேண்டும்):-

(i) கூட்டிணைப்புச் சான்றிதழின் பிரதி;

(ii) (இதனகத்துப்பின்னர் "கம்பெனிகள் சட்டம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க,கம்பெனிகள் சட்டத்தின்கீழ் படிவம் 40இன் (ஏலவேயுள்ள ஒரு கம்பெனியைப் பதிவுசெய்தல்) அல்லது படிவம் 1இன் (ஒரு கம்பெனியைப் பதிவுசெய்தல்) மற்றும்

அமைப்பகவிதிகளின் பிரதி;

(iii) காப்புறுதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்படுவதனை அதிகாரமளிக்கின்ற சபைத் தீர்மானம்;

(iv) கம்பெனிகள் சட்டத்தின்கீழ் படிவம் 20 இன் பிரதி (பணிப்பாளர்களின்/ செயலாளரின் மாற்றம் மற்றும் பணிப்பாளர்களின்/ செயலாளரின் விபரங்கள்);

(v) கம்பெனிகள் சட்டத்தின்கீழ் படிவம் 44 இன் பிரதி (இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டவொரு கம்பெனியின் பதிவுசெய்யப்பட்ட அல்லது பிரதான அலுவலகத்தின் அல்லது இலங்கையில் தாபிக்கப்பட்ட அதன் பிரதான தொழிலிடத்தின் முழு முகவரியும்);

(vi) கம்பெனிகள் சட்டத்தின்கீழ் படிவம் 45இன் பிரதி (இலங்கையில் தாபிக்கப்பட்ட தொழிலிடத்துடன் இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டவொரு கம்பெனியினது பணிப்பாளர்களின் நிரலும் விபரங்களும்;

(vii) முதலீட்டுச் சபையால் அங்கீகரிக்கப்பட்ட கம்பெனியொன்றாயின் முதலீட்டுச்சபை உடன்படிக்கையின் பிரதி;

(viii) ஏற்றுமதி அபிவிருத்திச் சபையால் (ஏஅச) அங்கீகரிக்கப்பட்ட கம்பெனியாயின் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையால் அங்கீகரிக்கப்பட்ட கடிதத்தின் பிரதி;

(ix) பகிரங்க விலைகூறப்பட்ட கம்பெனியொன்றாயின் தொழிலைத் தொடங்குவதற்கான சான்றிதழின் பிரதி;

(x) விடயத்துக்கேற்ப, அற்றோணித்தத்துவத்தின் அல்லது சபைத் தீர்மானத்தின் பிரதியுடன் கொடுக்கலவாங்கல்களுக்காக அறிவுறுத்தல்களை விடுப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் அல்லது ஆட்களின் பெயர் அல்லது பெயர்கள்;

(xi) கிடைக்குமாயின் கடைசியாகக் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள்.

**(4) களரிகள், சங்கங்கள், தரும நிறுவனங்கள், கழகங்கள் மற்றும் அரசசார்பற்ற ஒழுங்கமைப்புக்கள்:**

(அ) பின்வரும் தகவல்கள் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்:-

(i) நிறுவனத்தின் பதிவுசெய்யப்பட்ட பெயரும் பதிவிலக்கமும்;

(ii) பட்டயம், அமைப்புவிதி முதலியவற்றில் காணப்படுகின்றவாறான பதிவுசெய்யப்பட்ட முகவரி;

(iii) குறைந்தபட்சம் இரண்டு பதவி தாங்குநர்கள், கையொப்பமிடுநர்கள், நிர்வாகிகள், ஆளும் குழுவின் அல்லது குழுவின் உறுப்பினர்கள் அல்லது தனிப்பட்ட கணக்குகளின் விடயத்திற்போன்று உருவகத்தின் தொழிற்பாடுகளின்மீது கட்டுப்பாட்டையும் செல்வாக்கையும் கொண்டுள்ள வேறு எவரேனும் ஆள் என்போரை அடையாளங்காணல்;

(iv) காப்புறுதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்படுவதனை அதிகாரமளிக்கின்ற குழு அல்லது சபைத் தீர்மானம்;

(v) வருமானத்தின்/ நிதியளிப்பின் மூலமும் மட்டமும்;

(vi) ஏனைய சம்பந்தப்பட்ட நிறுவனங்கள்/ இணையாளிகள்/ ஒழுங்கமைப்புக்கள்;

(vii) தொலைபேசி/ தொலைநகல் இலக்கங்கள்/ மின்னஞ்சல் முகவரி;

(ஆ) பின்வரும் ஆவணங்கள் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும் என்பதுடன் மூலப்பிரதியுடன் சரிபார்க்கப்படுதலும் வேண்டும்:-

(i) பதிவு ஆவணம்/ அமைப்பு விதி, பட்டயம் முதலியவற்றின் பிரதி;

(ii) காப்புறுதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்படுவதனை அதிகாரமளிக்கின்ற சபைத் தீர்மானம்;

(iii) அற்றோணித்தத்துவத்தின் அல்லது சபை/ குழுத் தீர்மானத்தின் பிரதியுடன் கொடுக்கல்வாங்கல்களுக்காக அறிவுறுத்தல்களை விடுப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களின் பெயர்கள்.

**(5) நம்பிக்கைப் பொறுப்பு:-**

(அ) பின்வரும் தகவல்கள் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்:-

(i) தனிப்பட்ட காப்புறுதிப்பத்திரங்களின் விடயத்திற்போன்று நம்பிக்கைப்பொறுப்புக்களின் விடயத்தில் எல்லா நம்பிக்கைப் பொறுப்பாளர்களையும் கூட்டுநம்பிக்கைப் பொறுப்பாளர்களையும் நம்பிக்கைப்பொறுப்பின் ஆக்குநரையும் அத்துடன் பயன்பெறுநர்களையும் அடையாளங்காணுதல்;

(ii) வாடிக்கையாளர் நம்பிக்கைப் பொறுப்பாளர், நியமத்தர் அல்லது வேறு இடையீட்டாளர் ஒருவராகச் செயலாற்றுகின்றாரா என்பது;

(ஆ) பின்வரும் ஆவணங்கள் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும் (ஒவ்வொரு பிரதியும் மூலப்பிரதியுடன் சரிபார்க்கப்படுதல் வேண்டும்)

(i) ஏற்புடையவாறு, நம்பிக்கைப்பொறுப்புறுதியின் பிரதி;

(ii) எல்லாத் தனியாட்களினதும் விபரங்கள்.

**சுற்றறிக்கை எண்: 01/19** 2019 மே 23

அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்கள்/ பொது முகாமையாளர்கள்

அன்புள்ள ஐயா/ அம்மணி

**2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதியியல் நிறுவனங்கள் (வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவன) விதிகளின் கீழ் அரசசார்பற்ற அமைப்புக்கள், இலாபம் ஈட்டாத அமைப்புக்கள் அல்லது அறக்கொடை நிறுவனங்கள் தொடர்பான உரிய விழிப்புக்கவனத்தினை அதிகரித்தளவில் மேற்கொள்ளுதல்**

2016ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதியியல் நிறுவனங்கள் வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவன விதிகளின் 51ஆம் பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறு "ஒவ்வொரு நிதியியல் நிறுவனமும் அரசசார்பற்ற அமைப்புக்கள் (இதனகத்துப் பின்னர் "அ.சா. அமைப்பு" என குறிப்பீடு செய்யப்படும்) அல்லது இலாபம் ஈட்டாத அமைப்புக்கள் (இதனகத்துப் பின்னர் "இ.ஈ. அமைப்புக்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) மற்றும் அறக்கொடை நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தும் போது அவற்றின் கணக்குகள் சட்ட ரீதியான நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவதனையும் கொடுக்கல்வாங்கல்கள் வெளிப்படுத்தப்பட்ட குறித்த நோக்கங்களுடன் ஏற்றவாறிருப்பதனை உறுதிசெய்வதற்காக அதிகரித்தளவு வாடிக்கையாளர்கள் உரிய விழிப்புக்கவன வழிமுறைகளைச் செயற்படுத்தல் வேண்டும்."

மேலும் அரசசார்பற்ற அமைப்புக்களுக்கான தேசியச் செயலகம் 1999.02.06ஆம் திகதியிடப்பட்ட சனாதிபதியின் செயலாளரினால் விடுக்கப்பட்ட சுற்றறிக்கை இலக்கம் ஆர்ஏடி/99/01, அனைத்து பன்னாட்டு மற்றும் தேசிய மட்டத்திலான **வெளிநாட்டு நிதிகளைப்** பெறும் தன்னார்வ சமூக சேவைகள் அமைப்புக்கள் மற்றும் அரசசார்பற்ற அமைப்புக்கள் என்பன அரசசார் அமைப்புக்களுக்கான தேசிய செயலகத்துடன் மீளப்பதிவு செய்து கொள்ள வேண்டும் என அறிவித்திருக்கிறது.

இதற்கமைய பின்வரும் எந்த ஒரு அரசசார்பற்ற அமைப்புக்களையும் கண்காணித்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

அ) அரசசார்பற்ற அமைப்புக்களுக்கான தேசிய செயலகத்துடன் பதிவுசெய்யப்படாதவை

ஆ) மாவட்ட செயலகம் அல்லது பிரதேச செயலகம் அல்லது வேறு ஏதேனும் நிறுவனங்கள் உட்பட வேறு ஏதேனும் நிறுவனங்களுடன் பதிவுசெய்யப்பட்டவை

இ) அவர்களது கணக்குகளுக்கு நேரடியாக வெளிநாட்டு நிதிகளை/ பணவலுப்பல்களை நேரடியாகப் பெறுபவை

நீங்கள் அத்தகைய அறிக்கைகளை 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 7ஆம் பிரிவின் கீழ் சமர்ப்பித்தல் வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள

டி.எம்.ரூபசிங்க
**பணிப்பாளர்**
**நிதியியல் உளவறிதல் பிரிவு**

பிரதி: இணங்குவிப்பு அலுவலர், உரிமம்பெற்ற வங்கிகள்

**வழிகாட்டல் இல. 01/2019**

**தொடர்: 037/08/001/0032/019** 2019 ஒகத்து 22

சேரல்: முதன்மை நிறைவேற்று அலுவலர்/ பொது முகாமையாளர்/ உரிமையாளர்

கனம் ஐயா/ அம்மணி

**2019ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் மீதான குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்களுக்கான வழிகாட்டல்கள்**

மேற்குறிப்பிட்ட வழிகாட்டல்கள் உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டுமென்பதுடன், 2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டம், 2018ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபார (வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனம்) விதிகள் மற்றும் 2017ஆம் ஆண்டின் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் (படிவ) ஒழுங்குவிதிகள் என்பனவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படுதலாதலும் வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள

ஈ. எச். மொகோட்டி
**பதில் பணிப்பாளர்/ நிதியியல் உளவறிதல் பிரிவு**

பிரதி: இணங்குவிப்பு அலுவலர்கள்

**2019ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் தொடர்பான குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்களுக்கான வழிகாட்டல்கள்**

**அறிமுகம்**

1. இவ்வழிகாட்டல்கள் 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தின் பிரிவு 15(1) (ஜே) இனைப் பின்பற்றுவதற்காக விடுக்கப்படுவதுடன், நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தின் 33ஆம் பிரிவில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறான "குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்களில் ஈடுபட்டுள்ள அல்லது அவற்றை மேற்கொள்கின்றனவற்றிற்கு" பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

2. இவ்வழிகாட்டல்கள் நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 33ஆம் பிரிவில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறான "குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்களில் ஈடுபட்டுள்ள அல்லது அதனை மேற்கொள்கின்ற நிறுவனங்களுக்கு 2017ஆம் ஆண்டின் ஏப்பிறல் 21ஆம் திகதியிடப்பட்ட இல.2015/56 கொண்ட அதிவிசேட வர்த்தமானியின் கீழ் விடுக்கப்பட்ட 2017ஆம் ஆண்டின் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்கள் (படிவம்) ஒழுங்குவிதிகளை விளங்கிக் கொள்வதற்கும் பிரயோகிப்பதற்குமான உதவியை வழங்குகிறது.

3. இவ்வழிகாட்டல்கள் பூரணமானவையாக இருக்கும் எனக் கருதப்படவில்லை என்பதுடன் நிதியியல் உளவறிதல் பிரிவிலிருந்தான சட்ட ரீதியான ஆலோசனையாக இருக்குமெனவும் பொருள்கோடலாகாது.

**சட்ட ரீதியான கடப்பாடுகள்**

4. நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தின் 7ஆவது பிரிவின்படி, அனைத்து "நிறுவனங்களும்" சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்களை நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு அறிக்கையிடல் வேண்டும். நிறுவனம் என்பது ஏதேனும் நிதித் தொழிலில் அல்லது குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா தொழிலில் ஈடுபட்டுள்ள அல்லது அதனைக் கொண்டு நடத்துகின்ற எவரேனும் ஆள் அல்லது ஆட்கள் குழு என வரைவிலக்கணம் செய்யப்படுகிறது. நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 33ஆம் பிரிவின் கீழ் மற்றைய விடயங்களுடன் பின்வரும் தொழில்கள் மற்றும் தொழில்சார் நிபுணத்துவங்களும் "குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா தொழில்" என்ற வரைவிலக்கணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அ) இணையத்தளமூடாக அத்தகைய வியாபாரத்தினைக் கொண்டு நடத்துகின்ற ஆளொருவர் உட்பட கசினோக்கள், சூதாட்ட இல்லங்கள் அல்லது லொத்தரை நடத்துதல் தங்கள் வாடிக்கையாளர்கள் விதித்துரைக்கப்பட்ட தொடக்க நிலைக்குச் சமனான அல்லது அதற்கு மேற்பட்ட கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடும் பொழுது இணையத்தினூடாக அத்தகைய தொழிலைக் கொண்டு நடத்துகின்ற ஆளொருவர் உட்பட.

ஆ) உண்மைச் சொத்து முகவர்கள், அவர்கள் சொத்துக்களின் கொள்வனவு மற்றும் விற்பனை தொடர்பில் தங்கள் வாடிக்கையாளர்களுக்காக கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடும் பொழுது.

இ) விலையுயர்ந்த உலோகங்களின் வியாபாரிகளும் விலையுயர்ந்த கற்களிலும் ஓரளவு விலையுயர்ந்த கற்களிலும் வியாபாரம் செய்பவர்கள், அவர்கள், விதித்துரைக்கப்பட்ட தொடக்க நிலைக்குச் சமமான அல்லது அதற்கு மேற்பட்ட காசுக் கொடுக்கல்வாங்கல்களில் வாடிக்கையாளருடன் ஈடுபட்டிருக்கும் பொழுது 1993ஆம் ஆண்டின் 50ஆம் இலக்க இரத்தினங்கள் ஆபரணங்கள் சட்டத்தினால் மேவப்பட்ட உலோகங்களும் கற்களும் உட்பட, ஆனால் அவற்றிற்கு மட்டுப்படுத்தப்படாமல்.

ஈ) சட்டவறிஞர்கள், நொத்தாரிசுகள், வேறு சுயேட்சையான சட்ட உயர் தொழில் வல்லுநர்கள் மற்றும் கணக்காளர்கள்; அவர்கள் பின்வரும் எவையேனும் செயற்பாடுகள் தொடர்பில் தங்கள் வாடிக்கையாளர்களுக்காகக் கொடுக்கல்வாங்கல்களை ஆயத்தம் செய்யும் போது அல்லது கொண்டு நடத்தும் பொழுது:-

(i) உண்மைச் சொத்துக்களின் கொள்வனவு மற்றும் விற்பனை;

(ii) வாடிக்கையாளரின் பணத்தினை, பிணையங்களை அல்லது வேறு சொத்துக்களை முகாமை செய்தல்;

(iii) வங்கி, சேமிப்புக்கள் அல்லது பிணையங்கள் கணக்குகளை முகாமை செய்தல்;

(iv) கம்பனிகளின் உருவாக்கத்திற்கு, தொழிற்பாட்டிற்கு அல்லது முகாமைத்துவத்திற்கு உதவுதொகைகளை ஒழுங்குசெய்தல்; அத்துடன்

(v) சட்ட ஆட்களின் உருவாக்கம், தொழிற்பாடு அல்லது முகாமைத்துவம் அல்லது ஏற்பாடுகள் மற்றும் தொழில் அமைப்புக்களின் கொள்வனவும் விற்பனையும்.

உ) ஒரு தொழில் ஏற்பாட்டாளர்களாகவும் மூன்றாந்தரப்பினர்களுக்குப் பின்வரும் ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட சேவைகளின் ஏற்பாட்டாளர்களாகவும் இவ்வரைவிலக்கணத்தில் வேறுவகையில் உள்ளடக்கப்படாத ஒரு நம்பிக்கைப் பொறுப்பு அல்லது கம்பனிச் சேவை வழங்குநர்:-

(i) சட்ட ஆட்களை உருவமைத்தல் அல்லது முகாமை செய்தல்;

(ii) கம்பனியொன்றின் பணிப்பாளர் அல்லது செயலாளரொருவராக பங்குடமையொன்றின் பங்காளரொருவராக அல்லது வேறுபட்ட ஆட்கள் தொடர்பாக அதனையொத்த பதவியொன்றில் செயலாற்றுதல் அல்லது செயலாற்றுமாறு வேறோர் ஆளை ஒழுங்குசெய்தல்;

(iii) கம்பனியொன்றிற்கு, பங்குடமையொன்றிற்கு அல்லது வேறு எவரேனும் சட்ட ஆளுக்கு அல்லது ஏற்பாட்டிற்குப் பதிவு செய்யப்பட்ட அலுவலகமொன்றை தொழில் முகவரியொன்றை அல்லது இடவசதியை, கடிதத் தொடர்பை அல்லது நிர்வாக முகவரியை ஏற்பாடு செய்தல்;

(iv) வெளிப்படையான நம்பிக்கைப் பொறுப்பொன்றின் நம்பிக்கைப் பொறுப்பாளராகச் செயலாற்றுதல் அல்லது அவ்வாறு செயலாற்றுவதற்கு வேறோர் ஆளை ஏற்பாடு செய்தல்;

(v) வேறோர் ஆளுக்கு நியமனத்தர், பங்காளரொருவராக செயலாற்றுதல் அல்லது அவ்வாறு செயலாற்றுவதற்கு வேறோர் ஆளை ஏற்பாடு செய்தல்.

5. நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் பிரிவு 7(ஐ) பின்வருவனவற்றைத் தேவைப்படுத்துகின்றது.

"நிறுவனமொன்று -

(அ) ஏதேனும் சட்டத்திற்கு மாறான நடவடிக்கைகள் அல்லது ஏதேனும் வேறு குற்றவியலுடன் தொடர்பான குற்றங்களை மேற்கொள்வதுடன்

தொடர்பான ஏதேனும் கொடுக்கல்வாங்கல்களை அல்லது எத்தனிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்கிறார் என்று சந்தேகிப்பதற்கு நியாயமான காரணங்கள் இருக்கும் பொழுது;

அல்லது

(ஆ) அது

(i) 2005ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க பயங்காரவாத நிதியளிப்பினை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் தவறொன்றிற்கு ஆயத்தம் செய்கின்றதோர் செயலொன்றிற்கு இயைவுள்ளதென;

(ii) சட்ட விரோதமான செயற்பாடொன்றினை அமைத்துருவாக்கும் செயலொன்றிற்கான புலனாய்வொன்றிற்காக அல்லது வேறு வகையில் இச்சட்டத்தினை அல்லது 2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க பணம் தூயதாக்கலைத் தடைசெய்கின்ற சட்டத்தினை அல்லது 2005ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க பயங்கரவாத நிதியளிப்பினை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டத்தினை நடைமுறைக்கிடுவதில் உதவக்கூடிய இயைவுள்ளதென சந்தேகப்படுவதற்குரிய தகவலைக் கொண்டிருக்குமிடத்து;

நிறுவனமானது சந்தேகம் உருவாகிய பின்னர் சாத்தியமானளவிற்கு விரைவாக, ஆனால் அதிலிருந்திரண்டு வேலை நாட்களுக்குப் பிந்தாமல் கொடுக்கல்வாங்கல் அல்லது தகவலை நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

அத்தகைய அறிக்கை இத்தால் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கை என அழைக்கப்படுகிறது.

6. மேலே குறித்துரைக்கப்பட்டவாறு, அனைத்து குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்களும் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

7. நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 7ஆம் பிரிவின் கீழ், அறிக்கையிடல் தேவைப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கைகளையும் முறைமைகளையும் உருவாக்கிப் பேணுமாறு குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டன. மேலும், நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டம் குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் அவற்றின் அலுவலர்களுக்கு, ஊழியர்களுக்கு மற்றும் முகவர்களுக்குச் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்களை அடையாளம் காண்பதற்கான பயிற்சியை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன.

8. 2018ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் (வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவன) விதிகளின் விதி 6(ஊ) மற்றும் 6(எ) (iii) என்பனவற்றின்படி, குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் அவற்றின் மூத்த முகாமைத்துவம் அல்லது பணிப்பாளர் சபையில் ஒப்புதலளிக்கப்பட்ட உள்ளக பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் கொள்கையொன்றினை வடிவமைத்துக் கொள்ளுமாறும் நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடுவது தொடர்பான நடவடிக்கை முறைகளையும் கட்டுப்பாடுகளையும் உள்ளடக்கியிருக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொள்ளப்பட்டன.

9. நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் கீழ் ஒவ்வொரு குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்களும் கொடுக்கல்வாங்கல்களின் பதிவேடுகளையும் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பிலான கடிதத் தொடர்புகளையும் நிதியியல் "உளவறிதல் பிரிவிற்குச் சமர்ப்பிக்கப்பட்ட எல்லா அறிக்கைகளையும்" விடயத்திற்கேற்ப கொடுக்கல்வாங்கல்கள் அல்லது கடிதத் தொடர்பான திகதியிலிருந்து அல்லது அறிவித்தல் சமர்ப்பிக்கப்பட்ட திகதியிலிருந்து ஆறு ஆண்டுகள் கொண்ட காலத்திற்குப் பேண வேண்டுமென கேட்டுக்கொள்ளப்பட்டன. நிதியியல் உளவறிதல் பிரிவிற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து அறிக்கைகளும் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடலில் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்களின் அறிக்கையிடலின் முக்கியத்துவம்**

10. சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடுவது பணம் தூயதாக்கல், பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் மற்றும் குற்ற நடவடிக்கைகளுடன் தொடர்பான பணப்பெறுகைக் கொடுக்கல்வாங்கல்களுடன் தொடர்பான விடயங்கள் என்பனவற்றைக் கண்டுபிடிக்கும் முக்கிய மாதிரிகளிலொன்றாகும்.

11. காத்திரமான நிறுவன ரீதியான பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கான நிதியளித்தலை ஒழித்தல் நிகழ்ச்சித்திட்டமொன்றின் தொழிற்பாட்டில் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடுவது மிக முக்கியமான தொழிற்பாடொன்றாகும்.

12. பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தொழிற்பாடு அர்த்தமுடையதாக இருப்பதற்கு, நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் மீது விடுக்கப்பட்ட அனைத்து விதிகள் மற்றும் அறிவுறுத்தல்கள் உட்பட நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் நிதியியல் நிறுவனங்களின் காத்திரமான நடைமுறைகளிலிருந்தான பெறுபேறுகள் முக்கியமானவையாக இருத்தல் வேண்டும். அத்தகைய காத்திரமான நடைமுறைகளைக் கொண்டிராத நிதியியல் நிறுவனங்கள் ஒன்றில் துல்லியமற்ற, பூரணமில்லாத அல்லது பொருத்தமற்ற சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுவதற்கு அல்லது சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்கள் முழுமையாகப் பிழையாகிப் போவதற்கு வழிவகுக்கின்றன. அத்தகைய தவறுகைகள் ஒழுங்குமுறைப்படுத்தல், புகழ்வாய்ந்த தன்மை, தொழிற்பாட்டுத் தன்மை மற்றும் சட்ட ரீதியான இடர்நேர்வுகள் என்பனவற்றிற்கு நிதியியல் நிறுவனங்களை உள்ளாக்கிவிடும். சில விடயங்களைப் பொறுத்தவரையில் அத்தகைய தவறுகள் இயற்கையான மற்றும் சட்ட ஆட்கள் இருவரையும் குற்றவியல் பொறுப்பிற்குள்ளாக்கிவிடும்.

13. வாடிக்கையாளரின் மூலம் மற்றும் கொடுக்கல்வாங்கலை மேற்கொள்ளும் அறிவு எதுவாக இருப்பினும், பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் முறைமையில் தொழில்நுட்ப நவீனத்துவங்கள் எதுவாக இருப்பினும் முறைமையினைத் தொழிற்படுத்துவதற்கு நிறுவன ரீதியான மனவுறுதி தேவையாக இருக்கும். அதாவது, சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்களைக் கண்டறிவதற்கான மனவுறுதி இருத்தல் வேண்டும். அவை என்ன மாதிரியானவை, எப்பொழுது கண்டறியப்பட்டன எனப்னவற்றின் பொருட்டு சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்களைப் போன்ற நல்லெண்ணங்களை அடையாளம் காணுதல் மற்றும் அவை அங்கீகரிக்கப்படும் பொழுது அத்தகைய கொடுக்கல்வாங்கல்களின் முழுமையானதும் துல்லியமானதுமான அறிக்கைகள் அங்கீகரிக்கப்படுகின்றன. அத்தகைய நிறுவன ரீதியான மனவுறுதி நிதியியல் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை உட்பட மூத்த முகாமைத்துவத்திலுள்ளவர்களிடமிருந்தான கடப்பாடுகளின் மூலம் மிகக் காத்திரமான முறையில் உருவாக்கப்படுவதுடன் அது நிதியியல் நிறுவனத்தின் அலுவலர்களின் திடமான

நடவடிக்கைகள் மற்றும் செயன்முறைகளினூடாக (அதாவது காத்திரமான உள்ளகக் கொள்கைகளின் அபிவிருத்தி; செயன்முறைகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்; இணங்குவிப்பு கணக்காய்வு; முறைமைகளில் முதலீடு செய்தல்; தொடர்ச்சியான அச்சமற்ற ஒழுக்கவியல்பு வாய்ந்த நியாயபூர்வமான நடவடிக்கைகள்) வளர்த்தெடுக்கப்படுகின்றன.

14. வழமைக்கு மாறானதும் சாத்தியமானதுமான சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்களை அடையாளம் காண்பதற்கான இயலாற்றலுக்கான திறவுகோல் யாதெனில் குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் அவர்களது வாடிக்கையாளர்களுக்கும் வாடிக்கையாளர் வியாபாரங்களுக்கும் தொடர்பான கொடுக்கல்வாங்கல்களுக்கும் அறிவூட்டுவதாகும்.

**சந்தேகம்**

15. சந்தேகத்திற்காக நிதியியல் நிறுவனங்கள் அவற்றின் சொந்தத் தொழிற்பாட்டு வரைவிலக்கணத்தினை உருவாக்கிக் கொள்ளுதல் வேண்டும். நிதியியல் நிறுவனமொன்றின் சந்தேகத்தின் தொழிற்படுகின்ற வரைவிலக்கணமானது தீர்க்கப்படாததும் பெறுமானமற்றதும் ஆனால் செயற்பாட்டு அம்சங்களின் குறிக்கோள் பற்றிய சந்தேகத்தின் விடாப்பிடியான உணர்வுகள் மற்றும் நடத்தைகள் தொடர்பான சூழ்நிலைகள், தனியொரு கொடுக்கல்வாங்கல், தொடர்ச்சியான கொடுக்கல்வாங்கல்கள், எத்தனிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் அல்லது அவற்றையெல்லாம் ஒன்றுசேர்த்த விடயங்கள் என்பனவற்றின் மூலங்களைக் கூட்டிணைத்ததாக இருத்தல் வேண்டும். சில விடயங்கள் உளதாம் தன்மையிலிருக்கும் என்ற சூழ்நிலைகளின் மொத்தமான அறிவினையும் கருத்திற்கொள்கையில் சில விடயங்கள் இவ்வாறுதான் இருக்குமென எதிர்பார்க்கப்பட்டவாறு அல்லது விளங்கப்பட்டவாறு அமையவில்லை என்ற உணர்வு இருக்கமுடியும். ஒரு வழியில் அல்லது இன்னொரு வழியில் நிரூபணங்கள் கிடைக்காமையினால் சந்தேக உணர்வுகளுக்கு நிவாரணம் காண முடியாதிருக்கும். வரைவிலக்கணமானது உறுதியான ஆதாரங்களை அல்லது நிறைவான தெளிவான தன்மையினைக் கொண்டிராத நம்பிக்கையினை உருவாக்குவதனை அனுமதிப்பதாக இருக்க வேண்டும். அதேநேரம், வரைவிலக்கணமானது கற்பனையாக அல்லது விரைந்து மறைந்துவிடக்கூடிய நம்பிக்கையினை அனுமதிக்கக்கூடாது. நிச்சயமாக, வரைவிலக்கணமானது சந்தேகத்திற்குரிய நடத்தையாளர்களைக் கணக்கிலெடுத்தல் வேண்டும் என்பதுடன் சூழ்நிலைகளின் வழமைக்கு மாறான நடவடிக்கைகளையும் போதுமானதற்ற அல்லது நம்பகமான விதத்தில் விளக்கப்படாத விடயங்களையும் கணக்கிலெடுக்கக்கூடாது.

சந்தேகத்திற்கான தொழிற்பாட்டு வரைவிலக்கணம் நியாயமான தன்மை தொடர்பான பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். வரைவிலக்கணமானது மிகக் குறுகியதாக அல்லது கடுமையானதாக இருக்குமித்து, இது தெரியாத அல்லது எதிர்பார்க்கப்படாத சட்டத்திற்கு மாறான சூழ்நிலைகள் தொடர்பான கரிசனையைத் தோற்றுவிக்கும் அறிக்கைகள் உருவாக்கப்படுவதனை நீக்கிவிடலாம் (அதாவது "பிழையான எதிர்மறைகள்") என்பதுடன் குற்றவாளிகளின் தவிர்த்துக் கொள்ளும் தன்மையினையும் ஏற்படுத்தலாம். மறுபுறத்தில், மிகப் பரந்த அல்லது நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த வரைவிலக்கணம் போதுமானதற்றளவில் பகுப்பாய்வு செய்யப்பட்ட பெரும் எண்ணிக்கையான அறிக்கைகளை உருவாக்குவதுடன் சட்டத்திற்கு மாறான சூழ்நிலைகளையும் பிரதிபலிப்பதில்லை. இலத்திரனியல் தகவல் முறைமைகள் அவற்றின் செயன்முறைகளுடன் ஒருங்கிணைக்கப்பட்டிருக்குமிடத்து தொழிற்பாட்டு வரைவிலக்கணங்கள் நிதியியல் நிறுவனத்தினால் வரைவிலக்கணம் செய்யப்பட்ட தூண்டுவிசைகள், தோற்றப்பாடுகள், சூழ்நிலைகள் மற்றும் சட்டம் என்பனவற்றினால் ஓரளவிற்கு நடைமுறைப்படுத்தப்படுகின்றன. சந்தேகக் குறிகாட்டிகளும் உருவியமும் அத்தகைய வரைவிலக்கணத்தின் மூலங்களாக இருக்கக்கூடும். நடத்தையின் "வழமைக்கு மாறான" மாதிரிகளும் கொடுக்கல்வாங்கல்களும் கூட இவ்வரைவிலக்கணங்களில் பிரதிபலிக்கப்படுதல் வேண்டும்.

கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் நடத்தையாளர்களுக்கான சந்தேகத்திற்குரிய குறிகாட்டிகளின் முழுமையற்ற மற்றும் அலுவல்சார் ரீதியற்ற பட்டியலொன்று பின்னிணைப்பு 1இல் தரப்பட்டுள்ளது. குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரத்தின் சொந்தக் குறிகாட்டிகளின் மூலம் இப்பட்டியலை முழுமைப்படுத்துதல் வேண்டும். குறிகாட்டிகளைப் பயன்படுத்தும் போது, இக்குறிகாட்டிகள் சரியான முறையில் உருவாக்கப்படவில்லை என்பதனையும் அவை தற்போதைய குற்றமுடைய தன்மையினை எடுத்துக்காட்ட வேண்டிய அவசியத்தினைக் கொண்டிருக்கவில்லை என்பதனையும் ஞாபகத்தில் கொள்ளுதல் வேண்டும். மாறாக, தெரிந்த குறிகாட்டிகள் போதாமல் இருப்பது குற்றமுடைய தன்மை இல்லாமல் இருக்கிறது என்ற கருத்தித் தரவேண்டுமென்ற அவசியமில்லை. ஒரு விதத்தில் குற்றவாளிகள் அத்தகைய குறிகாட்டிகளைத் தவிர்த்துக் கொள்வதற்காக அவற்றின் நடத்தையையும் சீராக்கக்கூடியதாக இருந்திருக்கலாம். பதிலாக, குறிகாட்டிகள் மற்றும் குறிப்பாக, குறிகாட்டிகளின் இணைந்த தன்மை சந்தேக உருவாக்கங்களுக்கு வழிவகுக்கக்கூடிய அதிகரித்த நுணுகிய ஆய்வுகளுக்குக் காரணங்களாக அமைதல் வேண்டும்.

16. நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டம் மற்றும் ஏனைய விதிகள் மற்றும் அதன் கீழ் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகள், சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டல்களைப் பூரணமாக விளங்கிக் கொண்டு அதன் விளக்கங்களைப் பெற்றுக்கொள்ட பின்னரும் குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்களுக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள உண்மைகள் மற்றும் சூழ்நிலைகளைப் பரிசீலனைகளில் கொண்ட பின்னர் அத்தகைய உண்மைகள் நல்ல நம்பகத்தன்மையுடனும் குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்களின் சந்தேகங்களை விளங்கிக் கொள்வதன் பின்னணியிலும் குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்களுக்கான இடர்நேர்வுகளும் அடையாளம் காண்பதுடன் "சந்தேகத்திற்குரியவை" எனக் கருதப்படுகின்ற கொடுக்கல்வாங்கல்கள் கொடுக்கல்வாங்கல்களின் தொகையினைக் கருத்தில் கொள்ளாது நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

17. குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் கொடுக்கல்வாங்கல் அல்லது கொடுக்கல்வாங்கல்கள் அல்லது சந்தேகத்திற்கு வழிவகுக்கக்கூடிய ஒரு தொகுதி நடத்தைகளினைச் சுற்றிக் காணப்படும் வழமைக்கு மாறான அறிக்கையினை அறிக்கையிடுவதிலும் பார்க்க நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு அவர்கள் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையினைச் சமர்ப்பிப்பதற்கு முன்னதாக சட்டத்திற்கு மாறான நடவடிக்கையினை உருவாக்கிக் கொள்ளுமென எதிர்பார்க்கப்படவில்லை.

**சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கைகளை அறிக்கையிடல்**

18. 2017ஆம் ஆண்டின் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் (படிவம்) ஒழுங்குவிதிகளின் அட்டவணை V இனைப் பயன்படுத்தி சரியான முறையில் பூரணப்படுத்தப்பட்டு இணங்குவிப்பு அலுவலரினால் கையொப்பமிடப்பட்ட சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கைகளை நிதியியல் உளவறிதல் பிரிவிற்குச் சமர்ப்பித்தல் வேண்டும் (பின்னிணைப்பு II).

19. குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் விபரிக்கப்பட்ட படிவத்தினூடாக சந்தேகத்திற்கரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கைகளை அஞ்சல், தொலைநகல் அல்லது இலத்திரனியல் அஞ்சல் அல்லது நிதியியல் உளவறிதல் பிரிவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான வேறு ஏதேனும் விதத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.

20. சந்தேகத்தினை தொலைபேசியூடாகவும் அறிவிக்கமுடியும்; எனினும் இதனைத் தொடர்ந்து விபரிக்கப்பட்ட படிவத்தினூடாக இருப்பது நான்கு மணித்தியாலங்களுக்குள் எழுத்து மூலமாகவும் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

**அறிக்கையிடுகின்ற நேரம்**

21. நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் பிரிவு 7(1) இன்படி சந்தேகத்திற்குரிய அறிக்கைகளை நடைமுறைச் சாத்தியமானளவிற்கு விரைவாக ஆனால் சந்தேகம் உருவானதிலிருந்து இரண்டு வேலை நாட்களுக்குப் பிந்தாமல் நிதியியல் உளவறிதல் பிரிவிற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என தேவைப்படுத்துகிறது. இதன் கருத்து யாதெனில் சந்தேகத்தின் ஆரம்ப உருவாக்கத்தின் பின்னர் நிதியியல் நிறுவனத்தின் செயன்முறை, நடவடிக்கை முறை மற்றும் நடவடிக்கைகள் என்பனவற்றையெல்லாம் கருத்திற்கொள்ளாது சந்தேகத்தினை அது உள்ளவாறே, குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்களின் செயன்முறை நிறைவடையாத போதும் கூட அறிவித்தல் வேண்டும். குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரத்தின் சந்தேகத்தினைக் கையாள்வதற்கான செயன்முறையினையும் சந்தேகத்தினை அறிக்கையிடுவதனையும் சமகாலத்தில் மேற்கொள்ள முடியும். சந்தேகமானது வாடிக்கையாளர்களுடனான உறவுமுறை தொடர்பான சந்தேகம் எந்தவொரு நேரத்திலும் வியாபார உறவுமுறைகளின் எந்தவொரு கட்டத்திலும் உருவாக முடியும் என்பதனை இங்கு கவனிப்பது முக்கியமானதாகும். உதாரணமாக - வியாபார உறவு முறைகளை நிறுவுகின்ற பொழுது/ சந்தேகம் உருவாக்க முடியும்/ அடையாளத்தினைச் சரிபார்க்கும் பொழுது, குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரம் ஒரு வாடிக்கையாளர்களின் கணக்குகளையும் கொடுக்கல்வாங்கல்களையும் கண்காணிக்கும் பொழுது சந்தேகம் உருவாக முடியும்.

உதாரணமாக, வாடிக்கையாளரொருவர் தொடர்மாடிமனையொன்றைக் கொள்வனவு செய்வதற்காக உண்மைச் சொத்து முகவரை அணுகுகின்றார். அவர் சொத்து தொடர்பான எந்தவொரு ஆவணத்திலும் அவரின் பெயர் காணப்படக்கூடாது என்பதனைத் தொடர்ச்சியாக வலியுறுத்துவதுடன் அதற்குப் பதிலாக அனைத்து ஆவணங்களிலும் உறவினரல்லாத மூன்றாந்தரப்பினரின் பெயர் உள்ளடக்கப்பட வேண்டுமென கேட்டுக் கொள்கின்றனர். இது வாடிக்கையாளர் தொடர்பில் சாத்தியமானளவிற்கு உடனடியான சந்தேகத்தினை உருவாக்குமெனினும் கொடுக்கல்வாங்கல்களிலிருந்து இரண்டு வேலை நாட்களுக்குள் இச்சந்தேகமானது நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு அறிக்கையிடும் தேவையினை ஏற்படுத்துகின்ற வேளையில் குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரம் கொடுப்பனவின் உறுதிப்படுத்தலையும் விபரங்களையும் சரிபார்க்கின்ற உள்ளகச் செயன்முறைகளில் தொடர்ந்தும் ஈடுபடும்.

22. அறிக்கையினை அனுப்பிய பின்னரும் கூட, நிதியியல் நிறுவனத்தின் ஆரம்ப சந்தேகத்தினை வலுப்படுத்துவதற்கு உதவியாக அல்லது மறுதலிப்பதற்கான மேலாக உண்மைகளையும் சூழ்நிலைகளையும் நிதியியல் நிறுவனம் கண்டறியுமாயின் நிதியியல் நிறுவனம் அவற்றை நிதியியல் உளவறிதல் பிரிவிற்குப் பொருத்தமான விதத்தில் அறிவித்தல் வேண்டும்.

**அறிக்கையிடலின் உள்ளடக்கம்**

23. **முழுமையான தன்மை:** தனியொரு சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கை தனியானதொன்றாக இருத்தல் வேண்டுமென்பதுடன் சந்தேகம் தொடர்பான பூரணமான தகவல்களையும் கொண்டிருத்தல் வேண்டும். சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையொன்று சந்தேகம் பற்றிய முழுமையான தோற்றப்பாட்டினையும் அதேபோன்று பொருண்மியமான உண்மையினையும் சந்தேகம் உருவாவதற்கான சந்தர்ப்ப சூழ்நிலையினையும் அதற்குரிய காரணங்களையும் வழங்குதல் வேண்டும். பல் கொடுக்கல்வாங்கல்கள் அத்துடன்/ அல்லது நடத்தைகள் சந்தேகத்துடன் தொடர்புபட்டதாக இருக்குமிடத்து இவ்வனைத்து விடயங்களையும் உள்ளடக்கிய தனி அறிக்கையொன்று கோப்பிடப்படுதல் வேண்டும்.

24. **படிவ விபரணம்:** அறிக்கையின் விபரணப் பிரிவு மிக முக்கியமானதாகும். சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையினைச் சமர்ப்பிக்கும் போது குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரம், 2017இன் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்கள் (படிவம்) ஒழுங்குவிதிகளின் அட்டவணை V இல் உள்ள விபரமான விபரங்களை முழுமையாகச் சமர்ப்பித்தல் வேண்டும். விபரணம், **என்ன, யார், எப்பொழுது, எங்கே, ஏன் மற்றும் எவ்வாறு** என்ற அடிப்படை விபரண வினாக்களுக்கு சாத்தியமானளவிற்கு விடையளிக்க முயற்சித்தல் வேண்டும்.

**குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் சாத்தியமானளவிற்குத் தெளிவான பின்வரும் கணியம் சார்ந்த மற்றும் தரம் சார்ந்த தரவுகளை வழங்குதல் வேண்டும்.**

- தொடர்புபட்ட பணத்தின் தொகை
- தொடர்பான கொடுக்கல்வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்ட இடம்
- கொடுக்கல்வாங்கல் இடம்பெற்ற திகதி

பின்வருவன உள்ளிட்ட விபரணங்களைக் கொண்ட வினாக்கள் சிலவற்றிற்கு, சாத்தியமானவிடத்து விடையளிக்க முயற்சித்தல் வேண்டும்.

- சந்தேகத்தின் தன்மை என்ன?
- இழைக்கப்படக்கூடிய குற்றம் என்னவாக இருக்கும்?
- சந்தேகத்துடன் தொடர்புபட்ட மற்றும் தொடர்பான கொடுக்கல்வாங்கல்கள், எத்தனிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள், நடத்தைகள், விடயங்கள், நம்பிக்கை மற்றும் சந்தர்ப்ப சூழ்நிலைகள் எவை?
- ஈடுபட்டுள்ள இயற்கையான மற்றும் சட்ட ரீதியான ஆட்கள் யார்?
- பயன்பெறு சொந்தக்காரர் யார் (தொடர்பானதாயின்)?
- பெயர்கள், அடையாள அட்டை இலக்கங்கள், பதிவு இலக்கங்கள் போன்ற அவர்களின் அடையாளங்கள் போன்ற கிடைக்கத்தக்கவை எவை?
- அவர்களின் தொடர்புபட்ட முகவரி அமைவிடம் எவை?
- அவர்களது தொழில் அல்லது வியாபாரத்தின் தொடர்பு/ வகை என்ன?
- அவர்களது தொழில்தருநர்கள் யார்?
- அவர்கள் அரசியல் ரீதியாக முகம்கொடுக்க வேண்டியவர்களாக இருந்தார்களா, ஏதேனும் இருப்பின்?

- கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் ஒருவருடன் மற்றுவர் எவ்வாறு தொடர்புபட்டிருந்தனர்?
- கொடுக்கல்வாங்கல்களில் அவர்களின் வகிபாகம் என்ன?
- எப்பொழுது எங்கே கொடுக்கல்வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டன அல்லது கொடுக்கல்வாங்கல்கள் எத்தனிக்கப்பட்டன அல்லது நடத்தை நிகழ்ந்தது?
- எல்லாவற்றிற்கும் மேலாக, நிதியியல் நிறுவனங்களின் சந்தேகத்திற்கு வழிவகுத்த நேரம் அல்லது அமைவிடம் எவ்வாறு அமைந்தது?
- இவ்விடயங்களும் சந்தர்ப்ப சூழ்நிலைகளும் சந்தேகத்திற்கு ஏன் உதவியாக அமைந்தன?
- எவ்வாறு சந்தேகம் உருவானது?
- குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்களினால் என்ன மாதிரியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன?
- குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்களினால் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் எதனுடன் தொடர்பானது?

விபரணங்கள் தர்க்க ரீதியான விதத்தில் உருவமைக்கப்பட வேண்டும். இதன் மூலம் நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு அனுப்பப்படுகின்ற தகவல்களை வினைத்திறனுடன் பகுப்பாய்வு செய்யப்படுவதுடன் சாத்தியமானளவிற்கு பூரணமாகவும் துல்லியமாகவும் மேற்கொள்ளப்படுகிறது. சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையின் விபரணத்திற்காக அதாவது முன்னுரை, பிரதான பகுதி மற்றும் முடிவுரை ஆகிய பயன்படுத்தக்கூடிய இலகுவான கட்டுரை வடிவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும். பந்திகளை வெவ்வேறாகப் பிரிப்பது விபரணங்களைத் தர்க்க ரீதியான அலகுகளாகப் பிரிப்பதற்கும் வாசிக்கப்படக்கூடிய தன்மையினை அதிகரிப்பதற்கும் பயன்படுத்த முடியும்.

25. **துல்லியமான தன்மை:** அறிக்கையில் வழங்கப்பட்டுள்ள உண்மையான தகவல்கள் துல்லியமானவையாக இருத்தல் வேண்டுமென்பது தவிர்க்க முடியாததாகும். குறிப்பாக, பெயர்கள், அடையாள அட்டை இலக்கங்கள், பதிவு இலக்கங்கள் போன்றவை உண்மையானவையாக இருத்தல் வேண்டும். அடையாளம் காணப்பட்டவர்களின் அனைத்து எழுத்துக்களும் உரைகளும் இரு தடவைகள் பரிசோதிக்கப்படல் வேண்டும். கடவுச்சீட்டு இலக்கத்தில் அல்லது தேசிய அடையாள அட்டையில் ஒரு இலக்கம் பிழையாக இருப்பின் அல்லது பெயரில் ஏதேனும் எழுத்தொன்று இல்லாது போயிருப்பின் அல்லது மாறியிருப்பதானது வெற்றிகரமான மற்றும் வெற்றிகரமான பகுப்பாய்விற்கிடையில் வேறுபாடான தன்மையொன்றினை ஏற்படுத்தும். சட்ட ரீதியான நிறுவனங்களுக்கான அடையாளப்படுத்தல்கள் (உ-ம்: கம்பனி/ வியாபாரப் பதிவு இலக்கம், கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட பெயர்), அலுவல்சார் பதிவு ஆவணங்களில் காணப்பட்ட ஒவ்வொரு அம்சங்களிலும் மிகச் சரியான விதத்தில் ஒரே மாதிரியானவையாக இருத்தல் வேண்டும்.

**ஆதாரப்படுத்தும் ஆவணங்களைச் சமர்ப்பித்தல்**

26. குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையுடன் சேர்த்து தொடர்பான ஆதாரப்படுத்தும் ஆவணங்களையும் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

27. ஆதாரப்படுத்தும் ஆவணங்கள் விபரணங்கள் உட்பட சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையின் உள்ளடக்கங்களைப் பதிலீடு செய்வதிலும் பார்க்க ஆதாரப்படுத்துவனவாக இருத்தல் வேண்டும். ஆதாரப்படுத்தும் ஆவணங்களிலிருந்தான தகவல்களை விபரணத்தில் நேரடியாக உள்ளடக்க முடிகின்ற வேளையில் விபரணத்திலுள்ள ஆதாரப்படுத்தும் ஆவணங்களை மாத்திரம் பார்ப்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை. உதாரணமாக, சந்தேகம் நாணயக் கடிதத்துடன் தொடர்புபட்டதாக இருப்பின், சந்தேகத்துடன் தொடர்பான நாணயக் கடிதத்திலிருந்தான அனைத்து விபரங்களும் விபரணத்தில் உள்ளடக்கப்படுதல் வேண்டும். கடிதத்தின் பிரதியொன்று ஆதாரப்படுத்தும் ஆவணமாக வழங்கப்படல் வேண்டும்.

28. ஒரு குறியீடும் ஆதாரப்படுத்தும் ஆவணங்களின் நிறைவு பெறாத பட்டியலும் தொடர்பான சூழ்நிலைகளுடன் சேர்த்து உசாவுகைகளுக்காகக் கீழே தரப்பட்டுள்ளன.

| சூழ்நிலை | ஆதாரப்படுத்தும் ஆவணங்களின் குறிகாட்டிப்பட்டியல் |
|---|---|
| போலியான/ மாற்றம் செய்யப்பட்ட அடையாளம் தொடர்பான சந்தேகம் (தேசிய அடையாள அட்டை/ கடவுச்சீட்டு/ ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் | • ஆவணங்களின் பிரதி |
| சொத்து வணிகமொன்றில் சொந்தக்காரரின் நிதி மூலங்களுக்கும் சொத்திற்குமிடையிலான வேறுபாடுகள் | • விற்பனை மற்றும் கொள்வனவு உடன்படிக்கை<br>• சொத்துக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான பெறுகைகள் |
| இரத்தினக்கற்களின் கொடுக்கல்வாங்கல் பெறுமதிகளுடன் பொருந்திச் செல்லாத தொழில் விபரங்கள் | • இரத்தினக்கற்கள் விற்பனையுடன் தொடர்புபட்ட பெறுகைகள் |
| வாடிக்கையாளர்கள் கிரமமாக கொள்வனவு செய்கின்ற கசினோ பெறுமதி சாதனங்கள் மற்றும் காசாகவுள்ள அடையாள தொடக்க அளவிற்கும் குறைவான அடிக்கடி மேற்கொள்ளப்படும் பந்தயங்கள் | • கசினோ கொடுக்கல்வாங்கல்களுடன் தொடர்புபட்ட பெறுகைகள் |
| வாடிக்கையாளரை நேரடியாகச் சந்திக்காமலும் அட்டோனித் தத்துவம் இல்லாமலும் வாடிக்கையாளரின் சட்டவாளர் உறுதிகளை மாற்றல் செய்தல் | • மாற்றல் உறுதி<br>• கொடுப்பனவுப் பெறுகைகள் |
| கணக்காளர்களின் வாடிக்கையாளர்கள் அவர்களது விலைப்பட்டியலை மேலதிகமாகச் செலுத்துதல் | • கணக்குகளின் கூற்று<br>• மேலதிகமாகச் செலுத்தப்பட்ட விலைக்குறிப்புப் பட்டியல்கள் |

பல்வகை விடயங்கள்

**இரகசியமானது**

29. நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 9ஆம் பிரிவின்படி, குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையின் உள்ளடக்கம் பற்றி வாடிக்கையாளர் உட்பட எந்தவொரு ஆளுக்கும் அறிவிப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டாது. நிதியியல் நிறுவனம் அத்தகைய அறிக்கையினை நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு கோப்பிட்டிருப்பினும் கூட அனுமதிக்கப்படமாட்டாது.

30. வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக் கவன விதிகளின்படி வாடிக்கையாளர் ஒருவர் தொடர்பாக பணம் தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாத நிதியளிப்பு இடர் பற்றிய சந்தேகத்தை குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் கொள்ளுமிடத்தும், வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவன வழிமுறைகள் பற்றிய செய்முறையை நடாத்துதல் வாடிக்கையாளருக்குக் குறிப்பறிவிக்குமென அது நியாயமான முறையில் நம்புகின்றவிடத்தும், அது வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவன வழிமுறைகளைச் செயற்படுத்தாமல் கொடுக்கல்வாங்கலை மேற்கொண்டு நடாத்துதல் வேண்டும். எனினும், நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 7ஆம் பிரிவிற்கு இணங்கியொழுகும் விதத்தில் குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல் அறிக்கையினை உடனடியாகக் கோப்பிடல் வேண்டும்.

**இரகசியத்தன்மையினை மீறுதல்**

31. குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரத்தின் எவரேனும் அலுவலரினால் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையின் அறிக்கையிடல் பற்றி எவரேனும் வாடிக்கையாளருக்கு இரகசியம் பற்றிய துப்பினை வழங்குவது நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 9ஆம் மற்றும் 10ஆம் பிரிவின் கீழ் சட்ட மீறலொன்றாகக் கருதப்படும். இது 'துப்பினை வழங்கும்' குற்றமொன்றாக விபரிக்கப்படுவதுடன் இது ஐந்து இலட்சம் ரூபாவினை விஞ்சாத தண்டத்திற்கு அல்லது ஒன்றில் இரண்டாண்டுகளை விஞ்சாத காலப்பகுதிக்கான சிறைத் தண்டனைக்கு அல்லது அத்தகைய தண்டம் மற்றும் சிறை ஆகிய இரண்டிற்கும் ஆளாகும் குற்றமொன்றிற்கும் உள்ளாதல் வேண்டும்.

**சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையினை அறிக்கையிடுகின்ற ஆட்களுக்கான பாதுகாப்பு**

32. நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 12ஆம் பிரிவின்படி

"இச்சட்டத்தின் கீழ் அல்லது இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுடன் அல்லது இச்சட்டத்தின் நியதிகளின்படி நிதிசார்ந்த உளவறிதல் பிரிவினால் வழங்கப்பட்ட பணிப்புரைகளுடன் இணங்கியொழுகுகையில் நிறுவனத்தினால், கணக்காய்வாளர்கள் கழகத்தினால் அல்லது மேற்பார்வை அதிகாரசபையினால் அல்லது அத்தகைய நிறுவனத்தின் கழகத்தின் அல்லது அதிகாரசபையின் பணிப்பாளர், பாங்காளர், அலுவலர், ஊழியர் அல்லது முகவர் ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில்

(அ) அத்தகைய நிறுவனத்திற்கு அல்லது நிறுவனமொன்றின் கணக்காய்வாளருக்கு அல்லது மேற்பார்வை அதிகாரிக்கு; அல்லது

(ஆ) அத்தகைய ஆளினது தொழில்முறையின் போது அல்லது நிறுவனமொன்றின் முகவராண்மையின், கணக்காய்வாளர்கள் கழகமொன்றின் அல்லது மேற்பார்வை அதிகாரசபையின் தொழில்நெறி முறையின் போது செயலாற்றும் பணிப்பாளர்கள், பங்காளர்கள், அலுவலரொருவர், ஊழியர் அல்லது முகவர் ஒருவருக்கெதிராக"

33. நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் பிரிவு 7 மற்றும் 10 இனைப் பின்பற்றுகின்ற விதத்தில் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் ஒன்றிலுள்ள எவரேனும் அலுவலரின் அல்லது குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரத்தின் ஊழியர்களின் அடையாளம் உட்பட அனைத்துத் தகவல்களும் அல்லது சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கைக்கு உதவுகின்ற விதத்தில் வழங்கப்பட்ட மேலதிகத் தகவல்களும் நிதியியல் உளவறிதல் பிரிவினால் கடுமையான இரகசியத்துடன் பேணப்படும்.

**சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையினை அறிக்கையிடத் தவறுவது**

34. கொடுக்கல்வாங்கலானது பணம் தூயதாக்கல் அல்லது பயங்கரவாதத்திற்கு நிதியிடுவதுடன் தொடர்பானது எனச் சந்தேகப்படுவதற்கு நியாயமான காரணங்கள் காணப்படும் பொழுது, குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையினைச் சமர்ப்பிக்கத் தவறுவது நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்திற்கு இணங்கியொழுகத் தவறுவதாகக் கருதப்படும். நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 19ஆவது பிரிவின்படி நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 7ஆம் பிரிவினை உறுதிப்படுத்தத் தவறுமிடத்து, தொடர்பான இணங்குவிக்காமையின் தன்மை மற்றும் அதனால் ஏற்படும் தாக்கம் என்பனவற்றைப் பரிசீலனையில் கொண்டு விதிக்கப்படும் தண்டமொன்றிற்குப் பொறுப்பாதல் வேண்டும். எனினும், எந்தவொரு வழக்கிலும் அத்தகைய தண்டம் ஒரு மில்லியன் ரூபாவினை விஞ்சாதிருத்தல் வேண்டும். முன்னைய சந்தர்ப்பமொன்றில் தண்டத்திற்குரியவராக ஒரு ஆள் இருக்குமிடத்து அதனைத் தொடர்ந்து, மேலும் ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் அத்தகைய ஆள் தேவைப்பாடுகள் எதனையேனும் உறுதிப்படுத்தத் தவறியிருக்கின்றார் என்பது உறுதிப்படுத்தப்படுமிடத்து அத்தகைய ஆள் முன்னைய சந்தர்ப்பத்தில் விதிக்கப்பட்ட தொகையின் இரு மடங்கினை மேலதிகத் தண்டமாகச் செலுத்துதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய முதல் சந்தர்ப்பத்திற்குப் பின்னரான ஒவ்வொரு இணங்காமைக்கும் அத்தகைய விதத்தில் தண்டப் பணத்தினைச் செலுத்துதல் வேண்டும்.

35. மேலும், நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 28ஆம் பிரிவின் நியதிகளில், 7ஆம் பிரிவின் கீழ் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடலைச் செய்கின்ற ஆளொருவர் பொய்யானதென அல்லது முக்கியமானதொரு விவகாரத்தில் பிறழ்வழி இட்டுச்செல்கின்றதென அறிந்து கொண்டு ஏதேனும் கூற்றைச் செய்கின்ற அல்லது எந்தக் கருமம் அல்லது விடயமில்லாமல் அக்கூற்று பொய்யானதாகும் அல்லது முக்கியமான விபரமொன்றில் பிறழ்வழிவிட்டுச் செல்லுமென அவ்வாள் அறிந்திருக்கும் ஏதேனும் கருமத்தை அல்லது விடயத்தை ஏதேனும் கூற்றிலிருந்து விட்டுவிடுகின்றவிடத்து, அவர் தவறொன்றிற்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பு அளிக்கின்றதன் மீது ஒரு இலக்கம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்தால் அல்லது ஆண்டை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான இருவகையிலொரு வகை மறியற்றதண்டனையால் அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றதண்டனை ஆகிய இரண்டினாலும் தண்டிக்கப்படுவதற்காளாதலும் வேண்டும்.

**அறிக்கையிடுகின்ற நிறுவனம் யாருடைய சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையினை அறிக்கையிட்டதோ அந்த வாடிக்கையாளருடன் வியாபாரத் தொடர்புகளைத் தொடர்ந்து நடத்துதல் வேண்டுமா?**

36. நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டம் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடப்பட்ட வாடிக்கையாளருடனோ அல்லது சந்தேகம் உருவாகியுள்ள வாடிக்கையாளருடனோ குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் வியாபாரத் தொடர்புகளைத் தொடர்வதைத் தடை செய்யவில்லை. குறிப்பாக, வாடிக்கையாளர் தொடர்பிலான குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்களின் நடத்தையானது நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 3ஆவது பிரிவின் ஏற்பாடுகளுக்குட்பட்டு எந்தவிதமான குறிப்பிடத்தக்க தகவல்களையும் வழங்கக்கூடாது.

**வாடிக்கையாளர் தொடர்பிலான சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையினைச் சமர்ப்பித்த குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்களின் கடப்பாடுகளும் வியாபார உறவுமுறைகளைத் தொடர்வதும்**

37. ஆரம்ப சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையினைச் சமர்ப்பிப்பதன் பின்னர் குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் அவ்வாடிக்கையாளருடனான அனைத்து எதிர்காலத் தொடர்புகளிலும் நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் அனைத்துத் தொடர்பான ஏற்பாடுகளுக்கும் தொடர்ந்தும் இணங்கியொழுகுதல் வேண்டும். இது மேலதிக சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையின் அடையாளம் காணப்பட்ட மேலதிகச் சந்தேகம் மீதான தகவல்கள்/ மேலதிக அபிவிருத்தி என்பனவற்றைச் சமர்ப்பிப்பதற்கான தேவையினையும் உள்ளடக்கும்.

**மேலதிகத் தகவல்களுக்கான கோரிக்கை**

38. நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 7ஆம் பிரிவின்படி, ஏதேனும் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கை தொடர்பாக நிதியியல் உளவறிதல் பிரிவு மேலதிகத் தகவல்களைக் கோருமிடத்து, குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் அத்தகைய தகவல்களைச் சரியான முறையில் உளவறிதல் பிரிவிற்கு வழங்குவதற்குத் தேவையான வழிமுறைகளை எடுத்தல் வேண்டும்.

39. மேலும், நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 15(1)(ஆ)ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறு, சட்டத்திற்கு மாறான நடவடிக்கையுடன் தொடர்பான ஏதேனும் செயற்பாடு தொடர்பில் அல்லது பணம் தூயதாக்கல் அல்லது பயங்கரவாதத்திற்கு நிதியிடல் அல்லது வர்த்தக ரீதியாக கிடைக்கத்தக்க தரவுத் தளங்கள் உட்பட பகிரங்கமாகக் கிடைக்கின்ற அல்லது கிடைக்காத பயங்கரவாத நடவடிக்கைகள் அல்லது அரசாங்கத்தினால் பேணப்படுகின்ற தரவுத்தளத்தில் சேமிக்கப்பட்டுள்ள தகவல்கள் உட்பட சேகரிக்கப்பட்ட அல்லது பேணப்பட்ட தகவல்களை நிதியியல் உளவறிதல் பிரிவு கோரும் ஏதேனும் தகவல்களைக் குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரம் சமர்ப்பித்தல் வேண்டும்.

**பின்னிணைப்பு 1**

**சந்தேகத்திற்குரிய குறிகாட்டிகள்**

இப்பின்னிணைப்பானது வாடிக்கையாளர் நடத்தை மற்றும் நடவடிக்கைகள் தொடர்பான குறிகாட்டிகளின் பட்டியலை உள்ளடக்கியுள்ளது. இப்பட்டியலானது பூரணமற்றதாகவும் பூரணப்படுத்தப்படாததாகவும் இருப்பதுடன் ஒவ்வொரு குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரத்தினாலும் தேவையான விதத்தில் திருத்தியமைக்கப்பட்டு துணைநிரப்புச் செய்யப்பட வேண்டியதொன்றாகக் காணப்படுகிறது. குறிகாட்டிகள் முறைப்படுத்தப்படாதனவாகவும் அவை எப்பொழுதும் குற்றத்தன்மையினை எடுத்துக்காட்டாதனவாகவும் காணப்படுகின்றன. மாறாக, குறிகாட்டிகள் போதுமானளவில் இல்லாமையானது குற்றத்தன்மை இல்லை என்பதனைக் குறிக்காது. **எனினும், குறிகாட்டியொன்றின் பிரசன்னம் மற்றும் விசேடமாக பல் குறிகாட்டிகளின் பிரசன்னமும் குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்களின் அதிகரித்தளவிலான நுண்ணாய்வினை ஏற்படுத்த வெண்டுமென்பதுடன் அத்தகைய நுண்ணாய்வு சந்தேகத்தினை உருவாக்குவதற்கும் வழிவகுக்கும்.**

**பொதுவான குறிகாட்டிகள்**

- சூழ்நிலைகளுக்கும் பொருந்தாத ஏதேனும் நடத்தை.
- வாடிக்கையாளர்களைப் பொறுத்தவரை வழமைக்கு மாறான ஏதேனும் நடவடிக்கை.
- அதற்கேயான வழமைக்கு மாறான ஏதேனும் நடவடிக்கை.
- சட்டத்திற்கு மாறான நடவடிக்கைகள் தொடர்புபட்டிருக்கலாம் என நம்பப்படும் விதத்தில் நிறுவனத்தினை வழிநடத்தக்கூடிய ஏதேனும் அறிவு.
- வாடிக்கையாளர்கள், அவர்களது கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் எத்தனிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான சந்தேகங்களின் தீர்க்கப்படாத மற்றும் விடாப்பிடியாகக் காணப்படும் உணர்வுகள்.

**பொதுவான நடத்தை/ வாடிக்கையாளர் குறிகாட்டிகள்**

- வதந்தியான விடயமாக இருப்பினும் கூட குற்றவியல் நடவடிக்கைகளுடன் தொடர்பான விடயங்கள் பற்றிய வாடிக்கையாளர் பேச்சுவார்த்தைகள் அல்லது சூசகமான விடயங்கள்.
- வாடிக்கையாளர்கள் வீட்டு முகவரிக்கு கடிதத் தொடர்புகளை அனுப்ப விரும்பாமை.
- வாடிக்கையாளர் அடிக்கடி முகவரியைப் பயன்படுத்தினாலும் தொடர்பான பெயரை அடிக்கடி மாற்றுகின்ற தன்மை.
- வாடிக்கையாளர் மற்றையவர்களுக்கு அணித்தாகவுள்ள முகவரிகளைப் பயன்படுத்துதல்.
- பணிமனைகளுக்கு விஜயம் செய்கையில் வாடிக்கையாளர்கள் சேர்ந்து போதல் மற்றும் கவனித்தல்.
- வாடிக்கையாளர் உள்ளக முறைமைகள், கட்டுப்பாடுகள் மற்றும் கொள்கைகள் பற்ற தெரிந்து கொள்ள வழமைக்கு மாறாக ஆர்வம் காட்டுகின்றமை.

- வாடிக்கையாளர் கொடுக்கல்வாங்கல் பற்றி குழப்பமான அல்லது முரண்பாடான தகவல்களைக் காட்டுதல்.
- வாடிக்கையாளர் கொடுக்கல்வாங்கல் பற்றி அளவுக்கதிகமாக நியாயப்படுத்தல் அல்லது விளக்கமளித்தல்.
- வாடிக்கையாளர் அறிக்கையிடுகின்ற தரவுகளை மாற்றுவதற்கு அல்லது நீக்குவதற்கு அலுவலர்களை இணங்கச் செய்ய முயற்சித்தல்.
- வாடிக்கையாளர் இரகசியத்தன்மை கொண்டவர்களாகவும் நேரடியாகச் சந்திக்கத் தயக்கமுடையவர்களாகவும் இருத்தல்.
- வாடிக்கையாளர் பதட்டமுடையவராகவும் கொடுக்கல்வாங்கலை முறையாகப் பேணாதவராகவும் இருத்தல்.
- வாடிக்கையாளர் கொடுக்கல்வாங்கலை விரைவாகச் செய்யப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தல்.
- வாடிக்கையாளர் அலுவலர்களுடன் நெருக்கமான தொடர்புகளை அபிவிருத்தி செய்ய முயற்சித்தல்.
- வாடிக்கையாளர் வழங்கப்படும் பணி ஏற்பாடுகளுக்காக பணம், அளவுக்கதிகமான தரகு, பணிக் கொடைகள் அல்லது வழமைக்கு மாறான சகாயங்களை வழங்குதல்.
- வாடிக்கையாளர் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கலை அறிக்கையிடுவது தொடர்பில் சட்டத்தில் வழமைக்கு மாறான அறிவினைக் கொண்டிருத்தல்.
- வாடிக்கையாளர் பணம் தூயதாக்கல் நிதியம் தொடர்பில் தேவையா அல்லது இல்லையா என்பது பற்றி பரிகாசமாக இருத்தல்.

**அடையாளக் குறிகாட்டிகள்**

- வாடிக்கையாளர் சந்தேகத்திற்குரிய அல்லது தெளிவற்ற தகவல்களை வழங்குதல்.
- வாடிக்கையாளர் மேம்போக்காகப் பிழையான அடையாளத்தினை வழங்குதல் அல்லது அடையாளங்கள் போலியானவையாக, மாற்றம் செய்யப்பட்டவையாக அல்லது துல்லியமற்றவையாகக் காணப்படல்.
- வாடிக்கையாளர் தனிப்பட்ட அடையாளப்படுத்தல் ஆவணங்களை வழங்க மறுத்தல்.
- வாடிக்கையாளர் மூல அடையாள ஆவணப்பத்திரங்களை வைத்திருக்காது தனிப்பட்ட அடையாள ஆவணங்களின் பிரதியை மாத்திரம் வைத்திருத்தல்.
- வாடிக்கையாளர் ஆதார ஆவணங்கள் குறைந்தளவு முக்கியமான விபரங்களைக் கொண்டிருத்தல்.
- வாடிக்கையாளர் அடையாள ஆவணங்களைச் சமர்ப்பிப்பதில் அல்லது வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனம் தொடர்பில் தேவையற்ற தாமதங்களைக் காட்டுதல்
- சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து அடையாள ஆவணங்களும் வெளிநாட்டு ஆவணங்களாக அல்லது சரிபார்ப்பதற்கு நியாயமற்ற விதத்தில் இடர்ப்பாடுகளைக் கொண்டதாகவும் காணப்படுதல்.
- சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து அடையாள ஆவணங்களும் புதியவையாக அல்லது அண்மைய திகதிகளில் வழங்கப்பட்டவர்களாக இருத்தல்.
- வாடிக்கையாளர் தொழிலற்றவராக அல்லது அடிக்கடி வேலை மாறுபவராக இருத்தல்.
- வாடிக்கையாளர் பெருந்தொகையான பணத்தினைக் கொண்ட கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளல்.

**வியாபாரமொன்றிற்கான குறிகாட்டிகள்**

- வியாபாரங்கள் கிரமமான வியாபார நேரமொன்றினைக் கொண்டிராமை.
- வழமைக்கு மாறான இலாபம் தரும் வியாபாரம்.
- முறிவடைகின்ற கைத்தொழில்களிலுள்ள இலாபம் தரும் வியாபாரம்.
- கைத்தொழில் விதிகளுக்கும் மேலான வியாபாரப் பெறுகைகள் மற்றும் வருமானங்கள்.
- குறைந்த செலவிலான அல்லது மிக வசதியான முறைகள் இருக்கும் பொழுது உயர்ந்த செலவிலான அல்லது வசதியீனமான முறைகளைப் பயன்படுத்தல்.
- அவரின் சொந்த வியாபாரம் அல்லது தொழிலில் ஆழமான அறிவினைப் போதுமானளவில் கொண்டிருக்கவில்லை என்பது வெளிப்படையாகத் தெரிதல்.

**பொதுவான கொடுக்கல்வாங்கல் குறிகாட்டிகள்**

- கொடுக்கல்வாங்கல்கள் வாடிக்கையாளருக்கு வழமைக்கு மாறானதாக இருத்தல்.
- கொடுக்கல்வாங்கல்கள் நாட்டிற்கு வழமைக்கு மாறானதாக இருத்தல்.
- கொடுக்கல்வாங்கல்கள் கைத்தொழிலுக்கு வழமைக்கு மாறானதாக இருத்தல்.
- கொடுக்கல்வாங்கல்கள் வேறு ஏதேனும் காரணங்களுக்காக வழமைக்கு மாறானதாக இருத்தல்.
- கொடுக்கல்வாங்கல்கள் வாடிக்கையாளரின் வெளிப்படையான நிதியியல் நிலைமைகளுடன் அல்லது நடவடிக்கைகளின் வழமையான மாதிரிகளுடன் ஒவ்வாததாக் காணப்படுதல்.
- செல்வநிலையில் விளங்க முடியாத அளவிற்கு திடீர் அதிகரிப்பு.

- கொடுக்கல்வாங்கல்கள் கைத்தொழில் நடைமுறைகளின் வழமையான தன்மைக்கு மாறானதாக அல்லது வாடிக்கையாளருக்குப் பொருளாதார ரீதியில் அநுகூலம் மிக்கதாகக் காணப்படாமை.
- கொடுக்கல்வாங்கல்கள் அதன் கூறப்பட்ட நோக்கங்களுக்காக தேவையற்ற சிக்கலான தன்மையினைக் கொண்டிருத்தல்.
- நடவடிக்கைகள் பிரகடனப்படுத்தப்பட்ட வியாபாரத்திலிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற விடயங்களுடன் ஒவ்வாததாகக் காணப்படல்.
- கொடுக்கல்வாங்கல்கள் இலாபமற்ற அல்லது அறக்கொடை அமைப்புக்களுடன் தொடர்பானதாகவும் தர்க்க ரீதியில் பொருளாதார நோக்கத்தினைக் கொண்டிராததாக அல்லது அமைப்பின் கூறப்படட நடவடிக்கைக்கம் கொடுக்கல்வாங்கலிலுள்ள மற்றைய தரப்பினருக்குமிடையில் தொடர்புகளேதும் இல்லாததாகவும் காணப்படுதல்.

## குறித்துரைக்கப்பட்ட துறைகளுக்கான சிவப்புத் துண்டு குறிகாட்டிகள்

### கசினோ மற்றும் சூதாட்ட இல்லங்கள்

- வாடிக்கையாளர்கள சூதாட்டமற்ற அல்லது குறைந்தபட்ச சூதாட்டத்துடன் சிப்புக்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் மீட்டெடுத்தல் அல்லது நிதிகளை வைப்புச் செய்தல் மற்றும் எடுப்பனவு செய்தல்;
- வாடிக்கையாளர் வெற்றிபெற்ற தொகை தொடர்பில் மூன்றாந்தரப்பினரின் கணக்குகளுக்கு பல்வேறு கொடுப்பனவுகளையும் மூலதனத்தையும் கோருதல்;
- ஒரே நன்மைபெறுநருக்கு கொடுப்பனவுகளைச் செய்யுமாறு பல்வேறு தொழிற்பாட்டாளர்களும் கோரிக்கை விடுத்தல்;
- ஒருவர் இன்னொருவருக்காக பந்தயத்தொகையினை எதிரீடு செய்வதன் மூலமாக ஒத்துழைத்துக் கொள்வதாகக் காணப்படுகின்ற சூதாட்டக்காரர்கள்;
- வாடிக்கையாளர் தொடர்பில் உரிய விழிப்புக் கவனத்தினை அல்லது ஏனைய அறிக்கையிடல் தேவைப்பாடுகளை (ஒன்றில் உண்மையான அல்லது உணரப்படுகின்ற) தவிர்க்கின்ற விதத்தில் சிப்புக்களை அல்லது ஏனைய சாதனங்களைக் கொள்வனவு செய்வதற்கான அல்லது மீட்டுக் கொள்வதற்கான திட்டம்;
- குறைந்தபட்ச அல்லது உண்மையான சூதாட்டமில்லாத விதத்தில் காசினை ஏற்றுக்கொள்கின்ற மற்றும் காசினை வழங்குகின்ற சூதாட்டக் கருவிகளுக்கான புகுத்தல் நாணயத்தினால் மேற்கொள்ளப்படும் “உட்புகுத்தல் உண்டியல்” (உ-ம்: டிட்டோ சீட்டொன்றினை அல்லது அது போன்ற வேறு சாதனம்);
- வாடிக்கையாளர் சிநேகபூர்வதன்மை/ கசினோ ஊழியர்களுடன் சிநேகபூர்வமாக இருக்க எத்தனித்தல்;
- கசினோ விளையாடுபவர்களுக்கு மூன்றாந்தரப்பினர் நிதியிடுவது போன்று காணப்படும் தன்மை;
- நன்கு நிறுவப்பட்ட வாடிக்கையாளரொருவருக்கான கொடுக்கல்வாங்கலின் அளவிலும் எண்ணிக்கையிலும் கடுமையான அல்லது விரைவான அதிகரிப்புக் காணப்படல்;
- சூதாடுகின்ற ஆளின் நிதியியல் நிலைமை அத்துடன் அல்லது அவரின் தொழிலுடன் ஒவ்வாததாகக் காணப்படும் சூதாட்ட நடவடிக்கைகள்;
- வெற்றி பெற்ற சீட்டினை சூதாட்டக்காரர்களிடமிருந்து கொள்வனவு செய்தல்;
- ஜக்பொட் வெற்றிக்குரிய அல்லது வெற்றிபெற்ற லொத்தர் சீட்டினை ஆரம்பக் கட்டணமொன்றில் கொள்வனவு செய்தல்;
- சூதாட்டமின்றி பெருந்தொகையான சிறிய இன வங்கித் தாள்களை பெரிய இன நாணயத் தாள்களுக்கு பரிமாற்றிக் கொள்ளுதல்;
- வெற்றிபெற்ற ஜக்பொட் சீட்டுக்களை அடிக்கடி கோருதல்;
- சூதாட்டத்தில் பங்கு பெறாமல் ஆனால் ஜக்பொட் நடைபெறும் இடங்களை அவதானிக்கின்ற/ சுற்றித்திரிகின்ற வாடிக்கையாளர்கள்;
- குறிப்பிடத்தக்க பெறுமதியான சிப்புக்களை அல்லது டிட்டோ சீட்டுக்களை மற்றைய வாடிக்கையாளர்களுக்கு மாற்றுகின்ற வாடிக்கையாளர்கள்;
- கழிவிடப்படுகின்ற நிதியினைக் கொண்ட மீள்கொடுப்பனவுடன் வாடிக்கையாளர்களுக்கு சூதாடுவதற்கு நிதிகளை கடனாக வழங்குதல்;
- குறிப்பிட்டதொரு காலப்பகுதியில் குறைந்த இடர்நேர்வில் பெருந்தொகையான பந்தயத்தினைக் கட்டுவதற்காக வடிவமைக்கப்பட்டதாகக் காணப்படும் சூதாட்ட மாதிரிகளை சூதாடுவதன் மூலம் காசாக்குவதற்கு முன்னர் ஊகிக்கப்படத்தக்க குறைந்த வீதத்தினைப் பெற்றுக்கொள்ளுதல்;
- வாடிக்கையாளர் தொடர்பிலான உரிய விழிப்புக் கவனத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கான தகவல்களை வழங்கத் தயங்கும் வாடிக்கையாளர்கள் அல்லது சந்தேகத்திற்குரிய அல்லது உண்மையான அடையாளத் தகவல்களை வழங்குதல் அல்லது வேறுவழியில் நிறுவனத்தின் வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனச் செயன்முறைக்கு வேண்டுமென்றே தடைகளை ஏற்படுத்துபவராகக் காணப்படும் வாடிக்கையாளர்.

### உண்மைச் சொத்து முகவர்கள்

- துணையாளர் ஒருவர் அல்லது உறவினர் (வாழ்க்கைத் துணைவர் தவிர்ந்த ஒருவர்) அல்லது பராயமடையாத ஒருவரின் பெயரில் அல்லது இயலாற்றலற்ற ஒருவரின் பெயரில் அல்லது பொருளாதார ரீதியில் அத்தகைய கொள்வனவுகளை மேற்கொள்ள இயலாற்றலற்ற வேறு எவரேனும் ஆட்களின் (அவர்களின் சொந்தப் பிள்ளைகள் தவிர்ந்த ஏனையவர்) பெயர் போன்ற நியமனத்தரொருவரின் பெயரில் வாடிக்கையாளர் சொத்துக்களைக் கொள்வனவு செய்தல்/ வாங்குதல்.
- பயன்பெறும் சொந்தக்காரரின் அடையாளத்தினை மறைப்பதற்கு வாடிக்கையாளர் முயல்தல் அல்லது பயன்பெறுநரின் அடையாளத்தினை மறைக்கும் விதத்தில் கொடுக்கல்வாங்கல்களை உருவாக்கிக் கொள்ளுதல்.
- கொள்வனவாளர் செல் கம்பனியாக இருப்பதுடன் கம்பனியின் பிரதிநிதி பயன்பெறும் சொந்தக்காரரின் அடையாளத்தினை வெளிப்படுத்த விரும்பாமலிருத்தல்.

- வாடிக்கையாளரினால் வழங்கப்பட்ட முகவரி அறியப்படாதிருத்தல், பொய்யானது என நம்பப்படுவது அல்லது தொடர்பு கொள்வதற்கான முகவரி விபரங்கள் போதுமானதாக இல்லாமலிருப்பது.
- வாடிக்கையாளர் சொத்தினைக் கொள்வனவு செய்திருந்த போதும், கொள்வனவின் பின்னர் நீண்ட காலமாகச் சொத்துப் பயன்படுத்தப்படாமல் காணப்படுவது.
- சொத்திற்கான கொடுப்பனவினை செய்தவரொருவராகவும் சொத்தில் வசிக்கின்றவர் இன்னொருவராகவும் இருக்கின்றதன்மை.
- கொள்வனவுத் தரப்பினரின் பெயரின் இறுதிக் குறிப்பு பதிலீடு பற்றி வாடிக்கையாளர் திருப்திகரமான முறையில் விளக்காமை.
- வாடிக்கையாளர் கணிசமானளவு ஆரம்பத் தொகையினைப் பணமாக செலுத்திய பின் மீதியை வழமைக்கு மாறான மூலத்தின் மூலம் அல்லது கரைகடந்த வங்கி மூலம் செலுத்துதல்.
- வாடிக்கையாளர் சொத்தினைப் பரிசோதிக்காமல் கொள்வனவு செய்தல். வாடிக்கையாளர் சொத்தொன்றை வாங்க வேண்டுமென்ற தேவையைக் கொண்டிருப்பதனையும் அதன் அமைவிடம் பற்றியோ அல்லது சொத்து எப்படிப்பட்டதென்றோ கவலைப்படாமையினை இது உணர்த்துவதாகவுள்ளது.
- வாடிக்கையாளர் குறுகிய காலத்தில் பல சொத்துக்களைக் கொள்வனவு செய்தல் ஒவ்வொரு சொத்தினதும் அமைவிடம் நிலைமைகள் மற்றும் எதிர்பார்க்கப்படும் திருத்தல் செலவுகள் போன்றன பற்றி அதிகளவிற்கு கவலைப்படாமை.
- சொத்து முகாமைத்துவப் பணிகள் வழங்கப்பட்டுள்ள சொத்தொன்றின் மீது, வாடிக்கையாளர் பெருமளவு திருத்தியமைத்தல் அல்லது வீடுகளை மேம்படுத்தும் பொருட்பட்டியல் தொடர்பில் காசாகப் பெருமளவு தொகை செலுத்தப்பட்டுள்ளமையினை வாடிக்கையாளர் அறிந்திருத்தல்.
- வாடிக்கையாளர்களினால் மேற்கொள்ளப்படவுள்ளதாக அறியப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் வியாபார நடவடிக்கைகளுடன் பொருந்துவதாகக் காணப்படாமை.
- சொத்தின் உண்மையான அல்லது சந்தைப் பெறுமதியிலிருந்தும் கொடுக்கல்வாங்கலின் பெறுமதியினைக் குறிப்பிடத்தக்களவிற்கு வேறுபட்ட விதத்தில் (மிக உயர்வாக அல்லது மிகக் குறைவாக) மேற்கொள்ளப்படல்.
- தொடர்ச்சியான கொடுக்கல்வாங்கல்களாக சொத்து விற்பனை செய்யப்படுதல். ஒவ்வொரு நேரத்திலும் இது அதேதரப்பினருக்கிடையேயும் உயர்ந்த விலையிலும் அமைந்திருத்தல்.
- சொத்தின் பெறுமதியிலும் பார்க்கக் குறிப்பிடத்தக்களவிற்கு உயர்வாக வாங்குநர் கடன் பெற்றிருத்தல்.
- வாடிக்கையாளர் கொடுக்கல்வாங்கல்களைச் சடுதியாக இரத்துச் செய்தல்/ நீக்கிவிட்டு மீளளிப்பினை அவரின்/ அவளின் அல்லது மூன்றாந்தரப்பினரின் பெயரில் வழங்குமாறு கோருதல்.
- குறிப்பாக, அத்தகைய கொள்வனவுகள் பெரியளவில் அல்லது வாடிக்கையாளரின் அறியப்பட்ட தோற்றப்பாட்டுடன் பொருந்தாததாக இருக்குமிடத்து வாடிக்கையாளர் கொள்வனவு முழுவதையும் காசாகச் செலுத்துதல் (இலத்திரனியல் நிதிய மாற்றலை உள்ளடக்கும் விதத்தில்) அத்துடன் குறிப்பாக, கொள்வனவு நிதி கரைகடந்த நியாயாதிக்கத்திலிருந்து மாற்றல் செய்யப்படும் பொழுது.

**இரத்தினக்கல் மற்றும் ஆபரண வணிகர்கள்**

வாடிக்கையாளர் மற்றும் வாடிக்கையாளர் நடத்தை:

- வாடிக்கையாளரின் வழமையான தோற்றப்பாட்டுடன் ஒவ்வாத விதத்தில் நிறைவேற்றப்படுகின்ற கொடுக்கல்வாங்கல்/ கொடுக்கல்வாங்கல்கள்.
- பெறுமதிமிக்க கற்கள்/ உலோகங்கள் அல்லது ஆபரண உற்பத்திகளை அடிக்கடி வாங்குகின்ற/ விற்கின்ற வாடிக்கையாளரொருவர் அவரது வழமையான நிதியியல் அந்தஸ்து/ தோற்றப்பாட்டிற்கு ஒவ்வாத விதத்தில் மேற்கொள்கின்ற கொடுக்கல்வாங்கல்/ கொடுக்கல்வாங்கல்கள்.
- வாடிக்கையாளர் பெறுமதிமிக்க கற்கள்/ உலோகங்கள் அல்லது ஆபரணங்களின் உற்பத்திகளின் பெறுமதிக்கான கொடுப்பனவுகளை வழமைக்கு மாறான கொடுப்பனவு முறைகளில் மேற்கொள்ளும் தன்மை.
- எந்தவிதமான பொருளாதார நியாயப்படுத்தலுமின்றி வெளிநாட்டு நாணயங்களைப் பயன்படுத்தி வாடிக்கையாளர் பெரியளவில் அல்லது அடிக்கடி கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளுதல்.
- வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனத்திற்கான ஒழுங்குமுறைப்படுத்தலுக்கான ஆரம்ப மட்டத்திற்கும் குறைவான அளவில் குறிப்பாக, குறுங்காலப் பகுதியில் அடிக்கடி கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளுதல் எனினும் அத்தகைய கொடுக்கல்வாங்கல்களின் மொத்தத் தொகை கணிசமாக இருத்தல்.
- எந்தவிதமான சட்ட ரீதியான வியாபார நோக்கமுமில்லாமல் நிதியின் சொந்தக்காரர்களாக இல்லாத மூன்றாந்தரப்பினரிடமிருந்து பெறுமதிமிக்கக் கற்கள்/ உலோகங்கள் அல்லது ஆபரண உற்பத்தியைக் கொள்வனவு செய்தமைக்காகப் பெறப்பட்ட கொடுப்பனவுகள்.
- உரிய விழிப்புக் கவனம் மற்றும் பதிவேடுகளைப் பேணும் ஆவணங்களுக்காக போலியான, மோசடியான அல்லது பிழையான அடையாள ஆவணங்களைப் பயன்படுத்துவதாகச் சந்தேகப்படுகின்ற வாடிக்கையாளர்.
- வாடிக்கையாளர் வழமைக்கு மாறான கரிசனைகளைக் கொண்டிருத்தல்; அத்துடன்/ அல்லது பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தேவைப்பாடுகள் மற்றும் உள்ளக இணங்குவிப்புக் கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகள் பற்றி விசாரித்தல்.
- கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் அதிகளவு இரகசியத்தன்மையினைப் பேணுவதற்கு வாடிக்கையாளர் முயற்சிப்பது; உதாரணமாக வழமையான வியாபார பதிவேடுகளைப் பேண வேண்டாமெனக் கேட்டுக் கொள்ளுதல்.
- பெறுமதிமிக்க கற்கள்/ உலோகங்கள் அல்லது ஆபரண உற்பத்திகளை வாங்குவதற்கான பண மூலங்கள் தொடர்பில் வாடிக்கையாளர் கேள்விக்கு விடையளிப்பதனை தவிர்த்துக் கொள்ளுதல்.

- குற்றவியல்/ பயங்கரவாதப் பின்னணி பற்றி வாடிக்கையாளர் அறிந்திருத்தல்
- பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் நடவடிக்கையுடன் இணைந்துள்ள நாடு அல்லது நிறுவனமொன்றுடன் தொடர்புபட்ட விதத்தில் வாடிக்கையாளர் காணப்படுதல்.

மேலே குறிப்பிடப்பட்ட குறிகாட்டிகளுக்குப் புறம்பாக, இரத்தினக்கல் மற்றும் ஆபரண வணிகர்களின் விழிப்புணர்வினை உயர்த்துவதற்காக நிரம்பலர்கள் மற்றும் நிரம்பலர்கள் நடத்தைகள் மீதான பின்வரும் சந்கேத்திற்குரிய குறிகாட்டிகள் எடுத்துக்காட்டப்படுகின்றன.

வழங்குநர் மற்றும் வழங்குநரின் நடத்தை:

- பெறுமதிமிக்க இரத்தினக்கல்/ உலோகத்தின் பெறுமதியிலும் பார்க்கக் குறைந்த/ கூடிய பொருட்பட்டியலைக் கொண்ட வழங்குநர்.
- பெறுமதிமிக்க இரத்தினக்கல்/ உலோகங்களுடன் தொடர்பான கொடுக்கல்வாங்கல்களுக்கு வழங்குநர்கள் மூன்றாந்தரப்பினரைப் பயன்படுத்துதல். உ-ம்: எந்தவொரு சட்ட ரீதியான வியாபார நோக்கமுமின்றி, வழங்குநருடன் தொடர்புபடாத மூன்றாந்தரப்பினருக்கு நிதியினைக் கொடுப்பனவு செய்தல்.
- எந்தவொரு சட்ட ரீதியான வியாபார நோக்கமுமின்றி, வழங்குநருடன் தொடர்புபடாத மூன்றாந்தரப்பினரிடமிருந்து பெறுமதிமிக்க கற்கள்/ உலோகங்கள்/ ஆபரண உற்பத்திகள் விநியோகிக்கப்படுதல்.
- பெறுமதிமிக்க கற்கள்/ உலோகங்கள்/ ஆபரண உற்பத்திகள் என்பனவற்றின் மூலம் போலியானதாகத் தோன்றுகின்ற தன்மை.
- வழங்குநர்கள், பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் தேவைப்பாடுகள் பற்றி வழமைகளுக்கும் மாறாக கரிசனைப்படுத்தல்.
- வழங்குநர்கள், கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் உயர்ந்தளவு இரகசியத்தன்மையினைப் பேணுவதற்கு முயற்சித்தல் மற்றும் வழமையான வியாபாரப் பதிவேடுகளைப் பேண வேண்டாமெனக் கோருதல்.
- வழங்குநர்கள், பயன்பெறும் சொந்தக்காரரை அல்லது கட்டுப்படுத்தல் அக்கறைகளை வெளிப்படுத்துவதற்கு விரும்பாமல் இருத்தல்.
- வழங்குநர்கள் இரத்தினக்கற்கள்/ ஆபரணங்களுக்கான கொடுப்பனவினை வழமைக்கு மாறான கொடுப்பனவு முறையொன்றினூடாகக் கோருதல். உ-ம்: மூன்றாந்தரப்பினரின் வங்கிக் கணக்கிற்கு வங்கி வைப்புக்களைச் செய்யுமாறு கோருதல். மூன்றாந்தரப்பினருக்கு காசு போன்றவற்றைக் கையளிக்குமாறு கோருதல்.
- இரத்தினக்கற்களுக்காக:
  - (அ) பட்டைத் தீட்டப்படாத வைரங்கள் செல்லுபடியாகக்கூடிய கிம்பேர்ளி செயன்முறை சான்றிதழுக்கோ அல்லது சான்றுபடுத்தலுக்கான பரந்தளவிற்கு அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களுக்குச் சமமான திட்டங்களுடனோ இணைந்திருக்கவில்லை.
  - (ஆ) உ-ம்: கிம்பேர்ளி செயன்முறையினைக் கொண்ட இரத்தினக்கற்களின் கப்பற்படுத்தலுக்கு கிம்பேர்ளி செயன்முறைச் சான்றதழ் இணைக்கப்படாமை.
  - (இ) கிம்பேர்ளி சான்றிதழ் போலியானதாக இருத்தல்/ தோன்றுதல்.
- வழங்குநர், பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் நடவடிக்கைகளுடன் அல்லது பயங்கரவாதி எனக் குறித்துரைக்கப்பட்ட ஆளுடன் தொடர்புபட்ட நாடு அல்லது நிறுவனத்துடன் தொடர்பான ஆளாகக் காணப்படுதல்.
- பொருளாதார காரணங்களெதும் காணப்படாமல் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் நடவடிக்கைகளுடன் இணைந்த நாட்டினூடாக வழங்குநர்கள் பெறுமதிமிக்க கற்களை/ உலோகங்களைக் கொண்டு செல்லல்.

**பின்னிணைப்பு II**

**அட்டவணை V**

**இரகசியமானது**

**மாகாணம் :**

**மாவட்டம் :**

| சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கை | | |
|---|---|---|
| அ. | 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் கீழ் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடுவதற்கான தேவைப்பாட்டினை இவ்வறிக்கை பூரணப்படுத்துகிறது. | |
| ஆ. | சட்டத்தின் 12ஆம் பிரிவின் கீழ், நல்லெண்ணத்துடன் அத்தகைய அறிக்கையினைச் செய்யும் ஆளொருவருக்கெதிராக குடியியல், குற்றவியல் அல்லது ஒழுக்காற்று வழக்கு விசாரணைகள் எதுவும் கொண்டு வரப்படுதலாகாது. | |
| பகுதி அ - அறிக்கையின் விபரங்கள் | | |
| 1. | அறிக்கையினை அனுப்பும் திகதி | |
| 2. | இது முன்னைய அறிக்கைக்குப் பதிலீடானதா? | ஆம் ☐ இல்லை ☐ |
| பகுதி ஆ - சந்தேகம் தொடர்பான தகவல் | | |
| 3. | முழுப்பெயர்<br>(நிறுவனமாக இருப்பின் வியாபாரப் பதிவு/ நிறுவனத்தின் பெயரைத் தருக) | |

| | | |
|---|---|---|
| 4. | வதிவிட/ பதிவு செய்யப்பட்ட முகவரி | |
| 5. | தேசிய அடையாள அட்டை இல./ கடவுச்சீட்டு இல./ ஓட்டுநர் உரிம இல./ வியாபாரப் பதிவு இல. | |
| 6. | பால் | ஆண் ☐ பெண் ☐ |
| 7. | வதியும் நாடு மற்றும் தேசீயம் (தனிப்பட்ட ஒருவராயின்) | |
| 8. | வியாபாரம்/ தொழில் வகை | |
| 9. | தொழில் (பொருத்தமானவிடத்து கொடுக்கல்வாங்கல்களை நடத்துகின்ற ஆளின் பிரதான நடவடிக்கை) | |
| 10. | தொழில்தருநரின் பெயர் (பொருத்தமானவிடத்து) | |
| 11. | தொடர்பு கொள்வதற்கான விபரங்கள் | |
| **பகுதி இ - சந்தேகம் தொடர்பான விபரங்கள்** | | |
| 12. | கொடுக்கல்வாங்கல்/ நடவடிக்கையின் விபரங்கள் | |
| 13. | சந்தேகத்திற்குரிய அடிப்படைகள்/ காரணங்கள் | |
| **பகுதி ஈ - அறிக்கையிடும் ஆளின் விபரங்கள்** | | |
| 14. | அறிக்கையிடும் திகதி | |
| 15. | கையொப்பம் | |
| 16. | அறிக்கையிடும் ஆளின்/ முகவரின் பெயர் | |
| 17. | தேசிய அடையாள அட்டை இலக்கம் | |
| 18. | பதவி/ தொழில் | |
| 19. | முகவரி | |
| 20. | தொடர்பு கொள்வதற்கான விபரங்கள் | |

**வழிகாட்டல் இல. 02/2019**

**தொடர்:** 037/08/001/0036/019 2019 செத்தெம்பர் 02

சேரல்: முதன்மை நிறைவேற்று அலுவலர்களின்/ பொது முகாமையாளர்/ உரிமையாளர்

கனம் ஐயா/ அம்மணி

**2019ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க பயன்பெறும் சொத்துரிமையினை அடையாளம் காணுதல் தொடர்பில் குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்களுக்கான வழிகாட்டல்கள்**

மேற்குறிப்பிட்ட வழிகாட்டல்கள் உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டுமென்பதுடன், 2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டம் மற்றும் 2018ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதியியல் நிறுவனங்கள் (வாடிக்கையாளர் தொடர்பிலான உரிய விழிப்புக் கவனம்) விதிகள் என்பனவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படுதலாதலும் வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள

ஈ.எச். மொகோட்டி
பதில் பணிப்பாளர்/**நிதியியல் உளவறிதல் பிரிவு**

பிரதி: இணங்குவிப்பு அலுவலர்கள்

## 2019ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க பயன்பெறும் சொத்துக்களை அடையாளம் காண்பது மீதான குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்களுக்கான வழிகாட்டல்

### பகுதி I

### அறிமுகம்

1. இவ்வழிகாட்டல்களானது 2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 15 (1) ஜே பிரிவிற்கிணங்க விடுக்கப்படுகிறது. நிதியியல் கொடுக்கல்வாங்கல் சட்டத்தின் கீழ் ஒப்படைக்கப்பட்ட அதிகார வரம்பிற்குள் தொழிற்படுகின்ற நிதியியல் உளவறிதல் பிரிவு 2018 சனவரி 10ஆம் திகதியிடப்பட்ட இல.2053/20 கொண்ட அதிவிசேட வர்த்தமானியின் மூலம் 2018ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் (வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவன, விதியினை விடுத்தது. விடுக்கப்பட்ட திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் இவ்விதி நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 33ஆம் பிரிவின் கீழ் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு “நிதியல்லா வியாபாரங்களில்” ஈடுபட்டுவரும் நிறுவனங்களுக்கு ஏற்புடைத்தானதாகும். குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்களுக்கான வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவன விதிகளின் விதிகள் 10-13 மற்றும் 1-19 மற்றும் விடயங்களுடன், குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரத்திற்கான வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவன விதிகளின் 43ஆவது விதியில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு சட்டரீதியான ஆள் அல்லது சட்டரீதியான ஏற்பாடுகளைக் கொண்ட வாடிக்கையாளர் ஒருவரின் இறுதி “பயன்பெறும் சொந்தக்காரன்” ஆகவுள்ள இயற்கையான ஆளை (ஆட்களை) அடையாளம் கண்டு அதனைச் சரிப்படுத்துவதற்குத் தேவையான பொருத்தமான வழிமுறைகளை எடுக்குமாறு இவ்விதிகளின் கீழ் நிதியியல் நிறுவனங்களின் ஏற்பாடுகள் தேவைப்படுகின்றன.

2. நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் கீழ் பின்வரும் வியாபாரங்களும் தொழில்சார் நிபுணத்துவங்களும் குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்களாகக் கருதப்படுகின்றன.

   அ) அத்தகைய வியாபாரத்தினை இணையத்தளமூடாக மேற்கொள்ளுகின்ற ஆளொருவர் உட்பட காசினோ/ சூதாட்ட இல்லங்கள்/ லொத்தரை நடத்துதல்.

   ஆ) உண்மைச் சொத்துக்களை வாங்குவது மற்றும் விற்பனை செய்வது தொடர்பாக அவர்களது வாடிக்கையாளரல்லா கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்ற வேளையில் உண்மைச்சொத்து முகவர்கள்

   இ) பெறுமதிமிக்க உலோகங்களிலுள்ள/ வணிகர்கள், விலையுயர்ந்த மற்றும் ஓரளவு விலையுயர்ந்த கற்களின் வணிகர்கள்

   ஈ) சட்ட அறிஞர்கள், நொத்தாரிசுகள் மற்றும் சுயாதீனமான சட்டரீதியாக தொழில்புரியும் தொழில்சார் நிபுணர்கள்/ கணக்காளர்கள்

   உ) நம்பிக்கைப் பொறுப்பு அல்லது கம்பனி பணி வழங்குவோர்

3. இவ்வழிகாட்டல்கள் பயன்பெறுசொந்தக்காரரை அடையாளம் காணவும் சரிபார்ப்பதற்கும் குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்களுக்கு வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவன விதிகளைப் பிரயோகிப்பதற்கும் குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்களுக்கு உதவி வழங்குகின்றன. இவ்வழிகாட்டல்கள் பூரணமானதாக இருக்கும் என கருதப்படக்கூடாது என்பதுடன் எந்தவொரு குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரத்தின் மீது சட்டரீதியாக பிணிக்கின்ற நடைமுறைகளையும் விதிக்காது என்பதுடன் நிதியியல் உளவறிதல் பிரிவிலிருந்தான சட்டரீதியான மதியுரைகளையும் உள்ளக்கியிருக்காது. வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக்கவன விதிகள் அல்லது நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்யிடல் சட்டத்தின் கீழ் நிதியியல் நிறுவுனங்களின் ஏதேனும் கடப்பாடுகளிலிருந்து அவற்றினை விடுவிக்கும் விதத்தில் இவ்வழிகாட்டல் எதனையும் கொண்டிருக்காது என்பதனையும் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

### பகுதி II

#### அ) பயன்பெறும் சொந்தக்காரர் என்பவர் யார்?

4. பயன்பெறும் சொந்தக்காரர் என்பது ஒரு இயற்கையான ஆளாக இருப்பதுடன் ஒரு வாடிக்கையாளரை இறுதியாக தமதாக வைத்திருக்கின்ற அல்லது கட்டுப்படுத்துகின்ற ஒரு இயற்கையான ஆள் அல்லது எந்த ஆளின் சார்பில் கொடுக்கல்வாங்கலொன்று நடைபெறுகின்றதோ அந்த ஆள் எனப் பொருள்படும்.

5. குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரமானது கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்கிறது அல்லது தனிப்பட்ட வாடிக்கையாளர்களுடனும் அதேபோன்று கம்பனி வாடிக்கையாளர்களுடனும் வியாபார தொடர்புகளை நிறுவிக் கொள்கிறது. கம்பனி வாடிக்கையாளர்களுடனான கொடுக்கல்வாங்கலென்பது இயற்கையான ஆளுடன் “சட்டரீதியான ஆளுடன்” அல்லது “சட்டரீதியான ஏற்பாடுகளுடன்” மேற்கொள்ளப்படுவது எனக் குறிப்பிடமுடியும். சட்டரீதியான ஆள் என்பது “இயற்கையான ஆள்தவிர்ந்த”, நிரந்தரமான வாடிக்கையாளர் தொடர்புகளை நிதியல்லா வியாபாரம் அல்லது கம்பனி உட்பட சொந்தமான சொத்து தவிர்ந்த வேறு ஏதேனுமொன்றுடன் கம்பனிச் சபையுடன் அல்லது நிறுவனங்களுடன் பங்குடமை அல்லது அமைப்புடன் உறவுகளைக் கொண்டிருக்கும் நிறுவனம் என பொருள்படுகின்றவிடத்து சட்ட ஏற்பாடுகள் என்பது விரைவு நம்பிக்கையொன்று[1] நம்பகத்தன்மை வாய்ந்த கணக்கு அல்லது நியமனத்தரொருவர் எனப் பொருள்படும். (குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரத்திற்கான வாடிக்கையாளர் விழிப்புக்கவன விதிகளில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு)

6. இறுதிப் பயன்பெறும் சொந்தக்காரர் (சொந்தக்காரர்கள்) ஆகவுள்ள இயற்கை ஆளினை (ஆட்களை)த் தீர்மானிப்பது நிதியிடல் நிறுவனத்தின் கடப்பாடாகும். இறுதிப் பயன்பெறும் சொந்தக்காரர் இயற்கையான ஆளாக இருக்க வேண்டும் என்பதுடன் கம்பனியொன்றாகவோ அமைப்பொன்றாகவோ அல்லது சட்ட ரீதியான ஒழுங்குமுறைப்படுத்தலாகவோ இருக்கமுடியாது. வாடிக்கையாளர்களுடன் இணைந்த பயன்பெறும் சொந்தக்காரர்கள் ஒன்றிற்கு மேற்பட்டவர்களாகவும் இருக்கலாம்.

7. வாடிக்கையாளர் இயற்கையான ஆளாக இருக்குமிடத்து அவ்வாள் இன்னொருவரின் சார்பாக செயற்படுகின்றார் என்பதனைக் காட்டுவதற்கு நியாயமான ஆதாரங்கள் இருந்தாலொழிய அல்லது வாடிக்கையாளரின் சொத்துக்களினது பயன்பெறும் சொந்தக்காரராக இன்னொரு ஆள் இருக்குமிடத்து அவ்வாளைப் பயன்பெறும் சொந்தக்காரராகக் கருதிக் கொள்ளமுடியும்.வாடிக்கையாளர் மற்றொரு ஆளின் சார்பில் செயற்படுபவராக இருப்பின் தனிப்பட்ட அவர் நன்மை பெறும் சொந்தக்காரராக இருக்கமுடியாது.

---

1. 2018ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நம்பிக்கைப் பொறுப்புக்கள் (திருத்தம்) சட்டத்தின் 2ஆம் பிரிவினால் (“நம்பிக்கைப் பொறுப்புக்கள் திருத்தச் சட்டம்”) திருத்தப்பட்டவாறான 1917ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க நம்பிக்கைப் பொறுப்பு கட்டளைச் சட்டத்தின் 03ஆம் பிரிவின் நியதிகளில் “வெளிப்படையான நம்பிக்கைப் பொறுப்பு” என்பது நம்பிக்கைப் பொறுப்பின் உட்கருத்தினைச் சுட்டிக்காட்டுகின்ற நிச்சயத்துடன் எழுத்தில் பொதுவாக ஒரு சாசனம் என்ற வடிவத்தில் நம்பிக்கைப் பொறுப்பு ஆட்களினால் உருவாக்கப்படும் ஒரு நம்பிக்கைப் பொறுப்பு எனப் பொருள்படும். ஆனால் தருமநோக்கமானதாயினும் சரி ஓர் அமைப்பு வழி நம்பிக்கைப் பொறுப்பை அல்லது நிகழ்வுப்படியான நம்பிக்கைப் பொறுப்பை உள்ளடக்காது.

**(ஆ) பயன்பெறும் சொந்தக்காரரை அடையாளம் காண்பது ஏன் முக்கியமானது?**

8. கம்பனிகள், நம்பிக்கைப் பொறுப்புக்கள், மாற்றங்கள், பங்குடமைகள் சட்ட ரீதியான ஆட்களின் மற்றைய வகையினர் போன்ற கம்பனி முயற்சிகளும் ஒழுங்குகளும் பரந்தளவிலான பல்வேறு வர்த்தக ரீதியான மற்றும் தொழில்முயற்சியாண்மை நடவடிக்கைகளாகும். எனினும், பொருளாதாரத்தில் கம்பனி தொழில்முயற்சிகள் இன்றியமையாத மற்றும் சட்ட ரீதியான வகிபாகத்தினை ஆற்றிய போதும், குறிப்பிட்ட சில நிபந்தனைகளின் கீழ் பணம் தூயதாக்கல்[2], இலஞ்சம் மற்றும் ஊழல் இரகசியமான உள்ளக வணிகம், வரி மோசடி, பயங்கரவாதத்திற்கு நிதியிடல்[3] மற்றும் ஏனைய சட்டத்திற்கு மாறான நடவடிக்கைகள் போன்றவற்றை உள்ளடக்கிய சட்டத்திற்கு முரணான நோக்கங்களுக்காகவும் பயன்படுத்தப்படுகின்றன. குற்றவாளிகள் பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் வழிமுறைகளைத் தந்திரமாகப் பயன்படுத்திக் கொள்வதற்கும் கம்பனி முயற்சி சொத்துரிமையினை வேறு பெயர்களில் உருவாக்கிக் கொள்ளவும் சட்டத்திற்கு மாறான மூலத்தினை மறைத்துக் கொள்ளும் விதத்திலும் கவர்ச்சிகர வழிமுறைகளை வழங்கலாம் என்பதற்காகவே இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

9. நிதியியல் நடவடிக்கைச் செயலணிக் குழு, உலக வங்கி, போதைப்பொருள் மற்றும் குற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகள் அலுவலகம் என்பனவற்றினால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறுபட்ட ஆய்வுகளும் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் உட்பட சட்டத்திற்கு மாறான நோக்கங்களுக்காக கம்பனி முயற்சிகளின் தவறான பயன்பாட்டினை எடுத்துக்காட்டுகின்றன. பொதுவாக, நன்மைபெறும் சொந்தக்காரர் தொடர்பான தகவல்களைப் போதுமானளவிலும் துல்லியமாகவும் உரிய நேரத்திலும் போதுமானளவில் கிடைக்காமை பின்வருவனவற்றை மறைத்துக் கொள்வதற்கு பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலுக்கு வசதியளிக்கின்றது.

அ) அறிந்த அல்லது சந்தேகத்திற்குரிய குற்றவாளியின் அடையாளம்

ஆ) கணக்கொன்றில் அல்லது கம்பனி முயற்சிகளின் வசமுள்ள சொத்தின் உண்மையான நோக்கம் அத்துடன்/ அல்லது

இ) கம்பனி தொழில்முயற்சிகளுடன் இணைந்து காணப்படும் நிதியங்கள் அல்லது சொத்துக்களின் மூலம் அல்லது பயன்பாடு.

பகுதி **III**

**பயன்பெறு சொந்தக்காரரை நிறுவுதல்**

**அ) யாரின் சார்பில் கொடுக்கல்வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றதோ அந்த ஆள்**

10. பயன்பெறும் சொத்துரிமையின் வரைவிலக்கணத்தின் இன்னொரு அம்சம் யாதெனில் யாருடைய சார்பில் கொடுக்கல்வாங்கல் மேற்கொள்ளப்படுகின்றதோ அந்த ஆள் பற்றியதாகும். இது வாடிக்கையாளரின் அடிப்படைக் கோரலாளரான தனிப்பட்ட ஒருவராகவும் இருக்கமுடியும். உதாரணமாக, நிதியியல் நிறுவனமொன்றிற்கு ஆள் 'A' மற்றும் ஆள் 'B' இன் சார்பில் இருந்திட்டொன்றான கொடுக்கல்வாங்கலை மேற்கொள்வது தெரியவரின் ஆள் 'A' மற்றும் ஆள் 'B' அடையாளம் காணப்பட்டு கொடுக்கல்வாங்கலுக்கான தரப்பினராக இருக்கக்கூடிய மற்றைய பயன்பெறும் சொந்தக்காரர்களுடன் சேர்த்து சரிபார்க்கப்படல் வேண்டும்.

11. வாடிக்கையாளரின் சார்பில் செயல்புரிதல் என்பது வாடிக்கையாளரின் சார்பில் கொடுக்கல்வாங்கல்களை அல்லது ஏனைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஆளொருவர் அதிகாரமளிக்கப்படும் பொழுது இடம்பெறுகிறது. எனினும், "செயற்படுவதற்கான அதிகாரம்" என்பதனை காத்திரமான கட்டுப்பாட்டுடன் சேர்த்து குழப்பிக் கொள்ளக்கூடாது.வாடிக்கையாளரின் சார்பில் ஆட்கள் செயலாற்றுமிடத்து அவர்கள் வாடிக்கையாளரின் பயன்பெறுநர்களாக இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை என்பதற்கு உதாரணங்கள் காணப்படுகின்றன.

12. வாடிக்கையாளரின் சார்பில் செயலாற்றுகின்ற இயற்கை ஆட்களை நிதியியல் நிறுவனங்கள் அடையாளம் கண்டு அத்தகைய ஆட்களின் அடையாளத்தினை[4] சரிபார்த்துக் கொள்ளுதல் வேண்டும். வாடிக்கையாளரின் சார்பில் செயலாற்றுவதற்கான அத்தகைய ஆட்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரம் அவ்வாறு அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களின் மாதிரிக் கையொப்பங்கள் உட்பட ஆவணச்சான்றுகளினூடாகச் சரிபார்க்கப்படுதல் வேண்டும்.

**ஆ) சட்ட ஆட்களின் பயன்பெறும் சொந்தக்காரங்களை அடையாளம் காணுகின்ற மூலங்கள்**

13. சட்ட ஆட்களின் பயன்பெறும் சொந்தக்காரங்களை அடையாளம் காண்பதற்கு குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் பின்வரும் மூன்று முக்கிய மூலங்களைப் பரிசீலனையில் கொள்ளவேண்டும்.

அ) சட்ட ஆளின் பங்குரிமையில் பத்துசதவீதத்திற்கும் (10%) கூடுதலானதை சொந்தமாக அல்லது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் இயற்கையான ஆள் (சொத்துரிமையினைக் கட்டுப்படுத்தல்)

ஆ) எந்த இயற்கை ஆள் (ஆட்கள்) சட்டரீதியான ஆளின் காத்திரமான கட்டுப்பாட்டினை கொண்டிருக்கின்றார்?

இ) இயற்கை ஆளின் சார்பில் (ஆட்களின் சார்பில்) கொடுக்கல்வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றது? (எவர் சார்பில் கொடுக்கல்வாங்கல் மேற்கொள்ளப்படுகின்றதோ அந்த ஆள்)

**i) மூலம் 1 - சொத்துரிமையினைக் கட்டுப்படுத்தல்**

14. குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் சட்டரீதியான ஆட்களாகவுள்ள[5] அவற்றின் வாடிக்கையாளர்களது சொத்துரிமையினையும் கட்டுப்பாடுகளையும் புரிந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றன. கட்டுப்படுத்துகின்ற சொத்துரிமை அக்கறைகள் என்பது "சட்ட ஆளொருவரில் மூலதனத்தில் பத்து சதவீதத்திற்கும் கூடுதலானதாக வழங்குவதன் மூலம் பொறுபேறக்கப்படும் அக்கறை" என வரைவிலக்கணம் செய்யப்படுகின்றது. இதற்கமைய இம்மூலத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் சட்ட ஆளின் பயன்பெறும் சொந்தக்காரராக பங்குகளின் 10 ஆட்களின் சதவீதத்திற்கும் கூடுதலானவற்றைக் கொண்டுள்ள சட்ட ஆட்களின் பங்குடமையாளர்களை அடையாளம் காணுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டன. அக்கறைகளைக் கட்டுப்படுத்துவதற்கான விரித்துரைக்கப்பட்ட கீழ்மட்டம் சட்டரீதியிலான ஆளொருவராகவுள்ள[6] வாடிக்கையாளர்கள் பத்து சதவீதத்திற்கும் (10%) கூடுதலான பங்கை சொந்தமாக கொண்டிருக்க வேண்டும் எனப் பொருள் கோடப்படுகிறது. சொத்துரிமையினை கீழே விளக்கப்பட்டவாறு மொத்த சொத்துரிமையூடாக நேரடியாகவும் அதேவேளை மறைமுகமாகவும் விளக்கமுடியும்.

*வரைபடம் 1 : நேரடிப் பங்குடமை*

2 "பணம் தூயதாக்கல்" என்பது 2006ஆம் 5ஆம் இலக்க பணம் தூயதாக்கல் தடுப்புச் சட்டத்தின் 3ஆம் பிரிவின் நியதிகளில் பணம் தூயதாக்கல் குற்றம் எனக் கருதப்படும்.


3 "பயங்கரவாதத்திற்கு நிதியிடல்" என்பது 2005ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் மீதான சமயவாயச் சட்டத்தின் பிரிவு 3இன் கீழ் குற்றமொன்றை உருவாக்குவதற்கான நடவடிக்கை எனப் பொருள்படும்.

4 குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்களுக்கான வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவன விதிகளின் 11ஆம் இலக்க விதியினை தயவுசெய்து பார்க்கவும்.

5 குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்களுக்கான வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவன விதிகளின் 17ஆம் இலக்க விதியினை தயவுசெய்து பார்க்கவும்.


6 குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்களுக்கான வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவன விதிகளில் 18(அ) விதியினைப் பார்க்கவும்.

கம்பனி A சட்ட ஆளாகவுள்ள குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரத்தின் வாடிக்கையாளராவர். திரு A, திரு B, திரு C, திரு D, மற்றும் திரு E ஆகியோர் கம்பனி A இன் நேரடிப் பங்காளர்களாக இருக்குமிடத்து திரு B, திரு C மற்றும் திரு D ஆகியோர் சொத்துரிமையின் 10% இற்கும் கூடுதலானவற்றைக் கொண்டுள்ள நன்மை பெறுநர்களாகவுள்ளனர்.




15. **இதற்குப்புறம்பாக, மறைமுகமான சொத்துரிமை அமைப்பொன்றும் கீழேயுள்ளவாறு காணப்படுகிறது.**

*வரைபடம் 2: மறைமுக பங்குரிமைகள்*





கம்பனி A சட்ட ஆளாகவுள்ள குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரத்தின் வாடிக்கையாளராவர் ஏ ஹோல்டிங் லிமிடெட் கம்பனி A இன் 100% பங்குகளை வைத்திருக்கிறது. திரு.B, திரு. C, திரு. D, திரு.E, திரு. F மற்றும் திரு.G ஆகியோர் ஏ ஹோல்டிங் லிமிடெட்டின் பங்குடமையாளர்களாவர்.

16. சில வியாபாரங்கள் சிக்கலான சொத்துரிமை அமைப்பினைக் கொண்டுள்ளன. இது இறுதி நன்மை பெறுநரைப் புரிந்து கொள்வதனை கடினமாக்குகிறது.

*வரைபடம் 3 - நேரடி மற்றும் மறைமுக பங்குடமை*


கம்பனி B சட்ட ஆளாகவுள்ள குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரத்தின் வாடிக்கையான ஒருவராவர். கம்பனி C கம்பனி B இன் பங்குகளில் 95% இனை வைத்திருப்பதுடன் திரு.A எஞ்சிய 5% இனையும் வைத்திருக்கிறார். மறுபுறத்தில் திரு. A கம்பனி C இன் 100% பங்குகளையும் வைத்திருக்கிறார்.




*வரைபடம் 4: பல்மட்டங்களிலான மறைமுக பங்குடமைகள்*

கம்பனி ABC சட்ட ஆளாகவுள்ள குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரத்தின் வாடிக்கையாளர் ஒருவராவர். கம்பனி ABC இன் 50 சதவீதமான பங்கினை "கம்பனி PQR" உம் "கம்பனி XXZ" உம் கொண்டுள்ளன. "கம்பனி PQR" இன் பங்குகள் முறையே திரு. D இனாலும் (10%) கம்பனி LMN இனாலும் (60%) கம்பனி STR இனாலும் (5%) கம்பனி IOD இனாலும் வைத்திருக்கப்படுகின்றன. எனினும் திரு. Z, கம்பனி LMN இன் பங்குகளில் 100 சதவீதத்தினையும், திரு.Y கம்பனி STR இன் பங்குகளில் 100 சதவீதத்தினையும்

திரு. X கம்பனி IOD இன் 100 சதவீதப் பங்குகளையும் செய்திருக்கின்றன. மேலும், கம்பனி XYZ இன் 100 சதவீதப் பங்குகளை திரு. F கொண்டிருக்கின்றார்.




17. சட்ட ஆட்களாகவுள்ள சில வாடிக்கையாளர்களுக்காக, சொத்துரிமை பெரும் எண்ணிக்கையான தனிப்பட்டவர்களிடையே பரந்து காணப்படுவதுடன் இதன் காரணமாக அனைத்து தனிப்பட்டவர்களும் பத்து (10மூ) சதவீதத்திற்கும் குறைந்த சதவீதத்தினையே பெற்றனர். அத்தகைய சந்தர்ப்பத்தில் பத்து (10%) சதவீத்திற்கும் கூடுதலான பங்கினை தனிப்பட்ட எவரும் பெறமாட்டார். கீழே காட்டப்பட்டுள்ள காத்திரமான கட்டுப்பாட்டு மூலமானது பயன்பெறு சொந்தக்காரரை/ கட்டுப்பாட்டாளர்களைத் தீர்மானிக்க மிகப் பொருத்தமானதாக இருக்கும்.

ii) **மூலம் II: காத்திரமான கட்டுப்பாடு**

18. சட்ட ஆளின் காத்திரமான கட்டுப்பாடு பயன்பெறு சொத்துரிமையினை நிர்ணயிக்கின்ற மற்றொரு முக்கியமான கூறாகும். அத்தகைய கட்டுப்பாடு நேரடியானதாக அல்லது மறைமுகமானதாக முறைசார்ந்ததாக அல்லது முறைசாராததாக இருக்க முடியும். அத்தகைய இயற்கையான ஆட்களை அடையாளம் காண்பதற்கான உதவியொன்றாக நேரடியானதும் முறைசார்ந்ததுமான மட்டத்தில் வாடிக்கையாளர் ஆளுகைக் கட்டமைப்பினை விளங்கிக் கொள்வதற்கு இது இன்றியமையாததாகும். வாடிக்கையாளர் தொடர்பில் காத்திரமான கட்டுப்பாடுகளை மேற்கொள்கின்றது. வாடிக்கையாளரொருவர் தொடர்பில் காத்திரமான கட்டுப்பாட்டாளரைத் (கட்டுப்பாட்டாளர்கள்) தீர்மானிப்பது தொடர்பில் குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் பின்வருவனவற்றைப் பரிசீலனையில் கொள்ளுதல் வேண்டும்.

(அ) இயற்கையான ஆளொருவர் மூத்த முகாமைத்துவ மட்ட உறுப்பினரொருவரை பணிக்கமர்த்தவோ அல்லது முடிவுறுத்தவோ முடியும்;

(ஆ) இயற்கையான ஆளொருவர் பணிப்பாளர்களை நியமிக்கவோ, நீக்கவோ முடியும்;

(இ) சட்ட ரீதியான ஆள்/ ஒழுங்கேற்பாடுகளின் (உ-ம்: முதன்மை நிறைவேற்று அலுவலர், முதன்மை நிதி அலுவலர் அல்லது முகாமைத்துவப் பணிப்பாளர்) நாளாந்த/ கிரமமான தொழிற்பாடுகளைக் கட்டுப்படுத்துகின்ற மூத்த முகாமையாளர்கள்.

19. இயற்கையான ஆள்கள் சட்ட ஆட்களைப் பின்வருவன போன்ற ஏனைய முறைகளினூடாகக் கட்டுப்படுத்த முடியும்:


(அ) நிறைவேற்றுப் பணிப்பாளர்கள்/ முதன்மை நிறைவேற்று அலுவலர்கள்/ முகாமைத்துவப் பணிப்பாளர்கள் அல்லது சொத்துரிமையினை உடமையில் வைத்திருப்பவர்கள் போன்ற பதவியிலுள்ள ஆட்களுடனான தனிப்பட்ட தொடர்புகள்;

(ஆ) சட்ட ஆளின் நிதியியல் உறவு முறைகள் தொடர்பிலான குறிப்பிடத்தக்க அதிகாரம் (சட்ட ஆளின் சார்பில் கணக்குகளை வைத்திருக்கும் நிதியியல் நிறுவனங்கள் உட்பட) மற்றும் இடம்பெற்றுவரும் சட்ட ஆளின் நிதியியல் அலுவல்கள்;

(இ) தொழில்முயற்சிகளின் நிதியிடலில் பங்கேற்பதன் மூலம் அல்லது நெருங்கிய குடும்ப உறவுகள் வரலாற்று ரீதியான அல்லது ஒப்பந்த ரீதியான சங்கங்கள் மூலமாக அல்லது குறிப்பிட்ட கொடுப்பனவுகளைக் கம்பனிகள் செலுத்தத் தவறியிருப்பதன் காரணமாக சொத்துரிமை இல்லாமல் கட்டுப்படுத்தல்;

(ஈ) கட்டுப்பாடு ஒருபோதும் மேற்கொள்ளப்படாவிட்டாலும் கூட சட்டங்களுக்குச் சொந்தமான சொத்திலிருந்தான அனுபவங்களை அல்லது நன்மைகளைப் பயன்படுத்தல்.

*வரைபடம் 5: காத்திரமான கட்டுப்பாடு*




திரு. G கம்பனியின் முக்கிய நிதியிடல் மூலமாக விளக்கும் ABC வங்கியின் முகாமைத்துவ பணிப்பாளராவார். (குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரத்தின் வாடிக்கையாளர் ஒரு சட்ட ஆளாவார்) அத்தகைய சூழ்நிலையொன்றிலும் கூட திரு. G கம்பனி A இன் பத்து சதவீதத்திற்கும் குறைவான பங்கினை வைத்திருப்பினும் கூட, அவர் ABC வங்கியினூடாக கம்பனி A தொடர்பில் காத்திரமான கட்டுப்பாட்டினைக் கொண்டிருப்பதுடன் காத்திரமான கட்டுப்பாடுளூடாக பயன்பெறு சொந்தக்காரராகவும் கருதப்படல் வேண்டும்.

20. மேலே 13-17 இன் கீழ் இயற்கையான ஆளொருவர் அடையாளம் காணப்படாதவிடத்து குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரம், மூத்த முகாமைத்துவ பதவியை வகிக்கும் அலுவலர்களாகவுள்ள தொடர்பான ஆட்களின் அடையாளத்தினை சரிபார்ப்பதற்காக நியாயமான வழிமுறைகளை அடையாளம் கண்டு மேற்கொள்ளல் வேண்டும்.

**இ) சட்ட ஏற்பாடுகளின் பயன்பெறும் சொந்தக்காரரை அடையாளம் காணுதல்**

21. அனைத்து நம்பிக்கைப் பொறுப்புக்களும் சட்ட ரீதியான சொத்துரிமை மற்றும் பயன்பெறும் சொத்துரிமை என்பனவற்றிற்கிடையிலான வேறுபடுத்தலுக்கான பொதுவான பண்புக் காரணிகளைக் கொண்டிருக்கின்றன. சட்ட சொத்துரிமை எப்பொழுதும் நம்பிக்கைப் பொறுப்பாளரில் நம்பிக்கை கொண்டிருக்கிறது. பயன்பெறும் சொத்துரிமை நம்பிக்கைப் பொறுப்பின் ஆக்குநர் நம்பிக்கைப் பொறுப்பாளர் அல்லது பயன்பெறுநர்கள் மீது கூட்டாக அல்லது தனித்தனியாக நம்பிக்கையினைக் கொண்டிருக்க முடியும்.

22. விதி 50இன்படி, நிதியியல் நிறுவனங்கள், நம்பிக்கைப் பொறுப்புக்களுக்காக நம்பிக்கைப் பொறுப்பின் ஆக்குநர், நம்பிக்கைப் பொறுப்பாளர்கள், பயன்பெறும் அல்லது பயன்பெறுநர்களின் வகுப்பு மற்றும் நம்பிக்கைப் பொறுப்பின் மீது இறுதியான பயனுறும் கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கின்ற வேறெவரேனும் இயற்கை ஆள் ஆகியோர் உட்பட (தொடர்ச்சியான கட்டுப்பாடு அல்லது சொத்துரிமையினூடாகக் கட்டுப்பாடுகளை மேற்கொள்பவர்கள் உட்பட)[7] நம்பிக்கைப் பொறுப்பு பற்றிய தகவல்களை அடையாளம் காண்பதுடன் சரிபார்ப்பதற்கு நியாயமான வழிமுறைகளையும் மேற்கொள்ளுதல் வேண்டும்.

23. நிதியியல் நிறுவனங்கள் நம்பிக்கைப் பொறுப்பு ஆவணங்களை (உ-ம்: நம்பிக்கைப் பொறுப்பு உறுதிகள், நம்பிக்கைப் பொறுப்பின் சாதனங்கள், நம்பிக்கைப் பொறுப்புப் பிரகடனங்கள் போன்றவை) பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் நம்பிக்கைப் பொறுப்பு ஆவணங்களின் ஏற்பாடுகளை ஆளுகின்ற நியாயாதிக்கத்தின் சட்டங்களின் பின்னணியில் அவற்றை முழுமையாக விளங்கிக் கொள்ளுதலும் வேண்டும். நிதியியல் நிறுவனங்கள் சுயாதீனமான வழிமுறைகளினூடாக (உ-ம்: நம்பிக்கைப் பொறுப்பு, பதிவேடுகள் மற்றும் நொத்தரிசு) நம்பிக்கைப் பொறுப்பு ஆவணங்களைச் சரிபார்ப்பதற்கு நியாயமான வழிமுறைகளை எடுத்தல் வேண்டும்.

**பகுதி IV**

**பயன்பெறும் சொந்தக்காரரின் தகவல்களை எந்த வழியில் மறைத்து/ ஒளித்து வைக்க முடியும்**

24. பயன்பெறும் சொத்துரிமைத் தகவல்களைப் பின்வரும் வழிகளினூடாகவும் ஆனால் அதற்கு மட்டுப்படுத்தப்படாத வேறு வழிகளிலும் ஒளித்து வைத்துக் கொள்ளமுடியும்.

    அ) செல் கம்பனிகளின் பயன்பாடு[8] (இவற்றினை சொத்துரிமை அமைப்பில் பல்வேறு வடிவங்களில் நிறுவமுடியும்) இவற்றினை வெளிநாட்டுச் சொத்துரிமை எங்கு காணப்படுகிறதோ அங்கு காணலாம். இவை நியாயாதிக்கங்கள் முழுவதிலும் பரந்துபட்டுள்ளன,

---

7 குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்களுக்கான வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவன விதிகளின் 19ஆம் இலக்க விதியினை தயவுசெய்து பார்க்கவும்.

8 செல் கம்பனிகள் என்பது பௌதீக ரீதியான பிரசன்னம் எதுவுமில்லாமல் இருப்பது உட்பட, மோசமான தொழிற்பாடுகளோ அல்லது தொடர்பான சொத்துக்களோ இல்லாமல் கூட்டிணைக்கப்பட்டுள்ள கம்பனிகள் என்பதாகும்.

ஆ) சிக்கலான சொத்துரிமையும் கட்டுப்பாட்டு அமைப்புக்களும் சொத்துரிமையின் பல்வேறு அடுக்குகள் சில சமயங்களில் மற்றைய சட்ட ரீதியான ஆட்களின் பெயர்கள் மற்றும் சில சமயங்களில் பல்வேறு நியாயதிக்க பிரதேசங்கள் முழுவதிலும் பரந்துபட்டுள்ள சொத்துரிமையின் சங்கிலித் தொடரான பயன்பாடு என்பனவற்றுடன் தொடர்புபட்டிருக்கின்றன,

இ) உறவுமுறைகளைக் கண்டறிய முடியாதவிடத்து மூன்றாந் தரப்பினரின் பெயர்களின் கீழ் சாதனங்களை கொள்வனவு செய்தல்

(ஈ) சட்ட ரீதியான ஆட்களைப் பணிப்பாளர்களாகப் பயன்படுத்தல்,

உ) வழமையான நியமனத்த பங்குடயையாளர்கள்[9] மற்றும் பணிப்பாளர்களாக இருக்குமிடத்து நியமனத்தரின் அடையாளம் வெளிப்படுத்தப்படாதிருக்கும்,

ஊ) மிக நெருக்கமானவர்கள் மற்றும் குடும்பத்தினர் போன்ற முறைசாராத நியமனத்தர், பங்குடமையாளர்கள் மற்றும் பணிப்பாளர்கள்,

எ) நம்பிக்கைப் பொறுப்பு மற்றும் ஏனைய சட்ட ரீதியான ஒழுங்குபடுத்தல்கள். இது சட்ட ரீதியான சொத்துரிமையினையும் சொத்துக்களின் பயன்பெறும் சொத்துரிமைகளையும் வேறாக்குதல்,

ஏ) கணக்காளர்கள், சட்ட அறிஞர்கள், நொத்தாரிசுகள், நம்பிக்கைப் பொறுப்பு மற்றும் கம்பனிப் பணிகள் வழங்குவோர் போன்ற தொழில்முறை இடையேற்பாட்டாளர்கள் உட்பட சட்ட ரீதியான ஆட்களை உருவாக்குவதில் இடையேற்பாட்டாளர்களைப் பயன்படுத்தல்.

**சட்டரீதியான ஆளொருவரின் பயன்பெறு சொத்துரிமையாளரை அடையாளம் காண்பது தொடர்பான விடய ஆய்வு**

ABC கம்பனி லிமிடெட் 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட வரையறுக்கப்பட்ட தனியார் பொறுப்புக் கம்பனியாகும். ABC கம்பனி லிமிடெட் காணித்துண்டொன்றினை வாங்குவதற்கு உண்மைச் சொத்து முகவரொருவரை நாடியிருக்கிறது. திரு. A, ABC கம்பனியின் 30 சதவீதமான பங்கியினையும் XXZ கம்பனி ABC கம்பனியின் மீதிப் பங்கான 70 சதவீதத்தினையும் வைத்திருக்கின்றன. மேலும் திரு.S, ABC கம்பனியின் முகாமைத்துவ பணிப்பாளராக இருப்பதுடன் பணிப்பாளர் சபை உறுப்பினராக அவரின் மனைவி திருமதி. S மற்றும் அவரின் மூன்று பிள்ளைகளும் இருக்கின்றனர்.

இவ்வுதாரணத்தில், உரிமைச் சொத்து முகவர், குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரத்திற்கான வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவன விதிகளில் 17ஆவது விதியினால் தேவைப்படுத்தப்பட்டவாறு ABC கம்பனி லிமிட்டெட் தொடர்பில் பின்வருவனவற்றை அடையாளம் காணுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

1. வாடிக்கையாளர் வியாபாரத்தின் தன்மை, அதன் சொத்துரிமை மற்றும் கட்டுப்பாட்டு அமைப்பினை புரிந்துகொள்ளுதல்
   - ABC கம்பனி லிமிடெட்டின் சொத்துரிமை - திரு. A உம் (30% பங்குகள்) மற்றும் XXZ கம்பனி லிமிட்டெட் (70% பங்குகள்) என்பன பங்குகளையும் கொண்டிருக்கின்றன.
   - நிறுவனத்தின் சொத்துரிமை அமைப்பு - ABC கம்பனி லிமிடெட்டின் வியாபாரம் குடும்ப உறுப்பினர்களுக்கு சொந்தமாக இருப்பதுடன் தனிப்பட்ட முறையிலும் வர்த்தகப்படுத்தப்படுகிறது.
2. குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரத்திற்கான வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவன விதிகளின் 17(ஆ) விதியினால் தேவைப்படுத்தப்பட்டவாறு வாடிக்கையாளர்களை அடையாளம் காண்பது மற்றும் சரிபார்ப்பது
   - பணிப்பாளர் சபை காத்திரமான கட்டுப்பாடுகளைக் கொண்டிருப்பதனால் (திரு. S குடும்பம்) அதன் அனைத்து உறுப்பினர்களையும் அடையாளம் காணுதல்
3. குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரத்திற்கான வாடிக்கையாளர் உரிம விழிப்புக்கவன பகுதியின் 18 கூறு விதியினால் தேவைப்படுத்தப்பட்டவாறு பயன்பெறும் சொந்தக்காரரினை அடையாளம் காண்பதும் சரிபார்ப்பதும்
   - திரு. A **சொத்துரிமையில் 10 சதவீதத்திற்கும் கூடுதலான பங்கினைக் கொண்டிருப்பதனால் அவரின் அடையாளம் தொடர்பில் அடையாளப்படுத்தல் மற்றும் சரிபார்த்தல்**
   - XXZ கம்பனி லிமிடெட் 70 சதவீதப் பங்கினை சொத்தாக வைத்திருப்பதுடாக கட்டுப்பாடுகளையும் கொண்டிருப்பதன் காரணமாக 10 சதவீதமான அல்லது அதற்கும் கூடுதலான பங்குகளை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சொந்தமாகக் கொண்டுள்ள தனிப்பட்ட அனைவரையும் அடையாளம் காணுதல்
   - எவ்வாறென்றும், இது போன்ற விடயங்களில், உண்மைச் சொத்து முகவர் ABC கம்பனியின் 10 சதவீதத்தினை உள்ளடக்கக்கூடிய XXZ கம்பனி லிமிடெட்டின் போதுமான பங்குகளை தனிப்பட்டவரின் சொந்தமாக கொண்டிருக்கின்றார்களா என்பதனைத் தீர்மானிப்பதற்காக அல்லது உண்மைச் சொத்து முகவர் அத்தகைய தனிப்பட்டவர் இல்லை என்பதனை தீர்மானிப்பதற்காக ஆய்வுகளை நடத்தல் வேண்டும்.
   - குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் இத்தகவல்களைப் பெற்றுக்கொண்ட விதம்
   - இத்தகவல்கள் துல்லியத்தன்மையினை சரிபார்ப்பதற்காக எடுக்கப்பட்ட வழிமுறைகள்

பகுதி V

**பயன்பெறும் சொத்துரிமை தகவலை அடையாளம் காண்பதற்கும் சரிபார்ப்பதற்கும் நீங்கள் என்ன செய்ய வேண்டும்.**

25. சட்ட ஆட்களாகவும் சட்ட ஏற்பாடுகளாகவுள்ள வாடிக்கையாளர்களின் பயன்பெறும் சொந்தக்காரர்களின் (சொந்தக்காரர்களை) அடையாளத்தினை சரிபார்ப்பதற்காக குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் நியாயமான வழிமுறைகளை எடுத்தல் வேண்டும்.

26. இதற்கமைய, பயன்பெறும் சொந்தக்காரரை அடையாளம் காண்பது கட்டாயமானதாகும். குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் வாடிக்கையாளர் ஒருவரின் பயன்பெறு சொந்தக்காரர் யாரென்பதனை நிதியியல் நிறுவனம் நிறுவியதும், குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் ஒவ்வொரு தனிப்பட்ட பயன்பெறும் சொந்தக்காரர் தொடர்பில் குறைந்தபட்சம் பின்வரும் தகவல்களை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

9 நியமனம் செய்யப்பட்ட பங்குடமையாளர் என்பது உண்மையான சொந்தக்காரர் அல்லது பயன்பெறு சொந்தக்காரர் சார்பில் பங்குகளைக் கொண்டிருக்கும் கம்பனி உறுப்பினர் ஒருவரைக் குறிக்கும். அவர்/ அவள் பதிவுசெய்யப்பட்ட பங்குகளின் சொந்தக்காரா நியமனம் செய்யப்பட்ட பங்குடமையாளரொருவர் கட்டுக்காப்பு உடன்படிக்கையின் கீழ் பங்குகளை கொண்டிருக்கின்றார்.

அ) முழுப்பெயர்

ஆ) நிரந்தர வதிவிட அல்லது அஞ்சல் முகவரி

இ) தொழில், தொழில்தருநரின் பெயர், வியாபாரம் அல்லது பிரதான நடவடிக்கை

ஈ) அலுவல்சார் தனியாள் அடையாள இலக்கம் அல்லது தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு அல்லது ஓட்டுனர் உரிமம் போன்ற வாடிக்கையாளர் அல்லது பயன்பெறு சொந்தக்காரரின் புகைப்படத்தினை தாங்கிய வேறு ஏதேனும் அடையாளப்படுத்தல் ஆவணங்கள்

உ) பிறந்த திகதி

ஊ) தேசியம்

எ) நிதியின் மூலம்

ஏ) கொடுக்கல்வாங்கல்களின் நோக்கம்

ஐ) தொலைபேசி இலக்கங்கள் (விதிவிடம், அலுவலகம் அல்லது செல்லிடல்)

27. குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் பயன்பெறும் சொந்தக்காரரொருவருடன் வியாபார உறவுகளை தொடர்வதற்கு முன்னதாக அல்லது உறவுகளை மேற்கொள்கின்ற காலப்பகுதியில் அல்லது இடைக்கிடையேயான வாடிக்கையாளருக்கான[10] கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்கின்ற வாடிக்கையாளர்களை மூல ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்வதுடன் ஆவணங்களின் பிரச்சனையும் தயாரித்துக்கொள்வதன் மூலம் பயன்பெறும் சொந்தக்காரரின் அடையாளத்தினை சரிபார்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

28. சட்டரீதியான ஆட்கள் அல்லது ஏற்பாடுகளின் சொத்துரிமை மற்றும் கட்டுப்பாடுகளின் இடர்நேர்வு மற்றும் சிக்கலான தன்மைகளுக்குட்பட்டு சரிபார்ப்பதற்காக நிலையான வழிமுறைகளை எடுத்தல் வேண்டும்.

பகுதி **VI**

**அ) அரசியல் ரீதியில் முகம்கொடுக்கவேண்டிய ஆட்களாகவுள்ள பயன்பெறும் சொந்தக்காரர்**

29. பயன்பெறும் சொந்தக்காரர் அரசியல் ரீதியில் முகம்கொடுக்கவேண்டிய ஆளொருவராகவுள்ளாரா[11] என்பதனைத் தீர்மானிப்பதற்கு பொருத்தமான உள்ளக கொள்கைகளையும் நடவடிக்கை முறைகளையும் கட்டுப்பாடுகளையும் நடைமுறைப்படுத்த வேண்டும் என குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றன. இத்தகைய செயன்முறைகளினூடாக குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் எவரேனும் பயன்பெறும் சொந்தக்காரர் அரசியல் ரீதியில் முகம்கொடுக்க வேண்டிய ஆளாக அடையாளம் காணுமிடத்து தொடர்புகள் குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்களுக்காக வாடிக்கையாளர் உரியவிழிப்புக்கவன விதிகளில் தேவைப்படுத்தப்பட்டவாறு உரிய விழிப்புக் கவனத்திற்கு அதிகளவில் உட்பட்டிருத்தல் வேண்டும்.

**ஆ) பதிவேடுகளைப் பேணுகின்ற கடப்பாடுகள்**

30 குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்களுக்கான வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனம்[12] மற்றும் நிதிசார் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டம் என்பவற்றின் கீழ் விபரிக்கப்பட்டவாறு பயன்பெறு சொந்தக்காரர் தொடர்பான அடையாளப்படுத்தல் மற்றும் சரிபார்த்த தகவல்களின் பதிவேடுகளை பேணுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**இ) அறிக்கையிடல் கடப்பாடுகள்**

31. பயன்பெறு சொத்துரிமை தகவல்களை அடையாளப்படுத்தல் மற்றும் சரிபார்ப்பது உட்பட, குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்களுக்கான வாடிக்கையாளர் உரியவிழிப்புக் கவன விதிகளினால் தேவைப்படுத்தப்பட்டவாறு வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவன வழிமுறைகளும் அதேபோன்று அத்துடன் அல்லது வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவனத்திற்கும் இணங்கியொழுக முடியாமல் இருக்கும் போது வாடிக்கையாளர் பற்றிய துப்புக்களை வழங்குதல் வேண்டும். இதனைத் தொடர்ந்து நிதிசார் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல்[13] சட்டத்தின் 7ஆம் பிரிவுடன் இணங்கி செல்லும் விதத்தில் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கைகளை உடனடியாக கோப்பிடல் வேண்டும்.

**ஈ) தடைகள்**

வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவன விதிகளின் கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு பயன்பெறும் சொத்துரிமைத் தேவைப்பாடுகளுடன் இணங்கிச் செல்லத் தவறுவது நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் பிரிவு 2(3)இனை மீறுவதாகவும் நிதியியல் கொடுக்கல்வாங்கல் சட்டத்தின் 19ஆவது பிரிவின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகவும் இருக்கும்.

தொடர்பு: 037/07/006/0013/018 2019 ஒத்தோபர் 01

சேரல்: அனைத்து நிதி நிறுவனங்களினதும் பெயர் குறிக்கப்பட்ட நிதியல்லாத் தொழில்களினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்கள்/பொது முகாமையாளர்கள்/ முகாமைத்துவப் பணிப்பாளர்கள்

**2019ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆட்களை அடையாளப்படுத்தல் மீதான வழிகாட்டல்கள்**

மேற்குறித்த வழிகாட்டல்கள் உடனடியாக அமுலுக்கு வரும் விதத்தில் நடைமுறைக்கு வரும் என்பதுடன் 2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டம், 2016ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதி நிறுவனங்கள் (வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக் கவன) விதிகள் அத்துடன் 2018ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க பெயர் குறிக்கப்பட்ட நிதியல்லாத் தொழில் (வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக் கவன) விதிகள் என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படுதல் வேண்டும்.

உண்மையுள்ள,
டி.எம். ரூபசிங்க
**பணிப்பாளர்/நிதியியல் உளவறிதல் பிரிவு**

10 குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்களுக்கான வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவன விதிகளின் 13ஆம் இலக்க விதியினை தயவுசெய்து பார்க்கவும்.

11 குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்களுக்கான வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவன விதிகளின் 24ஆம் இலக்க விதியினை தயவுசெய்து பார்க்கவும்.

12 குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்களுக்கான வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவன விதிகளின் 38ஆம் இலக்க விதியினை தயவுசெய்து பார்க்கவும்.

13 குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்களுக்கான வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவன விதிகளின் 14ஆம் இலக்க விதியினை தயவுசெய்து பார்க்கவும்.

பிரதி: 1. பணிப்பாளர், இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வைத் திணைக்களம்

2. பணிப்பாளர், இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதி நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களம்

3. பணிப்பாளர் நாயகம், இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

4. பணிப்பாளர் நாயகம், இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு

5. பணிப்பாளர் நாயகம், இலங்கை தேசிய இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண அதிகாரசபை

6. இணங்குவித்தல் அலுவலர்கள், அனைத்து நிதி நிறுவனங்கள் மற்றும் பெயர் குறிக்கப்பட்ட நிதியல்லாத் தொழில்கள்

**2019ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆட்களை அடையாளப்படுத்தல் மீதான வழிகாட்டல்கள்**

**அ. அறிமுகம்**

1. 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 15 (1) (ஒ)ஆம் பிரிவினை (நிதிசார் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டம்) அனுசரித்து இவ்வழிகாட்டல்கள் வழங்கப்படுகின்றன.

2. வாடிக்கையாளர் ஒருவர் அல்லது பயன்பெறு சொந்தக்காரர் அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆளொருவரா (இதனகத்துப் பின்னர் அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆட்கள் எனக் குறிப்பீடு செய்யப்படும்) என்பதனை நிர்ணயிக்கும் நோக்கத்திற்காக நிதிசார் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 33ஆம் பிரிவின் கீழ் வரைவிலக்கணம் செய்யப்பட்ட நிதியியல் நிறுவனங்களுக்கு இவ்வழிகாட்டல்கள் வழங்கப்படுகின்றது.

3. மேலும், இவ்வழிகாட்டல்கள், 2016 சனவரி 27ஆம் திகதியிடப்பட்ட 1951/13ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்ட 2016இன் 1ஆம் இலக்க நிதியியல் நிறுவனங்கள் (வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக் கவன) விதிகள், 2018 சனவரி 10ஆம் திகதியிடப்பட்ட 2053/20ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்ட 2018இன் 1ஆம் இலக்க பெயர் குறிக்கப்பட்ட நிதியல்லாத் தொழில் (வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக் கவன) விதிகள் என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டும். இவ் வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக் கவன விதிகள் இதனகத்துப் பின்னர் முறையே நிதியியல் நிறுவனங்கள் (வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக் கவன) விதிகள் மற்றும் பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லாத் தொழில் (வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக் கவன) விதிகள் எனக் குறிப்பீடு செய்யப்படும்.

4. நிதியியல் நிறுவனங்கள் (வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக் கவன) விதியின் 59ஆம் விதியும் பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லாத் தொழில் (வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக் கவன) விதியின் 24ஆம் விதியும் அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆட்களான அல்லது அவர்களது உடனடி குடும்ப உறுப்பினர்களான அத்துடன் நெருங்கிய சகாக்களான வாடிக்கையாளர்களுடன்/ பயன்பெறு சொந்தக்காரர்களுடன் வர்த்தகம் செய்கையில் நிதியியல் நிறுவனங்கள் அத்துடன் பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லாத் தொழில்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறையினைத் தாபிக்கின்றது.

5. இவ்வழிகாட்டல்கள், வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக் கவன விதிகளை பொருள்கோடல் செய்வதற்கும் பிரயோகிப்பதற்கும் உதவியாக வழங்கப்படுகின்றது. இவ்வழிகாட்டல்கள் பூரணமானதாகவிருக்குமென எண்ணப்படவில்லை என்பதுடன் நிதியியல் உளவறிதல் பிரிவின் சட்ட ரீதியான ஆலோசனையொன்றாகக் கருதப்படலாகாது. இவ்வழிகாட்டல்களில் எதுவும் வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக் கவன விதிகளின் அல்லது நிதிசார் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் கீழ் எவையேனும் தமது கடப்பாடுகளிலிருந்து நிதி நிறுவனங்களை அல்லது பெயர் குறிக்கப்பட்ட நிதியல்லாத் தொழில்களை விடுவிப்பதாக பொருள்கொள்ளப்படலாகாது.

**ஆ. பின்னணி/சூழ்நிலை**

**அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆள் என்பது யார்?**

6. நிதியியல் நிறுவனங்கள் (வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக் கவன) விதியின் 99ஆம் விதியும் பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லாத் தொழில் (வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக் கவன) விதியின் 49ஆம் விதியும், அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆட்களையும் அவர்களது நேரடிக் குடும்ப உறுப்பினர்களையும் நெருங்கிய சகாக்களையும் வரைவிலக்கணம் செய்கின்றன.

7. இவ்வாடிக்கையாளர் பற்றிய உரிய வழிப்புக் கவன விதிகளுக்கமைவாக "அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆள்" என்பது உள்நாட்டிலோ அல்லது வெளிநாடொன்றின் மூலமோ, அல்லது பன்னாட்டு நிறுவனமொன்றில் முதன்மை பகிரங்க தொழிற்பாடுகள் பொறுப்பளிக்கப்பட்ட தனிப்பட்ட ஆளொருவர் என்று பொருளாவதுடன் அரசொன்றின் அல்லது அரசாங்கமொன்றின் தலைவர், அரசியல்வாதி, மூத்த அரசாங்க அலுவலர், நீதித்துறை அலுவலர் அல்லது இராணுவ அதிகாரி, அரசுக்குரித்தான கூட்டுத்தாபனமொன்றின்/ அரசாங்கத்தின் அல்லது சுயாதீன நிறுவனமொன்றின் மூத்த நிறைவேற்று அலுவலர் ஆகியோரை உள்ளடக்குகின்றது. ஆயினும், மத்திய தரத்திலுள்ள அல்லது கனிஷ்ட தரத்திலுள்ள தனிப்பட்டவர்களை உள்ளடக்காது. வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக் கவன விதியானது அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆளொருவரின் குடும்ப உறுப்பினர்களுக்கும் நெருங்கிய சகாக்களுக்கும் ஏற்புடையதாகும்.

8. அதற்கமைய, அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆட்கள் பின்வரும் வகைகளின் கீழ் இனங்காணப்படலாம்.

   அ. உள்நாட்டு அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆட்கள்: இலங்கையில் முதன்மை பகிரங்க தொழிற்பாடுகள் பொறுப்பளிக்கப்பட்ட தனிப்பட்டவர்கள்

   ஆ. வெளிநாட்டு அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆட்கள்: வெளிநாடொன்றினால் முக்கிய பகிரங்கத் தொழிற்பாடுகள் பொறுப்பளிக்கப்பட்ட தனிப்பட்டவர்கள்

   இ. பன்னாட்டு நிறுவன அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆட்கள்: பன்னாட்டு நிறுவனமொன்றினால் முதன்மை தொழிற்பாடொன்று பொறுப்பளிக்கப்பட்ட ஆட்கள்

   ஈ. உடனடி குடும்ப உறுப்பினர்கள்: நேரடியாகவோ (இரத்த உறவு காரணமாக) அல்லது திருமணம் ஊடாகவோ அல்லது அதனையொத்த பங்காண்மை வடிவங்களிலோ அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆளொருவருடன் தொடர்புடையவர்களாகக் காணப்படுகின்ற தனிப்பட்டவர்

உ. நெருங்கிய சகாக்கள்: சமூக ரீதியாகவோ அல்லது தொழில் ரீதியாகவோ அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆளொருவருடன் நெருங்கிய தொடர்புடைய தனிப்பட்டவர்

9. அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆட்களின் உடனடி குடும்ப உறுப்பினர்கள் பின்வரும் எவரேனும் உறவினரை உள்ளடக்கும்

i. துணை (தற்போது மற்றும் கடந்தகால)

ii. உடன் பிறந்தவர்கள், (ஒன்றுவிட்ட உடன்பிறந்தவர்கள் உட்பட) மற்றும் அவர்களது துணைகள்

iii. பிள்ளைகள் (முன்னையதாரப் பிள்ளைகள் மற்றும் மகவேற்கப்பட்ட பிள்ளைகள் உள்ளடங்களாக) மற்றும் அவர்களது துணைகள்

iv. பெற்றோர்கள் (வளர்ப்புப் பெற்றோர்கள் உட்பட)

v. பேரப்பிள்ளைகள் மற்றும் அவர்களது துணைகள்.

10. அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆள்களினது நெருங்கிய சகாக்கள் அல்லது அவர்களது குடும்ப உறுப்பினர்கள் உள்ளடக்குவன்

i. மேலே 7ஆம் அல்லது 9ஆம் வழிகாட்டல்களில் இனங்காணப்பட்ட எவரேனும் ஆளுடன் சட்ட ரீதியான நிறுவனங்களின் அத்துடன் சட்ட ரீதியான ஒழுங்கேற்பாடுகளின் இணைந்த பயன்பெறு சொத்தாண்மையினை அல்லது ஏதேனும் வேறு நெருங்கிய தொழில் உறவுவினைக் கொண்டுள்ள இயற்கையான ஆளொருவர் அத்துடன்

ii. பயன்பெறு சொந்தக்காரர் இயற்கையான ஆளொருவராக இருக்கின்ற அத்துடன் அத்தகைய ஆளின் அல்லது 7ஆம் மற்றும் 9ஆம் வழிகாட்டல்களில் இனங்காணப்பட்ட உடனடி குடும்ப உறுப்பினர்களின் பயனுக்காக நிறுவப்பட்டுள்ளதாக அறியப்படுகின்ற சட்ட ரீதியான ஆள் அல்லது சட்ட ரீதியான ஒழுங்கேற்பாடு

iii. பரந்தளவில் அத்துடன் பகிரங்கமாக அறியப்படுகின்ற அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆளொருவரின் நெருங்கிய தொழில் சகாக்கள் அல்லது தனிப்பட்ட ஆலோசகர்கள் குறிப்பாக நிதியியல் ரீதியாக நம்பிக்கைக்குரிய தகுதியில் செயற்படுகின்ற ஆட்கள்

11. அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆள் பற்றிய வரைவிலக்கண நோக்கங்களுக்காக "பன்னாட்டு நிறுவனங்கள்" என்பது பன்னாட்டு உடன்படிக்கை ஒன்றின் அந்தஸ்த்தினை அத்தகைய உடன்படிக்கைகள் கொண்டிருக்கின்றவிடத்து, அதன் உறுப்பு நாடுகளுக்கிடையிலான முறைசார்ந்த அரசியல் உடன்படிக்கையினால் தாபிக்கப்பட்ட நிறுவனங்களாகும் என்பதுடன் நிறுவனமானது உறுப்பு நாடுகளின் சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டிருத்தல். நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பன்னாட்டு நிறுவனங்கள் பற்றிய உதாரணங்கள் உள்ளடக்குவன:

அ. ஐக்கிய நாடுகள் மற்றும் பன்னாட்டு கடல்சார் அமைப்புகள் போன்ற அதன் இணை அமைப்புகள்

ஆ. பிராந்திய பன்னாட்டு நிறுவனங்கள்

இ. வட அத்திலாந்திக் கூட்டு உடன்படிக்கை அமைப்பு போன்ற பன்னாட்டு இராணுவ அமைப்புகள்

ஈ. உலக வர்த்தக அமைப்பு, பன்னாட்டு நாணய நிதி, உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற பொருளாதார அமைப்புகள்.

12. வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக் கவன விதிகள், அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆட்களையும் அதேபோன்று அவர்களது உடனடிக் குடும்ப உறுப்பினர்களையும் அத்துடன் நெருங்கிய சகாக்கள் தொடர்பிலும் குறிப்பான நடைமுறைகளை தாபிப்பதற்கு நிதியியல் நிறுவனங்களையும் பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லாத் தொழில்களையும் தேவைப்படுத்துகின்றன.

**இ. அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆட்களுடன் இணையப்பெற்ற பணம் தூயதாக்குதல், பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் மற்றும் நிதியளித்தல் இடர்நேர்வுகளின் பெருக்கம்**

13. அவர்களது உத்தியோகபூர்வ அந்தஸ்துகள் அல்லது வகிக்கின்ற பதவி அத்துடன் செல்வாக்குக் காரணமாக, அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய பல ஆட்கள், பணம் தூயதாக்கல் அத்துடன் இலஞ்சம் மற்றும் ஊழல் உள்ளடங்கலாக தொடர்புபட்ட அடிப்படை தவறுகள் அதேபோன்று பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலுடன் தொடர்புபட்ட நடவடிக்கை போன்றவற்றிற்கு தமது பதவிகளை துஸ்பிரயோகம் செய்வதற்கு சாத்தியமுள்ளவர்களாக இருப்பர் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆட்களுடன் இணைந்த சாத்தியமான இடர்நேர்வுகள், அவர்களது நடத்தையிலிருந்து தோன்றுகின்ற இவ்இடர்நேர்வுகளை தடுத்தல், கண்டுபிடித்தல் மற்றும் கட்டுப்படுத்தலுக்காக பணம் தூயதாக்கலுக்கெதிரான பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதலின் மேலதிக வழிமுறைகளின் பிரயோகத்தினை நியாயப்படுத்துகின்றன.

14. எவ்வாறாயினும், ஆளொருவர் அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டியவராயின் குற்றவியல் நடவடிக்கைக்கு அல்லது நிதியியல் முறைமை துஸ்பிரயோகத்திற்கு இயல்பாகவே தொடர்பொன்று காணப்படுமென்பது அர்த்தமல்ல என்பது கவனத்திற்கொள்ளப்பட வேண்டும். அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆட்கள் விடயத்தில் பிரயோகிக்கப்படும் பணம் தூயதாக்கலுக்கு எதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் மேலதிக வழிமுறைகள், தடுப்புச் செயல்களேயாகும் என்பதுடன் அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆட்கள் குற்றவியல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாக கலங்கம் விளைவிப்பதாக பொருள்கோடல் செய்யப்படலாகாது அதனைவிட, இவ்வழிமுறைகள் இவ்வகையான பதவிகளை வகிப்பதுடன் இணையப்பெற்ற வாய்ப்புகள் உள்ளடங்கலாக அதிகரித்த இடர்நேர்வுகளை இனங்காணுகின்றது.

**ஈ. அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆட்களை இனங்காணல்**

15. வாடிக்கையாளர் அல்லது பயன்பெறும் சொந்தக்காரர் அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆளொருவரா என்பதனை நிர்ணயிப்பதற்கு ஒவ்வொரு நிதியியல் நிறுவனமும்/ பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லாத் தொழிலும் பொருத்தமான உள்ளகக் கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு வேண்டப்பட்டுள்ளன. இது அனைத்து புதிய மற்றும் நடைமுறையிலுள்ள வியாபாரத் தொடர்புகளுக்கும் ஏற்புடையது.

16. வாடிக்கையாளர்கள் அல்லது பயன்பெறும் சொந்தக்காரர்கள் அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டியவராக இருப்பவரா என்பதனை தீர்மானிப்பதற்கான இயலுமையை வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக் கவன விதிகளில் எடுத்துரைக்கப்பட்டவாறு இனங்காணல்,

சரிபார்த்தல் மற்றும் தொடர்ச்சியான உரிய விழிப்புக் கவனத் தேவைப்பாடுகள் என்பன உள்ளடங்கலாக வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக் கவன வழிமுறைகளை செயற்திறன்மிக்கவாறு நடைமுறைப்படுத்துவதன் மீதே முழுமையாகச் சார்ந்திருக்கும். ஏதேனும் வகையான வாடிக்கையாளருக்கு இவை பிரயோகிக்கப்பட வேண்டும் என்பதால் வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக் கவன வழிமுறைகள் இன்றியமையாத தொடக்க நிலையாகக் காணப்படுகின்றன. பிரதான தொழில் அல்லது வேலை போன்ற வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக் கவன செயன்முறையிலுள்ள முக்கிய காரணிகள் அத்தகைய நிர்ணயித்தலில் சிறந்த தொடக்கப் புள்ளியொன்றாக அமைந்திருக்கும்.

17. அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆள் என்பதற்கான வரைவிலக்கணம் விசேடமாக நடுத்தர தரத்திலுள்ள அல்லது கனிஷ்ட தனிப்பட்டவர்களை அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டியவர்களாக இனங்காண்பதைத் தவிர்க்கின்றது. எவ்வாறாயினும், நடுத்தரத் தர மற்றும் கனிஷ்ட அலுவலர்கள் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் கட்டுப்பாடுகளை தந்திரோபாயமாக மீறுவதற்கு அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆளொருவரின் சார்பில் செயற்படக் கூடும் என்ற அவதானம் இருத்தல் வேண்டும். அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆளொருவரின் சார்பில் அவர்கள் செயற்படுகின்ற போது வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக் கவன விதிகளுக்கமைவாக தொழில் உறவுடன் இணைந்த ஒட்டுமொத்த இடர்நேர்வுகளின் மதிப்பீகளின் கட்டமைப்பில் காணப்படுகின்ற வாடிக்கையாளர் இடர்நேர்வுக் காரணிகளாக இம்முக்கியத்துவம் குறைந்த பொதுத் தொழிற்பாடுகள், பொருத்தமானவாறு கருத்திற்கொள்ளப்படக் கூடியதாகும்.

18. வெளிநாட்டு அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆளொருவருடன் வர்த்தகம் செய்கின்ற நிதியியல் நிறுவனங்கள்/ பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லாத் தொழில்கள், குறித்த மட்டமொன்றில் அல்லது குறித்த பதவியொன்றில் வெளிநாட்டு அரசாங்க அலுவலர் ஒருவரின் நியாயமான வருமானம் எவ்வளவாக இருக்கும் என்பது போன்ற மாறிலிகள் பற்றிய முதல் நிலை அறிவினை அல்லது தகவலுக்கான நேரடி அணுகுவழியினை கொண்டிருக்காதிருந்திருக்கலாம். இதன் விளைவாக கணக்கு ஆரம்பிக்கின்ற போது/ வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக் கவன கட்டம், அத்துடன் ஏற்கனவே காணப்படுகின்ற வெளிநாட்டு வாடிக்கையாளர் அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆளொருவராகின்ற போது ஆகிய இரு நிலைகளிலும் குறிப்பிட்ட இடர்நேர்வுகளைத் தீர்ப்பதற்கு பொருத்தமான இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

19. வாடிக்கையாளர் உள்நாட்டு/ பன்னாட்டு அமைப்பின் அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆளொருவராக இருப்பதாக தீர்மானிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில், நிதி நிறுவனங்கள்/ பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லாத் தொழில்கள் அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆளுக்கு பொறுப்பளிக்கப்பட்ட பகிரங்கத் தொழிற்பாடுகளின் அத்துடன் பன்னாட்டு அமைப்பு விடயத்தில் அவ்வமைப்பின் தொழில் மாதிரியின் குறிப்பான பண்புகளைப் புரிந்துகொள்வதற்குப் போதிய தகவல்களைத் திரட்ட வேண்டும். எடுத்துக்காட்டாக பன்னாட்டு அமைப்புகள் தொடர்பான தகவல்களை அவர்களது தொடர்புடைய வெப்தளத்தில் காணக்கூடியதாக இருக்கலாம்.

20. வாடிக்கையாளர்கள் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு அல்லது பன்னாட்டு நிறுவனங்கள் தொடர்பில் அரசியல் ரீதியில் முகங்கொடுக்கக் கூடிய வாடிக்கையாளர்களின் வகைகள் பற்றிய உதாரணங்களுக்கு நிதியியல் நிறுவனங்கள்/ பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லாத் தொழில்கள் பின்னிணைப்பு (அ)இல் உள்ள பூரணப்படுத்தாத அட்டவணையினைப் பார்க்கலாம். எனினும், பின்னிணைப்பு (அ)இல் அத்தகைய ஆள்/ பதவி அட்டவணைப்படுத்தப்படாத போதிலும் அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆள் பற்றிய வரைவிலக்கணத்தினுள் வருகின்ற எவரேனும் தனிப்பட்டவரை இனங்காண்பதற்கு நிதியில் நிறுவனங்கள்/ பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லாத் தொழில்கள் வேண்டப்படுகின்றன.

**உ. பயன்பெறு சொந்தக்காரர்கள்**

21. வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக் கவனத்தைக் நடாத்துகின்றபோது, பயன்பெறு சொந்தக்காரர்களை இனங்காண்பதற்கும் பயன்பெறு சொந்தக்காரர்களின் அடையாளத்தை சரிபார்ப்பதற்கும் நியாயமான வழிமுறைகளை எடுப்பதற்கும் நிதியியல் நிறுவனங்கள்/பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லாத் தொழில்கள் தேவைப்படுத்தப்பட்டுள்ளன. இது இறுதிப் பயன்பெறு சொந்தக்காரர்கள் அல்லது கட்டுப்பாட்டாளர்கள் அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டியவர்களாக அல்லது அவர்களது குடும்ப உறுப்பினர்களாக அல்லது சகாக்களாக இருக்கின்ற சட்டரீதியான ஆட்களை அல்லது ஒழுங்கேற்பாடுகளை உள்ளடக்க வேண்டும்.

22. பயன்பெறு சொந்தக்காரரொருவர் அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஒருவராக இருக்கிறார் என நம்புவதற்கு நியாயமான காரணங்கள் காணப்படுமாயின், பயன்பெறு சொந்தக்காரர் அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டியவரா என்பதனை சரிபார்ப்பதற்கு நிதியில் நிறுவனங்கள்/ பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லாத் தொழில்கள் வேண்டப்படுகின்றன.

23. வாடிக்கையாளரின் அல்லது சேவைநாடியின் பயன்பெறு சொந்தக்காரர் அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டியவரா என்பதனைத் தீர்மானிக்கும் பொருட்டு பயன்பெறு சொந்தக்காரரொருவர் சார்பில் செயற்படுவதற்கு எத்தணிக்கின்ற ஆளொருவரிடம் காரணத்தை வினவுவதற்கு நிதியில் நிறுவனங்கள்/ பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லாத் தொழில்கள் வேண்டப்படுகின்றன.

24. நிதியியல் நிறுவனங்கள்/ பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லாத் தொழில்கள்:

அ. அரசியல் ரீதியில் முகங்கொடுக்கவேண்டியவரின் சார்பில் செயற்படுகின்ற ஆளொருவருக்காக, அல்லது

ஆ. அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆளொருவரின் குடும்ப உறுப்பினரொருவராக அல்லது நெருங்கிய சகாவாக இனங்காணப்பட்ட வாடிக்கையாளரொருவருக்கு அல்லது வாடிக்கையாளர் ஒருவரின் பயன்பெறு சொந்தக்காரருக்கு அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆளொருவருக்கு ஏற்புடைய அனைத்துத் தேவைப்படுத்தல்களையும் பிரயோகிப்பதற்கு வேண்டப்படுகின்றன.

**ஊ. அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆட்களை அடையாளப்படுத்தலில் பயன்படுத்தப்படும் முறைகள்**

25. அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆட்களை, அவர்களுடைய குடும்ப உறுப்பினர்களை அல்லது நெருங்கிய சகாக்களை அடையாளப்படுத்துகின்ற தனியான முறையொன்று காணப்படவில்லை. அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆட்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் நோக்கக்கூடிய பிரமாணத்தைப் பயன்படுத்தி இனங்காணப்படக்கூடியவர்களாயினும் நெருங்கிய சகாக்களுக்கான பிரமாணம் சில சந்தர்ப்பங்களில் (எப்போதும் அல்ல) ஒப்பீட்டு ரீதியாக மிகவும் தற்சார்புடையவையாகும். ஏதேனும் தனியான அடையாளப்படுத்தல் முறையொன்று போதுமானதாக இருக்கும் என்பது மிகவும் சாத்தியமற்றதாகும். இதற்குப் பதிலாக ஒன்றிணைந்த முறைகள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுத்தரும். அம்முறைகளில் சில உள்ளடக்குவன:

அ) இந்நோக்கத்திற்காக தொகுக்கப்பட்ட வர்த்தக ரீதியான தரவுத்தளங்களைப் பயன்படுத்தி வாடிக்கையாளரின் மற்றும் பயன்பெறு சொந்தக்காரரை இனங்காட்டக்கூடிய காரணிகளைப் பரிசோதித்தல். இத்தரவுத் தளங்கள் பகிரங்க தரவு மூலங்களிலிருந்து தொகுக்கப்பட்டவை என்பதுடன் ஏற்றவாறு நிறைவுசெய்யப்படாமல் அல்லது இற்றைப்படுத்தப்படாமல் இருக்கலாம்.

ஆ) அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆட்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நெருங்கிய சகாக்கள் பற்றி உள்ளக ரீதியாகப் பேணப்படுகின்ற தரவுத்தளத்தினைப் பயன்படுத்துகின்ற வாடிக்கையாளரின் மற்றும் பயன்பெறு சொந்தக்காரரை இனங்காட்டக்கூடிய காரணிகளைப் பரிசோதித்தல்.

இ) வெளிநாட்டு அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டியவர்கள் தொடர்பில் அவர்களது தாய் நாட்டில் பகிரங்கமாகக் கிடைக்கப்பெறக் கூடிய நிதியியல் பிரகடனம்/ வெளிப்படுத்தல் தேவைப்பாடுகளுடன் மக்கள் தொடர்பான பதிவகங்களை பரிசோதித்தல்.

ஈ) தேவைக்கேற்ப வாடிக்கையாளர் பற்றிய ஆராய்ச்சியினை நடாத்துதல் மற்றும் பயன்படுத்தல். இது தேடல் அச்சு, சமூக வலைத்தளம், கம்பனிப் பதிவகங்கள், கம்பனி வெப்தளங்கள், செய்தி வெப்தளங்கள், வர்த்தக வெப்தளங்கள், அரசாங்க வெப்தளங்கள், வர்த்தக ரீதியான தகவல் திரட்டுநர்கள், நேரடியான நேர்காணல் போன்ற கிடைக்கத்தக்க கருவிகளைப் பயன்படுத்தி வாடிக்கையாளர்களை ஆராய்ச்சி செய்வதனை ஈடுபடுத்துகின்றது.

உ) வாடிக்கையாளர் ஒருவரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சுய பிரகடனம் - நிதியியல் நிறுவனங்கள்/ பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லாத் தொழில்கள், வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக் கவனச் செயன்முறையின் பாகமொன்றாக அவர்களது அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆட்களின் அந்தஸ்த்துகள் மீது வாடிக்கையாளர்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும். எவ்வாறாயினும், சுய பிரகடனம் ஒன்றினூடாக வாடிக்கையாளரது அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆள் அந்தஸ்துக்களை உறுதிப்படுத்துகின்ற நிதியியல் நிறுவனங்கள்/ பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லாத் தொழில்கள், வாடிக்கையாளர் உண்மையில் அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டியவர்களாக அவர்கள் இருக்கின்றார்களா என்பதனை அவர்கள் நிர்ணயிக்க முடியாதிருக்கக்கூடும் என்பதனால், வெறுமனே அத்தகைய சுய பிரகடனங்களின் மீது அவர்கள் தங்கியிருக்கவில்லை என்பதனை உறுதிசெய்ய வேண்டும். நிறுவனங்கள் சுய பிரகடனத்தினைப் பணிக்கமர்த்துவதாயின், நிறுவனங்கள் வாடிக்கையாளர்களுடன் முனைப்புடன் ஈடுபடுமாறும் அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆள் பற்றிய வரைவிலக்கணத்தின் வேறுபட்ட கூறுகளுக்கான தொடர்புடைய தகவல்களை வெளிப்படுத்துவதற்கும் ஆலோசனை வழங்கப்படுகின்றது.

**எ. வாடிக்கையாளர் அந்தஸ்த்துக்களை மீளாய்தல்/ இற்றைப்படுத்தல்**

26. ஏற்கனவேயுள்ள வாடிக்கையாளர்கள் அவர்கள் வியாபாரத் தொடர்பொன்றில் நுழைந்ததன் பின்னர் அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆட்களாகலாம். எனவே, வாடிக்கையாளர் அந்தஸ்த்து/ முகக்குறிப்பு அல்லது கணக்கு நடவடிக்கை என்பவற்றில் ஏற்படும் மாற்றமொன்றிற்காக அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டியவரல்லாத ஆட்களின் கணக்குகளை நிதியியல் நிறுவனங்கள்/ பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லாத் தொழில்கள் கண்காணித்து வாடிக்கையாளர் தகவல்களை அதற்கேற்றவாறு இற்றைப்படுத்தப்படுகின்றன என்பது முக்கியமாகும். அத்தகைய கண்காணித்தலானது வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக் கவன விதிகளின் கீழான தேவைப்படுத்தல்களுக்கு இசைவானதாகவும் இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்டதாகவும் இருப்பதற்கு தேவைப்படுத்தப்படுகின்றது. அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆட்கள் தொடர்பில் அதன் வாடிக்கையாளர் அந்தஸ்த்துகளை இற்றைப்படுத்துவதற்கு நிறுவனங்கள் வேண்டப்படுகின்ற சில சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

அ. அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆட்கள் பற்றிய புதிய பிரகடனமொன்றினை வாடிக்கையாளரொருவர் தன்னிச்சையாக சமர்ப்பிக்கின்ற போது

ஆ. முன்னர் அறியப்படாத அரசியல் ரீதியில் முகங்கொடுக்கின்றமையினை எடுத்துக்காட்டுகின்ற விதத்தில் வாடிக்கையாளரிடமிருந்து அத்துடன்/ அல்லது கணக்கு முகக்குறிப்பிலிருந்து நடவடிக்கைகள் அல்லது தகவல்கள் குறிப்பிடத்தக்களவு மாறுபடுகின்றது என்பதனை முன்னெடுக்கப்படுகின்ற கண்காணித்தல் வெளிப்படுத்துகின்ற போது

இ. எவரேனும் வாடிக்கையாளரின் அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆட்கள் அந்தஸ்த்துக்களைப் பாதிக்கின்ற தேர்தல் இடம்பெற்றுள்ள போது

ஈ. அத்தகைய இற்றைப்படுத்தலுக்கான தேவைப்பற்றி ஏதேனும் வாயிலூடாக நிதியியல் நிறுவனங்களுக்கு/ பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லாத் தொழில்களுக்கு தெரியவருகின்ற போதெல்லாம்.

27. உரிய விழிப்புக் கவனத் தகவல்கள் நடப்பிலுள்ளவையாக இருப்பதனையும் இணைந்த கட்டுப்பாடுகள் பொருத்தமாக இருப்பதனையும் உறுதிசெய்வதற்கு ஏற்கனவேயுள்ள அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய வாடிக்கையாளர் உறவுகள் காலமுறையாக மீளாய்வுக்குட்படுத்தப்பட வேண்டும்.

**ஏ. அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆள் இடர்நேர்வுகளை முகாமைசெய்தல்.**

28. அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆளொருவராக இனங்காணப்பட்ட எவரேனும் வாடிக்கையாளரின் வியாபாரத் தொடர்புகள் பற்றிய மேம்படுத்தப்பட்ட உரிய விழிப்புக் கவனத்தினை மேற்கொள்வதற்கு நிதியியல் நிறுவனங்கள்/ பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லாத் தொழில்கள் வேண்டப்படுகின்றன.

29. இனங்காணப்பட்ட பின்னர் அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆட்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நெருங்கிய சகாக்கள், பொருத்தமான முகாமைத்துவத்தினை வேண்டுகின்ற மேலதிக இடர்நேர்வினை எப்போதும் ஏற்படுத்துகின்றனர். எவ்வாறாயினும், அவ்விடர்நேர்வு மற்றும் ஒப்பிடத்தக்க இடர்நேர்வுத் தணிப்புகளின் துல்லியமான தன்மையும் பரிமாணமும் பரந்தளவில் வேறுபடலாம். அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆட்கள் தொடர்பில் பாதிக்கக்கூடிய இடர்நேர்வுக் காரணிகளை பின்வருவன உள்ளடக்கலாம்.

அ. அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆளின் பிரசாவுரிமை நாட்டின் ஊழல் மற்றும் நிதியியல் வெளிப்படைத் தன்மை என்பவற்றை உணர்ந்தறிதல்

ஆ. அரசியல் ரீதியில் முகங்கொடுக்கும் செல்வாக்கின் தன்மைகள்

இ. குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நெருங்கிய சகாக்கள் விடயத்தில் அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆளுடனான உறவின் தன்மை

ஈ. அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆளொருவராக அவர் தகைமை பெறுவதற்கு அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆள் வகித்த பதவி (பாதவிகள்)இலிருந்து கழிந்த காலம்

உ. கோரப்பட்ட நிதி மூலங்களின் தன்மை மற்றும் அத்தகைய மூலங்களையும் அவற்றின் சட்ட ரீதியான தன்மையினையும் முழுமையாகவும் இரகசியமாகவும் சரிபார்ப்பதற்கான இயலுமை

ஊ. அவரது பகிரங்கத் தொழிற்பாடுகளுடன் தொடர்புபட்டுள்ளவற்றில் தொழில் அக்கறைகளைக் கொண்டிருத்தல் (அக்கறை முரண்பாடு)

எ. அரசாங்க பெறுகைச் செயன்முறைகளில் ஈடுபடுதல் அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆள் பல முக்கிய தீர்மானங்களை மேற்கொள்கின்ற செயன்முறையொன்றில் விசேடமாக, கொடுப்பனவுடன் தொடர்புபட்டவற்றில் செல்வாக்கினை அழுத்தக்கூடிய முக்கிய பகிரங்கத் தொழிற்பாடுகளில் பல பதவிகளை (தொடர்புடைய அல்லது தொடர்பற்ற) வகிக்கின்ற விடத்து

ஏ. ஊழலுக்கு உள்ளாகப்படக் கூடிய அறியப்பட்ட துறைகளில் முக்கிய பகிரங்க தொழிற்பாடொன்றினை வகித்தல் அல்லது

ஐ. நாட்டில் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் கட்டமைப்பினை செயற்றிறன்மிக்கவாறு நடைமுறைப்படுத்துவதன் மீது எதிர்மறையான தாக்கமொன்றினை அழுத்துவதற்கு அவரை அனுமதிக்கின்ற முக்கிய பகிரங்க தொழிற்பாடொன்றினை வகித்தல்.

30. வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக் கவன விதிகளுக்கமைவாக அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆட்கள் தொடர்பில் பின்வரும் நடைமுறைகளைப் பிரயோகிப்பதற்கு நிதியியல் நிறுவனங்கள்/ பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லாத் தொழில்கள் வேண்டப்படுகின்றன

அ. புதிய தொழில் உறவொன்றினுள் நுழைவதற்கு அல்லது ஏற்கனவேயுள்ள தொடர்பினைத் தொடர்வதற்கு முன்னர் நிறுவனத்தின் பணிப்பாளர் சபையிடமிருந்து/ சிரேஷ்ட முகாமைத்துவத்திடமிருந்து அனுமதியினைப் பெற்றுக்கொள்ளல்

ஆ. பொருத்தமான வழிகளின் மூலம் நிதி மற்றும் சொத்து மூலங்களை இனங்காணல்

இ. முன்னெடுக்கப்படுகின்ற தொழில் உறவைக் கண்காணித்தலின் அதிகரித்த செயலாற்றல்.

**ஐ. அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆளின் சொத்து மூலத்தினையும் நிதியங்களின் மூலத்தினையும் உறுதிப்படுத்தல்.**

31. வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக் கவன விதிகளில் வேண்டப்பட்டவாறு அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆட்களின் சொத்து மூலத்தினையும் நிதியங்களின் மூலத்தினையும் உறுதிப்படுத்துவதற்குச் சாத்தியமான வழிமுறைகளை எடுப்பதற்கு நிதியியல் நிறுவனங்கள்/ பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லாத் தொழில்கள் வேண்டப்படுகின்றன.

32. “சொத்து” மற்றும் “நிதியங்கள்” என்பன இரண்டும் வேறுபட்ட எண்ணக்கருக்களாகும். சொத்து மூலம் என்பது அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆளொருவரின் ஒட்டுமொத்த சொத்து அமைப்பின் (அதாவது மொத்தச் சொத்துக்கள்) தோற்றுவாயினைக் குறிப்பீடு செய்கின்றது. வாடிக்கையாளர் வைத்திருப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற சொத்தின் அளவு, அத்துடன் அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆள் அத்தகைய சொத்தினை எவ்வாறு பெற்றுக்கொண்டார் என்பது பற்றிய அடிப்படை என்பவற்றை இத்தகவல்கள் வழமையாகச் சுட்டிக்காட்டுகின்றன. வைப்பிலிடப்படாத அல்லது அவர்களால் செயற்படுத்தப்படாத சொத்துக்கள் பற்றிய குறிப்பான தகவல்களை நிதியியல் நிறுவனங்கள்/ பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லாத் தொழில்கள் கொண்டிருக்க இயலாத போதிலும், வர்த்தக ரீதியான தரவுத் தளங்கள் அல்லது வேறு திறந்த மூலங்களிலிருந்து பொதுவான தகவல்களை சேகரிப்பது சாத்தியமாகவிருக்கலாம்.

33. நிதியங்களின் மூலம் என்பது அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆளுக்கும் மற்றும் நிதியியல் நிறுவனங்களுக்கும்/ பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லாத் தொழிலுக்குமிடையிலான தொழில் உறவுகளின் விடயமாகக் காணப்படுகின்ற குறித்த நிதியங்களின் அல்லது வேறு சொத்துக்களின் மூலத்தினைக் குறிப்பிடுகின்றது (உதாரணமாக வியாபார உறவின் பாகமாக முதலிடப்படுகின்ற, வைப்பிலிடப்படுகின்ற அல்லது மாற்றல் செய்யப்படுகின்ற/ அனுப்பப்படுகின்ற தொகைகள்) இத்தகவல்களைப் பெற்றுக்கொள்வது வழமையாக இலகுவானதாக இருக்கும். ஆனால், வெறுமனே இது எந்த நிறுவனத்திலிருந்து மாற்றல் செய்யப்பட்டிருக்கலாம்/ அனுப்பப்பட்டிருக்கலாம் என்பதனை அறிவதற்கு மாத்திரம் சாதாரணமாக மட்டுப்படுத்தப்பட்டிருக்கக் கூடாது. பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்கள் உண்மையானதாக இருக்க வேண்டும் என்பதுடன் பெற்றுக்கொள்ளப்பட்டமைக்கான மூலம் அல்லது காரணம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

34. சொத்து மூலம் பற்றிய மற்றும் நிதியங்களின் மூலம் பற்றிய தகவல், முன்னெடுக்கப்படுகின்ற உரிய விழிப்புக் கவனங்களுக்கு பயனுள்ளவையாகும். வியாபாரத் தொடர்புபற்றி தொடர்ச்சியான உரிய விழிப்புக் கவனத்தினை மேற்கொள்ளுகின்ற போது, அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆளின் சொத்து மூலம், நிதியங்களின் மூலம் பற்றிய நிறுவனத்தின் அறிவிற்கு கொடுக்கல்வாங்கல்களின் மட்டமும் வகையும் இசைவாகக் காணப்படுகின்றன என்பதை நிதியியல் நிறுவனங்கள்/ பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லாத் தொழில்கள் உறுதிப்படுத்துவது முக்கியமாகும். அவரது குறிப்பான சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு, தொழில் உறவுக்கான காரணம் அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆளொருவரிடமிருந்து நியாயமாக ஒருவர் எதிர்பார்க்கக்கூடியவற்றுடன் ஒத்திருக்கின்றது என்பதை உறுதிசெய்வது இதன் நோக்கமாகும்.

35. வியாபார உறவின் நடவடிக்கை மட்டம் மற்றும் வகை என்பன நியாயமாக விளக்கப்படக் கூடியவற்றிலிருந்து வேறுபடுகின்றவிடத்து, அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆட்களின் நிதி மூலங்கள் பற்றிய மற்றும் சொத்து மூலங்கள் பற்றிய அறிவினைக் கருத்திற்கொண்டு அவை,

அ. தொழில் உறவினை தொடர்கின்றதா அல்லது முடிவுறுத்துகின்றதா் அல்லது

ஆ. நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல் அறிக்கையொன்றினை கோவைப்படுத்துவதா

என்பதனை நிர்ணயிப்பதற்கு நிறுவனமொன்று வியாபார உறவு தொடர்பாக மேலுமொரு மதிப்பீட்டினை மேற்கொள்ள வேண்டும்.

**ஒ. அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆட்களின் அந்தஸ்த்துக்கள் பற்றிய கால வரையறைகள்**

36. முக்கிய பகிரங்க தொழிற்பாடொன்று இனிமேலும் பொறுப்பளிக்கப்படாத வாடிக்கையாளர் உறவைக் கையாளுதலானது இடர்நேர்வு பற்றிய மதிப்பீடொன்றினை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் எவையேனும் முன்னரே நிர்ணயிக்கப்பட்ட கால வரையறைகளை அடிப்படையாகக் கொண்டல்ல.

37. அத்தகைய இடர்நேர்வு அடிப்படையிலமைந்த அணுகுமுறையானது நிதியியல் நிறுவனங்கள்/ பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லாத் தொழில்கள், முக்கிய பகிரங்க தொழிற்பாடொன்று இனிமேலும் பொறுப்பளிக்கப்படாத அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆளொருவரின் பணம் தூயதாக்குதல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் இடர்நேர்வுகளை மதிப்பிடுகின்றன என்பதனையும் இவ் இடர்நேர்வினைத் தணிப்பதற்கு காத்திரமான நடவடிக்கைகளை எடுப்பதனையும் வேண்டுகின்றது. சாத்தியமான இடர்நேர்வுக் காரணிகளாவன:

அ. தனிப்பட்டவர் மேலும் பிரயோகிக்கக் கூடிய செல்வாக்கு (முறைசாரா) மட்டம் அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆளொருவராக தனிப்பட்டவர் வகித்த பதவியின் சிரேஷ்ட தன்மை அல்லது

ஆ. தனிப்பட்டவரின் முன்னைய மற்றும் நடைமுறைத் தொழிற்பாடு ஏதேனும் வழியில் தொடர்புபட்டுள்ளதா என்பது (உதாரணம்: அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆட்களின் அடுத்துவருபவரின் நியமனத்தின் மூலம் முறைசார்ந்து அல்லது அதேமாதிரியான இயல்புமிக்க கருமங்களை அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆள் தொடர்ந்தும் கையாளுகின்றார் என்ற காரணத்தின் மூலம் முறைசாராது).

38. வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக் கவன விதியின் கீழான தேவைப்பாடுகளைப் பிரயோகிப்பதிலிருந்து அல்லது நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடும் சட்டத்தின் 7ஆம் பிரிவின் கீழ் சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடுவதற்கான கடப்பாட்டிற்குள்ளாக்கப்படுவதிலிருந்து அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆட்கள் விடுபடவில்லை.

**ஓ. அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆட்கள் சிவப்பு அறிக்கைகள்/ குறிகாட்டிகள்**

39. வாடிக்கையாளர் உறவொன்றின் போது அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆளொருவரினால் நிதியியல் முறைமை தவறாகப் பயன்படுத்துவது பற்றிக் கண்டுபிடிப்பதில் உதவுவதற்கு பயன்படுத்தக்கூடிய சிவப்பு அறிக்கைகள்/ குறிகாட்டிகளைக் கொண்ட தொகுப்பொன்றினை நிதியியல் நடவடிக்கைச் செயலணி உருவாக்கியுள்ளது (பின்னிணைப்பு ஆ). சிவப்பு அறிக்கைகள்/ குறிகாட்டிகளைக் கொண்ட இவ்வட்டவணை நிதியில் முறைமையினை துஷ்பிரயோகம் செய்கின்ற அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆட்களைக் கண்டுபிடிப்பதுடன் தொடர்புடையதாகும் என்பதுடன் அனைத்து அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆட்களுக்கும் கலங்கம் ஏற்படுத்துவதற்கு முனையவில்லை. இச்சிவப்பு அறிக்கைகள்/ குறிகாட்டிகளில் ஒன்றினை அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றை பொருத்துவது அவ்வப்போது வாடிக்கையாளர் ஒருவருடன் (சிவப்பு அறிக்கைகள், இடர்நேர்வுக் காரணிகள்). வியாபாரம் செய்யும் இடர்நேர்வினை மாத்திரம் தோற்றுவிக்கலாம் என்பதுடன் சந்தேகமொன்றினை தோற்றுவிப்பதற்கு பல சிவப்பு அறிக்கைகள் நிறைவுசெய்யப்படவேண்டிய தேவையிருக்கலாம். எவ்வாறாயினும், சில சந்தர்ப்பங்களில் அத்துடன் குறிப்பான சூழ்நிலைகளைச் சார்ந்து இச் சிவப்பு அறிக்கைகளில்/ குறிகாட்டிகளில் ஒன்றை அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றைப் பொருத்துவது பணம் தூயதாக்குதல் சந்தேகமொன்றுக்கு நேரடியாக வழிவகுக்கும் (சந்தேகத்திற்கிடமான குறிகாட்டிகள்).

40. இவ்வரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆட்கள் பற்றிய சிவப்பு அறிக்கைகள் முழுமையான அட்டவணை ஒன்றல்ல என்பதுடன் அறிக்கையிடும் நிறுவனம் பயன்படுத்தக் கூடிய வழமையான பணம் தூயதாக்குதல் சிவப்பு அறிக்கைகளுக்கு குறைநிரப்பு செய்கின்றவொன்றாகும். சட்டத்திற்கு புறம்பான நடவடிக்கையில் ஈடுபடுகின்ற அவ்வாறான அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆட்களின் முறைகள் மாற்றமடைகின்றன என்பதுடன் ஆதலால் அவர்களின் நடவடிக்கைகள் பற்றிய குறிகாட்டிகளும் அவ்வாறு மாற்றமடையும். அத்துடன், குறித்த நாடொன்றில் அல்லது பிராந்தியத்தில் சமனான முக்கியத்துவமிக்கவையாக கருத்திற்கொள்ளப்பட வேண்டிய வேறு சிவப்பு அறிக்கைகளும் காணப்படலாம்.

**ஔ. பணிப்பாளர் சபை/ சிரேஷ்ட முகாமைத்துவம்**

41. அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆளுடனான வியாபார உறவொன்றினை நிறுவுவதற்காக அல்லது தொடர்வதற்காக சிரேஷ்ட முகாமைத்துவத்தின் அனுமதியினைப் பெற்றுக்கொள்வதற்கான நிதியியல் நிறுவனங்கள்/ பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லாத் தொழில்களுக்கான தேவைப்படுத்தல்களுக்கு இசைவாக நிதியியல் நிறுவனங்கள்/ பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லாத் தொழில்களினுள் சிரேஷ்ட முகாமைத்துவத்தினை உள்ளடக்குவது எது என்பதனை நிதியியல் நிறுவனங்கள்/ பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லாத் தொழில்கள் நிர்ணயிக்க வேண்டும்.

42. சிரேஷ்ட முகாமைத்துவமாக அமையக் கூடியது எதுவென்பது தொடர்புபடும் நிறுவனத்தின் அளவு, கட்டமைப்பு மற்றும் தன்மை என்பனவற்றைச் சார்ந்திருக்க வேண்டும்.

43. அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆட்கள் பற்றி சிரேஷ்ட முகாமைத்துவம் அறிந்துள்ளது என்பதனையும் சிரேஷ்ட முகாமைத்துவத்தின் போதுமான கட்டுப்பாடுகளின்றி அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆட்களுடனான வியாபார உறவுகளை எச் சூழ்நிலையிலும் நிதியியல் நிறுவனங்கள்/ பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லாத் தொழில்கள் மேற்கொள்வதில்லை என்பதனையும் நிதியியல் நிறுவனங்கள்/ பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லாத் தொழில்கள் உறுதிசெய்ய வேண்டும்.

44. அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆளொருவருடன் வியாபார உறவொன்றினை நிதியியல் நிறுவனம்/ பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லாத் தொழில்கள் மேற்கொள்ள வேண்டுமா என்பதனை மதிப்பிடுவதில் தொடர்புடைய சிரேஷ்ட முகாமைத்துவமானது:

அ. நிதியியல் நிறுவனத்தின்/ பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லாத் தொழிலின் பணம் தூயதாக்கலுக்கெதிரான அல்லது பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் உள்ளகக் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய முழுமையான அறிவினையும் புரிந்துணர்வினையும் கொண்டிருத்தல் வேண்டும்

ஆ. வாய்ப்புமிக்க அல்லது தற்போதுள்ள சேவை நாடியின் அல்லது வாடிக்கையாளரின் பணம் தூயதாக்கல் அல்லது பயங்கரவாத நிதியளித்தல் இடர்நேர்வு தோற்றப்பாடு பற்றிய வலுவான புரிந்துணர்வினைக் கொண்டிருத்தல் வேண்டும் அத்துடன்

இ. நிறுவனத்தின் பணம் தூயதாக்கலுக்கெதிரான அல்லது பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் கொள்கை மற்றும் நடவடிக்கைகள் என்பவற்றின் அனுமதிச் செயன்முறையில் முனைப்புடன் ஈடுபடுதல் வேண்டும்.

45. சிரேஷ்ட முகாமைத்துவத்தினை எது உள்ளமைக்கின்றது என்பதனை நிதியியல் நிறுவனங்கள்/ பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லாத் தொழில்கள் மதிப்பிடுவதை நிர்ணயிப்பதனை அல்லது வேறு வகையில் மட்டுப்படுத்தாது நிறுவனமொன்று:

அ. ஏற்றுக்கொள்ளப்பட்ட மட்டத்தில் அல்லது முன்னெடுக்கப்படுகின்ற அடிப்படையில் அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆளொருவருடன் வியாபார உறவுகளின் நிறுவனத்தை மீளாய்கின்ற

ஆ. குறிப்பான விடயங்களில் தொடர்புடைய அனைத்து உள்ளகத் தகவல்களும் கவனமாக பரிசீலிக்கப்படுகின்றது என்பதனை உறுதிசெய்கின்ற

இ. பொருத்தமான சூழ்நிலைகளில் அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆளொருவரின் வியாபார உறவொன்றின் முடிவுறுத்தலை முகாமைசெய்கின்ற அத்துடன்

ஈ. அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆட்கள் தொடர்பிலான உள்ளகக் கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகளை உள்ளடக்குகின்ற பொருத்தமான தகவல்கள் அவசியப்படுகின்ற போதும் அவசியப்படுகின்றவிடத்தும் அறிக்கையிடுகின்ற நிறுவனத்தினுள் கிடைக்கப்பெறுகின்றன என்பதனை உறுதிசெய்கின்ற

கண்காணிப்புக் குழுக்கள் அல்லது ஒப்பிடத்தக்க தீர்மானமெடுத்தல் கட்டமைப்புக்களை தாபிக்கலாம்.

**க. பதிவேடு பேணும் கடப்பாடுகள்**

46. நிதியியல் நிறுவனங்கள் அத்துடன் பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லாத் தொழில்களின் வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக்கவன விதிகளின் முறையே பகுதி ஏ மற்றும் பகுதி ஐஐஐ அத்துடன், நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடுதல் சட்டம் என்பவற்றின் கீழ் குறித்துரைக்கப்பட்டவாறு அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆட்களுடன் தொடர்புபட்ட அடையாளப்படுத்தல் மற்றும் சரிபார்த்தல் தகவல்கள் பற்றிய பதிவேடுகளைப் பேணுவதற்கு நிதியியல் நிறுவனங்கள்/ பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லாத் தொழில்கள் வேண்டப்பட்டுள்ளன.

**ங. உள்ளகக் கட்டுப்பாட்டுக் கொள்கைகள் - பயிற்சி மற்றும் குழுவாரியான கொள்கைகள்**

47. நிதியியல் நிறுவனங்கள்/ பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லாத் தொழில்கள், தொடர்ச்சியான ஊழியர் பயிற்சியை உள்ளடக்குகின்ற உள்ளகக் கட்டுப்பாட்டு கொள்கைகளை தாபித்து பேண வேண்டும்.

48. கிரமமாக இற்றைப்படுத்தப்பட வேண்டிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், சேவைநாடி அல்லது வாடிக்கையாளர் அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆளொருவரா என்பதனை தீர்மானிக்கின்ற செயற்றிறன்மிக்க வழிகளை கையாளுவதற்கும் அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆட்களுடன் இணையப்பெற்ற சாத்தியமான இடர்நேர்வுகளைப் புரிந்துகொள்வதற்கும், மதிப்பிடுவதற்கும் அத்துடன் கையாள்வதற்கும் வடிவமைக்கப்பட வேண்டும்.

49. நிதியியல் குழுமமொன்றின் பாகமொன்றாகக் காணப்படுகின்ற நிதியியல் நிறுவனங்கள்/ பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லாத் தொழில்கள், நிதியியல் குழுமம் முழுவதுமான உள்ளகக் கட்டுப்பாடுகள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளைத் தாபித்துப் பேண வேண்டும்.

**ச. தகவல் பகிர்தல்**

50. நிதியியல் குழுமங்களின் பாகமொன்றாகக் காணப்படுகின்ற நிதியியல் நிறுவனங்கள்/ பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லாத் தொழில்கள், பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் நோக்கங்களுக்காக அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆட்கள் மீதான தகவல்களை தங்களுக்கு மத்தியில் பகிர்ந்துகொள்ளலாம். ஆயினும், பரிமாறப்பட்ட தகவல்கள் பற்றிய இரகசியத் தன்மை மற்றும் பயன்படுத்தல் மீது போதிய பாதுகாப்புகள் காணப்பட வேண்டும்.

இணைப்பு - அ

**அரசியல் ரீதியில் முகங்கொடுக்கவேண்டியவர்களாக பரிசீலிக்கப்படக்கூடிய வாடிக்கையாளர் வகைகளின் பூரணப்படுத்தப்படாத அட்டவணை**

**உள்நாட்டு அரசியல் ரீதியில் முகங்கொடுக்கவேண்டியவர்களாக**

| | | |
|---|---|---|
| அ. | 1 | சனாதிபதி |
| | 2 | பிரதம அமைச்சர் |
| | 3 | பாராளுமன்றத்தின் சபாநாயகர் மற்றும் பிரதி சபாநாயகர் |
| | 4 | அமைச்சரவை அமைச்சர்கள், அமைச்சரவை அந்தஸ்த்தற்ற அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் |
| | 5 | பாராளுமன்ற உறுப்பினர்கள் |
| | 6 | அரசியல் கட்சிகளின் தலைவர்கள் |

| | | |
|---|---|---|
| ஆ. | 7 | மாகாணங்களின் ஆளுநர்கள் |
| | 8 | மாகாணங்களின் முதலமைச்சர்கள் |
| | 9 | மாநகர சபைகளின் நகர பிதாக்கள், தவிசாளர்கள் |
| | 10 | மாகாண சபைகளின் தவிசாளர்கள் |
| | 11 | மாநகர சபைகளின்/ மாகாண சபைகளின்/ உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள் |
| | 12 | மாநகர சபைகளின்/ மாகாண சபைகளின்/உள்ளூராட்சிமன்றங்களின் ஆணையாளர்கள்/ செயலாளர்கள் |

| | | |
|---|---|---|
| இ. | 13 | பிரதம நீதியரசர் |
| | 14 | சட்டமா அதிபர் |
| | 15 | உயர் நீதிமன்றத்தின் நீதிபதிகள் |
| | 16 | மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதிகள் |

| | | |
|---|---|---|
| | 17 | சட்டமா அதிபர் திணைக்களத்தின் மன்றாடியார் அதிபதி (சொலிசிஸ்டர் ஜெனரல்) |
| | 18 | மேல் நீதிமன்றங்களின்/ மாகாண மேல் நீதிமன்றங்களின் நீதிபதிகள் |
| | 19 | மாவட்ட நீதிமன்றங்களின் நீதிபதிகள் |
| | 20 | நீதவான் நீதிமன்றங்களின் நீதிபதிகள் |
| | 21 | உயர் நீதிமன்றங்களின் பதிவாளர்கள் |
| | 22 | மேன்முறையீட்டு நீதிமன்றங்களின் பதிவாளர்கள் |
| | 23 | மேல் நீதிமன்றங்களின்/ மாகாண மேல் நீதிமன்றங்களின் பதிவாளர்கள் |
| | 24 | மாவட்ட நீதிமன்றங்களின் பதிவாளர்கள் |
| | 25 | நீதவான் நீதிமன்றங்களின் பதிவாளர்கள் |

| | | |
|---|---|---|
| ஈ. | 26 | தூதுவர்கள்/ உயரஸ்தானிகர்கள் |
| | 27 | காவற் தூதர்கள்/தூதுவராலயங்களில் பிரதிப் பிரதானிகள்/ துணைத் தூதுவர்கள், உதவித் தூதுவர்கள் |
| | 28 | முழு அதிகாரமளிக்கப்பெற்ற அரசுத் தூதுவர்கள் மற்றும் சிறப்புத் தூதுவர்கள் |
| | 29 | ஐக்கிய நாடுகள் முகவராண்மைகளின் பிரதிநிதிகள் மற்றும் ஏனைய பன்னாட்டு அமைப்புக்களின் தலைவர்கள் |

| | | |
|---|---|---|
| உ. | 30 | சனாதிபதியின் செயலாளர்/ சிரேஷ்ட மேலதிகச் செயலாளர்கள்/ மேலதிகச் செயலாளர்கள் |
| | 31 | பிரதம அமைச்சரின் செயலாளர்/ சிரேஷ்ட மேலதிகச் செயலாளர்கள்/ மேலதிகச் செயலாளர்கள் |
| | 32 | அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சர்களின், அமைச்சரவை அந்தஸ்த்தரற்ற அமைச்சர்களின், இராஜாங்க அமைச்சர்களின், பிரதி அமைச்சர்களின் செயலாளர்/ சிரேஷ்ட மேலதிகச் செயலாளர்கள்/ மேலதிகச் செயலாளர்கள் |
| | 33 | திறைசேரியின் பிரதிச் செயலாளர் |
| | 34 | அமைச்சுக்களின் செயலாளர்/ சிரேஷ்ட மேலதிகச் செயலாளர்கள்/ மேலதிகச் செயலாளர்கள்/ பிரதிச் செயலாளர்கள் |
| | 35 | நாணயச் சபை உறுப்பினர்கள் |
| | 36 | இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்/ துணை ஆளுநர்கள்/ உதவி ஆளுநர்கள் மற்றும் திணைக்களங்களின் தலைவர்கள் மற்றும் மேலதிகத் தலைவர்கள் |
| | 37 | சனாதிபதியின்/ பிரதம அமைச்சரின்/ அமைச்சர்களின்/ அமைச்சுக்களின் ஆலோசகர்கள் |
| | 38 | சனாதிபதி செயலகத்தின் அலுவலகப் பிரதானி |
| | 39 | கணக்காய்வாளர் தலைமை அதிபதி |
| | 40 | பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம் |
| | 41 | மாவட்ட செயலாளர்கள்/ அரசாங்க அதிபர்கள் மற்றும் செயலாளர்கள் |
| | 42 | அரசாங்க திணைக்களங்களின் தலைவர்கள் மற்றும் சிரேஷ்ட அலுவலர்கள் |
| | 43 | அரச தொழில்முயற்சிகளின் தலைவர்கள் மற்றும் சிரேஷ்ட அலுவலர்கள் |
| | 44 | அரச கூட்டுத்தாபனங்கள்/ நியதிச் சட்ட சபைகள்/ அதிகாரசபைகள்/ அரச கூட்டுத்தாபனங்களின் தலைவர்கள் மற்றும் சிரேஷ்ட அலுவலர்கள் |

| | | |
|---|---|---|
| ஊ. | 45 | பீல்ட் மார்ஷல்/ கப்பற்படைத் தளபதி/ வான்படைத் தளபதி |
| | 46 | கூட்டுப்படைத் தளபதி |
| | 47 | இலங்கை இராணுவ ஜெனரல்/ இலங்கைக் கடற்படைத் அட்மிரல்/ இலங்கை வான் படையின் பிரதம தளபதி |
| | 48 | இலங்கை இராணுவத்தின் லெவ்டினன்ட் கேணல் மற்றும் அதற்கு மேல் தரத்திலுள்ள அதிகாரிகள் |
| | 49 | இலங்கை கடற்படைக் கட்டளைத் தளபதி மற்றும் அதற்கு மேல் தரத்திலுள்ள அதிகாரிகள் |
| | 50 | இலங்கை வான்படைப் பிரிவுக் கட்டளைத் தளபதி மற்றும் அதற்கு மேல் தரத்திலுள்ள அதிகாரிகள் |
| | 51 | பொலிஸ் மா அதிபர் |
| | 52 | பொலிஸ் உதவிக் கண்காணிப்பாளர் தரத்திற்கு மேல் உள்ள பொலிஸ் அதிகாரிகள் |

| | | |
|---|---|---|
| எ. | 53 | பொதுச் சேவை ஆணைக்குழுவின் தலைவர்/உறுப்பினர்கள் மற்றும் சிரேஷ்ட அலுவலர்கள் |
| | 54 | தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர்/உறுப்பினர்கள் மற்றும் சிரேஷ்ட அலுவலர்கள் |
| | 55 | மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர்/உறுப்பினர்கள் மற்றும் சிரேஷ்ட அலுவலர்கள் |
| | 56 | இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்கள் புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவின் தலைவர்/உறுப்பினர்கள் மற்றும் சிரேஷ்ட அலுவலர்கள் |
| | 57 | நிதி ஆணைக்குழுவின் தலைவர்/உறுப்பினர்கள் மற்றும் சிரேஷ்ட அலுவலர்கள் |
| | 58 | தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர்/உறுப்பினர்கள் மற்றும் சிரேஷ்ட அலுவலர்கள் |

| | | |
|---|---|---|
| | 59 | அரசியல் அமைப்புச் சபை உறுப்பினர்கள் |
| | 60 | கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவின் தலைவர்/உறுப்பினர்கள் மற்றும் சிரேஷ்ட அலுவலர்கள் |
| | 61 | எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர்/உறுப்பினர்கள் மற்றும் சிரேஷ்ட அலுவலர்கள் |
| | 62 | தேசிய பெறுகை ஆணைக்குழுவின் தலைவர்/உறுப்பினர்கள் மற்றும் சிரேஷ்ட அலுவலர்கள் |
| | 63 | அமைச்சரவை நியமித்த குழுக்களின் உறுப்பினர்கள் |

| | | |
|---|---|---|
| ஏ. | 64 | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர்இ உறுப்பினர்கள் மற்றும் சிரேஷ்ட அலுவலர்கள் |
| | 65 | பல்கலைக்கழக சபைகளின் தலைவர், உறுப்பினர்கள் |
| | 66 | வேந்தர் |
| | 67 | உப வேந்தர் |
| | 68 | பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள் |

**வெளிநாட்டு அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டியவர்கள்**

| | | |
|---|---|---|
| ஒ. | 69 | பன்னாட்டு நிறுவனங்களில் முகாமைத்துவ பதவிகளில் (பணிப்பாளர்கள், சபைகளின் பிரதானிகள் அல்லது அவர்களுடைய துணைப் பிரதானிகள்) 5 ஆண்டுகளில் பதவி வகித்த அல்லது வகிக்கின்ற பன்னாட்டு நிறுவனங்களின் அலுவலர்கள் |
| | 70 | உயர் பதவியொன்றில் குறிப்பாக, பன்னாட்டு மற்றும் அரசாங்கங்களுக்கிடையிலான அமைப்புகளில் எவையேனும் முகாமைத்துவ தொழிற்பாடுகளில் செயலாற்றுகின்ற அல்லது செயலாற்றிய பன்னாட்டு நிறுவனங்களின் |
| | 71 | பன்னாட்டு பாராளுமன்றக் கூட்டமைப்புகளின் உறுப்பினர்கள் |
| | 72 | பன்னாட்டு நீதி மன்றங்களின் நீதிபதிகள் மற்றும் முகாமைத்துவ அலுவலர்கள் |

**பின்னிணைப்பு ஆ**

**அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆட்கள் நிதியியல் முறைமையினை தவறாகப் பயன்படுத்துவதைக் கண்டுபிடித்தல் - சந்தேகத்திற்கான சிவப்பு அறிக்கைகள்/ குறிகாட்டிகள்**

**அ. அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆட்கள் தமது அடையாளத்தை மறைப்பதற்கு முயற்சித்தல்:**

1. i. சொத்தாண்மையினை, ii. ஈடுபட்டுள்ள தொழிற்துறையினை அல்லது iii. நாடுகளை மறைப்பதற்கு நிறுவன வழிவகைகளைப் பயன்படுத்தல் (சட்ட ரீதியான நிறுவனங்கள் மற்றும் சட்ட ரீதியான ஒழுங்கேற்பாடுகள்).
2. செல்லுபடியான அலுவலுக்கான காரணமின்றி நிறுவன ரீதியான வழிவகைகளை பயன்படுத்தல்
3. சாதாரண தொழில் நடைமுறைகளுடன் இது பொருந்தாத போது அல்லது அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆளின் அடையாளத்தினை மறைப்பதற்கு பயன்படுத்தப்பட்டதாக இது காணப்படுகின்ற போது இடைத்தரகர்களைப் பயன்படுத்தல்.
4. சட்ட ரீதியான சொந்தக்காரராக குடும்ப உறுப்பினர்களை அல்லது நெருங்கிய சகாக்களை பயன்படுத்துதல்

**ஆ. அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆள் மற்றும் அவரது நடத்தை தொடர்பிலான சிவப்பு அறிக்கைகளும் குறிகாட்டிகளும்**

1. நிறுவனத்தின் பணம் தூயதாக்கலுக்கெதிரான கொள்கை அல்லது அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆள் கொள்கை பற்றி அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆள் விசாரணைகளை மேற்கொள்ளுதல்.
2. சொத்தின் மூலம் பற்றி அல்லது நிதியங்களின் மூலம் பற்றிய தகவல்களை வழங்குவதற்கு அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆள் பொதுவாக அசௌகரியத்தை உணர்வதாக காணப்படுதல்.
3. அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆளினால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் சொத்துப் பிரகடனங்கள் மற்றும் வெளியிடப்பட்ட உத்தியோகபூர்வ சம்பளங்கள் போன்ற ஏனைய (பகிரங்கமாகக் கிடைக்கப்பெறுகின்ற) தகவல்களுக்கு முரணாகக் காணப்படுதல்.
4. நிதியியல் நிறுவனத்தின்/ பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லாத் தொழில்களின் நாட்டில் வியாபாரம் செய்வதற்கான காரணத்தினை விளக்குவதற்கு அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆள் இயலாதிருத்தல் அல்லது தயக்கம் காட்டுதல்.
5. அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆள் செம்மையற்ற அல்லது பூரணமற்ற தகவல்களை வழங்குதல்.
6. வெளிநாட்டு அல்லது உயர் பெறுமதிவாய்ந்த சேவை நாடிகளுக்கு வழமையாக சேவையளிக்காத நிதியியல் நிறுவனமொன்றின்/ பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லாத் தொழிலொன்றின் சேவைகளைப் பயன்படுத்திக் கொள்வதற்கு அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆள் நாடுதல்.
7. அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆட்கள் தொடர்பினை கொண்டிருக்காதவையாகக் காணப்படுகின்ற நாடுகளிலிருந்து மற்றும் நாடுகளுக்கு நிதியங்கள் திரும்பத்திரும்ப நகர்தல்.
8. அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆட்கள் நாட்டுக்குள் நுழைவதற்கு நிராகரிக்கப்படிருத்தல் அல்லது நிராகரிக்கப்படுதல் (வீசா நிராகரித்தல்).
9. அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆள் வெளிநாடொன்றில் கணக்குகளை வைத்திருப்பதற்கு அல்லது சில ஆதனங்களை உரிமைகொள்வதற்கு அதன்/ சில பிரசைகளை தடுக்கின்ற அல்லது கட்டுப்படுத்துகின்ற நாடொன்றிலிருந்து வருபவராக இருத்தல்

**இ. அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆளின் பதவி அல்லது வியாபாரத்தில் உள்ள ஈடுபாடு**

1. அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆள் அரச சொத்துகள், நிதியங்கள், கொள்கைகள் மற்றும் தொழிற்பாடுகள் மீது கணிசமான அதிகாரத்தினை அல்லது அவற்றுக்கு அணுகுவழியினைக் கொண்டிருத்தல்
2. அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆள் உரிமங்களை மற்றும் சலுகைகளை வழங்குதல் உள்ளடங்கலாக ஒழுங்குமுறைப்படுத்தல் அனுமதிகள் மீது கட்டுப்பாட்டினைக் கொண்டிருத்தல்.

3. பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலைக் தடுப்பதற்கு அல்லது கண்டுபிடிப்பதற்கு தாபிக்கப்பட்ட பொறிமுறைகளைக் கட்டுப்படுத்துவதற்கு அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆள் முறைசார்ந்த அல்லது முறைசாரா இயலுமையைக் கொண்டிருத்தல்.
4. அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆள் அவரது பகிரங்க தொழிற்பாட்டினை அல்லது அவர் தொடர்புபடுகின்ற பகிரங்கத் தொழிற்பாட்டினை (முனைப்புடன்) புறக்கணித்தல்.
5. அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆள் அனைத்துப் பதவிகளையும் (பதவி வழியாகக் காணப்படுகின்றவை உள்ளடங்கலாக) வெளிப்படுத்தாதிருத்தல்.
6. அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆள் அரசாங்க அல்லது நிறுவனக் கணக்குகளைக் கட்டுப்படுத்துவதற்கு அல்லது அவற்றின் மீது செல்வாக்குச் செலுத்துவதற்கு அணுகுவழியினைக் கொண்டிருத்தல்.
7. அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆள் தனிப்பட்ட ரீதியாகவோ பதவிவழியாகவோ நிதியியல் நிறுவனங்களை/ பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லாத் தொழில்களை (பகுதியளவில்) சொந்தமாகக் கொண்டிருத்தல்.
8. அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆள் கொடுப்பனவொன்றில் எதிர்த்தரப்பினரொருவராக அல்லது தொடர்பாளரொருவராகக் காணப்படுகின்ற நிதியியல் நிறுவனங்கள்/ பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லாத் தொழில்கள் (தனிப்பட்ட ரீதியாகவோ அல்லது பதவிவழியாகவோ) (பகுதியளவில்) சொந்தமாகக் கொண்டிருத்தல் அல்லது கட்டுப்படுத்தல்.
9. அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆள், நிதியியல் நிறுவனமொன்றில்/ பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லாத் தொழிலொன்றின் சேவைநாடியொருவராக இருக்கின்ற சட்ட ரீதியான நிறுவனமொன்றின் பணிப்பாளரொருவராக அல்லது பயன்பெறு சொந்தக்காரராக இருத்தல்.

**ஈ. அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆள் ஈடுபடுகின்ற தொழிற்துறை/ துறையுடன் தொடர்புபடுகின்ற சிவப்பு அறிக்கைகள் மற்றும் குறிகாட்டிகள்**

1. ஆயுத வர்த்தகம் மற்றும் பாதுகாப்புத் தொழிற்துறை
2. வங்கித் தொழிற்துறை மற்றும் நிதி
3. அரசாங்கப் பெறுகையில் அதாவது அரசாங்கம் அல்லது அரச முகவராண்மைகளுக்கு விற்பனை செய்கின்ற தொழில் வியாபாரச் செயற்பாடு
4. நிர்மாணம் மற்றும் பாரிய உட்கட்டமைப்பு
5. அபிவிருத்தி மற்றும் வேறு வகையான உதவி
6. மனித ஆரோக்கிய நடவடிக்கைகள்
7. தனியார் மயமாக்கம்
8. பொதுப் பொருட்கள், வசதிகள் ஏற்பாடுகள்

2019 ஒத்தோபர் 01 தொகுதி 1.1

**சுற்றறிக்கை 02/09** 2019 திசெம்பர் 03

**தொடர்பு எண்: 37/02/008/0016/016**

சேரல் : உரிமம்பெற்ற வங்கிகள்/ உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்கள்

அன்புள்ள ஐயா/ அம்மணி

**இடைநிறுத்தப்பட்ட கணக்குகளிலிருந்து பிடித்துவைத்தல் வரிகளைக் கழித்தல்**

2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கலகள் அறிக்கையிடல் சட்டத்தின் 15(2)ஆம் பிரிவு, நிதியியல் நிறுவனங்கள் ஏதேனும் கொடுக்கல்வாங்கல் அல்லது கொடுக்கல்வாங்கல்களை ஏழு நாள் காலப்பகுதிக்குச் செயன்முறைப்படுத்த வேண்டாமென பணிப்பதற்கான அதிகாரத்தினை நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு வழங்குகிறது. மேலும், நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 15(3) ஆம் பிரிவின் நியதிகளின் படி கொழும்பு மேல்மாகாணத்திலுள்ள மேல் நீதிமன்றம் அத்தகைய இடைநிறுத்தலை மேலுமொரு காலப்பகுதிக்கு நீடிக்கலாம்.

2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 84 மற்றும் 86 ஆம் பிரிவுகளின் நியதிகளில், பிடித்துவைத்தல் வரியானது கணக்கு வைத்திருப்பவரின் கணக்கிற்கு வட்டிசெலுத்தப்படும் நேரத்தில் கழிக்கப்பட்டு ஒவ்வொரு கலண்டர் மாதமும் முடிவடைந்ததிலிருந்து 15 நாட்களுக்குள் உண்ணாட்டரசிறை ஆணையாளர் நாயகத்திற்குச் செலுத்தப்படல் வேண்டும். உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 179ஆம் பதிவு, குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் செலுத்தப்படவேண்டிய தொகையினை செலுத்தத்தவறும் சந்தர்ப்பத்தில் தண்டங்களை விதிப்பதற்கான அதிகாரத்தினை உண்ணாட்டரசிறை ஆணையாளர் நாயகத்திற்கு வழங்குகிறது.

அனைத்து நிதியியல் நிறுவனங்களும் இடைநிறுத்தப்பட்ட கணக்குகளுக்கான வட்டியை வழங்குவதற்கு முன்னதாக பிடித்துவைத்தல் வரியினைக் கழிக்க வேண்டும் எனவும் **தேறிய வட்டியை மட்டுமே** அத்தகைய கணக்குகளுக்கு வரவு வைக்க வேண்டுமெனவும் பணிக்கப்படுகின்றன. மேலும் நீங்கள் உண்ணாட்டரசிறைச் சட்டத்தில் (வட்டியிலிருந்து கழிக்கப்பட்ட பிடித்து வைத்தல் வரிகள்) குறித்துரைக்கப்பட்டவாறு, இடைநிறுத்தப்பட்ட கணக்குகளின் வட்டி தொடர்பான பிடித்துவைத்தல் வரிகளை உண்ணாட்டரசிறைத் திணைக்களத்திற்கு செலுத்துமாறு நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

இச்சுற்றறிக்கையானது உடனடியாக நடைமுறைக்குவரல் வேண்டும் என்பதுடன் வட்டிக்கொடுப்பனவு உடனடுத்துவரும் சுழற்சி வட்டத்திலிருந்து பிரயோகிக்கக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள

**பணிப்பாளர்**
**நிதியியல் உளவறிதல் பிரிவு**

பிரதி : அனைத்து உரிமம்பெற்ற வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகளின் இணங்குவிப்பு அலுவலர்களுக்கும்

2019 சனவரி 29

**தொடர்பு எண்: 08/25/004/0003/001**

**சுற்றறிக்கை எண்: எஸ்எஸ்எஸ்எஸ்/01/20 19**

சேரல்: லங்கா செட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்

**லங்காசெகுயரின் மத்திய வைப்பக முறைமையில் பதிவுசெய்துள்ள வாடிக்கையாளர்களுக்கான அதேநேர குறுஞ்செய்தி/ மின்னஞ்சல் அறிவித்தல்**

1. லங்காசெகுயர் முறைமையானது, மத்திய வைப்பக முறைமையில் பதிவுசெய்யப்பட்டுள்ள வாடிக்கையாளர்களுக்கு, வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்களின் மூலம் லங்காசெகுயர் முறைமையிலுள்ள ஒவ்வொரு பிணையங்கள் கணக்கிலும் மேற்கொள்ளப்படுகின்ற பத்திரங்களற்ற பிணையங்களின் ஒவ்வொரு பற்று மற்றும் வரவுகளுக்கான அறிவித்தல்களை அதேநேர அடிப்படையில் வழங்குகின்ற விதத்தில் தரமுயர்த்தப்பட்டிருக்கிறது. அறிவித்தலை வழங்குகின்ற முறையானது மின்னஞ்சலூடானதாக அல்லது குறுஞ்செய்தி சேவையாக அல்லது இரண்டுமாக இருக்கும்.

2. மேற்குறிப்பிட்ட வசதியை வழங்குவதற்கு இடமளிக்கும் விதத்தில் லங்காசெட்டில் முறைமை விதிகளின் தொகுதி 3இன் பிரிவு 2.2.1, **2019.02.15**ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் பின்வருமாறு திருத்தப்படுகிறது.

**லங்காசெட்டில் முறைமை விதிகளினது பதிப்பு 2.1இன் தொகுதி 3இன் பிரிவு 2.2.1**

**2.2 கட்டுக்காப்பு பொறுப்பாண்மைகள்**

வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்கள், வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்கள் என்ற ரீதியில் அவர்களது வியாபாரத்தினைக் கொண்டு நடத்துகையில் ஏற்புடைத்தான சட்டங்கள், மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்கள் லங்காசெகுயர் முறைமையிலுள்ள அவர்களின் வாடிக்கையாளர்களுக்கான கட்டுக்காப்பாளராகச் செயற்படுதல் வேண்டும். இக்கட்டுக்காப்பு வகிபாகம் பின்வரும் பொறுப்பாண்மைகளை உள்ளடக்குகிறது.

**2.2.1** கட்டாய அடிப்படையில், பிணையங்களின் சட்ட ரீதியான சொத்துரிமையினை வாடிக்கையாளர்கள் பெறும் போது லங்காசெகுயர் முறைமையிலுள்ள ஒவ்வொரு வாடிக்கையாளர்களினதும் பெயர், செல்லுபடியாகக்கூடிய அஞ்சல் முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் அல்லது கம்பனி பதிவு இலக்கம் அல்லது மத்திய வங்கியினால் ஒப்புதலளிக்கப்பட்ட ஏதேனும் அடையாள ஆவணங்களை சரியாகவும் துல்லியமாகவும் பதிவுசெய்தல் வேண்டும். செல்லுபடியாகக்கூடிய மின்னஞ்சல் முகவரியும் செல்லுபடியாகக்கூடிய செல்லிடத் தொலைபேசி இலக்கமும் (பன்னாட்டுத் தொலைபேசி இலக்க வடிவில், உ-ம்: 94nnnnnnnnn) 2.2.1.1 மற்றும் கீழே 2.2.1.2 இற்குட்பட்டு பதிவுசெய்யப்படுதல் வேண்டும்.

2.2.1.1 ஒவ்வொரு வாடிக்கையாளரிடமிருந்தும் அவர்கள் முன்னுரிமையளிக்கின்ற அதேநேர அறிவிக்கும் முறை எது என்பது பற்றி எழுத்து மூலமான உறுதிப்படுத்தலொன்றினைப் பெற்றுக்கொள்வது லங்காசெகுயரிலுள்ள அனைத்து வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்களுக்கும் கட்டாயமானதாகும். லங்கா செகுயர் முறைமையில் அதேநேர அறிவித்தல் முறையானது "மின்னஞ்சல்", "குறுஞ்செய்தி", "மின்னஞ்சல் மற்றும் குறுஞ்செய்தி", அல்லது "எதுவுமில்லை" எனப் பதிவு செய்யப்படல் வேண்டும். ("எதுவுமில்லை" என்பதன் பொருள் வாடிக்கையாளர் ஒன்றில் மின்னஞ்சல் மூலமான அல்லது குறுஞ்செய்தி மூலமான அறிவித்தல்களை பெறவிரும்பப்படவில்லை எனப் பொருள்படும். அதேநேர அறிவித்தல் முறை தொடர்பான மேற்குறிப்பிட்ட வாடிக்கையாளர் சம்மதம் எதிர்கால தொடர்புகளுக்காக பேணி வைக்கப்படல் வேண்டும்.

2.2.1.2 செல்லுபடியாகக்கூடிய மின்னஞ்சல் முகவரியினை தேர்வு செய்யப்பட்ட "மின்னஞ்சல்" தேர்வாகவும் செல்லுபடியாகக்கூடிய செல்லிடத் தொலைபேசி இலக்கத்தினை "குறுஞ்செய்திக்கான" அறிவித்தல் முறையாகப் பதிவுசெய்தல் வேண்டுமென்பதுடன் செல்லுபடியான மின்னஞ்சல் முகவரி மற்றும் செல்லுபடியாகும் செல்லிடத் தொலைபேசி இலக்கம் இரண்டும் தேர்வுக்குரிய "மின்னஞ்சல் மற்றும் குறுஞ்செய்திகளாகப் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

2.2.1.3 வாடிக்கையாளர்களுக்கு கூற்றுக்களை அனுப்புவதற்கு மத்திய வைப்பக முறைமையினால் அஞ்சல்/ மின்னஞ்சல் முகவரிகள் பயன்படுத்தப்படவுள்ளதுடன் மின்னஞ்சல் முகவரிகளும் செல்லிடத் தொலைபேசி இலக்கங்களும் லங்காசெகுயர் முறைமையின் ஒவ்வொரு பிணையங்கள் கணக்கினாலும் மேற்கொள்ளப்பட்ட பத்திரங்களற்ற பிணையங்களின் ஒவ்வொரு பற்று மற்றும் வரவின் மின்னஞ்சல்/ குறுஞ்செய்தியூடாக அதேநேர அறிவித்தலுக்குப் பயன்படும்.

3. இதற்கமைய, வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்கள் 2019.03.18 அளவில் லங்காசெகுயர் முறைமையில் ஏற்கனவேயிருக்கும் அனைத்து வாடிக்கையாளர்களினதும் விருப்பத்திற்குரிய அதேநேர அறிவித்தல் முறைகளைப் பதிவுசெய்து கொள்ளுமாறும் அனைத்துப் புதிய வாடிக்கையாளர்களுக்கும் இதே விதியினைப் பின்பற்றுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

4. லங்காசெகுயர் முறைமையிலிருந்து மேற்குறிப்பிட்ட அதேநேர அறிவித்தல்களை அறிவித்தல் செய்வது 2019.03.25 இலிருந்து தொடங்கும்.

எம்.இசட்.எம். ஆசிம்
**கண்காணிப்பாளர்**
**பொதுப்படுகடன் திணைக்களம்**

டி. குமாரதுங்க
**பணிப்பாளர்**
**கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்**

2019 யூலை 09

தொடர்பு: 08/21/005/012/005

## திறைசேரி முறிகளின் ஆரம்ப வழங்கல் மீதான பணிப்புரைகள்

1937ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்ட 2009 யூன் 24ஆம் திகதியிடப்பட்ட 2009ஆம் ஆண்டின் 01ஆம் இலக்கப் பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் (முதனிலை வணிகர்கள்) ஒழுங்குவிதிகளின் 11(1) இலக்க ஒழுங்குவிதியின் நியதிகளுக்கமைய விடுக்கப்பட்ட 2017 யூலை 24ஆம் திகதியிடப்பட்ட திறைசேரி முறிகளின் ஆரம்ப வழங்கல் மீதான பணிப்புரைகளுக்கான பின்வரும் திருத்தங்கள் 2019 யூலை 09ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வருதலாதல் வேண்டும்.

8.1 ஒவ்வொரு மாதாந்த வழங்கல்களிலும் இரண்டு அல்லது அதற்கும் கூடுதலான திறைசேரி முறிகள் முன்வைக்கப்படுகின்றன.

8.6 கட்டம் III: எஞ்சியுள்ள அளவு ஏதுமிருப்பின் (ஒவ்வொரு தொடரிலும் கட்டம் 1 மற்றும் கட்டம் II இன் கீழ் அறிவிக்கப்பட்ட தொகைக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்ட ஒன்றுசேர்ந்த தொகைக்குமிடையிலான வேறுபாடு) கட்டம் I மற்றும் கட்டம் II இல் ஒவ்வொரு அத்தகைய முதனிலை வணிகர்களின் வெற்றிகரமான பங்கேற்பினை அடிப்படையாகக் கொண்டு நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதத்தில் முதனிலை வணிகர்களிடையே கட்டாய அடிப்படையொன்றில் வழங்குதல். எனினும், கட்டம் I இல் முன்வைக்கப்பட்ட தொகையில் ஆகக் குறைந்தது 70 சதவீதத்தினை ஏற்றுக்கொண்டாலொழிய இக்கட்டம் நிறைவேற்றப்படமாட்டாது. இக்கட்டத்தின் கீழான வழங்கல் முதனிலை வணிகர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கும்.

9.7 ஒவ்வொரு காலாண்டிலும் முதனிலை வணிகரொருவருக்கான சராசரி வழங்கலில், வெற்றிகரமான வழங்கலில் குறைந்தபட்சம் 50 சதவீதத்தினையாவது பெற்றுக்கொள்ள வேண்டுமென ஒவ்வொரு முதனிலை வணிகரும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். குறிப்பிட்ட கலண்டர் ஆண்டொன்றின் ஒவ்வொரு காலாண்டிற்குள், குறித்துரைக்கப்பட்ட வணிகரல்லாத விலைக்குறிப்பீட்டாளருக்கு வழங்கப்பட்டவை நீங்கலாக, முதனிலை வணிகரொருவருக்கான சராசரி வழங்கல் பின்வருமாறு கணிக்கப்படுகிறது.

*முதனிலை வணிகரொருவருக்கான சராசரி வழங்கல்*

$$= \frac{\text{கட்டம் I இன் கீழான மொத்த வழங்கல் - கட்டம் I இன் கீழ் குறித்துரைக்கப்பட்ட வணிகரல்லாத விலைக்குறிப்பீட்டாளருக்குச் செய்யப்பட்ட வழங்கல்கள்}}{\text{முதனிலை வணிகர்களின் எண்ணிக்கை*}}$$

* தொடர்பான காலாண்டுப்பகுதியில் முதலாந்தர ஏலங்களில் விலைக்குறிப்பீடுகளைச் செய்யத் தகைமையுடையவர்களாக இருந்த முதனிலை வணிகர்களின் உயர்ந்தபட்ச எண்ணிக்கை

முதனிலை வணிகரொருவரின் வெற்றிகரமான வழங்கலைக் கணிக்கையில், அத்தகைய முதனிலை வணிகர்களினால் கட்டம் II இன் கீழ் செய்யப்பட்ட ஏதேனும் வழங்கல்கள், குறைந்தபட்ச வெற்றிபெற்ற வழங்கலின் 2 சதவீதத்தினை விஞ்சாத வரையறை மட்டும் அனுமதிக்கப்படுகிறது.

11.1 குறிப்பிட்ட திறைசேரி முறி தொடர்களில், வழங்கலில் கோரப்பட்ட முழுத்தொகையும் கட்டம் I மற்றும் கட்டம் II இன் கீழ் வழங்கல் செயன்முறையின் போது முழுமையாக வழங்கப்படாதிருக்குமாயின், கட்டம் II முடிவடைந்ததனை உடனடுத்து கட்டம் III ஏல நாளன்று ஏறத்தாழ 1430 மணியளவில் இலத்திரனியல் முறையில் கட்டம் I இல் ஏற்றுக்கொள்ளப்பட்ட குறைந்தபட்ச தொகையில் 70 சதவீதம் ஏற்றுக்கொள்ளப்படும் என்ற நிபந்தகைக்குட்பட்டு, நிறைவேற்றப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

கொழும்பு
திகதி: 2019 யூலை 09

முனைவர் எம்.இசட்.எம். ஆசிம்
**கண்காணிப்பாளர், பொதுப்படுகடன்**

2019 ஒத்தோபர் 01

தொடர்பு: 08/25/001/0005/001

சுற்றறிக்கை எண்: எஸ்எஸ்எஸ்எஸ்/02/2019

சேரல்: லங்கா செட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்

## அரச பிணையங்களின் இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவுப் பெறுமதி, விலை மற்றும் வட்டி வீதத்தின் உள்ளடக்கம்

1. அரச பிணையங்கள் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதில் காணப்படும் வெளிப்படைத்தன்மையினை அதிகரிக்கும் நோக்குடன், இலங்கை மத்திய வங்கி லங்காசெட்டில் முறைமை விதிகளின் தொகுதி 3இன் விதி 5.6 இன்படி அத்தகைய கொடுக்கல்வாங்கல்களின் முக்கிய பண்பினை அறிந்து கொள்வதற்குத் தீர்மானித்தது.

2. இதற்கமைய, அனைத்துப் பங்கேற்பாளர்களும் அரச பிணையங்கள் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளும் பொழுது கீழே காட்டப்பட்டவாறு MT549, MT541, MT542 மற்றும் MT543 பரஸ்பரபரிமாற்றல் செய்திப் படிவத்திலுள்ள தொடர்பான விடயங்களை நிரப்ப வேண்டுமென கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

   அ. இலவச வழங்கல்/ இலவச பெறுகைக்கான தீர்ப்பனவுப் பெறுமதி கொடுக்கல்வாங்கல்கள் விடயம்: தேர்விற்குரிய மீண்டும் குறிப்பிடப்படும் பிற்தொடர் E3 இன் கீழ் 19A SETT// MT540 மற்றும் MT 542 இலுள்ள தொகைகளின் தொகுதி. இத்தொகுதி பண்பு இரண்டு தசம இலக்கங்கள் வரை இருக்கும்.

:16R: AMT

:19A:: **SETT**//[N]3!a15d

:16S:AMT

மேற்குறிப்பிட்ட தீர்ப்பனவுப் பெறுமதியானது, MT541 மற்றும் MT543 செய்திப்படிவங்களிலுள்ளவாறு இவ்விடயங்களில் வழங்கல் எதிர்கொடுப்பனவு/ பெறுதல் எதிர் கொடுப்பனவு கொடுக்கல்வாங்கல்களை ஒத்த விதத்தில் பதிவுசெய்யப்படுகிறது.

ஆ. அனைத்து அரச பிணையங்கள் கொடுக்கல்வாங்கல்களுக்கான விலை மற்றும் வட்டி வீதம் விலைக்காக விடயம்: கீழே தரப்பட்டுள்ள படிவங்களிலுள்ள MT540, MT541, MT542 மற்றும் MT543 இலுள்ள தேர்விற்குரிய பின்தொடர் B1 நிதியியல் சாதன காரணத் தொகுதியின் கீழ் :90A::INDC/PRCT இலும் வட்டி வீதத்திற்காக விடயம் :90A::EXER/YIEL இலும் எடுத்துக்காட்டப்பட வேண்டும்.

:16R: FIA

:90A:: INDC//**PRCT**/15d

:90A:: EXER//**YIEL**/15d

:16S:FIA

3. உடனடிக் கொடுக்கல்வாங்கல்களைப் பொறுத்தவரையில், “வட்டி வீதம்” முதிர்ச்சிக்கான விளைவினைக் குறிக்கின்றதுடன் மீள்கொள்வனவு அல்லது நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களைப் பொறுத்தவரை “வட்டி வீதம்” ஒப்பந்தத்தின்படி குறிப்பிட்டதொரு காலப்பகுதிக்கான ஆண்டொன்றிற்கான ஏற்புடைத்தான வீதத்தினைக் குறிக்கிறது. ‘விலை’ என்பது அரச பிணையத்தின் வட்டி சேராத விலையினைக் குறிக்கும்.

4. மாதிரி MT542 செய்திப்படிவம் தொடர்பாகக் காட்டப்பட்டுள்ள தொகுதியுடன் இணைப்பு 01இல் தரப்பட்டுள்ளது.

5. முறைமையானது லங்காசெகுயரின் தொடர்பான அரச பிணையங்கள் கணக்கின் பற்று மற்று வரவிற்கான முகப்புப் பெறுமதியினை மாத்திரமே பயன்படுத்துவதனால் இலவச வழங்கல்/ இலவச பெறுகைச் செய்தி வகைகளின் தொடர்பான துறையில் எடுத்துக்காட்டப்பட்ட தீர்ப்பனவுப் பெறுமதி தீர்ப்பனவுச் செயன்முறையில் பரிசீலனையில் கொள்ளப்படமாட்டாது.

6. சுவிப்ற் முறைமையூடாக அனுப்பப்பட்ட அரச பிணையங்கள் கொடுக்கல்வாங்கல் செய்திகளுக்குப் புறம்பாக, லங்காசெட்டில் முறைமை விதிகளின் தொகுதி 3 இலுள்ள விதி 5.4 இன் கீழ் அறிவுறுத்தப்பட்டவாறு, **CSS** வர்த்தகங்களினூடாக அதாவது இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட வெப்பினை அடிப்படையாகக் கொண்ட பிரயோகத்தினூடாகச் சமர்ப்பிக்கப்பட்ட அரச பிணையங்கள் கொடுக்கல்வாங்கல்களுக்குள் தீர்ப்பனவுப் பெறுமதி, விலை மற்றும் வட்டி வீதங்கள் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

7. கட்டாய அடிப்படையில் லங்காசெகுயர் முறைமையில் அரச பிணையங்களின் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளும் போது மேலேயுள்ள துறையில் தேவைப்படுத்தப்பட்டவாறான தகவல்களை 2020.01.01 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் தொடர்பான செய்திப்படிவத்தில் பதிவுசெய்யப்படுதல் வேண்டும்.

எம்.இசட்.எம். ஆசிம்
**கண்காணிப்பாளர்**
**பொதுப்படுகடன்**

டி. குமாரதுங்க
**பணிப்பாளர்**
**கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்**

<u>மாதிரி **MT542** செய்தி அனுப்பும் படிவமுறை</u>

:16R:GENL

:20C::SEME//DVF010SetPrice

:23G:NEWM

:16S:GENL

:16R:TRADDET

:98A::SETT//20180222

:98A::TRAD//20180222

:35B:ISIN LKB01518H150

:16R:FIA

:90A::INDC//PRCT/98,6653

:90A::EXER//YIEL/9,9999

:16S:FIA

:22F::PRIR//0080

:16S:TRADDET

:16R:FIAC

:36B::SETT//FAMT/15000,

:97A::SAFE//OWN

:16S:FIAC
:16R:SETDET
:22F::SETR//TRAD
:16R:SETPRTY
:95P::REAG//CBCELKL0EPF
:16S:SETPRTY
:16R:SETPRTY
:95P::PSET//ZYACLKL0XXX
:16S:SETPRTY
:16R:AMT
:19A::SETT//LKR19999,99
:16S:AMT
:16S:SETDET

**கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமைகள் சுற்றறிக்கை இல. 01/2019** 2019 பெப்புருவரி 26

சேரல்: இலத்திரனியல் கொடுப்பனவு சாதனங்களை/ பொறிமுறைகளை வசதிப்படுத்துகின்ற அனைத்து நிதியியல் நிறுவனங்களுக்கும்

## இலத்திரனியல் கொடுப்பனவு சாதனங்கள்/ பொறிமுறைகள் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல்வாங்கல்களுக்கான அதேநேர அறிவித்தல்களை வழங்குதல்

அத்தகைய கொடுப்பனவு சாதனங்கள்/ பொறிமுறைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல்வாங்கல்களின் பாதுகாப்பினை அதிகரிக்கும் பொருட்டு இலத்திரனியல் கொடுப்பனவு சாதனங்கள்/ பொறிமுறைகள் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல்வாங்கல்களுக்கான அதேநேர அறிவித்தல்களை வழங்குதல் மீதான 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டத்தின் 44ஆம் பிரிவின் நியதிகளுக்கமைய இச்சுற்றறிக்கை வழங்கப்படுகிறது.

இலத்திரனியல் கொடுப்பனவு சாதனங்கள்/ பொறிமுறைகள் ஊடாக கொடுப்பனவுப் பணிகளை வழங்குகின்ற நிதியியல் நிறுவனங்கள், இலத்திரனியல் கொடுப்பனவு சாதனங்கள்/ பொறிமுறைகள் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற அனைத்துக் கொடுக்கல்வாங்கல்களுக்கும் அதேநேர அறிவித்தல்களைப் பெற்றுக்கொள்வதற்கு வாடிக்கையாளர் இணங்கியவாறு குறுந்தகவல் சேவை அல்லது ஏதேனும் வேறு பாதுகாப்பான நம்பகமான உடனடி அறிவித்தல் முறை போன்ற பொருத்தமான தொடர்பூட்டல் முறையொன்றினைப் பயன்படுத்தல் வேண்டும். அதேநேர அறிவித்தல்களை அனுப்புவதற்கு ஒவ்வொரு வாடிக்கையாளர்களிடமிருந்தும் எழுத்திலான ஒப்புதலினையும் அத்தகைய அறிவித்தல்களை வழங்கும் நோக்கத்திற்காக செல்லிடத் தொலைபேசி இலக்கமொன்றினையும் பெற்றுக்கொள்வதற்கு நிதியியல் நிறுவனங்கள் வேண்டப்படுகின்றன.

1. நிதியியல் நிறுவனங்கள், 2019 ஏப்பிறல் 02ஆம் திகதிக்குப் பின்னர் திறக்கப்பட்ட புதிய கணக்குகளில் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து செல்லிடத் தொலைபேசி அடிப்படையிலமைந்த கொடுக்கல்வாங்கல்களுக்கும் (செல்லிடத் தொலைபேசி செயலி, கியுஆர் குறியீடு, ஜஸ்ட்பே போன்ற) வெப்தளம் அடிப்படையிலமைந்த கொடுக்கல்வாங்கல்களுக்கும், கொடுப்பனவு அட்டையிலமைந்த கொடுக்கல்வாங்கல்களுக்கும் அதேநேர அறிவித்தல்களை இயலச்செய்தல் வேண்டும். வேறுவகையான கொடுக்கல்வாங்கல்களுக்காக நிதியியல் நிறுவனங்கள், வாடிக்கையாளரின் கோரிக்கையின் பேரில் அதேநேர அறிவித்தல்களை வழங்கலாம்.

2. இலத்திரனியல் கொடுப்பனவு சாதனங்களை/ பொறிமுறைகளை ஏற்கனவே பயன்படுத்துகின்ற தற்போதைய வாடிக்கையாளர்களுக்காக நிதியியல் நிறுவனங்கள், அதேநேர கொடுக்கல்வாங்கல் அறிவித்தல்களைப் பெற்றுக்கொள்வதன் நன்மைகள்/ அனுகூலங்கள் பற்றி விழிப்படையச் செய்யவேண்டும் என்பதுடன் சொல்லப்பட்ட வசதியினைப் பெற்றுக்கொள்வதற்கு அத்தகைய வாடிக்கையாளர்களை ஊக்குவித்தல் வேண்டும்.

3. நிதியியல் நிறுவனங்கள், ஏதேனும் அதிகாரமளிக்கப்படாத கொடுக்கல்வாங்கல்கள் பற்றி குறித்த கணக்கின் நிதி அசைவுகளை முடக்குவதற்கான கோரிக்கையொன்றுடன் முன்கூட்டியே தங்களிடம் அறிவிக்குமாறு வாடிக்கையாளர்களுக்கு ஆலோசனை வழங்குதல் வேண்டும் என்பதுடன் அறிவித்தல் கிடைக்கப்பெற்றதுடன் அத்தகைய கணக்குகளை உடனடியாக முடக்குவதற்கு நிதியியல் நிறுவனங்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. அதேநேர அறிவித்தல்களை வழங்குகின்ற போது, நிதியியல் நிறுவனங்கள்

   4.1 அதிகாரமளிக்கப்படாத்/ சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடுவதற்கு வாடிக்கையாளர்களுக்காக 24ஓ7 அடிப்படையில் உதவி அழைப்பு இணைப்பொன்றினையும் உதவி கருமபீட வசதியினையும் தாபித்தல் வேண்டும்

   4.2 எவரேனும் அதிகாரமளிக்கப்படாத ஆள் அத்தகைய தகவல்களை தவறாகப் பயன்படுத்துவதற்கு அல்லது அத்தகைய தகவல்களைப் பயன்படுத்தி மோசடியான கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதற்கான அணுகுவழியினை பெற்றுக்கொள்ள இயலாதிருப்பதனை உறுதிசெய்வதற்கான பொருத்தமான பாதுகாப்பு வழிமுறைகளைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்

   4.3 அதேநேர அறிவித்தல் வசதியினை வழங்குவதற்காக மூன்றாம் தரப்புக்களுடனான உடன்படிக்கைகளைக் கைச்சாத்திடுகின்ற போது வாடிக்கையாளர் தகவல்கள் பற்றிய பாதுகாப்பினை உறுதிசெய்தல் வேண்டும்

   4.4 வாடிக்கையாளரிடமிருந்து ஒப்புதலைப் பெற்றுக்கொள்ளுகின்ற நேரத்தில் அதேநேர அறிவித்தல் வசதியினைப் பெற்றுக்கொள்வதுடன் தொடர்புபடுகின்ற கட்டணங்களை/ அறவீடுகளை (ஏதுமிருப்பின்) வெளிப்படுத்தல் வேண்டும்

   4.5 அதேநேர அறிவித்தல்களைப் பெற்றுக்கொள்வதற்கு வழங்கப்பட்ட செல்லிடத் தொலைபேசி இலக்கங்களின் அல்லது எவையேனும் வேறு தகவல்களின் ஏதேனும் மாற்றம் பற்றி நிதியியல் நிறுவனத்திற்கு உடனடியாக அறிவிக்குமாறு வாடிக்கையாளர்களுக்கு ஆலோசனை

வழங்குவதுடன் அத்தகைய கோரிக்கைகள் கிடைக்கப்பெற்றதன் பின்னர் உடனடியாக செல்லிடத் தொலைபேசி இலக்கத்தின் அல்லது அத்தகைய வேறு தகவல்களின் புதிய உரிமையாளரினை இற்றைப்படுத்துவதற்கான பொறிமுறையொன்றினை உருவாக்குதல் வேண்டும் அத்துடன்

4.6 வாடிக்கையாளர் கொடுக்கல்வாங்கல் விபரங்கள் அதிகாரமளிக்கப்படாத தரப்பினர்களுக்கு வெளிப்படுத்தப்படும் இடர்நேர்வினைக் குறைக்கும்பொருட்டு அதேநேர அறிவித்தல்களை அனுப்புவதற்கு பயன்படுத்தப்படுகின்ற செல்லிடத் தொலைபேசி இலக்கங்களின் உரிமையாளரினை காலமுறையாக சரிபார்ப்பதற்கான பொறிமுறையொன்றினை உருவாக்குதல் வேண்டும்.

டி. குமாரதுங்க
**பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்**

**கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமை சுற்றறிக்கை இல. 02/2019** 2019 மாச்சு 11

சேரல்: அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளின், உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகளின் மற்றும் செல்லிடத் தொலைபேசியினை அடிப்படையாகக் கொண்ட இ-பணம் முறைமைகளைத் தொழிற்படுத்துகின்ற உரிமம்பெற்ற தொழிற்படுத்துனரின் முதன்மை நிறைவேற்று அலுவலர்கள்

**விடயம்: உள்நாட்டு நாணய கொடுப்பனவுகளுக்காக தேசிய விரைவு பதிலிறுத்தல் குறியீட்டு நியமமொன்றினை நிறுவுதல்**

இச்சுற்றறிக்கையானது உள்நாட்டு நாணயக் கொடுப்பனவுகளுக்காக தேசிய விரைவு பதிலிறுத்தல் குறியீட்டு நியமமொன்றை நிறுவுவதற்கான சட்டத்தின் 4ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டத்தின் (சட்டம்) 44ஆம் பிரிவின் நியதிகளுக்கமைய வெளியிடப்பட்டது. இலங்கை மத்திய வங்கியானது லங்காகியுஆர் (LANKAQR) விபரக்குறிப்புகள் என்ற தலைப்பில் (இணைப்பு I) தேசிய கியுஆர் குறியீட்டு நியமமொன்றினை இத்தால் வழங்குகின்றது.

இச்சுற்றறிக்கையானது, உள்நாட்டு நாணயக் கொடுப்பனவுகளுக்காக தேசிய விரைவு பதிலிறுத்தல் குறியீட்டு நியமமொன்றை நிறுவுதல் மீதான 2018ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுச் சுற்றறிக்கையினை பதிலீடு செய்தல் வேண்டும் என்பதுடன் 2019 மாச்சு 11ஆம் திகதியன்று நடைமுறைக்குவருதலும் வேண்டும். அத்துடன் கியுஆர் குறியீட்டின் அடிப்படையில் கொடுப்பனவுத் தீர்வுகளை வழங்குகின்ற அனைத்து நிதியியல் நிறுவனங்கள் (உரிமம்பெற்ற வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள்), இ-பண முறைமைகளை அடிப்படையாகக் கொண்ட உரிமம்பெற்ற செல்லிடத் தொலைபேசி தொழிற்படுத்துநர்களும் இச்சுற்றறிக்கையின் இரண்டு (2) மாதகாலத்தினுள் இதனுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

**1. வரைவிலக்கணங்கள்**

அனைத்து கருத்துக்கள் மற்றும் நோக்கங்களுக்காக லங்காகியுஆர் குறியீட்டினால் முன்னெடுக்கப்பட்ட கொடுக்கல்வாங்கலொன்றிற்கான தரப்பினர்களாக பின்வருவன வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ளன.

1.1 வழங்குபவர் - கியுஆர் குறியீட்டினை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவுகளைக் மேற்கொள்ளுவதற்கு பயன்படுத்தக்கூடிய நடைமுறைக் கணக்குகள், சேமிப்புக் கணக்குகள், கடன் அட்டை கணக்குகள், செல்லிடத் தொலைபேசியை அடிப்படையாகக் கொண்ட இ-பண முறைமைகள் என்பவற்றிலிருந்து கொடுப்பனவுகளை வசதிப்படுத்துகின்ற நிறுவனங்கள்.

1.2 வணிகர் கையேற்பாளர் - வணிகர்களை சேர்த்துக்கொள்வதற்கு, வணிகர் அடையாளங்களை குறித்தொதுக்குவதற்கு, வணிகர் பதிவுகளை/ கணக்குகளைப் பேணுவதற்கு மற்றும் வணிகர்களுக்கு தீர்ப்பனவுகளை மேற்கொள்ளுவதற்கு பொறுப்பான நிதியியல் நிறுவனங்கள் அல்லது செல்லிடத் தொலைபேசி அடிப்படையாகக் கொண்ட இ-பண தொழிற்படுத்துநர்.* வணிகர் முன்வைத்த லங்காகியுஆர் குறியீட்டின் உருவாக்கத்தினையும் கையேற்பாளர் வசதிப்படுத்துகின்றார்.

1.3 வலையமைப்பு வசதிப்படுத்துநர் - "வழங்குபவர் மற்றும் கையேற்பாளரும்" வேறுபட்டவர்களாக இருக்கின்றபோது (வணிகர் கையேற்பவர் மற்றும் கொடுக்கல்வாங்கல் கையேற்பவர்) வலையமைப்பு வசதிப்படுத்துநர், கொடுக்கல்வாங்கலில் ஈடுபட்டுள்ள தொடர்புடைய நிதி நிறுவனங்களுக்கிடையில் கொடுக்கல்வாங்கல்களை வழிப்படுத்துவதற்கு பொறுப்புடையதாக இருக்கும். நடைமுறைக் கணக்குகள், சேமிப்புக் கணக்குகள், கடன் அட்டை கணக்குகள், செல்லிடத் தொலைபேசியை அடிப்படையாகக் கொண்ட இ-பண கணக்குகள் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற லங்காகியுஆர் குறியீட்டினைப் பயன்படுத்தி பெற்றுக்கொள்ளப்படுகின்ற அனைத்து கொடுப்பனவுகளினதும் செயன்முறைப்படுத்தலும் தீர்ப்பனவு செய்தலும் லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட் வலையமைப்பு ஊடாக வழிப்படுத்தப்படும். பன்னாட்டு கொடுப்பனவு வலையமைப்புக்கள் ஊடாக ஏற்படுத்தப்பட்ட லங்காகியுஆர் அடிப்படையில் அமைந்த கொடுப்பனவுகள் ஏற்கனவேயுள்ள பொறிமுறைகள் ஊடாக செயன்முறைப்படுத்தப்பட்டு தீர்ப்பனவு செய்யப்படும் என்பது கருத்திற்கொள்ளப்பட வேண்டும்.

1.4 செல்லிடத் தொலைபேசி செயலி வழங்குநர் - இது லங்காகியுஆர் குறியீட்டினைப் பயன்படுத்தி கொடுக்கல்வாங்கல்களை வசதிப்படுத்துவதற்காக செல்லிட தொலைபேசியை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவு தீர்வு வழங்குகின்ற தரப்பினர் ஆகும். இது, நிதியியல் நிறுவனமொன்றின் அல்லது கையேற்பாளர் நிறுவனமொன்றின் மூன்றாம் தரப்பு செயலி வழங்குனொருவராக இருக்கலாம்.

1.5 கொடுக்கல்வாங்கல் கையேற்பாளர் - கொடுக்கல்வாங்கல் கையேற்பாளர் என்பது லங்காகியுஆர் கொடுக்கல்வாங்கல்களைச் செயன்முறைப்படுத்துவதற்கு செல்லிடத் தொலைபேசி செயலி வழங்குநருக்காக அல்லது செல்லிடத் தொலைபேசி அடிப்படையில் அமைந்த இ-பண தொழிற்படுத்துநருக்கு கையேற்கின்ற வசதிகளை வழங்குகின்ற நிதியியல் நிறுவனம் ஆகும். இத்தரப்பினர் தொடர்புடைய கொடுப்பனவு வலையமைப்பினூடாக நிதியியல் கொடுக்கல்வாங்கல்களை வசதிப்படுத்துகின்றது.

**2. கட்டணங்களும் அறவீடுகளும்**

2.1 லங்காகியுஆர் குறியீடு மூலம் முன்னெடுக்கப்படுகின்ற கொடுக்கல்வாங்கல்களுக்காக வாடிக்கையாளர் மீது கட்டணமெதுவும் அறவிடப்படலாகாது.

2.2 வணிகர் கழிவு வீதமொன்றின் வடிவில் வணிகர்கள் மீது கட்டணங்கள் அறவிடப்படலாம்.

2.3 இறுதி வாடிக்கையாளரிடமிருந்து வணிகர் கழிவு வீதத்தின் முழுமையான அல்லது பகுதியான செலவினை வணிகர்கள் அறவிடுவதில்லை என்பதனை வணிகர் கையேற்பாளர் உறுதி செய்யவேண்டும் என கண்டிப்பான ஆலோசனை வழங்கப்படுகின்றது.

* பொதுவான இலத்திரனியல் நிதிமாற்றல் ஆழியில் இணைக்கப்படாத நிதியியல் நிறுவனங்கள் அல்லது செல்லிடத் தொலைபேசி இ-பண. தொழிற்படுத்துனர் லங்கா கிளியரினால் தொழிற்படுத்தப்படும் பொதுவான இலத்திரனியல் நிதிமாற்றல் ஆழியுடன் இணைக்கப்பட்டுள்ள உரிமம் பெற்ற நிதியியல் நிறுவனங்களூடாக தமது லங்கா கியுஆர் கொடுக்கல்வாங்கல்களின் தீரப்பனவைப் பூர்த்தி செய்யத் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

2.4 வணிகர் கையேற்பாளர்கள், நாட்டில் லங்காகியுஆர் குறியீட்டு விரைவாகவும் பரந்தளவிலும் பின்பற்றப்படுவதனை ஊக்குவிக்கும் பொருட்டு சாத்தியமானளவு மிகக் குறைந்த வணிகர் கழிவு வீதங்கள் நிலவுகின்றதனை உறுதிசெய்தல் வேண்டும்.

2.5 ஆரம்பத்தில், இலங்கை மத்திய வங்கியானது வணிகர் கழிவு வீதத்தினை நிர்ணயிப்பதற்கான சந்தை சக்திகளை அனுமதிக்கலாம் இது வணிகர் கையேற்பவர்கள் மத்தியில் ஆரோக்கியமான போட்டியொன்றினைத் தோற்றுவிக்கும், அத்துடன் தேவைப்படுமெனில், வணிகர் கழிவு வீதத்தினை ஒழுங்குபடுத்தி நிலைப்படுத்தும் பொருட்டு இலங்கை மத்திய வங்கி தலையீடு செய்யலாம்.

2.6 கீழேயுள்ள அட்டவணை 1 ஆர்வலர்களான - வணிகர் கையேற்பாளர்கள், கொடுக்கல்வாங்கல் கையேற்பாளர்கள், வழங்குநர்கள் மற்றும் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட் ஆகியோரிடையே 1 சதவீத வணிகக் கழிவு வீதத்தின் பகிர்ந்தளிப்பதற்கானதொரு உதாரணமாகும். வணிக கழிவு வீத பெறுமதி வேறுபடக்கூடியதாயினும் கீழே இணங்காணப்பட்டுள்ள ஒவ்வொரு ஆர்வலர்களுக்குமான ஒதுக்கீடானது வணிகர் கையேற்பாளர் விதிவிலக்குடன் மாற்றம் செய்யப்படாதிருத்தல் வேண்டும். வழங்குநர் கட்டணமும் கொடுக்கல்வாங்கல் கையேற்பாளர் கட்டணமும் இச்சுற்றறிக்கையின் அட்டவணை 1 இல் ஏற்பாடுசெய்யப்பட்ட ஒதுக்கீடுகளுக்கமைவாக லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட் மூலம் பகிர்ந்தளிக்கப்படுதல் வேண்டும். வணிகர் கையேற்பாளர் மூலமான லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட் கட்டணக் கொடுப்பனவு ஏற்கனவேயுள்ள லங்கா பே - பொது இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி மாதாந்த விலைப்பட்டியலுக்கு சேர்க்கப்படும்.

2.7 கொடுக்கல்வாங்கல்களின் திரும்பலொன்று நிகழும் சந்தர்ப்பத்தில், வலையமைப்புக் கட்டணம் (மீளளிக்கமுடியாத லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட் கட்டணம்) வணிக கையேற்பாளரினால் பொறுப்பேற்கப்பட வேண்டும்.

**அட்டவணை 1**: அனைத்து ஆர்வலர்களுக்குமிடையிலான ஒரு சதவீத வணிகர் கழிவு வீதமொன்றின் பகிர்ந்தளிப்பு பற்றிய உதாரணம்**

| கொடுக்கல்வாங்கல் தொகை ஓ ரூ. | லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட் கட்டணம் ரூ. | வழங்குபவர் கட்டணம் | கொடுக்கல்வாங்கல் கையேற்பவர் கட்டணம் | வணிகர் கையேற்பவர் கட்டணம் |
|---|---|---|---|---|
| 10<=x<=100 | 0.01 | 0.25% | 0.35மூ (செல்லிட தொலைபேசி செயலி வழங்குநருடன் பகிர்ந்துகொள்வதற்கு) | 0.40% (சந்தை சக்திகளினால் நிர்ணயிக்கப்பட்டது) லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட் கட்டணம் |
| 100<x<=1000 | 0.10 | | | |
| 1000<x<=5000 | 1.00 | | | |
| 5000<x | 3.00 | | | |

** அட்டவணையில் தரப்பட்ட சதவீதங்கள் மொத்த கொடுக்கல்வாங்கல் தொகையிலிருந்து (ஓ) கணிக்கப்பட்டவை

**3. கொடுக்கல்வாங்கல் வரையறைகள்**

3.1 லங்காகியுஆர் குறியீட்டு கொடுக்கல்வாங்கல் ஒன்றிற்கான குறைந்தபட்ச கொடுக்கல்வாங்கல் வறையரை ரூ.10 ஆகயிருத்தல் வேண்டும்.

3.2 லங்காகியுஆர் குறியீட்டு கொடுக்கல்வாங்கல் ஒன்றிற்கான உயர்ந்தபட்ச கொடுக்கல்வாங்கல் வறையரை தனிப்பட்ட இடர்நேர்வினை தாங்கிக்கொள்ளக்கூடிய தன்மையின் அடிப்படையில் கையேற்பவரினால் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

**4. கொடுக்கல்வாங்கல் அறிவித்தல்கள்**

4.1 வழங்குபவர்கள் கொடுக்கல்வாங்கல் நிலைபற்றி அதேநேரத்தில் குறுந்தகவல்களூடாக வாடிக்கையாளர்களுக்குத் தெரியப்படுத்தல் வேண்டும்.

4.2 வணிகர் கையேற்பாளர்கள் கொடுக்கல்வாங்கல் நிலைபற்றி வணிகர்களுடன் இணங்கிய பொருத்தமான முறைமையொன்றினூடாக வணிகர்களுக்கு அதேநேரத்தில் தெரியப்படுத்தல் வேண்டும்.

**5. வலையமைப்பு வசதிப்படுத்துநர்**

5.1 லங்காகியுஆர் குறியீடு அடிப்படையிலான கொடுப்பனவு செயன்முறைக்கான வசதிப்படுத்துகின்ற பிரதான நிறுவனமொன்றாக லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட் நியமிக்கப்பட்டுள்ளதுடன் இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் பணிப்பாளரினால் ஒப்புதலளிக்கப்பட்டவாறான தொடர்புடைய தொழிற்படுத்தல் வழிகாட்டல்களையும் வர்த்தக நாமமிடல் வழிகாட்டல்களையும் வழங்குதல் வேண்டும். லங்காகியுஆர் குறியீடு வழங்குநரினூடாக மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்ற அனைத்துப் பங்கேற்பாளர்களும் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டினால் வழங்கப்படுகின்ற இவ்வழிகாட்டல்களைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

டி. குமாரதுங்க
**பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்**

2019 ஏப்பிறல் 04

**தொடர்பு எண்: 34/07/029/0001/002**

**கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமை சுற்றறிக்கை இல. 03/2019**

சேரல்: லங்காசெட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்

2019 ஏப்பிறல் 12ஆம் நாளன்று லங்காசெட்டில் முறைமையின் அலுவலக நேரத்தினைக் கட்டுப்படுத்தல்

இலங்கை மத்திய வங்கியானது, சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு தினத்திற்கு முந்திய தினம் 2019 ஏப்பிறல் 13ஆம் நாள் சனிக்கிழமை வருவதனால் அதற்குப் பதிலாக அரைநாள் விடுமுறை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதனால் 2018 ஏப்பிறல் 12ஆம் நாளன்று லங்காசெட்டில் முறைமையின் அலுவல் மணித்தியாலங்களை 0800 மணி தொடக்கம் 1500 மணிவரை மட்டுப்படுத்துவதற்கு தீர்மானித்துள்ளது. அதற்கமைய, 2019 ஏப்பிறல் 12ஆம் நாளிற்கான லங்காசெட்டில் முறைமைகள் தொழிற்பாட்டு அட்டவணையில் நண்பகல் 1200 பின்னரான நிகழ்வுகள் பின்வருமாறு திருத்தப்படும்.

| நிகழ்வு | திருத்தப்பட்ட நேரம் |
|---|---|
| திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் - மீள்கொள்வனவு/ நேர்மாற்று மீள்கொள்வனவு (ஏல) தீர்ப்பனவு | 1245 மணி |
| பல்புடை தேறிய தீர்ப்பனவுகள் - இலங்கை உள்ளகக் கொடுப்பனவு முறைமை (அமர்வு 2)/ பொதுவான தன்னியக்க கூற்றுப்பொறி (அமர்வு 3) | 1300 மணி |
| பல்புடை தேறிய தீர்ப்பனவுகள் - பொது இலத்தரனியல் நிதிய மாற்றல் ஆளி (அமர்வு 3) | 1315 மணி |
| பல்புடைத் தேறிய தீர்ப்பனவுகள் - சீராக்க தீர்ப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் கொடுத்துத் தீர்த்தல் | 1400 மணி |
| மூன்றாந் தரப்பு கொடுக்கல்வாங்கல்களுக்கான வெட்டுநேரம | 1415 மணி |
| பொதுவான தன்னியக்க கூற்று ஆளி (அமர்வு 4) | 2019.04.16 அன்று 0845 மணிக்கு தீர்ப்பனவு செய்யப்படும் |
| பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி (அமர்வு 4) | 2019.04.16 அன்று 0900 மணிக்கு தீர்ப்பனவு செய்யப்படும் |
| பல்புடை தேறிய தீர்ப்பனவுகள் - இலங்கை உள்ளகக் கொடுப்பனவு முறைமை (அமர்வு 3) | கிடைக்கவில்லை |
| துணைநில் வைப்பு வசதித் தீர்ப்பனவு | 1430 மணி |
| ஒரு நாளுக்குள்ளேயான நேர்மாற்று மற்றும் துணைநில் கடன்வழங்கல் தீர்ப்பனவுகளி | 1445 மண |
| அலுவல்களை மூடிவிடுதல் | 1500 மணி |
| கணனி முறைமையினை மூடிவிடுதல் | 1530 மணி |

டி.குமாரதுங்க
**பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்**

2019 ஏப்பிறல் 24

**தொடர்பு எண்: 34/07/029/0001/002**

**கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமை சுற்றறிக்கை இல. 04/2019**

சேரல்: லங்கா செட்டில் முறைமையின் அனைத்து பங்கேற்பாளர்களுக்கும்

**லங்கா செட்டில் முறைமை 2019 ஏப்பிறல் 24, 25, மற்றும் 26ஆம் நாட்களில் அதன் அனர்த்த மீட்பு அமைவிடத்திலிருந்து நேரடித் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும்**

இலங்கை மத்திய வங்கி, தடங்கலற்ற வியாபார ஒழுங்குகளைப் பரீட்சிக்கின்ற நோக்கத்திற்காக லங்கா செட்டில் முறைமை (ஆர்ரீஜிஎஸ் முறைமை மற்றும் லங்கா செகுயர் முறைமை) மற்றும் அதனுடன் தொடர்பான ஏனைய முறைமைகளின் தொழிற்பாடுகளை 2019 ஏப்பிறல் 24, 25 மற்றும் 26ஆம் நாட்களன்று (புதன்கிழமை, வியாழக்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமை) அதன் அனர்த்த மீட்பு அமைவிடத்திலிருந்து மேற்கொள்ளும் என்பதனை அறிவித்துக் கொள்கிறது.

இலங்கை மத்திய வங்கியின் வலையமைப்புடன் இணைக்கப்பட்டுள்ள உங்கள் நிறுவனத்திலுள்ள கணனிகள் இலங்கை மத்திய வங்கி அனர்த்த மீட்பு அமைவிடத்தினை அணுகத்தக்க விதத்தில் ஏற்கனவே ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டுள்ளன. எனினும், ஆயத்த நிலையினை உறுதிப்படுத்துவதற்காக இலங்கை மத்திய வங்கியின் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தினைத் தொடர்பு கொண்டு தொடர்புகையினைப் பரீட்சித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். இலங்கை மத்திய வங்கியின் தகவல் தொழில்நுட்ப அலுவலர்களைத் தொடர்பு கொள்வதற்கான விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

- திரு. வி. கமல்நாத் 0112477126 (kamalnath@cbsl.lk)
- திருமதி. பாக்கியா மல்லாவ 0112477016 (bhagyam@cbsl.lk)

டி. குமாரதுங்க
**பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்**

பிரதி: பணிப்பாளர்/ தகவல் தொழில்நுட்பவியல் - இலங்கை மத்திய வங்கி
முதன்மை நிறைவேற்று அலுவலர் - லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்
செயலாளர் நாயகம் - இலங்கை வங்கியாளர்கள் சங்கம்
தலைவர் - முதனிலை வணிகர்கள் சங்கம்
முதன்மை நிறைவேற்று அலுவலர் - லங்கா பினான்ஸியல் சேர்விஸஸ் பியூரோ லிமிடெட்

2019 யூன் 14

**தொடர்பு எண்: 34/07/029/0001/002**

**கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமை சுற்றறிக்கை இல. 05/2019**

சேரல்: லங்காசெட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்

**லங்காசெட்டில் முறைமையின் நாளாந்த தொழிற்பாட்டு அட்டவணைக்கான திருத்தம்**

1. 2019 யூன் 24ஆம் திகதியிலிருந்து லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட்டின் லங்காபே பொதுவான விற்பனை மைய ஆளி நேரலையாகத் தொழிற்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. பொதுவான விற்பனை மையத்தின் நிதித் தீர்ப்பனவு நான்கு (4) தீர்ப்பனவுச் சுற்றுக்களில் நடைமுறைப்படுத்தப்படும் என்பதுடன் ஒவ்வொரு தீர்ப்பனவு சுற்றுக்குமான அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் தீர்ப்பனவு நேரங்கள் பின்வருமாறு இருக்கும்.

| சுற்று | லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட் தீர்ப்பனவுச் சுற்று | அதேநேர மொத்தத் தீர்ப்பனவு நேரம் |
|---|---|---|
| 1 | 14:00:01 மணி - 07:00:00 மணி (அடுத்தநாள்) | 0900 மணி |
| 2 | 07:00:01 மணி - 10:00:00 மணி | 1115 மணி |
| 3 | 10:00:01 மணி - 12:00:00 மணி | 1315 மணி |
| 4 | 12:00:01 மணி - 14:00:00 மணி | 1515 மணி |

2. அதற்கமைய, நாளாந்தத் தொழிற்பாட்டு அட்டவணை மீதான லங்காசெட்டில் முறைமை 2013 ஓகத்து - விதிகள் பதிப்பு 2.1இன் தொகுதி 4இன் வாசகம் 1.2 இலுள்ள அட்டவணையானது **2019 யூன் 24ஆம் நாளிலிருந்து பின்வருமாறு திருத்தப்படும் என்பது இத்தால் உங்களுக்கு அறிவிக்கப்படுகிறது.**

| நேரம் | நிகழ்வு | நடவடிக்கைகள்/ கொடுக்கல்வாங்கல்கள் |
|---|---|---|
| 0630 மணி | முறைமை ஆரம்பித்தல் | அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை/ பிணையங்கள் தீர்ப்பனவு முறைமை பிரயோகங்களை தொடங்குதல் |
| 0730 மணி தொடக்கம் 0800 மணி வரை | நாளாந்தச் செயன்முறைப்படுத்தல் ஆரம்பித்தல் | பிணையங்களின் அலுவல்சார் விலைகளை இற்றைப்படுத்தல், நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதிகளுக்கான பிணையங்களை குறிப்பிட்டு ஒதுக்குதல் |
| 0800 மணி | அலுவல்களுக்காக லங்காசெட்டில் முறைமை திறக்கப்படுகிறது | கொடுக்கல்வாங்கல்களை செயற்படுத்துவதற்கு முறைமை திறக்கப்படுகிறது. |
| 0800 மணி | நாளுக்குள்ளான திரவ வசதி/ தன்னியக்கமான நேர்மாற்று மீள்கொள்வனவு மற்றும் துணைநில் வைப்புவசதி | நாளுக்குள்ளான திரவத் தன்மை வசதியை வழங்குதல் மற்றும் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மற்றும் துணைநில் வைப்பு வசதி என்பவற்றின் மீள்கொள்வனவுகளின் இரண்டாம் பிரிவினைத் தீர்த்தல் |
| 0815 மணி | முதிர்ச்சிகள்/ வட்டிக்கொடுப்பனவுகள், நாற்கோவை மற்றும் இலங்கை மத்திய வங்கி பிணையங்களின் முதிர்ச்சிகள் ஆரம்பமாகின்றன | பிணையங்களின் முதிர்ச்சிப் பெறுகைகள்/ நறுக்கு கொடுப்பனவுகளைத் தீர்ப்பனவு செய்தல், லங்காசெட்டில் கட்டணங்கள்/தண்டப்பணங்களை விதித்தல் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் பிணையங்களின் முதிர்ச்சிகள் |
| 0830 மணி | லங்கா கிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை சுற்று 1/ காசோலை பிம்பப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக் குறைப்பு முறைமையின் பிரதான தீர்ப்பனவு. |
| 0830 மணி | இலங்கை மத்திய வங்கி பிணையங்களின் உடனடி விற்பனை/ கொள்வனவு/ நீண்டகால மீள்கொள்வனவு ஏலம்/ நீண்டகால வழங்கல் | திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் உடனடி விற்பனைகள், கொள்வனவுகள், நீண்டகால இலங்கை மத்திய வங்கி பிணையங்கள் ஏலம் மற்றும் நீண்டகால மீள்கொள்வனவு ஏலத்தின் முதலாம் பிரிவு |
| 0845 மணி | லங்கா கிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | பொதுவான தன்னியக்க கூற்றுப் பொறி ஆளி சுற்று 1 |
| 0900 மணி | லங்கா கிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி சுற்று 1 |
| 0900 மணி | லங்கா கிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | பொதுவான விற்பனை மைய ஆளி சுற்று 1 |
| 1100 மணி | நேர்மாற்று மீள்கொள்வனவுகளை மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி திருப்புதல் | திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி என்பனவற்றின் கீழ் இரண்டாவது பிரிவின் தீர்ப்பனவு |
| 1100 மணி | லங்கா கிளியரிலிருந்தான பல்புடைத் தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | பொதுவான தன்னியக்க கூற்றுப்பொறி ஆளி சுற்று 2 |
| 1115 மணி | லங்காகிளியரிலிருந்தான பல்புடைத் தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி சுற்று 2 |

| | | |
|---|---|---|
| 1115 மணி | லங்காகிளியரிலிருந்தான பல்புடைத் தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | பொதுவான விற்பனை மைய ஆளி சுற்று 2 |
| 1145 மணி | நீண்டகால நேர்மாற்று மீள்கொள்வனவு (ஏலம்) | திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் நீண்டகால நேர்மாற்று மீள்கொள்வனவுகளின் முதலாவது பிரிவின் தீர்ப்பனவு |
| 1300 மணி | லங்கா கிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைச் சுற்று 2 |
| 1300 மணி | லங்கா கிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | பொது தன்னியக்க கூற்றுப்பொறி ஆளி சுற்று 3 |
| 1300 மணி | முதனிலை ஏலத் தீர்ப்பனவு/ குறுகிய கால இலங்கை மத்திய வங்கியின் பிணையங்கள் ஏலங்களை மூடுதல் | முதலாந்தர ஏலங்களின் கீழான பிணையங்களின் தீர்ப்பனவு. குறுங்கால இலங்கை மத்திய வங்கி பிணையங்கள் ஏலத் தீர்ப்பனவு |
| 1315 மணி | லங்கா கிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி சுற்று 3 |
| 1315 மணி | லங்கா கிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | பொதுவான விற்பனை மைய ஆளி சுற்று 3 |
| 1315 மணி | குறுங்கால மீள்கொள்வனவு அல்லது நேர்மாற்று மீள்கொள்வனவு (ஏலம்) | திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் குறுங்கால மீள்கொள்வனவு அல்லது நேர்மாற்று மீள்கொள்வனவுகளினுடைய முதலாம் பிரிவு தீர்ப்பனவு |
| 1445 மணி | லங்கா கிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | கொடுத்துத் தீர்த்தல் மற்றும் சீராக்கல் தீர்ப்பனவு |
| 1500 மணி | லங்கா கிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைச் சுற்று 3 |
| 1500 மணி | லங்கா கிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | பொதுவான தன்னியக்க கூற்றுப்பொறி ஆளி சுற்று 3 |
| 1500 மணி | மூன்றாந்தரப்பு கொடுக்கல் வாங்கல்களுக்கான முதன்மை வெட்டுநேரம் | வங்கிக்கு வங்கி ஆவு2ஓஓ (தொடர்கள்) நீங்கலாக மூன்றாந்தரப்பினரின் சார்பில் புதிய கொடுக்கல்வாங்கல்களுக்காக (ரீ0இற்காக) மூடிவிடுதல். |
| 1515 மணி | லங்கா கிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி சுற்று 4 |
| 1515 மணி | லங்கா கிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | பொதுவான விற்பனை மைய ஆளி சுற்று 4 |
| 1545 மணி | நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதி மீள்கொள்வனவு உருவாக்கத்தினை முகாமைப்படுத்தும் பங்கேற்பாளர்களுக்கான வெட்டுநேரம் | பங்கேற்பாளர்கள் 1545 மணிக்குப் பின்னர் ஒரு நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதி மீள்கொள்வனவுகளை ஆரம்பிக்கக்கூடாது. |
| 1600 மணி | துணைநில் வைப்பு வசதி | துணைநில் வைப்பு வசதியின் முதலாவது பிரிவின் தீர்ப்பனவு |
| 1615 மணி | துணைநில் கடன் வழங்கல் வசதி | துணை நில் கடன் வழங்கல் வசதியின் முதலாவது பிரிவின் தீர்ப்பனவு |
| 1615 மணி | நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதி மீள்கொடுப்பனவு | நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதியின் மீள்கொடுப்பனவு |
| 1630 மணி | இறுதிவெட்டு நேரம் வியாபார முறைமையினை மூடிவிடுதல் | மேலும் உள்ளீடுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. வியாபாரத்திற்காக முறைமை மூடப்பட்டதுடன் காத்திருத்தல்/ தீர்ப்பனவுச் செயன்முறை முடிவுறுத்தப்படும் அத்துடன் மேலும் காத்திருக்கின்ற ஏதேனும் கொடுக்கல்வாங்கல்கள் முறைமையினால் நிராகரிக்கப்படும். |
| 1630 மணியிலியிருந்து 1700 மணி வரை | நாள் முடிவு<br>செயன்முறைப்படுத்தல் | நாள் முடிவுச் செயன்முறைகள் உ-ம்: அறிக்கைகள்/ பொதுப்பேரேட்டு அறிக்கை (நாள் முடிவு), பேரேட்டு ஏற்றுமதி கோவைகளைத் தயாரித்தல், பட்டியலிடல்/ கூற்று அச்சிடல் நோக்கங்களுக்காக தரவுத் தளத்தினைப் பேணுகை |
| 1700 மணி | முறைமையினை மூடிவிடுதல் | அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை/ பிணையங்கள் தீர்ப்பனவு முறைமை பிரயோகங்களை மூடுவதை தொடங்குதல், தளத்திற்கு வெளியேயான காப்பெடுப்பினைப் பெறுதல். |

3. இணைய உலாவி பணி நிலையங்களூடாக தமது தீர்ப்பனவுகள் கணக்குகளைக் கண்காணிக்குமாறும் அதேநேரமொத்தத் தீர்ப்பனவு முறைமையில் பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதிகளின் தீர்ப்பனவு நேரத்தில் தீர்ப்பனவுக் கணக்குகளில் போதியளவு நிதியங்களைப் பேணுவதை உறுதிப்படுத்துமாறும் பங்கேற்பாளர்களுக்கு ஆலோசனை வழங்கப்படுகிறது.

சி பி எஸ் பண்டார
**பதில் பணிப்பாளர்/கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்**

எம் இசட் எம் ஆசிம்
**கண்காணிப்பாளர்/பொதுப் படுகடன் திணைக்களம்**

2019 செத்தெம்பர் 05

**தொடர்பு எண்: 34/07/029/0001/002**

**கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமை சுற்றறிக்கை இல. 06/2019**

சேரல்: லங்காசெட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்

**லங்காசெட்டில் முறைமையின் நாளாந்த தொழிற்பாட்டு அட்டவணைத் திருத்தம்**

1. **2019 செத்தெம்பர் 06ஆம்** திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் தனியான முதனிலை வணிகர்களுக்காக திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் திரவத்தன்மை ஆதரவு வசதியொன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

2. அதற்கமைய, நாளாந்தத் தொழிற்பாட்டு அட்டவணை மீதான லங்காசெட்டில் முறைமை விதிகள் 2013 ஓகத்து - பதிப்பு 2.1 4 இன் தொகுதி 4இன் வாசகம் 1.2 இலுள்ள அட்டவணையானது **2019 செத்தெம்பர் 06ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் பின்வருமாறு திருத்தப்படும்.**

| நேரம் | நிகழ்வு | நடவடிக்கைகள்/ கொடுக்கல்வாங்கல்கள் |
|---|---|---|
| 0630 மணி | முறைமை ஆரம்பித்தல் | அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை/ பிணையங்கள் தீர்ப்பனவு முறைமை பிரயோகங்களை தொடங்குதல் |
| 0730 மணி தொடக்கம் 0800 மணி வரை | நாளாந்தச் செயன்முறைப்படுத்தல் ஆரம்பித்தல் | பிணையங்களின் அலுவல்சார் விலைகளை இற்றைப்படுத்தல், நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதிகளுக்கான பிணையங்களை குறிப்பிட்டு ஒதுக்குதல் |
| 0800 மணி | அலுவல்களுக்காக லங்காசெட்டில் முறைமை திறக்கப்படுகிறது | கொடுக்கல்வாங்கல்களை செயற்படுத்துவதற்கு முறைமை திறக்கப்படுகிறது. |
| 0800 மணி | நாளுக்குள்ளான திரவ வசதி/ தன்னியக்கமான நேர்மாற்று மீள்கொள்வனவு மற்றும் துணைநில் வைப்புவசதி | நாளுக்குள்ளான திரவத் தன்மை வசதியை வழங்குதல் மற்றும் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மற்றும் துணைநில் வைப்பு வசதி என்பவற்றின் மீள்கொள்வனவுகளின் இரண்டாம் பிரிவினைத் தீர்த்தல் |
| 0815 மணி | முதிர்ச்சிகள்/வட்டிக்கொடுப்பனவுகள், நாற்கோவை மற்றும் இலங்கை மத்திய வங்கி பிணையங்களின் முதிர்ச்சிகள் ஆரம்பமாகின்றன | பிணையங்களின் முதிர்ச்சிப் பெறுகைகள்/ நறுக்கு கொடுப்பனவுகளைத் தீர்ப்பனவு செய்தல், லங்காசெட்டில் கட்டணங்கள்/தண்டப்பணங்களை விதித்தல் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் பிணையங்களின் முதிர்ச்சிகள் |
| 0830 மணி | லங்கா கிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை சுற்று 1/ காசோலை பிம்பப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக் குறைப்பு முறைமையின் பிரதான தீர்ப்பனவு. |
| 0830 மணி | இலங்கை மத்திய வங்கி பிணையங்களின் உடனடி விற்பனை/ கொள்வனவு/ நீண்டகால மீள்கொள்வனவு ஏலம்/ நீண்டகால வழங்கல் | திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் உடனடி விற்பனைகள், கொள்வனவுகள், நீண்டகால இலங்கை மத்திய வங்கி பிணையங்கள் ஏலம் மற்றும் நீண்டகால மீள்கொள்வனவு ஏலத்தின் முதலாம் பிரிவு |
| 0845 மணி | லங்கா கிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | பொதுவான தன்னியக்க கூற்றுப் பொறி ஆளி சுற்று 1 |
| 0900 மணி | லங்கா கிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி சுற்று 1 |
| 0900 மணி | லங்கா கிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | பொதுவான விற்பனை மைய ஆளி சுற்று 1 |
| 1100 மணி | நேர்மாற்று மீள்கொள்வனவுகள் மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி திருப்புதல் | திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி என்பனவற்றின் கீழ் இரண்டாவது பிரிவின் தீர்ப்பனவு |
| 1100 மணி | திரவத்தன்மை ஆதரவு உறுதி திருப்புதல் | திரவச் சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் திரவத்தன்மை ஆதரவு வசதியின் கீழ் இரண்டாவது பிரிவின் தீர்ப்பனவு |
| 1100 மணி | லங்கா கிளியரிலிருந்தான பல்புடைத் தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | பொதுவான தன்னியக்க கூற்றுப்பொறி ஆளி சுற்று 2 |
| 1115 மணி | லங்காகிளியரிலிருந்தான பல்புடைத் தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி சுற்று 2 |
| 1115 மணி | லங்காகிளியரிலிருந்தான பல்புடைத் தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | பொதுவான விற்பனை மைய ஆளி சுற்று 2 |

| | | |
|---|---|---|
| 1145 மணி | நீண்டகால நேர்மாற்று மீள்கொள்வனவு (ஏலம்) | திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் நீண்டகால நேர்மாற்று மீள்கொள்வனவுகளின் முதலாவது பிரிவின் தீர்ப்பனவு |
| 1300 மணி | லங்கா கிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைச் சுற்று 2 |
| 1300 மணி | லங்கா கிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | பொது தன்னியக்க கூற்றுப்பொறி ஆளி சுற்று 3 |
| 1300 மணி | முதனிலை ஏலத் தீர்ப்பனவு/ குறுகிய கால இலங்கை மத்திய வங்கியின் பிணையங்கள் ஏலங்கள் மூடுதல் | முதலாந்தர ஏலங்களின் கீழான பிணையங்களின் தீர்ப்பனவு. குறுங்கால இலங்கை மத்திய வங்கி பிணையங்கள் ஏலத் தீர்ப்பனவு |
| 1315 மணி | லங்கா கிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி சுற்று 3 |
| 1315 மணி | லங்கா கிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | பொதுவான விற்பனை மைய ஆளி சுற்று 3 |
| 1315 மணி | குறுங்கால மீள்கொள்வனவு அல்லது நேர்மாற்று மீள்கொள்வனவு (ஏலம்) | திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் குறுங்கால மீள்கொள்வனவு அல்லது நேர்மாற்று மீள்கொள்வனவுகளினுடைய முதலாம் பிரிவு தீர்ப்பனவு |
| 1315 மணி | திரவத்தன்மை ஆதரவு வசதி (ஏலம்) | திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் திரவத்தன்மை ஆதரவின் கீழ் முதலாம் பிரிவின் தீர்ப்பனவு |
| 1445 மணி | லங்கா கிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | கொடுத்துத் தீர்த்தல் மற்றும் சீராக்கல் தீர்ப்பனவு |
| 1500 மணி | லங்கா கிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைச் சுற்று 3 |
| 1500 மணி | லங்கா கிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | பொதுவான தன்னியக்க கூற்றுப்பொறி ஆளி சுற்று 4 |
| 1500 மணி | மூன்றாந்தரப்பு கொடுக்கல் வாங்கல்களுக்கான முதன்மை வெட்டுநேரம் | வங்கிக்கு வங்கி ஆவு2ஓஓ (தொடர்கள்) நீங்கலாக மூன்றாந்தரப்பினரின் சார்பில் புதிய கொடுக்கல்வாங்கல்களுக்காக (ரீ,0இற்காக) மூடிவிடுதல். |
| 1515 மணி | லங்கா கிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி சுற்று 4 |
| 1515 மணி | லங்கா கிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | பொதுவான விற்பனை மைய ஆளி சுற்று 4 |
| 1545 மணி | நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதி மீள்கொள்வனவு | உருவாக்கத்தினை முகாமைப்படுத்தும் பங்கேற்பாளர்களுக்கான வெட்டுநேரம் பங்கேற்பாளர்கள் 1545 மணிக்குப் பின்னர் ஒரு நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதி மீள்கொள்வனவுகளை ஆரம்பிக்கக்கூடாது. |
| 1600 மணி | துணைநில் வைப்பு வசதி | துணைநில் வைப்பு வசதியின் முதலாவது பிரிவின் தீர்ப்பனவு |
| 1615 மணி | துணைநில் கடன் வழங்கல் வசதி | துணை நில் கடன் வழங்கல் வசதியின் முதலாவது பிரிவின் தீர்ப்பனவு |
| 1615 மணி | நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதி மீள்கொடுப்பனவு | நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதியின் மீள்கொடுப்பனவு |
| 1630 மணி | இறுதிவெட்டு நேரம் வியாபார முறைமையினை மூடிவிடுதல் | மேலும் உள்ளீடுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. வியாபாரத்திற்காக முறைமை மூடப்பட்டதுடன் காத்திருத்தல்/ தீர்ப்பனவுச் செயன்முறை முடிவுறுத்தப்படும் அத்துடன் மேலும் காத்திருக்கின்ற ஏதேனும் கொடுக்கல்வாங்கல்கள் முறைமையினால் நிராகரிக்கப்படும். |
| 1630 மணியிலியிருந்து 1700 மணி வரை | நாள் முடிவு செயன்முறைப்படுத்தல் | நாள் முடிவுச் செயன்முறைகள் உ-ம்: அறிக்கைகள்/ பொதுப்பேரேட்டு அறிக்கை (நாள் முடிவு), பேரேட்டு ஏற்றுமதி கோவைகளைத் தயாரித்தல், பட்டியலிடல்/ கூற்று அச்சிடல் நோக்கங்களுக்காக தரவுத் தளத்தினைப் பேணுகை |
| 1700 மணி | முறைமையினை மூடிவிடுதல் | அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை/ பிணையங்கள் தீர்ப்பனவு முறைமை பிரயோகங்களை மூடுவதை தொடங்குதல், தளத்திற்கு வெளியேயான காப்பெடுப்பினைப் பெறுதல். |

3. பங்கேற்பாளர்கள் இணைய உலாவி பணி நிலையங்களூடாக தமது தீர்ப்பனவுகள் கணக்குகளைக் கண்காணிக்குமாறும் அதேநேரமொத்தத் தீர்ப்பனவு முறைமையில் பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதிகளின் தீர்ப்பனவு நேரத்தில் தீர்ப்பனவுக் கணக்குகளில் போதியளவு நிதியங்களைப் பேணுவதை உறுதிப்படுத்துமாறும் ஆலோசனை வழங்கப்படுகிறது.

டி.குமாரதுங்க
**பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்**

டி.எஸ்.ரி. வாணகுரு
**பதில் கண்காணிப்பாளர்/ பொதுப் படுகடன் திணைக்களம்**

**தொடர்பு எண்: 34/01/024/0106/06**

**கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமை சுற்றறிக்கை இல. 07/2019** 2019 ஒத்தோபர் 04

சேரல்: லங்கா செட்டில் முறைமையின் அனைத்து பங்கேற்பாளர்களுக்கும்

**லங்கா செட்டில் முறைமை 2019 ஒத்தோபர் 9, 10 மற்றும் 11ஆம் நாட்களில் அதன் அனர்த்த மீட்பு அமைவிடத்திலிருந்து நேரடித் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும்**

இலங்கை மத்திய வங்கி, தடங்கலற்ற வியாபார ஒழுங்குகளைப் பரீட்சிக்கின்ற நோக்கத்திற்காக லங்கா செட்டில் முறைமை (ஆர்ரீஜிஎஸ். முறைமை மற்றும் லங்கா செகுயர் முறைமை) மற்றும் அதனுடன் தொடர்பான ஏனைய முறைமைகளின் தொழிற்பாடுகளை **2019 ஒத்தோபர் 09, 10 மற்றும் 11ஆம் நாட்களன்று (புதன்கிழமை, வியாழக்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமை) அதன் அனர்த்த மீட்பு அமைவிடத்திலிருந்து** மேற்கொள்ளும் என்பதனை அறிவித்துக் கொள்கிறது.

இலங்கை மத்திய வங்கியின் இணையத்தளத்துடன் இணைக்கப்பட்டுள்ள உங்கள் நிறுவனத்திலுள்ள தனியாள் கணனி அனர்த்த மீட்பு அமைவிடத்தினை அணுகத்தக்க விதத்தில் ஏற்கனவே அமைவடிவப்படுத்தப்பட்டுள்ளன. எனினும், ஆயத்த நிலையினை உறுதிப்படுத்துவதற்காக நீங்கள் 2019 ஒத்தோபர் **08ஆம் திகதிக்கு முன்னதாக** இலங்கை மத்திய வங்கியின் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தினைத் தொடர்பு கொண்டு இவ்விணைப்புத் தொடர்பாக பரீட்சித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். இலங்கை மத்திய வங்கியின் தகவல் தொழில்நுட்ப அலுவலர்களைத் தொடர்பு கொள்வதற்கான விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

- திருமதி. ருவந்தி ரூபசிங்க 0112398738 (மின்னஞ்சல்ட: ruvindee@cbsl.lk)
- செல்வி. நயோமி ரணமுக 0112477122 (மின்னஞ்சல்: nayomi@cbsl.lk)

டி. குமாரதுங்க
**பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்**

பிரதி: பணிப்பாளர்/ தகவல் தொழில்நுட்பவியல் - இலங்கை மத்திய வங்கி
முதன்மை நிறைவேற்று அலுவலர் - லங்கா கிளியர் பிறைவேற் லிமிட்டெட்
செயலாளர் நாயகம் - இலங்கை வங்கியாளர்கள் சங்கம்
தலைவர் - முதனிலை வணிகர்கள் சங்கம்
முதன்மை நிறைவேற்று அலுவலர் - லங்கா பினான்சியல் சேர்விஸஸ் பியுரோ லிமிடெட்

**கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமை சுற்றறிக்கை இல. 08/2019** 2019 நவெம்பர் 25

சேரல்: செல்லிடத் தொலைபேசியை அடிப்படையாகக் கொண்ட இ-பணம் முறைமைகளின் உரிமம்பெற்ற தொழிற்படுத்துனரின் பிரதம நிறைவேற்று அலுவலர்களுக்கு

**வாடிக்கையாளர் இ-பணக் கணக்குகளுக்கு ஏற்புடைய இ-பணக் கணக்குகளின் எண்ணிக்கை, தனிப்பட்ட பெறுமதி சேமிக்கப்பட்ட வரையறைகள், நாளாந்த வரையறைகள் மற்றும் கொடுக்கல்வாங்கல் வரையறைகள்**

இச்சுற்றறிக்கையானது 2013ஆம் ஆண்டின் கொடுப்பனவு அட்டைகள் பற்றிய 18ஆம் ஒழுங்குவிதி மற்றும் 01ஆம் இலக்க கொடுப்பனவு அட்டைகள் மற்றும் செல்லிடக் கொடுப்பனவு முறைமை ஒழுங்குவிதி அத்துடன் கட்டுக்காப்பாளர் கணக்கு அடிப்படையில் அமைந்த செல்லிடக் கொடுப்பனவு சேவைகளுக்கான 2011ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க செல்லிடக் கொடுப்பனவு வழிகாட்டல்கள் என்பவற்றுக்கமைவாக ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் திறக்கப்படக்கூடிய இ-பணக் கணக்குகளின் எண்ணிக்கை மற்றும் அத்தகைய இ-பணக் கணக்குகளுக்கு ஏற்புடைய மற்றும் தனிப்பட்ட பெறுமதி சேமிக்கப்பட்ட வரையறைகள், நாள் வரையறைகள் மற்றும் கொடுக்கல்வாங்கல் வரையறைகள் என்பவற்றை குறித்துரைப்பதற்காக வெளியிடப்படுகின்றது.

1. இ-பணக் கணக்குகளை ஆரம்பித்தல் அத்துடன்/ அல்லது பேணுதல், செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலமைந்த இ-பண முறைமைக்கு இணைப்பதற்கு இ-பண கணக்கு வைத்திருப்பவரினால் பயன்படுத்தப்படுகின்ற செல்லிட வலையமைப்பினைக் கருத்திற்கொள்ளாது ஒவ்வொரு செல்லிடத் தொலைபேசி அடிப்படையிலமைந்த இ-பணக் கணக்கு முறைமையிலும் தனிப்பட்ட ஆளொருவருக்கு ஒரு இ-பணக் கணக்காக மட்டுப்படுத்தப்படல் வேண்டும்.

**2. ஏற்புடைய வரையறைகள்**

**2.1 தனிப்பட்ட பெறுமதி சேமிக்கப்பட்ட வரையறை**

2.1.1 உயர்வுபடுத்தப்பட்ட இ-பணக் கணக்குகள் - உயர்ந்தபட்சம் வைத்திருக்கும் பெறுமதி ரூ.50,000.00

2.1.2 அடிப்படை இ-பணக் கணக்குகள் - உயர்ந்தபட்சம் வைத்திருக்கும் பெறுமதி ரூ.10,000.00

செல்லிடத் தொலைபேசி அடிப்படையிலமைந்த இ-பண முறைமைகள் தொழிற்பாட்டாளர்கள், மேம்படுத்தப்பட்ட உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்துகொள்ளுங்கள் தேவைப்பாடுகளை நிறைவுசெய்துள்ள இ-பணக் கணக்குகளுக்காக மாத்திரம் ரூ.50,000.00 கொண்ட உயர்ந்தபட்ச வைத்திருக்கும் பெறுமதியினை அனுமதித்தல் வேண்டும்.

**2.2 நாள் வரையறைகள்**

2.2.1 உயர்வுபடுத்தப்பட்ட இ-பணக் கணக்குகள் - உயர்வுபடுத்தப்பட்ட பணப் பையொன்றுக்கு கிடைக்கப்பெறுகின்ற அத்துடன் அல்லது நிரப்பப்படுகின்ற மொத்த இ-பணத் தொகை நாளொன்றுக்கு ரூ.50,000.00 இனை விஞ்சாதிருத்தல் வேண்டும் என்பதுடன்

உயர்வுபடுத்தப்பட்ட பணப் பைக்கு மாற்றல் செய்யப்பட்ட அத்துடன்/ அல்லது அதிலிருந்து மீளப்பெறப்பட்ட மொத்த இ-பணத் தொகை நாளொன்றுக்கு ரூ.50,000.00 இனை விஞ்சாதிருத்தல் வேண்டும்

2.2.2 அடிப்படை இ-பணக் கணக்குகள் - அடிப்படைப் பணப் பையொன்றுக்கு கிடைக்கப்பெறுகின்ற அத்துடன் அல்லது நிரப்பப்படுகின்ற மொத்த இ-பணத் தொகை நாளொன்றுக்கு ரூ.10,000.00 இனை விஞ்சாதிருத்தல் வேண்டும் என்பதுடன் அடிப்படைப் பணப் பைக்கு மாற்றல் செய்யப்பட்ட அத்துடன்/ அல்லது அதிலிருந்து மீளப்பெறப்பட்ட மொத்த இ-பணத் தொகை நாளொன்றுக்கு ரூ.10,000 இனை விஞ்சாதிருத்தல் வேண்டும்.

**2.3 கொடுக்கல்வாங்கல் வரையறைகள்**

இ-பணக் கணக்குகளின் தனிப்பட்ட பெறுமதி சேமிக்கப்பட்ட வரையறையானது செல்லிடத் தொலைபேசியினை அடிப்படையாகக் கொண்ட இ-பண முறைமையினால் வசதிப்படுத்தப்படுகின்ற ஒவ்வொரு கொடுக்கல்வாங்கலுக்குமென கொடுக்கல்வாங்கல் ஒன்றிற்கான உயர்ந்தபட்ச வரையறை இருத்தல் வேண்டும்.

3. இச்சுற்றறிக்கை 2019 திசெம்பா 02 தொடக்கம் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

டி. குமாரதுங்க
**பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்**

2019 ஒத்தோபர் 30

**தொடர்பு எண்: 34/01/025/0038/001**

சேரல்: அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளின், உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகளின் மற்றும் செல்லிடத் தொலைபேசியினை அடிப்படையாகக் கொண்ட இ-பணம் முறைமைகளைத் தொழிற்படுத்துகின்ற உரிமம்பெற்ற தொழிற்படுத்துனர்களின் பிரதம நிறைவேற்று அலுவலர்கள்

## உள்நாட்டு கொடுப்பனவுகளுக்காக தேசிய விரைவு பதிலிறுத்தல் குறியீட்டு நியமமொன்றினை நிறுவுதல் 2019ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க சுற்றறிக்கை - பின்னிணைப்பு I

உள்நாட்டு கொடுப்பனவுகளுக்காக தேசிய விரைவு பதிலிறுத்தல் குறியீட்டு நியமமொன்றினை நிறுவுதல் - 2019ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க சுற்றறிக்கையுடன் தொடர்புடையது. இவ் ஆவணம், மேற்குறித்த சுற்றறிக்கைக்கான பின்னிணைப்பாக வாசிக்கப்படுதல் வேண்டும்.

லங்காகியுஆர் முன்னெடுக்கப்படுகின்ற கொடுக்கல்வாங்கல் தொடர்பில் பின்வருவன 2020 சனவரி 1 தொடக்கம் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

1. அரசாங்க நிறுவனங்கள், குறித்த அரசாங்க நிறுவனத்திற்கு ஏற்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக ஒவ்வொரு கொடுக்கல்வாங்கலுக்கும் அவர்களது வணிகர் கையேற்பவர்களுக்கு கட்டணமொன்றினைச் (வணிகர் கழிவு வீதம்) செலுத்துவதா என்பதனை தீர்மானித்தல் வேண்டும்.

2. அரசாங்க நிறுவனங்கள் வணிகர் கையேற்பவருக்கு வணிகர் கழிவு வீதங்களைக் கொடுப்பனவு செய்வதற்கு அனுமதிக்கப்படாத சூழ்நிலைகளில், அரசாங்க நிறுவனங்களுக்கு மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவுகளுக்காக வாடிக்கையாளர் மீது சௌகரிக கட்டணமொன்று மாத்திரம் அறவிடப்படலாம் என்பதுடன் இலங்கை மத்திய வங்கியிடமிருந்தான விசேட அனுமதியுடன் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

3. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களிடமிருந்து எரிபொருள் கொள்வனவிற்காக வணிகர் கழிவு வீதம் எதுவும் ஏற்புடையதாகதிருத்தல் வேண்டும்.

4. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களிடமிருந்து எரிபொருள் கொள்வனவிற்காக கொடுப்பனவு சாதனத்தினை வழங்கும் வங்கியின் தற்துணிவின் பேரில் மொத்தக் கொடுப்பனவுத் தொகையின் 0.5 வீதத்திற்கு மேற்படாத மிகைக் கட்டணம் அறவிடப்படலாம். மிகைக் கட்டணமானது பின்வருமாறு தொடர்புடைய ஆர்வலர்கள் மத்தியில் பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும்.

**அட்டவணை 1: அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களிடமிருந்து எரிபொருள் கொள்வனவிற்காக 0.5 வீத மிகைக் கட்டணமொன்றினைப் பகிர்ந்தளித்தல்***

| கொடுக்கல்வாங்கல் தொகை ஒ ரூ. | லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட் கட்டணம் ரூ. | வழங்குபவர் கட்டணம் | கொடுக்கல்வாங்கல் கையேற்பவர் கட்டணம் | வணிக கையேற்பவர் கட்டணம் |
|---|---|---|---|---|
| x<=1000 | 0.05 | 0.13% வரை | 0.17% (செல்லிட தொலைபேசி செயலி வழங்குநருடன் பகிர்ந்துகொள்வதற்கு | 0.20% லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட் கட்டணம் |
| 1000< x<=5000 | 0.50 | | | |
| 5000<x | 1.50 | | | |

** அட்டவணையில் தரப்பட்ட சதவீதங்கள் மொத்த கொடுக்கல்வாங்கல் தொகையில் இருந்து (ஓ) கணிக்கப்பட்டவை.*

மிகைக்கட்டணம் மாறுபடக்கூடியதாயினும் மேலே அட்டவணை 1 இல் தரப்பட்ட ஒவ்வொரு ஆர்வலர்களுக்குமான ஒதுக்கீடானது வழங்குநர் கட்டணம் தவிர மாற்றம் செய்யப்படலாகாது. எவ்வாறாயினும், வாடிக்கையாளர் மீதான ஒட்டுமொத்த மிகைத் தொகையினையும் அறவிடுவதா அல்லது மிகைத் தொகையினை, முழுமையாக அல்லது பகுதியாக அவர்கள் தாங்கிக்கொள்வதா என்பதனை வழங்குநர்கள் தீர்மானிப்பதற்கு அனுமதிக்கப்பட வேண்டும்.

5. மேலே 1 மற்றும் 3 இல் உள்ள கொடுக்கல்வாங்கல்களைத் தவிர 12 மாதங்களைக் கொண்ட காலப்பகுதிக்கு அனைத்துக் கொடுக்கல்வாங்கல்களுக்கும் வணிகர் கழிவுவீதம் உயர்ந்தபட்ச 0.5 சதவீதம் கொண்டதாகவிருக்கும்.

6. 2019 மாச்சு 11 அன்று வழங்கப்பட்ட 2019ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க சுற்றறிக்கையின் 1ஆம் அட்டவணையிலுள்ள கட்டணக் கட்டமைப்பானது மேலே 1 மற்றும் 3 என்பன உற்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்களுக்காக 2020 சனவரி 1 தொடக்கம் 12 மாதங்களைக் கொண்ட காலப்பகுதிக்காக பின்வரும் அட்டவணையினால் பதிலீடு செய்யப்பட வேண்டும். 12 மாத முடிவில் வணிகர் கழிவு வீதப் பகிர்ந்தளிப்பானது 2019ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க சுற்றறிக்கையின் 1ஆம் அட்டவணைக்கு ஏற்ப இருத்தல் வேண்டும்.

**அட்டவணை 2: அனைத்து ஆர்வலர்களுக்கிடையிலான 0.5 சதவீத வணிகர் கழிவுவீதமொன்றினை பகிர்ந்தளித்தல்****

| கொடுக்கல்வாங்கல் தொகை ஒ ரூ. | லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட் கட்டணம் ரூ. | வழங்குபவர் கட்டணம் | கொடுக்கல்வாங்கல் கையேற்பவர் கட்டணம் | வணிக கையேற்பவர் கட்டணம் |
|---|---|---|---|---|
| **10<=x<=100** | 0 | 0.13% | 0.17% (செல்லிட தொலைபேசி செயலி வழங்குநருடன் பகிர்ந்துகொள்வதற்கு) | 0.20% வரை (சந்தை சக்திகளால் தீர்மானிக்கப்பட்டவை) லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட் கட்டணம |
| **100<=x<=1000** | 0.05 | | | |
| **1000< x<=5000** | 0.50 | | | |
| **5000<x** | 1.50 | | | |

*** அட்டவணையில் தரப்பட்ட சதவீதங்கள் மொத்த கொடுக்கல்வாங்கல் தொகையில் இருந்து (ஒ) கணிக்கப்பட்டவை.*

மிகைக்கட்டணம் மாறுபடக்கூடியதாயினும் மேலே அட்டவணை 2இல் தரப்பட்ட ஒவ்வொரு ஆர்வலர்களுக்குமான ஒதுக்கீடானது வணிகர் கையேற்பவர் கட்டணம் தவிர மாற்றம் செய்யப்படலாகாது. எவ்வாறாயினும், வணிகர் மீதான ஒட்டுமொத்த மிகைத் தொகையினையும் அறவிடுவதா அல்லது மிகைத் தொகையினை, முழுமையாக அல்லது பகுதியாக அவர்கள் தாங்கிக்கொள்வதா என்பதனை வணிர் கையேற்பவர்கள் தீர்மானிப்பதற்கு அனுமதிக்கப்பட வேண்டும். வணிகர் கழிவுவீதமானது வாடிக்கையாளரிடமிருந்து அறவிடப்படலாகாது.

7. 2020 சனவரி 1இற்கு அப்பால் தனியுரிமை கியூஆர் குறியீடுகள் எதுவும் சந்தையில் தொழிற்படுவதற்கு அனுமதிக்கப்படலாகாது என்பதுடன் அதன் பின்னர் லங்கா கியூஆர் குறியீடு மாத்திரம் தொழிற்பாட்டில் இருத்தல் வேண்டும்.

டி. குமாரதுங்க
**பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்**

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் எண்.: ஆர்டிடி/எஸ்ஏபிபி/ஆர்எவ்/2019/01**

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
அ.பெ. இல. 590
இல.30 சனாதிபதி மாவத்தை
கொழும்பு - 01
2019.08.06

சேரல்: அனைத்துப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும்

**சிறுஉடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சுழலும் நிதிய வேளாண் வியாபாரம், சுழலும் நிதிய வருமான உருவாக்கம், சுழலும் நிதிய இளைஞர் கடன் திட்டங்களுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்**

இது (2018.12.05 அன்று திருத்தப்பட்டவாறான) பணிப்பாளர், பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் இலங்கை மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட 2018.04.10ஆம் திகதியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல. ஆர்டிடி/எஸ்ஏபிபி/ஆர்எவ்/2018/01 இற்கு மேலதிகமானதாகும்.

1. அறிமுகம்

சிறுஉடமையாளர் வேளாண் வியாபாரப் பங்குடமை நிகழ்ச்சித்திட்டக் கடன் திட்டங்களின் தொழிற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்துகின்ற நோக்குடன் வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தின் கிராமிய நிதித் தூதுக்குழுவினால் செய்யப்பட்ட விதந்துரைப்புக்களையும் சனாதிபதி செயலகத்தின் கீழ் தொழிற்படுகின்ற சிறுஉடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவின் கோரிக்கையினையும் பரிசீலனையில் கொண்டு சிறுஉடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் கொடுகடன் கூறின் கீழ் நடைமுறைக்கிடப்பட்ட கடன் திட்டங்களை மீளவமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் முக்கியமாக, தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் 17ஆவது பிரிவில் தரப்பட்டுள்ளவாறு 2019.08.20ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் (2018.12.05இல் திருத்தப்பட்டவாறான) 2018.04.10ஆம் திகதியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இல. ஆர்டிடி/எஸ்ஏபிபி/4பி/2018/01 இனால் அறிமுகப்படுத்தப்பட்ட **சுழலும் நிதிய மூலதனம் சுழலும் நிதிய பருவகாலக் கடன் திட்டங்களின்** தொழிற்பாடுகளை மட்டுப்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டிருந்தன. மேலும், **சுழலும் நிதிய வேளாண் வியாபாரக் கடன் திட்டம், சுழலும் நிதிய இளைஞர் கடன் திட்டம்** என்பன அறிமுகப்படுத்தப்படவுள்ளதுடன் **வருமான உருவாக்கக் கடன் திட்டமானது சுழலும் நிதிய வருமான உருவாக்கக் கடன் திட்டம்** எனப் மீளப் பெயரிடப்படும். இதன்படி, இதனகத்துப் பின்னர் சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் திரட்டப்பட்ட சுழலும் நிதியமானது சுழலும் நிதிய வேளாண் வியாபாரம், சுழலும் நிதியம் வருமான உருவாக்கம் மற்றும் சுழலும் நிதிய இளைஞர் கடன் திட்டம் (சுழலும் நிதியக் கடன் திட்டங்கள்) என்பனவற்றிற்கு சிறுஉடமையாளர் வேளாண் வியாபாரப் பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் கூறு 2: கிராமிய நிதியைப் பெறுவதற்கான அணுகுமுறை மற்றும் துணைக்கூறு 2.1: அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர் பங்குடமையின் நிதியிடல் ஆகியவற்றின் நியதிகளில் **அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர் பங்குடமை வேளாண் வியாபாரம் மற்றும் அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர் பங்குடமை இளைஞர் கடன் திட்டங்களுக்குப்** பயன்படுத்தப்படும்.

இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் நடைமுறைக்குவரும் திகதி 2019.08.21 ஆக இருக்கும். இத்திகதிக்கு முன்னர் வழங்கப்பட்ட அனைத்துக் கடன்களும் (2018.12.05 அன்று திருத்தப்பட்டவாறான) 2018.04.10ஆம் திகதியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இல. ஆர்டிடி/எஸ்ஏபிபி/4பி/2018/01 இன் அதிகாரவரம்பின் கீழ் இருக்கும்.

**2. சுழலும் நிதியக் கடன் திட்டங்களின் குறிக்கோள்**

சுழலும் நிதியக் கடன் திட்டங்களின் முதன்மைக் குறிக்கோள் யாதெனில், வேளாண்மை உற்பத்திகளின் உற்பத்தியாக்கம் மற்றும் தரத்தினை அதிகரிப்பதும் அவ்வுற்பத்திகளின் பெறுமதிகளைக் கூட்டுவதுமேயாகும்.

சுழலும் நிதியக் கடன் திட்டங்களின் மற்றைய குறிக்கோள்கள் வருமாறு:

அ. வேளாண்மையாளர்களுக்கான கடனின் கொடுக்கல்வாங்கல் செலவினைக் குறைத்தல்.

ஆ. வேளாண்மையாளர்களின் சமூக நிலைமைகளை மேம்படுத்தல்.

இ. வேளாண்மையாளர்களை முறைசார்ந்த நிதியியல் முறைமைக்குள் கொண்டு வருவதன் மூலம் கிராமிய வேளாண்மையாளர்களிடையே நிதியியல் உள்ளீட்டினை உயர்த்துதல்.

ஈ. கிராமிய வேளாண்மையாளர்களிடையே பெறுமதிச் சங்கிலித் தொடர் சந்தைப்படுத்தலையும் இணைப்புக்களையும் அபிவிருத்தி செய்தல்.

உ. கிராமிய வேளாண்மையாளர்களுக்காக நவீன வேளாண்மை முறைகளின் தேர்ச்சிகளை அறிமுகப்படுத்தல்.

ஊ. வேளாண்மை உற்பத்திகளை அதிகரிப்பதற்கும் நாட்டின் மொ.உ.உற்பத்தி வளர்ச்சிக்குப் பங்களிப்பதற்கும் வேளாண்மையாளர்களை ஊக்குவித்தல்.

எ. அரச தனியார், உற்பத்தியாளர் பங்குடமை செயற்றிட்டங்கள் மூலமாக இளைஞர் தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல்.

ஏ. ஏனைய வருமான உருவாக்க நடவடிக்கைகளைப் பன்முகப்படுத்துவதனூடாக கிராமிய குடித்தொகையின் பாதிக்கப்படும் தன்மையினைக் குறைத்தல்.

ஐ. வேளாண்மையாளர்களிடையே சேமிப்புப் பழக்கத்தினையும் சிக்கனத்தினையும் தூண்டுதல்.

ஒ. வேளாண்மை உற்பத்திகளையும் பெறுமதிகூட்டல்களையும் அதிகரிப்பதனூடாக வேளாண்மையாளர்களின் வீட்டலகுகளினது வருமானத்தினை அதிகரிப்பதன் வாயிலாக அவர்களின் வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்துதல்.

**3. தொழிற்பாட்டுப் பிரதேசங்கள்**

நிகழ்ச்சித்திட்டமானது தீவு முழுவதற்கும் நடைமுறைப்படுத்தப்படும்.

**4. தகைமையுடைய நடவடிக்கைகள்**

அ. அரசாங்க, தனியார் உற்பத்தியாளர் பங்குடமை ஏற்பாடுகளில் ஈடுபடுகின்ற வேளாண்மையாளர்கள், வேளாண்மையாளர் குழுக்கள், வேளாண்மையாளர் அமைப்புக்கள் மற்றும் உற்பத்தியாளர் அமைப்புக்களினால் மேற்கொள்ளப்படுகின்ற ஏதேனும் வேளாண் வியாபார நடவடிக்கை

ஆ. வேளாண்மை, மீன்பிடி மற்றும் விலங்கு வளர்ப்பு, வர்த்தகம் மற்றும் பணிகள் துறைகள் மற்றும் சிறு கைத்தொழில்கள் போன்றவற்றிலுள்ள வருமான உருவாக்க நடவடிக்கைகள்

இ. ஏதேனும் வேளாண்மை பெறுமதிச் சங்கிலியுடன் தொடர்புபட்டுள்ள இளைஞர்களினால் மேற்கொள்ளப்படும் தொழில்முயற்சியாண்மை நடவடிக்கைகள்

**5. துணைக் கடன் வகைகள்**

கொடுகடனுக்காக கடன்பெறுகைகளிலிருந்து வழங்கப்படுகின்ற துணைக் கடன் வகைகள் பின்வருமாறு:

அ. சுழலும் நிதிய வேளாண் வியாபாரக் கடன்கள்

ஆ. சுழலும் நிதிய வருமான உருவாக்கக் கடன்கள்

இ. சுழலும் நிதிய இளைஞர் கடன்கள்.

**6. பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் வகிபாகமும் அவற்றின் பொறுப்புக்களும்**

சுழலும் நிதியக் கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் தீவிரமான வகிபாகமொன்றினை ஆற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் பின்வருவனவற்றை மேற்கொள்ளுதல் வேண்டும்:

அ. அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் - பங்குடமை மூலதனம்; அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை பருவகால மற்றும் இளைஞர் கடன் திட்ட ஏற்பாடுகளின் ஆரம்பக் கலந்துரையாடல்களின் போது, சிறு உடமையாளர் வேளாண் வியாபாரப் பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவிடம் சுழலும் நிதியக் கடன் திட்டங்களின் கீழான கடன்களைச் செய்முறைப்படுத்துவதற்குத் தேவையான அனைத்து ஆவணங்களினது பட்டியலையும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்குத் தேவைப்படும் சிறப்பான தேவைப்பாடுகளையும் வழங்குதல் வேண்டும்.

ஆ. சுழலும் நிதியக் கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான அலுவலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளமையினை உறுதிப்படுத்துதல்.

இ. கொடுகடன்களை வழங்குதல் மற்றும் அறவிடுதல் என்பனவற்றின் முழுப் பொறுப்பினையும் ஏற்றுக்கொள்ளுதல்.

ஈ. பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் எந்தவொரு கிளையும் இறுதிக் கடன்பாட்டாளர்களுக்கு கடன்களை வழங்கும் பொழுது எந்தவொரு சூழ்நிலையிலும் சுழலும் நிதியக் கடன் திட்டங்களின் கீழ் பிரிவு 8(இ) இல் குறிப்பிடப்பட்டுள்ள வட்டி வீதத்திலும் பார்க்க உயர்ந்த வீதத்தில் வட்டியை விதிக்கக்கூடாது என்பதனை உறுதிப்படுத்துதல்.

உ. ஒவ்வொரு துணைச் செயற்றிட்டமும் சந்தைப்படுத்தல் நியதிகளில் பொருளாதார ரீதியாகவும் நிதியியல் ரீதியாகவும் ஆற்றலும் சாத்தியவளத்தன்மையினையும் கொண்டவை என்பதனையிட்டு திருப்திப்பட்டுக் கொள்ளுதல்.

ஊ. கணக்குகளையும் நிதியியல் கூற்றுக்களையும் பேணுதல்

(i) பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் மற்றைய விடயங்களுடன் துணைக் கடன் மதிப்பீடுகள், ஒப்புதல்கள், பகிர்ந்தளிப்புக்கள் மற்றும் அறவிடல் என்பனவற்றை எடுத்துக்காட்டும் விதத்தில் பொருத்தமான பேரேட்டுக் கணக்குகளையும் பதிவுகளையும் பேணுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

(ii) கடன்பெறுகைகளின் பயன்படுத்தல் மற்றும் மீள்நிதியிடல் தொழிற்பாடுகளுக்காக தனியான கணக்குகளைப் பேணுமாறு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

(iii) பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினதும் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவினதும் (வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தின் சார்பில்) பரீட்சிப்பிற்காகவும் மீளாய்விற்காகவும் கணக்குகளையும் நிதியியல் கூற்றுக்களையும் கிடைக்கச் செய்தல் வேண்டும். மேலும், பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கேட்டுக் கொள்ளப்படும் நேரத்தில் கணக்குகளையும் நிதியியல் கூற்றுக்களையும் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கும் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவிற்கும் சமர்ப்பித்தல் வேண்டும்.

எ. தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் குறித்துரைக்கப்பட்டுள்ள பதிவுசெய்தல் செயன்முறைகளையும் மீள்நிதியிடல் நடைமுறைகளையும் பின்பற்றுதல் வேண்டும்.

**7. தகைமையுடைய நன்மைபெறுநர்கள்**

கீழே காட்டப்பட்டுள்ள தகைமையுடைய நன்மைபெறுநர்கள் உத்தேசச் செயற்றிட்டங்கள் சாதகமான காசுப்பாய்ச்சல்களையும் போதுமான மீள்கொடுப்பனவு இயலாற்றலையும் கொண்டிருக்கின்றன என்பது தொடர்பில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களைத் திருப்திப்படுத்தக் கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.

அ. அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை ஏற்பாடுகளில் ஈடுபட்டுள்ள வேளாண்மையாளர்கள், வேளாண்மையாளர் குழுக்கள், வேளாண்மையாளர் அமைப்புக்கள், உற்பத்தியாளர் அமைப்புக்கள்.

ஆ. வேளாண்மை, மீன்பிடி மற்றும் விலங்கு வளர்ப்பில் வருமான உருவாக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தனிப்பட்டவர்கள்.

இ. ஏதேனும் வேளாண்மை பெறுமதிச் சங்கிலியுடன் இணைக்கப்பட்டுள்ள இளம் தொழில்முயற்சியாண்மையாளர்கள் மற்றும் 18 - 40 வயதிற்கிடைப்பட்டவர்கள்.

**8. சுழலும் நிதியக் கடன் திட்டங்களின் முக்கிய பண்புகள்**

சுழலும் நிதியக் கடன் திட்டங்களின் முக்கிய பண்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

| பண்புகள் | | சுழலும் நிதிய வேளாண் வியாபாரக் கடன் திட்டம் | சுழலும் நிதிய வருமான உருவாக்கக் கடன் திட்டம் | சுழலும் நிதிய இளைஞர் கடன் திட்டம் |
|---|---|---|---|---|
| (அ) | உயர்ந்தபட்சக் கடன் வரையறை | - அரச, தனியார், உற்பத்தியாளர் பங்குடமையின் கீழ் மீண்டும் மீண்டும் பயிரிடும் வெளிப்பிர்ச்செய்கை வேளாண்மையாளர்களுக்கு ரூ.300,000.00<br>- வேளாண்மையாளர் அமைப்புகள்/ உற்பத்தியாளர் அமைப்புகள் மற்றும் வேளாண்மையாளர் குழுக்கள் தொடர்பில் கடன் எல்லை தேசிய வழிகாட்டல் குழுவின் ஒப்புதலுக்குட்பட்டு சிறு உடமையாளர் வேளாண் வியாபாரப் பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவினால் தீர்மானிக்கப்படும் | - தனிப்பட்ட துணைக் கடன் பாட்டாளர்களுக்காக ரூ.300,000.00 | - ரூ.2 மில்லியன் |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | தகைமையுடைய துணைக் கடன்பாட்டாளர்கள் மற்றும் துணைக் கடன் நடவடிக்கைகள் | - அரச, தனியார், உற்பத்தியாளர் பங்குடமை ஏற்பாடுகளில் ஈடுபட்டுள்ள வேளாண்மையாளர்கள், வேளாண்மையாளர் அமைப்புக்கள்/ உற்பத்தியாளர் அமைப்புக்கள் மற்றும் வேளாண்மையாளர் குழுமங்கள்<br>- சிறு உடமையாளர் வேளாண் வியாபாரப் பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவினால் விதந்துரைக்கப்பட்டு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் இணங்கப்பட்ட மூலதன முதலீடுகளுக்கு அத்துடன்/ அல்லது தொழிற்படு மூலதனமாகப் பயன்படுத்துவதற்கு | - வேளாண்மை, மீன்பிடி மற்றும் விலங்கு வளர்ப்பு, வர்த்தகப் பணிகள் மற்றும் சிறு கைத்தொழில்கள் போன்றவற்றிற்கு வருமான உருவாக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தனிப்பட்டவர்கள் | - ஏதேனும் பெறுமதிச் சங்கிலியுடன் இணைக்கப்பட்ட மற்றும் 18 - 40 வயதிற்கிடைப்பட்ட இளைஞர் தொழில் முயற்சியாளர்கள் மற்றும்/ அல்லது இளைஞர் தொழில்முயற்சியாளர் குழுக்கள்<br>- சிறு உடமையாளர் வேளாண் வியாபாரப் பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவினால் விதந்துரைக்கப்பட்டு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் இணங்கப்பட்ட வியாபார முன்மொழிவுகளின்படி மூலதன முதலீடுகளுக்கு அத்துடன்/ அல்லது தொழிற்படு மூலதனமாகப் பயன்படுத்துவதற்கு |
| (இ) | துணைக் கடன்பாட்டாளர் களினால் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு செலுத்தப் படத்தக்க வட்டி வீதம் | ஆண்டிற்கு 6.5 சதவீதம் | ஆண்டிற்கு 6.5 சதவீதம் | ஆண்டிற்கு 6.5 சதவீதம் |
| (ஈ) | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் இலங்கை மத்திய வங்கிக்கு செலுத்தப் படத்தக்க வட்டி வீதம் | ஆண்டிற்கு 3.0 சதவீதம் | ஆண்டிற்கு 3.0 சதவீதம் | ஆண்டிற்கு 3.0 சதவீதம் |
| (உ) | சலுகைக் காலம்* | - மாதாந்த அல்லது ஒரே தடவையிலான மீள்கொடுப்பனவுகளுக்கு உயர்ந்தபட்சம் பதினெட்டு (18) மாதங்கள்<br>- மாதாந்த மீள்கொடுப்பனவுகளுக்கு உயர்ந்தபட்சம் பன்னிரண்டு (12) மாதங்கள்<br>**குறிப்பு:** சலுகைக் காலம் வழங்கப்படுவது, தேவையானவிடத்து அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர் பங்குடமை மூலதனச் செயற்றிட்டத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு பயிர்களின் முதலாவது அறுவடை/ அறுவடை மாதிரியின் அடிப்படை தொடர்பில் சிறு உடமையாளர் வேளாண் வியாபாரப் பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவின் மதிப்பீட்டின் அடிப்படையில் வேளாண்மைத் திணைக்களம், தேசிய விலங்கு வளர்ப்பு அபிவிருத்திச் சபை போன்ற தொடர்பான அதிகாரிகளின் ஆலோசனையுடன் சிறு உடமையாளர் வேளாண் வியாபாரப் பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவினதும் தொடர்பான பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினதும் ஆலோசனையுடன் தீர்மானிக்கப்படும்.<br>இலங்கை மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்படும் புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமிய கடன் திட்டத்தின் பயிர்களின் பட்டியல் மற்றும் தொடர்பான சலுகைக் காலம் என்பன சலுகைக் காலத்தினைத் தீர்மானிப்பதற்கு வழிகாட்டியாக அமையும் [(இணைப்பு (அ)] | செயற்றிட்டத்தின் தேவைப்பாடுகளைப் பொறுத்து உயர்ந்தபட்சம் ஆறு (12) மாதங்கள் | செயற்றிட்டத்தின் தேவைப்பாடுகளைப் பொறுத்து உயர்ந்தபட்சம் ஆறு (12) மாதங்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஊ) | மீள்கொடுப்பனவுக் காலம | - ஒரே தடவையிலான மாதாந்த அடிப்படையிலான மீள்கொடுப்பனவுகளுக்கு உயர்ந்தபட்சம் பதினெட்டு (18) மாதங்கள்<br>- சலுகைக்காலம் உட்பட மாதாந்த மீள்கொடுப்பனவுகளுக்கு உயர்ந்தபட்சம் முப்பத்தாறு (36) மாதங்கள்<br>- வேளாண்மையாளர் அமைப்புக்கள்/ உற்பத்தியாளர் அமைப்புக்களைப் பொறுத்தவரை மாதாந்த மீள்கொடுப்பனவுகளுக்கு சலுகைக் காலம் உட்பட அறுபது (60) மாதங்கள்<br>குறிப்பு: வேளாண் வியாபாரக் கடன்களுக்கான மீள்கொடுப்பனவுக் காலம் அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர் பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்றிட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு சிறு உடமையாளர் வேளாண் வியாபாரப் பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவின் மதிப்பீடுகளின் அடிப்படையில் பயிர்களின் முதலாவது அறுவடை/ அறுவடை மாதிரிகளின் அடிப்படையில் தொடர்பான பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுடன் சேர்ந்து சிறு உடமையாளர் வேளாண் வியாபாரப் பங்குடமையாளர் நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவினால் தீர்மானிக்கப்படும். | சலுகைக் காலம் உட்பட உயர்ந்தபட்சக் காலம் அறுபது (36) மாதங்கள் | சலுகைக் காலம் உட்பட உயர்ந்தபட்சம் அறுபது (60) மாதங்கள்<br>குறிப்பு: மீள் கொடுப்பனவுக் காலம் சிறுஉடமையாளர் வேளாண் வியாபாரப் பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவின் மதிப்பீடுகளின் அடிப்படையில் பயிர்களின் முதலாவது அறுவடை/ அறுவடை மாதிரிகளின் அடிப்படையில் தொடர்பான பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுடன் சேர்ந்து சிறுஉடமையாளர் வேளாண் வியாபாரப் பங்குடமையாளர் நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவினால் தீர்மானிக்கப்படும். |
| (எ) | பிணைகள் | கொள்வனவாளர் மற்றும் வேளாண்மையாளர்களுக்கிடையிலான அல்லது அவர்களிடையேயான உத்தரவாதம் அல்லது வேளாண்மைக் குழுக்களுக்கான கம்பனி உத்தரவாதங்களுக்கிடையிலான மீண்டும் வாங்குகின்ற உடன்படிக்கை<br>**குறிப்பு 1:** அவர்களிடையேயான உத்தரவாதம் சாத்தியமில்லையாயின் தனிப்பட்ட உத்தரவாதத்தினைப் பிரயோகிக்க முடியும்<br>**குறிப்பு 2:** கொள்வனவாளர், அரசாங்க, தனியார் உற்பத்தியாளர் பங்குடமை ஏற்பாட்டில் தொடர்புபட்டதாகத் தனிப்பட்ட ஒருவராக அல்லது நிறுவனமாக இருப்பதுடன் வேளாண்மையாளருடன் மீண்டும் வாங்கும் உடன்படிக்கையினையும் கொண்டிருப்பார். | கடன்பாட்டாளர் களிடையேயான உத்தரவாதம் அல்லது இரண்டு குடும்ப அங்கத்தவர்களின் உத்தரவாதம்<br>குறிப்பு: கொள்வனவாளர் தனிப்பட்ட ஒருவராக அல்லது அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர் பங்குடமை ஒழுங்குகளுடன் தொடர்புபட்டவராகவும் வேளாண்மையாளருடன் மீண்டும் வாங்கும் உடன்படிக்கையினைக் கொண்டிருத்தல். | கம்பனி மற்றும் பயன்பெறுநர்களுக் கிடையிலான சேவை உடன்படிக்கை அல்லது பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் தீர்மானிக்கப்பட்டவாறான வேறு பிணையங்கள் |

** துணைக் கடன்பாட்டாளர்கள் சலுகைக் காலப்பகுதியில் வட்டி செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.*

**9. கடன்பாட்டாளர்களைப் பதிவுசெய்தல்**

அ. பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் தலைமை அலுவலகம் கீழே பிரிவு 9இன் (ஆ) மற்றும் (இ) இல் தரப்பட்டவாறான கடன் திட்டங்களின் கீழ் கடன்களைப் பெற விரும்பும் விண்ணப்பதாரிகளின் விபரங்களை தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் இணைப்பு 1(அ) மற்றும் 1(ஆ)இல் தரப்பட்டுள்ளவாறு இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்குச் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவினூடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

ஆ. தனிப்பட்ட கடன்பாட்டாளர்கள் மற்றும் வேளாண்மையாளர் அமைப்பு/ உற்பத்தியாளர் அமைப்பு மற்றும் வேளாண்மையாளர் குழுமம் இரண்டினையும் பொறுத்தவரையில், பங்கேற்கும் நிதியியல் நிறுவனம், ஒவ்வொரு கடன்பாட்டாளர்கள் தொடர்பிலும் சரியாகப் பூர்த்திசெய்யப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தலின் இணைப்பு 1(அ) இனை இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கு செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவினூடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

இ. கடன்பாட்டாளர் வேளாண்மையாளர் குழுவாக/ வேளாண்மையாளர் அமைப்பாக/ உற்பத்தியாளர் அமைப்பாக இருக்குமிடத்து பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் ஒவ்வொரு வேளாண்மையாளர் குழுவிற்கும் வேளாண்மையாளர் அமைப்பிற்கும்/ உற்பத்தியாளர் அமைப்பிற்கும் இணைப்பு 1(ஆ)) இனைத் தனித்தனியாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

ஈ .செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவு தேவையான பின்னணி மதிப்பீடுகளை மேற்கொண்ட பின்னர் விண்ணப்பதாரிகள் அல்லது குழுமத்தின் பட்டியலை இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கு விதந்துரைக்கும்.

**10. ஆவணங்களின் கட்டுக்காப்பு**

பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் தலைமை அலுவலகம்/ கிளை, கொடுகடன் தொடரின் இணைப்பு 1(அ) மற்றும் இணைப்பு 1(ஆ) பூர்த்தி செய்யப்பட்ட பயன்பெறுநரின் விண்ணப்பப் படிவத்தினை வைத்திருத்தல் வேண்டும் என்பதுடன் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் அல்லது செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவு கேட்டுக்கொள்ளும் நேரத்தில் சமர்ப்பித்தலும் வேண்டும். பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் தலைமை அலுவலகம் அல்லது கிளை அலுவலகம், பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் ஏக தற்றுணிபின்படி, பகிர்ந்தளிக்கப்பட்ட கடன் தொடர்பான ஏனைய ஆவணங்களையும் வைத்திருக்கலாம்.

**11. மீள்நிதியிடல் நடைமுறை**

இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் குறிப்பிடப்பட்டுள்ளள நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்கப்பட்ட அனைத்துத் துணைக் கடன்களுக்கும் இலங்கை மத்திய வங்கி 100 சதவீத மீள்நிதியிடலை வழங்கும்.

அ) பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் இலங்கை மத்திய வங்கியுடனான பதிவினைத் தொடர்ந்து 90 நாட்களுக்குள் பதிவுசெய்யப்பட்ட நன்மைபெறுநர்களுக்குப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கடன்களை விடுவித்தல் வேண்டும். குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் ஏதேனும் கடன்களைப் பகிர்ந்தளிக்க முடியாவிடின் அது பற்றி ஏதேனும் ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களுடன் பதிவுசெய்தல் திகதியிலிருந்து 90 நாள் முடியடைந்ததும் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவிற்கும் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கும் அறிவித்தல் வேண்டும். செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவு/ பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் தாமதத்திற்காக தெரிவிக்கப்பட்ட காரணங்களைப் பரிசீலனையில் கொண்டு பதிவுசெய்யப்பட்ட நன்மைபெறுநர்கள் தொடர்பில் பொருத்தமான தீர்மானங்களை மேற்கொள்ளுதல் வேண்டும். பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் கடன்கள் பகிர்ந்தளிக்கப்படுவதற்குத் தவறுமிடத்து அல்லது 90 நாட்களுக்குள் சரியான காரணங்களை வழங்கத் தவறுமிடத்து 90 நாட் காலப்பகுதி கடந்த பின்னர் 14 நாட்களுக்குள் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் இரத்துச் செய்யப்படுவதற்குட்பட்டதாகும்.

ஆ. துணைக் கடன்களை விடுவித்ததன் பின்னர் சரியான முறையில் நிரப்பப்பட்ட விண்ணப்பப் படிவங்களை மீள்நிதியிடலுக்காக பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். ஒவ்வொரு மீள்நிதியிடல் விண்ணப்பத்துடனும் பின்வரும் ஆவணங்கள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

i. மீள்நிதியிடலுக்கான விண்ணப்பம் - இணைப்பு II

ii. மீள்நிதியிடலுக்கான பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் கூற்று விண்ணப்பம் - இணைப்பு III

iii. கோரிக்கையின் பேரிலான வாக்குறுதிச் சான்றிதழ் - இணைப்பு IV

iv. வழங்கல் கடிதம் - இணைப்பு V

v. இலங்கை மத்திய வங்கிக்கு உத்தரவாதமளிப்பதன் மூலம் வழங்கப்படுகின்ற சாட்டுதல் படிவம் - இணைப்பு VI

vi. பகிர்ந்தளிப்புக் கடிதம் - இணைப்பு VII

இ. மீள்நிதியிடல் விண்ணப்பப் படிவத்திற்கு ஒப்புதலளிக்கப்பட்டதும் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் மீள்நிதியிடல் விண்ணப்பத்திற்கு ஒப்புதலளிப்பதுடன், சரியாகப் பூர்த்திசெய்யப்பட்ட மீள்நிதியிடல் விண்ணப்பம் பெறப்பட்ட 30 நாட்களுக்குள் முதல் வந்தது முதலில் என்ற முறையில் அவை கிடைக்கப் பெற்றதன் ஒழுங்கில், நிதியின் கிடைப்பனவினைப் பொறுத்து மீள்நிதியிடலை விடுவிக்கும்.

ஈ. மீள்நிதியிடல் கோரல்கள் பகிர்ந்தளிக்கப்பட்ட 30 நாட்களுக்குள் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் தலைமை அலுவலகங்களினூடாகப் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

உ. மீள்நிதியிடல் கடன்கள் மீதான மூலதனம் மற்றும் வட்டி கொடுப்பனவுகளை பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள், இலங்கை மத்திய வங்கியினால் தயாரிக்கப்பட்ட மீள்நிதியிடலுக்கான மீள்கொடுப்பனவு அட்டவணைக்கிணங்க இலங்கை மத்திய வங்கிக்குச் செலுத்துதல் வேண்டும்.

**12. கடன்களை அறவிடல்**

பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட மீள்நிதியிடலுக்கான மூலதனம் மற்றும் வட்டி என்பன அரையாண்டிற்கொரு முறை ஒவ்வொரு ஆண்டும் அதாவது யூன் 30ஆம் திகதியும் திசெம்பர் 31ஆம் திகதியும் அறவிடப்படும். பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் பின்வரும் சாதன வகைக்கிணங்க மத்திய வங்கிக்கு மீள்கொடுப்பனவுகளைச் செய்தல் வேண்டும்.

**அ. சுழலும் நிதிய வேளாண் வியாபாரக் கடன் திட்டம்** - இக்கடன் சாதனத்தின் கீழ் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் மொத்த மீள்கொடுப்பனவுக் கடன்களைப் பொறுத்தவரை உயர்ந்தபட்சம் பதினெட்டு (18) மாதங்களிலும் மாதாந்த மீள்கொடுப்பனவுக் கடன்களைப் பொறுத்தவரை உயர்ந்தபட்ச காலமாக முப்பத்தாறு (36) மாதங்களிலும் செலுத்துதல் வேண்டும். வேளாண்மையாளர் குழுக்கள், வேளாண்மையாளர் அமைப்புக்கள், உற்பத்தியாளர் அமைப்புக்கள் என்பனவற்றிற்கு வழங்கப்பட்ட கடன்களைப் பொறுத்தவரை உயர்ந்தபட்ச மீள்கொடுப்பனவுக் காலம் அறுபது (60) மாதங்களாக இருக்கும்.

**ஆ. சுழலும் நிதிய வருமான உருவாக்கக் கடன் திட்டம்** - பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் இக்கடன் உற்பத்தியின் கீழ் சலுகைக்காலம் உட்பட உயர்ந்தபட்ச முப்பத்தாறு (36) மாதங்களில் மத்திய வங்கிக்கு மீளச் செலுத்துதல் வேண்டும்.

**இ. சுழலும் நிதிய இளைஞர் கடன் திட்டம்** - பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் இக்கடன் உற்பத்தியின் கீழ் சலுகைக்காலம் உட்பட உயர்ந்தபட்சம் அறுபது (60) மாத காலப்பகுதியில் மீளச் செலுத்துதல் வேண்டும்.

**13. கடன்களை மீள்அட்டவணைப்படுத்தல்/ மீளவமைத்தல்**

அ. பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் தலைமை அலுவலகம் சிறு உடமையாளர் வேளாண் வியாபாரப் பங்குடமையின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவின் விதந்துரைப்புக்களுடன் சுழலும் நிதியக் கடன் திட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட கடன்களின் மீள்கொடுப்பனவுக் காலத்தினை மீளஅட்டவணைணப்படுத்துமாறு/ மீளவமைக்குமாறு இலங்கை மத்திய வங்கியைக் கேட்டுக் கொள்ள முடியும்.

ஆ. நன்மைபெறுநர்களுக்கு வழங்கப்பட்ட ஏற்கனவேயுள்ள கடன்களின் வெளிநின்ற மூலதனமும் வட்டியும் பெயரளவில் நேரகாலத்துடன் தீர்ப்பனவு செய்யப்படுவதுடன் புதிய கடன்கள் பின்வரும் புதிய மீள்கொடுப்பனவுக் காலத்திற்குட்பட்டு உருவாக்கப்படும்.

i. சுழலும் நிதிய வேளாண் வியாபாரம், சுழலும் நிதிய வருமான உருவாக்கம் மற்றும் சுழலும் நிதிய இளைஞர் கடன் திட்டங்கள் போன்ற கடன் திட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட கடன்களுக்காக, மீள்அட்டவணையிடப்பட்ட கடன்கள் தற்போதுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு முன்னர் பதிவுசெய்யப்பட்டுள்ள அதே கடன் திட்டத்தின் கீழ் உருவாக்கப்படும்.

ii. 2018.12.05 அன்று திருத்தப்பட்டவாறான, 2018.04.10ஆம் திகதியிடப்பட்ட இல. ஆர்டிடி/எஸ்ஏபிபி/4பி/2018/01 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளின்படி, சுழலும் நிதிய மூலதனம், சுழலும் நிதிய பருவாகாலக் கடன் திட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட கடன்களுக்காக, மீள்அட்டவணையிடப்பட்ட கடன்கள் சுழலும் நிதிய வேளாண் வியாபாரக் கடன் திட்டத்தின் கீழ் தற்போதுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு சுழலும் நிதிய வேளாண் வியாபாரக் கடன் திட்டத்தின் கீழ் உருவாக்கப்படும்.

iii. 2018.12.05 அன்று திருத்தப்பட்டவாறான 2018.04.10ஆம் திகதியிடப்பட்ட இல. ஆர்டிடி/எஸ்ஏபிபி/4பி/2018/01 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளின்படி, வருமான உருவாக்கக் கடன் திட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட கடன்களுக்காக, சுழலும் நிதிய வருமான உருவாக்கக் கடன் திட்டத்தின் தற்போதுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு சுழலும் நிதிய வருமான உருவாக்கக் கடன் திட்டத்தின் கீழ் அட்டவணையிடப்பட்ட கடன்கள் உருவாக்கப்படும்.

இ. இப்பிரிவின் கீழ் மீள்அட்டவணையிடப்பட்ட அனைத்துக் கடன்களும் கடன்கள் மற்றும் முற்பணங்களின் வகைப்படுத்தல், வருமான அங்கீகாரம் மற்றும் ஒதுக்கீடுகள் தொடர்பான 2008ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்திற்கும் இது தொடர்பில் எதிர்காலத்தில் அறிமுகப்படுத்தப்படவுள்ள தொடர்பான ஏதேனும் பணிப்புரைகளுக்கும் ஏற்புடைத்தான காலத்தில் உட்பட்டு அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

ஈ. இப்புதிய கடன்கள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் மீள்நிதியிடல் வழங்கப்படமாட்டாது என்பதுடன் இது தொடர்பில் பொருத்தமான பதிவேடுகளைப் பேணுமாறு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டன.

உ. மீள்அட்டவணையிடப்பட்ட/ மீளவமைக்கப்பட்ட கடன்கள் தொடர்பில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு விடுக்கப்பட்ட புதிய அறவிடல் அட்டவணைக்கிணங்க பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் இலங்கை மத்திய வங்கிக்கு மீளச் செலுத்துதல் வேண்டும்.

**14. அறிக்கையிடல்**

பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள், இணைப்பு (viii)இல் உள்ளவாறு கடப்பாடுகள், பகிர்ந்தளித்தல் மற்றும் மீள்நிதியிடல் கடன் விபரங்களை அடுத்த மாதம் 15ஆம் திகதிக்கு முன்னதாக, செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவிற்கான பிரதியொன்றுடன் மாதாந்த அறிக்கையினை இலங்கை மத்திய வங்கிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள், இணைப்பு IX இல் உள்ளவாறு பகிர்ந்தளிக்கப்பட்ட துணைக் கடன்களின் செயற்படாக் கடன்களின் நிலையினைக் காலாண்டு அடிப்படையில் அறிவித்தல் வேண்டும்.

**15. கணக்குகளை கணக்காய்வு செய்தல்**

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் சுழலும் நிதியக் கடன் திட்டங்களின் ஆண்டு நிதியியல் கூற்றுக்களைத் தயாரிப்பதுடன் அத்தகைய நிதியியல் கூற்றுக்கள் கணக்காய்வாளர் நாயகத்தினால் கணக்காய்வு செய்யப்படும். பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களும் வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறு கணக்காய்வு செய்யப்பட்ட இந்நிகழ்ச்சித்திட்டத்தின் நிதியியல் கூற்றுக்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

**16. நடைமுறைக்குவரும் நாள்**

இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் 2019.08.21 அன்று நடைமுறைக்கு வருதலாதல் வேண்டும். இத்திகதிக்கு முன்னர் வழங்கப்பட்டுள்ள அனைத்துக் கடன்களும் (2018.12.05 அன்று திருத்தப்பட்டவாறான) 2018.04.10 திகதியிடப்பட்ட இல. ஆர்டிடி/எஸ்ஏபிபி/4பி/2018/01 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் அதிகாரவரம்பின் கீழ் வருதல் வேண்டும்.

**17. (2018.12.05 அன்று திருத்தப்பட்டவாறு) 2018.04.10 திகதியிடப்பட்ட இல. ஆர்டிடி/எஸ்ஏபிபி/4பி/2018/01 கொண்ட முன்னைய தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுடன் தொடர்பான தொழிற்பாடுகள்**

அ. சுழலும் நிதிய மூலதனம், சுழலும் நிதிய பருவகாலக் கடன் திட்டங்களின் கீழ் செயன்முறைப்படுத்தப்பட்டுவரும் அனைத்துக் கடன்களையும் (2018.12.05 அன்று திருத்தப்பட்டவாறு) 2018.04.10ஆம் திகதியிடப்பட்ட இல. ஆர்டிடி/எஸ்ஏபிபி/4பி/2018/01 கொண்ட முன்னைய தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் கீழ் 2019.08.20 இற்கு முன்னதாகப் பதிவு செய்தல் வேண்டும்.

ஆ. (2018.12.05 அன்று திருத்தப்பட்டவாறு) 2018.04.10ஆம் திகதியிடப்பட்ட இல. ஆர்டிடி/எஸ்ஏபிபி/4பி/2018/01 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் கீழ் பதிவுசெய்யப்பட்ட கடன்களைப் பகிர்ந்தளிப்பதற்குப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் எதிர்பார்ப்பதுடன் 2019.11.18ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ உரிய நடைமுறைகளைப் பின்பற்றி இலங்கை மத்திய வங்கியிலிருந்து மீள்நிதியிடலைக் கோருதல் வேண்டும். 2019.11.18ஆம் திகதிக்குப் பின்னர் இப்பிரிவின் கீழ் பெறப்படுகின்ற மீள்நிதியிடல் விண்ணப்பங்களுக்கு இலங்கை மத்திய வங்கி மீள்நிதியிடல் எதனையும் வழங்கமாட்டாது.

இ. இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தலின் 13ஆம் பிரிவின் கீழ் குறித்துரைக்கப்பட்ட நடைமுறைகளைத் தொடர்ந்து (2018.12.05 அன்று திருத்தப்பட்டவாறான) 2018.04.10ஆம் திகதியிடப்பட்ட இல. ஆர்டிடி/எஸ்ஏபிபி/4பி/2018/01 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் கீழ் வழங்கப்பட்ட கடன்களை மீளவமைத்தல்/ மீளஅட்டவணைப்படுத்துமாறு இலங்கை மத்திய வங்கியினைக் கோரமுடியும்.

18. ஏனையவை

சிறு உடமையாளர் வேளாண் வியாபாரப் பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவின் கோரிக்கையின் மீது, இலங்கை மத்திய வங்கி அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர் பங்குடமைச் செயற்றிட்டங்களை அடையாளம் காணுதல் மற்றும் நடைமுறைப்படுத்தல், இளைஞர் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்திச் செயன்முறைப்படுத்தல் மற்றும் சுழலும் நிதியக் கடன் திட்டங்களுடன் தொடர்பான ஏனைய செயன்முறைகளில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் உசாத்துணைக்காக சிறு உடமையாளர் வேளாண் வியாபாரப் பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவினால் வடிவமைக்கப்பட்டு வரையப்பட்டுள்ளன.

சுழலும் நிதியக் கடன் திட்டங்கள் தொடர்பான நியதிகளையும் நிபந்தனைகளையும் எப்பொழுது தேவையோ அப்பொழுது திருத்துவதற்கான உரிமையினை மத்திய வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது.

உங்கள் உண்மையுள்ள
எம்.எஸ்.கே தர்மவர்தன
**பணிப்பாளர்/ பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்**
**இலங்கை மத்திய வங்கி**

**இணைப்பு I (அ)**

**தனிப்பட்ட நன்மைபெறுநர் விண்ணப்பம்**

பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள்: இலங்கை மத்திய வங்கி நன்மைபெறுநர் பதிவு இல.: ..........................................................

**தனிப்பட்ட வாடிக்கையாளர்களுக்கான கடன் பதிவுசெய்தல் விண்ணப்பம் - சிறுஉடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் (............................................... கடன் திட்டம்)**

கிளையின் பெயர்: மாவட்டம்:

கிளையின் முகவரி:

1. செயற்றிட்டம்/ பங்கேற்கும் கம்பனியின் பெயர் :
2. தொலைபேசி இல./ தொலைநகல் இல. :
3. விண்ணப்பதாரி/ தாரிகளின் அந்தஸ்து : தனிப்பட்டவர் ☐ குழு உறுப்பினர் ☐
4. குழு உறுப்பினரொருவராயின்; குழுவின் பெயர் :
   குழுவின் பதிவிலக்கம் :
5. விண்ணப்பதாரி/ தாரிகளின் பெயர் மற்றும் முகவரி :

| | பெயர் | முகவரி | தே.அ.அ./ இலக்கம் | பால் |
|---|---|---|---|---|
| i. | | | | |

6. கடனின் நோக்கம்:

..........................................................................................................................................

7. முன்னர் பெறப்பட்ட கடன்கள் அல்லது தற்பொழுது சிறுஉடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செயன்முறைப்படுத்தப்பட்டுவரும் கடன்கள் (தேவையாயின் மேலும் நிரல்களை அதிகரித்துக் கொள்ளவும்).

| கடன் திட்டம் | நோக்கம் | தொகை (ரூ.) |
|---|---|---|
| சுழலும் நிதிய வேளாண் வியாபாரம் | | |
| சுழலும் நிதிய வருமான உருவாக்கம் | | |
| சுழலும் நிதிய இளைஞர் | | |

8. செயற்றிட்ட இடம் மற்றும் அமைவிடத்தின் முழுமையான முகவரி:

..........................................................................................................................................

9. வியாபாரத்தின்/ சிறுதொழில்முயற்சிகளின் வகை: .................................................................

10. கடன் திட்டத்தின் கீழ் நிதியிடப்படவுள்ள வியாபாரம்/ சிறுதொழில்முயற்சிகள் பற்றிய சுருக்கமான விபரணம்:

..........................................................................................................................................................................................................

11 செயற்றிட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு: ரூ. ..........................................................................................................................

12. பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தினால் விதந்துரைக்கப்பட்ட/ ஒப்புதலளிக்கப்பட்ட கடன் தொகை: ரூ. .................................

................................................ ........................................................................

நன்மைபெறுநரின் பெயர் மற்றும் கையொப்பம்

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர்,
கையொப்பம் மற்றும் அலுவலக இறப்பர் முத்திரை

திகதி: .......................................

**இணைப்பு I (ஆ) : சுழலும் நிதியக் கடன் திட்டங்கள் - சிறுஉடமையாளர் வேளாண் வியாபாரப் பங்குடமைகள் நிகழ்ச்சித்திட்டம்**

**துணைக் கடன்பாட்டாளர்களைப் பதிவுசெய்தல்**
(கடன் திட்டத்தின் பெயர்)

விண்ணப்ப இலக்கம்: .......................

சேரல் : இலங்கை மத்திய வங்கி

ஊடாக: சிறுஉடமையாளர் வேளாண் வியாபாரப் பங்குடமைகள் நிகழ்ச்சித்திட்டம் - செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவு

பங்கேற்கும் நிறுவனத்தின் பெயர் :

பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் கிளையின் பெயர் :

| # | விண்ணப்பதாரியின் பெயர் | விண்ணப்பதாரியின் முகவரி மற்றும் தொடர்பு இலக்கம் | பால் | கடன்பெறுநரின் அந்தஸ்து (தனிப்பட்டவர்/ (குழு உறுப்பினர்) | தே.அ. அட்டை | குழுவின் பெயர் மற்றும் பதிவிலக்கம் (குழு உறுப்பினர்களுக்காக | கடன் விபரங்கள் | | | இ.ம.வங்கியின் பதிவு இலக்கம்* |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | செயற்றி ட்டத்தின் பெயர் | நோக்கம் | தொகை | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள செயற்றிட்டங்கள் என்னால்/ வங்கியின் கொடுகடன் அலுவலரினால் பரீட்சிக்கப்பட்டன எனவும் அவை சிறுஉடமையாளர் வேளாண் வியாபார நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிதியிடப்படுவதற்குத் தகைமையுடையன எனவும் நான் உறுதிப்படுத்துகிறேன்.

.................................................................... ............................................................

(அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர், கையொப்பம் மற்றும் அலுவலக முத்திரை) திகதி

* இலங்கை மத்திய வங்கியின் உபயோகத்திற்கு மாத்திரம்

**இணைப்பு II**

**மீள்நிதியிடல் விண்ணப்பம்**

மீள்நிதியிடல் விண்ணப்ப இலக்கம்: ................................................
(............ இலக்கம் கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தலின் கீழ்)

முகவரி:

திகதி:

**மீள்நிதியிடலுக்கான விண்ணப்பம் -**

**சிறுஉடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான .......... கடன் திட்டம்**

சேரல்: இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை

உரிமம் பெற்ற வர்த்தக வங்கி மற்றும் அபிவிருத்தி வங்கிகள்/ உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கி/ நுண்பாக நிதி நிறுவனங்கள் மற்றும் எழுத்து மூலமான உறுதிப்படுத்தப்பட்ட எங்கள் யாப்பினை ஏற்கனவே சமர்ப்பித்த/ சமர்ப்பிக்கின்றவர்களுமாகிய நாங்கள் ................................................
..........................................................................................................................................................................................................

(பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர்) மேற்குறிப்பிட்ட மீள்நிதியிடல் திட்டத்தின் கீழ் ரூபா............................... (ரூ.......................) கொண்ட கடனைப் பெறுவதற்காக இத்தால் விண்ணப்பிக்கின்றோம்.

2. இவ்விண்ணப்பத்தினைத் தயாரிக்கையில், தங்களின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இல. .................... இல் குறித்துரைக்கப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் **சிறுஉடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின்** சுழலும் நிதியக் கடன் திட்டங்களின் கீழ் 2018 ............ ஆம் திகதியிடப்பட்ட (............ இல் திருத்தியமைக்கப்பட்டவாறு) இலங்கை மத்திய வங்கிக்கும் எங்களுக்குமிடையிலான துணைக் கடன் உடன்படிக்கைக்கும் இணங்கியொழுகுவதற்கு நாம் உடன்படுகின்றோம்.

3. மேலே குறிப்பிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களினால் தேவைப்படுத்தப்பட்டவாறும் அதிலுள்ள விடயங்களுக்கு இணங்கிச் செல்லும் விதத்திலும் மேலே குறிப்பிடப்பட்ட மீள்நிதியிடல் திட்டத்தின் கீழ் எங்களால் வழங்கப்பட்ட கடன்களின் கூற்றினை இத்துடன் அனுப்பி வைக்கின்றோம். இக்கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள கடன்கள் மீள்நிதியிடல் கடனுக்கான விண்ணப்பமொன்றிற்கு ஆதரவளிக்கும் விதத்தில் ஏதேனும் முன்னைய கூற்றில் பிரதிபலிக்கப்பட்டிருக்கவில்லை என்பதனையும் உறுதிப்படுத்துகின்றோம்.

4. பின்வருவன தொடர்பில் நாம் திருப்தியடைந்துள்ளதாக இத்தால் உறுதிப்படுத்துகிறோம். (i) மேலே பந்தி 3இல் குறிப்பிடப்பட்டுள்ள கடன்கள் மேற்குறிப்பிட்ட திட்டங்களின் கீழ் தகைமையுடைய செயற்றிட்டங்களுக்காகத் தகைமையுடைய துணைக் கடன்பாட்டாளர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. (ii) அத்தகைய கடன்கள் தொடர்பான துணைக் கடன்பாட்டாளர்களின் கடன்பாட்டு அதிகாரங்களுக்குள் காணப்படுகின்றன. (iii) அத்தகைய கடன்களின் மீள்கொடுப்பனவிற்காகப் பெறப்பட்ட உத்தரவாதங்களைப் பொறுத்தவரை உத்தரவாதிகள் அத்தகைய உத்தரவாதங்களை வழங்கும் அதிகாரங்களைக் கொண்டிருக்கின்றனர் என்பன தொடர்பில் நாம் திருப்தியடைந்துள்ளோம் என்பது பற்றி இத்தால் உறுதிப்படுத்துகின்றோம்.

**பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் அதிகாரமளிக்கப்பட்ட**
**அலுவலர்/(கள்) இன் கையொப்பம் பெயர் மற்றும் பதவி**
**முகாமையாளர், மீள்நிதியிடல் பிரிவு**

**இணைப்பு III: மீள்நிதியிடலுக்கான விண்ணப்பம்**

**மீள்நிதியிடல் விண்ணப்ப இலக்கம்: ........................**

**............................ கடன் திட்டத்தின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் கூற்று**
**(சிறுஉடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம்)**

சேரல் : இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை
இலிருந்து : மீள்நிதியிடல் பிரிவு: ...................................

பங்கேற்கும் நிதியியல் நிறுவனம் : .............................................. கிளை: ........................... மாவட்டம்: ......................

| பதிவு இல. | கடன் பாட்டாளரின் பெயர் மற்றும் முகவரி | தே.அ.அ இல. | கடன் வகை | கடனின் நோக்கம்* | துணைக் கடன் தொகை | | பகிர்ந் தளிப்புத் திகதி | மீள்நிதியிடல் எதிர்பார்க்கப்படு பனவற்றிற்காக பகிர்ந்தளிக்கப்பட்ட தொகை | | சலுகைக் காலம் | மீள்கொடுப்பனவு அட்டவணை | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | கடன் சுழற்சி** | தொகை (ரூ.) | | தவணைகளின் எண். | தொகை (ரூ.) | | தவணைகள் எண். | தவணைகள் பெறுமதி | முதல் தவணைக்குரிய திகதி | இறுதித் தவணைக்கான திகதி |
| | | | | | | | | | | | | | | |
| மொத்தம் | | | | | | | | | | | | | | |

இலங்கை மத்திய வங்கிக்கும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்குமிடையிலான மீள்நிதியிடல் உடன்படிக்கையில் இணங்கப்பட்டவாறு, மேலேயுள்ள மீள்கொடுப்பனவு அட்டவணையில் தரப்பட்டுள்ள விதத்தில் வருடாந்தம் இரண்டு தவணைகளில் இலங்கை மத்திய வங்கிக்கு மேற்குறிப்பிட்ட கடனைச் செலுத்த நாம் இத்தால் வாக்குறுதி வழங்குகிறோம்.

....................................... .

திகதி

..............................................................................

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்

* அரச தனியார் உற்பத்தியாளர் பங்குடமை நிகழ்ச்சித்திட்டப் பெயருடன் சேர்த்து செயற்றிட்ட நோக்கத்தினைக் குறிப்பிடவும்

** 1ஆவது கடன், 2ஆவது கடன், 3ஆவது கடன் எனக் குறிப்பிடவும்

**இணைப்பு IV**: வாக்குறுதிச் சான்றிதழ்

மீள்நிதியிடல் விண்ணப்ப இல.:- ........................................................

(2019...... திகதியிடப்பட்ட ....... இலக்கம் கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் கீழ்)

திகதி: ..................

**கோரலின் பேரிலான வாக்குறுதிச் சான்றிதழ்**

ரூ. ................................................

கோரலின் பேரில் கீழே கையொப்பமிட்டுள்ள ........................................................................................................................................................................................................................................................................ (பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி) ஆகிய நாங்கள் **இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபைக்கு** அல்லது **கட்டளையின்படி கொழும்பில்**, பெறப்பட்ட பெறுமதியையும் இங்கே குறிப்பிட்டுள்ள திகதியிலிருந்து ஆண்டொன்றிற்கு .....................% வீதத்திலமைந்த அதற்கான வட்டியையும் சேர்த்து ரூபா ........................................................................................ (ரூ...................) இனைச் செலுத்த இத்தால் உறுதியளிக்கின்றோம்.

.......................................................................................................

(பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர்) இற்காக
மீள்நிதியிடல் பிரிவு
தலைமை அலுவலகம்

............................... (முத்திரை)

1. ........................................................
2. ................................................

(அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்/ அலுவலர்களின் கையொப்பம்)

சாட்சிகள்
1. ..........................................
2. ..........................................

**இணைப்பு V**: வழங்கல் கடிதம்

மீள்நிதியிடல் விண்ணப்ப இல.:- .........................................................

(2019......... திகதியிடப்பட்ட ............ இலக்கம் கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தலின் கீழ்)

திகதி:

**வழங்கல் கடிதம்**

**சேரல்: இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை**

தங்களின் ..................... திகதியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல. ஆர்டிடி/ ............ இல் குறிப்பிடப்பட்டுள்ள **சிறுஉடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான .............** என்ற பெயரிலான மீள்நிதியிடல் திட்டத்திற்கு எங்களால் மேற்கொள்ளப்பட்ட கடன்வழங்கல் தொழிற்பாடுகள் தொடர்பில் எங்களுக்கு வழங்கப்பட்டுள்ள மீள்நிதியிடல் நோக்கத்துடன் **ரூபா............................................. (ரூ.............)** இனை கடன் வழங்க உடன்பட்டுள்ளீர்கள் என்பதனைக் கவனத்தில் கொண்டு இத்தால் நாங்கள் தங்களின் சார்பில் விடுக்கப்பட்ட கோரிக்கையின் பேரில் அதற்கான வட்டியுடன் சேர்த்துச் செலுத்தத்தக்க ரூபா................................................ இற்கான (ரூ...............) வாக்குறுதிச் சான்றிதழை வழங்குகின்றோம்.

கொடுப்பனவிற்கான சமர்ப்பித்தலை நாம் இத்தால் வலியுறுத்தாமல் விடுவதுடன் எமது குறிப்பிட்ட வாக்குறுதிச்சான்றிதழ் தொடர்பில் மறுப்பது பற்றிய அறிவித்தல் வழங்கப்பட வேண்டுமென்ற அவசியமுமில்லை என நாம் இத்தால் தெரிவித்துக் கொள்கிறோம்.

(பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர்) இற்காக
மீள்நிதியிடல் பிரிவு
தலைமை அலுவலகம்

1. ........................................................
2. ................................................

(அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்/ அலுவலர்களின் கையொப்பம்)

**இணைப்பு VI**: சாட்டுதல் படிவம்

மீள்நிதியிடல் விண்ணப்ப இல.:- ...............................................................

(.................... இலக்கம் கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தலின் கீழ்)

திகதி:

**நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 88அ இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபைக்கு உத்தரவாதமளிப்பதன் மூலமான சாட்டுதல் படிவம்***

நாணய விதிச் சட்டத்தின் 88(அ) பிரிவின் நியதிகளில் .................................................................................................................................................................................................................................................................................................................................................(பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி) ஆகிய நாங்கள் இங்கே தரப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களின்படி எமக்கு வழங்கப்பட்டுள்ள படுகடனை மீளச்செலுத்துவதற்கான பிணையாக/ மேலும் பிணையமாக வங்கியினால் எமக்கு வழங்கப்பட்ட கடனை ஆண்டிற்கு .................... வட்டியுடன் ரூபா..........................................(ரூ..........) கொண்ட கடனை இலங்கை மத்திய வங்கிக்கு மீளச்செலுத்துவதற்கான சாட்டுதலை இத்தால் மேற்கொள்கிறோம்.

**அட்டவணை**

| படுகடன் தொகை (ரூ.) | கடன்பாட்டாளர் பெயர் மற்றும் முகவரி | திகதி | நொத்தாரிசு |
|---|---|---|---|
| | | | |

..............................................................
அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்
(பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர்) இற்காக
மீள்நிதியிடல் பிரிவு
தலைமை அலுவலகம்

---

* உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினால் பயன்படுத்தப்படுவதற்கு மட்டும்.

**இணைப்பு VII**:

**பகிர்ந்தளிப்புக் கடிதம்**

(2019........ திகதியிடப்பட்ட ............... இலக்கம் கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தலின் கீழ்)

வங்கியின் பெயர்:
வங்கியின் குறியீட்டு இல:
கிளையின் பெயர்:
கிளையின் குறியீட்டு இல:
கடனின் பதிவு இல:
திகதி:
பகிர்ந்தளிப்பு:

**..................... கடன் திட்டத்தின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் கூற்று**

விசாரணை இலக்கம்:

1. **கடன்பாட்டாளரின் விபரங்கள்** :
   - 1.1 கடன்பாட்டாளரின் பெயர் :
   - 1.2 கடன்பாட்டாளரின் முகவரி :

2. **கடனின் விபரங்கள்**
   - 2.1 கடனின் நோக்கம் :
   - 2.2 துணைச் செயற்றிட்டத்தின் அமைவிடம் :
   - 2.3 ஒப்புதலளிக்கப்பட்ட கடனின் மொத்தத் தொகை: ஆரம்பத் தொகை ரூ.
     அதிகரித்த செலவிற்காக பின்னர் அதிகரிக்கப்பட்ட கடன் ரூ.
     **மொத்தம் ரூ.**
   - 2.4 மூலக் கடன் தொகைக்கு ஒப்புதலளித்த திகதி:
     கடன் அதிகரிப்பிற்கு ஒப்புதலளிக்கப்பட்ட திகதி:
   - 2.5 மீள்நிதியிடல் விண்ணப்பிக்கப்பட்ட தவணைப் பணத்திற்கான மீள்கொடுப்பனவு நிகழ்ச்சித்திட்டம்:
     திகதி: தொகை (ரூ.):
   - 2.6 வட்டி வீதம்

**3. கடனின் நிலை**

3.1 முன்னர் வழங்கப்பட்ட தொகை )
மற்றும் இ.ம. வங்கியிலிருந்து கோரப்பட்ட மீள்நிதியிடல் ) ரூ.

3.2 தற்பொழுது வழங்கப்பட்ட தொகை )
மற்றும் இதற்காக எதிர்பார்க்கப்படுகின்ற மீள்நிதியிடல் ) ரூ.

மொத்தம் ரூ.

மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவையும் சரியானவையுமென நான் உறுதிப்படுத்துகிறேன்.

திகதி:

கிளை முகாமையாளரின் கையொப்பம்
கிளை முகாமையாளரின் பெயர்

* பொருத்தமான கூட்டில் புள்ளடி அடையாளத்தினை இடுவதன் மூலம் இது 1ஆவது, 2ஆவது அல்லது எந்தத் தவணைக்குரியது என்பதனை தயவுசெய்து காட்டவும்.

**இணைப்பு VIII**

**சுழலும் நிதியக் கடன் திட்டங்கள் - சிறுஉடமையாளர் உற்பத்தியாளர் பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம் பற்றி அறிக்கையிடல்**

பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர் :
ஆண்டு மற்றும் மாதம் :
கடன் திட்டம் :

| அரசாங்க தனியார் பங்குடமை நிகழ்ச்சித்திட்ட செயற்றிட்டத்தின் பெயர் | அந்தஸ்து பதிவு செய்யப்பட்டவை/ பகிர்ந்தளிக்கப்பட்டவை* | நன்மைபெறுநர்களின்/ துணைக் கடன்பாட்டாளர்களின் எண்ணிக்கை | | | மொத்தத் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | மொத்தம் | |
| | | | | | |
| | | | | | |

திகதி:

பதவி மற்றும் கையொப்பம்:

* தயவுசெய்து பதிவுசெய்யப்பட்ட மற்றும் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் தகவல்களைத் தனித்தனியாக அறிக்கையிடவும்

**இணைப்பு IX**: செயற்படாக் கடனின் நிலை

................................ கடன் திட்டம்

பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர் :

உள்ளவாறு செயலாற்றம் :

(தொகை ரூ. '000)

| மாவட்டம் | .......... இல் உள்ளவாறு மொத்த வெளிநின்ற நிலுவை | | சிறப்பாகக் குறிப்பிடப்படல் | | கீழ்நிலைப் படுத்தப்பட்டது | | ஐயத்திற்குரியது | | இழப்பு | | மொத்த செயற் படாக் கடன் | செயற் படாக் கடன்* (%) | செயற் படாக் கடன்** (%) | செயற் படாக் கடன்*** (%) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கடன்களின் எண்ணிக்கை | தொகை | கடன்களின் எண்ணிக்கை | தொகை | கடன்களின் எண்ணிக்கை | தொகை | கடன்களின் எண்ணிக்கை | தொகை | கடன்களின் எண்ணிக்கை | தொகை | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |

* இதே திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மொத்தக் கடன்களின் சதவீதமாகக் குறிப்பிட்ட மத்திய வங்கி கடன் திட்டத்தின் செயற்படாக் கடன்கள்

** வங்கியின் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்களின் சதவீதமாகக் குறிப்பிட்ட இலங்கை மத்திய வங்கியின் கடன் திட்டத்தின் செயற்படாக் கடன்கள்

*** வங்கியின் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்களின் சதவீதமாக வங்கியின் செயற்படாக் கடன்கள்

வங்கியின் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் (ரூ.மில்.) : ................................................................................

வங்கியின் மொத்தச் செயற்படாக் கடன்கள் (ரூ.மில்.) : ................................................................................

**அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர் மற்றும் பதவி**

**இணைப்பு அ**

**புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சலுகைக் காலங்கள்**

| பயிர் வகை | பயிர் | உயர்ந்தபட்ச சலுகைக் காலம் |
|---|---|---|
| நெல் | நெல் | 270 நாட்கள் |
| மிளகாய் | மிளகாய் | |
| வெங்காயம் | வெங்காயம் | |
| தானியங்கள் | தட்டைப்பயறு, பச்சைப்பயறு, உழுந்து, சோயா அவரை, சோளம், குரக்கன் | |
| எண்ணெய் விதைகள் | வேர்க்கடலை, எள்ளு, சூரியகாந்தி | |
| வேர் மற்றும் கிழங்குகள் | உருளைக்கிழங்கு, வத்தாளைக்கிழங்கு, மரவள்ளி, வெள்ளைக்கிழங்கு | |
| காய்கறிகள் | கத்தரிக்காய், வெண்டிக்காய், பீட்றூட், அவரை, கோவா, கரட், கறிமிளகாய், தக்காளி, லீக்ஸ், முள்ளங்கி, நோக்கோல், லபா, பாகற்காய், புடலங்காய், பூசணிக்காய் | |
| ஏனையவை | இஞ்சி | 270 நாட்கள் |
| | கரும்பு | 360 நாட்கள் |

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண்.: ஆர்டிடி/எஸ்ஏபிபி/4பி/2019/01**

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
அ.பெ. இல. 590
இல.30 சனாதிபதி மாவத்தை
கொழும்பு - 01
2019.08.06

சேரல்: அனைத்துப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும்

**சிறுஉடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை வேளாண் வியாபாரம் மற்றும் அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர் பங்குடமை இளைஞர் கடன் திட்டங்களுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்**

இது 2018.04.10ஆம் திகதியன்று (2018.12.05ஆம் திகதியன்று திருத்தப்பட்டவாறு) பணிப்பாளர், பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் இலங்கை மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இல. ஆர்டிடி/எஸ்ஏபிபி/4பி/2018/01 இற்கு மேலதிகமானதாகும்.

1. **அறிமுகம்**

சிறுஉடமையாளர் வேளாண் வியாபாரப் பங்குடமை நிகழ்ச்சித்திட்டக் கடன் திட்டங்களின் தொழிற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்துகின்ற நோக்குடன் வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தின் கிராமிய நிதித் தூதுக்குழுவினால் செய்யப்பட்ட விதந்துரைப்புக்களையும் சனாதிபதி செயலகத்தின் கீழ் ெ தாழிற்படுகின்ற சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவின் கோரிக்கையினையும் பரிசீலனையில் கொண்டு சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் கொடுகடன் கூறின் கீழ் நடைமுறைக்கிடப்பட்ட கடன் திட்டங்களை மீளவமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் முக்கியமாக, தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் 17ஆவது பிரிவில் தரப்பட்டுள்ளவாறு 2019.08.20ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் (2018.12.05இல் திருத்தப்பட்டவாறான) 2018.04.10ஆம் திகதியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இல. ஆர்டிடி/எஸ்ஏபிபி/4பி/2018/01 இனால் அறிமுகப்படுத்தப்பட்ட **அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர் பங்குடமை மூலதனம் மற்றும் அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர் பங்குடமை பருவ காலக் கடன் திட்டங்களின்** தொழிற்பாடுகளை மட்டுப்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டிருந்தன. மேலும், **அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை மூலதன வேளாண் வியாபார கடன் திட்டம்** அறிமுகப்படுத்தப்படவுள்ளதுடன் **இளைஞர் கடன் திட்டமானது அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை இளைஞர் கடன் திட்டமென** மீளப் பெயரிடப்படும். இதன்படி, இதனகத்துப் பின்னர் வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினால் வழங்கப்பட்ட கொடுகடனுக்கான கடன் பெறுகைகள் சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் கூறு 2: கிராமிய நிதியைப் பெறுவதற்கான அணுகுமுறை மற்றும் துணைக்கூறு 2.1: அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர் பங்குடமையின் நிதியிடல் ஆகியவற்றின் நியதிகளில் **அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர் பங்குடமை வேளாண் வியாபாரம் மற்றும் அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர் பங்குடமை இளைஞர் கடன் திட்டங்களுக்குப்** பயன்படுத்தப்படும்.

தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் நடைமுறைக்குவரும் திகதி 2019.08.21 ஆக இருக்கும். இத்திகதிக்கு முன்னர் வழங்கப்பட்ட அனைத்துக் கடன்களும் (2018.12.05 அன்று திருத்தப்பட்டவாறான) 2018.04.10ஆம் திகதியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இல. ஆர்டிடி/எஸ்ஏபிபி/4பி/2018/01 இன் அதிகாரவரம்பின் கீழ் இருக்கும்.

**2. அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை மூலதனம், அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை பருவகால மற்றும் இளைஞர் கடன் திட்டங்களின் குறிக்கோள்**

கடன் திட்டங்களின் முதன்மைக் குறிக்கோள் யாதெனில் வேளாண்மை உற்பத்திகளின் உற்பத்தியாக்கம் மற்றும் தரத்தினை அதிகரிப்பதும் அவ்வுற்பத்திகளின் பெறுமதிகளைக் கூட்டுவதுமேயாகும்.

அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை மூலதனம், அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை பருவகால மற்றும் இளைஞர் கடன் திட்டங்களின் மற்றைய குறிக்கோள்கள் வருமாறு:

அ. வேளாண்மையாளர்களுக்கான கடனின் கொடுக்கல்வாங்கல் செலவினைக் குறைத்தல்.

ஆ. வேளாண்மையாளர்களின் சமூக நிலைமைகளை மேம்படுத்தல்.

இ. வேளாண்மையாளர்களை முறைசார்ந்த நிதியியல் முறைமைக்குள் கொண்டு வருவதன் மூலம் கிராமிய வேளாண்மையாளர்களிடையே நிதியியல் உள்ளீட்டினை உயர்த்துதல்.

ஈ. கிராமிய வேளாண்மையாளர்களிடையே பெறுமதிச் சங்கிலித் தொடர் சந்தைப்படுத்தலையும் இணைப்புக்களையும் அபிவிருத்தி செய்தல்.

உ. கிராமிய வேளாண்மையாளர்களுக்காக நவீன வேளாண்மை முறைகளின் தேர்ச்சிகளை அறிமுகப்படுத்தல்.

ஊ. வேளாண்மை உற்பத்திகளை அதிகரிப்பதற்கும் நாட்டின் மொ.உ.உற்பத்தி வளர்ச்சிக்குப் பங்களிப்பதற்கும் வேளாண்மையாளர்களை ஊக்குவித்தல்.

எ. அரச தனியார், உற்பத்தியாளர் பங்குடமை செயற்றிட்டங்கள் மூலமாக இளைஞர் தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல்.

ஏ. இயலளவைக் கட்டியெழுப்புவதனூடாக கிராமிய இளைஞர்களை ஊக்குவித்தல், திறன் மட்டங்களை உயர்த்துதல்.

ஐ. வேளாண்மையாளர்களிடையே சேமிப்புப் பழக்கத்தினையும் சிக்கனத்தினையும் தூண்டுதல்.

ஒ. வேளாண்மை உற்பத்திகளையும் பெறுமதிகூட்டல்களையும் அதிகரிப்பதனூடாக வேளாண்மையாளர்களின் வீட்டலகுகளினது வருமானத்தினை அதிகரிப்பதன் வாயிலாக அவர்களின் வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்துதல்.

**3. தொழிற்பாட்டுப் பிரதேசங்கள்**

நிகழ்ச்சித்திட்டமானது தீவு முழுவதற்கும் நடைமுறைப்படுத்தப்படும்.

**4. தகைமையுடைய நடவடிக்கைகள்**

அ. அரசாங்க, தனியார் உற்பத்தியாளர் பங்குடமை ஏற்பாடுகளில் ஈடுபடுகின்ற வேளாண்மையாளர்கள், வேளாண்மையாளர் குழுக்கள், வேளாண்மையாளர் அமைப்புக்கள் மற்றும் உற்பத்தியாளர் அமைப்புக்களினால் மேற்கொள்ளப்படுகின்ற வேளாண் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற

ஆ. ஏதேனும் வேளாண்மை பெறுமதிச் சங்கிலியுடன் தொடர்புபட்டுள்ள இளைஞர்களினால் மேற்கொள்ளப்படும் தொழில்முயற்சியாண்மை நடவடிக்கைகள்

**5. துணைக் கடன் வகைகள்**

கொடுகடனுக்காக கடன்பெறுகைகளிலிருந்து வழங்கப்படுகின்ற துணைக் கடன் வகைகள் பின்வருமாறு:

அ. அரச, தனியார், உற்பத்தியாளர்கள் பங்குடமை வேளாண் வியாபாரக் கடன்கள்

ஆ. அரச, தனியார், உற்பத்தியாளர் பங்குடமை இளைஞர் கடன்கள்

**6. பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் வகிபாகமும் அவற்றின் பொறுப்புக்களும்**

அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை மூலதனம், அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை பருவகால மற்றும் இளைஞர் கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் தீவிரமான வகிபாகமொன்றினை ஆற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் பின்வருவனவற்றை மேற்கொள்ளுதல் வேண்டும்:

அ. அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் - பங்குடமை மூலதனம்; அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை பருவகால மற்றும் இளைஞர் கடன் திட்ட ஏற்பாடுகளின் ஆரம்பக் கலந்துரையாடல்களின் போது, சிறு உடமையாளர் வேளாண் வியாபாரப் பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவிடம் அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை கடன் திட்டங்களின் கீழான கடன்களைச் செய்முறைப்படுத்துவதற்குத் தேவையான அனைத்து ஆவணங்களினது பட்டியலையும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்குத் தேவைப்படும் சிறப்பான தேவைப்பாடுகளையும் வழங்குதல் வேண்டும்.

ஆ. அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை மூலதனம், அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை பருவகால மற்றும் இளைஞர் கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான அலுவலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளமையினை உறுதிப்படுத்துதல்.

இ. கொடுகடன்களை வழங்குதல் மற்றும் அறவிடுதல் என்பனவற்றின் முழுப் பொறுப்பினையும் ஏற்றுக்கொள்ளுதல்.

ஈ. பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் எந்தவொரு கிளையும் இறுதிக் கடன்பாட்டாளர்களுக்கு கடன்களை வழங்கும் பொழுது எந்தவொரு சூழ்நிலையிலும் அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை மூலதனம், அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை பருவகால மற்றும் இளைஞர் கடன் திட்டங்களின் கீழ் பிரிவு 8(இ) இல் குறிப்பிடப்பட்டுள்ள வட்டி வீதத்திலும் பார்க்க உயர்ந்த வீதத்தில் வட்டியை விதிக்கக்கூடாது என்பதனை உறுதிப்படுத்துதல்.

உ. ஒவ்வொரு துணைச் செயற்றிட்டமும் சந்தைப்படுத்தல் நியதிகளில் பொருளாதார ரீதியாகவும் நிதியியல் ரீதியாகவும் ஆற்றலும் சாத்தியவளத்தன்மையினையும் கொண்டவை என்பதனையிட்டு திருப்திப்பட்டுக் கொள்ளுதல்.

ஊ. கணக்குகளையும் நிதியியல் கூற்றுக்களையும் பேணுதல்

(i) பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் மற்றைய விடயங்களுடன் துணைக் கடன் மதிப்பீடுகள், ஒப்புதல்கள், பகிர்ந்தளிப்புக்கள் மற்றும் அறவிடல் என்பனவற்றை எடுத்துக்காட்டும் விதத்தில் பொருத்தமான பேரேட்டுக் கணக்குகளையும் பதிவுகளையும் பேணுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

(ii) கடன்பெறுகைகளின் பயன்படுத்தல் மற்றும் மீள்நிதியிடல் தொழிற்பாடுகளுக்காக தனியான கணக்குகளைப் பேணுமாறு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

(iii) பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினதும் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவினதும் (வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தின் சார்பில்) பரீட்சிப்பிற்காகவும் மீளாய்விற்காகவும் கணக்குகளையும் நிதியியல் கூற்றுக்களையும் கிடைக்கச் செய்தல் வேண்டும். மேலும், பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கேட்டுக் கொள்ளப்படும் நேரத்தில் கணக்குகளையும் நிதியியல் கூற்றுக்களையும் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கும் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவிற்கும் சமர்ப்பித்தல் வேண்டும்.

எ. தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் குறித்துரைக்கப்பட்டுள்ள பதிவுசெய்தல் செயன்முறைகளையும் மீள்நிதியிடல் நடைமுறைகளையும் பின்பற்றுதல் வேண்டும்.

**7. தகைமையுடைய நன்மைபெறுநர்கள்**

கீழே காட்டப்பட்டுள்ள தகைமையுடைய நன்மைபெறுநர்கள் உத்தேசச் செயற்றிட்டங்கள் சாதகமான காசுப்பாய்ச்சல்களையும் போதுமான மீள்கொடுப்பனவு இயலாற்றலையும் கொண்டிருக்கின்றன என்பது தொடர்பில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களைத் திருப்திப்படுத்தக் கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.

அ. அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை ஏற்பாடுகளில் ஈடுபட்டுள்ள வேளாண்மையாளர்கள், வேளாண்மையாளர் குழுக்கள், வேளாண்மையாளர் அமைப்புக்கள், உற்பத்தியாளர் அமைப்புக்கள்.

ஆ. ஏதேனும் வேளாண்மை பெறுமதிச் சங்கிலியுடன் இணைக்கப்பட்டுள்ள இளம் தொழில்முயற்சியாண்மையாளர்கள் மற்றும் 18 - 40 வயதிற்கிடைப்பட்டவர்கள்.

முன்னர் வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினால் நிதியிடப்பட்ட தேசிய வேளாண் வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், சிறுஉடமையாளர் பெருந்தோட்ட தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், வரண்ட வலய - சுழலும் நிதியம் என்பனவற்றின் நன்மைபெறுநர்களும் தொடர் கொடுகடனின் கீழ் நன்மைகளைப் பெற தகைமையுடையவர்களாவர்.

**8. அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை மூலதனம், அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை பருவகால மற்றும் இளைஞர் கடன் திட்டங்களின் முக்கிய பண்புகள்**

அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை மூலதனம், அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை பருவகால மற்றும் இளைஞர் கடன் திட்டங்களின் முக்கிய பண்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

| பண்புகள் | அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை வேளாண் வியாபாரக் கடன் | அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை இளைஞர் கடன் திட்டம் |
|---|---|---|
| (அ) உயர்ந்தபட்சக் கடன் வரையறை | - அரச, தனியார், உற்பத்தியாளர் பங்குடமையின் கீழ் மீண்டும் மீண்டும் பயிரிடும் வெளிப்பயிர்ச்செய்கை வேளாண்மையாளர்களுக்கு ரூ.300,000.00<br>- வேளாண்மையாளர் அமைப்புகள்/ உற்பத்தியாளர் அமைப்புகள் மற்றும் வேளாண்மையாளர் குழுக்கள் தொடர்பில் கடன் எல்லை தேசிய வழிகாட்டல் குழுவின் ஒப்புதலுக்குட்பட்டு சிறு உடமையாளர் வேளாண் வியாபாரப் பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவினால் தீர்மானிக்கப்படும் | - ரூ.2 மில்லியன் |
| (ஆ) தகைமையுடைய துணைக் கடன்பாட்டாளர்கள் மற்றும் துணைக் கடன் நடவடிக்கைகள் | - வேளாண்மையாளர்கள், வேளாண்மையாளர் அமைப்புக்கள்/ உற்பத்தியாளர் அமைப்புக்கள் மற்றும் வேளாண்மையாளர் குழுமங்கள்<br>- சிறு உடமையாளர் வேளாண் வியாபாரப் பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவினால் விதந்துரைக்கப்பட்டு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் இணங்கப்பட்ட மூலதன முதலீடுகளுக்கு அத்துடன்/ அல்லது தொழிற்படு மூலதனமாகப் பயன்படுத்துவதற்கு | - ஏதேனும் பெறுமதிச் சங்கிலியுடன் இணைக்கப்பட்ட மற்றும் 18 - 40 வயதிற்கிடைப்பட்ட இளைஞர் தொழில்முயற்சியாளர்கள் மற்றும்/ அல்லது இளைஞர் தொழில்முயற்சியாளர் குழுக்கள் |

| | | |
|---|---|---|
| | | - சிறு உடமையாளர் வேளாண் வியாபாரப் பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவினால் விதந்துரைக்கப்பட்டு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் இணங்கப்பட்ட வியாபார முன்மொழிவுகளின்படி மூலதன முதலீடுகளுக்கு அத்துடன்/ அல்லது தொழிற்படு மூலதனமாகப் பயன்படுத்துவதற்கு |
| (இ) துணைக் கடன்பாட்டாளர் களினால் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு செலுத்தப்படத்தக்க வட்டி வீதம் | ஆண்டிற்கு 6.5 சதவீதம் | ஆண்டிற்கு 6.5 சதவீதம் |
| (ஈ) பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் இலங்கை மத்திய வங்கிக்கு செலுத்தப்படத்தக்க வட்டி வீதம் | ஆண்டிற்கு 3.0 சதவீதம் | ஆண்டிற்கு 3.0 சதவீதம் |
| (உ) சலுகைக் காலம் | - மாதாந்த அல்லது ஒரே தடவையிலான மீள்கொடுப்பனவுகளுக்கு உயர்ந்தபட்சம் பதினெட்டு (18) மாதங்கள்<br>- மாதாந்த மீள்கொடுப்பனவுகளுக்கு உயர்ந்தபட்சம் பன்னிரண்டு (12) மாதங்கள்<br>**குறிப்பு:** சலுகைக் காலம் வழங்கப்படுவது, தேவையானவிடத்து அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர் பங்குடமை மூலதனச் செயற்றிட்டத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு பயிர்களின் முதலாவது அறுவடை/ அறுவடை மாதிரியின் அடிப்படை தொடர்பில் சிறு உடமையாளர் வேளாண் வியாபாரப் பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவின் மதிப்பீட்டின் அடிப்படையில் வேளாண்மைத் திணைக்களம், தேசிய விலங்கு வளர்ப்பு அபிவிருத்திச் சபை போன்ற தொடர்பான அதிகாரிகளின் ஆலோசனையுடன் சிறு உடமையாளர் வேளாண் வியாபாரப் பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவினதும் தொடர்பான பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினதும் ஆலோசனையுடன் தீர்மானிக்கப்படும்.<br>இலங்கை மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்படும் புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமிய கடன் திட்டத்தின் பயிர்களின் பட்டியல் மற்றும் தொடர்பான சலுகைக் காலம் என்பன சலுகைக் காலத்தினைத் தீர்மானிப்பதற்கு வழிகாட்டியாக அமையும். | செயற்றிட்டத்தின் தேவைப்பாடுகளைப் பொறுத்து உயர்ந்தபட்சம் ஆறு (12) மாதங்கள் |

| | | |
|---|---|---|
| (ஊ) மீள்கொடுப்பனவுக் காலம | - ஒரே தடவையிலான மீள்கொடுப்பனவுகளுக்கு உயர்ந்தபட்சம் பதினெட்டு (18) மாதங்கள்<br>- மாதாந்த மீள்கொடுப்பனவுகளுக்கு சலுகைக்காலம் உட்பட முப்பத்தாறு (36) மாதங்கள்<br>- வேளாண்மையாளர் அமைப்புக்கள்/ உற்பத்தியாளர் அமைப்புக்களைப் பொறுத்தவரை மாதாந்த மீள்கொடுப்பனவுகளுக்கு சலுகைக் காலம் உட்பட அறுபது (60) மாதங்கள்<br>குறிப்பு: வேளாண் வியாபாரக் கடன்களுக்கான மீள்கொடுப்பனவுக் காலம் அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர் பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்றிட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு சிறு உடமையாளர் வேளாண் வியாபாரப் பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவின் மதிப்பீடுகளின் அடிப்படையில் பயிர்களின் முதலாவது அறுவடை/ அறுவடை மாதிரிகளின் அடிப்படையில் தொடர்பான பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுடன் சேர்ந்து சிறு உடமையாளர் வேளாண் வியாபாரப் பங்குடமையாளர் நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவினால் தீர்மானிக்கப்படும். | சலுகைக் காலம் உட்பட உயர்ந்தபட்சம் 60 மாதங்களை விஞ்சக்கூடாது |
| (எ) பிணைகள் | கொள்வனவாளர் மற்றும் வேளாண்மையாளர்களுக்கிடையிலான அல்லது இடைநிலை உத்தரவாதம் அல்லது வேளாண்மைக் குழுக்களுக்கான கம்பனி உத்தரவாதங்களுக்கிடையிலான மீண்டும் வாங்குகின்ற உடன்படிக்கை<br>**குறிப்பு 1:** அவர்களிடையேயான உத்தரவாதம் சாத்தியமில்லையாயின் தனிப்பட்ட உத்தரவாதத்தினைப் பிரயோகிக்க முடியும்<br>**குறிப்பு 2:** கொள்வனவாளர், அரசாங்க, தனியார் உற்பத்தியாளர் பங்குடமை ஏற்பாட்டில் தொடர்புபட்டதாகத் தனிப்பட்ட ஒருவராக அல்லது நிறுவனமாக இருப்பதுடன் வேளாண்மையாளருடன் மீண்டும் வாங்குமட உடன்படிக்கையினையும் கொண்டிருப்பார். | கொள்வனவாளர் மற்றும் பயன்பெறுநர்களுக்கிடையிலான சேவை உடன்படிக்கை அல்லது பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் தீர்மானிக்கப்பட்டவாறான ஏதேனும் பிணையங்கள்<br>குறிப்பு: கொள்வனவாளர் தனிப்பட்ட ஒருவராக அல்லது அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர் பங்குடமை ஒழுங்குகளுடன் தொடர்புபட்டவராகவும் வேளாண்மையாளருடன் மீண்டும் வாங்கும் உடன்படிக்கையினைக் கொண்டிருத்தல் |

**9. கடன்பாட்டாளர்களைப் பதிவுசெய்தல்**

அ. பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் தலைமை அலுவலகம் கீழே பிரிவு 9இன் (ஆ) மற்றும் (இ) இல் தரப்பட்டவாறான அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை மூலதனம், அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை பருவகாலம் மற்றும் இளைஞர் கடன் திட்டங்களின் கீழ் கடன்களைப் பெற விரும்பும் விண்ணப்பதாரிகளின் விபரங்களை தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் இணைப்பு 1(அ) மற்றும் 1(ஆ)இல் தரப்பட்டுள்ளவாறு இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்குச் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவினூடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

ஆ. தனிப்பட்ட கடன்பாட்டாளர்கள் மற்றும் வேளாண்மையாளர் அமைப்பு/ உற்பத்தியாளர் அமைப்பு மற்றும் வேளாண்மையாளர் குழுமம் இரண்டினையும் பொறுத்தவரையில், பங்கேற்கும் நிதியியல் நிறுவனம், ஒவ்வொரு கடன்பாட்டாளர்கள் தொடர்பிலும் சரியாகப் பூர்த்திசெய்யப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தலின் இணைப்பு 1(அ) இனை இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கு செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவினூடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

இ. கடன்பாட்டாளர் வேளாண்மையாளர் குழுவாக/ வேளாண்மையாளர் அமைப்பாக/ உற்பத்தியாளர் அமைப்பாக இருக்குமிடத்து பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் ஒவ்வொரு வேளாண்மையாளர் குழுவிற்கும் வேளாண்மையாளர் அமைப்பிற்கும்/ உற்பத்தியாளர் அமைப்பிற்கும் இணைப்பு 1(ஆ)) இனைத் தனித்தனியாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

ஈ .செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவு தேவையான பின்னணி மதிப்பீடுகளை மேற்கொண்ட பின்னர் விண்ணப்பதாரிகள் அல்லது குழுமத்தின் பட்டியலை இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கு விதந்துரைக்கும்.

**10. ஆவணங்களின் கட்டுக்காப்பு**

பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் தலைமை அலுவலகம்/ கிளை, கொடுகடன் தொடரின் இணைப்பு 1(அ) மற்றும் இணைப்பு 1(ஆ) பூர்த்தி செய்யப்பட்ட பயன்பெறுநரின் விண்ணப்பப் படிவத்தினை வைத்திருத்தல் வேண்டும் என்பதுடன் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் அல்லது செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவு கேட்டுக்கொள்ளும் நேரத்தில் சமர்ப்பித்தலும் வேண்டும். பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் தலைமை அலுவலகம் அல்லது கிளை அலுவலகம், பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் ஏக தற்றுணிபின்படி, பகிர்ந்தளிக்கப்பட்ட கடன் தொடர்பான ஏனைய ஆவணங்களையும் வைத்திருக்கலாம்.

11. மீள்நிதியிடல் நடைமுறை

இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் குறிப்பிடப்பட்டுள்ளள நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்கப்பட்ட அனைத்துத் துணைக் கடன்களுக்கும் இலங்கை மத்திய வங்கி 100 சதவீத மீள்நிதியிடலை வழங்கும்.

அ) பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் இலங்கை மத்திய வங்கியுடனான பதிவினைத் தொடர்ந்து 90 நாட்களுக்குள் பதிவுசெய்யப்பட்ட நன்மைபெறுநர்களுக்குப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கடன்களை விடுவித்தல் வேண்டும். குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் ஏதேனும் கடன்களைப் பகிர்ந்தளிக்க முடியாவிடின் அது பற்றி ஏதேனும் ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களுடன் பதிவுசெய்தல் திகதியிலிருந்து 90 நாள் முடியடைந்ததும் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவிற்கும் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கும் அறிவித்தல் வேண்டும். செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவு/ பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் தாமதத்திற்காக தெரிவிக்கப்பட்ட காரணங்களைப் பரிசீலனையில் கொண்டு பதிவுசெய்யப்பட்ட நன்மைபெறுநர்கள் தொடர்பில் பொருத்தமான தீர்மானங்களை மேற்கொள்ளுதல் வேண்டும். பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் கடன்கள் பகிர்ந்தளிக்கப்படுவதற்குத் தவறுமிடத்து அல்லது 90 நாட்களுக்குள் சரியான காரணங்களை வழங்கத் தவறுமிடத்து 90 நாட் காலப்பகுதி கடந்த பின்னர் 14 நாட்களுக்குள் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் இரத்துச் செய்யப்படுவதற்குட்பட்டதாகும்.

ஆ. துணைக் கடன்களை விடுவித்ததன் பின்னர் சரியான முறையில் நிரப்பப்பட்ட விண்ணப்பப் படிவங்களை மீள்நிதியிடலுக்காக பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். ஒவ்வொரு மீள்நிதியிடல் விண்ணப்பத்துடனும் பின்வரும் ஆவணங்கள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

i. மீள்நிதியிடலுக்கான விண்ணப்பம் - இணைப்பு II

ii. மீள்நிதியிடலுக்கான பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் கூற்று விண்ணப்பம் - இணைப்பு III

iii. கோரிக்கையின் பேரிலான வாக்குறுதிச் சான்றிதழ் - இணைப்பு IV

iv. வழங்கல் குறிப்பு - இணைப்பு V

v. இலங்கை மத்திய வங்கிக்கு உத்தரவாதமளிப்பதன் மூலம் வழங்கப்படுகின்ற சாட்டுதல் படிவம் - இணைப்பு VI

vi. பகிர்ந்தளிப்புக் கடிதம் - இணைப்பு VII

இ. மீள்நிதியிடல் விண்ணப்பப் படிவத்திற்கு ஒப்புதலளிக்கப்பட்டதும் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் மீள்நிதியிடல் விண்ணப்பத்திற்கு ஒப்புதலளிப்பதுடன், சரியாகப் பூர்த்திசெய்யப்பட்ட மீள்நிதியிடல் விண்ணப்பம் பெறப்பட்ட 30 நாட்களுக்குள் முதல் வந்தது முதலில் என்ற முறையில் அவை கிடைக்கப் பெற்றதன் ஒழுங்கில், நிதியின் கிடைப்பனவினைப் பொறுத்து மீள்நிதியிடலை விடுவிக்கும்.

ஈ. மீள்நிதியிடல் கோரல்கள் பகிர்ந்தளிக்கப்பட்ட 30 நாட்களுக்குள் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் தலைமை அலுவலகங்களினூடாகப் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

உ. மீள்நிதியிடல் கடன்கள் மீதான மூலதனம் மற்றும் வட்டி கொடுப்பனவுகளை பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள், இலங்கை மத்திய வங்கியினால் தயாரிக்கப்பட்ட மீள்நிதியிடலுக்கான மீள்கொடுப்பனவு அட்டவணைக்கிணங்க இலங்கை மத்திய வங்கிக்குச் செலுத்துதல் வேண்டும்.

12. கடன்களை அறவிடல்

பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட மீள்நிதியிடலுக்கான மூலதனம் மற்றும் வட்டி என்பன அரையாண்டிற்கொரு முறை ஒவ்வொரு ஆண்டும் அதாவது யூன் 30ஆம் திகதியும் திசெம்பர் 31ஆம் திகதியும் அறவிடப்படும். பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் பின்வரும் சாதன வகைக்கிணங்க மத்திய வங்கிக்கு மீள்கொடுப்பனவுகளைச் செய்தல் வேண்டும்.

அ. **அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர் - பங்குடமை வேளாண் வியாபார கடன் திட்டம்** - இக்கடன் சாதனத்தின் கீழ் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் மொத்த மீள்கொடுப்பனவுக் கடன்களைப் பொறுத்தவரை உயர்ந்தபட்சம் பதினெட்டு (18) மாதங்களிலும் மாதாந்த மீள்கொடுப்பனவுக் கடன்களைப் பொறுத்தவரை உயர்ந்தபட்ச காலமாக முப்பத்தாறு (36) மாதங்களிலும் செலுத்துதல் வேண்டும். வேளாண்மையாளர் குழுக்கள், வேளாண்மையாளர் அமைப்புக்கள், உற்பத்தியாளர் அமைப்புக்கள் என்பனவற்றிற்கு வழங்கப்பட்ட கடன்களைப் பொறுத்தவரை உயர்ந்தபட்ச மீள்கொடுப்பனவுக் காலம் அறுபது (60) மாதங்களாக இருக்கும்.

ஆ. **அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர் பங்குடமை இளைஞர் கடன்கள் திட்டம்** - பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் இக்கடன் உற்பத்தியின் கீழ் சலுகைக்காலம் உட்பட உயர்ந்தபட்சம் அறுபது (60) மாத காலப்பகுதியில் மீளச் செலுத்துதல் வேண்டும்.

13. கடன்களை மீள்அட்டவணைப்படுத்தல்/ மீளவமைத்தல்

அ. பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் தலைமை அலுவலகம் சிறு உடமையாளர் வேளாண் வியாபாரப் பங்குடமையின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவின் விதந்துரைப்புக்களுடன் அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர் பங்குடமை கடன் திட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட கடன்களின் மீள்கொடுப்பனவுக் காலத்தினை மீளஅட்டவணைணப்படுத்துமாறு/ மீளவமைக்குமாறு இலங்கை மத்திய வங்கியைக் கேட்டுக் கொள்ள முடியும்.

ஆ. நன்மைபெறுநர்களுக்கு வழங்கப்பட்ட ஏற்கனவேயுள்ள கடன்களின் வெளிநின்ற மூலதனமும் வட்டியும் பெயரளவில் நேரகாலத்துடன் தீர்ப்பனவு செய்யப்படுவதுடன் புதிய கடன்கள் பின்வரும் புதிய மீள்கொடுப்பனவுக் காலத்திற்குட்பட்டு உருவாக்கப்படும்.

i. அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர் பங்குடமை மூலதன வேளாண் வியாபாரம் மற்றும் அரசாங்க - தனியார் உற்பத்தியாளர் இளைஞர் கடன் திட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட கடன்களுக்காக, மீள்அட்டவணையிடப்பட்ட கடன்கள் தற்போதுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு முன்னர் பதிவுசெய்யப்பட்டுள்ள அதே கடன் திட்டத்தின் கீழ் உருவாக்கப்படும்.

ii. 2018.12.05 அன்று திருத்தப்பட்டவாறான, 2018.04.10ஆம் திகதியிடப்பட்ட இல. ஆர்டிடி/எஸ்ஏபிபி/4பி/2018/01 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளின்படி, அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர் பங்குடமை மற்றும் அரசாங்க

- தனியார் - உற்பத்தியாளர் பருவகாலக் கடன் திட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட கடன்களுக்காக, மீள்அட்டவணையிடப்பட்ட கடன்கள் அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர் பங்குடமை வேளாண் வியாபாரக் கடன் திட்டத்தின் தற்போதுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர் - பங்குடமை வேளாண் வியாபாரக் கடன் திட்டத்தின் கீழ் உருவாக்கப்படும்.

iii. 2018.12.05 அன்று திருத்தப்பட்டவாறான 2018.04.10ஆம் திகதியிடப்பட்ட இல. ஆர்டிடி/எஸ்ஏபிபி/4பி/2018/01 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளின்படி, இளைஞர் கடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களுக்காக, அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர் பங்குடமை இளைஞர் கடன் திட்டத்தின் தற்போதுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர் இளைஞர் கடன் திட்டத்தின் கீழ் அட்டவணையிடப்பட்ட கடன்கள் உருவாக்கப்படும்.

இ. இப்பிரிவின் கீழ் மீள்அட்டவணையிடப்பட்ட அனைத்துக் கடன்களும் கடன்கள் மற்றும் முற்பணங்களின் வகைப்படுத்தல், வருமான அங்கீகாரம் மற்றும் ஒதுக்கீடுகள் தொடர்பான 2008ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்திற்கும் இது தொடர்பில் எதிர்காலத்தில் அறிமுகப்படுத்தப்படவுள்ள தொடர்பான ஏதேனும் பணிப்புரைகளுக்கும் ஏற்புடைத்தான காலத்தில் உட்பட்டு அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

ஈ. இப்புதிய கடன்கள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் மீள்நிதியிடல் வழங்கப்படமாட்டாது என்பதுடன் இது தொடர்பில் பொருத்தமான பதிவேடுகளைப் பேணுமாறு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டன.

உ. மீள்அட்டவணையிடப்பட்ட/ மீளவமைக்கப்பட்ட கடன்கள் தொடர்பில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு விடுக்கப்பட்ட புதிய அறவிடல் அட்டவணைக்கிணங்க பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் இலங்கை மத்திய வங்கிக்கு மீளச் செலுத்துதல் வேண்டும்.

**14. அறிக்கையிடல்**

பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள், இணைப்பு (viii)இல் உள்ளவாறு கடப்பாடுகள், பகிர்ந்தளித்தல் மற்றும் மீள்நிதியிடல் கடன் விபரங்களை அடுத்த மாதம் 15ஆம் திகதிக்கு முன்னதாக, செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவிற்கான பிரதியொன்றுடன் மாதாந்த அறிக்கையினை இலங்கை மத்திய வங்கிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள், இணைப்பு IX இல் உள்ளவாறு பகிர்ந்தளிக்கப்பட்ட துணைக் கடன்களின் செயற்படாக் கடன்களின் நிலையினைக் காலாண்டு அடிப்படையில் அறிவித்தல் வேண்டும்.

**15. கணக்குகளை கணக்காய்வு செய்தல்**

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை கடன் திட்டங்களின் ஆண்டு நிதியியல் கூற்றுக்களைத் தயாரிப்பதுடன் அத்தகைய நிதியியல் கூற்றுக்கள் கணக்காய்வாளர் நாயகத்தினால் கணக்காய்வு செய்யப்படும். பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களும் வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறு கணக்காய்வு செய்யப்பட்ட இந்நிகழ்ச்சித்திட்டத்தின் நிதியியல் கூற்றுக்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

**16. நடைமுறைக்குவரும் நாள்**

இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் 2019.08.21 அன்று நடைமுறைக்கு வருதலாதல் வேண்டும். இத்திகதிக்கு முன்னர் வழங்கப்பட்டுள்ள அனைத்துக் கடன்களும் (2018.12.05 அன்று திருத்தப்பட்டவாறான) 2018.04.10 திகதியிடப்பட்ட இல. ஆர்டிடி/எஸ்ஏபிபி/4பி/2018/01 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் அதிகாரவரம்பின் கீழ் வருதல் வேண்டும்.

**17. (2018.12.05 அன்று திருத்தப்பட்டவாறு) 2018.04.10 திகதியிடப்பட்ட இல. ஆர்டிடி/எஸ்ஏபிபி/4பி/2018/01 கொண்ட முன்னைய தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுடன் தொடர்பான தொழிற்பாடுகள்**

அ. அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர் பங்குடமை மூலதனம் மற்றும் அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர் செயன்முறைப்படுத்தப்பட்டுவரும் அனைத்துக் கடன்களையும் (2018.12.05 அன்று திருத்தப்பட்டவாறு) 2018.04.10ஆம் திகதியிடப்பட்ட இல. ஆர்டிடி/எஸ்ஏபிபி/4பி/2018/01 கொண்ட முன்னைய தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் கீழ் 2019.08.20 இற்கு முன்னதாகப் பதிவு செய்தல் வேண்டும்.

ஆ. (2018.12.05 அன்று திருத்தப்பட்டவாறு) 2018.04.10ஆம் திகதியிடப்பட்ட இல. ஆர்டிடி/எஸ்ஏபிபி/4பி/2018/01 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் கீழ் பதிவுசெய்யப்பட்ட கடன்களைப் பகிர்ந்தளிப்பதற்குப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் எதிர்பார்ப்பதுடன் 2019.11.18ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ உரிய நடைமுறைகளைப் பின்பற்றி இலங்கை மத்திய வங்கியிலிருந்து மீள்நிதியிடலைக் கோருதல் வேண்டும். 2019.11.18ஆம் திகதிக்குப் பின்னர் இப்பிரிவின் கீழ் பெறப்படுகின்ற மீள்நிதியிடல் விண்ணப்பங்களுக்கு இலங்கை மத்திய வங்கி மீள்நிதியிடல் எதனையும் வழங்கமாட்டாது.

இ. இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தலின் 13ஆம் பிரிவின் கீழ் குறித்துரைக்கப்பட்ட நடைமுறைகளைத் தொடர்ந்து (2018.12.05 அன்று திருத்தப்பட்டவாறான) 2018.04.10ஆம் திகதியிடப்பட்ட இல. ஆர்டிடி/எஸ்ஏபிபி/4பி/2018/01 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் கீழ் வழங்கப்பட்ட கடன்களை மீளவமைத்தல்/ மீளஅட்டவணைப்படுத்துமாறு இலங்கை மத்திய வங்கியினைக் கோரமுடியும்.

**18. ஏனையவை**

சிறு உடமையாளர் வேளாண் வியாபாரப் பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவின் கோரிக்கையின் மீது, இலங்கை மத்திய வங்கி அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர் பங்குடமைச் செயற்றிட்டங்களை அடையாளம் காணுதல் மற்றும் நடைமுறைப்படுத்தல், இளைஞர் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்திச் செயன்முறைப்படுத்தல் மற்றும் அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர் பங்குடமை கடன் திட்டத்துடன் தொடர்பான ஏனைய செயன்முறைகளில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் உசாத்துணைக்காக சிறு உடமையாளர் வேளாண் வியாபாரப் பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவினால் வடிவமைக்கப்பட்டு வரையப்பட்டுள்ளன.

அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர் பங்குடமை கடன் திட்டங்கள் தொடர்பான நியதிகளையும் நிபந்தனைகளையும் எப்பொழுது தேவையோ அப்பொழுது திருத்துவதற்கான உரிமையினை மத்திய வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது.

உங்கள் உண்மையுள்ள
எம்.எஸ்.கே தர்மவர்தன
**பணிப்பாளர்/ பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்**
**இலங்கை மத்திய வங்கி**

**இணைப்பு I (அ): தனிப்பட்ட நன்மைபெறுநர் விண்ணப்பம்**

பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள்:

இலங்கை மத்திய வங்கி நன்மைபெறுநர் பதிவு இல.: ..........................................................

**தனிப்பட்ட வாடிக்கையாளர்களுக்கான கடன் பதிவுசெய்தல் விண்ணப்பம் - சிறுஉடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம்**

**(............................................... கடன் திட்டம்)**

கிளையின் பெயர்: மாவட்டம் :

கிளையின் முகவரி:

1. செயற்றிட்டம்/ பங்கேற்கும் கம்பனியின் பெயர் :
2. தொலைபேசி இல./ தொலைநகல் இல. :
3. விண்ணப்பதாரி/ தாரிகளின் அந்தஸ்து : தனிப்பட்டவர் ☐ குழு உறுப்பினர் ☐
4. குழு உறுப்பினரொருவராயின்; குழுவின் பெயர் :
   குழுவின் பதிவிலக்கம் :
5. விண்ணப்பதாரி/ தாரிகளின் பெயர் மற்றும் முகவரி :

| பெயர் | முகவரி | தே.அ.அ./ இலக்கம் | பால் |
|---|---|---|---|
| i. | | | |
| ii. | | | |

6. கடனின் நோக்கம்: ..........................................................................................................................................................................................
7. முன்னர் பெறப்பட்ட கடன்கள் அல்லது தற்பொழுது சிறுஉடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செயன்முறைப்படுத்தப்பட்டுவரும் கடன்கள் (தேவையாயின் மேலும் நிரல்களை அதிகரித்துக் கொள்ளவும்).

| கடன் திட்டம் | நோக்கம் | தொகை (ரூ.) |
|---|---|---|
| | | |
| | | |

8. செயற்றிட்ட இடம் மற்றும் அமைவிடத்தின் முழுமையான முகவரி:

   ..........................................................................................................................................................................................

9. வியாபாரத்தின்/ சிறுதொழில்முயற்சிகளின் வகை: ................................................................
10. கடன் திட்டத்தின் கீழ் நிதியிடப்படவுள்ள வியாபாரம்/ சிறுதொழில்முயற்சிகள் பற்றிய சுருக்கமான விபரணம்:

    ..........................................................................................................................................................................................

11 செயற்றிட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு: ரூ. ..........................................................................................................................

12. பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தினால் விதந்துரைக்கப்பட்ட/ ஒப்புதலளிக்கப்பட்ட கடன் தொகை: ரூ. ..................................

......................................................................................

நன்மைபெறுநரின் பெயர் மற்றும் கையொப்பம்

..........................................................................

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர்,
கையொப்பம் மற்றும் அலுவலக இறப்பர் முத்திரை

திகதி: .......................................

**இணைப்பு I (ஆ): அரச, தனியார் உற்பத்தியாளர் பங்குடமை கடன் திட்டங்கள் - சிறுஉடமையாளர் வேளாண் வியாபாரப் பங்குடமைகள் நிகழ்ச்சித்திட்டம்**

**துணைக் கடன்பாட்டாளர்களைப் பதிவுசெய்தல்**
(கடன் திட்டத்தின் பெயர்)

விண்ணப்ப இலக்கம்: .......................

சேரல் : இலங்கை மத்திய வங்கி

ஊடாக : சிறுஉடமையாளர் வேளாண் வியாபாரப் பங்குடமைகள் நிகழ்ச்சித்திட்டம் - செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவு

பங்கேற்கும் நிறுவனத்தின் பெயர் :
பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் கிளையின் பெயர் :

| # | விண்ணப்பதாரியின் பெயர் | விண்ணப்பதாரியின் முகவரி மற்றும் தொடர்பு இலக்கம் | பால் | கடன்பெறுநரின் அந்தஸ்து (தனிப்பட்டவர்/ (குழு உறுப்பினர்) | தே.அ. அட்டை | குழுவின் பெயர் மற்றும் பதிவிலக்கம் (குழு உறுப்பினர்களுக்காக | கடன் விபரங்கள் | | | இ.ம.வங்கியின் பதிவு இலக்கம்* |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | செயற்றிட்டத்தின் பெயர் | நோக்கம் | தொகை | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள செயற்றிட்டங்கள் என்னால்/ வங்கியின் கொடுகடன் அலுவலரினால் பரீட்சிக்கப்பட்டன எனவும் அவை சிறுஉடமையாளர் வேளாண் வியாபார நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிதியிடப்படுவதற்குத் தகைமையுடையன எனவும் நான் உறுதிப்படுத்துகிறேன்.

........................................................................................................ ............................................................

(அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர், கையொப்பம் மற்றும் அலுவலக முத்திரை) திகதி

* இலங்கை மத்திய வங்கியின் உபயோகத்திற்கு மாத்திரம்

**இணைப்பு II**

**மீள்நிதியிடல் விண்ணப்பம்**

மீள்நிதியிடல் விண்ணப்ப இலக்கம்: ................................................

(............ இலக்கம் கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தலின் கீழ்)

முகவரி:

திகதி:

**மீள்நிதியிடலுக்கான விண்ணப்பம் -**

**சிறுஉடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான .......... கடன் திட்டம்**

சேரல்: இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை

உரிமம் பெற்ற வர்த்தக வங்கி மற்றும் அபிவிருத்தி வங்கிகள்/ உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கி/ நுண்பாக நிதி நிறுவனங்கள் மற்றும் எழுத்து மூலமான உறுதிப்படுத்தப்பட்ட எங்கள் யாப்பினை ஏற்கனவே சமர்ப்பித்த/ சமர்ப்பிக்கின்றவர்களுமாகிய நாங்கள் ............................................ ...............................................................(பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர்) மேற்குறிப்பிட்ட மீள்நிதியிடல் திட்டத்தின் கீழ் ரூபா............................ .... (ரூ........................) கொண்ட கடனைப் பெறுவதற்காக இத்தால் விண்ணப்பிக்கின்றோம்.

2. இவ்விண்ணப்பத்தினைத் தயாரிக்கையில், தங்களின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இல. .................... இல் குறித்துரைக்கப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் **சிறுஉடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின்** அரச தனியார் உற்பத்தியாளர் பங்குடமை நிகழ்ச்சித்திட்ட மூலதனம், அரச தனியார் உற்பத்தியாளர் பங்குடமை நிகழ்ச்சித்திட்ட பருவகாலம் மற்றும் இளைஞர் கடன் திட்டத்தின் கீழ் 2019 ............ ஆம் திகதியிடப்பட்ட இலங்கை மத்திய வங்கிக்கும் எங்களுக்குமிடையிலான துணைக் கடன் உடன்படிக்கைக்கும் இணங்கியொழுகுவதற்கு நாம் உடன்படுகின்றோம்.

3. மேலே குறிப்பிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களினால் தேவைப்படுத்தப்பட்டவாறும் அதிலுள்ள விடயங்களுக்கு இணங்கிச் செல்லும் விதத்திலும் மேலே குறிப்பிடப்பட்ட மீள்நிதியிடல் திட்டத்தின் கீழ் எங்களால் வழங்கப்பட்ட கடன்களின் கூற்றினை இத்துடன் அனுப்பி வைக்கின்றோம். இக்கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள கடன்கள் மீள்நிதியிடல் கடனுக்கான விண்ணப்பமொன்றிற்கு ஆதரவளிக்கும் விதத்தில் ஏதேனும் முன்னைய கூற்றில் பிரதிபலிக்கப்பட்டிருக்கவில்லை என்பதனையும் உறுதிப்படுத்துகின்றோம்.

4. பின்வருவன தொடர்பில் நாம் திருப்தியடைந்துள்ளதாக இத்தால் உறுதிப்படுத்துகிறோம். (i) மேலே பந்தி 3இல் குறிப்பிடப்பட்டுள்ள கடன்கள் மேற்குறிப்பிட்ட திட்டங்களின் கீழ் தகைமையுடைய செயற்றிட்டங்களுக்காகத் தகைமையுடைய துணைக் கடன்பாட்டாளர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. (ii) அத்தகைய கடன்கள் தொடர்பான துணைக் கடன்பாட்டாளர்களின் கடன்பாட்டு அதிகாரங்களுக்குள் காணப்படுகின்றன. (iii) அத்தகைய கடன்களின் மீள்கொடுப்பனவிற்காகப் பெறப்பட்ட உத்தரவாதங்களைப் பொறுத்தவரை உத்தரவாதிகள் அத்தகைய உத்தரவாதங்களை வழங்கும் அதிகாரங்களைக் கொண்டிருக்கின்றனர் என்பன தொடர்பில் நாம் திருப்தியடைந்துள்ளோம் என்பது பற்றி இத்தால் உறுதிப்படுத்துகின்றோம்.

**பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்/(கள்) இன் கையொப்பம் பெயர் மற்றும் பதவி**

**முகாமையாளர், மீள்நிதியிடல் பிரிவு**

**இணைப்பு III**: மீள்நிதியிடலுக்கான விண்ணப்பம்

மீள்நிதியிடல் விண்ணப்ப இலக்கம்: ........................

**............................ கடன் திட்டத்தின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் கூற்று**

**(சிறுஉடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம்)**

சேரல் : இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை

இலிருந்து : மீள்நிதியிடல் பிரிவு: ...................................

பங்கேற்கும் நிதியியல் நிறுவனம் : .............................................. கிளை: ............................................. மாவட்டம்: ..........................................

| பதிவு இல. | கடன் பாட்டாளரின் பெயர் மற்றும் முகவரி | தே.அ.அ இல. | கடன் வகை | கடனின் நோக்கம்* | துணைக் கடன் தொகை | | பகிர்ந் தளிப்புத் திகதி | மீள்நிதியிடல் எதிர்பார்க்கப்படு பனவற்றிற்காக பகிர்ந்தளிக்கப்பட்ட தொகை | | சலுகைக் காலம் | மீள்கொடுப்பனவு அட்டவணை | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | கடன் சுழற்சி** | தொகை (ரூ.) | | | | | தவணைகள் | | முதல் தவணைக் குரிய திகதி | இறுதித் தவணைக் கான திகதி |
| | | | | | | | | தவணை களின் எண். | தொகை (ரூ.) | | எண். | பெறு மதி | | |
| | | | | | | | | | | | | | | |
| மொத்தம் | | | | | | | | | | | | | | |

இலங்கை மத்திய வங்கிக்கும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்குமிடையிலான மீள்நிதியிடல் உடன்படிக்கையில் இணங்கப்பட்டவாறு, மேலேயுள்ள மீள்கொடுப்பனவு அட்டவணையில் தரப்பட்டுள்ள விதத்தில் வருடாந்தம் இரண்டு தவணைகளில் இலங்கை மத்திய வங்கிக்கு மேற்குறிப்பிட்ட கடனைச் செலுத்த நாம் இத்தால் வாக்குறுதி வழங்குகிறோம்.

திகதி: ....................................... ..............................................................................

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்

* அரச தனியார் உற்பத்தியாளர் பங்குடமை நிகழ்ச்சித்திட்டப் பெயருடன் சேர்த்து செயற்றிட்ட நோக்கத்தினைக் குறிப்பிடவும்

** 1ஆவது கடன், 2ஆவது கடன், 3ஆவது கடன் எனக் குறிப்பிடவும்

**இணைப்பு IV**: வாக்குறுதிச் சான்றிதழ்

மீள்நிதியிடல் விண்ணப்ப இல.:- ..........................................................

(2019...... திகதியிடப்பட்ட ....... இலக்கம் கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் கீழ்)

திகதி: ...................

**கோரலின் பேரிலான வாக்குறுதிச் சான்றிதழ்**

ரூ. .................................................

கோரலின் பேரில் கீழே கைபொப்பமிட்டுள்ள ................................................................................................................................................................................................ (பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி) ஆகிய நாங்கள் **இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபைக்கு** அல்லது **கட்டளையின்படி கொழும்பில்,** பெறப்பட்ட பெறுமதியையும் இங்கே குறிப்பிட்டுள்ள திகதியிலிருந்து ஆண்டொன்றிற்கு ......................% வீதத்திலமைந்த அதற்கான வட்டியையும் சேர்த்து ரூபா ........................................................................................... (ரூ....................) இனைச் செலுத்த இத்தால் உறுதியளிக்கின்றோம்.

.......................................................................................................

(பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர்) இற்காக

மீள்நிதியிடல் பிரிவு

தலைமை அலுவலகம்

............................

(முத்திரை)

1. ........................................................
2. ................................................

(அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்/ அலுவலர்களின் கையொப்பம்)

சாட்சிகள்

1. ..........................................
2. ..........................................

**இணைப்பு V**: வழங்கல் கடிதம்

மீள்நிதியிடல் விண்ணப்ப இல.:- ..........................................................

(2019......... திகதியிடப்பட்ட ............ இலக்கம் கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தலின் கீழ்)

திகதி:

**வழங்கல் கடிதம்**

**சேரல்: இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை**

தங்களின் ...................... திகதியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல. ஆர்டிடி/ ............. இல் குறிப்பிடப்பட்டுள்ள **சிறுஉடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான .............** என்ற பெயரிலான மீள்நிதியிடல் திட்டத்திற்கு எங்களால் மேற்கொள்ளப்பட்ட கடன்வழங்கல் தொழிற்பாடுகள் தொடர்பில் எங்களுக்கு வழங்கப்பட்டுள்ள மீள்நிதியிடல் நோக்கத்துடன் **ரூபா............................................. (ரூ.............)** இனை கடன் வழங்க உடன்பட்டுள்ளீர்கள் என்பதனைக் கவனத்தில் கொண்டு இத்தால் நாங்கள் தங்களின் சார்பில் விடுக்கப்பட்ட கோரிக்கையின் பேரில் அதற்கான வட்டியுடன் சேர்த்துச் செலுத்தத்தக்க ரூபா................................................ இற்கான (ரூ...............) வாக்குறுதிச் சான்றிதழை வழங்குகின்றோம்.

கொடுப்பனவிற்கான சமர்ப்பித்தலை நாம் இத்தால் வலியுறுத்தாமல் விடுவதுடன் எமது குறிப்பிட்ட வாக்குறுதிச்சான்றிதழ் தொடர்பில் மறுப்பது பற்றிய அறிவித்தல் வழங்கப்பட வேண்டுமென்ற அவசியமுமில்லை என நாம் இத்தால் தெரிவித்துக் கொள்கிறோம். .......................................................................

(பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர்) இற்காக

மீள்நிதியிடல் பிரிவு

தலைமை அலுவலகம்

1. ........................................................
2. ................................................

(அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்/ அலுவலர்களின் கையொப்பம்)

**இணைப்பு VI**: சாட்டுதல் படிவம்

மீள்நிதியிடல் விண்ணப்ப இல.:- ................................................................

(.................... இலக்கம் கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தலின் கீழ்)

திகதி:

**நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 88அ இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபைக்கு உத்தரவாதமளிப்பதன் மூலமான சாட்டுதல் படிவம்***

நாணய விதிச் சட்டத்தின் 88(அ) பிரிவின் நியதிகளில் .............................................................................................................................................................................................................................. (பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி) ஆகிய நாங்கள் இங்கே தரப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களின்படி எமக்கு வழங்கப்பட்டுள்ள படுகடனை மீளச்செலுத்துவதற்கான பிணையாக/ மேலும் பிணையமாக வங்கியினால் எமக்கு வழங்கப்பட்ட கடனை ஆண்டிற்கு .................... வட்டியுடன் ரூபா.........................................(ரூ..........) கொண்ட கடனை இலங்கை மத்திய வங்கிக்கு மீளச்செலுத்துவதற்கான சாட்டுதலை இத்தால் மேற்கொள்கிறோம்.

**அட்டவணை**

| படுகடன் தொகை (ரூ.) | கடன்பாட்டாளர் பெயர் மற்றும் முகவரி | திகதி | நொத்தாரிசு |
|---|---|---|---|
| | | | |
| | | | |

...............................................................

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்
(பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர்) இற்காக
மீள்நிதியிடல் பிரிவு
தலைமை அலுவலகம்

---

* உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினால் பயன்படுத்தப்படுவதற்கு மட்டும்.

**இணைப்பு VII**:

**பகிர்ந்தளிப்புக் கடிதம்**

(2019........ திகதியிடப்பட்ட .............. இலக்கம் கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தலின் கீழ்)

வங்கியின் பெயர்:
வங்கியின் குறியீட்டு இல:
கிளையின் பெயர்:
கிளையின் குறியீட்டு இல:
கடனின் பதிவு இல:
திகதி:
பகிர்ந்தளிப்பு:

**.................... கடன் திட்டத்தின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் கூற்று**

விசாரணை இலக்கம்:

1. கடன்பாட்டாளரின் விபரங்கள் :
   - 1.1 கடன்பாட்டாளரின் பெயர் :
   - 1.2 கடன்பாட்டாளரின் முகவரி :
2. கடனின் விபரங்கள்
   - 2.1 கடனின் நோக்கம் :
   - 2.2 துணைச் செயற்றிட்டத்தின் அமைவிடம் :
   - 2.3 ஒப்புதலளிக்கப்பட்ட கடனின் மொத்தத் தொகை: ஆரம்பத் தொகை ரூ.
     அதிகரித்த செலவிற்காக பின்னர் அதிகரிக்கப்பட்ட கடன் ரூ.
     **மொத்தம் ரூ.**
   - 2.4 மூலக் கடன் தொகைக்கு ஒப்புதலளித்த திகதி:
     கடன் அதிகரிப்பிற்கு ஒப்புதலளிக்கப்பட்ட திகதி:

2.5 மீள்நிதியிடல் விண்ணப்பிக்கப்பட்ட தவணைப் பணத்திற்கான மீள்கொடுப்பனவு நிகழ்ச்சித்திட்டம்:
திகதி: தொகை (ரூ.):
2.6 வட்டி வீதம்

3. கடனின் நிலை

3.1 முன்னர் வழங்கப்பட்ட தொகை )
மற்றும் இ.ம. வங்கியிலிருந்து கோரப்பட்ட மீள்நிதியிடல் ) ரூ.

3.2 தற்பொழுது வழங்கப்பட்ட தொகை )
மற்றும் இதற்காக எதிர்பார்க்கப்படுகின்ற மீள்நிதியிடல் ) ரூ.
**மொத்தம் ரூ.**

மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவையும் சரியானவையுமென நான் உறுதிப்படுத்துகிறேன்.

திகதி: கிளை முகாமையாளரின் கையொப்பம்

கிளை முகாமையாளரின் பெயர்

பொருத்தமான கூட்டில் புள்ளடி அடையாளத்தினை இடுவதன் மூலம் இது 1ஆவது, 2ஆவது அல்லது எந்தத் தவணைக்குரியது என்பதனை தயவுசெய்து காட்டவும்.

**இணைப்பு VIII**

## அரசாங்க தனியார் பங்குடமை நிகழ்ச்சித்திட்ட மூலதனம், அரசாங்க தனியார் பங்குடமை நிகழ்ச்சித்திட்ட பருவகாலம் மற்றும் இளைஞர் கடன் திட்டங்கள் - சிறுஉடமையாளர் உற்பத்தியாளர் பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம் பற்றி அறிக்கையிடல்

பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர் :

ஆண்டு மற்றும் மாதம் :

கடன் திட்டம் :

| அரசாங்க தனியார் பங்குடமை நிகழ்ச்சித்திட்ட செயற்றிட்டத்தின் பெயர் | அந்தஸ்து பதிவு செய்யப்பட்டவை/ பகிர்ந்தளிக்கப்பட்டவை* | நன்மைபெறுநர்களின்/ துணைக் கடன்பாட்டாளர்களின் எண்ணிக்கை | | | மொத்தத் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | மொத்தம் | |
| | | | | | |
| | | | | | |

திகதி :

பதவி மற்றும் கையொப்பம் :

* தயவுசெய்து பதிவுசெய்யப்பட்ட மற்றும் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் தகவல்களைத் தனித்தனியாக அறிக்கையிடவும்

**இணைப்பு IX**: செயற்படாக் கடனின் நிலை

**................................ கடன் திட்டம்**

பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர்: ..............................................

............................ உள்ளவாறு செயலாற்றம்

(தொகை ரூ. '000)

| மாவட்டம் | .......... இல் உள்ளவாறு மொத்த வெளிநின்ற நிலுவை | | சிறப்பாகக் குறிப்பிடப்படல் | | கீழ்நிலைப் படுத்தப்பட்டது | | ஐயத்திற்குரியது | | இழப்பு | | மொத்த செயற் படாக் கடன் | செயற் படாக் கடன்* (%) | செயற் படாக் கடன்** (%) | செயற் படாக் கடன்*** (%) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கடன்களின் எண்ணிக்கை | தொகை | கடன்களின் எண்ணிக்கை | தொகை | கடன்களின் எண்ணிக்கை | தொகை | கடன்களின் எண்ணிக்கை | தொகை | கடன்களின் எண்ணிக்கை | தொகை | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |

* இதே திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மொத்தக் கடன்களின் சதவீதமாகக் குறிப்பிட்ட மத்திய வங்கி கடன் திட்டத்தின் செயற்படாக் கடன்கள்

** வங்கியின் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்களின் சதவீதமாகக் குறிப்பிட்ட இலங்கை மத்திய வங்கியின் கடன் திட்டத்தின் செயற்படாக் கடன்கள்

*** வங்கியின் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்களின் சதவீதமாக வங்கியின் செயற்படாக் கடன்கள்

வங்கியின் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் (ரூ.மில்.) : ...............................................................................

வங்கியின் மொத்தச் செயற்படாக் கடன்கள் (ரூ.மில்.) : ...............................................................................

**அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர் மற்றும் பதவி**

**இணைப்பு அ**

**புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சலுகைக் காலங்கள்**

| பயிர் வகை | பயிர் | உயர்ந்தபட்ச சலுகைக் காலம் |
|---|---|---|
| நெல் | நெல் | 270 நாட்கள் |
| மிளகாய் | மிளகாய் | |
| வெங்காயம் | வெங்காயம் | |
| தானியங்கள் | தட்டைப்பயறு, பச்சைப்பயறு, உழுந்து, சோயா அவரை, சோளம், குரக்கன் | |
| எண்ணெய் விதைகள் | வேர்க்கடலை, எள்ளு, சூரியகாந்தி | |
| வேர் மற்றும் கிழங்குகள் | உருளைக்கிழங்கு, வத்தாளைக்கிழங்கு, மரவள்ளி, வெள்ளைக்கிழங்கு | |
| காய்கறிகள் | கத்தரிக்காய், வெண்டிக்காய், பீட்றூட், அவரை, கோவா, கரட், கறிமிளகாய், தக்காளி, லீக்ஸ், முள்ளங்கி, நோக்கோல், லபா, பாகற்காய், புடலங்காய், பூசணிக்காய் | |
| ஏனையவை | இஞ்சி | 270 நாட்கள் |
| | கரும்பு | 360 நாட்கள் |

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண்: ஆர்டிடி/எஸ்ரிஏஆர்ஆர்-ஐஎஸ்/2019/01**

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல.30 சனாதிபதி மாவத்தை
கொழும்பு - 01
2019 நவெம்பர் 13

**சேரல்: அனைத்துப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும்**

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்**
**சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் வட்டி உதவுதொகை திட்டம்**

1. **அறிமுகம்**

தேயிலையின் மீள்பயிரிடல், இறப்பரின் புதிய பயிரிடல் மற்றும் அவற்றுடன் தொடர்பான நடவடிக்கைகளை ஊக்குவிப்பதன் மூலம் இலங்கையில் சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பருக்கு புத்துயிரளிக்கும் முக்கிய குறிக்கோளுடன், இலங்கை அரசாங்கம் **சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் செயற்றிட்டத்தினை** நடைமுறைப்படுத்துவதற்கு வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்துடன் ஒழுங்குகளைச் செய்திருக்கிறது.

இலங்கை அரசாங்கத்தினாலும் வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினாலும் கூட்டாக நிதியிடப்பட்ட சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் செயற்றிட்டம் தலைமை நிகழ்ச்சித்திட்ட முகாமையாளரான பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சின் கீழ் தொழிற்படுகின்ற சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்தியிரளித்தல் செயற்றிட்டத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவினால் நடைமுறைப்படுத்துகிறது. சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்தும் காலம் 2016 இலிருந்து 2021 வரையானதாக இருக்கும்.

இலங்கை மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்படும் சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் செயற்றிட்ட வட்டி உதவுதொகைத் திட்டம் சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் செயற்றிட்டத்தின் “கூறு சி: கிராமிய நிதியியல் வசதிக்குட்படுத்தல்” இன் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் 2019.10.15 இலிருந்து 2024.12.31 வரை செயற்பாட்டிலிருக்கும்.

2. **திட்டத்தின் குறிக்கோள்**

திட்டத்தின் குறிக்கோள் யாதெனில், தேயிலை மீள்பயிரிடல், இறப்பர் பெருந்தோட்டங்களின் புதிய பயிரிடல் என்பனவற்றின் காரணமாக வருமானத்தினை உருவாக்குவதில், தாமதங்களை எதிர்நோக்குகின்ற சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் செயற்றிடடத்தில் தொடர்புபட்டுள்ள வேளாண்மையாளர்களுக்கு அவர்களது மீள்பயிரிடப்பட்ட தேயிலை மற்றும் புதிதாகப் பயிரிடப்பட்ட இறப்பர் பெருந்தோட்டங்களிலிருந்து வருமானத்தினை உருவாக்கிக் கொள்ளக்கூடிய அத்தகைய காலம் வரை சுயவேலை வாய்ப்பிற்கு அல்லது குறுங்கால வருமான உருவாக்க நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதன் மூலம் சலுகை ரீதியான நிதியியல் வசதிகளை வழங்குவதேயாகும்.

3. **நிதியிடல்**

தகைமையுடைய கடன்பாட்டாளர்களக்கு கடன்கள் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் வழங்கப்படுமிடத்து திட்டத்தின் கீழான வட்டி உதவுதொகை இலங்கை அரசாங்கத்தின் சார்பில் நிதி அமைச்சினால் வழங்கப்படும்.

4. **திட்டத்தின் முகாமைத்துவம்**

பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சு மற்றும் சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் செயற்றிட்டத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவு என்பனவற்றின் பங்கேற்புடன் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் திட்டத்தினை நடைமுறைப்படுத்தும்.

5. வரைவிலக்கணம்

5.1 **"அமைச்சரவை ஒப்புதல்"** என்பது சிறுஉடமையாளா் தேயிலை மற்றும் இறப்பா் புத்துயிரளித்தல் செயற்றிட்டத்தின் கிராமிய நிதியியல் வசதிகளுக்குட்படுத்தல் கூறின் கீழ் சிறுஉடமையாளா் தேயிலை மற்றும் இறப்பா் புத்துயிரளித்தல் வட்டி உதவுதொகைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு 2019.07.19 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சரவையினால் வழங்கப்பட்ட ஒப்புதலையும் 2019.07.19 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் வழங்கப்பட்ட ஒப்புதலுக்கு பின்னா் செய்யப்படக்கூடிய ஏதேனும் திருத்தங்கள் இருப்பின் அவற்றிற்குமான ஒப்புதல் எனப் பொருள்படும்.

5.2 **"பங்கேற்கின்ற நிதியியல் நிறுவனங்கள்"** என்பது மத்திய வங்கியுடன் துணை உடன்படிக்கையொன்றினை மேற்கொண்ட பின்னா் அமைச்சரவையின் ஒப்புதலுக்கிணங்க சிறுஉடமையாளா் தேயிலை மற்றும் இறப்பா் புத்துயிரளித்தல் வட்டி உதவுதொகைத் திட்டத்தில் பங்கேற்கின்ற ஏதேனும்உரிமம் பெற்ற வங்கி எனப் பொருள்படும்.

5.3 **"துணை உடன்படிக்கை"** என்பது சிறுஉடமையாளா் தேயிலை மற்றும் இறப்பா் புத்துயிரளித்தல் வட்டி உதவுதொகைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவது தொடா்பில் இலங்கை மத்திய வங்கிக்கும் ஒவ்வொரு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கிடையில் மேற்கொள்ளப்படுகின்ற கடன் உடன்படிக்கை எனப் பொருள்படும்.

5.4 **"தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்"** என்பது சிறுஉடமையாளா் தேயிலை மற்றும் இறப்பா் புத்துயிரளித்தல் வட்டி உதவுதொகைத் திட்டத்தின் நடைமுறைப்படுத்தல் தொடா்பில் இலங்கை மத்திய வங்கியினால் தயாரிக்கப்பட்டு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு விடுக்கப்படுகின்ற தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களும் அதன்பின்னா் செய்யப்படக்கூடிய ஏதேனும் திருத்தங்களும் எனப் பொருள்படும்.

5.5 **"சிறுஉடமையாளா் தேயிலை மற்றும் இறப்பா் புத்துயிரளித்தல் செயற்றிட்டத்தின் பயன்பெறுநா்"** என்பது சிறுஉடமையாளா் தேயிலை மற்றும் இறப்பா் புத்துயிரளித்தல் செயற்றிட்டத்தில் ஈடுபட்டுவருகின்றவரும் பயன்பெறுபவருமான ஒரு ஆள் எனப் பொருள்படும்.

5.6 **"தகைமையுடைய கடன்பாட்டாளா்"** என்பது தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் குறித்துரைக்கப்பட்டவாறு திட்டத்தின் கீழ் ஏதேனும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்திடமிருந்து கடன்களை அல்லது கடன் வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கான தகைமைப் பிரமாணங்களைப் பூா்த்தி செய்த ஆள் எனப் பொருள்படும்.

5.7 "துணைக் கடன்" என்பது சிறுஉடமையாளா் தேயிலை மற்றும் இறப்பா் புத்துயிரளித்தல் வட்டி உதவுதொகைத் திட்டத்தின் கீழ் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் நிதிகளைப் பயன்படுத்தி தகைமையுடைய கடன்பாட்டாளா்களுக்கு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் நேரடியாக வழங்குகின்ற கடன்கள் எனப் பொருள்படும்.

5.8 **"வட்டி உதவுதொகை"** என்பது தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கிணங்க தகைமையுடைய கடன்பாட்டாளா்களுக்கு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் பகிா்ந்தளிக்கப்படும் துணைக் கடன்களுக்காக, நிதி அமைச்சினால் வழங்கப்பட்ட நிதியினைப் பயன்படுத்தி இலங்கை மத்திய வங்கியினால் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் குறித்துரைக்கப்பட்ட விதத்தில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்ற வட்டி உதவுதொகை எனப் பொருள்படும்.

5.9 **"நிதி அமைச்சினால் வழங்கப்பட்ட நிதியம்"** என்பது சிறுஉடமையாளா் தேயிலை மற்றும் இறப்பா் புத்துயிரளித்தல் வட்டி உதவுதொகைத் திட்டத்தின் கீழ், வட்டி உதவுதொகையினை வழங்குவதற்காக பெருந்தோட்டத் தொழில்துறைகள் அமைச்சினூடாக நிதி அமைச்சினால் இலங்கை மத்திய வங்கிக்கு ஒதுக்கப்பட்டு மாற்றல் செய்யப்பட்ட நிதியம் எனப் பொருள்படும்.

5.10 **"செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவு"** என்பது நிதியிடல் உடன்படிக்கைக்கிணங்க பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சின் கீழ் நிறுவப்பட்டு பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சின் நெறிப்படுத்தல் மற்றும் மேற்பாா்வையின் கீழ் தொழிற்படுகின்ற சிறுஉடமையாளா் தேயிலை மற்றும் இறப்பா் புத்துயிரளித்தல் செயற்றிட்டத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவு எனப் பொருள்படும்.

5.11 **"பண்ணையில் நடைபெற்றுவரும் நடவடிக்கைகள்"** என்பது தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் உள்ளடக்கப்படுவதற்காக பண்ணையில் நடைபெற்றுவரும் நடவடிக்கைகளாக பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சின் ஆலோசனையுடன் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவினால் இலங்கை மத்திய வங்கிக்கு அறிவிக்கப்பட்ட வேளாண் மற்றும் விலங்குவளா்ப்புடன் முக்கியமாக தொடா்புபட்ட நடவடிக்கைகள் எனப் பொருள்படும்.

5.12 **"பண்ணைக்கு வெளியேயான நடவடிக்கைகள்"** என்பது தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் பண்ணைக்கு வெளியேயான நடவடிக்கைகளாக உள்ளடக்கப்படுவதற்காக பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சின் ஆலோசனையுடன் செயற்றிட்ட முகாமைத்துப் பிரிவினால் இலங்கை மத்திய வங்கிக்கு அறிவிக்கப்பட்ட வா்த்தகம், பணிகள் மற்றும் கைத்தொழில்களுடன் முக்கியமாகத் தொடா்புபட்ட நடவடிக்கைகள் எனப் பொருள்படும்.

6. வட்டி உதவுதொகை திட்டத்தின் முக்கிய பண்புகள்

| | | | |
|---|---|---|---|
| 6.1 | துணைக்கடனின் வரையறை | : | ரூ.25,000 கொண்ட உயா்ந்தபட்ச வரையறை |
| 6.2 | தகைமையுடைய கடன்பாட்டாளா்கள் | : | சிறுஉடமையாளா் தேயிலை மற்றும் இறப்பா் புத்துயிரளித்தல் வட்டி உதவுதொகைத் திட்டத்தின் கீழ் துணைக் கடன்களைப் பெற்றுக்கொள்வதற்கு பெருந்தோட்டத் தொழில்துறை அமைச்சின் ஆலோசனையுடன் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவினால் விதந்துரைக்கப்பட்ட சிறுஉடமையாளா் தேயிலை மற்றும் இறப்பா் புத்துயிரளித்தல் செயற்றிட்டத்தில் தொடா்புபட்டுள்ள தேயிலை மற்றும் இறப்பா் சிறுஉடமை வேளாண்மையாளா்கள் |
| 6.3 | தகைமையுடைய நடவடிக்கைகள் | : | பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சின் ஆலோசனையுடன் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவினால் விதந்துரைக்கப்பட்ட பண்ணைக்குள்ளும் பண்ணைக்கு வெளியிலுமான வருமான உருவாக்க நடவடிக்கைகள்<br>**(i) பண்ணைக்குள்ளான நடவடிக்கைகள்**<br>**நாற்றுமேடைகள் -** தேயிலை, பழவா்க்கங்கள், காய்கறிகள், வேளாண் காடாக்கல் |

| | | | |
|---|---|---|---|
| | | | **விலங்கு வளர்ப்பு** - கோழி வளர்ப்பு, கால்நடை, ஆடு |
| | | | **மீன்பிடி** - உள்நாட்டு, அலங்கார மீன்வளர்ப்பு |
| | | | **ஊடுபயிர்கள்** - பருவகால, நீண்டகால மற்றும் ஓரளவு நீண்டகாலப் பயிர்கள் |
| | | | **பதனிடல் மற்றும் பெறுமதிகூட்டல்** |
| | | | **(ii) பண்ணைக்கு வெளியிலான நடவடிக்கைகள்** |
| | | | **சிறியளவு கைத்தொழில்கள்** - செங்கற்கள் தயாரித்தல், கைத்தறி போன்றவை |
| | | | **சிறியளவு வர்த்தகப்படுத்தல்** - வேளாண் உற்பத்திகளைச் சேகரித்தல் |
| | | | **சிறியளவு பணிகள்** - நீர்க்குழாய் வேலைகள், சிகையலங்காரம், தச்சு மற்றும் கொத்தனார் போன்றவை |
| 6.4 | தகைமையுடை கடன்பாட்டாளர்களுக்கான வட்டி வீதம் | : | ஆண்டிற்கு 6.5 சதவீதம் |
| 6.5 | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கான வட்டி உதவுதொகை | : | ஆண்டிற்கு 7.0 சதவீதம்<br>தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் பிரிவு 12.3இல் குறித்துரைக்கப்பட்டவாறு பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கு காலாண்டு அடிப்படையில் இலங்கை மத்திய வங்கியினால் வட்டி உதவுதொகை வழங்கப்படும். |
| 6.6 | பிணையுறுதி | : | தனிப்பட்ட உத்தரவாதங்கள்<br>குறிப்பு: தனிப்பட்ட உத்தரவாதங்கள் கிடைக்கச் சாத்தியமல்லாதவிடத்து பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களினால் ஏற்றுக்கொள்ளத்தக்க ஏதேனும் உத்தரவாதங்கள் ஏற்புடைத்தானவையாக இருக்கும். |
| 6.7 | சலுகைக் காலம் | : | உயர்ந்தபட்சம் மூன்று (3) மாதங்கள்<br>கடன்பாட்டாளர்கள் சலுகைக் காலத்தில் கடனின் வட்டி வீதங்களைச் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் |
| 6.8 | துணைக் கடன்களின் மீள்கொடுப்பனவுக் காலம் | : | வருமான உருவாக்க நடவடிக்கைகளின் தன்மையினைப் பொறுத்து சலுகைக் காலம் உட்பட உயர்ந்தபட்ச மீள்கொடுப்பனவுக் காலம் மூன்று (3) ஆண்டுகளாக இருக்கும் (36 மாதங்கள்). |
| 6.9 | தொழிற்பாட்டுப் பிரதேசங்கள் | : | (i) தேயிலை சிறுஉடமையாளர் தொடர்பான கடன்களுக்காக காலி, மாத்தறை, இரத்தினபுரி, பதுளை, கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்கள்; அத்துடன்<br>(ii) இறப்பர் சிறுஉடமையாளர் தொடர்பான கடன்களுக்காக மொனராகலை மற்றும் அம்பாறை மாவட்டங்கள் |

**7. பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் வகிபாகமும் அவற்றின் பொறுப்புக்களும்**

இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் தீவிரமான வகிபாகமொன்றினை ஆற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன. பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் பின்வரும் பிரிவுகளில் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களை மேற்கொள்ளுதல் வேண்டும்.

7.1 கிளை அலுவலகங்களின் துணைக் கடன் தொழிற்பாடுகளை மேற்பார்வையிடவும் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்துடன் இணைப்புக்களை மேற்கொள்வதற்கும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் தலைமை அலுவலகங்களில் மூத்த அலுவலர்களை நியமித்தல்.

7.2 கிளை வலையமைப்பு முழுவதிலும் சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் வட்டி உதவுதொகைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான அலுவலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளமையினை உறுதிப்படுத்தல்.

7.3 துணைக் கடன்களை வழங்குவதற்கு பொருத்தமான கிளை அலுவலகங்களின் எண்ணிக்கையினை குறித்துரைத்தல் மற்றும் அத்தகைய கிளைகளிலுள்ள அலுவலர்கள் திட்டத்தினை நடைமுறைப்படுத்தல் பற்றி அறிந்திருக்கச் செய்தல்.

7.4 கொடுகடன்களை வழங்குதல் மற்றும் அறவிடுதல் என்பனவற்றின் முழுப்பொறுப்பினையும் ஏற்றுக்கொள்ளுதல்.

7.5 துணைக் கடன்களைத் தெரிவுசெய்வதும் வழங்குவதும் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் பிரிவு 10.3 இல் குறிப்பிடப்பட்டவாறு செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவினால் விடுக்கப்பட்ட ஆவணங்களை முழுமையாக அடிப்படையாகக் கொண்டிருப்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.

7.6 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் எந்தவொரு கிளையும் தகைமையுடைய கடன்பாட்டாளர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் கடன்களை வழங்கும் பொழுது எந்தவொரு சூழ்நிலையிலும் மேலேயுள்ள பிரிவு 6.4இல் குறிப்பிடப்பட்டுள்ள வட்டி வீதத்திலும் பார்க்க உயர்ந்த வீதத்தில் வட்டியை விதிக்கக்கூடாதென்பதனை உறுதிப்படுத்துதல்.

7.7 ஒவ்வொரு துணைச் செயற்றிட்டமும் பொருளாதார ரீதியாகவும் நிதியியல் ரீதியாகவும் ஆற்றல்வாய்ந்தன என்பதனையும் சாத்தியமானவை என்பதனையிட்டு தாமாகவே திருப்தியடைந்து கொள்ளுதல்.

7.8 துணைக் கடன் தொடர்பான அனைத்துத் தகவல்களையும் கண்டறிந்து கொள்வதனை வசதிப்படுத்தும் விதத்தில் திட்டம் தொடர்பிலான பதிவேடுகளையும் தனியான தரவுத் தளத்தினையும் பேணுதல்.

7.9 கூறிற்காக ஒதுக்கப்பட்ட நிதி பூரணமாகப் பயன்படுத்தப்பட்டிருப்பதனை உறுதிப்படுத்துவதற்காக கொடுகடன் வழங்கல்கள் மற்றும் பயன்பெறுநர்களின் இயலளவு அபிவிருத்தி என்பன தொடர்பில் திட்டத்தின் இலக்குகளை எய்தும் பொருட்டு செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவுடன் முழுமையாக ஒத்துழைத்தல்.

7.10 தொடர்பான தலைமை அலுவலகங்களினூடாக தொடர்பான படிவங்களில் இலங்கை மத்திய வங்கியினால் கேட்டுக் கொள்ளப்பட்டவாறு காலத்திற்குக் காலம் சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளிப்பு வட்டி உதவுதொகை தொடர்பான தரவுகளையும் தகவல்களையும் வழங்குதல்.

7.11 இத்திட்டத்தின் கீழ், வழங்கப்பட்ட கடன்கள் தொடர்பில் முன் மற்றும் பின் மேற்பார்வைகளை மேற்கொள்ளுதல்.

7.12 தகைமையுடைய கடன்பாட்டாளர்களுக்கு கடன்களைப் பகிர்ந்தளிக்கும் பொழுது வழமையான கவனிப்புக்களையும் முன்மதியுடைய தன்மைகளையும் அவதானத்தில் கொள்ளுதல். அத்துடன் துணைக் கடன்கள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதனை உறுதிப்படுத்துவதற்கு நியாயமான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல்

7.13 கணக்குகளையும் நிதியியல் கூற்றுக்களையும் பேணுதல்

(அ) பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் மற்றைய விடயங்களுடன், துணைக் கடன் மதிப்பீடுகள், ஒப்புதல்கள், பகிர்ந்தளிப்புக்கள் மற்றும் அறவிடல் என்பனவற்றை எடுத்துக்காட்டும் விதத்தில் பொருத்தமான பேரேட்டுக் கணக்குகளையும் பதிவுகளையும் பேணுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

(ஆ) பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கடன் பெறுகைகளின் பயன்பாட்டிற்காகவும் வட்டி உதவுதொகை தொழிற்பாடுகளுக்காகவும் தனித்தனியான கணக்குகளைப் பேணுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

(இ) பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் பரீட்சிப்புக்கள் மற்றும் மீளாய்வுகளுக்காக கணக்குகளையும் நிதியியல் கூற்றுக்களையும் கிடைக்கச் செய்தல் வேண்டும். மேலும், பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் கேட்டுக் கொள்ளப்படும் வேளைகளில் கணக்குகளையும் நிதியியல் கூற்றுக்களையும் சமர்ப்பிக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

7.14 வட்டி உதவுதொகை கோரல்களைப் பொறுத்தவரையில் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் குறித்துரைக்கப்பட்டுள்ள நடைமுறைகளைப் பின்பற்றுதல்.

**8. இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் வகிபாகம்**

8.1 தேவையான வேளைகளில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களையும் திருத்தங்களையும் விடுத்தல்.

8.2 பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சினால் கேட்டுக் கொள்ளப்படுகின்ற வேளைகளில் தேவையான கொள்கை நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தல்.

8.3 திட்டத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் சரியாகப் பூரணப்படுத்தப்பட்ட வட்டி உதவுதொகை விண்ணப்பங்கள் கிடைத்ததும் 'முதலில் வந்தவற்றிற்கு முதலில் பணியாற்றுதல்' என்ற அடிப்படையில் திட்டத்தின் கீழ் வட்டி உதவுதொகை விடுவிக்கப்படுவதுடன் விடுவிக்கப்பட்ட வட்டி உதவுதொகை தொடர்பான விபரங்கள் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் தொடர்பான தலைமை அலுவலகங்களுக்கு அறிவிக்கப்படும்.

8.4 சரியாகப் பூரணப்படுத்தப்பட்ட வட்டி உதவுதொகை விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றதிலிருந்து நாற்பத்தைந்து (45) நாட்களுக்குள் வட்டி உதவுதொகை காலாண்டு அடிப்படையில் வழங்கப்பட்டிருக்கின்றது என்பதனை உறுதிப்படுத்தல்.

8.5 நிதியை முகாமைப்படுத்தல் மற்றும் கணக்குகளைப் பேணுதல்.

8.6 தேவையான பொழுது, பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சு செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவு மற்றும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் என்பனவற்றின் பங்கேற்புடன் சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளிப்பு செயற்றிட்டத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட பயன்பெறுநர்கள் தொடர்பில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் நிதியிடல் பகிர்ந்தளிப்புக்களின் முன்னேற்ற மீளாய்வுகளை மேற்கொள்ளுதல்.

8.7 கேட்டுக்கொள்ளப்படும் பொழுது சிறுஉடமையாளர்கள் தேயிலை, இறப்பர் புத்துயிரளிப்பு, வட்டி உதவுதொகை திட்டத்தின் நடைமுறைப்படுத்தல்கள் தொடர்பில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.

**9. பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சின் வகிபாகம்**

9.1 திட்டத்தின் செயன்முறைகளை கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல், தேவையான கொள்கை நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் துணைக் கடன்களின் பகிர்ந்தளிப்புக்களுக்குப் பின்னரான முன்னேற்றங்களைக் கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல், செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவிற்கும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும் தொடர்புறுத்தல்.

9.2 இவ்வுடன்படிக்கையின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் இத்தொழிற்பாடுகள் அமைந்திருக்கின்றன என்பதனை உறுதிப்படுத்துவதற்காக செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவின் தொழிற்பாடுகளை மேற்பார்வை செய்தல்.

9.3 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு வட்டி உதவுதொகைக் கொடுப்பனவுகளை உரிய நேரத்தில் கொடுப்பனவு செய்வதனை இயலுமைப்படுத்துவதற்காக இலங்கை மத்திய வங்கிக்கு நிதிகளை மாற்றல் செய்வதற்கு ஒழுங்குகளை மேற்கொள்ளுதல்.

9.4 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் செய்யப்பட்ட வட்டி உதவுதொகை கோரல்களை செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவினூடாக மத்திய வங்கியின் கொடுப்பனவுகளுக்காக அதற்கு விதந்துரைத்தல்.

9.5 ஒவ்வொரு ஆண்டினதும் நான்காம் காலாண்டில் சேரவேண்டிய வட்டி உதவுதொகைகளின் மதிப்பீடுகள் அதே காலாண்டின் திசெம்பர் 25ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னரோ வழங்கப்படுவதனை உறுதிப்படுத்தல்.

9.6 அமைச்சரவை ஒப்புதலில் வழங்கப்பட்ட ஆரம்ப கடன் எறிவுகளும் வட்டி உதவுதொகைக் கணிப்புக்களும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு விதந்துரைக்கப்பட்ட கடன் தொகையின் செயன்முறை காலத்தில் ஒப்புதலளிக்கப்பட்ட வரையறைக்குள் பேணப்பட்டன என்பதனை செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவு உறுதிப்படுத்துதல்.

9.7 தேவையானவிடத்து செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவு மற்றும் தொடர்பான பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் பங்களிப்புக்களுடன், இலங்கை மத்திய வங்கியினால் சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் செயற்றிட்டத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட பயன்பெறுநர்களுக்கு வழங்கப்பட்ட பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் நிதியியல் பகிர்ந்தளிப்புக்களின் முன்னேற்ற மீளாய்வுகளை நடத்துவதில் ஈடுபடுதல்.

9.8 செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவின் ஒத்துழைப்புடன் சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளிப்பின் நிதிப்பாய்ச்சல்களை மேற்கொள்ளுதல் மற்றும் மேற்பார்வை செய்தல்.

**10. செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவின் வகிபாகம்**

10.1 சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் செயற்றிட்டத்தின் வட்டி உதவுதொகைத் திட்டத்தின் கீழ் துணைக்கடன்களைப் பெறுவதற்காக சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் பயன்பெறுநர்களைத் தெரிவுசெய்தல்.

10.2 செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவினால் துணைக் கடன்களைப் பெறுவதற்கு தெரிவுசெய்யப்பட்ட சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் பயன்பெறுநர்களுக்கு அவர்களது சொந்த முன்னுரிமைகளின் அடிப்படையில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களைத் தெரிவுசெய்வதற்கு வாய்ப்பினை வழங்குதல்.

10.3 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு பயன்பெறுநர்கள் தமது தகைமையினை நிரூபிப்பதற்கான அனைத்து விபரங்களையும் உள்ளடக்கிய செல்லுபடியாகும் ஆவணங்களுடன் செல்லுமாறு பயன்பெறுநர்களை ஆற்றுப்படுத்தல் மற்றும் சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் வட்டி உதவுதொகைத் திட்டத்தின் கீழ் கடன்களை வழங்குமாறு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு அறிவித்தல் வேண்டுமென்பதுடன் அமைச்சரவை ஒப்புதலில் வழங்கப்பட்டுள்ள ஆரம்பக் கணிப்புக்களைப் பேணுகின்ற அதேவேளையில் கடன் தொகைகளை விதந்துரைத்தல்.

10.4 சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் செயற்றிட்டத்தின் கீழ் தனியொரு வாடிக்கையாளர் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களிலிருந்து பல கடன்களைப் பெறுவதனைத் தடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதனை உறுதிப்படுத்தல்.

10.5 இலங்கை மத்திய வங்கியினால் கொடுப்பனவுகள் செய்யப்படுவதற்காக பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சிற்கு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் செய்யப்பட்ட வட்டி உதவுதொகைகளை விதந்துரைத்தல்.

10.6 பகிர்ந்தளிக்கப்பட்ட ஒவ்வொரு துணைக் கடன்களுக்காகவும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட பயன்பெறுநர்களின் பதிவேடுகளையும் அவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களையும் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட வட்டி உதவுதொகைகளையும் பேணுதல்.

10.7 பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சின் ஒத்துழைப்புடன் திட்டத்தின் நிதிப்பாய்ச்சல்களை மேற்பார்வை செய்தல் மற்றும் நடாத்துதல்.

10.8 பெருந்தோட்டத் தொழில்துறைகள் அமைச்சு மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஆதரவுடன் சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் பயன்பெறுநர்களுக்கு நிதியியல் அறிவு நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்தல்.

**11. தகைமையுடைய கடன்பாடடாளர்களுக்கு கடன்களை வழங்குதல்**

11.1 மேலேயுள்ள பிரிவு 6.4இல் குறித்துரைக்கப்பட்ட வட்டி வீதத்தில் சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளிப்புச் செயற்றிட்டத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவினால் விதந்துரைக்கப்பட்ட துணைக் கடன்பாட்டாளர்களுக்கு மாத்திரம் சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் புத்துயிரளித்தல் வட்டி உதவுதொகைத் திட்டத்தின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் சொந்த மூலவளங்களைப் பயன்படுத்தி துணைக் கடன்களை வழங்குதல் வேண்டும்.

11.2 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் 2021.10.31 இற்குப் பின்னர் திட்டத்தின் கீழ் துணைக் கடன்கள் எதனையும் வழங்குதல் கூடாது. எனினும், சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் வட்டி உதவுதொகைத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களுக்கான வட்டி உதவுதொகைள் 2024.12.31 வரை செலுத்தப்படும்.

11.3 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் அத்தகைய தகைமையுடைய கடன்பாட்டாளர்களின் வங்கிக் கணக்குகளூடாக தகைமையுடைய கடன்பபாட்டாளர்களுக்கு துணைக் கடன்களைப் பகிர்ந்தளிக்கலாம்.

11.4 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் அத்தகை கடன்களைப் பகிர்ந்தளிக்கும் வேளையில் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவிற்கு பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்கள் தொடர்பான தகவல்களை வழங்குதல் வேண்டும்.

**12. வட்டி உதவுதொகைக் கொடுப்பனவுகள்**

12.1 தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் குறித்துரைக்கப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கிணங்க, பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் அவற்றின் சொந்த நிதியினைப் பயன்படுத்தி வழங்கிய துணைக் கடன்களுக்காக நிதி அமைச்சினால் தீர்மானிக்கப்பட்ட வட்டி வீதத்தில் இலங்கை மத்திய வங்கி வட்டி உதவுதொகைகளை வழங்கும்.

12.2 சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் வட்டி உதவுதொகைத் திட்டத்தின் கீழ் வட்டி உதவுதொகைக்கான தகைமையைப் பெறும் பொருட்டு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் எல்லா சூழ்நிலைகளிலும் மேலேயுள்ள பிரிவு 6.4இல் குறிப்பிடப்பட்ட வட்டி வீதங்களில் தகைமையுடைய கடன்பாட்டாளர்களுக்கு கடன்களை வழங்க வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றன. இத்தேவைப்பாட்டினை நிறைவேற்றாத துணைக் கடன்கள் சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் வட்டி உதவுதொகைத் திட்டத்தின் கீழ் வட்டி உதவுதொகைக்கான தகைமையினைப் பெறமாட்டா.

12.3 பின்பற்றப்பற்றப்படுவதற்கான நடைமுறைகள் கீழே தரப்படுகின்றன:

(அ) துணைக் கடன்களை விடுவித்ததன் பின்னர் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவு மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சு என்பனவற்றினூடாக கீழேயுள்ள பிரிவு 12.3(இ) இல் தரப்பட்டுள்ள இறுதித் திகதிக்கிணங்க பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் தலைமை அலுவலகங்கள் காலாண்டு அடிப்படையில் **இணைப்பு I** இல் தரப்பட்டுள்ள வட்டி உதவுதொகை விண்ணப்பங்களை சரியான முறையில் பூர்த்தி செய்து பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும். வட்டி உதவுதொகை விண்ணப்பங்களின் மென் மற்றும் வன் பிரதிகள் இரண்டும் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கு கிடைக்கச் செய்யப்படுதல் வேண்டும்.

(ஆ) வட்டி உதவுதொகை காலாண்டு அடிப்படையில் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்படுமென்பதுடன் குறைவடைந்து செல்லும் மீதி முறை மற்றும் உண்மையான/365 நாள் எண்ணிக்கையினைப் பயன்படுத்தி மாதாந்த அடிப்படையில்[14] கணிக்கப்படும். வெளிநின்ற மூலதனத்தினைக் கணிக்கையில் துணைக் கடன்கள் முன்கூட்டியே நேரகாலத்துடன் முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ தீர்ப்பனவு செய்யப்பட்டிருப்பின் அவை பரிசீலனையில் கொள்ளப்படும்.

(இ) முற்போந்த நான்கு காலாண்டுகளிலும் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களுக்காக ஒவ்வொரு ஆண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒத்தோபர் மாதங்களின் 15ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னரோ செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவு அத்துடன் அல்லது பெருந்தோட்டத் தொழில்துறைகள் அமைச்சு என்பனவற்றினூடாக பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் தலைமை அலுவலகம் வட்டி உதவுதொகை விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்.

(ஈ) சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் வட்டி உதவுதொகைத் திட்டத்தின் கீழ் வட்டி உதவுதொகையினைக் கோருகின்ற விண்ணப்பங்களின் அனைத்து வன்பிரதிகளும் பணிப்பாளர் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி, இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01 என்ற முகவரிக்கு அனுப்படுதல் வேண்டும். அத்துடன் மென்பிரதிகள் காலத்திற்குக் காலம் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் அறிவிக்கப்படும் மின்னஞ்சல் முகவரிகளுக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

(உ) வட்டி உதவுதொகை விண்ணப்பம் ஒப்புதலளிக்கப்பட்டதும் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் வட்டி உதவுதொகை விண்ணப்பங்களுக்கு ஒப்புதலளிப்பதுடன் சரியாகப் பூரணப்படுத்தப்பட்ட வட்டி உதவுதொகை விண்ணப்பங்கள் பெறப்பட்டதன் பின்னர் நாற்பத்தைந்து (45) நாட்களுக்குள் 'முதலில் வந்தவற்றிற்கு முதலில் பணியாற்றுதல்' ஒழுங்கில், நிதி அமைச்சினால் வழங்கப்பட்ட நிதியின் கிடைப்பனவினைப் பொறுத்து வட்டி உதவுதொகைகளை விடுவிக்கப்படும்.

12.4 மேலதிக விளக்கங்கள் தேவைப்படும் சந்தர்ப்பத்தில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் வட்டி உதவுதொகை விண்ணப்பங்கள் தொடர்பில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களை விசாரிப்பதற்கான உரிமையினை தன்னகத்தே கொண்டிருக்கிறது.

## 13. அறிக்கையிடல்

13.1 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் **இணைப்பு** II இல் உள்ளவாறு, கடப்பாடுகள், பகிர்ந்தளித்தல் மற்றும் வட்டி உதவுதொகை தொடர்பான விபரங்களைக் கொண்ட முற்போந்த மாதத்திற்கான மாதாந்த அறிக்கையினை ஒவ்வொரு மாதமும் 15ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சு மற்றும் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவு என்பனவற்றிற்கான பிரதிகளுடன் சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் வட்டி உதவுதொகைத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட துணைக் கடன்கள் தொடர்பான வட்டி உதவுதொகைகள் செலுத்தப்பட்டு வருகின்ற காலம் வரை இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

13.2 **இணைப்பு** III இன்படி துணைக் கடன்களின் நேரகாலத்துடனான தீர்ப்பனவு மற்றும் கடன்பாட்டாளர்களினால் கடன் தவணைகள் தொடர்பில் செய்யப்பட்ட மேலதிகக் கொடுப்பனவு என்பன தொடர்பாக முற்போந்த மாதத்திற்கான மாதாந்த அறிக்கை ஒவ்வொரு மாதமும் 15ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ பெருந்தோட்டத் தொழில்துறைகள் அமைச்சு மற்றும் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவு என்பனவற்றிற்கான பிரதிகளுடன் இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

13.3 **இணைப்பு** IV இல் உள்ளவாறு பகிர்ந்தளிக்கப்பட்ட துணைக் கடன்களின் செயற்பாடக் கடன் நிலை தொடர்பான அரையாண்டு அறிக்கை.

13.4 மேலே குறிப்பிடப்பட்ட இணைப்பு II, III, மற்றும் IV இன் அனைத்து வன்பிரதிகளும் பணிப்பாளர் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி, இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01 என்ற முகவரிக்கு அனுப்படுதல் வேண்டும் அத்துடன் மென்பிரதிகள் காலத்திற்குக் காலம் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் அறிவிக்கப்படும் மின்னஞ்சல் முகவரிகளுக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

## 14. கணக்குகளை கணக்காய்வு செய்தல்

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் வட்டி உதவுதொகைத் திட்டத்தின் ஆண்டு நிதியியல் கூற்றுக்களைத் தயாரிப்பதுடன் அத்தகைய நிதியியல் கூற்றுக்கள் கணக்காய்வாளர் நாயகத்தினால் கணக்காய்வு செய்யப்படும். பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களும் வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறு கணக்காய்வு செய்யப்பட்ட சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் வட்டி உதவுதொகைத் திட்டத்தின் நிதியியல் கூற்றுக்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

## 15. பொதுவான நிபந்தனைகள்

**இலங்கை மத்திய வங்கி பின்வருவற்றிற்கான உரிமைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது:**

15.1 அவசியமானதெனக் கருதப்படுமிடத்து களப் பரீட்சிப்புக்களை நடத்துதல், பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு விஜயம் மேற்கொள்ளுதல், பேரேடுகள், புத்தகங்கள் போன்றவற்றைப் பரிசோதித்தல் மற்றும் வேறு ஏதேனும் மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

15.2 கடன்வழங்கல் தொடர்பில் சரியான மேற்பார்வை, கவனிப்பு மற்றும் முன்மதியுடைய நடவடிக்கைகளை உறுதிப்படுத்துவதற்குப் போதுமான

14 1 கடன் தவணைகள் தவறியிருக்கின்றனவா இல்லையா என்பதனை கருத்தில் கொள்ளாது வெளிநின்ற மூலதனத்தினைத் தீர்மானிப்பதற்கு பின்வரும் கணிப்பு முறை மேற்கொள்ளப்படும்.

$$\text{வெளிநின்ற மூலதனம்} = \left[ \frac{\text{மூல துணைக் கடன் தொகை}}{\text{ஆரம்ப தவணைகளின் எண்ணிக்கை}} * \text{எஞ்சியுள்ள தவணைகளின் எண்ணிக்கை} \right] - \text{மேலதிக மூலதனக் கொடுப்பனவு}^*$$

* மேலதிக மூலதனக் கொடுப்பனவு முழுமையான மற்றும் பகுதியளவிலான மூலதன மேலதிகக் கொடுப்பனவுகள் இரண்டினையும் உள்ளடக்குகிறது.

நடவடிக்கைகளை மேற்கொள்ளாது வேண்டுமென்றே புறக்கணித்தமையின் விளைவாக கடன்பாட்டாளர்களினால் போலியான கடன்களின் தவறான பயன்படுத்துகை அல்லது துணைக் கடன்களை வழங்குவதில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் இழைக்கப்பட்ட ஏதேனும் தவறான நடத்தைகள் தொடர்பில் சரியான சான்றுகள் காணப்படுமிடத்து அத்தகைய பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் கோரல்களின் மீது செலுத்தப்பட்ட ஏதேனும் தொகையினை மீளப்பெற்றுக் கொள்வதற்கும் அது தொடர்பான பொறுப்புக்களையும் அனுமதிக்கப்பட்ட ஏதேனும் கோரல்களையும் மறுப்பதற்கும் மத்திய வங்கிக்கு உரிமையுண்டு.

15.3 சிறுஉடமையானா் தேயிலை மற்றும் இறப்பா் புத்துயிரளித்தல் வட்டி உதவுதொகை திட்டத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு இணங்கியொழுகாத சந்தா்ப்பமொன்றில் சிறுஉடமையானா் தேயிலை மற்றும் இறப்பா் புத்துயிரளித்தல் வட்டி உதவுதொகை திட்டத்தின் கீழ் பங்கேற்கும் நிதியியல் நிறுவனமொன்றாக தொழிற்படுவதற்கான ஏதேனும் வங்கியொன்றின் தகைமையினை இரத்துச் செய்யலாம்; அத்துடன்

15.4 சிறுஉடமையானா் தேயிலை மற்றும் இறப்பா் புத்துயிரளித்தல் வட்டி உதவுதொகை திட்டத்தின் நியதிகளும் நிபந்தனைகளும் அவசியமானவிடத்து திருத்தப்படலாம்.

உங்கள் உண்மையுள்ள

எம்.எஸ்.கே தா்மவா்தன
**பணிப்பாளா்/ பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்**
**இலங்கை மத்திய வங்கி**

**இணைப்பு I**

## சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் வட்டி உதவுதொகைத் திட்டம்
## வட்டி உதவுதொகை கோரலுக்கான விண்ணப்பம்

வங்கி: அறிக்கையிடுகின்ற காலம் (காலாண்டு):

கிளை:

| | | கடன்பாட்டாளரின் விபரங்கள் | | | | துணைக் கடன்களின் மூலதன மீள்கொடுப்பனவு விபரங்கள் (ரூ.) | | | | | காலப்பகுதிக் காகக் கோரப்பட்ட மொத்த வட்டி உதவுதொகை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | பெயர் | தே.அ.அ. இல. | முகவரி | மாவட்டம் | காலத் தொடக்கத்தில் உள்ளவாறு வெளிநின்றவை | இக்காலப்பகுதியில் செலுத்தப்பட்ட தொகை | | | கால முடிவில் உள்ளவாறு வெளிநின்றவை | |
| | | | | | | | 1ஆவது மாதம் | 2ஆவது மாதம் | 3ஆவது மாதம் | | |
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |
| மொத்தம் | | | | | | | | | | | |

மேலே குறிப்பிடப்பட்ட கடன் விபரங்கள் உண்மையானவையும் சரியானவையும் எனவும் ஆண்டிற்கு ...... வட்டி வீதமொன்றில் வங்கியின் சொந்த மூலவளங்களிலிருந்து வழங்கப்பட்டன எனவும் தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல. ஆர்டிடி/எஸ்ரிஏஆர்ஆர்-ஐஎஸ்/2019/01 இன் நியதிகளின்படி வட்டி உதவுதொகைகளைப் பெற்றுக்கொள்வதற்கு வங்கி தகைமையுடையது எனவும் நான் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

.................................................................... ........................................................................

கிளை முகாமையாளரின் பெயர் கிளை முகாமையாளரின் கையொப்பம்

.............................. ............................................................

திகதி கிளையின் முத்திரை

குறிப்பு: ஒவ்வொரு பக்கத்திலும் முத்திரையும் அதிகாரமளிக்கப்பட்டவரின் கையொப்பமும் இடப்படுவது அவசியமாகும்.

**இணைப்பு II**

## சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் வட்டி உதவுதொகைத் திட்டம்
## புதிய துணைக் கடன்களின் விபரங்கள் - மாதாந்த அறிக்கை

வங்கி: அறிக்கையிடுகின்ற

கிளை: மாதம்/

ஆண்டு:

| | | கடன்பாட்டாளரின் விபரங்கள் | | | | துணைக் கடன்களின் பகிர்ந்தளிப்பு விபரங்கள் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | பெயர் | தே.அ.அ. இல. | முகவரி | மாவட்டம் | ஒப்புதலளிக் கப்பட்ட தொகை (ரூ.) | பகிர்ந்தளி க்கப்பட்ட திகதி (ஆ/மா/தி) | பகிர்ந்தளிக் கப்பட்ட கடன் தொகை (ரூ.) | தவணைகளின் எண். | தவணையின் தொகை (ரூ.) | 1ஆவது தவணைத் திகதி | இறுதித் தவணைத் திகதி |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |

மேலே குறிப்பிடப்பட்ட கடன் விபரங்கள் உண்மையானவையும் சரியானவையும் எனவும் ஆண்டிற்கு ...... வட்டி வீதமொன்றில் வங்கியின் சொந்த மூலவளங்களிலிருந்து வழங்கப்பட்டன எனவும் தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல. ஆர்டிடி/எஸ்ரிஏஆர்ஆர்-ஜஎஸ்/2019/01 இன் நியதிகளின்படி வட்டி உதவுதொகைகளைப் பெற்றுக்கொள்வதற்கு வங்கி தகைமையுடையது எனவும் நான் இத்தால் உறுதிப்படுத்துகிறேன் (பகிர்ந்தளிப்புக் கடிதம் இணைக்கப்பட்டுள்ளது).

................................................................... ........................................................................

கிளை முகாமையாளரின் பெயர் கிளை முகாமையாளரின் கையொப்பம்

............................... .............................................................

திகதி கிளையின் முத்திரை

குறிப்பு: ஒவ்வொரு பக்கத்திலும் முத்திரையும் அதிகாரமளிக்கப்பட்டவரின் கையொப்பமும் இடப்படுவது அவசியமாகும்.

இணைப்பு III

## சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் வட்டி உதவுதொகைத் திட்டம்

## முதிர்ச்சியடையாத கூற்று - துணைக் கடன்களின் மேலதிகத் தீர்ப்பனவு

அறிக்கையிடுகின்ற மாதம்/ ஆண்டு:

வங்கி:

கிளை:

| | | கடன்பாட்டாளரின் விபரங்கள் | | | | துணைக் கடன்களின் மூலதனம் முழுமையாக அல்லது பகுதியளவில் நேரகாலத்துடன் தீர்ப்பனவு செய்யப்பட்ட விபரங்கள் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | பெயர் | தே.அ.அ. இல. | முகவரி | மாவட்டம் | மாதத்தின் ஆரம்ப நாளன்று வெளி நின்றவை | 1ஆவது கொடுப்பனவு | | 2ஆவது கொடுப்பனவு | | 3ஆவது கொடுப்பனவு | | மாதத்தின் இறுதியி லுள்ளவாறு வெளி நின்றவை |
| | | | | | | | திகதி | செலுத்தப் பட்ட தொகை(ரூ.) | திகதி | செலுத்தப் பட்ட தொகை(ரூ.) | திகதி | செலுத்தப் பட்ட தொகை(ரூ.) | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |

**மேலே குறிப்பிடப்பட்டுள்ள துணைக் கடனின் விபரங்கள் உண்மையானவையும் சரியானவையும் என நான் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.**

.................................................................
கிளை முகாமையாளரின் பெயர்

.......................................................................
கிளை முகாமையாளரின் கையொப்பம்

..............................
திகதி

...........................................................
கிளையின் முத்திரை

குறிப்பு: ஒவ்வொரு பக்கத்திலும் முத்திரையும் அதிகாரமளிக்கப்பட்டவரின் கையொப்பமும் இடப்படுவது அவசியமாகும்.

இணைப்பு IV

## சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் வட்டி உதவுதொகைத் திட்டம் செயற்படாக் கடன் நிலை

வங்கியின் பெயர்: அறிக்கையிடுகின்ற காலம் (அரையாண்டு):

| மாவட்டம் | ............ மொத்த வெளிநின்ற மீதி | | விசேடமாகக் குறிப்பிடப்படுகின்றவை | | தரம் குறைந்தவை | | ஐயத்திற்குரியவை | | இழக்கப்படுபவை | | மொத்தச் செயற் படாக் கடன்கள் (ரூ.) | செயற் படாக் கடன்* (%) | செயற் படாக் கடன்** (%) | செயற்ப டாக் கடன்*** (%) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கடன்களின் எண். | தொகை (ரூ.) | கடன்களின் எண். | தொகை (ரூ.) | கடன்களின் எண். | தொகை (ரூ.) | கடன்களின் எண். | தொகை (ரூ.) | கடன்களின் எண். | தொகை (ரூ.) | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |

* இதே திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மொத்தக் கடனின் சதவீதமாக குறிப்பிட்ட சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் வட்டி உதவுதொகைத் திட்டத்தின் செயற்படாக் கடன்கள்

** வங்கியின் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்களின் சதவீதமாக சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் வட்டி உதவுதொகைத் திட்டத்தின் செயற்படாக் கடன்கள்

*** வங்கியின் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்களின் சதவீதமாக வங்கியின் செயற்படாக் கடன்கள்

வங்கியின் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள (ரூ. மில்.) : ........................................................................

வங்கியின் மொத்தச் செயற்படாக் கடன்கள் (ரூ.மில்.) : ........................................................................

..........................................................................................................
அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர் மற்றும் பதவி

..........................................................
கையொப்பம் மற்றும் திகதி

குறிப்பு: ஒவ்வொரு பக்கத்திலும் முத்திரையும் அதிகாரமளிக்கப்பட்டவரின் கையொப்பமும் இடப்படுவது அவசியமாகும்.

**நுண்பாகநிதிச் சட்டப் பணிப்புரைகள் 2019இன் 01ஆம் இலக்கம்** 06 மாச்சு 2019

## வைப்புகள்

2016ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நுண்நிதிச் சட்டத்தின் 11ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டது

| | | | |
|---|---|---|---|
| 1. | வைப்புகள் மீதான 2016இன் 03ஆம் இலக்க பணிப்புரைகளை நீக்குதல் | 1.1 | வைப்புகள் மீதான 2016இன் 03ஆம் இலக்க நுண்நிதியளிப்புச் சட்டத்தின் பணிப்புரைகள் இத்தால் நீக்கப்படுகின்றது. |
| 2. | தவணை மற்றும் சேமிப்பு வைப்புகளை ஏற்றுக்கொள்ளல் மீதான மட்டுப்பாடுகள் | 2.1 | ஒவ்வொரு உரிமம்பெற்ற நுண்பாகநிதிக் கம்பனியும்<br><br>i. வைப்புகளை பிணையஉறுதி வைப்புகளாக மாத்திரம் ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.<br><br>ii. பராயமடையாதவர்களிடமிருந்து ஏதேனும் வைப்பினை ஏற்றுக்கொள்ளல் ஆகாது. |
| 3. | உரிமம்பெற்ற நுண்பாகநிதிக் கம்பனிகள் தேறிய கடன் வழங்குநராக இருக்க வேண்டும் என்பதுடன் ஒவ்வொரு வாடிக்கையாளரும் தேறிய கடன் பெறுநராக இருக்கவேண்டும் | 3.1 | உரிமம்பெற்ற நுண்பாகநிதிக் கம்பனிகள், தேறிய கடன் வழங்குநர் ஒருவரின் நிலையில் எப்போதுமிருத்தல் வேண்டும். உரிமம்பெற்ற நுண்பாகநிதிக் கம்பனி ஒன்றின் மொத்த வைப்புகள் அதன் மொத்த செயலாற்றுகின்ற கடன்களினதும் முற்பணங்களினதும் அறுபது சதவீதத்தினைவிட (60%) மேற்பட்டிருத்தலாகாது. |
| | | 3.2 | உரிமம்பெற்ற நுண்பாகநிதிக் கம்பனி ஒன்றின் வாடிக்கையாளர் ஒருவர் உரிமம்பெற்ற நுண்பாகநிதிக் கம்பனி ஒன்றிலிருந்து பெற்றுக்கொண்ட கடனொன்றினை முழுமையாக மீள்கொடுப்பனவு செய்துள்ளவிடத்து, அத்தகைய உரிமம்பெற்ற நுண்பாகநிதிக் கம்பனியானது கடன் மீள் கொடுப்பனவு நிறைவுசெய்யப்பட்ட திகதியிலிருந்து ஆறு (06) மாதங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியொன்றிற்கு பிணையஉறுதி வைப்பினை பிடித்துவைத்தலாகாது. |
| 4. | ஊக்குவிப்புத் திட்டங்களை தடைசெய்தல் | 4.1 | உரிமம்பெற்ற நுண்பாகநிதிக் கம்பனி எதுவும் வைப்புகளை பரிந்து கோருவதற்கு ஏதேனும் ஊக்குவிப்புத் திட்டத்தினை அறிமுகப்படுத்தலாகாது. |
| 5. | பொருள் விளக்கம் | 5.1 | *பிணையஉறுதி வைப்பு* என்பது அத்தகைய கடன் பெறுநருக்கு வழங்கப்பட்ட கடன் வழங்கல் வசதியொன்றிற்கெதிராக கடன் பெறுநர் ஒருவரிடமிருந்து பிணையஉறுதியொன்றாக பெற்றுக்கொள்ளப்பட்ட சேமிப்பு வைப்பு என்று பொருளாகும். |
| | | 5.2 | *பராயமடையாதவர்* என்பது பராயமடையும் வயது கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 66) மற்றும் அதற்கு செய்யப்பட்ட ஏதேனும் திருத்தங்களின் கருத்தின்படி சட்ட ரீதியான பராயமடைந்தோர் வயதை அடையாத ஒரு ஆள் என்று பொருளாகும். |
| | | 5.3 | *ஊக்குவிப்புத் திட்டம்* என்பது வட்டி மூலமாகவன்றி வைப்பாளர்கள் மீது நாணய அல்லது பொருள் நன்மையொன்றினை வழங்குவதற்கான ஒரு ஏற்பாடு என்று பொருளாகும். |

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2019இன் 01ஆம் இலக்கம்** **2019 ஏப்பிறல் 26**

## வைப்புக்கள் மற்றும் படுகடன் சாதனங்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள்

2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 12ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்பட்டது

பொருளாதாரத்தில் நிலவுகின்ற வைப்புக்கள் மற்றும் கடன் வழங்கல் சாதனங்களின் மீதான உயர்ந்த உண்மை வட்டி வீதங்களையும் நிதியியல் முறைமையூடாக நாணயக் கொள்கை பரிமாற்றச் செயன்முறையினை வலுப்படுத்தி விரைவுபடுத்துவதற்கான தேவையினையும் பரிசீலனையில் கொண்டு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் அவற்றின் கடன் வழங்கல் மீதான வட்டி வீதங்களை குறைப்பதற்கும் அதன் மூலம் உண்மைப் பொருளாதாரத்திற்கான கொடுகடன் பாய்ச்சலை உயர்த்துவதற்குமாக நாணயச் சபை, உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் வைப்புச் சாதனங்கள் மற்றும் படுகடன் சாதனங்கள் தொடர்பில் செலுத்தக்கூடிய உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள் தொடர்பான பணிப்புரைகளை இத்தால் விடுத்தது.

1. உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள்

1.1 இப்பணிப்புரையில் வழங்கப்படுகின்ற ஏற்பாடுகள் தவிர, இலங்கை ரூபா வைப்புக்கள் மீது உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்றினால் முன்வைக்கப்படக்கூடிய அல்லது செலுத்தப்படக்கூடிய உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள்

(i) கீழேயுள்ள அட்டவணை 01 இற்கு இணங்க பெறப்பட்ட வட்டி வீதங்களை விஞ்சக்கூடாது; **அத்துடன்**

(ii) துணைநில் வைப்பு வசதி வீதங்களை அல்லது 364 நாள் திறைசேரி உண்டியல்களின் சராசரி நிறையேற்றப்பட்ட விளைவு வீதத்தினை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

**அட்டவணை 01**

**உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் வைப்புக்களுக்கான முதிர்ச்சியில் உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள்**

| வைப்பின் காலம் | ஆண்டிற்கு உயர்ந்தபட்ச வட்டி வீதம் |
|---|---|
| 01 மாதத்திற்கும் குறைவான அல்லது முதிர்ச்சி குறிப்பிடப்படாத காலப்பகுதியைக் கொண்ட சேமிப்பு மற்றும் ஏனைய வைப்புக்கள் | **துணைநில் வைப்பு வசதி வீதம்** |
| தவணை வைப்புக்கள் | |
| 01 மாதம் மற்றும் 03 மாதங்களுக்கு குறைவானவை | **திறைசேரி உண்டியல் வீதம்** - 0.50% |
| 03 மாதங்கள் மற்றும் 06 மாதங்களுக்கு குறைவானவை | **திறைசேரி உண்டியல் வீதம்** |
| 06 மாதங்கள் மற்றும் 01 ஆண்டிற்கு குறைவானவை | **திறைசேரி உண்டியல் வீதம்** + 0.50% |
| 01 ஆண்டு மற்றும் 02 ஆண்டிற்கு குறைவானவை | **திறைசேரி உண்டியல் வீதம்** + 2.25% |
| 02 ஆண்டுகள் மற்றும் 03 ஆண்டிற்கு குறைவானவை | **திறைசேரி உண்டியல் வீதம்** + 3.00% |
| 03 ஆண்டுகள் மற்றும் 05 ஆண்டிற்கு குறைவானவை | **திறைசேரி உண்டியல் வீதம்** + 3.50% |
| 05 ஆண்டுகள் | **திறைசேரி உண்டியல் வீதம்** + 4.00% |

(iii) மேலும், வைப்புக்களின் காலப்பகுதியில் தவணை வைப்புக்கள் மீது செய்யப்படுகின்ற ஏதேனும் காலாந்தர வட்டிக் கொடுப்பனவுகளின் வீதமானது, வருடாந்த பயனுறு வட்டி வீதம் மேலே குறித்துரைக்கப்பட்ட குறிப்பிட்ட உயர்ந்தபட்ச வட்டி வீதங்களை விஞ்சவில்லை என்ற நோக்கத்திற்காக கணிக்கப்படுதல் வேண்டும்.

(iv) மேலே 1.1 (i) இலுள்ள ஏற்பாடுகள் எது எவ்வாறிருப்பினும், 18 வயதிற்கு குறைவான சிறுவர்களின் சேமிப்பு வைப்புக்களுக்கும் மூத்த பிரசைகளின் 01 ஆண்டு அல்லது அதற்கும் கூடுதலான காலப்பகுதியில் கொண்ட வைப்புக்களுக்கும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளினால் செலுத்தப்படத்தக்க உயர்ந்தபட்ச வட்டி வீதம் அட்டவணை 01இல் தரப்பட்டுள்ள வீதங்களிலும் பார்க்க 50 அடிப்படைப் புள்ளிகள் (0.5 சதவீதம்) கூடுதலாக இருத்தல் வேண்டும். மூத்த பிரசைகளின் கூட்டுக் கணக்குகளைப் பொறுத்தவரையில், பணிப்புரை 1.1 (iv) இல் உள்ளவாறு அதிகரிக்கப்பட்ட வீதத்தினை பிரயோகிக்கும் பொருட்டு, அனைத்து கணக்குடமையாளர்களும் மூத்த பிரசைகளாக இருத்தல் வேண்டும்.

1.2 படுகடன் சாதனங்களின் மீது உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்றினால் முன் வழங்கப்படக்கூடிய அல்லது செலுத்தப்படக்கூடிய உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள் கீழேயுள்ள அட்டவணை 02 இற்கிணங்க பெறப்பட்ட வட்டி வீதங்களை விஞ்சக்கூடாது.

**அட்டவணை 02**

**உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் படுகடன் சாதனங்களுக்கான முதிர்ச்சியில் செலுத்தப்படும் உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள்**

| படுகடன் சாதனங்களின் காலம் | உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள் |
|---|---|
| 01 ஆண்டிற்கும் குறைவானவை | **திறைசேரி உண்டியல் வீதம்** + 0.50% |
| 01 ஆண்டு மற்றும் 02 ஆண்டிற்கு குறைவானவை | **திறைசேரி உண்டியல் வீதம்** + 2.25% |
| 02 ஆண்டுகள் மற்றும் 03 ஆண்டிற்கு குறைவானவை | **திறைசேரி உண்டியல் வீதம்** + 3.00% |
| 03 ஆண்டுகள் மற்றும் 05 ஆண்டிற்கு குறைவானவை | **திறைசேரி உண்டியல் வீதம்** + 4.00% |
| 05 ஆண்டுகள் அல்லது கூடுதலாக | **திறைசேரி உண்டியல் வீதம்** + 4.50% |

| | | | |
|---|---|---|---|
| 2. | ஏற்புடைத்தான துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் விளைவு வீதம் | 2.1 | 01 மாதத்திற்கும் குறைவான காலத்தினைக் கொண்ட சேமிப்புக்கள் மற்றும் ஏனைய வைப்புக்களை பொறுத்தவரையில் பணிப்புரை 1.1(i)இல் உள்ள உயர்ந்தபட்ச வட்டி வீதம் துணைநில் வைப்பு வசதி வீதத்தினை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் காலாண்டு ரீதியாக மீளாய்வு செய்யப்படுதலும் வேண்டும். இதன்படி, காலாண்டிற்கான துணைநில் வைப்பு வசதியின் தொடர்பான வீதம் உடனடியாக முற்போந்த காலாண்டு இறுதியில் உள்ளவாறான துணைநில் வைப்பு வசதி வீதமாக இருக்கும் |
| | | 2.2 | 01 மாதமும் அதற்குக் கூடுதலான காலத்தினைக் கொண்ட கால வைப்புக்கள் தொடர்பான பணிப்புரை 1.1 (i) மற்றும் படுகடன் சாதனங்கள் தொடர்பான பணிப்புரை 1.2 உம், முன்னைய காலாண்டுப் பகுதியின் 364 நாள் திறைசேரி உண்டியல்களுக்கான இறுதி 04 முதலாந்தர ஏலங்களின் சராசரி நிறையேற்றப்பட்ட விளைவு வீதத்தினை அடிப்படையாகக் கொண்டு காலாண்டு அடிப்படையில் மீளாய்வு செய்யப்படும். |
| | | 2.3 | பணிப்புரை 1.1(i) மற்றும் 1.2இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஏற்புடைத்தான துணைநில் வைப்பு வசதி வீதமும் 364 நாள் திறைசேரி உண்டியல்களின் சராசரி நிறையேற்றப்பட்ட விளைவு வீதமும் ஒவ்வொரு ஆண்டும் மாச்சு, யூன், செத்தெம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களின் இறுதியில் பணிப்பாளரினால் அறிவிக்கப்படும். |
| 3. | குறிப்பிட்ட காலத்திற்கு முன்னரான மீளப்பெறுகைகளுக்கு ஏற்புடைத்தான வட்டி வீதம் | 3.1 | ஏதேனும் தவணை வைப்புக்களை ஒப்பந்தம் செய்யப்பட்ட அவற்றின் மூல முதிர்ச்சித் திகதிக்கு முன்னதாக மீளப்பெறுகின்ற சந்தர்ப்பமொன்றில் மீளப்பெறப்படுகின்ற திகதி வரை வைப்புக்கள் மீது செலுத்தப்படத்தக்க வட்டி வீதம், மீளப்பெறப்படும் காலத்தில் நிலவுகின்ற முழுக் காலத்திற்கும் ஏற்புடைத்தான உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் பிரசுரிக்கப்பட்ட வட்டி வீதத்திலும் பார்க்கக் குறைவானதாக அல்லது ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டதிலும் பார்க்க 100 அடிப்படைப் புள்ளிகளைக் கொண்ட குறைவானதொரு வீதத்தில் கணிக்கப்படுதல் வேண்டும். குறிப்பிட்ட காலத்திற்கு முன்னரான மீளப்பெறுகை நேரத்தில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனி வைப்பு வைத்திருக்கப்பட்ட காலப்பகுதியில் கணிக்கப்பட்டவாறான வட்டித் தொகைக்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருக்கக்கூடிய ஏதேனும் மிகையான வட்டி வீதத்தினை அறவிட்டுக் கொள்ளுதல் வேண்டும். எது எவ்வாறாயினும், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் வைப்புக்களின் உரிய காலத்திற்கு முன்னரான எடுப்பனவுகளின் மீது வட்டி வீதத்தினை பெறுவதற்காக வேறுபட்ட சூத்திரமொன்றினை பிரயோகிக்கலாம் என்பதுடன் அவ்வாறு செலுத்தப்படும் வட்டி வீதத்தில் காணப்படக்கூடிய ஏதேனும் நன்மைகள், வைப்புக்களைச் செய்கின்ற நேரத்தில் வைப்பாளர்களுக்கு கணிக்கப்படுகின்ற அடிப்படை தெரியப்படுத்தப்பட்டிருக்கிறது என்ற நிபந்தனைக்குட்பட்டு இப்பணிப்புரையில் தரப்பட்டுள்ள சூத்திரத்தின் பிரயோகத்திலிருந்து செலுத்தப்படக்கூடிய வட்டித் தொகையினை விஞ்சவும்கூடாது. |
| 4. | ஒழுங்குமுறைப்படுத்தல் அறிக்கையிடல் | 4.1 | ஒவ்வொரு உரிமம்பெற்ற நிதிக் கம்பனியும் மாதாந்த வெப்பினை அடிப்படையாகக் கொண்ட கூற்றிற்கிணங்க "என்பீடி-எம்எவ்-06-ஐடி-வட்டி" வைப்பு வீதத்தினை சமர்ப்பித்தல் வேண்டும். |
| 5. | விளக்கங்கள் | 5.1 | தவணை வைப்புச் சாதனங்கள் என்பது குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றின் பின்னர் மீளச்செலுத்தப்பட வேண்டும் என்ற உடன்படிக்கையுடன் உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்றினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அல்லது புதுப்பிக்கப்பட்ட சேமிப்பு வைப்புக்கள் தவிர்ந்த ஏதேனும் வைப்புக்கள் எனப் பொருள்படுதல் வேண்டும்; |
| | | 5.2 | படுகடன் சாதனங்கள் என்பது முறிகள், தொகுதிக் கடன்கள், வர்த்தகப் பத்திரங்கள், வாக்குறுதிச் சான்றிதழ்கள் அல்லது பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான கடன்பாட்டிற்குப் பயன்படுத்தத்தக்க வேறேதேனும் சாதனங்கள் எனப்பொருள்படுதல் வேண்டும். |
| | | 5.3 | மூத்த பிரசைகள் என்பதன் பொருள் வைப்புக்களை ஏற்றுக்கொள்கின்ற அல்லது புதுப்பிக்கின்ற நேரத்தில் அறுபது (60) வயதிற்கு மேற்பட்ட ஆட்கள் என்பதாகும். |
| | | 5.4 | பணிப்பாளர் என்பது இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளர் என பொருள்படுதல் வேண்டும். |
| 6. | நடைமுறைப்படுத்தல் | 6.1 | இப்பணிப்புரைகள் 2019 ஏப்பிறல் 26ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்குவருதல் வேண்டும் என்பதுடன் இது ஏற்கனவேயுள்ள சேமிப்பு வைப்புக்கள், புதிய தவணை வைப்புக்கள், படுகடன் சாதனங்கள் மற்றும் புதுப்பிக்கப்பட்ட தவணை வைப்புக்கள் என்பனவற்றிற்கு ஏற்புடைத்தாதல் வேண்டும். |
| 7. | முன்னைய பணிப்புரையினை இரத்துச்செய்தல் | 7.1 | 2016ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (வட்டி வீதங்கள்) பணிப்புரை இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது. |

முனைவர். இந்திரஜித் குமாரசுவாமி
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**நுண்பாகநிதிச் சட்டப் பணிப்புரைகள் 2019 இலக்கம் 02** **2019 ஏப்பிறல் 26**

**நுண்பாக நிதிக் கடன்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதம்**

2016ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நுண்பாக நிதிச் சட்டத்தின் 11ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்பட்டது

| | | | |
|---|---|---|---|
| 1. | ஏற்புடைத்தன்மையும் செயற்பரப்பும் | 1.1 | உரிமம் பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகளினால் வழங்கப்பட்ட நுண்பாக நிதிக் கடன்கள் மீது விதிக்கப்படுகின்ற அளவுக்கதிகமான வட்டி வீதத்திலிருந்து வாடிக்கையாளர்களைப் பாதுகாக்கும் நோக்குடன் இலங்கை மத்திய வங்கி நுண்பாக நிதிக் கடன்கள் மீது உயர்ந்தபட்ச வட்டி வீதமொன்றினை அறிமுகப்படுத்தியிருக்கிறது. |
| | | 1.2 | இப்பணிப்புரையானது, இப்பணிப்புரைத் திகதியிலிருந்து வழங்கப்பட்ட அனைத்து நுண்பாக நிதிக் கடன்களுக்கும் ஏற்புடைத்தானதாக இருக்கும். |
| 2. | உயர்ந்தபட்ச வட்டி வீதம் | 2.1 | உரிமம் பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள், நுண்பாக நிதிக் கடன்களுக்கான மற்றைய அனைத்து விதிப்புக்களும் உட்பட ஆண்டொன்றிற்கு 35 சதவீதத்தினை (பயனுறு ஆண்டு வட்டி வீதம்) விஞ்சுகின்ற விதத்தில் வட்டியினை விதிக்கக்கூடாது. |
| 3. | நுண்பாக நிதிக் கடன்களின் வரைவிலக்கணம் | 3.1 | நுண்பாக தொழில்முயற்சிகளை நிறுவுவதற்கும் முகாமைப்படுத்துவதற்குமான கடன்களை உள்ளடக்கிய ஆனால் தங்கத்திலான பொருட்கள் அரச பிணையங்கள் மற்றும் உரிமம் பெற்ற வங்கியொன்றில் அல்லது உரிமம் பெற்ற நிதிக் கம்பனியொன்றிலுள்ள தவணை வைப்புக்கள் என்பனவற்றை உள்ளடக்கிய அசையும் அல்லது அசையாத சொத்துக்களின் பிணைக்கெதிராக வழங்கப்பட்ட அனைத்துக் கடன்வழங்கல் வசதிகள் தவிர வருமான உருவாக்க நடவடிக்கைகளுக்காக தனிப்பட்டவர்களுக்காக/ குழு ரீதியான கடன்வழங்கல் முறைமையின் கீழான தனிப்பட்டவர்களுக்காக வழங்கப்பட்ட கடன்கள். |
| 4. | விளக்கங்கள் | 4.1 | "நுண்பாக தொழில்முயற்சிகள்" என்பது தயாரிப்பு மற்றும் பணிகள் துறையிலுள்ள ரூ.15 மில்லியனுக்கும் குறைவான வருடாந்த மொத்தப் புரள்வினையும் 10 இற்கும் குறைவான ஊழியர்களையும் கொண்ட தொழில்முயற்சியொன்று எனப் பொருள்படும் (மூலம்: கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சினால் விடுக்கப்பட்ட சிறிய நடுத்தர தொழில்முயற்சி அபிவிருத்திக்கான தேசிய கொள்கைக் கட்டமைப்பு). |

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி
*நாணயச் சபையின் தலைவரும்*
*இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்*

**சுற்றறிக்கை 2019இன் 01ஆம் இலக்கம்** **2019 மே 21**

**சுற்றுலா தொழில்துறைக்கு வழங்கப்பட்ட சலுகைகள்**

நாட்டில் தற்பொழுது நிலவுகின்ற சூழ்நிலைகளின் காரணமாக சுற்றுலா தொழில் துறையின் மீது ஏற்பட்ட மோசமான தாக்கத்தினைக் கருத்திற் கொண்டு உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளும் சுற்றுலாத் தொழில்துறையிலுள்ள தனிப்பட்டவர்களும் நிறுவனங்களும் பயன்படுத்திக் கொள்ள விரும்புமிடத்து பின்வரும் சலுகைகளை அவர்களுக்கு வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

(i) உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் சுற்றுலாப் பணிகளை வழங்குவதற்காக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையுடன் அல்லது வேறு ஏதேனும் அதிகாரசபையுடன் அல்லது சுற்றுலாப் பணிகளை வழங்குகின்ற முகவருடன் பதிவு செய்துள்ள தனிப்பட்டவர்களுக்கும் நிறுவனங்களுக்கும் ஒவ்வொரு விடயங்களினதும் ஒழுங்கில் சட்ட இசைவுத் தாமதத்தினை வழங்கலாம்.

(ii) 2019 ஏப்பிறல் 18ஆம் திகதியிலுள்ளவாறு வெளிநின்ற கொடுகடன் வசதிகள் தொடர்பில் செயற்படுகின்ற கடன்களுக்காக (மூலதனம் மற்றும் வட்டி இரண்டும்) 2020 மாச்சு வரை சட்ட இசைவுத் தாமதத்தினை வழங்க வேண்டும்.

(iii) உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளின்/ சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனியின் பணிப்பாளர் சபை அல்லது பணிப்பாளர் சபையினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு ஏதேனும் அதிகாரசபை சட்ட இசைவுத் தாமதத்திற்கு ஒப்புதலளித்தல் வேண்டும்.

(iv) உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் மூலதனத்தினையும் சட்ட இசைவுத் தாமத காலப்பகுதியில் வரவேண்டிய வட்டியையும் 2020 யூலையிலிருந்து அறவிட்டுக் கொள்ளப்பட வேண்டிய காலக் கடன்களுக்கு மாற்றல் செய்தல் வேண்டும். இவ்வசதிக்காக சலுகை வட்டி வீதமொன்றினை விதிக்கலாம்.

(v) மேற்குறிப்பிட்ட கடன் மீதான மீள்கொடுப்பனவுக் காலம் மற்றும் வட்டி வீதம் என்பன தொடர்பில் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளும் கடன்பாட்டாளரும் உடன்பாட்டிற்கு வருதல் வேண்டும்.

(vi) உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் சட்ட இசைவுத் தாமத காலப்பகுதியில், வகைப்படுத்தல்கள் மற்றும் ஏற்பாட்டு நோக்கங்களுக்காக அதேவகையின் கீழ் செயற்படாக் கடன்களைப் பேணலாம்.

(vii) உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளும் சட்ட இசைவுத் தாமத காலப்பகுதியில் செயற்படாக் கடன்களின் மீது விதிக்கப்படக்கூடிய தண்ட வட்டி வீதத்தினை தள்ளுபடி செய்தல் வேண்டும்.

(viii) உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளும் அத்தகைய சலுகைகளை வழங்குவதற்குச் சான்றாகத் தேவையான ஆவணங்களைப் பேணுதல் வேண்டும்.

(ix) உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள், இணைப்பு IIஇல் உள்ள படிவத்தில் காணப்படுகின்றவாறு, கடன்பாட்டாளர்களினால் பயன்படுத்தப்பட்ட சட்ட இசைவுத் தாமதத்தினை அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் திகதிக்கு முன்னதாக மாதாந்த அடிப்படையில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைப் பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

டபிள்யு. ரணவீர

**பணிப்பாளர், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி**

**இணைப்பு** I

**2019ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க சுற்றறிக்கைக்கான விளக்கங்கள்**

1. **தனிப்பட்டவர்கள்**

தனிப்பட்டவர்கள் என்பது சுற்றுலாத் துறைக்கு பணிகளை வழங்குகின்ற ஆட்களையும் சுற்றுலாத் துறைக்கு பணிகளை வழங்குகின்ற நிறுவனங்களின் நிரந்தர ஊழியர்களையும் உள்ளடக்குகிறது.

2. **பதிவுசெய்தல்**

(i) சுற்றுலாத் துறைக்குப் பணிளை வழங்குகின்ற ஆட்களும் நிறுவனங்களும் 2019.04.18ஆம் நாளன்று பின்வரும் ஏதேனுமொரு நிறுவனத்தில் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(அ) இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

(ஆ) இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் கீழுள்ள முகவராண்மைகள்

i) இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம்

ii) இலங்கை சுற்றுலா மரபுரிமைப் பணியகம்

iii) இலங்கை சுற்றுலா மற்றும் சுற்றுலாவிடுதி முகாமைத்துவ நிறுவகம்

(இ) இலங்கை சுற்றுலா விடுதிகள் சங்கம்

(ii) மேலே 2(i)இல் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு நிறுவனத்துடனும் 2019.04.18ஆம் நாளன்று பதிவுகளை மேற்கொண்டிராத ஆட்களும் நிறுவனங்களும் 2019.04.18 அன்று தமது வியாபாரங்கள்/ பணிகளின் பதிவுகளை பிரதேசபை, நகரசபை அல்லது மாநகரசபை போன்ற உள்ளூராட்சி மன்றங்களிலாவது செய்திருத்தல் வேண்டுமென்பதுடன் சட்ட இசைவுத் தாமதத்தினைப் பயன்படுத்திக் கொள்ளும் பொருட்டு அத்தகைய ஆட்களும் நிறுவனங்களும் மேலே 2(i)இல் குறிப்பிடப்பட்ட தொடர்பான நிறுவனத்தில் அல்லது நிறுவனங்களில் பதிவுசெய்து கொள்ளுமாறு தற்பொழுது கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

3. **சட்ட இசைவுத் தாமதத்தினை வழங்குதல்**

(i) சட்ட இசைவுத் தாமதத்தினைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பும் தனிப்பட்டவர்கள் அல்லது நிறுவனங்கள் அத்தகைய சட்ட இசைவுத் தாமதத்தினைப் பெற்றுக்கொள்ள விரும்புவது பற்றி தொடர்பான உரிமம் பெற்ற நிதிக் கம்பனிக்கு/ உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த கம்பனிக்கு கோரிக்கையொன்றினை விடுத்தல் வேண்டும்.

(ii) உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த கம்பனிகள் தகைமையை மதிப்பிடும் பொருட்டு, மேலேயுள்ள பந்தி 2இல் குறித்துரைக்கப்பட்டுள்ள தேவைப்பாடுகள் உட்பட, அத்தகைய கோரிக்கைகளை தனிப்பட்ட முறையில் மதிப்பிடல் வேண்டும்.

(iii) சட்ட இசைவுத் தாமதத்தினை 2019.04.18ஆம் திகதியிலுள்ளவாறான ஏதேனும் செயற்படுகின்ற கொடுகடன் வசதிகளுக்காக (மூலதனம் மற்றும் வட்டி இரண்டும்) அத்தகைய தனிப்பட்டவர்களுக்கு அல்லது நிறுவனங்களுக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

4. **இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9இன் கீழ் கணக்கீடுகளை மேற்கொள்ளுதல்**

உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் வட்டி வருமானத்தினை அங்கீகரித்தல் மற்றும் நிதியியல் சொத்துக்களுக்கான கணக்கீடு என்பன தொடர்பில் இலங்கை பட்டயக் கணக்காளரினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

இணைப்பு II

## 2019ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க சுற்றறிக்கை

### சுற்றுலாக் கைத்தொழிலுக்கு வழங்கப்பட்ட சலுகைகளைப் பயன்படுத்துகின்ற கடன்பாட்டாளர்களின் விபரங்கள்

உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் பெயர்:

............... இறுதியிலுள்ளவாறு

| தொடர் இல. | கடன்பாட்டாளர்களின் பெயர் | 2019.04.18ஆம் நாளிலுள்ளவாறு வெளிநின்ற தொகை (ரூ.'000) | சட்ட இசைவுத் தாமதத்திற்கு பரிசீலிக்கப்பட்ட தொகை (ரூ.'000) | கடன் வகைப்படுத்தல் (செயற்படுகின்ற/ செயற்படாத கடன் வகை) | சட்ட இசைவுத் தாமத காலப்பகுதியில் வருகின்ற புதிய கடன்கள் | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | மீள்கொடுப்பனவுக் காலம் | வட்டி வீதம் |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

மேலே சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் எனது அறிவுக்கு எட்டியவரை சரியானதெனவும் நான் உறுதிப்படுத்துகின்றேன்

.......................................................................................

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயரும் பதவியும்

அடுத்த மாதம் 15ஆம் நாளளவில் தயவுசெய்து dsnbfi@cbsl.lk மின்னஞ்சல் செய்யவும்.

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை**
**அதிவிசேடமானது**

2125/58ஆம் இலக்கம் - 2019ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி I : தொகுதி (I) - பொது

**இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்**

## 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க, நிதித்தொழில் சட்டம்

2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க, நிதித்தொழில் சட்டத்தின் 33ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்

மங்கள் சமரவீர,
**நிதி அமைச்சர்**

கொழும்பு,
2019, மே 31.

### ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2019ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க, நிதித்தொழில் (நிதிக் கம்பனியொன்றை ஒடுக்குவதிலான உரிமைக் கோரிக்கைகளின் முன்னுரிமை) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இவ்வொழுங்குவிதிகள், நிதிக் கம்பனியொன்றை ஒடுக்குவதிலான முன்னுரிமையான உரிமைக் கோரிக்கைகளுக்கு ஏற்புடையதாலனவாதல் வேண்டும்.

3. (1) இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள அளவுக்கும், முன்னுரிமை ஒழுங்குவரிசையின்படியும் ஒழிப்போன், செலவுகளினதும், கட்டணங்களினதும், உரிமைக் கோரிக்கைகளினதும் உள்நோக்கத்தின்படி கம்பனியின் சொத்துக்களிலிருந்து அவற்றைச் செலுத்துதல் வேண்டும்.

(2) பந்தி (1)இல் “சொத்துக்கள்” என்னும் சொல், பொறுப்பொன்றுக்கு அமைந்தனவாகவுள்ள சொத்துக்களை -

(அ) அப்பொறுப்பானது 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 358ஆம் பிரிவின் கீழ் ஒப்படைக்கப்பட்டாலொழிய அல்லது ஒப்படைக்கப்பட்டதாக அல்லது மீட்கப்பட்டதாகக் கருதப்பட்டாலொழிய, அல்லது

(ஆ) அப்பொறுப்பானது உருவாக்கப்பட்ட போது அச்சொத்துக்கள் தொடர்பில் அது ஒரு மிதக்கும் தாக்கீடாக இருந்தாலொழிய,

உள்ளடக்குதலாகாது.

4. ஒழுங்குவிதி 3(1)இற்கிணங்க முன்னுரிமை உரிமைக் கோரிக்கைகளைச் செலுத்திய பின்னர், ஒழிப்போன், 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க மற்றெல்லா உரிமைக் கோரிக்கைகளையும் கொடுத்துத் தீர்ப்பதில் கம்பெனியின் சொத்துக்களைப் பயன்படுத்துதல் வேண்டும்.

5. 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் ஒன்பதாம் அட்டவணையிற்றரப்பட்டுள்ள முன்னுரிமை உரிமைக் கோரிக்கைகள், இவ்வொழுங்குவிதிகள் நடைமுறைக்கு வந்த பின்னர் ஒரு நிதிக் கம்பெனியொன்றை ஒடுக்குவதில் ஏற்புடையனவாதலாகாது.

[ஒழுங்குவிதி 3]

அட்டவணை

**முன்னுரிமை உரிமைக் கோரிக்கைகள்**

அட்டவணையிற்றரப்பட்டுள்ள உரிமைக் கோரிக்கைகள், கீழே தரப்பட்டுள்ள ஒழுங்குவரிசைப்படி நிதிக் கம்பெனியின் சொத்துக்களுக்கெதிராக முன்னுரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும். இவ்வட்டவணையின் 3ஆம் பந்தியிற் குறித்துரைக்கப்பட்டவாறான உரிமைக் கோரிக்கைகள், அவற்றை எதிர்கொள்வதற்குச் சொத்துக்கள் போதியனவற்றனவாக இருந்தாலொழிய, அவற்றுக்கிடையே சமமான முறையில் வரிசைப்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் முழுமையாகச் செலுத்தப்படுதலும் வேண்டும்; அவ்விடயத்தில் அவை, சமமான விகிதாசாரங்களில் தணிந்துபோவனவாகும்:-

1. ஒழிப்போனாகக் கடமைகளை நிறைவேற்றுவதிலும் தத்துவங்களைப் பிரயோகிப்பதிலும் ஒழிப்போனினால் உறப்பட்ட கட்டணங்களும் செலவுகளும் ஒழிப்போனின் ஊதியமும்.

2. இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத்திட்டத்துக்கு (SLDILSS) வருமதியாகவுள்ள செலுத்தப்படாத கட்டுப்பணம்.

3. பின்வரும் உரிமைக் கோரிக்கைகள் அதன் பின்னர் கொடுத்துத்தீர்க்கப்படுதல் வேண்டும்:-

(அ) எவரேனும் ஊழியருக்கு வருமதியாகவுள்ள எல்லாச் சகாய நிதிய வருமதிகளும், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய வருமதிகளும் மற்றும் பணிக்கொடைக் கொடுப்பனவுகளும்;

(ஆ) ஒழித்துக்கட்டுதல் தொடங்கிய திகதியிலிருந்த அத்திகதிக்கு முன்னரான பன்னிரெண்டு மாத காலப்பகுதியினுள் வருமதியாகவும் செலுத்தப்படற்பாலனவாகவும் வந்தவையும் அத்திகதியில் கம்பெனியிடமிருந்து வருமதியாகவுள்ளவையுமான எல்லா வீத வரிகளும்;

(இ) காலத்துக்குக்காலம் கொடுக்கப்பட்ட அல்லது அளிக்கப்பட்ட எவையேனும் சேவைகளுக்காக மீண்டுவரும் கொடுப்பனவுகளாக அரசாங்கத்துக்கான எல்லா வருமதிகளும்;

(ஈ) எவரேனும் ஊழியருக்குச் செலுத்தப்படற்பாலனவான கைத்தொழில் நீதிமன்ற அளிப்புக்களும் வேறெவையேனும் நியதிச் சட்டமுறையான வருமதிகளும்; அத்துடன்

(உ) தரகு என்ற வகையாக முழுமையாக அல்லது பகுதியளவில் உழைக்கப்பட்டவையாயினுஞ்சரி அல்லவாயினுஞ்சரி ஒடுக்குதல் நடவடிக்கைகள் தொடங்குவதற்கு நேர்முற்போந்த மூன்றுமாத காலப்பகுதியின் போது நிதிக் கம்பெனிக்கு அளிக்கப்பட்ட சேவைகள் தொடர்பில் செலுத்தப்படற்பாலனவையுமான எவரேனும் ஊழியரின் வேதனாதிகள் அல்லது சம்பளங்கள்

ஆயின், எவ்வாறாயினும், எவரேனும் ஊழியருக்குச் செலுத்தப்படற்பாலதான பணத்தொகை, ஒழித்துக்கட்டுதல் தொடங்கும் போது ஒழிப்போனினால் தீர்மானிக்கப்பட்ட அதிகபட்சத் தொகையை விஞ்சுதலாகாது.

ஆயின் எவ்வாறாயினும்,-

(i) ஊழியரொருவர்;

(ii) நிறைவேற்றுப் பணிகளைப் புரிகின்ற பணிப்பாளர் அல்லது அலுவலர்,

(அ) இலங்கையில் அல்லது வெளிநாட்டில், பொலிசாரினால், ஏதேனும் ஒழுங்குபடுத்தும் அல்லது மேற்பார்வை அதிகாரசபையினால், உயர் தொழிற்கழகத்தினால், விசாரணை ஆணைக்குழுவினால், நியாயசபையினால் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு குழுவினால் நடாத்தப்பட்ட மோசடி, ஏமாற்று, நேர்மையீனம் அல்லது வேறு ஒத்த குற்றவியற் செயற்பாடு என்பவற்றை உட்படுத்துகின்ற செயலொன்றுக்காக ஒரு புலனாய்வுக்கு அல்லது விசாரணைக்கு அமைந்தவராகவுள்ள; அல்லது

(ஆ) இலங்கையில் அல்லது வெளிநாட்டில், ஏதேனும் சட்ட நீதிமன்றத்தினால், ஒழுங்குபடுத்தும் அல்லது மேற்பார்வை அதிகாரசபையினால், உயர்தொழிற்கழகத்தினால், விசாரணை ஆணைக்குழுவினால், நியாயசபையினால் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு குழுவினால் மோசடி, ஏமாற்று, நேர்மையீனம், முறையீனமான நடத்தை அல்லது ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட விதிகள், ஒழுங்குவிதிகள், பணிப்புக்கள் அல்லது தீர்மானங்களுக்கு இணங்கியொழுகாமை என்பவற்றை உட்படுத்துகின்ற ஏதேனும் செயலுக்காகக் குற்றவாளியாகக் காணப்படுகின்ற,

வேதனாதிகள் அல்லது சம்பளங்களின் உரிமைக் கோரிக்கைகளுக்கோ அல்லது வேறு முறையான உரிமைக் கோரிக்கைகளுக்கோ உரித்துடையவர்களாதலாகாது.

4. இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தின் கீழ் (SLDILSS) காப்பீடு செய்யப்படாத வைப்பீட்டாளர்கள் மற்றும் எந்த வைப்பீட்டாளர்களின் வைப்புக்கள் இலங்கை வைப்புக் காப்பு மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தின் கீழ் (SLDILSS) இன் பகுதியளவில் செலுத்தப்படுகின்றனவோ அந்த வைப்பீட்டாளர்கள்.

ஆயின், எவ்வாறாயினும், -

(i) நிதிக் கம்பெனியின் பணிப்பாளர்களினது;

(ii) நிதிக் கம்பெனியின் நிறைவேற்றுப் பணிகளைப் புரிகின்ற அலுவலர்களினது;

(iii) நிதிக் கம்பெனியின் துணைநிலைக் கம்பனிகளினது;

(iv) நிதிக் கம்பெனியின் இணைக் கம்பனிகளினது;

(v) நிதிக் கம்பெனியின் நிறைவேற்றுப் பணிகளைப் புரிகின்ற ஒரு பணிப்பாளரின் அல்லது அலுவலரின் உறவினரினது; அத்துடன்

(vi) நிதிக் கம்பெனியின் கணிசமானளவு அக்கறையைச் சொந்தமாக வைத்திருக்கின்ற பங்குதாரரொருவரினது, வைப்புப் பொறுப்புக்கள், அத்தகையவர் பின்வருமாறிருப்பின் உள்ளடக்கப்படுதலாகாது:-

(அ) இலங்கையில் அல்லது வெளிநாட்டில் பொலிசாரினால் ஏதேனும் ஒழுங்குபடுத்தும் அல்லது மேற்பார்வை அதிகாரசபையினால், உயர் தொழிற்கழகத்தினால், விசாரணை ஆணைக்குழுவினால், நியாயசபையினால் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு குழுவினால் நடாத்தப்பட்ட மோசடி, ஏமாற்று, நேர்மையீனம் அல்லது வேறு ஒத்த குற்றவியற் செயற்பாடு என்பவற்றை உட்படுத்துகின்ற செயலொன்றுக்காக ஒரு புலனாய்வுக்கு அல்லது விசாரணைக்கு அமைந்தவராகவிருப்பின்; அல்லது

(ஆ) இலங்கையில் அல்லது வெளிநாட்டில் ஏதேனும் சட்ட நீதிமன்றத்தினால், ஒழுங்குபடுத்தும் அல்லது மேற்பார்வை அதிகாரசபையினால், உயர் தொழிற்கழகத்தினால், விசாரணை ஆணைக்குழுவினால், நியாயசபையினால் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு குழுவினால், மோசடி, ஏமாற்றம், நேர்மையீனம், முறையீனமான நடத்தை அல்லது ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட விதிகள், ஒழுங்குவிதிகள், பணிப்புக்கள் அல்லது தீர்மானங்களுக்கு இணங்கியொழுகாமை என்பவற்றை உட்படுத்துகின்ற ஏதேனும் செயலுக்காகக் குற்றவாளியாகக் காணப்படின்,

5. இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தினால் (SLDILSS) ஒழித்துக்கட்டுதலின் கீழுள்ள கம்பெனியின் வைப்பீட்டாளர்களுக்குச் செலுத்தப்பட்ட நட்ட ஈடு.

6. இதற்கான அட்டவணையின் 2 மற்றும் 5 என்னும் பந்திகளிற் குறித்துரைக்கப்பட்டவை தவிர இலங்கை மத்திய வங்கிக்கான வருமதிகள்.

**நிதிக் குத்தகைக்குவிடும் சட்டப் பணிப்புரைகள் 2019இன் 01ஆம் இலக்கம்** 2019 யூன் 04

## உந்து ஊர்திகள் தொடர்பாக வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான பணிப்புரைகளுக்கான திருத்தம்

2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடும் சட்டத்தின் 34ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படுகிறது.

கொள்வனவு நோக்கத்திற்காக அல்லது உந்து ஊர்திகளின் பயன்பாட்டிற்காக சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளால் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகள் தொடர்பில் பெறுமதிக்கான கடன் விகிதத்தின் நடைமுறைப்படுத்தலுக்காக இலங்கை மத்திய வங்கி பின்வரும் பணிப்புரைகளை விடுத்திருக்கிறது.

1. உந்து ஊர்திகள் தொடர்பில் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான 2018ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடும் சட்டப் பணிப்புரையின் பணிப்புரை 2.1 இற்கும் பதிலீடாக பின்வரும் விடயம் அமைகிறது.

(i) கொள்வனவு அல்லது ஊர்திகளின் பயன்பாட்டு நோக்கத்திற்காக சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளினால் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகள் மறு அறிவித்தல் வரை அத்தகைய ஊர்திகளின் சந்தைப் பெறுமதியின் பின்வரும் சதவீதங்களை விஞ்சக்கூடாது.

(அ) பதிவுசெய்யப்படாத ஊர்திகள் மற்றும் முதல் பதிவின் பின்னர் ஓராண்டிற்கும் குறைவான காலப்பகுதியில் இலங்கையில் பயன்படுத்தப்பட்டிருக்கின்ற பதிவுசெய்யப்பட்ட ஊர்திகளைப் பொறுத்தவரையில்;

**அட்டவணை 1 - பெறுமதிக்கான கடன் விகிதம்**

| ஊர்தி வகை | உந்து ஊர்திகள் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஊர்தி வகுப்பு | மின்னியல் ஊர்திகள் | ஏனையவை |
|---|---|---|---|
| வர்த்தக ஊர்திகள் | சி1, சி, சிஇ, டி1, டி, டிஈ, ஜி1, ஜி, ஜே | 90% | 90% |
| உந்து கார்கள், கடுவழிப்பயன் ஊர்திகள் (எஸ்யுவி) மற்றும் வான்கள் | பீ (இலகு பார வண்டிகள் மற்றும் ஒற்றைக் கூடார ஊர்திகள் தவிர) | 90% | 50% |
| முச்சில்லு வண்டிகள் | பீ1 | 90% | 25% |
| மென் இழுபொறிகள் | பீ | 90% | 90% |
| வேறு ஏதேனும் ஊர்திகள் | ஏ1, ஏ, பீ இன் கீழ் வகைப்படுத்தப்பட்ட ஒற்றைக் கூடார ஊர்திகள் | 90% | 70% |
| கலப்பு உந்து கார்கள், கடுவழிப்பயன் ஊர்திகள் (எஸ்யுவி) மற்றும் வான்கள் | பீ (இலகு பார வண்டிகள் மற்றும் ஒற்றைக் கூடார ஊர்திகள் தவிர) | 50% | |

(ஆ) முதல் பதிவின் பின்னர் ஓராண்டிற்கும் கூடுதலான காலப்பகுதியில் இலங்கையில் பயன்படுத்தப்பட்ட பதிவுசெய்யப்பட்ட ஊர்திகள் தொடர்பில் 70 சதவீதம்.

2. சலுகை ரீதியான நியதிகள் மீதான அனுமதிப்பத்திரத்தின் கீழான உந்து ஊர்திகளின் இறக்குமதிக்காக அல்லது கொள்வனவிற்காக வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் உந்து ஊர்திகளின் சந்தைப் பெறுமதிக்குப் பதிலாக பூர்வாங்க ஏற்பாட்டு விலைப்பட்டியல் பெறுமதியின் அடிப்படையில் கணிக்கப்படுதல் வேண்டும்.

3. உந்து ஊர்திகளின் இறக்குமதியினைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள் மீதான 2018.10.01ஆம் திகதியிடப்பட்ட 2018இன் 07ஆம் இலக்க நிதி குத்தகைக்குவிடல் சட்டப் பணிப்புரைகள், இப்பணிப்புரைகள் நடைமுறைக்கு வருகின்ற திகதியிலிருந்து புறக்கீடு செய்யப்படும்.

டபிள்யு. ரணவீர
**பணிப்பாளர், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி**

**நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2019இன் 02ஆம் இலக்கம்** 2019 யூன் 04

## உந்து ஊர்திகள் தொடர்பாக வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான பணிப்புரைகளுக்கான திருத்தம்

2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 12ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படுகிறது.

கொள்வனவு நோக்கத்திற்காக அல்லது உந்து ஊர்திகளின் பயன்பாட்டிற்காக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளினால் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகள் தொடர்பில் பெறுமதிக்கான கடன் விகிதத்தின் நடைமுறைப்படுத்தலுக்காக இலங்கை மத்திய வங்கி பின்வரும் பணிப்புரைகளை விடுத்திருக்கிறது.

1. உந்து ஊர்திகள் தொடர்பில் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான 2018ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரையின் பணிப்புரை 2.1 இற்கும் பதிலீடாக பின்வரும் விடயம் அமைகிறது.

(i) கொள்வனவு அல்லது ஊர்திகளின் பயன்பாட்டு நோக்கத்திற்காக ஒவ்வொரு உரிமம்பெற்ற நிதிக் கம்பனியினாலும் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகள் மறு அறிவித்தல் வரை அத்தகைய ஊர்திகளின் சந்தைப் பெறுமதியின் பின்வரும் சதவீதங்களை விஞ்சக்கூடாது.

(அ) பதிவுசெய்யப்படாத ஊர்திகள் மற்றும் முதல் பதிவின் பின்னர் ஓராண்டிற்கும் குறைவான காலப்பகுதியில் இலங்கையில் பயன்படுத்தப்பட்டிருக்கின்ற பதிவுசெய்யப்பட்ட ஊர்திகளைப் பொறுத்தவரையில்;

**அட்டவணை 1 - பெறுமதிக்கான கடன் விகிதம்**

| ஊர்தி வகை | உந்து ஊர்திகள் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஊர்தி வகுப்பு | மின்னியல் ஊர்திகள் | ஏனையவை |
|---|---|---|---|
| வர்த்தக ஊர்திகள் | சி1, சி, சிஇ, டி1, டி, டிஈ, ஜி1, ஜி, ஜே | 90% | 90% |
| உந்து கார்கள், கடுவழிப்பயன் ஊர்திகள் (எஸ்யுவி) மற்றும் வான்கள் | பீ (இலகு பார வண்டிகள் மற்றும் ஒற்றைக் கூடார ஊர்திகள் தவிர) | 90% | 50% |
| முச்சில்லு வண்டிகள் | பீ1 | 90% | 25% |
| மென் இழுபொறிகள் | பீ | 90% | 90% |
| வேறு ஏதேனும் ஊர்திகள் | ஏ1, ஏ, பீ இன் கீழ் வகைப்படுத்தப்பட்ட ஒற்றைக் கூடார ஊர்திகள் | 90% | 70% |
| கலப்பு உந்து கார்கள், கடுவழிப்பயன் ஊர்திகள் (எஸ்யுவி) மற்றும் வான்கள் | பீ (இலகு பார வண்டிகள் மற்றும் ஒற்றைக் கூடார ஊர்திகள் தவிர) | 50% | |

(ஆ) முதல் பதிவின் பின்னர் ஓராண்டிற்கும் கூடுதலான காலப்பகுதியில் இலங்கையில் பயன்படுத்தப்பட்ட பதிவுசெய்யப்பட்ட ஊர்திகள் தொடர்பில் 70 சதவீதம்.

2. சலுகை ரீதியான நியதிகள் மீதான அனுமதிப்பத்திரத்தின் கீழான உந்து ஊர்திகளின் இறக்குமதிக்காக அல்லது கொள்வனவிற்காக வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் உந்து ஊர்திகளின் சந்தைப் பெறுமதிக்குப் பதிலாக பூர்வாங்க ஏற்பாட்டு விலைப்பட்டியல் பெறுமதியின் அடிப்படையில் கணிக்கப்படுதல் வேண்டும்.

3. உந்து ஊர்திகளின் இறக்குமதியினைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள் மீதான 2018.10.01ஆம் திகதியிடப்பட்ட 2018இன் 09ஆம் இலக்க நிதி வியாபாரச் சட்டப் பணிப்புரைகள், இப்பணிப்புரைகள் நடைமுறைக்கு வருகின்ற திகதியிலிருந்து புறக்கீடு செய்யப்படும்.

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**2019இன் 01 இலக்க விளக்கக் குறிப்பு**

**வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்**
**2019 யூலை 18**

## சுற்றுலா தொழில்துறைக்கு வழங்கப்பட்ட சலுகைகள் தொடர்பில் 2019ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க சுற்றறிக்கைக்கான விளக்கங்கள்

சுற்றுலாத் தொழில் துறைக்கு வழங்கப்பட்ட சலுகைகள் தொடர்பில் 2019 மே 21ஆம் திகதியிடப்பட்ட 2019ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க சுற்றறிக்கை தொடர்பில் பின்வரும் விளக்கங்கள் விடுக்கப்படுகின்றன.

1. பதிவுகள்

(i) சுற்றுலாத் துறைக்குப் பணிகளை வழங்குகின்ற ஆட்களும் நிறுவனங்களும் 2019ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க சுற்றறிக்கையின் இணைப்பு I இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் நிறுவனத்துடன் பதிவுசெய்யப்படாமல் இருப்பார்களாயின், சட்ட இசைவுத் தாமதத்தினைப் பயன்படுத்திக் கொள்ளும் பொருட்டு, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையுடன் பதிவுசெய்து கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

2. சட்ட இசைவுத் தாமதத்தினை வழங்குதல்

(i) சட்ட இசைவுத் தாமதம் ஏதேனும் செயற்படுகின்ற கொடுகடன் வசதிகளுக்காக (மூலதனம் மற்றும் வட்டி இரண்டும்) 2019.04.18ஆம் திகதியன்று உள்ளவாறான தகைமையுடைய தனிப்பட்டவர்களுக்கு அல்லது நிறுவனங்களுக்கு (இதனகத்துப் பின்னர் தகைமையுடைய கடன்பாட்டாளர் எனக் குறிப்பிடப்படும்) வழங்கப்படுதல் வேண்டும். எனினும், அத்தகைய தகைமையுடைய கடன்பாட்டாளர்கள் சட்ட இசைவுத் தாமதத்தினை மூலதனத்திற்கு அல்லது வட்டிக்கு மாத்திரம் பயன்படுத்த விரும்புமிடத்து, உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகள்/ சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் கேட்டுக் கொள்கின்றவாறு அத்தகைய சட்ட இசைவுத் தாமதத்தினை வழங்கலாம்.

(ii) உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகள்/ சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள், விடயத்தினைப் பொறுத்து, மூலதனத்தினை அல்லது வட்டியினை அல்லது இரண்டினையும் சட்ட இசைவுத் தாமத காலப்பகுதியில் வரவேண்டிய தொகையினை புதிய கொடுகடன் வசதிக்கு மாற்றலாம் அல்லது மூலக் கொடுகடன் வசதியின் முதிர்ச்சியை தகைமையுடைய கடன்பாட்டாளர்களின் சம்மதத்துடன் நீடிக்கலாம்.

(iii) தகைமை பெற்ற கடன்பாட்டாளரொருவர் சுற்றுலாத் தொழில்துறைக்கு வழங்கப்பட்ட சலுகைகள் மீதான 2019 மே 21ஆம் திகதியிடப்பட்ட 2019ஆம் ஆண்டின் 01ஆம் இலக்கச் சுற்றறிக்கையில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குக் குறைவான காலப்பகுதியொன்றிற்கு சட்ட இசைவுத் தாமதத்தினைப் பயன்படுத்த விரும்பினால் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள்

குறைவான காலப்பகுதிக்கு சட்ட இசைவுத் தாமதத்தினை வழங்கலாம். எனினும், மூலதனம், வட்டி அல்லது இரண்டினையும் மீளச் செலுத்த வேண்டிய சட்ட இசைவுத் தாமத காலப்பகுதி ஏற்புடைத்தான சட்ட இசைவுத் தாமத காலப்பகுதி முடிவடைந்த திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குப் பின்னர் ஆரம்பித்தல் வேண்டும்.

(iv) மூலதனம், வட்டி அல்லது இரண்டும் சட்ட இசைவுத் தாமத காலப்பகுதியில் செலுத்தப்பட வேண்டியதாகவிருந்து அவை புதிய வசதிக்கு மாற்றப்படுகின்ற சந்தர்ப்பத்தில் சட்ட இசைவுத் தாமத காலப்பகுதியின் இறுதியில் 364 நாள் திறைசேரி உண்டியலுக்கான ஆகப் பிந்திய ஏல வீதத்தினை விஞ்சாத சலுகை வட்டி வீதமொன்றுடன் ஆண்டிற்கு 2.50 வட்டி வீதத்தினையும் சேர்த்து இரண்டாண்டினையும் விஞ்சாத வீதத்தில் மீள்கொடுப்பனவு காலப்பகுதிக்காக சலுகை வீதத்திலான வட்டி வீதமொன்றினை உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகள்/ சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் விதிக்கலாம். மீள்கொடுப்பனவுக் காலம் இரண்டாண்டுகளை விஞ்சுமாயின் உரிமம் பெற்ற நிதிக்கம்பனி/ சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனி கடன்பாட்டாளரும் வட்டி வீதம் தொடர்பில் இணக்கப்பாட்டிற்கு வருதல் வேண்டும்.

(v) உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள்/ சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் இணைப்பு I மற்றும் II இல் உள்ள திருத்தப்பட்ட படிவத்திலுள்ளவாறு ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் முடிவடைந்த வாரத்திற்காக ஒன்றுசேர்ந்த அடிப்படையில் தகைமைபெற்ற கடன்பாட்டாளர்களுக்கு வழங்கிய சலுகைகளின் விபரங்களையும் மறுக்கப்பட்ட கடன்பாட்டாளர்களின் விபரங்களையும் அடுத்துவரும் வாரத்தில் புதன்கிழமைக்கு முன்னராக அறிக்கையிடுதல் வேண்டும்.

**இணைப்பு I**

**2019இன் 01ஆம் இலக்க சுற்றறிக்கை**
**சுற்றுலாத்துறைக்கு வழங்கப்பட்ட சலுகை கிடைக்கத்தக்கதாகவுள்ள கடன்பாட்டாளர்களின் விபரங்கள்**
**படிவம் 01 விண்ணப்பிக்கப்பட்ட/ வழங்கப்பட்ட ஒப்பந்தங்கள்**

உரிமம்பெற்ற நிதிக் கம்பனி/ சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனியின் பெயர்: ..................................................................

முடிவடைந்த வாரம் ...............

| தொடர் இல. | ஒப்பந்த இல | கடன்பாட்டாளரின் பெயர் | வெளிநின்ற தொகை ரூ.'000 (2019.04.18இல் உள்ளவாறு) | சட்ட இசைவுத் தாமதத்திற்கு பரிசீலிக்கப்பட்ட தொகை (ரூ.'000) | சட்ட இசைவுத் தாமதத்தின் வகை | சட்ட இசைவுத் தாமதக் காலம் | சட்ட இசைவு தாமதக் காலப்பகுதியில் வரவேண்டிய தொகைக்காக உருவாக்கப்பட்ட புதிய கடன்கள் | | சட்ட இசைவுத் தாமதத்தின் நிலை | குறிப்புக்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | மீள்கொடுப்பனவுக் காலம் | வட்டி வீதம் | | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |

குறிப்புக்கள்:

நிரல் 4 - திகதியன்று உள்ளவாறு ஒப்பந்தத்தின் மொத்த வெளிப்படுத்துகை (வெளிநின்ற மூலதனம் மற்றும் வரவேண்டிய வெளிநின்ற வட்டி)

நிரல் 6 - வசதியின் மூல முதிர்ச்சிக்காக வழங்கப்பட்ட விரிவாக்கம் (வி), புதிய வசதிக்காக மாற்றப்பட்ட மூலதனம் (மூ), வட்டி (வ), அல்லது இரண்டும் (மூவ)

நிரல் 7 - சட்ட இசைவுத் தாமத காலப்பகுதியை அறிக்கையிடல்

நிரல் 9 - புதிய வசதிக்கான ஏற்புடைத்தான வட்டி வீதத்தினை அல்லது வட்டியற்ற வசதியினை அறிக்கையிடல்

நிரல் 10 - சட்ட இசைவுத் தாமதம் வழங்கப்பட்டிருக்கின்றதா அல்லது ஒப்புதலைப் பெறுவதற்கான செயன்முறைகள் இடம்பெறுகின்றதா என்பதனை அறிக்கையிடல்

நிரல் 11 - மேலதிக தகவல்கள் ஏதேனுமிருப்பின் தருக

அடுத்துவரும் புதன்கிழமைக்கு முன்னதாக **snbfidb@cbsl.lk** இற்கு மின்னஞ்சலை அனுப்பவும்.

**இணைப்பு II**

**2019இன் 01ஆம் இலக்க சுற்றறிக்கை**

**சுற்றுலாத்துறைக்கு வழங்கப்பட்ட சலுகை கிடைக்கத்தக்கதாகவுள்ள கடன்பாட்டாளர்களின் விபரங்கள்**

**படிவம் 02 மறுக்கப்பட்ட விண்ணப்பங்கள்**

உரிமம்பெற்ற நிதிக் கம்பனி/ சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனியின் பெயர்: .................................................................. முடிவடைந்த வாரம் ................

| தொடர் இல. | ஒப்பந்த இல | கடன்பாட்டாளரின் பெயர் | வெளிநின்ற தொகை ரூ.'000 (2019.04.18இல் உள்ளவாறு) | சட்ட இசைவுத் தாமதம் வழங்கப்படாமைக்கான காரணங்கள் | குறிப்புக்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

குறிப்புக்கள்:

நிரல் 4 - திகதியன்று உள்ளவாறு ஒப்பந்தத்தின் மொத்த வெளிப்படுத்துகை (வெளிநின்ற மூலதனம் மற்றும் வரவேண்டிய வெளிநின்ற வட்டி)

நிரல் 6 - மேலதிக தகவல்கள் ஏதேனுமிருப்பின் தருக

அடுத்தவாரத்தின் புதன்கிழமைக்கு முன்னராக **snbfidb@cbsl.lk** இற்கு மின்னஞ்சலில் அனுப்பவும்.

**2019இன் 02 இலக்க விளக்கக் குறிப்பு**

2019 ஓகத்து 30

## சுற்றுலா தொழில்துறைக்கு வழங்கப்பட்ட சலுகைகள் தொடர்பான 2019ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க சுற்றறிக்கைக்கான விளக்கங்கள்

சுற்றுலாக் கைத்தொழிலுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் தொடர்பில் 2019 மே 21ஆம் திகதியிடப்பட்ட 2019ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க சுற்றறிக்கை தொடர்பாக பின்வரும் விளக்கங்கள் விடுக்கப்பட்டுள்ளன.

**1. பதிவுசெய்தல் தேவைப்பாடுகள்**

சுற்றுலாத் துறைக்கு வழங்கப்பட்ட சலுகைகளை கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்ட இசைக் குழுக்களுக்கும் வழங்குவது என்ற அமைச்சரவையின் தீர்மானத்துடன் இசைந்து செல்லும் விதத்தில், சுற்றுலாத் துறைக்கு வழங்கப்பட்ட சலுகைகளைப் பயன்படுத்தும் விதத்தில் அத்தகைய ஆட்களும் குழுக்களும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவுசெய்திருக்க வேண்டும் என்ற தேவைப்பாட்டிலிருந்தும் விலக்களிக்கப்படுகின்றன என்பது பற்றி உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

**நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2019இன் 03ஆம் இலக்கம்** 2019 ஒத்தோபர் 18

## வைப்புக்கள் மற்றும் படுகடன் சாதனங்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்களுக்கான திருத்தங்கள்

2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 12ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்பட்டது

உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் வைப்புக்கள் மற்றும் படுகடன் சாதனங்கள் தொடர்பில் செலுத்தப்பட வேண்டிய உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள் மீது நாணயச் சபை இத்தால் பணிப்புரைகளை விடுத்திருக்கிறது.

1. உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் வைப்புக்கள் மற்றும் படுகடன் சாதனங்கள் மீதான உயர்ந்த வட்டி வீதங்கள் மீதான 2019ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதி வியாபாரச் சட்டப் பணிப்புரையின் பணிப்புரை 1.1(i) மற்றும் பணிப்புரை 1.2 என்பனவற்றிற்குப் பதலீடாக பின்வருவன அமையும்.

1.1 இலங்கை ரூபா வைப்புக்கள் மீது உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்றினால் வழங்கப்படுகின்ற அல்லது செலுத்தப்படக்கூடிய உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள்;

(i) கீழேயுள்ள அட்டவணை 01 இற்கு இணங்க பெறப்பட்ட வட்டி வீதங்களை விஞ்சாதிருத்தல் வேண்டும்;

**அட்டவணை 01**

**உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் வைப்புக்களுக்கான முதிர்ச்சியில் உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள்**

| வைப்பின் காலம் | ஆண்டிற்கு உயர்ந்தபட்ச வட்டி வீதம் |
|---|---|
| 01 மாதத்திற்கும் குறைவான அல்லது முதிர்ச்சி குறிப்பிடாத காலப்பகுதியைக் கொண்ட சேமிப்பு மற்றும் ஏனைய வைப்புக்கள் | துணைநில் வைப்பு வசதி வீதம் |
| தவணை வைப்புக்கள் | |
| 01 மாதம் மற்றும் 03 மாதங்களுக்கு குறைவானவை | திறைசேரி உண்டியல் வீதம் + 0.50% |
| 03 மாதங்கள் மற்றும் 06 மாதங்களுக்கு குறைவானவை | திறைசேரி உண்டியல் வீதம் + 1.00% |
| 06 மாதங்கள் மற்றும் 01 ஆண்டிற்கு குறைவானவை | திறைசேரி உண்டியல் வீதம் + 1.50% |
| 01 ஆண்டு மற்றும் 02 ஆண்டிற்கு குறைவானவை | திறைசேரி உண்டியல் வீதம் + 3.25% |
| 02 ஆண்டுகள் மற்றும் 03 ஆண்டிற்கு குறைவானவை | திறைசேரி உண்டியல் வீதம் + 4.00% |
| 03 ஆண்டுகள் மற்றும் 05 ஆண்டிற்கு குறைவானவை | திறைசேரி உண்டியல் வீதம் + 4.50% |
| 05 ஆண்டுகள் | திறைசேரி உண்டியல் வீதம் + 5.00% |

1.2 படுகடன் சாதனங்களின் மீது உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்றினால் வழங்கப்படுகின்ற அல்லது செலுத்தப்படக்கூடிய உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள் கீழேயுள்ள அட்டவணை 02 இற்கிணங்க பெறப்பட்ட வட்டி வீதங்களை விஞ்சாதிருத்தல் வேண்டும்.

**அட்டவணை 02**

**உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் படுகடன் சாதனங்களுக்கான முதிர்ச்சியில் உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள்**

| படுகடன் சாதனங்களின் காலம் | உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள் |
|---|---|
| 01 ஆண்டிற்கும் குறைவானவை | திறைசேரி உண்டியல் வீதம் + 1.50% |
| 01 ஆண்டு மற்றும் 02 ஆண்டிற்கு குறைவானவை | திறைசேரி உண்டியல் வீதம் + 3.25% |
| 02 ஆண்டுகள் மற்றும் 03 ஆண்டிற்கு குறைவானவை | திறைசேரி உண்டியல் வீதம் + 4.00% |
| 03 ஆண்டுகள் மற்றும் 05 ஆண்டிற்கு குறைவானவை | திறைசேரி உண்டியல் வீதம் + 5.00% |
| 05 ஆண்டுகள் | திறைசேரி உண்டியல் வீதம் + 5.50% |

எஸ்.ஆர்.ஆட்டிகல
**பதில் மூத்த துணை ஆளுநர்/ முதன்மை நிறைவேற்று அலுவலர்**
**இலங்கை மத்திய வங்கி**

**நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2019இன் 04ஆம் இலக்கம்** 2019 திசெம்பர் 19

**அசையாச் சொத்துக்களின் மதிப்பீட்டிற்கான திருத்தம்**

2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 12 ஆம் பிரிவினால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் நியதிகளில், இலங்கையிலுள்ள உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு தொடர்பாக 2018ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகளுக்கு பின்வரும் திருத்தங்களை நாணயச் சபை விடுத்திருக்கிறது.

இதற்கமைய, உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு தொடர்பான 2018ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க நிதித்தொழில் வியாபாரச் சட்டப் பணிப்புரை பின்வரும் பணிப்புரைகள் மூலம் பதிலீடு செய்யப்படுதல் வேண்டும்.

4 மதிப்பீட்டாளர்களுக்கான தகைமைப் பிரமாணங்கள்

4.1 ஒவ்வொரு உரிமம்பெற்ற நிதிக் கம்பனியும் பின்வருவனவற்றை உறுதிப்படுத்தல் வேண்டும்.

அ. மதிப்பீட்டாளர்களுக்கான தகைமைப் பிரமாணங்கள் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றன.

அ.1 இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவனத்தின் உறுப்பினராக இருத்தல் வேண்டும். அவர்

i. ஒரு ஆட்சியியல் உறுப்பினராக; அல்லது

ii. தொழில் நிபுணத்துவத்தின் உறுப்பினராகவும் அத்தகைய உறுப்பினர் தரத்தில் 5 ஆண்டு அனுபவத்துடன்கூடியதொருவராகவும்

தொழில்சார் நிபுணத்துவ சங்க உறுப்பினர் தரத்திலிருந்து அனுபவ ஆண்டுகளின் எண்ணிக்கையினை தீர்மானிக்கும் நோக்கத்திற்காக 2019ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவன (திருத்தச்) சட்டத்தின் 24ஆம் பிரிவின் கீழ் கூறப்பட்டுள்ள இடைக்கால ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

அ.2 ஐக்கிய இராச்சியத்தின் பட்டய அளவீட்டாளர் றோயல் நிறுவனத்தின் உறுப்பினராக இருத்தல் வேண்டும். அவர்

i. ஐக்கிய இராச்சியத்தின் பட்டய அளவீட்டாளர் றோயல் நிறுவனத்தின் ஒரு ஆட்சியியல் உறுப்பினராகவும் இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவனத்தின் உறுப்பினராகவும்; அல்லது

ii. ஐக்கிய இராச்சியத்தின் பட்டய அளவீட்டாளர் றோயல் நிறுவகத்தின் இறுதிப்பரீட்சையில் சித்தியடைந்து அதே நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள 05 ஆண்டுகள் அனுபவத்துடன் பொதுத் தொடர் பிரிவில் பணியாற்றும் அத்தகைய தரத்திலுள்ள உறுப்பினராகவும் இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவகத்தின் உறுப்பினராகவும்

இருத்தல் வேண்டும்.

ஆ. மேலே பணிப்புரை 4.1 அ) இல் குறிப்பிடப்பட்ட தகைமைகளின்படி உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் மதிப்பீட்டாளர் குழுவிற்கு தெரிவுசெய்யப்பட்ட மதிப்பீட்டாளர்கள் தொடர்பான தொழில்சார் நிபுணத்துவ சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட/ விதந்துரைக்கப்பட்ட தொழில்சார் அபிவிருத்திகளை தொடர்ச்சியாகப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

இ. அசையாச் சொத்துக்களின் மதிப்பீட்டினை மேற்கொள்கின்ற உள்ளக மதிப்பீட்டாளர்கள் மேலே பணிப்புரை 4.1 (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைப் பிரமாணங்களைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

6. மதிப்பீடுகளின் கால இடைவெளி

6.1 அசையாச் சொத்துக்களின் மதிப்பீடுகளது கால இடைவெளி பின்வருமாறு இருத்தல் வேண்டும்.

அ. செயற்படாதனவாக விளங்கும் கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கெதிராக பிணையுறுதியாக பெறப்பட்ட அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு எந்தவொரு ஒழுங்குமுறைப்படுத்தல் நோக்கத்திற்குமாக பின்வருமாறான கால இடைவெளியினை கொண்டிருத்தல் வேண்டும்.

i. கடன்பாட்டாளரினால் வதியும் நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டு வருகின்ற வதிவிட சொத்திற்கெதிராக வழங்கப்பட்ட கொடுகடன் வசதியைப் பொறுத்தவரை; அறிக்கை ஐந்தாண்டுக்குக் கூடுதலான வழமையானதாக இருக்கக்கூடாது.

ii. மற்றைய அனைத்து கொடுகடன் வசதிகள்: அறிக்கையானது நான்கு ஆண்டுகளுக்கும் கூடுதலான பழமையானதாக இருத்தல்கூடாது.

ஆ. செயற்படுகின்ற கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கெதிராக பிணையுறுதியாக பெறப்பட்ட அசையாச் சொத்துக்களின் மதிப்பீடுகள் கடன் வழங்கப்படுகின்ற ஆரம்ப கட்டத்தின் போதும் அதனைத் தொடர்ந்து கொடுகடன் வசதி அதிகரிக்கப்படுகின்ற ஏதேனும் நேரத்திலும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

இ. அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு தொடர்பில் 2018ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரையின் பணிப்புரை 3.1 (ஆ) மற்றும் (இ) இல் குறிப்பிடப்பட்டவாறு அசையாச் சொத்துக்களின் மீள்மதிப்பீடானது பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட உள்ளகக் கொள்கைகளுக்கு இசைந்த விதத்தில் அல்லது அத்தகைய அசையாச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதியில் ஏற்படுகின்ற ஏதேனும் குறிப்பிடத்தக்க தளம்பல் பற்றாக்குறைக்கு ஏற்ப மேற்கொள்ளப்படல் வேண்டும். எனினும், அத்தகைய இலாபங்கள் ஒவ்வொரு மூன்றாண்டுகளுக்குகொருமுறை மட்டுமே அடுக்கு 2 மூலதனத்தில் உள்ளடக்கப்படலாம்.

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**நிதிக் குத்தகைக்குவிடும் சட்டப் பணிப்புரைகள் 2019இன் 02ஆம் இலக்கம்** 2019 திசெம்பர் 20

## அசையாச் சொத்துக்களின் மதிப்பீட்டிற்கான திருத்தம்

2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடல் சட்டத்தின் 34 ஆம் பிரிவினால் ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தின் நியதிகளில், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர் இலங்கையிலுள்ள சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கு விடுக்கப்பட்ட அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு தொடர்பாக 2018ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடும் சட்டத்திற்கு பின்வரும் திருத்தங்களை விடுத்திருக்கிறது.

இதற்கமைய, நிதிக் குத்தகைக்குவிடும் கம்பனிகளின் அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு தொடர்பான 2018ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடும் சட்டப் பணிப்புரை பின்வரும் பணிப்புரைகள் மூலம் பதிலீடு செய்யப்படுதல் வேண்டும்.

5. மதிப்பீட்டாளர்களுக்கான தகைமைப் பிரமாணங்கள்

5.1 ஒவ்வொரு நிதிக் குத்தகைக்குவிடும் கம்பனியும் பின்வருவனவற்றை உறுதிப்படுத்தல் வேண்டும்.

அ. மதிப்பீட்டாளர்களுக்கான தகைமைப் பிரமாணங்கள் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றன.

அ.1 இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவனத்தின் உறுப்பினராக இருத்தல் வேண்டும். அவர்

i. ஒரு ஆட்சியியல் உறுப்பினராக; அல்லது

ii. தொழில் நிபுணத்துவத்தின் உறுப்பினராகவும் அத்தகைய உறுப்பினர் தரத்தில் 5 ஆண்டு அனுபவத்துடன்கூடியதொருவராகவும்

தொழில்சார் நிபுணத்துவ சங்க உறுப்பினர் தரத்திலிருந்த அனுபவ ஆண்டுகளின் எண்ணிக்கையினை தீர்மானிக்கும் நோக்கத்திற்காக 2019ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவன (திருத்தச்) சட்டத்தின் 24ஆம் பிரிவின் கீழ் கூறப்பட்டுள்ள இடைக்கால ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

அ.2 ஐக்கிய இராச்சியத்தின் பட்டய அளவீட்டாளர் றோயல் நிறுவனத்தின் உறுப்பினராக இருத்தல் வேண்டும். அவர்

i. ஐக்கிய இராச்சியத்தின் பட்டய அளவீட்டாளர் றோயல் நிறுவனத்தின் ஒரு ஆட்சியியல் உறுப்பினராகவும் இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவனத்தின் உறுப்பினராகவும்; அல்லது

ii. ஐக்கிய இராச்சியத்தின் பட்டய அளவீட்டாளர் றோயல் நிறுவகத்தின் இறுதிப்பரீட்சையில் சித்தியடைந்து அதே நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள 05 ஆண்டுகள் அனுபவத்துடன் பொதுத் தொடர் பிரிவில் பணியாற்றும் அத்தகைய தரத்திலுள்ள உறுப்பினராகவும் இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவகத்தின் உறுப்பினராகவும்

இருத்தல் வேண்டும்.

ஆ. மேலே பணிப்புரை 5.1 அ) இல் குறிப்பிடப்பட்ட தகைமைகளின்படி நிதிக் குத்தகைக்குவிடும் கம்பனிகளின் மதிப்பீட்டாளர் குழுவிற்கு தெரிவுசெய்யப்பட்ட மதிப்பீட்டாளர்கள் தொடர்பான தொழில்சார் நிபுணத்துவ சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட/ விதந்துரைக்கப்பட்ட தொழில்சார் அபிவிருத்திகளை தொடர்ச்சியாகப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

இ. அசையாச் சொத்துக்களின் மதிப்பீட்டினை மேற்கொள்கின்ற உள்ளக மதிப்பீட்டாளர்கள் மேலே பணிப்புரை 5.1 (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைப் பிரமாணங்களைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

7. மதிப்பீடுகளின் கால இடைவெளி

7.1 அசையாச் சொத்துக்களின் மதிப்பீடுகளது கால இடைவெளி பின்வருமாறு இருத்தல் வேண்டும்.

அ. செயற்படாதனவாக விளங்கும் கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கெதிராக பிணையுறுதியாக பெறப்பட்ட அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு எந்தவொரு ஒழுங்குமுறைப்படுத்தல் நோக்கத்திற்குமாக பின்வருமாறான கால இடைவெளியினை கொண்டிருத்தல் வேண்டும்.

i. கடன்பாட்டாளரினால் வதியும் நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டு வருகின்ற வதிவிட சொத்திற்கெதிராக வழங்கப்பட்ட கொடுகடன் வசதியைப் பொறுத்தவரை; அறிக்கை ஐந்தாண்டுக்குக் கூடுதலான பழமையானதாக இருக்கக்கூடாது.

ii. மற்றைய அனைத்து கொடுகடன் வசதிகள்: அறிக்கையானது நான்கு ஆண்டுகளுக்கும் கூடுதலான பழமையானதாக இருத்தல்கூடாது.

ஆ. செயற்படுகின்ற கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கெதிராக பிணையுறுதியாக பெறப்பட்ட அசையாச் சொத்துக்களின் மதிப்பீடுகள் கடன் வழங்கப்படுகின்ற ஆரம்ப கட்டத்தின் போதும் அதனைத் தொடர்ந்து கொடுகடன் வசதி அதிகரிக்கப்படுகின்ற ஏதேனும் நேரத்திலும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

இ. அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு தொடர்பில் 2018ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடும் சட்டப் பணிப்புரையின் பணிப்புரை 4.1 (ஆ) மற்றும் (இ) இல் குறிப்பிடப்பட்டவாறு அசையாச் சொத்துக்களின் மீள்மதிப்பீடானது பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட உள்ளகக் கொள்கைகளுக்கு இசைந்த விதத்தில் அல்லது அத்தகைய அசையாச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதியில் ஏற்படுகின்ற ஏதேனும் குறிப்பிடத்தக்க தளம்பல் பற்றாக்குறைக்கு ஏற்ப மேற்கொள்ளப்படல் வேண்டும். எனினும், அத்தகைய இலாபங்கள் ஒவ்வொரு மூன்றாண்டுகளுக்குகொருமுறை மட்டுமே அடுக்கு 2 மூலதனத்தில் உள்ளடக்கப்படலாம்.

ஜே.பி.கமலத்
**பதில் பணிப்பாளர்,**
**வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி**

**பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் மற்றும் உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டப் பணிப்புரைகள் 2019இன் 01ஆம் இலக்கம்**

2019 திசெம்பர் 20

## பத்திரங்களற்ற திறைசேரி முறிகள் மற்றும் பத்திரங்களற்ற திறைசேரி உண்டியல்களில் வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்களின் மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள்

1937ஆம் ஆண்டின் 7ஆம் இலக்கப் பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் (திருத்தப்பட்டவாறான) 21இ(3)ஆம் பிரிவின் கீழ் மற்றும் 1923ஆம் ஆண்டின் 8ஆம் இலக்கம் உள்நாட்டுத் திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டத்தின் (திருத்தப்பட்டவாறான) 8(2) ஆம் பிரிவின் கீழும் விடுக்கப்படுகிறது.

பத்திரங்களற்ற திறைசேரி முறிகள் மற்றும் பத்திரங்களற்ற திறைசேரி உண்டியல்களில் வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்களின் மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய முறைகள் பற்றி நாணயச் சபை பின்வரும் பணிப்புரைகளை விடுக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் மற்றும் உள்நாட்டுத் திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் அதிகாரமளித்தல் | 1.1 | திருத்தப்பட்டவாறான 1937ஆம் ஆண்டின் 7ஆம் இலக்கப் பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் 21இ(3)ஆம் பிரிவு மற்றும் திருத்தப்பட்டவாறான 1923ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டத்தின் 8(2)ஆம் பிரிவு என்பனவற்றின் நியதிகளில் இலங்கை மத்திய வங்கி நேரடிப் பங்கேற்பாளர்களுக்கு அல்லது அதிலுள்ள வேறு எவரேனும் வகையினருக்கு பத்திரங்களற்ற திறைசேரி முறிகள் மற்றும் பத்திரங்களற்ற திறைசேரி உண்டியல்கள் அல்லது அவற்றின் மீதான வட்டி, கொள்வனவு, விற்பனை, மாற்றல், பிணையளித்தல் அல்லது அடமானம் வைக்கப்படல் என்பன தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய முறை மற்றும் தன்மை பற்றி பணிப்புரைகளை விடுக்கலாம். |
| 2. | ஏற்புடைத்தன்மை | 2.1 | இப்பணிப்புரைகள், ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதிக் கொடுக்கல்வாங்கல்கள், திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் துணைநில் வசதி என்பன தவிர்ந்த, வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்களுடன் மேற்கொள்ளப்படுகின்ற பத்திரங்களற்ற வடிவிலான திறைசேரி முறிகள் மற்றும் பத்திரங்களற்ற வடிவிலான திறைசேரி உண்டியல்களிலான அனைத்து மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களுக்கும் ஏற்புடைத்தனவாக இருத்தல் வேண்டும். |

2.2 இப்பணிப்புரைகள் 2004ஆம் ஆண்டின் 02ஆம் இலக்கப் பத்திரங்களற்ற திறைசேரி முறிகள் (கொடுக்கல்வாங்கல்கள்) ஒழுங்குவிதிகள் மற்றும் 2004ஆம் ஆண்டின் 02ஆம் இலக்கப் பத்திரங்களற்ற திறைசேரி உண்டியல் (கொடுக்கல்வாங்கல்) ஒழுங்குவிதிகள் மற்றும் லங்கா செட்டில் முறைமை விதிகள் என்பனவற்றிற்கு மேலதிகமாக ஏற்புடைத்தானவையாக இருத்தல் வேண்டும்.

3. மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களுக்கான தகைமையுடைய பிணையங்கள்

3.1 இப்பணிப்புரைகளின் நோக்கத்திற்காக, வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்கள் அரசாங்கத்தின் சார்பில் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பத்திரங்களற்ற திறைசேரி முறிகள் மற்றும் பத்திரங்களற்ற திறைசேரி உண்டியல்களை மாத்திரம் மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களுக்கான பிணைகளாக ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

4. தகைமையுடைய பிணையங்களை மதிப்பிடல் கழிவிடல் தேவைப்பாடுகள் மற்றும் தகைமையுடைய பிணையங்களைப் பூர்த்தி செய்தல்

4.1 மீள்கொள்வனவுகள் மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களுக்காகப் பயன்படுத்தப்படும் தகைமையுடைய பிணைகள் சந்தைப் பெறுமதியில் மதிப்பிடப்படுதல் வேண்டும். அத்தகைய தகைமையுடைய பிணையங்களின் சந்தைப் பெறுமதி முதனிலை வணிகர்களினால் வழங்கப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு திரட்டப்பட்டு இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் சுற்றறிக்கைப்படுத்தப்பட்ட நாளாந்த தொகுப்பு அறிக்கையில் எடுத்துக்காட்டப்பட்டவாறு, தொடர்பான திகதிக்காக அல்லது இந்நோக்கத்திற்காக இலங்கை மத்திய வங்கியினால் விபரிக்கப்படக் கூடியவாறான ஏதாவதொரு அடிப்படையில் தொடர்பான பிணையத்திற்கான வாங்கும் மற்றும் விற்கும் விளைவுக் குறிப்பீடுகளின் சராசரிக்கான தொடர்பான வட்டியையும் உள்ளடக்கும் தகைமையுடைய பிணையத்தின் இழிந்த விலையினைப் பயன்படுத்திக் கணிக்கப்படுதல் வேண்டும். கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளும் நேரத்தில் தொடர்பான திகதிக்காக நாளாந்தத் தொகுப்பு அறிக்கை கிடைக்காத சந்தர்ப்பமொன்றில், உடனடியாக முற்போந்த வேலைநாளுக்குரிய நாளாந்தத் தொகுப்பு அறிக்கையினை இதற்காகப் பயன்படுத்தல் வேண்டும்.

4.2 மேலே 4.1இல் உள்ள பணிப்புரை எது எவ்வாறிருப்பினும், வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்கள், மாற்று உள்ளீட்டு மூலங்களுக்குட்பட்டு தகைமையுடைய பிணையங்களின் சந்தைப் பெறுமதியினைக் கணிப்பதற்குப் பின்வருவன போன்ற உள்ளீடுகளைப் பயன்படுத்தலாம்;

(i) நேரடி வணிகர் பங்கேற்பாளர்கள் உரிமம்பெற்ற வங்கிகளாகவுள்ள சந்தர்ப்பத்தில் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரின் ஒப்புதலளிக்கப்பட்ட விடயங்கள் வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்கள் முதனிலை வணிகர் கம்பனிகளாக இருக்கும் சந்தர்ப்பத்தில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளரினால் ஒப்புதலளிக்கப்பட்ட விடயங்கள்;

(ii) வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்களின் ஆவணப்படுத்தப்பட்ட உள்ளகக் கொள்கைக்காக ஏற்பாடு செய்யப்பட்டவை, அத்துடன்;

(iii) வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்களினால் பிரயோகிக்கப்படுகின்ற தொடர்ச்சியான விடயங்கள்.

4.3 வணிகர் நேரடிப் பங்கேற்பாளரொருவர் கொடுக்கல்வாங்கல்களின் காலம், முதிர்ச்சித் திகதி, தகைமையுடைய பிணையங்களின் சந்தைப்படுத்தக்கூடிய தன்மை இணைத்தரப்பினரின் இடர்நேர்வு மதிப்பீடு, இணைத்தரப்பினரின் தேவைப்பாடுகள் மற்றும் தொடர்பானவை எனக் கருதப்படுகின்ற வேறு ஏதேனும் காரணி என்பனவற்றினைப் பரிசீலனையில் கொண்டு இணைத்தரப்பினருடன் ஒவ்வொரு மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களுக்கான கழிவிடல் தேவைப்பாடு பற்றி இணைத்தரப்பினருடன் மதிப்பீடுகளை மேற்கொண்டு இணங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

4.4 மேலேயுள்ள பணிப்புரையான 4.3இன் விடயங்கள் எது எப்படியிருப்பினும், வணிகர் நேரடிப் பங்கேற்பாளரொருவர், மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்கின்ற நேரத்தில், தகைமையுடைய பிணையங்களின் சந்தைப் பெறுமதி, பிணையங்களின் (மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களின் முதிர்ச்சிப் பெறுமதி) மீள்கொள்வனவுப் பெறுமதியினைப் போதுமானளவிற்கு உள்ளடக்குவதாக இருத்தல் வேண்டும் என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். அதாவது, வணிகர் நேரடிப் பங்கேற்பாளரினால் கடன்பட்ட தொகையும் மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல் மீதான காலப்பகுதிக்கான ஒன்றுசேரும் வட்டியும் சேர்த்து குறைந்தபட்ச கழிவிடல் கீழே குறித்துரைக்கப்பட்டவாறு இருத்தல் வேண்டும்.

| தகைமையுடைய பிணை முதிர்ச்சியடைவதற்கு இன்னமும் உள்ள காலம் | குறைந்தபட்ச கழிவிடல் (%) |
|---|---|
| 1 ஆண்டுவரை | 4.0 |
| 1 ஆண்டிற்கு கூடுதலாக 3 ஆண்டுகள் வரை | 6.0 |
| 3 ஆண்டிற்கு கூடுதலாக 5 ஆண்டுகள் வரை | 8.0 |
| 5 ஆண்டிற்கு கூடுதலாக 8 ஆண்டுகள் வரை | 10.0 |
| 8 ஆண்டுகளுக்கும் கூடுதலானவை | 12.0 |

4.5 மேலேயுள்ள பணிப்புரையான 4.3இன் விடயங்கள் எது எப்படியிருப்பினும், வணிகர் நேரடிப் பங்கேற்பாளரொருவர் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கலை மேற்கொள்கின்ற நேரத்தில், தகைமையுடைய பிணையங்களின் சந்தைப் பெறுமதி, பிணையங்களின் மீள்விற்பனைப் பெறுமதியினை (நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களின் முதிர்ச்சிப் பெறுமதி) போதுமானளவிற்கு உள்ளடக்குவதாக இருத்தல் வேண்டுமென்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். அதாவது வணிகர் நேரடிப் பங்கேற்பாளரினால் வழங்கப்பட்ட கடன் தொகை, நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல் காலப்பகுதியில் ஒன்றுசேர்கின்ற வட்டியுடன் குறைந்தபட்ச கழிவிடலுடன் கீழே விபரிக்கப்படுகிறது.

| தகைமையுடைய பிணை முதிர்ச்சியடைவதற்கு இன்னமும் உள்ள காலம் | குறைந்தபட்ச கழிவிடல் (%) |
|---|---|
| 1 ஆண்டுவரை | 4.0 |
| 1 ஆண்டிற்கு கூடுதலாக 3 ஆண்டுகள் வரை | 6.0 |
| 3 ஆண்டிற்கு கூடுதலாக 5 ஆண்டுகள் வரை | 8.0 |
| 5 ஆண்டிற்கு கூடுதலாக 8 ஆண்டுகள் வரை | 10.0 |
| 8 ஆண்டுகளுக்கும் கூடுதலானவை | 12.0 |

4.6 மேலேயுள்ள பணிப்புரைகளான 4.4 மற்றும் 4.5 இலுள்ள விடயங்கள் எது எப்படியிருப்பினும், மேலேயுள்ள பணிப்புரைகள் 4.4 மற்றும் 4.5 இனால் தேவைப்படுத்தப்பட்டவற்றிலும் பார்க்கக் குறைவான கழிவிடலை, இருதரப்பினரினதும் எழுதப்பட்ட உடன்படிக்கையுடன், இரண்டு நேரடிப் பங்கேற்பாளர்களுக்கிடையே செய்துகொள்ளப்பட்ட மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களுக்காகப் பயன்படுத்த முடியும்.

4.7 கொடுக்கல்வாங்கல் முதிர்ச்சியடைவதற்கு முன்னதாக எந்தவொரு நேரத்திலும், பிணையங்களின் மீள்கொள்வனவுப் பெறுமதி பிணையங்களின் சந்தைப் பெறுமதிக்குக் கீழே வீழ்ச்சியடையும் சந்தர்ப்பத்தில், வணிகர் நேரடிப் பங்கேற்பாளரொருவர் குறிப்பிட்ட கொடுக்கல்வாங்கலுக்காக மேலதிக தகைமையுடைய பிணையங்களை ஒதுக்கிக் கொள்ளுதல் வேண்டும், அல்லது தகைமையுடைய பிணையங்களின் சந்தைப் பெறுமதி மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கலின் முதிர்ச்சிப் பெறுமதியினை உள்ளடக்கப் போதுமானதாக இருக்கிறது என்பதனை உறுதிப்படுத்துவதற்கு தேவையானயளவிற்கு, தொடர்பான நாளன்று லங்கா செட்டில் முறைமை மூடப்படுவதற்கு முன்னதாக, காசாகக் கொடுக்கல்வாங்கலின் ஒரு பகுதியைத் தீர்ப்பனவு செய்தல் வேண்டும்.

4.8 பிணையங்களின் சந்தைப் பெறுமதி பிணையங்களின் மீள்விற்பனைப் பெறுமதிக்குக் கீழே வீழ்ச்சியடையும் சந்தர்ப்பத்தில் (நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கலின் முதிர்ச்சிப் பெறுமதி) கொடுக்கல்வாங்கல் முதிர்ச்சியடைவதற்கு முன்னதாக எந்தவொரு நேரத்திலும் வணிகர் நேரடிப் பங்கேற்பாளரொருவர் குறிப்பிட்ட கொடுக்கல்வாங்கல்களுக்காக மேலதிகத் தகைமையுடைய பிணையங்களைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும் அல்லது தகைமையுடைய பிணையங்களின் சந்தைப் பெறுமதி மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கலின் முதிர்ச்சிப் பெறுமதியினை உள்ளடக்கப் போதுமானதாக இருக்கிறது என்பதனை உறுதிப்படுத்துவதற்குத் தேவையானளவிற்கு, தொடர்பான நாளன்று லங்கா செட்டில் முறைமை மூடப்படுவதற்கு முன்னதாக, கொடுக்கல்வாங்கலின் பகுதியளவான தீர்ப்பனவிற்கான காசினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

5. விற்பனை, பதிலீடு மற்றும் தகைமையுடைய பிணையங்களின் முதிர்ச்சி

5.1 தகைமையுடைய பிணையங்கள், நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களுக்காகப் பெறப்படுகையில் வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்கள் உடனடி அடிப்படையில் விற்பனைகளைச் செய்யக்கூடாது.

5.2 வணிகர் நேரடிப் பங்கேற்பாளரொருவர் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களுக்காகப் பெறப்பட்ட பிணையங்களை, இணைத்தரப்பினருடன் செய்து கொள்ளப்பட்ட மீள்கொள்வனவு அல்லது நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கையில் இப்பயன்பாடு தெளிவாக வழங்கப்பட்டிருக்குமாயின், அவ்வாறு மீள்கொள்வனவு அல்லது நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைவான ஏற்பாடுகளை செய்யுமெனில் பயன்படுத்தலாம்.

5.3 வணிகர் நேரடிப் பங்கேற்பாளரொருவர் மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களுக்காக பயன்படுத்தப்பட்ட பிணையங்களை ஒன்றில் உடனடியாக அல்லது மீள்கொள்வனவு அடிப்படையில், அத்தகைய வர்த்தகப்படுத்தலானது இணைத்தரப்பினருடன் செய்து கொள்ளப்பட்ட மீள்கொள்வனவு அல்லது நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கையில் தெளிவாக வழங்கப்பட்டிருக்குமாயின் அவ்வாறு மீள்கொள்வனவு அல்லது நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைவான ஏற்பாடுகளைச் செய்யுமெனில் விற்பனை செய்யலாம்.

5.4 மேலேயுள்ள பணிப்புரை 5.3இன் ஏற்பாட்டு நியதிகளில் வணிகர் நேரடிப் பங்கேற்பாளரொருவர் மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட பிணையங்களை விற்பனை செய்வதற்கு அல்லது மத்திய வைப்பக முறைமையில் வைத்திருக்கப்பட்ட இணைத்தரப்பினரின் பிணையங்கள் கணக்கிலிருந்து மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட பிணையங்களை மாற்றல் செய்வதற்குத் தீர்மானிப்பாராயின், வணிகர் நேரடிப் பங்கேற்பாளர் விற்பனை செய்யப்பட்டமையினை அல்லது மத்திய வைப்பக முறைமையில் வைத்திருக்கப்பட்ட இணைத்தரப்பினரின் பிணையங்கள் கணக்கிலிருந்து பிணையங்கள் அனைத்தும் அதேகாலத்தில் அல்லது முன்னதாக தொடர்பான கொடுக்கல்வாங்கல்களுக்கு எது ஏற்புடைத்தானதோ, அதனைப் பொறுத்து, பணிப்புரைகள் 4.4 அல்லது 4.6இனால் தேவைப்படுத்தப்பட்டளவிற்கு ஏனைய தகைமையுடைய பிணையங்களின் மூலம் மத்திய வைப்பக முறைமையில் வைத்திருக்கப்பட்ட இணைத்தரப்பினரின் பிணையங்கள் கணக்கிற்குப் பதிலீடு செய்வதற்காக மாற்றப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

5.5 வணிகர் நேரடிப் பங்கேற்பாளரொருவரின் இணைத்தரப்பினரொருவர் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கலுக்குப் பயன்படுத்தப்பட்ட பிணையங்களை விற்றுவிடுவதற்கு அல்லது மத்திய வைப்பக முறைமையில் வைத்திருக்கப்பட்ட இணைத்தரப்பினரின் பிணையங்கள் கணக்கிலிருந்து மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட பிணையங்களை மாற்றல் செய்வதற்கு எண்ணுமிடத்து, வணிகர் நேரடிப் பங்கேற்பாளர், தொடர்பான கொடுக்கல்வாங்கல்களுக்கு எது ஏற்புடைத்தானதோ, அதனைப் பொறுத்து, பணிப்புரைகள் 4.5 அல்லது 4.6இனால் தேவைப்படுத்தப்பட்டளவிற்கு தகைமையுடைய பிணையங்களை, மத்திய வைப்பக முறைமையில் வைத்திருக்கப்படும் இணைத்தரப்பினரின் பிணையங்கள் கணக்கிலிருந்து பிணையங்களை அகற்றுவதற்கு முன்னதாக, அல்லது சமகாலத்தில் மத்திய வைப்பக முறைமையில் வைத்திருக்கப்படும் இணைத்தரப்பினரின் பிணையங்கள் கணக்கிலிருந்து பிணையங்களை அகற்றுவதற்கு முன்னால் அல்லது சமகாலத்தில், மத்திய வைப்பக முறைமையில் வைத்திருக்கப்படும் பிணையங்கள் கணக்கிலிருந்து விற்கப்பட்ட அல்லது மாற்றல் செய்யப்பட்ட பிணையங்களுக்கும் பதிலீடாக ஏனைய தகைமையுடைய பிணையங்களைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

5.6 தகைமையுடைய பிணையங்கள், மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களுக்காகப் பயன்படுத்தப்படுமிடத்து அல்லது கொடுக்கல்வாங்கல் காலத்தின் போது முதிர்ச்சியடைகின்ற நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களுக்காகப் பிணையங்கள் பெறப்படுகின்ற போது வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்கள் விடயத்தினைப் பொறுத்து, முதிர்ச்சியடைகின்ற தகைமை வாய்ந்த பிணையங்களுக்குப் பதிலீடாக சந்தைப் பெறுமதிக்குச் சமனான தகைமையுடைய பிணையங்களை அல்லது முதிர்ச்சியடைகின்ற தகைமையுடைய பிணையங்களின் சந்தைப் பெறுமதியை விஞ்சுகின்ற பெறுமதியில் ஒதுக்குகளைச் செய்யலாம் அல்லது பெற்றுக்கொள்ளலாம்.

6. வணிகர் நேரடிப் பங்கேற்பாளர் பணிப்பாளர் சபை, இடர்நேர்வு முகாமைத்துவ இணங்குவிப்பு மற்றும் உள்ளகக் கணக்காய்வுகளின் பொறுப்புக்கள்

6.1 மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளும் போது வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்கள் அத்தகைய கொடுக்கல்வாங்கல்களுடன் சேர்ந்து காணப்படும் இணைத்தரப்புக் கொடுகடன் இடர்நேர்வு, சந்தை இடர்நேர்வு, தொழிற்பாட்டு இடர்நேர்வு, திரவத்தன்மை இடர்நேர்வு மற்றும் சட்ட ரீதியான இடர்நேர்வு என்பனவற்றையுள்ளடக்கிய அனைத்துத் தொடர்பான இடர்நேர்வுகளையும் முகாமைப்படுத்தல் வேண்டும்.

6.2 மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளும் போது, வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்கள் ஏற்புடைத்தான சட்டங்கள், ஒழுங்குவிதிகள், பணிப்புரைகள், நன்னடத்தைக் கோவை, லங்கா செட்டில் முறைமை விதிகள் மற்றும் ஏனைய வழிகாட்டல்கள் ஆகிய அனைத்திலும் குறித்துரைக்கப்பட்ட தொடர்பான தேவைப்பாடுகள் கடுமையான முறையில் பின்பற்றப்படுகின்றமையினை உறுதிப்படுத்தல் வேண்டும்.

6.3 வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்களின் பணிப்பாளர் சபை அத்தகைய இணங்குவிப்புக்களை உறுதிப்படுத்தும் பொருட்டு பிணையங்களின் காலாந்தர மீளிணக்கக்கூற்றுக்களைத் தயாரிப்பது உட்பட, வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்கள் இப்பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகுவது மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்கும் விதத்தில் கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் வழிகாட்டல்களை வடிவமைப்பது மற்றும் மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல் மீது காத்திரமான இடர்நேர்வு மற்றும் கட்டமைப்பினையும் உள்ளகக் கட்டுப்பாடுகளையும் நிறுவுவது என்பனவற்றை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

6.4 இணங்குவிப்பு அலுவலர் அல்லது வணிகர் நேரடிப் பங்கேற்பாளரின் இணங்குவிப்புத் தொழிற்பாட்டுத் தலைவராக இருக்கும் மற்றைய எவரேனும் அலுவலர், பணிகள் நேரடிப் பங்கேற்பாளர் இப்பணிப்புரைகளுக்கு இணங்கி நடக்கின்றாரா என்பதனைக் கண்டறிவதற்காக சுயாதீனமான சரிபார்ப்புக்களை மேற்கொள்வதற்கு, கிரமமான அடிப்படையில் குறைந்தபட்சம் காலாண்டு ரீதியாக அத்தகைய சரிபார்ப்புக்களில் கண்டறியப்பட்ட விடயங்களைப் பணிப்பாளர் கணக்கு அல்லது பணிப்பாளர் சபையின் தொடர்பான துணைக் குழுவிற்கு அறிவித்தல் வேண்டும்.

6.5 வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்கள் உள்ளகக் கணக்காய்வுகளை குறைந்தபட்சம் வருடத்திற்கு இரண்டு தடவைகள் மேற்கொள்வதன் மூலம் மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகளின் போதுமான தன்மையினை மதிப்பிட்டுக்கொள்ளல் வேண்டுமென்பதுடன் கிரமமான அடிப்படையில் குறைந்தபட்சம் ஆண்டுதோறும் வெளியகக் கணக்காய்வாளரிடமிருந்து உறுதிப்படுத்தலையும் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

7. வெளிப்படுத்துகை மற்றும் அறிக்கையிடல் தேவைப்பாடுகள்

7.1 வணிகர் நேரடிப் பங்கேற்பாளரொருவர் அவரின் வருடாந்தக் கணக்காய்வு நிதியியல் கூற்றுக்களில் பின்வருவனவற்றைத் தெளிவுபடுத்தல் வேண்டும்:

(i) கால முடிவுத் திகதியிலுள்ளவாறு மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களுக்காக ஒதுக்கப்பட்ட பிணையங்களின் ஏட்டுப் பெறுமதி.

(ii) கால முடிவுத் திகதியிலுள்ளவாறு நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களுக்காகப் பெறப்பட்ட பிணையங்களின் சந்தைப் பெறுமதி

(iii) மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களுக்கான கழிவிடல் வீதம் தொடர்பான வணிகர் நேரடிப் பங்கேற்பாளரின் கொள்கை

(iv) கீழே 8இல் தரப்பட்டுள்ள பணிப்புரையின் கீழ் வணிகர் நேரடிப் பங்கேற்பாளர் மீது விதிக்கப்பட்ட ஏதேனும் தண்டங்கள்

7.2 உரிமம்பெற்ற வங்கிகளாக விளங்கும் வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்கள் உரிய படிவத்தில், வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரினால் தேவைப்படுத்தப்படக்கூடிய அத்தகையதொரு கால இடைவெளியில் மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களின் விபரங்களை வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

7.3 வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்கள் முதனிலை வணிகர்கள் கம்பனிகளாக இருக்கும் பட்சத்தில், மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல் தொடர்பான விபரங்களை வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளரினால் கேட்டுக் கொள்ளப்பட்டவாறு அத்தகைய படிவத்தில் அத்தகைய கால இடைவெளியில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைப் பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

8. பணிப்புரைகளுக்கு இணங்கியொழு காமைக்கான தண்டங்கள்

8.1 வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்கள், மேலேயுள்ள பணிப்புரைகள் 4.4, 4.5, 4.7, 4.8 மற்றும் 5.5இனால் தேவைப்படுத்தப்பட்டவாறு அல்லது மேலேயுள்ள பணிப்புரை 4.6இல் இணங்கிக்கொள்ளப்பட்டவாறு போதுமான தகைமையுடைய பிணையங்களை ஒதுக்குவதற்கு அல்லது பெற்றுக்கொள்வதற்குத் தவறுமிடத்து, வணிகர் நேரடிப் பங்கேற்பாளர் உரிமம்பெற்ற வங்கிகளாக இருக்கும் சந்தர்ப்பத்தில் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரும் வணிகர் நேரடிப் பங்கேற்பாளர் முதனிலை வணிகக் கம்பனியாக இருக்கும் சந்தர்ப்பத்தில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளரும் அத்தகைய வணிகர் நேரடிப் பங்கேற்பாளர் மீது ஒதுக்கப்பட்ட அல்லது பெறப்பட்ட தகைமையுடைய பிணையங்களின் சந்தைப் பெறுமதிக்கும் மீள்கொள்வனவு அல்லது நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல் தொடர்பில் ஒதுக்கப்படுவதற்கு அல்லது பெறப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட தகைமையுடைய பிணைகளின் சந்தைப் பெறுமதிக்குமிடையிலான வேறுபாட்டில் நாளொன்றிற்கு 2.0 சதவீதம் (2.0) கொண்ட தண்டமொன்றினை விதிக்கலாம்.

8.2 மேலேயுள்ள பணிப்புரைகள் 5.1 மற்றும் 5.2இன் ஏற்பாடுகளை மீறுகின்ற விதத்தில், வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்கள் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களுக்காகப் பெறப்பட்ட பிணையங்களைப் பயன்படுத்துகின்றவிடத்து அல்லது மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட பிணையங்களை விற்குமிடத்து அல்லது மேலேயுள்ள பணிப்புரைகள் 5.3 மற்றும் 5.4இன் ஏற்பாடுகளை மீறுகின்ற விதத்தில் மத்திய வைப்பக முறைமையில் வைத்திருக்கப்பட்ட இணைத்தரப்பினரின் பிணையங்கள் கணக்கிலிருந்து மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட பிணையங்களை மாற்றல் செய்கின்றவிடத்து, வணிகர் நேரடிப் பங்கேற்பாளர் உரிமம்பெற்ற வங்கிகளாக இருக்குமிடத்து வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரும் வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்கள் முதனிலை வணிகர்களாக இருக்குமிடத்து வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளரும் தவறாகப் பயன்படுத்தப்பட்ட பிணையங்களின் முகப்புப் பெறுமதியில் நாளொன்றுக்கு 2.0 சதவீதத்தினை (2.0%) தண்டமாக விதிக்கலாம்.

8.3 வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்கள் அவர்களது கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்ட காரணங்களுக்காக இப்பணிப்புரைகளின் ஏதேனும் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுக முடியாதவிடத்து, அத்தகைய வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்கள் அத்தகைய சூழ்நிலைகளை, விடயத்தினைப் பொறுத்து வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு அல்லது வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைப் பணிப்பாளருக்கு அடுத்த வேலை நாளன்று பி.ப. 4.00 மணிக்குப் பிந்தாமல் அறிவித்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய காரணங்கள் தொடர்பான பணிப்பாளரினால் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருப்பின், பணிப்புரைகள் 8.1 மற்றும் 8.2இல் பணிப்புரையின் நியதிகளிலான தண்டங்கள் அத்தகைய வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்கள் மீது விதிக்கப்படமாட்டாது.

9. நடைமுறைக்கு வரும் திகதி மாறுகின்ற ஏற்பாடுகள் மற்றும் முன்னைய பணிப்புரைகளை இரத்துச் செய்தல்

9.1 இப்பணிப்புரைகள், கீழேயுள்ள பணிப்புரைகள் 9.2 மற்றும் 9.3இன் நிலைமாறுகின்ற ஏற்பாடுகளுக்குட்பட்டு 2020.01.01 இலிருந்து நடைமுறைக்கு வருதலாதல் வேண்டும்.

9.2 மீள்கொள்வனவு அல்லது நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் அல்லது வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்களினால் பயன்படுத்தப்படும் ஏதேனும் ஆவணங்களின் விதிகள், இங்கேயுள்ள ஏதேனும் பணிப்புரைகளுக்கு மாறான ஏதேனும் கிளை வாசகங்களைக் கொண்டிருக்குமிடத்து வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்கள் இப்பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் 2020.03.30 இற்கு முன்னதாக அத்தகைய விதிகளுக்குத் தேவையான திருத்தங்களைச் செய்தல் வேண்டும்.

9.3 வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்களின் எவரேனும் இணைத்தரப்பினருடன் செய்து கொள்ளப்பட்ட ஏற்கனவேயுள்ள மீள்கொள்வனவு அல்லது நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகள், இங்கேயுள்ள ஏதேனும் பணிப்புரைகளுக்கு முரணான கிளைவாசகத்தினைக் கொண்டிருக்கின்றவிடத்து இப்பணிப்புரைகளுடன் இணங்கிச் செல்வதனை உறுதிப்படுத்தும் விதத்தில் வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்கள் புதிய மீள்கொள்வனவு அல்லது நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கையினைச் செய்தல் வேண்டும் அல்லது அத்தகைய இணைத்தரப்பினருடனான தற்போதுள்ள மீள்கொள்வனவு அல்லது நேர்மாற்று மீள்கொள்வனவு அல்லது நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைக்குத் தேவையான திருத்தங்களை 2020.06.30இற்கு முன்னர் செய்தல் வேண்டும்.

9.4 பொதுப்படுகடன் கண்காணிப்பாளரினால் விடுக்கப்பட்ட மீள்கொள்வனவு அல்லது நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கை மீதான 2002.05.02 திகதியிடப்பட்ட பணிப்புரையும் மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள் மீதான 2003.12.19ஆம் திகதியிடப்பட்ட பணிப்புரையும் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

10. வரைவிலக்கணங்கள்

10.1 இப்பணிப்புரைகளின் நோக்கங்களுக்காக;

(i) **மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்** என்பது வணிகர் நேரடிப் பங்கேற்பாளரொருவர் இணங்கப்பட்டதொரு திகதியில் இணங்கப்பட்டதொரு விலையில் இதனைக் கொள்வனவு செய்ய வேண்டும் என்ற உடன்படிக்கையொன்றுடன் தகைமையுடைய பிணையங்களை விற்பனை செய்யும் கொடுக்கல்வாங்கல் எனப் பொருள்படும்.

(ii) **நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்** என்பது வணிகர் நேரடிப் பங்கேற்பாளரொருவர் தகைமையுடைய பிணையமொன்றினை இணங்கப்பட்ட திகதியொன்றில் இணங்கப்பட்ட விலையொன்றில் அதனை விற்பனை செய்வதற்கான உடன்படிக்கையுடன் கொள்வனவு செய்கின்ற கொடுக்கல்வாங்கல் எனப் பொருள்படும்.

(iii) **கழிவிடல்** என்பது பிணையமொன்றின் சந்தைப் பெறுமதி மீது பிரயோகிக்கத்தக்க கழிவிடல் எனப் பொருள்படும்.

(iv) **நேரடிப் பங்கேற்பாளர்** என்பது பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 420) மற்றும் உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 417) என்பனவற்றின் நியதிகளில் வணிகர் நேரடிப் பங்கேற்பாளராக நியமிக்கப்பட்ட ஆளொருவர் எனப் பொருள்படும்.

(v) **வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்** என்பது பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 420) மற்றும் உள்நாட்டுத் திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 417) என்பனவற்றின் நிதியியல் வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்களாக நியமிக்கப்பட்ட ஆளொருவர் எனப் பொருள்படும்.

(vi) **இணைத்தரப்பினர்** என்பது வணிகர் நேரடிப் பங்கேற்பாளர் மீள்கொள்வனவு அல்லது நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்கின்ற ஆள் அல்லது நிறுவனம் எனப் பொருள்படும்.

(vii) **இழிந்த விலை** என்பது கடந்த கூப்பன் கொடுப்பனவுத் திகதியிலிருந்து தொடர்பான திகதி வரை, தொடர்பான பிணையங்களின் மீது ஒன்றுசேர்க்கின்ற வட்டியை உள்ளடக்கிய தகைமையுடைய பிணைகளின் விலை எனப் பொருள்படும்.

(viii) **ஏட்டுப் பெறுமதி** என்பது வருடாந்த கணக்காய்வு செய்யப்பட்ட கூற்றுக்களில் தகைமையுடைய பிணையம் அறிக்கையிடப்படுகின்ற பெறுமதி எனப் பொருள்படும்.

முனைவர். இந்திரஜித் குமாரசுவாமி
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**